JL:
Rm 211, N17
N19
161194

67 Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

NOVEMBER, 1917. PRICE, 1 PIE.—விலை, க பை. நவம்பர்மீ, 1917.

29 NOV 1917 MADRAS

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**சவரன் விலை.** — சவரன் விலை முன்பு வெகு காலமாய் 15 ரூபாயாயிருந்தது; இப்பொழுது 16¼ ஆயிருக்கிறது. இனி இன்னும் அதிக விலை கொள்ளும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

**நாய் பணந்தண்டுதல்.** — இங்கிலாந்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் நாய்கள் கழுத்திலணிந்த பையிலே அங்கங்கே சென்று பணஞ் சம்பாதிப்பதுண்டு. "பிரம்" என்ற ஒரு நாய் இவ்விதமாக 30,000 ரூ. சேகரம் செய்ததாம்.

**பேசன்டம்மாள்.**—விடுதலையடைந்த பெசண்டம்மாளும் அவர்கள் துணைவரும் இந்துதேசம் முழுவதும் விஜயஞ் செய்துவருகிறார்கள். வருகிற காங்கிரெஸ் என்னும் மஹா சபைக்கு இந்தம்மாள்தான் சபாநாயகராகத் தெரிந்துகொள்ளப்பட்டார்கள்.

**ஸ்திரீ உத்தியோகஸ்தர்.**— தற்காலம், இங்கிலாந்திலே 10 லட்சம் பெண்கள் பல உத்தியோகஞ் செய்து வருகிறார்கள். இதிலே 8 லட்சம் பேர் முன்னே புருஷர்மாத்திரம் பரம்பரையாய்ச் செய்து வந்த வேலையை நேர்த்தியாய்ச் செய்துவருகிறார்களாம்.

**ஸ்காட்லந்திலே மது விலக்கு.** — ஜனங்களுக்கு எங்கெங்கே சாராய விற்பனை பிரியமில்லையோ அங்கங்கே கடை வைக்கக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தியாவிலும் இவ்வாறு கிஞ்சித்து நடந்துவருகிறது. இது சாதாரணமாய் விட்டால், மதுபானம் குறைந்து நிவிர்த்தியாகும்.

**மாண்டேகு மந்திரி.**—இந்திய மந்திரியவர்கள் டிசெம்பர் மாதம் இந்தியாவுக்கு வருகிறதாகத் தீர்மானித்திருக்கிறது. அனேக சங்கங்கள் அவர் வருகையை எதிர்நோக்கி, இத்தேசத்துக்கு அவசியமான சீர்திருத்தங்களைப்பற்றி ஆலோசனை செய்துவருகிறார்கள். அங்கிலேயரும் தங்களுக்கு வேண்டிய உபகாரங்களுக்காகத் தயார் செய்கிறார்கள்.

**மலையாளத்தரசர்.**—சென்ற மீ மாட்சிமைதங்கிய இவ்வரசர் 69-வயது முடிந்து, சஷ்டிப்பூர்த்தி என்கிற சடங்கை வெகு விபத்துடனே உபசரித்தார். சென்னையிலும் வேறு இடங்களிலும் அவரது குடிகள் சந்தோஷங் கொண்டாடினார்கள். அவர் யுத்தத்துக்கென்று மாதந்தோறும் 2,000 ரூ. கொடுத்துவருகிறதோடு, 1 லட்சம் ரூபாயும் உதவியருளியிருக்கிறார்.

**மெசோப்போத்தாமியா.** — இந்தப் பேருக்கு அர்த்தம் இரு நதி நாடு. இது இப்பொழுது நமது ராஜ்யத்தின் ஓர் பாகமாய்விட்டது. இதிலே ஊர் என்கிற ஒரு பூர்வ பட்டணமுண்டு. அது மூவாயிரத்து நானூறு வருஷத்திற்கு முன்பு கட்டப்பட்டதாம். அதிலிருந்துதான் ஆபிரகாம் என்கிற யூத மஹாத்மா புறப்பட்டுப் போய்ப் பலஸ்தீனாவிலே குடியேறினான்.

**கவர்ன்மெண்டு திரும்புகை.** — சென்ற ஏப்பிரல்மீ நீலகிரிக்குப் போயிருக்கிற கவர்ன்மெண்டார் யாவரும் ஐப்பசிமாத நடுவிலே சென்னை வந்து சேர்ந்தார்கள். இதைக்குறித்துப் பலத்த ஆக்ஷேபனைகள் இங்கிலாந்திலே செய்து வருகிறார்கள். பங்காளத்துக் கவர்னராயிருந்த சிறந்த லார்ட் கார்மைக்கேலவர்கள் இது உசிதமன்றென வெளிப்படுத்தினார். 12 மாதத்திலே 7 மாதம் ராஜதானியை விட்டுவிட்டு அப்பால் போயிருக்கிறதினால் அரசாளுகைக்குப் பங்கம் நேரிடுகிறதென்பது அனேகருடைய அபிப்பிராயம்.

**இந்தியாவின் சீர்திருத்தம்.** — இதைத்தான் பொதுப்பட "ஹோம் ரூல்" அல்லது சுய அரசு என்கிறார்கள். இந்தியாவுக்குச் சுய அரசு வரவேண்டுமென்பது, இங்கிலிஷ் அரசு முற்றிலும் எடுபட்டுப்போய், இந்தியர்களே அரசரும், மந்திரி பிரதானிகளு மாய்விடுகிறதேயல்ல. இந்திய கௌன்சில்களிலே இந்திய மெம்பர்களுக்கு இன்னும் அதிகமான அதிகாரம் கிடைக்கவேண்டுமென்பதே. தற்காலம், ஒவ்வொரு கௌன்சிலிலும் கவர்ன்மெண்ட் மெம்பர்களே மிச்சமாயிருக்கிறபடியால், எந்த நற்காரியத்துக்கும் வோட் கிடைக்கிறது கஷ்டம்மாத்திரமல்ல, சுத்த அசாத்தியமாயிருக்கிறது.

**கூலி மெம்பர்கள்.** — இங்கிலாந்திலே தினக் கூலி வேலைசெய்து பிழைப்பவர்கள், தாங்கள் அடைந்திருக்குங் கல்வியினாலே, அதிக செல்வாக்குள்ளவர்கள். எப்படியென்றால், அவர்கள் சொந்த சங்கத்திலிருந்து பார்லிமெந்துக்கு இதுவரையும் 20 மெம்பர்கள் அனுப்பிவருகிறார்கள். இனி 300 பேர் அனுப்பப்போகிறதாகச் செய்தி. இது வெகுவும் வியக்கப்படத்தக்கது. பார்லிமெந்திலே 600 சில்லறை மெம்பர்களிருப்பதால், அதிலே கூலி மெம்பர்கள் அரைவாசிப்பேர் இருந்து அனேக சீர்திருத்தங்கள் செய்துவருவார்கள். தற்காலம், உலகமெங்கும் கூலிச்சங்கத்தில்தான் விர்த்தியடைந்து வருகிறது. இத்தேசத்திலும் பஞ்சமரெனச் சொல்லப்படுகிறவர்கள் கல்வியடைந்து சீர்பட்டால், ராஜ்யத்திற்குப் பெருத்த அனுகூலமாயிருக்கும்.

**இந்திய வர்த்தகம்.**—யூரோப்பு, அமெரிக்காவிலிருந்து வழக்கம்போல அனேக வர்த்தகக் கப்பல்கள் வாராமையால், இந்தியாவில் செய்யப்படாத பல நாணயமான சாமான்கள் யாவும் 200, 300 விழுக்காடாக விலை யுயர்ந்துவிட்டன. காகிதம், தோற்சாமான்கள், தகரம் தகரச்சாமான்கள், பலவித உயர்ந்த துணிகள், கம்பளிகள், விளக்குகள், பீங்கான் முதலிய சாமான்கள், இலெக்ட்ரிக் கருவிகள், இரும்பு, இரும்புச்சாமான்கள் முதலான பல அவசியமான சரக்குகள் கிடைக்கிறது அருமையாய்விட்டது. இந்தியர்கள் சுய அரசு வேண்டுமென்று, அதிகமாய்ப் பேசுகிறார்களேதவிர அவர்கள் கைகளால் ஒரு சரக்கும் உண்டாகிறதைக் காணோம். இதனால் ஜப்பான் தீவார் இதுகளையெல்லாம் கற்றுக்கொண்டு இந்திய வியாபாரத்தைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள். நமது கதி இதுவானால், சுய அரசு நடக்கிறதெவ்வாறு?

**நவம்பர்மீ பஞ்சாங்கம்.—**

| வாரம். | நவம்பர்மீ = ஐப்பசி—கார்த்திகை. ● அமாவாசை, 14உ ⊙ பௌர்ணமி, 28உ | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஐப்பசி—கார்த்திகை. | | | | |
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 3 | 10 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 4 | 11 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 5 | 12 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 6 | 13 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 30 | 7 | 14 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 1 | 8 | 15 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | ... | 18 | 25 | 2 | 9 | ... |

## THE WAR

### யுத்த வரலாறு

ஜெர்மன்கள் மேற்கிலே தோற்று, அனேக கோட்டை, கொத்தளங்களைப் பறிகொடுத்து, சமாதானத்துக்குப் பலவிதமாய் பிரயத்தனப்பட்டாலும், கிழக்கிலே கலகதேசமாகிய ரஷியாவின்பேரில் படையெடுத்துச் செல்லுகிறார்கள். அந்தக் கலகமும் இவர்களால்தான் உற்பத்தியானது. ஆகிலும், விரைவிலே ரஷியாவில் அரசு ஒழுங்கு ஏற்படாகும். சேனை சைனியங்கள் அடங்கிப் போர்புரிவார்கள். அப்பொழுது ஜெர்மன்கள் துரத்துண்டு போவார்கள். சீக்கிரத்திலே அமெரிக்க சேனையும் சண்டையில் கைகலக்கும். சப்மெரின்கள் உபத்திரவம் முக்காலே மூன்றுவீசம் ஒழிந்துவிட்டது. மூழ்குவிக்கப்பட்ட கப்பல் தொகைகளைப் பார்த்தால், இப்பொழுது வாரத்துக்கு இரண்டு மூன்றுதான் அழிக்கப்படுகின்றன. இதுநிற்க, ஆயிரமாயிரமானவை கடற்பிரயாணஞ்செய்துவருகின்றன. பத்து லட்சம் இந்தியர்ச்சேனை தயார்செய்யாதது தோஷந்தான். ஆயினும், வருகிற கிரிஸ்மஸுக்குள்ளே யுத்தம் ஒழிந்து, சமாதானம் செய்யப்படுமென்று அனேக மந்திரிப்பிரதானிகள் நம்பியிருக்கிறார்கள். ஆனால், ஒன்று நிஜம். ஜெர்மன்கள் தோல்வியடைந்து, நஷ்டங் கட்டிக்கொடுப்பார்கள்.

Rm 21/1917
1119


## CHANDRAKASAN

### சந்திரகாசன்.

அநேக ஆண்டுகளுக்கு முன், இப்பரத கண்டத்தின்கண் அதி உன்னதபதவியில் அரசாண்டு வந்த ஓர் அரசனுக்கு தபோபலத்தினால் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு சந்திரகாசன் என்கிற நாமகரணம் சூட்டப்பட்டது. இவன் குழந்தையாய் இருக்கும்போதே இவனுடைய பெற்றோர் இறந்துபோனார்கள். ஆதலால் ஒருதாதி இவனை எடுத்து சிலகாலம் வளர்த்துவந்தாள். இவளும் சந்திரகாசனை விட்டுப் பிரிக்கப்பட்டகாலத்தில் இவ்விளைஞன் யாசகம் எடுத்து ஜீவித்துவந்தான். இவன் சிறுவயதிலேயே கடவுளுடைய பக்தியுடையவன். இவன் எப்போதும் கடவுளை பூஜிப்பதும், அவரைப் பற்றி அடிக்கடி தன் நண்பர்களிடம் பேசுவதுமாய் இருந்தான். ஒருநாள் இவன் இன்னொரு தேசத்தை அடைந்தபோது, அத்தேசத்தின் மந்திரி இவ்விளைஞனின் மேனியையும், அழகையும் பார்த்து, நமது அரசனுக்கு ஆண் குழந்தை இல்லாமலிருப்பதால் அவன் இக்குழந்தையைப் பார்க்கும்பட்சத்தில் தன் அரமனைக்குக் கொண்டுபோய் வளர்த்து தன் புத்திரியை விவாகம் செய்துகொடுத்து இராஜ்யத்தையும் இவனுக்கே கொடுப்பான்.

அதனால் நாம் இதுவரையிலும் நம் குமாரனுக்கு இப்பதவி கிடைக்கும் என்று யோசித்த எண்ணமெல்லாம் வியர்த்தமாகும் என்று எண்ணி, தக்ஷணமே கொலையாளிகளை அழைத்து சந்திரகாசனை ஒரு காட்டிற்கு அழைத்துப்போய் அங்கே அவனைக் கொன்றுபோடும்படி உத்திரவு செய்தான். கொலையாளிகள் துஷ்டபுத்தியாகிய மந்திரியின் உத்திரவின்பிரகாரம் அரண்யத்தில் கொண்டுபோய் அவனைக் கொலை செய்யும்படி பட்டயத்தை உருவினபோது இச்சிறுவன் கதறி தெய்வத்தை நினைத்து பிரார்த்தித்தபோது, தெய்வம் சிம்ம அவதாரமாக வந்து அக்கொலையாளிகளை மிறட்டவே, அவர்கள் மந்திரிக்கு ஒரு அடையாளத்தைக் காட்டும்பொருட்டு சந்திரகாசனின் கால்விரல்களில் ஒன்றை அறுத்தெடுத்துக்கொண்டு இவனை அக்காட்டில் விட்டு சென்றனர். இவ்வுபத்திரவத்தினால் அவன் அக்காட்டில் புலம்பி திரிந்துகொண்டிருந்தான்.

அச்சமயத்தில் வேட்டையாடும்படி ஓர் அரசன் அங்கு செல்ல இவ்வழுகையின் குரலைக்கேட்டு அச்சிறுவனை நெருங்கி நீ யார், உன் தாய் தகப்பன் யார்? என்று கேட்டபோது, "அரசரே, என் தாயும் தகப்பனும்கடவுளேயொழிய வேறில்லை" என்றான். அதைக்கேட்ட அரசன் மகிழ்ந்து, தனக்குப் பிள்ளையில்லாததினால் இவனை எடுத்து தன் பிள்ளையைப் போல் வளர்த்துவந்தான். துஷ்டபுத்தியாகிய கொடிய மந்திரி, இச்சங்கதியை அறிந்து அவ்விடம் சென்று அவ்வரசனிடம் இனிய வார்த்தைகளைப் பேசி, தந்திரமாய் சந்திரகாசனிடம் ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து அதை அவன் மகனிடம் சேராய் கொடுக்கும்படி கேட்டான். அந்தக் கடிதத்தில் "சந்திரகாசனுக்கு விஷத்தைக் கொடு" என்றிருந்தது. அதை இவன் எடுத்து அதிக விரைவாய் சென்றதினால் களைத்து அங்கேயிருந்த ஒரு தோட்டத்தில் அயர்ந்து நித்திரைசெய்தான். அப்போது துஷ்டபுத்தியின் குமாரத்தியாகிய வழி என்றவள் அவ்வழிக்கு செல்ல, இவனைப் பார்த்து, இவனையே மணம்புரிய வேண்டுமென்று நினைத்து அங்கு சுற்றிப் பார்த்தபோது ஒரு கடிதாசி கீழே விழுந்திருப்பதை எடுத்துப் படித்துப் பார்க்கவே தன் தகப்பன் கடிதமாய் இருந்தது, அதில் இவனுக்கு விஷத்தைக் கொடு என்றிருப்பதை திருத்தி "வழியை" கொடு என்று மாற்றினாள். இவன் நித்திரையை விட்டு எழுந்து அக்கடிதத்தை மந்திரி குமாரனிடம் தர, அவன் உடனே தன் சகோதரியாகிய வழியைக் கொடுத்து விவாக உற்சவத்தை நடத்திவைத்தான், தகப்பன் வந்தபிறகு நடந்த காரியங்களைக் கேள்விப்பட்டு அதிக கோபங்கொண்டு எப்படியாலும் இவனைக் கொல்லவேண்டும் என்று யோசித்து கொலையாளிகளை அழைத்து காளி கோவிலில் காத்துக்கொண்டிருக்கவும் வருகிற ஆளை முன்பின் பார்க்காமல் வெட்டும்படி உத்திரவு செய்தான்.



ராபர்ட் காலேஜ், கொன்ஸ்டாண்டிநோப்பில்.

பிறகு மந்திரி சந்திரகாசனை அழைத்து இனிய வசனங்களைக் கூறி, பிறகு அவனை காளி கோவிலுக்குப் போய் பூஜை செய்துவரும்படி ஒரு தட்டத்தில் புஷ்பம் பழம் முதலியவைகளைக் கொடுத்தனுப்பினான். இதை இவன் எடுத்துப் போகும்போது மந்திரிகுமாரன் வெகு அவசரமாய் ஓடிவந்து, ஓய் நில்லும், உம்மை அரசர் வெகு அவசரமாய் அழைத்தார். நீர் போய் அவரை உடனே பாரும், நான் உம்முடைய வேலையை செய்கிறேன் என்று சொல்லி அந்தத் தட்டத்தை எடுத்துக்கொண்டு காளி கோவிலுக்குள் சென்றான். இவன் உள்ளே போகவே முன்பின் பார்க்காமல் அக்கொலைபாதகர் இவனை இரண்டு துண்டாய் வெட்டித்தள்ளினார்கள். துஷ்டபுத்தி, தன் ஒரே மகனை, தன் சொந்த தீவினையினால் சாகடித்தோமே, என்று அறிந்து அந்த வேதனையினால் தானும் நான்றுகொண்டு செத்தான், சந்திரகாசன்—தன் மாமனாரும், மைத்துனனும் இவ்விதமாய் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு, ஆச்சரியப்பட்டு, கலங்கி தெய்வத்தைப் பிரார்த்தித்து, இருவருக்கும் திரும்பவும் உயிர் வரும்படி செய்தான். என்பதே இச்சரித்திரத்தின் சுருக்கம்.

இதிலிருந்து நாம் அறியத்தக்க சிறந்த விஷயங்கள் உண்டு.

முதலாவது. சந்திரகாசன் "கடவுளைத் தன் தாயாகவும் தகப்பனாகவும் அறிந்திருந்தான்." இது ஓர் சிறந்த அறிவு, அநேகர் கடவுளைப்பற்றி, அவர் பயங்கரப்படத் தக்கவர், அவருக்கும் நமக்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறார்கள் அது சுத்த தப்பிதம், சந்திரகாசன் அறிந்த சத்தியம் உண்மை. மகனுக்கும் தகப்பனுக்கும் எவ்வளவு சம்பந்தமோ, அதைப் பார்க்கிலும் நமக்கும் கடவுளுக்கும் உண்டு "கடவுள் நமக்குத் தகப்பன்."

இரண்டாவது. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்." சந்திரகாசனின் சரித்திரத்தைக் கவனியுங்கள். அவன் கடவுளைத் தன் தாயாகவும், தகப்பனாகவும் நம்பி சேவித்துவந்ததினால், அவனுக்கு என்னென்ன சங்கடங்களும் ஆபத்துக்களும் நேர்ந்தாலும் சூரியனைக்கண்ட பனியைப்போல் நீங்கிற்று. "கடவுள் நல்லவர்" "அவர் கிருபை என்றுமுள்ளது" தாய் தன் பிள்ளையை மறந்தாலும், அவர் நம்மை கைவிடார்."

மூன்றவது. "கடவுளுடைய நடத்துதல் ஆச்சரியம்" "அவர் ஆலோசனையில் ஆச்சரியமும் செயலில் மகத்துவமுள்ளவர்" என்று ஒரு பக்தன் சொல்லுகிறார். சந்திரகாசனுக்கு துன்பத்தை அனுப்புகிறார் அது அவருடைய நடத்துதல், அதன் மூலமாய் அவனை உன்னத பதவிக்கு அழைக்கிறார். துன்பம் இல்லாமல் இன்பமில்லை. துன்பம் நம்முடைய சொந்த பிரயோசனத்துக்காக அனுப்பப்படுகிற எது, ஆகையால் துன்பம் வரும்போது மொறுமொறுக்கக்கூடாது. கடவுளுடைய நடத்துதலுக்குப் பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும்.

நாலாவது. "தன்வினை தன்னைச்சுடும்" இப்பழமொழி, துஷ்டபுத்தியின் செய்கையில் நிறைவேறுகிறது. சந்திரகாசனுக்குத் தீங்குசெய்ய என்னென்னமோ யோசித்தான், ஒன்றும் பயன்படவில்லை. தன்வினையே தன்னை சுட்டது. தன் மகன் செத்தான், கடைசியாய் தானும் நான்றுகொண்டு செத்தான்; ஆகையால் ஒருவருக்கும் தீவினை செய்யாதே.

ஐந்தாவது. "தீமையைநன்மையினால் வெல்லு" இந்த சிறந்த போதனையை சந்திரகாசன் சாதனையில் காட்டுகிறான். தீமைசெய்த துஷ்டபுத்திக்கு தீமைசெய்யாமல், அவனுடைய தீமைகளுக்குப் பதிலாக நன்மைசெய்ய மனங்கொண்டு கடவுளைப்பிரார்த்தித்து திரும்பவும் அவனை எழுப்புகிறான், தீமையை நன்மையினால் வெல்லு, மேற்கூறிய சிறந்த போதனைகளை அதிக திட்டவட்டமாய், ஸ்ரீ இயேசுபெருமான் போதித்திருக்கிறார். சுவிசேஷத்தை வாங்கி வாசித்துப் பாருங்கள்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

## SAMUEL HEBICH OF MANGALORE

### சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

சாமுவேல் ஹெபிக் என்றவரின் விஷயத்திலோவென்றால் சாதனைக்குரிய பயிற்சியைத் தம் வியாபார பிரயாணத்தின் மூலமாய்க் கற்றுக்கொண்டார். அதோடு கூட, ஜெர்மனிக்கு வடக்கே பெரிய பட்டணமாகிய லூபேக்கில் அவர் குடியிருந்ததே ஒரு கல்வி சிமிட்ஸ் கம்பெனியில் வியாபாரத்தொழிலைப் பயிலும் அலுவலை முடித்தவுடன், பெரிய வியாபாரிகளாகிய புருன்சும் அவனுடைய, குமாரர்களும் தங்களுடைய வியாபாரச்சாலையில் அலுவல்பார்க்க இவரை வேண்டினார்கள். அதனால் சிமிட்ஸ் கம்பெனியார் இவரை அதிக மனவருத்தத்தோடு அங்கே அனுப்பினார்கள். சாமுவேல் ஹெபிக் 1824-ம் வருஷம் சிமிட்ஸ் கம்பெனியை விட்டு புருன்ஸ் சாலையில் சேர்ந்தவுடன் இவருடைய உத்தியோகம் மூன்றுவிதமாய் இருந்தது. இவர் அவர்களுடைய வியாபாரவிஷயமான பிரயாணியாகவும், கடிதங்களை மற்றவர்களுக்குஎழுதுகிறவராகவும் கணக்கைப் பதிப்புசெய்கிறவராகவுமிருந்தார். அவர் வியாபாரத்தொழிலைப் பயிலும் அலுவலில் இருந்தபோது சபைக்கடுத்த விஷயத்திலும் கூட அதிக உண்மையுள்ள ஊழியனாய் இருந்தார். அவர் ஒரு மிஷனரிச் சங்கத்தின் அவயவமாய்ச் சேர்ந்ததினாலும் அதனால் மிஷனரி ரிப்போர்ட்களை வாசித்ததாலும் அஞ்ஞானிகளை குணப்படுத்த வேண்டுமென்கிற ஆவல் அவருக்குள் கொழுந்துவிட்டு எரிந்தது.

இவ்வித ஆவல் அவர் உள்ளத்தில் பிறந்ததினால், உலகத்தார் எல்லாருக்கும் இலவசமாய் அருளப்பட்டிருக்கிற இரக்ஷிப்பை பற்பல இடங்களிலிருக்கிற அஞ்ஞானிகளாகிய சகோதரர்களுக்கு இந்த நற்செய்தியைக் கூறும்படி தாம் வெளிப்பட்டுப்போகவேண்டியது அவருடைய கடமை என்றுணர்ந்தார். இவ்வித உணர்ச்சி தம்மைவிட்டு எடுபடாதவிதமாய் அவ்வளவு ஆழமாய் இருந்தது. அதனால் அவர் தம்முடைய போதகராகிய கனம்: கீபேல் ஐயரிடம் சென்று "ஆண்டவர் தம்முடைய திராக்ஷத்தோட்டத்தில் இந்த விசேஷித்த ஊழியத்தைச் செய்ய அழைக்கிறார் என்றும், இந்த அழைப்பை அவர் எவ்விதமாய் நிறைவேற்றவேண்டும் என்பதைப்பற்றி அவரிடம் ஆலோசித்தார். கீபேல் ஐயர் இப்படிப்பட்ட விஷயங்களை நன்றாய் யோசிக்கத்தக்க ஆழ்ந்த கருத்துடையவர். அவருடைய கோட்பாடு எப்போதும், ஒரு காரியத்தைச் செய்யும்முன் நன்றாய் யோசி" என்பதே. அதனால் அவர் அந்த வாலிபனைப்பார்த்து, அவசரப்படாதே, கர்த்தருடைய நேரம் வருகிறவரையிலும் அவருக்காகக் காத்திரு; அதுவரையிலும் உன்னுடைய தற்கால உத்தியோகத்தில் உண்மையாயிருந்து அதனால் நீ உண்மையுள்ள கிரிஸ்தவனென்று ரூபி, இவ்விதமாய் நீ செய்கிறதால் நீ ஆண்டவருடைய திராக்ஷத்தோட்டத்தில் வேலை செய்கிறவனாய் காணப்படுவாய், ஆண்டவர் இந்த விசேஷித்த ஊழியத்திற்கு நீ அவசியம் என்று கண்டால் அவர் அப்படியே செய்வார். ஆனால் நீமட்டும் பொறுமையாய் ஊழியஞ்செய்து அவருக்குக் காத்திருக்கவேண்டும். அப்போது அவர் மோசேக்குச் செய்தது போல் உன்னையும் அந்த விசேஷித்த ஊழியத்திற்கு நடத்துவார். மற்றப்படி அவர் கொடாமலிருக்கிற ஊழியத்தை நீ செய்ய உன்னால் முடியாது, என்று சொன்னார்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

### பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

அம்மனிதன் வசிக்குமிடம் இன்னதென்றும், அவன் வடிவு, தேகக்கூறுபாடு, அவனுக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியங்கள், அவன் வல்லமை முதலியவைகளையும் நாம் அறிந்துகொண்டாலென்ன? மேலும் அவனைப் பலோத்காரத்தினாலேயோ அல்லது உபாய தந்திரத்தினாலேயோ எதினால் ஜெயிக்கலாம் என்னும் காரியத்தையும் நாம் ஆராய்ச்சி செய்யக்கூடாதோ? எப்பக்கத்திலும் வானுலகம் அடைக்கப்பட்டிருப்பினும் ஏக சக்கரவர்த்தியானவர் சுகபத்திரமாய் ஆளுகைசெய்திடினும் அம்மனுஷனிருக்கும் இடம் ஓர்வேளை காவலற்றதாயிருக்கலாம். வானுலகத்தின் கடைகோடியிலிருப்பவர்கள் வசத்தில் அதை விட்டிருக்கலாம். ஆதலால் இந்த இடத்தைச் சடுதியில் தாக்கினால் நமது காரியத்துக்கு ஏதாவது ஓர் அனுகூலம் பிறக்காதோ? ஒன்று நரக அக்கினியைக்கொண்டு அவருடைய சிருட்டிகளை அழிக்கலாம்; இல்லாவிடின் எல்லாவற்றையும் நம்முடையதாக்கி அச்சிருட்டிகளை அவர்களின் ஸ்தானத்தைவிட்டுத் துரத்திவிடலாம். இந்தக்காரியஞ் சித்தியாவிட்டால் நம்மோடு கூடிக்கொள்ளும் பொருட்டு அவர்களை வஞ்சிக்கலாம்; அப்போது அவர்களைப் படைத்தவரே அவர்களுக் கெதிரியாவார். மனஸ்தாபத்தினால் தமது கரத்தின் கிரியையை அழித்துப்போடுவார். இவ்வாறு செய்வது பொதுவாய் பழிவாங்குதலிலும் மேம்பாடானதும் நம்முடைய குழப்பத்தினால் அவருடைய சந்தோஷத்தைக் குலைத்து நம்முடைய சந்தோஷத்தை நிலைநிறுத்துகிறதாயிருக்கும். அவரின் நேசபுத்திரராகிய மானிடர்கள் நம்முடனேகூடத் தலைகீழாகத் தள்ளப்படுவார்கள்; அவர்கள் தங்கள் ஆதி நிலைமையையும் பாக்கியத்தையும் இழந்துவிடுகிறதுந்தவிர அவைகளை நிந்திக்கவும் ஏற்படுவார்கள். இது செய்யக்கூடியகாரியமா? அல்லது செய்யக்கூடாதகாரியமா? இரண்டிலொன்று சொல்லுங்கள். இல்லாவிடின், என்றும் இக்காரிருளிலிருந்து ஆகாயத்தில் கோட்டையுங் கொத்தளமுங் கட்டிக்கொண்டிருங்கள் அல்லது எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட்டுக் கொண்டிருங்கள் என்றனன்.

பெயெல்செபூல் மேற்காட்டியபடி தனது பேய்த்தன்மையான ஆலோசனையை வெளியிட்டபோதிலும் அவ்வித எண்ணம் இதற்கு முன்னமே வேதாளத்தின் மனதிலும் உதித்திருந்தது. அவனும் அதை ஒருவாறு வெளியிட்டான். ஆம், இந்தக் கருமசண்டாளனே சமஸ்த ஜீவகோடிகளுக்கும் ஆதிமூலமும் வேருமான ஆதித்தாய் தந்தையர்களைக் கவிழ்த்துவிட்டதினால், மானிடஜாதியின் மகிமை மங்கிப் போகவும் பூமி நரகத்துக்குச் சமமாகவுஞ் செய்தனன். இந்தச் சாமத்துரோக சிந்தை சமஸ்த தீமைக்கும் ஆதிமூலமாயிருந்த வேதாளத்தின் உள்ளத்திலிருந்து பிறக்குமேயன்றி வேறேயார் இதற்குக் காரணராயிருப்பார்கள்?

ஆயினும் நரகர் உலகத்தாரின் எரிப்பும் அகங்காரமும் அதிகரித்ததற்குத் தக்கதாக உன்னதத்திலிருப்பவரின் மகிமை ஓங்கி பிரகாசிக்க அனுகூலமாயின. இத்துணிகரமும் துரோகமுமான ஆலோசனை அப்பாதாளத்தின் பிரபுக்களுக்கெல்லாம் மெத்தவும் பிரீதியை உண்டாக்கிற்று. அவர்களின் அகமகிழ்ச்சி அவர்களின் நேத்திரப்பிரகாசத்தால் தெரியவந்தது. எல்லோரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை மனப்பூர்வத்துடன் தெரியப்படுத்தினர். இவர்களின் மனோபாகம் தன்னுடைய கருத்துக்கிசைந்திருப்பதை பெயெல்செபூல் அறிந்து மறுபடியும் பேசத்தொடங்கினன்.

தேவர்களின் சபையே, நீங்கள் நன்றாய்த் தீர்மானஞ் செய்தீர்கள்; இந்த மந்திராலோசனைச் சங்கமும் கன்னியத்துடன் முடிந்தது. நீங்கள் செய்த தீர்மானம் உங்கள் பெருந்தன்மைக் கடுத்ததாயுமிருக்கிறது. இதினால் விதியின் ஏற்பாட்டை எதிர்க்கவும், ஆதியிருப்பிடத்துக்குச் சமீபமான வெளிகளில் உலாவித் திரியவும், அங்கிருந்து ஆயுதபாணிகளாய் சகவாசமா[illegible]து வானுலகத்திற்குத் திரும்பிப் போகவும் அல்லது சுகுணமான மற்றொரு ராஜ்யத்தில் பிரவேசித்து சூரியவொளியையாவது அனுபவிக்கவும் ஏதுவுண்டு. அச்சூரியப் பிரகாசத்தால் நம்மைச் சூழ்ந்திருக்கும் இருளாவது நீங்கிப்போகும்


(இன்னும் வரும்.)

161194

# MELLIN'S FOOD

TRADE MARK. TRADE MARK.

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.


விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிறதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிறதிவரையும் அனுப்பப்படும். 10 பிறதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.


Registered No. M. 442.




18 DEC 1917 MADRAS

# சத்திய தூதன்.

DECEMBER, 1917. PRICE, 1 PIE.—விலை, க பை. டிசெம்பர், 1917.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**ராஜ்யக்கடன்.** — இந்த நெடுஞ்சண்டையினுலே ராஜ்யக்கடன் மலைபோலப் பெருகிவருகிறது. இது தீர அனேக வருஷமும், கடினமான எத்தனையோ வரிகளும் பிடிக்குமாம்.

**கார்னகி வள்ளல்.** — இம்மகாப் புண்யவான் சமாதான முயற்சிக்கென்று 3 கோடி ரூ. வைத்திருக்கிறார். அதன் வருஷாவட்டி மாத்திரம் 15 லட்சம். இதைக்கொண்டு அதன் தர்மகர்த்தாக்கள் பற்பல சமாதான யுக்திகள் செய்துவருகிறார்கள். ஆயினும் இதுவரையும் ஒன்றும் பலிக்கவில்லை.

**இந்திய மந்திரி.** — இப்பொழுது இத்தேசம் வந்திருக்கிற மாண்டெகு மந்திரி சென்னைக்கு இம்மாதம் 14உ வந்து ஒருவாரம் இங்கே யிருப்பார். அனேக சபைகள் தத்தம் சீர்திருத்த பத்திரங்களை அவரிடம் ஒப்புவிப்பார்கள். மொத்தத்தில் நல்ல சீர்திருத்தங்கள் வருமென்று நம்புகிறோம்.

**சப்மெரின் சச்சரவு.** — இக்கொடிய தீமை வெகுவாய் ஒழிந்துவிட்டது. இந்த வருஷத்தில் யாத்திரைசெய்த ஒரு லட்சம் கப்பல்களிலே ஏறக்குறைய 500 மாத்திரம் மூழ்குவிக்கப்பட்டன. தற்காலம் ஒரு வாரத்தில் அழிகிற கப்பல் 7, 8 தான்; எத்தனையோ சப்மெரின்களும் அழிக்கப்படுகின்றன.

**குஷ்டரோகிகள்.** — சென்னை ராஜதானியிலே மாத்திரம் 1915-ம் வருஷத்திலே 7,767 குஷ்டரோகிகள் இருந்தார்களாம். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளில் நூற்றுக்கு ஆறுபேர் இக்கிராநோய் கொண்டவர்களாம். இந்தியர் இதைப் பெரிதாய் மதிக்கிறதில்லை. இங்கிலாந்திலே குஷ்டரோகிகளே கிடையாது.

**யுத்தத்தின் ஓர் கேடுதி.** — அனேக வாலிபர் சண்டைக்குப் போய்விட, அவர்கள் விட்டுப்போகும் மனைவிமார் தவறிப்போகிறார்கள். சென்ற ஆறுமாதத்தில் மாத்திரம், லண்டனிலே 14,000 புருஷர் தங்கள் மனைவிகளை நீக்கிவிடும்படி மனுச்செய்துகொண்டார்கள். மற்ற ராஜ்யங்களிலே இதிலும் அதிகமாய் நடக்கவேண்டும்.

**அரசர் சபை.**—49 இந்திய அரசர்கள் சென்றமீ டில்லியிலே கூட்டம் கூடினார்கள். அவர்களுக்கென்று ஆலோசனைச்சபை ஒன்று ஸ்தாபகமாக வேண்டுமென்று லார்ட் செல்ம்ஸ்பர்டவர்களைக் கேட்டுக்கொள்ள, இந்திய மந்திரி மாண்டெகு பிரபுவுடன் கலந்துபேசுவதாக வாக்குச் செய்திருக்கிறார்கள். இது நன்றுதான்.

**பிரிட்டிஷ் ராஜ்ய சர்வஜன மன்றாட்டு.**—யுத்தம் இந்த நான்கு வருஷமாக இடைவிடாத மழைபோல் நடந்துவருகிறதை நிறுத்தும்படி ராஜ்யமெங்குமுள்ள சகலரும் கடவுளை ஏகமாய் விண்ணப்பஞ் செய்துகொள்ளும்பொருட்டு ஜார்ஜ் அரசர் வருகிற ஜனுவரிமீ 8-ம் தேதியைக் குறித்திருக்கிறார். கடவுள் இந்தச் சர்வஜன மன்றாட்டுக் கிசைந்து செவிகொடுப்பாராக.

**சீதாராமன்.**—இப்பெயர்கொண்ட பிராமணன் ஒருவன் ரிவினியு இன்ஸ்பெக்டராயிருந்து தவறு செய்து தள்ளுபடியாகி, பெரிய உத்தியோகஸ்தர்களின் தப்புக்கையெழுத்து வைத்து ஜர்மன் மந்திரி முதலானவர்களுக்குப் பொய்க்கடிதங்களெழுதி, ஏராளமான பணம் அனுப்பும்படிக் கேட்டுக்கொண்டானும். இப்பொழுதவன் அகப்பட்டுக்கொள்ள, காஞ்சிபுரம் கச்சேரியில் விசாரணையிலிருக்கிறான்.

**பிரமாண்டமான கைத்தொழில் கம்பெனி.**—தாட்டா கம்பெனியார் இத்தேசத்திலே அனேக கைத்தொழில்கள் நடத்தும்படி ஒரு பெருத்த கம்பெனி கைப்பிடித்திருக்கிறார்கள். அதற்குக் கையிருப்பு 6 கோடி ரூபாய். ஒவ்வொரு தனி ஷேர் 75 ரூ. மட்டும். இதனால் ஏராளமான பேர்கள் இக்கம்பெனியைச் சேர இடமுண்டு. இது நடந்தேறினால் இந்தியாவுக்குப் பேரனுகூலமா யிருக்கவேண்டும்.

**ஆளில்லா ஸ்டீமர்கள்.**—ஜர்மன்கள் அதிசயமான இம்மாதிரி ஸ்டீமர்கள் உண்டுபண்ணி யிருக்கிறார்கள். கம்பியில்லாச் சந்தியினாலே அவை செலுத்தப்படுகின்றனவாம். கரையிலிருந்தபடியே கடலிலே இருக்கிற கப்பல் நடத்தப்படுகிறது பேரதிசயம். இனி ரெயில்வண்டிகளும் எஞ்சினில்லாமலும், ஸ்டேஷன்களில்லாமலும், வேலை ஆட்கள் இல்லாமலும் தாமே ஓடி, நின்று, பிரயாணஞ் செய்யுமாம். அன்றி, மூழ்காத கப்பல்களையும் இங்கிலிஷ்காரர் கட்டிவருகிறார்களாம்.

**ஆகாயக்கப்பலின் அதிசயச் செயல்.**—இத்தாலியாவில் தூரீஜ் பட்டணத்திலிருந்து மேற்படி அரசனின் கையெழுத்துக் கடிதமொன்றுடன் ஒரு ஆகாயக் கப்பற்காரன் 6 மணி நேரத்தில் 607 மைல் பறந்து, லண்டனில் ஜார்ஜ் அரசன் அரண்மனை சேர்ந்து அக்கடிதத்துக்கு அவ்வாறே அவரது கையெழுத்துப் பதிற்கடிதம் வாங்கிக்கொண்டு தன்னகரம்போய்ச் சேர்ந்தானும். இனிப் பிரயாணங்கட்கும், தபாலுக்கும் ஆகாயக்கப்பல்கள் அனேகமாய் உபயோகிக்கப்படும் என்பதற் கையமில்லை.

**இந்தியாவுக் கவசியமானவை.**—முதலாவது, சாதாரண கல்வி, படிக்க எழுதத் தெரியாத ஒரு ஆணுகிலும் பெண்ணுகிலும் தேசமெங்கும் இருக்கப்படாது. இரண்டாவது, பக்குவமான பயிர்த்தொழிலை நடத்தவேண்டும். தற்காலம் ஒரு கதிர் விளைகிற தாளிலே ஒன்பது விளையப்பண்ணவேண்டும். மூன்றாவது, கைத்தொழில் ஏராளமாய் நடக்கவேண்டும். நமக்கு வேண்டிய ஒவ்வொரு பொருளையும் நாமே செய்துகொள்ளவேண்டும். இரண்டணுப் பருத்தி இத்தேசத்திலிருந்து இங்கிலாந்துக்குப் போய், ஒரு ரூபாய்த் துணியாக இங்கே திரும்பி வந்து நமக்கு விற்கப்படுகிறது. இது பெருத்த நஷ்டந்தானே. இதுபோன்ற எத்தனையோ கைத்தொழில்கள் இங்கே நடக்கிறதில்லை.


**டிசெம்பரு பஞ்சாங்கம்.—**

| வாரம். | டிசெம்பர்மீ = கார்த்திகை—மார்கழி.. ● அமாவாசை, 14உ ⊙ பௌர்ணமி, 28உ | | | | | | கார்த்திகை—மார்கழி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 17 | 24 | 2 | 9 | 16 |
| திங்க ... | . | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 18 | 25 | 3 | 10 | 17 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 19 | 26 | 4 | 11 | ... |
| புதன்.. | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 20 | 27 | 5 | 12 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 21 | 28 | 6 | 13 | ... |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 22 | 29 | 7 | 14 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 16 | 23 | 1 | 8 | 15 | ... |

## THE WAR

## யுத்த வரலாறு

ரஷியாவில் உண்டான கலகத்தினுலும், அமெரிக்கர் தாமதத்தினுலும், இத்தாலியாவின்மேல் ஜர்மன்கள் எடுத்திருக்கும் மிகுந்த படையினுலும், நட்பரசர் நாளதுவரையும் வெற்றியடைந்து வந்தபோதிலும், யுத்தம் இன்னும் நடக்கிறதாயிற்று. இந்தக் குளிர்காலத்திலுஞ்சண்டை ஓயாது. இனி நட்பரசர் எல்லாரும் கூடி யுத்த ஆலோசனை செய்து யுத்தத்தை நடத்தி முடிக்கப்போகிறூர்கள். பலஸ்தீனுவிலே துருக்கியர்பேரில் விசேஷித்த வெற்றி நடக்கிறது, இந்நாட்டை யூதருக்கு ஒப்புவிக்கப்போகிறூர்கள். அமெரிக்கர் தாமதித்தாலும், எண்ணுக்கடங்காப் படைகளுடனும், ஆயுதங்களுடனும், ஆகாயக்கப்பல்களுடனும் யூரோப்புக்கு வந்து உதவிசெய்யத் தொடங்கியாயிற்று. நிரந்தர சமாதானத்துக்கு நிரந்தர சண்டை அவசியம். ஜர்மன்கள் தோற்றூலும் இன்னுஞ் சிலகாலத்துக்குப் பின்பு யுத்தஞ்செய்யத் தீர்மானித்தி ருக்கிறூர்களே.



உவைட் தீவின் ஸ்விஸ் காலெஜ்.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

ஹெபிக் 1825-ம் வருஷம் எப்ரில்மீ 5-ம் தேதி தம் வியாபார சம்பந்தமான பிரயாணத்தை முதல்தடவையாகச் செய்தார். முதலாவது இவர் பால்டிக் சமுத்திரவழியாக எஸ்தோனியாவிலுள்ள ரீவேலுக்கும் அதன்பிறகு பீட்டர்ஸ்பர்க்குக்கும் போனூர். அவர் திரும்பும்போது பின்லான்டில் தங்கி, பிறகு ஆகஸ்டுமீ 25-ம் தேதி தம் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். இந்தப் பிரயாணத்தினுல் ஒரு வியாபார பிரயாணிக்கு எவ்வளவு அநுபவம் கிடைக்கக்கூடுமோ அவ்வளவு அநுபவத்தையும் இவர் அடைந்தார். ஆனுல் இவர் கிரிஸ்தவராய் இருந்தபடியால் இவர் போகும் இடத்திலெல்லாம் கிரிஸ்தவ உடன் ஊழியர்களின் ஐக்கியத்தை நாடிவந்தார். இதனுல் கனம்பொருந்திய ஒரு கிரிஸ்தவ அம்மாள் இவருக்கு அறிமுகமானூர்கள் அந்தம்மாளுடைய பெயர் லெப்ரன் துரைசானி, இந்தம்மாள் ஹெபிக்கின் நல்ஜீவியத்திற்கு ஊக்கத்தைக் கொடுக்கும் கருவியாய் இருந்தார்கள், அதனுல் அவர்கள் இவருடைய கிரிஸ்தவ ஊழியத்திற்கு ஆலோசனை சொல்லுகிறவராகவும் உண்மையுள்ள சிநேகிதராகவும் இருந்தார்கள். 1826, 1827-ம் வருஷங்களில் கூட இவர் வியாபார அலுவல் சம்பந்தமாய்ச் சுவீடன் பக்கங்களில் பிரயாணம் செய்தார். 1828-ம் வருஷம் தன் தகப்பனூர் மரணத்தின் துக்கசமாசாரம் இவருக்கு எட்டினது. ஹெபிக்குக்கு நேரிட்ட ஓயாத பிரயாணம் அதிக களைப்பை உண்டாக்கிற்று. ஏனென்றால் அக்காலத்தில் பிரயாணிகள் பலவித சங்கடங்களைக் கடக்கவேண்டியதாயிருந்தது. அதனுல் அவர் இதிலிருந்து கொஞ்சம் விடுதலை அடையத் தீர்மானித்து லெப்ரன் துரைசானிக்குச் சொந்தமான ஒரு தோட்டத்தில் தன் சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் விஸ்ராந்தி உண்டாக்கிக்கொள்ள அங்குச் சென்றார்.

இவரை அந்தம்மாள் நல்வரவு கூறி ஏற்றுக்கொண்டு அந்தம்மாளுடைய ஒரு பெரிய தோட்டத்தில் இவருக்கு விசாரணைக்கார உத்தியோகத்தைக் கொடுத்தார்கள். சோம்பல்தனமாய் காலத்தைக் கழிக்க பிரியப்படாத இவர் அந்த வேலையை அதிக சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டார். ஹெபிக் செய்த பிரயாண காலங்களில் அவருடைய அவசியத்திற்கு தக்க மாதிரியாகக் கர்த்தருடைய உதவி அவருக்குக் கிடைத்தது. கர்த்தருக்குமாத்திரம் உண்மையாயிருந்தால் கர்த்தரும் இவருக்கு உண்மையாய் இருப்பார் என்று தாம் முன். ஒருகாலும் அறிந்திராத பெரிய சத்தியத்தை இப்போது அறிந்துகொண்டார். வருஷாந்திர கணக்கு முடிவுபெற்ற ஒரு தினம், இவர் அதிக ஆயாசத்துடன் ஒரு ஸ்வேதேனிய வியாபாரியின்முன் நின்று கணக்குப் புஸ்தகப் பதிவில் உண்டான ஒரு பெரிய தப்பிதத்தின் விவரத்தைச் சொல்ல நேரிட்டது. அந்த வியாபாரியோ அந்தச் சமயத்தில் கொடூர கோபத்துடனிருந்தான், ஹெபிக் தேவ ஒத்தாசைக்கும் நடத்துதலுக்கும் ஜெபித்துவிட்டு, பிறகு தன்னுல் கூடியமட்டும் அந்த வியாபாரசாலையின் கணக்குப்பதிவின் தப்பிதத்தை விவரித்துச் சொன்னூர். ஆனுல் அந்த ஸ்வேதேனிய வியாபாரி அதை ஏற்றுக்கொள்ளாமல் கோபத்தோடு ஹெபிக்கைப்பார்த்து "கணக்கு விஷயத்தில் தீங்கான மித்திரபேதம் நடத்தப்பட்டு பணமும் செலவழிக்கப்பட்டபிறகு எந்த மூடனுவது அதை ஒரு தப்பிதம் என்றுமாத்திரம் சொல்வானு?" என்றூன். அதற்கு ஹெபிக் அதிக தாழ்ந்த குரலோடு "எல்லாரும் தப்பிதங்களைச் செய்யக்கூடிய மனுஷர்கள்தானே" என்றூர். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அதிக கோபத்துடன் கடிந்தான். அப்போது ஹெபிக் அவனைப்பார்த்து, "ஆண்டவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கத் தக்கதாக என் குற்றங்களை மன்னியுங்கள்" என்றூர்.

அப்போது அந்த ஸ்வேதேனியன் எரிகிற கொள்ளியில் எண்ணை வார்த்ததுபோல் அதிக கோபமூண்டவனுய், ஹெபிக்கைப் பார்த்து "அப்பாலே போ; மாய்மாலக்காரா, இப்படிப்பட்ட வெளிவேஷக்காரனுடைய வார்த்தைகளை நான் கேட்கமாட்டேன்" என்று உறத்தசத்தமாய்ச் சொன்னூன்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட தக்ஷணமே ஹெபிக் அந்த ஆபீசிலேயே தன் முழங்கால்களை ஊன்றி கண்ணீரோடே கர்த்தரை நோக்கி சத்தமிட்டுச் சொன்னதாவது. "ஹா இயேசுபகவானே, இந்த துரைமகன் என்னை நம்பாமல் இருக்கிறதை நீர் பார்க்கிறீர். நான் அவரிடம் உண்மையைப் பேசுகிறேன் என்பதை இந்த துரைமகனுக்கு உணர்த்தும், என் ஹிருதயத்தின் ஆழ்ந்த யோசனைகளை நீர் ஒருவரே அறிவீர், ஹா ஆண்டவரே; நான் மாய்மாலக்காரனு? அல்லவா என்பதை இப்போது காட்டும்." இந்தவிதமான ஜெபம் ஸ்வேதேனியனுடைய கோபத்தை தணிக்கவும் அவனுடைய இருதயத்தை இளக்கவும் செய்து, ஆதலால் அவனுக்கு ஆச்சரியத்தையும் மௌனத்தையும் உண்டுபண்ணினது. அப்போது அவன், ஜெபித்துக்கொண்டிருக்கிற வாலிபனுடைய தோள்களின்பேரில் தன் கைகளைப் போட்டு, அதிகக் கனிவாய் மெல்லிய குரலோடு, சே, சே, போதும் எழுந்திரு, எழுந்திரு, என்று சொன்னூன்.

ஆனுல் ஹெபிக் என்பவரோ, தாம் ஜெபம் செய்ய ஆரம்பித்தால் அந்த ஜெபம் கேட்கப்பட்டதென்று தாம் உணருகிறவரையிலும் முழங்கால்களை விட்டு எழுந்திரார், ஆதலால் அந்த ஸ்வேதேனியனுடைய கைகள் அவர்பேரில் பட்டாலும் அதை பராவாசெய்யாமல் ஜெபம் செய்துக்கொண்டேயிருந்தார்.

டி. யூல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)



## SIXTH DEPRESSED CLASSES CONFERENCE

## தென்னிந்திய ஒடுக்கப்பட்டவர்கள் ஆருவது மஹாக் கூட்டம்

மிக்க தாழ்த்தப்பட்டு, நெருக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுவரும் வகுப்பாரின் முன்னேற்றலைக்கோரி, ஆருவது மஹாக்கூட்டம் அடுத்த டிசெம்பர்மீ 16வ சென்னையில் காலை 10 மணிக்கு நடக்கும்.

குடியிருப்பு, கூலி, கல்வி, சிலாக்கியம், விடுதலை முதலிய விஷயங்கள் தீர்மானிக்கப்படும். தீர்மானமாகக்கூடிய வேறு விஷயங்கள் டிசம்பர்மீ 7வ க்குள் அங்கீகரிக்கப்படும். ஒவ்வொரு விசேஷித்த கிராமம், தாலூகா, ஜில்லாக்களிலுள்ள ஒடுக்கப்பட்டவர்களை நமது மஹாக்கூட்டத்துக்குஅழைக்கிறேரும். பணச்சகாயம்—சென்னை, வேப்பேரி, வீராசாமி முதலி தெரு, 19. நெ. G. இராஜேந்திரம் அவர்களுக்கு அனுப்பப்படவேண்டியது.

மற்ற விஷயங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்துக் கெழுதிக்கொள்ளலாம்:

V. D. ஞானரத்னம்,
கோட்டை, தரங்கன்பாடி.

A. சிவராமசாமி,
வடக்குவாசல், நாகப்பட்டணம்.

B. கார்லுசாமி சாமுவேல்,
சென்றரல் ஸ்கூல் சீர்காழி.

G. சா. சாமிபிள்ளை,
கீழப்பெரும்பள்ளம், சீர்காழி.

## LOVE.

## அன்பு

ஒருவர் இன்னெருவர்மேல் வைக்கும் பாஸ்பர நேசத்திற்கு "அன்பு" என்று சாதாரணமாய் நாம் சொல்லுவோம். திருஷ்டாந்திரமாக மனைவி புருஷனிடத்திலும், புருஷன் மனைவியிடத்திலும், தகப்பன் பிள்ளையிடத்திலும், பிள்ளைகள் தாய்தந்தையிடத்திலும், அரசன் பிரஜைகளிடத்திலும், பிரஜைகள் அரசனிடத்திலும் சிநேகிதன் சிநேகிதனிடத்திலும் சகோதரன் சகோதரனிடத்திலும் வைக்கிற பாஸ்பர நேசத்தை நாம் கவனிக்கிறேரும். இதைப்பற்றி நம்தேசத்து புராணங்களிலும் நாம் அறிந்துகொள்ளத்தக்க அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு.

சாவித்திரி, நளாயினி முதலியவர்கள் தங்கள் புருஷர்பேரிலும், தசரதன், தன் குமாரன் இராமர் பேரிலும், இராமர் தன் தந்தை தசரதன்பேரிலும், தருமர் தன் சகோதரர்பேரிலும், கிருஷ்ணபகவான் தன் நண்பன் குசேலர்பேரிலும் வைத்த பாஸ்பர நேசத்தை "அன்பு" என்று நாம் ஒருவகையில் சொன்னுலும் "அன்பு" என்கிற சொல் இதிலும் மேலான கருத்தையுடையதா யிருக்கிறது. ஒருவர் இன்னெருவர்மேல் வைக்கும் பாஸ்பர நேசமாகிய சாதாரண அன்பு மனிதர்க்குரிய சுகுணங்களில் ஒன்றுகவும் மனித சுபாவத்தில் இயல்பான தன்மையுடையது. இந்த அன்புமாத்திரம் மனுஷனுக்குள் சாதாரணமாய் இல்லாவிட்டால் மிருகங்களிலும் கேடுள்ளவன் என்று சொல்லத்தகும்.

முற்கூறிய மனிதர்க்குரிய அன்பு, மனிதர்களுக்குள்ளுள்ள சுகுணங்களில் ஒன்றுயினும், அவை "வெளியின் புஷ்பத்தைப்போலிருக்கிறது." புஷ்பம் அழகுபொருந்தியதும் வாசனை நிறைந்ததுதான் ஆனுலும் என்ன, சீக்கிரத்தில் வதங்கி விழுந்து போகும் அப்படியே மனுஷனுடைய இயற்கையான சுகுணங்கள் அழகும் இச்சிக்கப்படத்தக்கதாயிருந்தாலும் "சோதனைநாள் வரும்போது வதங்கிப்போகிறதென்று" ஒரு நிபுணர் சொல்லுகிறூர்.

திருஷ்டாந்திரமாக ஒரு ஊரில் உயர்குல ஸ்திரீ ஒருவள் இருந்தாள். அவளுக்கு ஒரே ஒரு செல்வகுமாரன் இருந்தான். அவனுக்கு சுமார் பனிரண்டு வயதிருக்கலாம். அவள் புருஷன் வெளிநாட்டுக்குப் போயிருந்த சமயத்தில் பாவஜீவியம் செய்தாள். அதைக் கண்ணுற்ற தன் செல்வமகன், அச்செய்கையைத் தன் தகப்பனிடம் சொல்வதாகச் சொன்னூன். அதனுல் அந்த ஸ்திரீ தன் செல்வபுத்திரனை வெட்டி துண்டுகளாக்கி ஒரு பானையில் போட்டு ஒளித்துவைத்தாளாம். என்ன விபரீதம், அவள் அன்பு முற்றிலும் பறந்துபோய்விட்டது. சோதனைநாள் வரவே இயற்கைக்குரிய அவளுடைய அன்பு வதங்கி விழுந்தது.

அகலிகை. கற்புள்ள ஸ்திரீதான். தன் புருஷன்மேல் பக்தியும் நாட்டமும் உள்ளவள். ஆனுலும் என்ன? தேவேந்திரனைப்பார்த்து மயங்கி சோரம்போனுள்; சோதனையை எதிர்க்க முடியவில்லை.

ஆதலால் நமக்குரிய இயற்கை அன்பை பரிசுத்தப்படுத்தி, அதைப் பெருக்கவும், நிலைவரப்படுத்தவும் ஒரு வழியுண்டு. அதாவது, பரிசுத்த கருணாகரக் கடவுள்பேரில் பற்றுதல் வைத்து நமது உள்ளத்தை அவருக்குக் கொடுப்பதே. அதன் பயனுக, அப்பரிசுத்தக் கடவுள், தமக்குள்ளிருக்கிற அன்பின் கிரணங்களை நமதுள்ளத்தில் வீசும்போது, நமதியற்கை அன்பானது பரிசுத்தமாய் மாரி, பரிசுத்தமாகிய அந்த அன்பே நமதுள்ளிருந்து பிரதிவிம்பிக்கும்போது, தூய்மையான, பழுதற்ற, நிலைவரமான அன்பாய் பலிக்கிறது. அவ்வன்பு எல்லா சோதனைக்கும் நிற்கும், பங்கப்படாது, அவ்வன்பிற்கு உயர்வு, தாழ்வு என்கிற வித்தியாசம் இல்லை; தன்னயம் கிடையாது, எல்லாம் தெய்வீக சுகுணங்களை உடைத்தாயிருக்கும். அவ்வன்பு ஒருவனுள் நிலை உற்றதானுல், திருடச்செய்யாது, கொலைசெய்யாது பிறர் தாரம் கவருது, பொய் பேசாது. எல்லாம் அன்பின்மயமாய்த் தோன்றும், இவ்வன்பைப்பற்றி ஸ்ரீ இயேசுபெருமான் போதித்து, தமது ஜீவியத்தில் சாதித்தும் காட்டினூர். இதை யாவன் ஒருவன் அடைய இச்சிக்கிறூனே அவன், இக்கருணாநிதியாகிய இரக்ஷாபெருமானிடம் சேர்ந்து, அவரன்பின் சோபிதத்தைக் கண்ணுற்று தியானித்துஅடையக்கடவன். "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது" என்று அவருடைய திருவாய்மலர்ந்தருளிய வார்த்தைகள், இன்னும் அவரைப்பற்றிய சரித்திரங்களை வாசித்துப் பாருங்கள்,—

டி. யூல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

### ஆலோசனைக்காண்டம்.

அக்கினியினுல் நமக்குண்டான ரணங்களை அங்கே வீசும் சுகிர்தமான காற்று ஆற்றிப்போடும். ஆகையால் முதலாவது இப்புதிய உலகத்தை ஆராயும்படிக்கு யாரை அனுப்பிவிக்கலாம்? இதற்கு யோக்கியமுள்ளவன் யார்? இந்த இருண்டதும் கசம் நிறைந்ததுமான பாதாளத்திலிருந்து மனோவாக்குக்கெட்டாத தூரத்தைக் கடந்து மிகுந்த கஷ்டத்துடன் தான் போகவேண்டிய விநோத வழியைக் கண்டுபிடிக்கத்தக்கவன் யார்? அல்லது எவன் சோர்புந் தளர்ச்சியுமின்றி விரித்த செக்கைகளுடன் எல்லையற்றதும் காரிருள் நிறைந்ததுமான அண்டபகிரண்டத்தையெல்லாம் பறந்தோடி நாம் வாஞ்சிக்கும் அத்தீவைக் கண்டுகொள்வான்? மேலும் இந்த அண்டசராசரங்களை எப்பக்கத்திலும் அதிவிழிப்புடன் காத்துக்கொண்டிருக்கும் தூதர் தானையங்களுக்கு எவன் தனது இந்திரசால மந்திரசால வித்தையினுல் தப்பி சுகபத்திரத்துடன் அக்கரை போய்ச் சேருவான்? அப்படிப் போகத் துணிபவன் விசேஷித்த சமர்த்தனுயிருக்கவேண்டும். ஆகையினுல் இவ்வேலைக்கு நாம் தெரிந்துகொள்ளுங் காரியஸ்தனைப்பற்றி மெத்தச் சாவதானமுள்ளவர்களாயிருக்கக்கடவோமாக; ஏனென்றுல் நாம் எவனை அனுப்பிவிக்கிறேரமோ அவனே நம்முடைய நயநஷ்டங்களுக்கும் கடைசி முடிவுக்கும் காரணனுயுமிருப்பான்.

இப்படி சம்பன்ன கிரகஸ்தனுகிய பெயெல்செபூல் பேசி உட்கார்ந்தான். தான் சொன்ன காரியத்தை உறுதிப்படுத்துவார்களோ அல்லது அதற்கு மறுத்துப்பேசுவார்களோ, அல்லது யார் இந்த அபாயமான பிரயாணத்தைச் செய்யத் துணிவார்களோ என்று மனதில் நினைத்துக்கொண்டிருப்பவனைப் போல் காணப்பட்டனன். எல்லோரும் பேச்சுமூச்சற்றவர்களாயிருந்தனர். ஒருவனும் துணிந்து வரவில்லை. இப்பிரயாணத்தின் அபாயங்களையும் கொடிய மோசநாசங்களையும் சிந்தித்து பிரமிப்புடன் ஒருவரையொருவர் பார்த்துத் திகைத்து கலங்குகிறவர்களைப்போல் காணப்பட்டனர். வானுலகத்தில் சண்டைசெய்த வீரசூரரான புருஷர்களில் ஒருவராகிலும் இப்பிரயாணஞ்செய்யத் துணியவில்லை. கடைசியில் கனத்தையும் மகத்துவத்தையும் ஆடையாக அணிந்தவனுங் கிரீடாதிபதியுமாயிருந்த வேதாளமாகிய சாத்தான் தன் சுயவல்லமையிலும் சாமர்த்தியத்திலும் மட்டுமிஞ்சின நம்பிக்கை வைத்து கோபாவேசத்துடன் அடியில்வரும்வண்ணமாகப் பேசத்தொடங்கினன.

### 6. பீடாதிபதிப் பிரசங்கப்படலம்.

ஓ வானுலக சந்ததிகளே, விண்ணரசர்களே, எண்ணிறந்த சங்கடங்கள் நம்மைப் பின்தொடர்ந்து நாம் இளககரித்துப் போகவில்லையே! இவ்வித கெடுதிநிறைந்த நிலைமைக்குள்படுவதற்கு போர்ந்த முகாந்தரமிருந்தாலுமென்ன? ஒளியின் ராஜ்யத்துக்கும் நரகத்துக்கும் இருக்குந் தூரமோ மனோவாக்குக்கெட்டாததும் விபத்துகள் நிறைந்ததாயுமிருக்கிறது. நாம் இருக்கப்படாநின்ற சிறைச்சாலையோ அரணுன ஓர் கோட்டையைப்போலிருக்கிறது. நெருப்புத்தழல்களினுல் அமைக்கப்பட்ட இந்நரகத்தின் மேற்கூரையோ நம்மை ஆதியோடந்தமாய் விழுங்கிப்போடுகிறது. எப்பக்கத்திலும் ஒன்பது பலத்த மதில்களால் சூழப்பட்டவர்களாயிருக்கிறேரும். கதவுகள் வயிரத்தன்மையுள்ளவைகளும் இருப்புத்தாள்ப்பாள்களினுல் கெட்டியாய்ப் பூட்டப்பட்டவைகளாயுமிருக்கின்றன. இப்படியிருப்பதினுல் நாம் எப்படி வெளியே செல்லக்கூடும்? இக்காரியம் முடியக்கூடியதென்று நினைக்கத்தக்கதா? கஷ்டத்துடன் நரகவாசலைக் கடந்துவிடினும் உடனே ஆழ்ந்ததும் இருண்டதுமான கேயோசின் ராஜ்யத்தில் விழவேண்டும். அவ்விராஜ்யம் எங்கும் பரவினதும் கரைகாணுததுமான ஓர் பெருங்கடலுக்கொப்பாயிருக்கிறது. அக்கடலில் வீழ்பவன் நாசமடைவானென்றே எண்ணவேண்டியது. இக்கடலையும் கடந்துவிட்டோமென்று வைத்துக்கொள்வோம்; அப்போது ஏதோ ஓர் அன்னிய உலகத்திற் சேர்ந்து நூதன சங்கடங்களுக்குள்ளாவோமே.


(இன்னும் வரும்.)




# MELLIN'S FOOD




FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்


ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருத்துக்கு ரூ. 1-0 0

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர், அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.




Registered No. M. 442.




# சத்திய தூதன்.

JANUARY, 1918. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. ஜனுவரி௴, 1918.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**சண்டைச் செலவு.** — இதை ஒரு விதமாக யூகிக்க வேண்டுமாயின், தினம் ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் செலவாகிறது. இது நான்காம் வருஷத்தின் ஐந்தாம் மாதமாகிறதால், ஆன செலவு இவ்வளவென்று கிரகிக்க முடியுமா?

**டர்பார் தினம்.** — நமதரசர் இந்தியாவில் விஜயம் செய்த தினம். டிசெம்பர்௴ 12௳ இப்பொழுது உற்சவ தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஆபீசுகளுக்கெல்லாம் அன்று விடுமுறை. ஏராளமான திரவியம் சேர்க்கப்பட்டு யுத்தத்துக்கனுப்பப்பட்டது.

**புதுச்சேரி கவர்னர்.** — இந்த மகான் பிரெஞ்சுக்காரர். சென்ற நவம்பர்௴ கடைசியில் நடந்த சர்வகலாசாலையின் வருஷாந்தரக் கூட்டத்தில் இவர் செய்த பிரசங்கம் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டது. இந்தியாவின் பூர்வ சரித்திர சாஸ்திரத்தை இந்தியர்கள் ஆராய்ந்து தெரிந்தறிந்துகொள்ள வேண்டுமென்று விரித்துரைத்தார்.

**நாய்க்கடி ஆஸ்பத்திரி.**—குன்னூரிலே விஷ நாய்க்கடிக்கு ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. இது சர்க்கார் ஸ்தாபித்ததன்று. தர்ம ஆஸ்பத்திரி. சென்ற வருஷத்தில் விஷநாய்களால் கடியுண்டவர்கள் அவ்விடம் போய் நூற்றுக்கு 95 வீதமாகச் சௌக்கியமடைந்தார்கள். இவ்வித ஆஸ்பத்திரிகள் இந்தியா முழுவதிலும் இரண்டுமாத்திரம் உண்டு.

**பம்பாயில் நல்ல விர்த்தி.**—பம்பாயிலுள்ள ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் சம்பளமில்லாமல் கல்வி பயிலும்படி பலவந்தம்பண்ண ஒரு சட்டம் உண்டாகிவிட்டது. இனி பாடசாலை போகாத சிறுவர்கள் அந்நகரத்திற் கிடையாது. போகாவிட்டால், பெற்றோர் தண்டிக்கப்படுவார்கள். சென்னையிலும் அவ்வாறு சட்டம் ஒன்று ஏற்படுவது அத்தியாவசியம்.

**ஆகாயக் கப்பல்கள்.**—யுத்தம் முடிந்து சமாதானம் உண்டானபின்பு, தற்காலம் உபயோகித்துவருகிற லட்சக்கணக்கான ஆகாயக் கப்பல்களை பிரயாணம், மெயில் போக்குவரவு, அவசரச் சமாசாரம் முதலான அனந்தக் காரியங்களுக்கு உபயோகிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் அதுகளைப் பத்திரமாய்ப் பாதுகாத்து நடத்தாவிடின் அதிகமான உயிர்ச்சேதம் நேரிடும்.

**அமெரிக்கா.** — இவ் ராஜ்யம் 20 லட்சம் போர்வீரர் தயார்செய்து வருகிறது. இதன்றி, ஏராளமான கப்பல்களும், பீரங்கிகளும், வெடிகுண்டுகளும், யுத்த ஆயுதங்களும், ஆகாயக் கப்பல்களும் செய்துவருகிறது. அமெரிக்கா முந்திய யுத்தத்தால் நட்பரசர் பட்சமாய்ச் சேர்ந்திருக்க வேண்டும். இனிச் சகாயம் பண்ணவும் விற்கவும் கூடாது என்றொரு முக்கிய சட்டம் உண்டாய்விட்டது.

**பெரும் புதையல்.** — நெல்லூர் ஜில்லா கோடூர் தாலுகாவில் ஒரு தாசில்தாரின் நன்முயற்சியினாலே தங்க நாணயங்கள் வைத்திருந்த ஒரு புதையல் கண்டெடுக்கப்பட்டது. அதிலே 16,586 தங்க பத்மங்கள் இருந்தன முற்காலத்தில் தனவான் யாரோ அதைப் பத்திரம் பண்ண அப்படி புதைத்திருப்பான். கவர்ன்மெண்டார் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, மற்றதை விற்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

**மான்டேகு மந்திரி.** — இந்த உயர்ந்த புருஷரும், கெம்மஸ்பர்ட் கவர்னர் ஜெனரலும் ஏற்பாட்டின்படியே சென்றமீ 14௳ சென்னை வந்து, பலவகுப்பாரின் விண்ணப்பங்களுக்குச் செவிகொடுத்துவிட்டு 21௳ பம்பாய்க்குப் போய்விட்டார். அவர் இங்கிலாந்து சேர்ந்தபின்பு, மற்ற மந்திரிமாருடன் கலந்துபேசி, இந்திய அரசனும், மற்றவர்களும் அனேக சீர்திருத்தங்கள் உண்டுபண்ணுவார் என்பதற்குச் சந்தேகமில்லை. பதினன்கு மாதத்திலும் விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள்.

**பெண்கள் வைத்திய ஸர்விஸ்.**—நூதனமாய் ஸ்தாபிக்கப்பட்ட இந்த வைத்திய சேவகத்தில் முதல் முதல் சேர்ந்த மாது ஒரு இந்திய கிறிஸ்தவப்பெண். அவள் பேர் மிஸ் லால்டா ஸாஸ். இம்மாது சென்னையில் பி. ஏ., எம். பி; பி. எல்; பரிட்சையில் தேறி, இங்கிலாந்துபோய் எம். ஆர். சி. எஸ், முதலிய உயர்தரப் பரிட்சை கொடுத்து மாண்டெகு மந்திரியால் இத்தேசம் அனுப்பியிருக்கிறது. இதுபோல வேறு அனேக இந்திய பெண்கள் இந்த ஸர்விஸில் சேர்வார்கள் என்று கோருகிறோம்.

**பேராபத்து.** — அமெரிக்காவுக்குச் சமீபத்தில் நோவஸ்கோஷிய என்றொரு தீவுண்டு. அதனருகில் இரண்டு கப்பல்கள் ஒன்றோடொன்று மோதிப் பெருந்தீ பிறக்கவே, அத்தீ ஹாலிபாக்ஸ் என்கிற ராஜ நகரியைத் தீண்டி, அக்கினிப் பிரளயமாகி நகரத்தை முற்றிலும் எரித்துவிட்டது. இறந்தவர் 2,000 பேர், படுகாயம் பட்டவர் 6,000 பேர், தப்பிய வீடுகள் ஒன்றும் கிடையாது. 2,000 பேர் இல்லிடமில்லாமல் குளிரிலும், மழையிலும் தவிக்கிறார்கள். கஷ்டம் சொல்லமுடியாது. பொருள் நஷ்டம் 20 கோடிக் கதிகம். இங்கிலீஷரசர்கள் ரூ. 15,000 அனுப்பியிருக்கிறார். யுத்த ஆபத்துப் போதாதுபோல, இந்தப் பேராபத்தும் உண்டாக வேண்டுமோ?

**பலஸ்தீனு ஜெயிக்கப்பட்டது.**—பிரிட்டிஷர் துருக்கியரிடமிருந்து பலஸ்தீனு தேசத்தை ஜெயித்துவிட்டார்கள். சென்றமீ 8௳ அதன் பூர்வ ராஜதானியாகிய எருசலேம் நகரம் பிடிக்கப்பட்டது. இரண்டாயிர வருஷகாலமாக இதுவும் இதன் ராஜ்யமும் முதல் ரோமர் கைப்பற்றும், பின்பு துருக்கியர் ஆட்சியிலும் இருந்து நஷ்டப்பட்டு வந்தது. எம்பெருமான் இயேசுகிறிஸ்து இந்நாட்டில்தான் ஜீவித்திருந்து உபதேசித்தும் சத்கிரியை புரிந்தும் வந்தார். மரணமடைந்ததும், மீண்டு உயிர்த்தெ

**ஜனுவரியூ பஞ்சாங்கம்.—**


| வாரம். | ஜனுவரி௴ = மார்கழி—தை. ● அமாவாசை, 12௳ ⊙ பௌர்ணமி, 26௳ | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மார்கழி—தை. | | | | |
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 7 | 14 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 1 | 8 | 15 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 2 | 9 | 16 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 3 | 10 | 17 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 4 | 11 | 18 |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 6 | 13 | ... |

ழுந்து பரமேறினதும் இந்நாடுதான். யூதராஜ்யத்தின் அழிவைக்குறித்தும், இப்போது நடந்திருக்கிற மீட்சியைக்குறித்தும் அப்போதே திட்டமாய் உரைத்திருந்தார். இனி அநேக யூதர்கள் தம் நாடு போய்க் குடியேறிச் சுகித்திருப்பார்கள். தற்காலம் உலகத்திலே 1 கோடி 30 லட்சம் யூதர்கள் இருக்கிறபடியால், அதில் ஒரு சிறுபாகம்மாத்திரம் பலஸ்தீனு ஜில்லாவில் இருந்து பிழைக்க முடியும்.

## THE WAR

## யுத்த வரலாறு.

யுத்தம் இன்னும் நீடித்துவருகிறது. நாள் ஒன்றுக்கு மூன்றுகோடி ரூபாய் வீணிலே செலவாயினும், யுத்தம் ஓய்கிறதைக் காணோம். ஜர்மன்களோ வெகுதூரம் பின்வாங்கிவிட்டார்கள். அவர்களுக்கு இப்பொழுது ஆஸ்திரியாவின் சகாயங் கிடையாது. ஆஸ்திரியா தன் முழுச்சேனையையும் எடுத்துக்கொண்டு இத்தாலியாவின்பேரில் மோதியது. ஆகிலும் இத்தாலியர் அவர்களை எதிர்த்துத் தடுத்துவிட்டு வருகிறார்கள். வெனிஸ் நகரம் ஆஸ்திரியர் கையில் விழுந்துவிடுவதாக ஒரு காலம் தோன்றிற்று. ஆனால் தப்பிவிட்டது. ரஷியருடைய உதவி முற்றிலும் நின்றுவிட்டது. உள்நாட்டுக் கலகங்கள் ரஷியாவை அலைக்கழித்து விடுகின்றன. ஒரு அரசு போய் இன்னொரு அரசு அடுத்துக்கொண்டே யிருக்கிறது. தளகர்த்தனைக் கொன்றுகொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் ஜர்மன்கள் ரஷியாவுக்குட்சென்று கிண்டிவிட்ட காரியம். ஜர்மன்கள்பேரில் உலக முழுவதும் எழும்பியிருக்கிறது. அவர்களை இனி ஒரு காசுக்குக் கூட நம்பமுடியாது. அவர்கள் சமாதானத்துக்கு வேண்டினாலும் இங்கிலாந்தும் பிரான்சும் அமெரிக்காவும் அவர்களை நம்புகிறதில்லை. இப்பொழுது சமாதானஞ் செய்துகொண்டு இன்னுஞ் சில வருஷத்துக்குள்ளே வேறு உபாயங்களை நிர்வகித்து மறுபடியும் யுத்தஞ்செய்ய ஆரம்பிப்பார்கள். உலகத்தை யெல்லாம் தங்கள் ஒரே குடைக்கிழ் வைத்து அடக்கி ஆளவேண்டுமென்பதே அவர்கள் எண்ணம். இந்த அகங்காரத்தை அகற்றவேண்டுமென்பதே. நட்பரசரின் கருத்து. ஆதலால் தற்காலம் நடக்கிற யுத்தம் அதர்மத்துக்கும் தர்மத்துக்குமே. அமெரிக்க சைனியங்கள் ஏராளமாய் வந்துவிட்டால்தான் ஜர்மனியின் அகங்காரம் அடங்குமாம் யுத்தத்தால் உலகத்தில் ஆருத்துயரம் அடங்காத் பட்டணம், அனர்த்தமும் உண்டாயினும், அதர்மம் ஒழியுமட்டும் இது நடக்கும். சிலர் 1920-ம் வருஷத்தில்தான் பூர்த்தியான சமாதானம் உண்டாகுமென்று சாதிக்கிறார்கள். இந்திய ராஜ்யமும் இதற்கு உபபலமாயிருக்கிறது. அளவற்ற திரவிய சகாயமும், சேனைச் சகாயமும் நாம் செய்து வந்தாலும் இது அதிகமல்ல. இந்தியாவிலிருந்து மூன்றுகோடிப் போர்வீரர் தெரிந்தெடுத்துத் தேர்ச்சியடைந்து, யூரோப்புப் போய் யுத்தத்தில் கை கலக்கவேண்டியது அவசியம். இதுவரையும் இங்கிலாந்தின்பேரில் ஆகாயக் கப்பல்களைக்கொண்டு அநியாயமாய்க் குண்டுவெடிப்பித்த ஜர்மனியின் பேரில் அதேவிதமாய்ப் பழிவாங்க ஆரம்பித்து விட்டார்கள்.



திருவனந்தபுரத்துக் காலெஜ்.

## சர்வஜன மன்றாட்டு.

1918-ம் வருஷம், ஜனுவரிமீ 8-ம் தேதியை ஜெபநாளாகக் கொண்டாட வேண்டுமென்று நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் அரசரவர்கள் குறித்திருக்கிறார். இந்த நான்கு வருஷகாலமாக நடந்தேறிவரும் யுத்தமானது இடைவிடாத மழையைப்போல் அதிக உக்கிரமாய் நடந்துகொண்டே வருகிறது. இதனால் நமதருமை கவர்ன்மெண்டாருக்கு உயிர்ச்சேதமும், பணச்சேதமும் உண்டாகிறதோடு கூட, இன்னும் ஆயிரம் ஆயிரம் கணக்கான வீரர் யுத்தகளத்தில் படுகாயப்பட்டு இரத்தம் பீறுண்டு பெருமூச்சுவிட்டு தியங்கிக் கிடக்கிறார்கள். யுத்தத்தின்பொருட்டு அநேக வாலிபர் சண்டைக்குப் போய்விட அவர்கள் விட்டுப்போகும் வாலிப மனைவிகளில் சிலர் தங்கள் ஜீவியத்தைக் காத்துக்கொள்ளாமல் தவறியும் போகிறார்கள். இதுநிற்க, ஆயிரம் கணக்கான தகப்பனற்றப் பிள்ளைகளும், விதவைகளும் விடுகிற கண்ணீருக்கு கணக்குண்டோ? உலக முழுதிலும் இந்த யுத்தமானது செய்த கொடுமையை வாயால் சொல்ல முடியுமோ. துணிவிலை ஏற்றத்தாலும், இன்னும் மற்ற சரக்கு விலைகளின் ஏற்றத்தாலும் நாம் படுகிற பாடுகளுக்கு எல்லையுண்டா? நமது கருணைதங்கிய ராஜாங்கத்தாரின் புண்பட்ட இருதயத்திற்கும், அவரது விஸ்வாச பிரஜைகளின் புலம்பலுக்கும் கரையுண்டோ? இவ்வித நெருக்கமும் துக்கமுமான காலத்திலிருக்கிற நம்மில் ஒருவன் இதைப்பற்றி பருவாசெய்யாமல் தூக்கமயக்கத்திலும் இருக்கக்கூடுமோ. கூரையில் தீபிடித்தவுடன் அதை உடனே அணைக்க வழி தேடாமல் "இன்னும் சற்று போகட்டும், இன்னும் சற்று போகட்டும்" என்று காலதாமதம் செய்தால் கனமோசமாய் முடியுமல்லவோ. ஆகையால் இதை வாசிக்கும் என் நண்பர்களே, இப்பெரும் யுத்தத்தை தொலைக்க நம்மால் செய்யக்கூடிய ஒரே வழியுண்டு. அதாவது, நம்மைச் சிருஷ்டித்து காப்பாற்றிவருகிற சர்வலோக பரம பிதாவாகிய கடவுளை நோக்கி ஏறெடுக்கும் ஜெபங்களே.

ஜெபம் என்று சொல்லும்போது அதில் இரண்டு வகைகள் உண்டு. முதலாவது விண்ணப்பம், இரண்டாவது ஸ்தோத்திரம், கடவுளை நோக்கி நாம் செய்ய வேண்டிய விண்ணப்பமாவது: முற்கூறிய யுத்தக் கொடுமைகளையெல்லாம் அவருடைய திருவடியில் வைத்து சரணாகதியடைந்து, அதை நீக்குமாறு அவரை நோக்கி ஏகமனதாய் விண்ணப்பம் செய்வது. இரண்டாவது, இதுவரையிலும், நமது காருண்ய ராஜாங்கத்தை சத்துருக் கையிலிருந்து காப்பாற்றி, ஜெயத்தையே கொடுத்து, பிரஜைகள் யாவருக்கும் இவ்வளவாகிலும் க்ஷேமத்தை கொடுத்தருளிய நன்மைகளையெல்லாம் நினைகூர்ந்து அவரது திருவடி முன்னிலையில் ஸ்தோத்திரம் செய்வோமாக. அப்படி ஜெபம் செய்ய ராஜாங்கத்தார் குறித்த நாள் ஜனுவரிமீ 8-ம் தேதி. அந்தநாளில் நாம் விசேஷித்தவிதமாய் கடவுளை நோக்கி மன்றாடுவதோடுகூட நாம் எப்போதும், ராஜ விஸ்வாசிகளாய், நமது ராஜாங்கம் எங்கும் செழித்து செங்கோலோச்ச கடவுளை மன்றாடவேண்டும். "மன்னன் வாழ்க"

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.



## NEW YEAR

## புது வருஷம்

நமது சத்தியதூதன் நண்பர்கள் யாவருக்கும் 1918-ம் புதிய வருஷத்தின் மங்களவாழ்த்துதல்; சர்வலோக பரம பிதாவாகிய கடவுள் நம்மை சிருஷ்டித்து நம்முடைய நாசியிலே சுவாசத்தை நிறுத்தி, அநேக வருஷங்களாக ஜீவிக்கும்படி செய்து தம்முடைய உக்கிராண வீட்டிலிருந்து உண்ண உணவையும் உடுக்க உடையையும் கொடுத்து இந்த நவமான வருஷத்தைக் காணும்படி செய்தார். கடந்த வருஷத்தில் நாம் அடிக்கடி கேள்விப்பட்டபிரகாரம் இவ்வுலகத்தில் தம் பிரயாணத்தை முடித்து மறுமைக்கு சென்றவர் அநேகர், வீரர்கள், பலசாலிகள், நிபுணர், கல்விமான்கள் முதலியவர்களும் இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்தனர், அவர்களுள் சிலர் தேசாபிமானத்திலும், ராஜ விஸ்வாசத்திலும் மரித்தவர்களும் உண்டு. அப்படி மரித்தவர்கள் அவர்கள் மரித்தும் இன்னும் பேசுகிறார்கள். அவர்களுடைய புகழுக்குக் கணக்கில்லை. முன்னோர்களான தேசாபிமானிகள், ராஜ விஸ்வாசிகள், கடவுள் பக்தர்கள், கல்விமான்கள், நம்முடைய முன்னேற்றத்திற்கும் தேவதா பக்தியின் தேர்சிக்கும் அவர்கள் பட்ட பாடுகள் பலதுள. தேச நன்மைக்காகவும் ஆத்தும நன்மைக்காகவும் தம்முடைய உயிரையும் கொடுத்தனர். அப்படிப்பட்டவர்களின் மரணமோ சமாதானத்துடன் முடிந்தது. அவர்களுள் சிலர் தம் மரணப்படுக்கையில் "நான் செய்யவேண்டியதை செய்து முடித்தேன்" என்று கெம்பீர சத்தத்தோடே வீர வார்த்தைகளைச் சொல்லி ஆவியை ஒப்புக்கொடுத்தார்கள். இதை வாசிக்கும் என் நண்பர்களே, நாம் இதுவரையிலும் ஏதாகிலும் அவ் வீர சிகாமணிகளைப்போல் நம் தேச முன்னேற்றத்திற்காகவும் ராஜ விஸ்வாசத்திற்காகவும், தேவதாபக்திக்காகவும் பாடுபட்டதுண்டோ, அல்லது நாம் அதிக தன்னயமுள்ளவர்களாய், என்வீடு, என்மனைவி, என்பிள்ளை, "என்சொத்து" என்றே அதில் உழன்று கிடந்தோமோ? அப்படியானால் ஒருவேளை அவ் வீர சிகாமணிகளைப் பிடித்த மரணம் இந்த வருஷத்தில் நம்மை பிடித்தால், நம்வீடு, நம்மனைவி, நம்மக்கள், நம்சொத்து எங்கே போகும், "அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே" என்று பட்டணத்தார் கூறியதை நினைவுகூறுங்கள். ஆகவே, நாம் செய்யவேண்டிய சிற்சில கடமைகள் நம்முன்னே நிற்கிறது. நம் சொந்த ஜனங்களும், நமது ராஜாங்க சைனியங்களும் போர்க்களத்தில் படுகாயப்பட்டு கிடக்கிறார்கள். அதற்குச் சிகை்ஷ செய்ய சிவப்பு சிலுவை சங்கத்தாருக்கு ஒரு நிமிஷத்திற்கு ஐந்து, பவுண் செலவாகிறது இரணகளத்தில் இரத்தம் பீறுண்டு படுகாயப்பட்டிருக்கும் இந்தப் பரிதாப வீரர்களுக்கு சகாயம் செய்ய நம்மால் ஒன்றும் கூடாத தேசாபிமானம், ராஜபக்தி, கடவுள்பக்தி உண்டானால், நாம் அவர்களுக்குச் சகாயம் செய்ய அஞ்சுவோமா. நண்பர்களே, இந்த வருஷம் நாம் உயிரோடிருக்கிறது எதற்கென்றால் அவர்களுக்குச் சகாயம் செய்யவே.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

இந்தவிதமான ஊக்கமுள்ள ஜெபம் அந்த வியாபாரிக்குப் பெரிய பிரமிப்பையும், மனசங்கடத்தையும் உண்டுபண்ணினது. அவன் ஹெபிக்கைப் பார்த்து "என்ன அப்பா, இனி ஒருக்காலும் நான் உன் வார்த்தைகளில் அவநம்பிக்கைக் கொள்ளமாட்டேன், நீ சொல்வதெல்லாம் உண்மை என்று நம்புகிறேன். ஆகையால் நீ எழுந்திரு" என்றான், இந்தவிதமான வார்த்தைகளும் ஹெபிக்கை எழுந்திருக்கச் செய்யவில்லை, கிருபாசனத்திற்கு முன்பாக தன் முழு ஹிருதயத்தையும் வெறுமையாக்கவேண்டும், கடைசியாக அந்த வியாபாரி தன் மனதில் அதிகமாய் குத்துண்டு கண்களில் கண்ணீர் ததும்ப அழுகையின் குரலோடு ஹெபிக்கைப் பார்த்து, "நான் உனக்குத் தீங்கு செய்தேன், தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும்; என்னுடைய கடினமான வார்த்தைகளால் ஒரு கிறிஸ்தவ சகோதரனுக்கு மனநோவை உண்டாக்கினதினால் நான் அதிக துக்கப்படுகிறேன்" என்றான். அப்போது ஹெபிக் "ஆமென்" என்று சொல்லி முழங்கால்களிலிருந்து எழுந்தார், அதன்பிறகு அவர்கள் இருவரும் வியாபார சம்பந்தமான விஷயம் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவர்கள் இருவரும் ஸ்ரீ இயேசு பெருமானையும் அவருடைய திவ்விய அன்பைப் பற்றிமாத்திரம் பேசினார்கள். இவ்விதமாய்ப் பேசினதினால் அவர்களுடைய ஹிருதயம் அனல்கொண்டு அவர்களிருந்த ஆபீசு வெகு சீக்கிரத்தில் பெத்தேலாக மாறினது.

1828-ம் வருஷம் ஹெபிக் இன்னொருமுறை மாஸ்கோ வழியாய் லூபேக்குக்கு வந்தார், அந்த வருஷத்திலதான் இவர் செய்த பிரயாணத்தில் ஒரு பெரிய கஷ்டம் நேரிட்டது. இவர் ஜெர்மானியனாக இருந்தபடியால் அவருடைய பிரயாணச்சீட்டில் ஏதோ சந்தேகமிருப்பதாக ஏற்பட்டு போலீஸ்காரரால் பரிசுத்த பீற்றர்ஸ்பர்க் என்கிற இடத்தில் பிடிக்கப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டார், இந்தவிதமான தடை இவருக்கு அதிக கோபத்தையும் எரிச்சலையும் உண்டாக்கிற்று; இவரை விட்டுவிடும்படி பணிதலோடு கேட்டுப்பார்த்தார், கோபத்தோடும் பேசினார், பயமுறுத்தியும் பேசினார்; ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. மறுநாள் காலையில் அந்தப் போலீஸார் இவரிடத்தில் அதிக மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு விடுதலைசெய்தார்கள். பயணச்சீட்டு வாங்கின கப்பலை அடையும்படி வெகு துரிதமாய் கப்பத்துறைக்குப் போனார், போயும் பிரயோசனப்படவில்லை, கப்பல் புறப்பட்டு வெகுதூரம் போய்விட்டது, தூரத்தில் அதன் நுனிமரம்மட்டும் கொஞ்சம் தென்பட்டது, அதனால் ஹெபிக் இன்னொரு கப்பலில் பிரயாணம்செய்ய நேரிட்டது. அவர் லூபேக் வந்தவுடன் இவருக்கு முன்னேபோன கப்பலின்கதியைக் கேள்விப்பட்டார், அந்தக் கப்பல் ஒரு பாறையில் உடைந்துபோனதென்றும் அதிலுள்ள பிரயாணிகள் எல்லாரும் மாண்டார்கள் என்றும் அறிந்தார். அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டார், பரிசுத்த பீற்றர்ஸ்பர்க்கில் போலீஸ்காரரால் இவர் நிறுத்தப்பட்டு அதன்மூலமாய் இவருடைய ஜீவன் காப்பாற்றப்படவேண்டும் என்பது தேவசித்தம் என்று கண்டார். இவருடைய ஜீவ இரக்ஷைக்காக போலீஸ்காரரை உபயோகப்படுத்தின கர்த்தருக்கு நன்றி செலுத்தினார்.

1829-ம் வருஷம் இவர் இன்னொரு தோட்டத்து வேலையை நடத்தும்பொருட்டு எல்ஷிங்பார்ஸ் என்ற இடத்தைச் சேர்ந்தார். அந்த இடத்தில் அவர் விவாகம் செய்யும்படியான எதுக்கள் தூண்டப்பட்டது; ஆனால் வேதவசனங்களை வாசிப்பதாலும் அதிகமான ஜெபதபத்தினாலும் இதைமேற்கொண்டு அப்போஸ்தலனாகிய பவுலைப்போல் அந்நிய நாடுகளுக்கு மிஷனெரியாகப் போகவேண்டுமென்று தீர்மானித்தார்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. போவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

அச்சங்கடங்களுக்குத் தப்பிக்கொள்வது கூடிய காரியமோ? ஆயினும் ஓ பிரபுக்களே! மோசநாசங்களை நினைத்துக்கொண்டு உங்கள் பொதுவான நன்மைக்கனுகூலமானவைகளை நான் முடியாதிருப்பேனென்றால், இச்சிங்காசனத்தில் ஏறி உட்காரயோக்கியனல்ல. இந்த ராஜஸ்தானத்துக்குத் தகுந்தவனுமல்ல. உங்களினது நன்மைக்கென்றே நான் ராஜரீக மகத்துவங்களைத் தள்ளிவிடாமல் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். எனக்குண்டாயிருக்குங் கனம் எவ்வளவு பெரிதோ, அவ்வளவாய் எனக்கு விபத்துக்களும் விக்கினங்களுமிருக்குமே. இவ்வித எண்ணங்கள் எனக்குள்ளிருப்பதினாலேதான் இந்த யாத்திரைசெய்யத் துணிகிறேன். எல்லோரிலும் நான் அதிக துன்பங்களை அடையவேண்டியது அவசியமாயிருக்கிறது.

ஆதலால் பராக்கிரமசாலிகளே, வல்லமைகளே, வானுலகத்தின் அதிகாரக் கெடியர்களே, பாதாளத்தில் விழுந்துவிட்டோமென்று திகில்டையாதிருங்கள். இவ்விடத்தில் சிறிதுகாலமாத்திரம் நீங்கள் வசிக்கவேண்டியதாயிருப்பதால், நரகவாதனைகளை மட்டுப்படுத்திக்கொள்ளும்படியான வகையைத் தேடுங்கள். நானோ இருண்டதும் அழிவுக்குரியதுமான பாழ்தலங்களில் அலைந்து திரிந்து எல்லோருக்கும் பொதுவான ஓர் மீட்பைச் சம்பாதித்து வரும்படிப் பிரயாசப்படுகிறேன். சத்துரு எப்போதும் விழித்துக்கொண்டிருப்பதால் காவல் காப்பவர்கள் தங்கள் இடத்தைவிட்டுப் போகாமலிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் இந்தச் சங்கடமான பிரயாணத்தில் நீங்கள் என் உடன்கூட்டாளிகளாயிருப்பதற்கு நான் எவ்வளவேனும் சம்மதியேன். ஏகாந்தசகிதமாய் இதில் உட்படவேண்டுமென்றிருக்கிறேன் என்றான்.

இப்படிப் பேசி முடிந்தவுடன் மேலே எழும்பி விட்டனன். அதனால் ஒருவரும் அவனுக்கு மாறுத்தாஞ்சொல்லக் கூடாமற்போயிற்று. தான் செய்த தீர்மானத்தைப் பிரபுக்களில் சிலர் தடுப்பார்கள் அல்லது இப்பிரயாணத்தைச் செய்ய மற்றவர்கள் ஏற்படுவார்கள். அப்படியானால், அவர்கள் தனக்குச் சரிசமானராவார்கள். அப்போது தனக்குக் கன்னியக்குறைவுண்டாகுமென்ற எண்ணத்தைக் கொண்டிருந்ததனால், யுக்தியாய் உடனே எழும்பி விட்டனன். அவர்களோ அப்பிரயாணத்தின் சங்கடங்களை நினைத்துப் பயந்ததைவிட அவனுடைய அதிகாரத்துக்குப் பதின்மடங்காய்ப் பயந்திருந்தனர். ஆதலால் அவனோடே அவர்களும் ஏகோபித்தெழுந்தனர். அவர்கள் எழுந்ததினாலுண்டாகிய சப்தம் தூலதூரத்தில் முழங்கும் இடிகளின் இரைச்சல்போலிருந்தது. அத்தியந்த பத்தியுடன் தலைகவிழ்ந்து நின்று உன்னதமான தேவனைப்போல பாவித்து அவனைக் கொண்டாடினர். அன்றியும் எல்லோருடைய சுகத்தை நாடி தனக்கு நேரிடுஞ் சங்கடங்களையும் எண்ணாமல் துணிந்ததினிமித்தம் அவனுக்கு நன்றிசெலுத்த மறக்கவுமில்லை. அவர்கள் சபிக்கப்பட்ட ஆவிகளாயிருந்தும், நற்குணங்களெல்லாம் இழந்தனரென்று சொல்லக்கூடாது. மனிதர்களில் துன்மார்க்கரென்று விளங்கினவர்களும் சில சமையங்களில் வீண் பெருமையினாலும் கோபத்தினாலும் ஏவப்பட்டு விசேஷித்த நற்கிரியைகளைச் செய்து புண்ணியவாளரென்ற பெயரையடைகிறதுபோலவே சபிக்கப்பட்ட இந்த ஆவிகளினிடத்திலும் கல்யாணகுணங்கள் வெளிப்பட்டன.


(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

TRADE MARK

TRADE MARK

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, Madras.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. Lazarus, Vepery, Madras.

**விளம்பரம்**


ஒருவருஷக் கைபொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒருத்தக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒருத்தக்கு ரூ. 1-0-0

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.




Registered No. M. 442.




# சத்திய தூதன்.

FEBRUARY, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. பெப்ருவரிமீ, 1918.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**உப்பு விலை.**— படி ஒரு அணுவாக விற்ற உப்பு இப்பொழுது இரண்டணு வாகிவிட்டது. இது ஏழைகளுக்குப் பேருபத்திரவம். பங்காளத்திலுண்டான ஜலப்பிரளயங்களினுலே அங்கே உப்பு விளையாமல் உப்புப் பஞ்சம் உண்டாயிருக்கிறதே காரணம். ஆகிலும் சீக்கிரத்தில் விலை குறையும்படிக்கான ஏற்பாடுகள் செய்துவருகிருர்கள்.

**இந்திய சேனை.** — இந்தியர்களிலே ஒருகோடிப்பேர் போர்வீரத் தொழில்புரியப் பண்ணவேண்டுமென்று அனேகர் விரும்புகிருர்கள். உதாரணமாக, தக்ஷணம் ஜர்மன்கள் இத்தேசத்தின்பேரில் படையெடுத்து வந்துவிட்டால், இங்குள்ள ஸைனியங்கள் போதவே போதாது. கடற்கரை முழுவதும் சேனைக்காப்பு அவசியம். அதனுலே, சர்க்கார் சாதாரண கூலி இந்தியர்களைப் போர்வீரராக்கிப் பயிற்சிசெய்து வைத்தால் இந்தியாவுக்குப் பேரனுகூலமாகவிருக்கும்.

**ஆகாயத் தபால்.** — யுத்தத்துக்குப் பின்பு ரெயில் தபால், கப்பல் தபால், இதுகளுக்குப் பதிலாக, ஆகாயத் தபால் நடக்குமென்று அனேகர் எண்ணுகிருர்கள். ஒரு முக்கியகாரணம் யாதென்ருல், இப்போது யுத்தத்தில் உபயோகப்படுகிற லட்சக்கணக்கான ஆகாயக் கப்பல்களுக்கு, இனி யாதொரு வேலையும் இடையாதே. அன்றி, ஆகாயக் கப்பல்கள் மற்ற வாகனங்களைவிட மிக்க விரைவாய்ச் செல்பவை. இதுகாரணங்களினுலே ஆகாயத் தபால் சாதாரணமாய்விடும்போலத் தோன்றுகிறது.

**உபகல்யாணம்.**—ஜர்மனியிலே லட்சக்கணக்கான புருஷர் யுத்தக்களத்திலே மாண்டுபோன காரணத்தால், அத்தனைப் பெண்களுக்கு இனிக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் புருஷர்கள் கிடையாது. ஒருவர் இதற்கு ஒருபாயஞ் சொல்லியிருக்கிறதுமன்றி, அதன்படியே நடக்கவும் ஜர்மன் அதிகாரிகள் உத்தரவளித்திருக்கிருர்கள். தனிப் பெண்கள், கலியாணஞ் செய்திருக்கிற புருஷர்களை விவாகஞ் செய்துகொண்டு, பிறக்கும் பிள்ளைகளைத் தங்கள் சொந்தப்போ லழைத்த, புதுக் குடும்பங்கள் உண்டுபண்ணிக்கொள்ளலாம். இதைவிட, நம்முடைய நாட்டிலிருந்து கல்விகற்ற இந்தியர்கள் ஜர்மனிக்குச் சென்று அங்கே கிடக்கும் பெண்களை மணம்புரிதல் நன்றெனத் தோன்றுகின்றது.

**இந்திய உத்தியோகஸ்தர்.** — சென்னை ராஜதானியிலே 1,166,695 பிராமணர்களும், 36,063,339 ஏனைய இந்தியரு முண்டு. பிராமணர் நூற்றிலே மூன்றுபேர் மாத்திரமாயினும், அவர்களுடைய கல்வி முயற்சியினுலும், வேறு குணங்களினுலும் ஏராளமானபேர் உயர்ந்த கவர்ன்மெண்டு உத்தியோகங்கள் செய்துவருகிருர்கள். 1,322 பிராமண உத்தியோகஸ்தரும், 322 மாத்திரமான ஏனைய வகுப்பினரும் இருக்கிருர்கள். அன்றி, 160 டிப்பிடி கலெக்ட்டர்களிலே, பிராமணர் 84 (பாதிக்கு அதிகம்), ஏனைய ஹிந்துக்கள் 34, துலுக்கர் 19, இந்திய கிரிஸ்தவர்கள் 22. நாலு இந்திய பெரிய ஜட்ஜ்மாரிலே, மூவர் பிராமணர். பிராமணரைப்போலவே பிறஜாதியாரும் கல்விகற்று உயர்தரப் பரீட்சை கொடுத்துத் தேறவேண்டும். அவர்களை நொந்துகொள்வதில் பயன் யாது?

**மரண சகாய நிதிகள்.** — இதுகள் சில காலமாக இத்தேசத்தில் ஏராளமாய் ஸ்தாபிக்கப்பட்டு வந்தன. ஆனுல் அனேக மோசங்களுக் கிடமாயிருந்ததனுல், சர்க்கார் ஒரு சட்டம் 1912-ம் வருஷம் உண்டுபண்ணி, ஒவ்வொரு நிதியும் தன் தன் கணக்கு விவரங்களைப் பரிசோதிக்க அனுப்ப வேண்டுமென்றும், இன்னும் சில ஏற்பாடுகள் வருஷந்தோறும் செய்து முடிக்கவேண்டுமென்றும் ஆக்கியாபித்தார்கள். இந்த ஏற்பாடுகளைப் பொறுக்க மாட்டாமல், ஏறக்குறைய எல்லா நிதிகளும் அடைக்கப்பட்டன. இந்திய கிரிஸ்தவ பாதுகாப்பு நிதி ஒன்றுமட்டும் நாளதுவரையும் நடந்தேறி வருகிறது. இதனுல் எத்தனையோ கைம்பெண் சாதிகளுக்குச் சகாய பணம் கிடைத்துவருகிறது. இப்பொழுது ஆயிரத்து இருநூறு மெம்பர்களுக்கு அதிலே இடமுண்டாய்விட்டதால் அனேகம்பேர் வேப்பேரி, அதன் செக்ரிட்டெரிக்கு எழுதிச் சேர்ந்துகொள்ளலாம்.

**தீட்சை பெற்றது.** — சாதாரண ஜனங்கள் ஆயிரம் பதினுயிரமாகத் தீட்சை பெற்று, கிரிஸ்தவர்களாகிறது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆகிலும் காலாகாலங்களிலே பிராமணர்களும் கிரிஸ்துசபையிலே சேர்ந்துவிடுகிருர்கள். சென்ற மாதத்திலே மதுரையிலும், தூத்துக்குடியிலும் சில பிராமண வாலிபர் அப்படிச் செய்தார்கள். இது இந்தியருக்கு அதிக மனவருத்தமாயிருக்கிறது. தங்கள் சொந்தக் காலேஜ் இருந்தால் இப்படி நடவாதென்று நம்பிதாக்களுக்கென்று காலேஜுகள் ஸ்தாபிக்கப் போகிருர்கள். ஆனுலும் என்ன? கிரிஸ்துமார்க்கம் நாளடைவில் விர்த்தியடைந்தே வரும். மத விஷயத்திலே சகலருக்கும் சித்த ஸ்வாதீனம் உண்டாயிருத்தலே தர்மம்; பலவந்தம் செய்தல் அக்கிரமம். ஒரே குடும்பத்தில் சிவமதஸ்தனும், விஷ்ணு மதஸ்தனும், கிரிஸ்தவனும், மகம்மதியனும், நாஸ்திகனும், ஐக்கியமாய் உறவாடி ஜீவித்துவர யாதொரு ஆக்ஷேபனையும் இருக்கலாகாது.

**மாண்டேகு மந்திரி.** — இப்பெருமான் சென்னையிலிருந்து பம்பாய்க்குச் சென்று அங்கேயும் அனேகருடைய விண்ணப்பங்களை வாசிக்கக்கேட்டு இப்பொழுது டில்லியிலிருக்கிருர். கவர்னர்மார்கள் யாவரும் அங்குச் சென்று, அவருக்கு இந்திய அரசு விஷயங்களைக்குறித்து அனேகமாய் ஆலோசனை சொல்லியிருக்கிருர்கள். அவரும் யானையைப் போல இதுகளையெல்லாம் பத்திரமாக விழுங்கி, அடக்கிவைத்துக்கொண்டு இம்மாதம் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்று, அங்குள்ள பல மந்திரிகளுடன் கலந்து பேசிக் கடைசியிலே சில நல்ல சீர்திருத்தங்களை உண்டுபண்ணுவார். ஆஸ்திரேலி

**பெப்ருவரிமீ புஞ்சாங்கம்.—**

| வாரம் | பெப்ருவரிமீ = தை—மாசி. ● அமாவாசை, 11உ ⊙ பௌர்ணமி, 25உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தை—மாசி. | | | |
| ஞாயி ... | ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 6 | 13 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 7 | 14 |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 1 | 8 | 15 |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 2 | 9 | 16 |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 3 | 10 | 17 |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | ... | 19 | 26 | 4 | 11 | ... |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | ... | 20 | 27 | 5 | 12 | ... |



31-1-15
4
2100


யா, நியுசிலந்து, கானடாமுதலிய தேசங்களைப் போலவே இந்தியாவும் சுய அரசு வகித்திருக்க வேண்டுமென்று அனேகர் விரும்புகிறார். சிலர், இது தற்காலம் முடியாது, இன்னும் 50, 60 வருஷம் விர்த்தியடைந்தபின்பு நடக்கவேண்டு மென்கிறார்கள். எப்படி முடியுமோ தெரியாது.

**தென்னிந்திய தாழ்ந்த வகுப்பார் ஆறவது மஹாக்கூட்டம்.** கடந்த 1917-ஷு டிசெம்பர்மீ 16உ ஞாயிறு மாலே 2 மணிக்குச் சென்னை ஒய். எம். வி. ஏ. சபாக்கட்டிடத்தில் தென்னிந்திய தாழ்ந்த வகுப்பார் ஆறுவது மஹாக்கூட்டம் நடந்தேறியது. ஆனரேபில் ஹான்பகதூர் இயாக்கூபு ஹாசான் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். 12 ஜில்லாக்களின் பிரதிநிதிகள் விஜயமானூர்கள். குடியிருப்புமனை, விவசாயக் கைத்தொழிலாளிப்பத்திரம், மிராசுபாத்தியம், தாழ்ந்த வகுப்பாரிலிருந்து பஞ்சமரைக் கல்விவிஷயத்தில் பிரத்தியேகப்படுத்தல், தொழுக்கட்டை தண்டனை, அன்னசாலை, கைத்தொழில்சாலை, கல்வியப்பியாசத்திற்காகப் பிரத்தியேகநிதி, கவர்ன்மெண்டு உபகாரச்சம்பளம், தாழ்ந்தவகுப்பாரின் பிரதிநிதிஸ்தானம், பரிட்சையில் தேருதவர்கள் உத்தியோகம், தாழ்ந்த உத்தியோகம், விவசாயக் குடிகளுக்குக் கூலி, ஐக்கிய நாணயச்சங்கம், தாழ்ந்தவகுப்பார் நிலைமை, கல்வி, க்ஷேமம், ஆசாரம் முதலியவைப் பற்றி மசோதா ஒன்று ஏற்படுத்தல் ஆக 22 தீர்மானங்கள் செய்யப்பட்டன. மற்ற விஷயங்களுக்குத் தாங்கன்பாடி V. D. இரத்தினம் அல்லது மதுரை, போர்த்துகீஸ் தெரு, A. சூசை அவர்களுக்கு எழுதிக்கொள்ளலாம்.

## THE WAR

## யுத்த வரலாறு

யுத்தம் விரைவிலே ஒய்கிறவதக் காணோம். முன்னொருகாலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் 7 வருஷ யுத்தமும், 12 வருஷ யுத்தமும், 30 வருஷ யுத்தமும் முறையே நடந்தேறின. இந்த யுத்தமோ 7 வருஷங்கூட நடவாதென்று யூகித்தாலும், அதன் கொடுமை எந்நாளும் நடவாதது. பஞ்சபாண்டவர் யுத்தத்திற்கூட அத்தனைத் திரளான வீரர் படுகாயப்பட்டு இறக்கவில்லை. அமெரிக்கர் 1920-ம் வருஷத்திலேதான் சமாதானம் ஏற்படுமென்று எண்ணுகிறார்கள். யுத்தம் நீடித்ததற்கு ஒரு முக்கிய காரணம் ரஷியாவின் உட்கலகம். இந்தச் சுதேசக் குழப்பத்தினாலே, சண்டையை நடத்தத்தக்க சேனைகள் கிடையாது. தலைவர்கள் பரஸ்பர சத்துருக்களாய்விட்டதினாலே, அவர்களுக்குள்ள ஜயவீரரானவர்கள் ஜர்மனியோடு சமாதானத்துக்குக் கேட்டுக்கொண்டார்கள். முதல் முயற்சி அபஜெயமாய்விட்டது; ஜர்மன்களின் கட்டுப்பாடுகள் அவ்வளவு அகோரமானவை. ஆகிலும் மறுபடியும் இருகட்சியாரும் தீர்க்காலோசனை செய்துவருகிறார்கள். எப்படி முடியுமோ சொல்லமுடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆஸ்திரியர் இத்தாலியாவின் பேரில் படையெடுத்து, முழு ஜயமடையாவிடினும் சில ஊர்களையும் நாடுகளையும் பிடித்துக்கொண்டார்கள். மேற்கேமட்டும் யுத்தம் சுமாராய் நடந்து வருகிறது. மொத்தத்தில் நட்பரசரே ஜயமடைந்து ஜர்மனியர்களைத் துரத்திவருகிறார்கள். ஆகிலும், ஐரோப்பாவிலே ஒரு பிசகு எப்போதும் நடந்து வந்திருக்கிறது. அதாவது, இங்கிலாந்து, ஜர்மனி, முதலிய தேசங்கள் தத்தமக்கு வேண்டிய தானிய தவசங்களை, இந்தியாவைப்போல் விளைவித்துக்கொள்ளாமல், பிறதேசங்களிலிருந்து இறக்குமதி செய்கிறது வழக்கம். ஆனால் தற்காலத்துச் சமுத்திர யுத்தத்தினாலும், கப்பற்சேதம் கப்பற்குறைவினாலும், இந்தச் சாக்குகள் அங்கங்கே செல்வது கூடாமையாய்விட்டது. இங்கிலிஷ் வர்த்தகக்கப்பல்கள் வாரந்தோறும் 20, 21 கடலில் சப்மெரின்களால் அமிழ்த்தப்படுகின்றன. தேசங்களில் தானியப் பஞ்சம் விசேஷம். சேனைகளுக்கு ஆகாரப் பதார்த்தங்கள் அனுப்புவது, மிகவும் கஷ்டம். அனேகருக்கு அரைவயிருகாரம் மாத்திரம் கிடைக்கிறது. லாய்ட் ஜார்ஜ் மந்திரியும் உவில்சன் தலைவரும் ஜர்மனி செய்யவேண்டிய ஏற்பாடுகளைத் திட்டமாய் விளம்பரஞ் செய்துவிட்டார்கள். இனி ஜர்மனியின் பாடு.



காண்டஹார்க் கோட்டை.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

இத்தீர்மானம் ஆயிரம் கணக்கான போராட்டத்தின்பேரில் கடைசியாக நிலைப்பட்டது என்றும், நான் அஞ்ஞானிகளுக்குள் ஊழியஞ்செய்கிற ஒரு மிஷனெரி சங்கத்தை அடைகிறவரையிலும் அதை விட்டு ஒய்வதில்லை என்கிற தீர்மானம் தாம் செய்ததாகவும் ஹெபிக் ஒருமுறை சொல்லியிருக்கிறார். இந்த முழுத் தீர்மானத்தையும் லெப்ரான் துரைசாணிக்கு எழுதித் தெரியப்படுத்தினார். ஆனபோதிலும், கர்த்தர் இவருக்கு இவ்வித ஊழியத்தைச் செய்ய திட்டவட்டமாய் காட்டுகிறவரையிலும் அந்த துரைசாணியினுடைய தோட்டத்திலேயே வேலை செய்வதாகவும் எழுதினார். ஹெபிக் இப்போது கர்த்தருடைய நடத்துதலுக்காக காத்திருந்தார். அதனால் அவர் தம் ஜீவகால ஊழியத்திற்கு தேர்ச்சியை அடைய இரண்டாம்படியாகிய ஒரு மிஷன் காலேஜில் சேர ஆயத்தமாயிருந்தார். ஹெபிக் வாசித்த காலேஜியையும் அதன் சம்பந்தமான மிஷனைப்பற்றியும் நாம் கொஞ்சம் தெரிந்துகொண்டாலொழிய மற்றபடி அவரைப்பற்றியும் அவருடைய ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும் நன்றாய் அறிய முடியாது. ஆதலால் தற்சமயம் அவருடைய கதையை இங்கே சற்று நிறுத்தி அவர் படித்த காலேஜின் உற்பத்தியை சற்று யோசிப்போம்.

கடவுள் எப்போதும் ஒழுங்கின்மையிலிருந்து புது உலகத்தை சிருஷ்டிக்கிறவராகவே இருக்கிறார். பதினெட்டாம் நூற்றூண்டில் கலகங்களும் கலக சமாசாரங்களும், ஊர் புரளிகளும், கீரண வாதங்களும், நிரீச்சுவரவாதங்களும் அவிசுவாசங்களும் இன்னும் மற்ற குழப்பங்களும் உண்டானபடியால், இரத்தமும், கண்ணீரும், மரணமும், அழிவுமே உலகத்திலுள்ள எல்லா ஜாதியாரின் பங்காயிருந்தது. இவ்வித ஒழுங்கீன நிலைமையிலிருந்து



கடவுள் சிருஷ்டித்த "புது உலகம்" எதுவென்றால், "மிஷன்கள்". அழிவுக்கேதுவான இவ்வளவு ஏதுக்களிலிருந்து கர்த்தர் தம்முடைய பரிசுத்த நாமத்தின் மகிமைக்கென்று ஒரு புதிய ராஜ்யத்தை அவர்கள் மத்தியில் ஆயத்தம் செய்துகொண்டு வந்தார்.

டி. எல். ராஸ்
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

### ௬. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது ஆலோசனைக்காண்டம்.

இவ்விதமாக இவர்களின் காரிருள்போன்றதுஞ் சந்தேகம் நிறைந்ததுமான ஆலோசனைகள் முடிவுபெற்றன. தங்கள் பிரதானிக்கு ஒருவரும் நிகரில்லையென்று அகமகிழ்ந்து கெம்பீரித்தனர். இக்காட்சியை எவ்வாறு விவரிக்கலாம். மலைச்சிகரங்களிலிருந்து கார்மேகங்கள் எழும்பி உத்தரதிசையின் அமூர்த்தம்போன்ற காற்று வீசி பனியையும் வருஷவாரியையும் கொண்டுவருஞ்சமயத்தில், தற்செயலாய் ஆதித்தன் தன் ஜோதியான கிரணங்களை யெறிந்து இருளை அகற்றி ஜீவதாபர ராஜ்யங்களை உயிரடையச் செய்துவிட்டால், பட்சிகள் தங்களின் இனிய இராகங்களைப் பாடி சந்தோஷிக்குமல்லவோ? மிருகாதிகள் தத்தந் தொனிகளை வெளியிட்டு குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலுஞ் சிங்கநாதஞ் செய்யுமல்லவோ? அவ்வித அல்லோலகல்லோலமாய்க் கெம்பீரித்தனர்.

"ஓ மானிடர்களே, நீங்கள் வெட்கமடைய முகாந்தரமில்லையோ? பிசாசுக்களும் ஆம் சபிக்கப்பட்ட ஆவிகளும் ஒன்றோடொன்று உறுதியான உடன்படிக்கைசெய்து ஐக்கியமாயிருக்கின்றனவே. மனிதர்களாகிய நீங்கள்மாத்திரம் வேற்றுமைகளையும் பிரிவினைகளையு முண்டுபண்ணுகிறீர்கள். பகுத்தறியுஞ்சக்தி, நன்னம்பிக்கை, கிருபை முதலிய சிறந்த ஈவுகளைப்பெற்று சமாதானக்கடவுளின் பக்தராயிருப்பினும் பகை, வர்மம், சண்டைமுதலிய தீயகுணங்களுக்கு இரையாகிவிடுகிறீர்கள். நரகத்தின் எண்ணிறந்த சத்துருக்கள் அவர்களை அனுதினமும் அழித்துவிடப் பார்த்துக்கொண்டிருப்பதை அறிந்து, ஒருவரோடொருவர் ஐக்கியமாயிருக்கவேண்டியதிருக்க, கொடிய யுத்தங்களைச் செய்து ஒருவரையொருவர் அர்த்தநாசம்பண்ணி பூமியை வெறுமையாக்கிவிடுகிறீர்கள்."

### 7. காலம் போக்குபடலம்.

மந்திராலோசனைச் சங்கம் இவ்வாறு முடிந்தது: அச்சங்கத்தின் அவயவங்களாயிருந்த பிரபுக்கள் தத்தம் அந்தஸ்தின்படி சபாமண்டபத்திலிருந்து வெளியே வந்தனர். அவர்கள் நடுவிலே சம்பிரதியாகிய பெயெல்செபூலும் மகத்தாகிய வேதாளராஜனும் வந்தனர். இவன் நரகத்தின் ஏகசக்ராதிபதியாயிருந்ததுமன்றி வானுலகத்திற்கு எதிரியாகவும் இருந்தனன். தேவனுக்குமாத்திரம் உரிய மகிமையை அணிந்துகொள்ளவும் பிரீதியாயிருந்தான். அவனைச் சுற்றிலும் அக்கினிமயமான சேராபீன்கள் பயங்கரமும் பளபளப்புமான ஆயுதங்களைத் தரித்துப் புடைசூழ்ந்துகொண்டிருந்தனர். கீதவாத்தியங்கள் கேட்கப்பட்டன. நான்கு சேராபீன்கள் தங்கள் வாய்களில் எக்காளங்களை வைத்துக்கொண்டு நான்கு திசைகளைநோக்கி ஊதினார்கள். சங்கத்தின் தீர்மானத்தை பாதாளலோகமெங்கும் விளம்பரம் பண்ணினர். இடிமுழக்கத்துக்கு ஒப்பான சப்தத்துடன், நரகத்தின் சேனாசமுத்திரம் ஆரவாரத்துடன் பிரதியுத்தரம் கொடுத்தது. வீண் நம்பிக்கை யுடையவர்களாயினும் ஒருவாறு ஆறுதலை அடைந்தவர்களாயினர். அவரவர்களுக்கு இஷ்டமான வழியிற் சென்று கவலையும் வாஞ்சையும் நிறைந்த அவர்கள் மனதுக்கு ஆறுதலையும் அமைதலையும் தேடிக்கொள்ளப் பார்த்தனர். சிலர் வனங்களுக்குச் சென்றனர், வேறு சிலர் செக்கைகளை விரித்து ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தனர். ஒலிம்பாவின் விளையாட்டிலும் போர்க்களத்திலும் நடப்பதுபோல அக்கினிமயமான தங்கள் குதிரைகளை பந்தயத்துக்குத் துரிதமாய் விடுபவர்களைப்போலவும் அணிவகுக்கப்பட்ட ராணுவங்கள் உலாவுவதுபோலவும் இருந்தன. அக்கிரம விசேஷத்தால் பூர்வீகத்தில் சில பட்டணங்கள் அழிக்கப்பட்டன. அப்பட்டணங்கள் அழிக்கப்படு முன்னதாக ஆகாயத்தில் காலாட்களும் குதிரைப் போர்ச்சேவகரும் நெருங்கி யுத்தஞ்செய்யும் பாவனையாகக் காணப்பட்டதாக இதிகாசங்களில் கண்டிருக்கிறது, இக்காட்சிக்கொத்ததாயிருந்ததென்றுஞ் சொல்லலாம். சிலர் சுழற்காற்றில் அகப்பட்டவர்களைப்போல மலைகளுங் குன்றுகளுங் கிழிந்து போகத் தக்கனவாக அங்குமிங்கும் விரைவாய்ச் சென்றனர். நரகம் அவர்களை அடக்கிக்கொள்ளக் கூடாதிருந்தது. பூர்வீகத்தில் ஆல்சிடீஸ் என்பவன் கால்சீஸ், தெசலிநாட்டின் ராட்சத வம்சங்களை வேரோடே பிடுங்கிக் கடலில் எறிந்துவிட்டது போலவும் இருந்தது. அவர்களில் படபடப்பில்லாதவர்கள் பள்ளத்தாக்குகளிற் சென்று தூதர்களுக்குரிய தொனியில் தங்களினது சுயமும் வீரமுமான செயல்களைப் பாடினர். மேலும் தாங்கள் சண்டையில் அபஜெயப்பட்டதையும், சுயாதீனத்தை இழந்து தற்காலத்தில் அடிமைகளாயிருப்பதையும்பற்றி, கின்னரி, வீணை, சுரமண்டலம், நாகசுரம், மிருதங்கம், தம்பூருமுதலிய வாத்தியங்களில் வாசித்தனர். அவர்களின் இராகசப்தங்கள் பழுதுள்ளவைகளாயினும் அழியாத ஆவிகளின் தொனிகளாயிருந்தமையால் நரகவாசிகளைப் பூரிக்கப்பண்ணின. அவர்களின் சம்பாஷணைகள் சந்தோஷகரமுள்ளவைகளாயிருந்தன. சாதுரியமான பாட்டுகள் ஐம்பொறிகளையும் களிப்படையச் செய்யுமல்லவோ? இன்னும் சிலர் ஓர் குன்றின்மேல் உட்கார்ந்து தேவ பராமரிப்பு, முன்னறிவு, சித்தம், விதி முதலியவைகளைக்குறித்து ஆழ்ந்த யோசனைசெய்து கரைகாணாமலிருந்தனர். நன்மை, தீமை, பாக்கியம் நிர்ப்பாக்கியம் முதலியவைகளைப்பற்றித் தாறுமாறாய்த் தர்க்கித்தனர். விருப்பும் வெறுப்பும், மகிமையும் வெட்கமும் இவைகள் வீணான ஞானமும் பொய்யான சாஸ்திரமென்றுங் கூறினர். ஆயினும் அவைகள் இரசவாத வித்தையைப்போல சிலருடைய துக்கத்தைக் கொஞ்சநேரத்தில் மாற்றி, பிற்பாடு அவர்களுக்குள் வீண் நம்பிக்கையை எழுப்பி விடுகின்றனவென்றும், வேறு சிலருடைய மனதை எஃகைப்போலக் கடினப்படுத்துகின்றனவென்றும் இப்படி நானாவிதமாய்த் தீர்மானித்தனர். வேறொரு கூட்டம் சதுரங்கசகிதமாயும் மற்றவர்கள் பவுஞ்சுபவுஞ்சாகவும் பிரிந்து, இந்த நரர் உலகத்தில் சந்துஷ்டியைக் கொடுக்கத்தக்க இடங்கள் உண்டோவென்றறிய, அதின் நான்கு நதிகளினோரமாய்த் தீவிரித்துச் சென்றனர். ஆழ்ந்ததும் கசம்நிறைந்ததுமான இந்நான்கு நதிகளின் ஜலம் எரிகிற அக்கினிக்கடலில் பாய்கின்றது. அவைகளின் நாமங்களாவன: முதலாவது அருவருப்பான ஸ்டிக்ஸ், இதில் அழிவுக்குரிய பகையும் பழியும் பிரவாகமாய் ஓடிற்று. இரண்டாவது சஞ்சலம் நிறைந்த அகிரோன், இதில் துக்கச்சகிதமான கறுப்பும் அழகுமான ஜலம் ஓடிற்று. மூன்றாவது கோசைத்து, இதில் வியாகுலத்தண்ணீர்கள் பெருகி ஓடிற்று. மேலும் அலறுதலின் சப்தங் கேட்கப்பட்டதால் இவ்விதபேர் அதற்குண்டாயிற்று. நான்காவது உக்கிரசகிதமான பிளகத்தோன், இவ்வாற்றின் ஜலம் கோபத்தைக் கிளப்பவும் சபிக்கவும் ஏவிவிடத்தக்கதாயிருந்தது. இவைகளுக்குச் சற்று தூரத்தில் அமர்ந்ததும் அசமந்தமுமான ஓர் சிற்றூறு ஓடிற்று. அதற்கு லீதீ, அல்லது மறதியின் ஜலம் என்றுஞ் சொல்லப்படும். அதில் பானம்பண்ணுகிறவன் வெகு சீக்கிரத்தில் தன் முந்தின நிலைமையை முற்றிலும் மறந்துவிடுவான். சந்தோஷம், துக்கம், இன்பம், துன்பம் முதலியவைகளுக்கு முற்றிலும் அந்நியனுவான். இதற்கப்பால் பனிக்கட்டிகளினால் மூடப்பட்டதும் இருண்டதுமான ஓர் இடம் இருந்தது. அவ்விடத்திற்குப் போகிறவர்கள் சுழற்காற்று, கன்மழை, மறத்துப்போகச்செய்யும் பனிக்கட்டிகள் முதலியவைகளினால் உபத்திரவப்படுவார்கள். பூர்வீகத்தில் டாமியெற்று, காசியா என்ற இடங்களுக்கு மத்தியிலிருந்த செர்போனியன் என்னும் பனித்தரையில் எண்ணிறந்த ராட்சதசேனைகள் மடிந்தது போலவே சபிக்கப்பட்ட ஆவிகளை சிலவேளைகளில் இவ்விடத்துக்குக் கொண்டுவந்து அக்கினிவாதைக்கு எதிரிடையாக குளிர்ச்சியினால் வாதிப்பார்கள். பனிக்கட்டியுடன் ஒன்றாய் இணைக்கப்படுவதினால் அவர்கள் அடையும் வேதனை இவ்வளவென்று சொல்லிமுடியாது. திரும்பவும் அக்கினியில் வாதிக்கப்பட கொண்டுபோகப்படுவார்கள். இப்படி மாறிமாறி தண்டிக்கப்படுகிறதினால் வேதனையை நன்றாய் உணரக்கூடியதாயிருந்தது. அன்றியும் லீதி என்னும் ஆற்றின் அக்கரைக்கும் இக்கரைக்கும் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் சிறிய படகில் ஏறும்படிக்கு ஆவிகள் துரிதமாய்ச் செல்வதுமுண்டு. அவ்வாற்றின் ஜலத்தின் ஓர் துளியாவது தங்கள் நாவில் வீழ்ந்தால் தங்களின் வேதனையை ஓர் நிமிஷமாவது மறந்துவிட்டிருக்கலாமென்றெசிப்பார்கள். ஆனால் கார்கோன் என்னும் பூதகணம் இதைக் காவல்செய்தபடியால், அவர்கள் கரையோரத்தில் ஆவலாய் நிற்கும்போது, தானதெல்ஸ் என்பவன் வாயினிடத்தில் தண்ணீர் வந்தோடிப்போனபிரகாரம், தண்ணீர் இவர்களுக்கு அருகில் வந்தும், இவர்கள் குடிக்குமுன்னமே ஓடிப்போயிற்று. இப்படியாக இக்கூட்டங்கள் சீர்குலைந்தவர்களாய் அங்குமிங்கும் அலைந்து, சஞ்சலத்தையும் வேதனையையும் பெருகச்செய்து அமைதலற்றவர்களும் புலம்புகிறவர்களுமாயிருந்தனர். இருண்ட பள்ளத்தாக்குகளிலும் பனிமூடின தரைகளிலும் ஆல்பஸ் மலையையொத்த உயர்ந்த பர்வதங்களிலும் செபிகளிலும் மரணம் நிழலிட்ட இடங்களிலும் அலைந்து திரிந்தனர். ஆம் தேவசாபத்தைப் பெற்றவர்கள் இருக்கும் இடம் இதுவே. தீமைக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனைகளெல்லாம் இங்கேயிருந்தன. சமஸ்த ஜீவன்களும் இவ்விடத்தில் மாண்டுபோம். மரணம் ஒன்றுதான் ஜீவித்தரசாளுகை செய்யும். கண்களுக்கு அவலட்சணமும் அருவருப்புமான காட்சிகள் இங்கே காணப்படுகின்றன. எண்ணிறந்த தலைகளையுடைய கார்கோன்களும் அசங்கித வடிவங்களையுடைய அயிராக்களும் இங்கே வாசஞ்செய்துகொண்டிருந்தன.

### 8. நரகவாயிலைக் கிட்டினபடலம்.

காரியங்கள் இவ்விதமாய் நிகழ்ந்துகொண்டிருக்க கடவுளுக்கும் மனிதனுக்கும் எதிராளியாகிய வேதாளம் மேலான எண்ணங்களை மனதிற் பேணிக்கொண்டு விரித்த செக்கைகளுடன் அதிதீவிரமாய் நரகவாயிலுக்கு நேராகச் சென்றனன். சில சமயங்களில் வலபக்கமாயும் சில சமயங்களில் இடபக்கமாயும் பறந்தோடினன்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்**

ஒருவருஷக் கைபொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0 0

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.





Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MARCH, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சுமீ, 1918.


## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**மாண்டேகு மந்திரி.**—இவர் இம்மாதம் இங்கிலாந்துக்குப் போய் இந்தியாவுக்கு அவசியமான சில சீர்திருத்தங்களைப் பார்லிமெந்தில் அறிவிப்பார்.

**கும்ப உற்சவம்.** — சென்றமீ 11உ அலகாபாத்தில் நடந்த கும்ப உற்சவத்தில் 30 லட்சம்பேர் கங்காநதியில் ஸ்நானம் செய்தார்களாம். கடைசி உற்சவம் 36 வருஷத்திற்கு முன்னே நடந்தது.

**உத்தம போர்ச்சங்கம்.** — நட்பரசர் யாவரும் ஒரே ஒழுங்குப்படி சண்டைசெய்ய வேண்டுமென்று பொதுப் போர்ச்சங்கம் ஒன்று பாரிஸ் நகரத்திற் கூடினது. இது அடிக்கடி கூடும்.

**சென்னைக் கவர்னர்.** — லார்ட் பெண்ட்லண்டவர்கள் இங்கிலாந்துபோகிற காலமானதால், லார்ட் டன்மோர் என்கிற ஒரு பிரபு நமக்குக் கவர்னராக வருகிறதாகப் பிரஸ்தாபம்.

**ஜெர்மன் அக்கிரமம்.**—ஜர்மன்கள் இந்த மூன்றா வருஷத்தில் போர்வீரரல்லாத சாதாரண ஸ்திரீ, புருஷர், பிள்ளைகள் 14,128 பேரை அநியாயமாய்க் கொன்றிருக்கிறார்கள்.

**குதிரை மாம்சம்.**—இங்கிலாந்திலே சாதாரண இறைச்சி கிடையாமையால், ஜனங்கள் குதிரை இறைச்சியைச்சாப்பிடத் தொடங்குகிறார்கள். அராபியர் நாளதுவரையும் குதிரைப்பாலைத்தான் குடிப்பார்கள்.

**டாக்ட்டர் ராய்.**—பிரதாபசந்திர ராய் என்னும் பேர்கொண்ட ஒரு ரசவாத சாஸ்திரி சென்ற மாதம் இங்கு வந்து சில சாஸ்திரப் பிரசங்கஞ் செய்தார். அவருக்குக் கிடைத்த ரூ. 800-யும் சர்வ கலாசாலைக்கு இனும்பில்லை (மெடல்) ஆகக் கொடுத்துவிட்டார்.

**சப்மெரின் போர்.**—சப்மெரின்கள் பாடு இப்பொழுது ஓய்ந்துவிட்டது. ஆகிலும், ஜர்மன்கள் இந்த மூன்று மாதங்களில் பகீரதப் பிரயத்தனஞ்செய்து, ஏராளமான புது சப்மெரின்கள் கூடி நம்முடைய கப்பல்களையும், அமெரிக்காவிலிருந்து போர்வீரரை யேற்றிவருகிற கப்பல்களையும் குண்டுசுட்டு மூழ்குவிக்கப் போகிறார்கள்.

**ஸர் ஜே. சி. போஸ்.**—இவர் மகாப் பெரிய பூதத்துவ சாஸ்திரி. உயிரில்லா அசுத்தப் பதார்த்தங்களுக்கும் உணர்ச்சியும், அசைவும் உண்டென்பதைத் திருஷ்டாந்தப்படுத்தினன். பங்காளத்தில் தலையைச் சாய்த்து நிமிர்த்துகிற பனையைப்பற்றி அது உஷ்ணத்தில் நிமிர்த்தி, சீதளத்தில் சாய்க்கிறதெனக் கூறுகிறார்.

**கவர்ன்மெண்டு வருமானம்.** — சில காரியங்களினுலே இந்திய கவர்ன்மெண்டுக்கு நல்ல வருமானமுண்டு. உதாரணமாக: காட்டுக்காவலினுலே சென்ற வருஷம் 20 லட்சம் ரூ. லாபம் கிடைத்தது. அப்படியே தபால், தந்தியினுலும், நாணய மடித்தலினுலும், வருமான வரியினுலும் ஏராளமான வரவுண்டு. நிலத்துவரியை மாத்திரமல்ல, கள்ளு, சாராயவரிகளும், புகையிலை வரியும் அவசியம் அதிகரிக்கப்படவேண்டும்.

**ஜெர்மன்கள் மாண்டது.**—இதுவரையும் யுத்தக் களத்திற் கொல்லுண்ட ஜர்மன் போர்வீரர்களின் தொகை 13 லட்சம்; இனிப் போர்புரிய முடியாமல் படுகாயப்பட்டுக் குருடரும், செவிடரும், நொண்டிகளும், சப்பாணிகளுமானபேரின் தொகை இன்னொரு 13 லட்சம்; நட்பரசர்க் கையில் கைதிகளாய்ப் போனவர்கள் இன்னொரு 13 லட்சம். ஆக மொத்தம் 39 லட்சம்பேர். அங்கிலேயரின் நஷ்டம் இதில் காற்பங்குக்கூட இல்லையாம்.

**தாத்தா சுரங்கங்கள்.** — மைசூரிலே ஸ்தாபித்திருக்கிற பேர்வள்ளல் தாத்தா என்பவரின் சுரங்கங்களிலே இரும்பும், நிலக்கரியும் விசேஷமாம். உலகம் முழுவதுக்கும் 4,000 வருஷம் உபயோகப்படத்தக்க ஏராளமா யிருக்கின்றனவாம். இந்தியாவுக்கு என்னகுறைவு? பொன்னும், வெள்ளியும், செம்பும், இரும்பும், கரியும், மண்ணெண்ணெயும் இன்னும் பல வஸ்துக்களும் அளவுக்கெட்டா வண்ணம் உண்டு. ஜனங்களின் விடாமுயற்சி ஒன்றே குறை. ஆகிலும், சில கைத்தொழில்கள் இப்பொழுது நடந்தேறிவருகின்றன.

**தென்னிந்தியாவின் கல்விஸ்திதி.** — இந்தியருக்குச் சரியான கல்வி யில்லாமையால் சுய அரசுக்கவர்கள் உரித்தானவர்களல்ல வென்கிறார்கள். ஆனல் இது யாருடைய பிசகு? கவர்ன்மெண்டார் சாதாரண பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க முயலுகிறது கிடையாது. தென்னிந்தியாவிலே, ஆயிரம் ஆண்களில் 42 பேரும், ஆயிரம் பெண்களில் 10 பேரும்மாத்திரம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். சர்வஜனக் கல்வி முதலாவது சென்னையிலே ஆரம்பிக்கவேண்டும். பம்பாயில் அப்படி ஆரம்பித்தாயிற்று. மிஷன்கள் அதிக செலவிட்டு பிராமணருக்கு உயர்தரக் கல்விப் புகட்டுகிறதை நிறுத்தி, தங்கள் ஏழை எளியவர்கள் யாவருக்கும் சொற்பக் கல்வி புகட்டவேண்டும்.

## THE WAR


## யுத்த வரலாறு

யுத்தம் தற்காலம் சிறிது ஓய்ந்திருந்தாலும் இது புயலுக்கு முன்னிருக்கும் அமைதிபோல. ஜர்மன்கள் ரஷியருடன் சமாதானத்துக்கேதுவான நியாயங்கள் பேசிக்கொண்டு, அங்கிருந்த சைனியங்களையெல்லாம் மேற்கே கொண்டுவந்து சேர்க்கிறார்கள். வருகிற மூன்று மாதங்கள் பயங்கரகாலமாயிருக்கும். எப்பொழுதும் நடவாத பெரும்போர் நடக்கும். எதிரி தன் முழுப்பலத்தையும் ஒன்ருகத் திரட்டி வெற்றியடைய முயல்வான். இல்லாவிட்டால்,

**மார்ச்சுமீ பஞ்சாங்கம்.**—

| வாரம். | மார்ச்சுமீ = மாசி—பங்குனி. ● அமாவாசை, 12உ ⊙ பௌர்ணமி, 27உ | | | | | | மாசி—பங்குனி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 20 | 27 | 4 | 11 | 18 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 24 | 1 | 8 | 15 | ... |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 18 | 25 | 2 | 9 | 16 | ... |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 19 | 26 | 3 | 10 | 17 | ... |

பூர்த்தியான தோல்வியும், தேசநாசமும், பஞ்சம் பட்டினியுமே அவன் கதியாகும். நட்பாசருக்கும் கொஞ்சம் திகிலுண்டு. அவர்களும் பகீரதப் பிரயத்தனஞ் செய்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து சேனைகள் புறப்பட ஆரம்பித்தாயிற்று. முப்பது லட்சம் போர்வீரர்கள் தயாராயிருக்கிறார்கள். ஜர்மன் சப்மெரின் ஒரு சேனைக்கப்பலைக் கவிழ்த்துப் போட்டது. ஆயினும், ஏறக்குறைய யாவரும் தப்பித்துக்கொண்டார்கள். லண்டன்பேரிலும் குண்டுகள் விழுந்தன. ஆயினும், ஒரு நல்ல சகுனம் என்னவென்றால், ஜர்மனியிலேயே கலகம் ஆரம்பித்திருக்கிறது. சோஷலிங்ட்ஸ் என்கிற சுய ஸ்வாசுக்காரர் எழும்பி, ஜர்மன் ஆளுகையை அனர்த்தஞ் செய்ய முயலுகிறார்கள். இதுதான் ஜர்மனியின் கடைசிக் கதியாகும். ரஷிய சக்கரவர்த்தி குடும்ப சமேதனாய்த் துரத்துண்டதுபோல, ஜர்மன் சக்கரவர்த்தியும் ஓட்டம்பிடிக்க நேரிடும். அங்கியரல்ல, தன் இனத்தாரே அவனைத் துரத்துவார்கள்போல் தோன்றுகிறது. இதன்றி, ரஷிய ராஜ்யம் துண்டுத்துண்டாகப் பிரிக்கப்பட்டுப்போகிறது. தென்பாகம் வேறே, மேற்பாகம் வேறே, மற்றப் பாகங்களும் வேறுவேறாகப் பிரிவுண்டு, வெவ்வேறு தனி ராஜ்யங்களாய்விடுகின்றன. இதுவே எதிரிக்குப் பிரீதி. பகைவனைப் பகுத்துக் கொல்வது ஓர் உபாயம் அல்லவா? ஜெயிக்கப்பட்ட தேசங்களிலே எதிரி சொல்லரிய கொடுமைகள் நடத்திவருகின்றான். கடைசியில் சகலமும் நன்மையாகவே முடியும். உலகத்துக்கு நித்திய சமாதானமும், சன்மார்க்க விர்த்தியும், வியாபார விர்த்தியும், கடவுள் பயமும் உண்டாகும். இதற்கே நாமனைவரும் இறைவனை வேண்டிக் கொள்வோமாக.



பூர்வ பர்ஷிய வீடு.

---

DIVINE AND HUMAN LOVE

## கடவுள்பற்றும், மனுஷப்பற்றும்

இந்திய சாஸ்திரத்திலே இரண்டுவிதமான நேசம். அல்லது பற்று கூறியிருக்கிறது. ஒன்று மார்ச்சாலப்பற்று, மற்றொன்று மர்க்கடப்பற்று. முந்தியது பூனையின் நேசமென்றும், பிந்தியது குரங்கின் நேசமென்றும் பொருள்படும். அன்றி, முந்தியது கடவுள் நேசத்தின் தன்மையும், பிந்தியது மக்கள் நேசத்தின் தன்மையுமெனக் கூறப்படும். இது மிகவும் ஆழ்ந்த கருத்து. இந்திய தத்துவ ஞானிகள் வெகுகாலமாகக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துக் கண்டறிந்து கூறிய சத்தியம் இது. தனித்துக்கிடந்து தவிக்கிற குட்டியைத் தாய்ப்பூனையானது மோந்துத் தேடி வாயால் அதன் புறங் கழுத்தை மெதுவாகக் கவ்வித் தன் இருப்பிடத்துக்குத் தூக்கிச் செல்வதுபோல, சகல மானிடருக்கும் தாயாகிய கடவுள் தம்மைவிட்டு விலகி வழிதப்பித் தட்டுத்தடுமாறிப் பாவச்சேற்றிலே உழன்றுகிடக்கிற தம் மக்களைத் தேடித் தம்மண்டை கொண்டுவந்து சேர்க்கிறாராம். அதேவிதமாகக் கடவுளைத் தேடிக் கண்டடைந்த பக்தர்கள் அவரிடம் பற்றும் விஸ்வாசமும் வைத்து எதுவந்தாலும், எக்காலமும் அவரை விடாது பின்பற்றிவருகிறதை குரங்குக் குட்டியானது நாய்க்குரங்கு ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குப் பயங்கரமாயும் பலமுறையும் தாவிப் பாய்ந்தாலும், அதன் வயிற்றை இறுகப் பிடித்து, பிடித்த பிடியை விடாமலிருக்கிறதுபோலாம். இது நேர்த்தியான உவமை. கடவுள் இங்கு உவமித்த பிரகாரம் நம்மைத் தேடித் திருஅவதாரமாக எழுந்தருளியதை நாம் ஆராய்ந்தறியவேண்டும். அவருடைய அளவற்ற அன்பு உலகத்திலெங்காயினும் வெளிப்பட்டுளதா? பிரபஞ்சத்தில் பொதுப்படக் காணும் அறிகுறிகள் அல்ல; அவதாரங்கள் என்று கூறப்படுகிற புருஷர்களிலே இந்த அன்பு வெளிப்படுகிறதோ என்று விசாரித்த லவசியம். கிரிஸ்தவர்கள் வழிபட்டுவருகிற இயேசு என்னும் திருவவதாரத்தில் இந்த மார்ச்சாலப்பற்று பரிஷ்காரமாக விளங்கியுள்ளதோவென்று யாவரும் தீர்க்காலோசனை செய்து தெளிதல்வேண்டும். வடக்கே ராஜா பூஜங்கராவு என்கிற ஒரு சிற்றரசர் இந்தியர் யாவரும் இயேசுவை அண்டினல்தான் இகபர சுகமடைவார்க ளென்கிறார்.

---

SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

இந்தத் தீர்மானம் ஆயிரம் கணக்கான போராட்டத்தின்பேரில் கடைசியாக நிலைப்பட்டது என்றும் நான் அஞ்ஞானிகளுக்குள் ஊழியஞ்செய்கிற ஒரு மிஷனெரி சங்கத்தை அடைகிறவனாயிலும் அதை விட்டு ஓய்வதில்லை என்கிற தீர்மானம் தாம் செய்ததாகவும் ஹெபிக் ஒருமுறை சொல்லியிருக்கிறார். இந்த முழுத்தீர்மானத்தையும் லெப்ரன் துரைசானிக்கு எழுதித் தெரியப்படுத்தினர். ஆனபோதிலும் கர்த்தர் இவருக்கு இவ்வித ஊழியத்தை செய்ய திட்டவட்டமாய் காட்டுகிறவரையிலும் அந்த துரைசாணியினுடைய தோட்டத்திலேயே வேலை செய்வதாகவும் எழுதினர். ஹெபிக் இப்போது கர்த்தருடைய நடத்துதலுக்காக கார்த்திருந்தார். அதனல் அவர் தம் ஜீவகால ஊழியத்திற்கு தேற்சியை அடைய இரண்டாம்படியாகிய ஒரு மிஷன் காலேஜில் சேர ஆயத்தமாயிருந்தார். ஹெபிக் வாசித்த காலேஜியையும் அதன் சம்பந்தமான மிஷனைப் பற்றியும் நாம் கொஞ்சம் தெரிந்துகொண்டாலொழிய மற்றப்படி அவனைப்பற்றியும் அவருடைய ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும் நன்றாய் அறிய முடியாது. ஆதலால் தற்சமயம் அவருடைய கதையை இங்கே சற்று நிருத்தி அவர் படித்த காலேஜின் உற்பத்தியை சற்று யோசிப்போம்.

கடவுள் எப்போதும் ஒழுங்கின்மையிலிருந்து புது உலகத்தை சிருஷ்டித்தவராகவே இருக்கிறார். பதினெட்டாம் நூற்றாண்டில் கலகங்களும், கலகச் சமாசாரங்களும் ஊர் புரளிகளும், காரணவாதங்களும், நிரீச்சுரவாதங்களும், அவ்விசுவாசங்களும், இன்னும் மற்ற குழப்பங்களும் உண்டானபடியால் இரத்தமும் கண்ணீரும், மரணமும், அழிவுமே உலகத்திலுள்ள எல்லா ஜாதியாரின் பங்காய் இருந்தது. இவ்வித ஒழுங்கீன நிலைமையிலிருந்து கடவுள் சிருஷ்டித்த புது உலகம் எதுவென்றால், "மிஷன்கள்." அழிவுக்கேதுவான இவ்வளவு எதுக்களிலிருந்து கர்த்தர் தம்முடைய பரிசுத்தநாமத்தின் மகிமைக்கென்று ஒரு புதிய ராஜ்யத்தை அவர்கள் மத்தியில் ஆயத்தம் செய்துக்கொண்டுவந்தார். 1768 லிருந்து 1779-ம் வருஷவரையிலும் காப்டன் கூக் என்பவர் தென் கோளார்த்தத்திலும், பசிபிக் சமுத்திரத்திலும் பூகோள சாஸ்திர சம்பந்த வெளிப்பாடுகளுக்காக அவர் செய்த அநேக பிரயாணங்களானது மறைவாக இருந்த அநேக விஷயங்கள் ஜனங்களுடைய கவனத்தை இழுத்தன.

பூமியிலுள்ள அநேக ஜாதியாருக்குள் ஒரு புதிய விதமான ஆவியும் முயற்சியான செய்கையும் பிறந்தது. இதனல் தேசத்திலும் நிறத்திலும் வித்தியாசமுள்ளவர்கள் ஒருவரோடொருவர் நெருங்கி சேரும்படியாயிற்று.

கடவுளின் கிரியைகள் மௌனமாகவே பெருத்த அதிசயங்களைச் செய்யத்தக்கதா யிருக்கிறது. அவர் தமது அடிகளை ஒவ்வொரு சமுத்திரத்திலும் வைத்து கொந்தளிக்கும் புசல்கள்மேல் தம்முடைய வெற்றியை நடப்பிக்கிறார். திருஷ்டாந்திரமாக ஐரோப்பாவில் இரண்டு மார்க்க எழுச்சிகள் உண்டானது. கடவுள் அதன்மூலமாய் அந்தரங்கத்திலேயே பெருத்த கிரியைகளைச் செய்து அக்காலத்தில் பற்பல நாடுகளில் கொந்தளிக்கும் பாவபுசல்களை தணிக்குமாறு தம்முடைய வெற்றியை அவர்களுக்குக் கொடுத்தார். அவ்வித மார்க்க எழுச்சியை நடப்பித்தவர்கள் இரண்டுவித கூட்டத்தார், ஒன்று வெஸ்லியைச் சேர்ந்தவர்கள், இன்னொன்று பக்திமார்க்க கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இங்கிலாந்திலும் ஜெர்மனியாவிலும் பெருத்த வேலையைச் செய்து தற்காலத்தில் நடந்தேறும் சிறந்த மிஷனெரி சங்கங்களின் பிதாக்களாயிருக்கிறார்கள். வொற்டம்பர்க், பேடன், அல்சக்ஸ், சுவிட்ஸர்லாந்து முதலிய இடங்களில் ஸ்தாபிதமான சபைகளில் அநேக ஊக்கமுள்ள கிறிஸ்தவர்களு மிருந்தார்கள். ஆனல் அவர்களோ இதுவரையிலும் சபைகளில் நடந்தேறிவரும் குளிர்ந்துபோன வெளி ஆசார ஆராதனைகளின்பேரில் திருப்தியற்றவர்களாய் இருந்தார்கள்.

ஆனபோதிலும் அவர்களோ இவர்களைவிட்டு விலகுவதை நீக்கி அவர்களுள் இருந்தே சபைகளைச் சீர்திருத்த ஆசித்தார்கள். இவர்கள் எல்லாரும் சபை ஆராதனைக்கு ஒழுங்காய்ச் சென்று அதன்பிறகு ஒரு ரகசிய சங்கம் கூடினர்கள். அதனல் அப்போதிருந்த சிலபேர் கிரிஸ்தவர்கள் இவர்களைப்பார்த்து நிந்தைப்பெயரால் "பக்திமான்கள்" என்றழைத்தார்கள். வொற்டம்பர்க் வேதசாஸ்திரியாகிய பென்ஜல் என்பவரும், பேடனிலுள்ள சுகுண வைத்தியர் ஜங்ஸ்டிலிங் என்பவரும், அல்சக்ஸ் போதகராகிய ஓபர்லீன் என்பவரும், இன்னும் மற்ற அநேக சிறந்த கிரிஸ்தவர்களோடும்சேர்ந்து உலகத்திலுள்ளபல கோத்திரத்தாருக்கு சுவிசேஷத்தைப் பரவச்செய்தார்கள். தரகம்பாடியிலுள்ள மிஷனனது டேனிஷ் ஆளுகைக் குட்பட்ட ஒரு மிஷன். இதில் விசேஷமாய் ஜெர்மானியர் மிஷனெரிகளாய் இருந்தபோதிலும் இந்தத் தரகம்பாடி மிஷனுக்கென்று சிலர் நன்கொடை கொடுத்தார்கள், இருளிலுள்ள எல்லாரும் தங்கள் வழிகளை உணர்ந்து வெளிச்சத்தையே தேடினர்கள். முதலாவது "பேசல்" என்கிற இடத்தில் "கிறிஸ்துமார்க்க சங்கம்" என்ற ஓர் சங்கத்தை ஸ்தாபிதம்செய்தார்கள். இந்த சங்கத்தின் மூலமாய் பேசல் மிஷன் காலேஜ் உற்பத்தியானது. இந்த கலாசாலையில் சுவிசேஷ பிரசங்கவேலையை ஒவ்வொரு இடங்களிலும் செய்ய பால்யர்கள் பயிற்சிக்கப்பட்டு வந்தார்கள். அதை ஸ்தாபிதம் செய்த காலத்தில் இது இவ்வளவு பெரிய மிஷனக மாறும் என்று ஒருபோதிலும் நினைத்ததில்லை. பேஷல் மிஷன் காலேஜியின் உபாத்தியாயரும் மேற்பார்வை யிடுகிறவருமாகிய புளும் ஹார்ட் என்பவர் தம்முடைய உபந்நியாசம் ஒன்றில் சொன்னதாவது: "இங்கிலாந்து, ஹாலந்து முதலிய இடங்களில் ஊழியஞ் செய்துவருகிற மிஷனெரி சங்கங்களுக்கும், அந்நியநாடுகளில் வெகுகாலமாய் தாபந்தத்தோடு ஆத்துமாக்களின் ரக்ஷிப்புக்காக உழைத்துவரும் சங்கங்களுக்கும் மிஷனெரிகளை அனுப்பும் நோக்கத்தோடு மாணுக்கர்களைப் பயில்விக்க மிஷனெரிப்பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்ட நாங்கள் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினோம். அதனல் எங்களுடைய இளைஞர் சமாதானத்தைக் கூறும் தூதர்களாகவும், பரோபகார நாகரீகத்தை விதைக்கிறவர்களாகவும், அஞ்ஞான உலகத்தின் பற்பல பாகங்களுக்கு அவர்கள் போகவேண்டியதா யிருக்கிறது" என்றார். "பேசல் மிஷன் காலேஜ்" 1816-ஆு ஆகஸ்டுமீ 26உயில் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் திறக்கப்பட்டது. சிறியதாக ஆரம்பித்த அந்தக் காலேஜ் இப்போது பெரியதாக வளர்ந்து சீனவிலும், இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும் அபரிமிதமான ஊழியத்தைச் செய்துவருகிறது.

ஐக்கிய மாகாணம், ஆஸ்திரேலியா, பிரேஷில், இன்னும் மற்ற தேசங்களிலுள்ள ஜெர்மானிய சபைகள் தேவ ஊழியத்திற்கென்று தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுத்த ஊக்கமும் அனலுமுள்ள போதகர்களை பற்பல இடங்களுக்கு அனுப்பினது.

இச்சமயத்தில் ஹெபிக் பேசல் மிஷன் காலேஜில் சேர்வதற்காக விண்ணப்பம் செய்திருந்தார். கடிதத்தின் மூலமாய் சமாசார போக்குவரத்துக்காக நீண்டநாள் பொறுமையோடு கார்த்திருந்தார். ஒருவேளை பேசல் மிஷனர் இவருடைய விண்ணப்பத்தைத் தள்ளும்பக்ஷத்தில் லண்டன் மிஷன் சங்கத்தாருக்கு விண்ணப்பம் செய்யத் தீர்மானித்திருந்தார். லண்டன் மிஷன் சங்கத்தாருக்கும் தம்முடைய விருப்பத்தைக் காட்டி ஒரு விண்ணப்பம் எழுதி கீம்பல் போதகரிடம் கொடுத்திருந்தார். ஆனல் கீபேல் போதகருக்கோ லண்டனிலிருந்த இந்தப் பெரிய சங்கத்தினருடைய விலாசம் தெரியாததினல் அந்தக் கடிதத்தை அனுப்பாமலிருந்தார். கடைசியாக பேசல் மிஷனர் இவரை ஏற்றுக்கொள்வதாக ஒரு அங்கிகார கடிதம் அவர்களிடமிருந்து வந்தது. லெப்ரன் துரைசாணி, இவருடைய கல்வி விஷயத்தில் நேரிடும் செலவை கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருந்தபடியால் அந்த துரைசாணியினுடைய உதவியினல் சாமுவேல் ஹெபிக் அதிக சந்தோஷத்தோடு தன் சிநேகிதர்களையும் விட்டு நீண்டதும், அதிகக் கடுமையுமான பிரயாணத்தைச் செய்து கடைசியாக பேசல் பட்டணம் வந்து சேர்ந்தார். அந்தநாள் 1831-ஆு கிரிஸ்துவின் ஜநநநாளாய் இருந்தது. அப்போது அக்காலேஜியை மேல்பார்வையிடும் சுகுணம் நிறைந்த போதகர் தம்முடைய பிள்ளைகளையும் காலேஜ் மாணுக்கர்களையும் கூட்டிவரச்செய்து நாட்டப்பட்டிருக்கிற கிரிஸ்மஸ் மரத்தைச் சுற்றிலும் சேர்ந்து பெத்லகேமில் பிறந்த பாலகனுக்கு ஸ்துதியாக சில பாடல்களைப் பாடி அவருடைய வழக்கப்பிரகாரம் ஏதோ சில சொற்ப வெகுமதிகளைக் கொடுக்கபோகிற சமயத்தில், அவருடைய வீட்டின் முற்றத்தில் யாரோ தட்டுகிற சத்தம் கேட்டது. உடனே அந்தப் போதகர் கதவைத் திறந்து பார்த்தவுடன், முற்றிலும் வித்தியாசமான பார்வையையுடைய ஒரு அந்நியன், மயிரால் செய்யப்பட்ட ஒரு குல்லாவை தன் கையில் வைத்துக்கொண்டு நிற்பதையும், தான் அக்காலேஜியின் போதகனைப் பார்க்க வந்ததாகவும் அறிவித்தவுடனே, போதகர் முதலாவது இந்த அந்நியனை விகற்பமானவிதமாய் உற்றுப்பார்த்தபோதிலும், ஆள் இன்னரென்று வெகு சீக்கிரத்தில் அறிந்துகொண்டபடியால் அந்த வாலிபனுடைய இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டு அவனை ஏற்றுக்கொண்டு, உள்ளே அழைத்துச்சென்று மற்ற மாணுக்கர்களுக்கு இவனை சாமுவேல் ஹெபிக் என்று தெரியப்படுத்தினர். போதகர் ஹெபிக்கைப்பார்த்து சொன்னதாவது, "சகோதரனே, நாங்கள் இப்போது ரக்ஷகர் பிறந்த பண்டிகையைக் கொண்டாடுகிறோம், இந்த நாளிலே உன்னை எங்கள் மத்தியில் கொண்டுவந்த ஆண்டவர் உன்னோடிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக" என்றார். பிறகு அந்த நல்லபோதகர் அவருக்குக் கொடுக்கவேண்டிய வெகுமதிகளைக் கொடுத்து, புதிதாய்வந்த அவருக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்கும்படி அதிக ஊக்கமாய் ஜெபம் செய்தார். அதன்பிறகு ஞானப்பாட்டு பாடப்பட்டது. ஒவ்வொரு மாணுக்கனும் தங்களுக்குக் கொடுத்த சிறிய வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு அந்தப் போதகருக்கும், அவருடைய நல்ல மனைவிக்கும் அவர்களுடைய பக்ஷத்திற்காக நன்றியறிதலான வந்தனம் அளித்து சென்றனர். ஹெபிக்மாத்திரம் தனிமையாக அங்கே யிருந்தார். அப்போது போதகர் ஹெபிக்கைப்பார்த்து "பிரிய சகோதரனே நீயும் உனக்குக் கொடுக்கப்பட்டதை எடுத்துக்கொண்டு செல்லலாமே" என்றார். ஹெபிக்கும் மற்ற மாணுக்கர்களைப்போலவே அவருக்கு வந்தனத்தைச் செலுத்தி தன் அறைக்குப் போய் தன் முன் எல்லாம் அந்நியமாய் இருக்கிறதைப் பார்த்தார். இதுதான் அவர் படிக்கவேண்டிய காலேஜ், எல்லா மாணுக்கர்களும் ஒரு சிறிய வீட்டில் இருந்து அவர்களே பெருக்கவும், சமைக்கவும், தைக்கவும், இப்படிப்பட்ட வீட்டுவேலைகளையும் செய்துவந்தார்கள்.

டி. யல். ராஸ்,

சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

---

MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது

ஆலோசனைக்காண்டம்.

நரகத்தின் அக்கினிமயமான மேற்கூரையையும் அளாவிக்கொண்டு தூலதூரத்தில் புசற்காற்றினல் அலசடிப்பட்டு வருகின்ற ஓர் கப்பலைப்போல் இந்த ராட்சத பசாசானவன் காணப்பட்டான். கடைசியில் நரகத்தின் கடைக்கோடியையுங் கண்டான். நரகத்தின் கதவு மும்மடங்கு மடிப்புகளுள்ளதாயிருந்தன. மூன்று வெண்கல மடிப்பும், மூன்று இரும்பு மடிப்பும், மூன்று உருக்கு மடிப்புமுள்ளவைகளா யிருந்தன. மேலும் அக்கதவுகள் அக்கினிச்சுவாலையை எப்பக்கத்திலும் எரிந்துகொண்டிருந்துஞ் சற்றேனும் அவ்வக்கினியால் வெந்துபோகாமலிருந்தன. வாயில்களுக்கு முன்னே இருபக்கங்களிலும் அந்தகாரம் நிறைந்ததும் பயங்கரமுமான வடிவங்களிருந்தன. அவைகளிலொன்று அழகியதும் இடுப்புமட்டுக்கும் ஸ்திரீயின் உருவாயும், அதற்குக் கீழே அவலட்சணமான சிலாம்புகளையுடைய மச்சவடிவாயுமிருந்தது. இது பிரமாண்டமான வடிவாயிருந்ததுமன்றி மரணபற்களையுடைய ஓர் சர்ப்பம் அதினிடையைச் சுற்றிக்கொண்டிருந்தது. அதற்கு அருகாமையில் பயங்கரத்தை யுண்டுபண்ணும் சுனகன்கள் ஓயாமல் குலைத்துக்கொண்டிருந்தன. அச்சுனகன்கள் இஷ்டமானபோது அவ்வடிவின் வயிற்றில் ஓடி ஒளித்துக்கொண்டு ஒருவருங் காணுதபிரகாரம் குலைத்துக்கொண்டுமிருந்தன. மற்றொரு வடிவம் வடிவமென்று சொல்லத்தக்கதா யிருக்கவுமில்லை.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஹீனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினல் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கைபொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0 0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.




Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

APRIL, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. ஏப்பிரல்மீ, 1918.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**மிஷன்களும் சண்டையும்.**—சண்டை மும்முரமாய் நடந்து கணக்கற்ற திரவியச் செலவுக்கு ஏதுவாயினும் மிஷன்களுக்கு எப்போதும்போலவே நிதிகள் சேர்ந்துவருகின்றன. சில மிஷன்களுக்கு அதிகமான வருமானம் லபித்திருக்கிறது. ஜர்மன் மிஷன் பாடசாலைகளைமாத்திரம் வேறு மிஷன் அதிகாரிகள் ஒப்புக்கொண்டு பார்த்துவருகிறார்கள்.

**கிறிஸ்தவன் ஹிந்துவானது.**—ஹிந்துக்கள் கிறிஸ்தவர்களாகிறதே தவிர, கிறிஸ்தவர்கள் இந்துக்களாகிறதை இதுவரைக்கும் கேட்டறியோம். ஆகிலும், மதுரையிலே அற்புதம்பிள்ளையின் குமாரன் சாலொமோன் என்னும் ஒரு வாலியன் சென்ற மாதம் இந்துமதத்தைச் சேர்ந்து அதற்குரிய அனுஷ்டானங்களைச் செய்து முடித்தாராம். மதவிஷயத்தில் யாவருக்கும் பூர்த்தியான சுவாதீனமுண்டானமையால், இது ஒரு விந்தையன்று.

**இந்திய வரவு செலவு.**—யுத்தம் பயங்கரமாக நடந்தாலும், இந்தியாவிலிருந்து அதற்காகப் பெருந்தொகையான திரவியமும், போர்வீரரும் போய்விட்டாலும், செலவுபார்க்கிற மந்திரியாகிய சர் வில்லியம் மேயர் அவர்களின் யுக்தியினாலே இவ்வருஷம் 2¼ மில்லியன் பவுன், அதாவது, ஏறக்குறைய நமது ராஜதானியிலும் 2 கோடி லாபம் கண்டிருக்கிறது. கோடி ரூ. மிச்சமாகும். இதனாலே வரிகள் புதிதாய்ப் போடாமல், கல்வி விர்த்திக்காக அதிக முயற்சி எடுக்கப்படுமாம்.

**சென்னையில் கல்வி விர்த்தி.**—சென்னபட்டணத்திலிருக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் படிப்பிக்கப்பட வேண்டுமென்று ஒரு கட்டளை ஏற்படுத்த மேற்படி மியுனிசிப்பாலிட்டியார் ஒரு கமிட்டி உண்டாக்கியிருக்கிறார்கள். இது இந்தப் பட்டணத்திற்குப் பெருத்த அனுகூலமாயிருக்கும். திரவியத்திற்குத்தான் மெத்த கஷ்டம் நேரிடும். ஆகிலும் சென்னை ராஜதானிக்குக் கல்வி விர்த்திக்காக 54 லட்சம் உத்தரவாயிருக்கிறது.

**நமது தினம்.**—ஜார்ஜ் சக்கரவர்த்தி இத்தேசம் வந்து டில்லியிலே டர்பார் வைத்த டிசெம்பர்மீ 12உ யை "நம்முடைய தினம்" என்றழைத்து வருஷந்தோறும் உற்சவம் கொண்டாடி வருகிறார்கள். அன்றைக்கு சென்னையிலே சேகரமான தொகை மட்டும் 1 லட்சத்துக்கதிகம். இது விசேஷமாய் மாணாக்கர் சம்பாதித்தது. இது யுத்தச் செலவுக்காக. அன்றி, நட்பரசர்க்குமாத்திரம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நாளதுவரைக்கும் 1,246 மில்லியன் பவுன் கொடுத்துதவியிருக்கிறார்கள்.

**அமெரிக்கர் முயற்சி.**—சமுத்திரத்திலே அகோரஞ் செய்துவந்த சப்மெரின்களைத் துரத்திப் பிடித்துச் சுட்டு வீழ்க்கத்தக்க அதிக விரைவாய் ஓடுகிற ஏராளமான பலத்த சண்டைக் கப்பல்களை நமது புது நட்பர் அதிக விரைவாகக் கட்டிவருகிறார்கள். சப்மெரின்கள் சுடுகிற குண்டினாலே இதுகளுக்கு யாதொரு தீங்கும் விளையாதாம். இதுகள் அத்தனையும் அவசியம். ஏனென்றால் அமெரிக்க சைனியங்களை அத்லாந்திக்குச் சமுத்திரத்தைக் கடந்துதான் பிரான்சுக்குச் செல்விக்கவேண்டும். அவை செல்லும் மார்க்கத்தில்தான் ஜர்மன் சப்மெரின்கள் நீர்க்குள் ஒளித்துக்கொண்டிருக்கின்றனவாம்.

**சென்னையிலே மதுபான விலக்கு.**—இனிப் பட்டணத்திலே மதுபான வியாபாரிகளுக்கு அதிகமான வரியும், வேறுபல கட்டுப்பாடுகளும் ஏற்படுத்த உத்தரவு பிறந்துவிட்டது. கடைகள் 8½ மணிக்கு அடைக்கப்படும். ஆனரபில் சர்மா என்கிற மெம்பர் இந்த வியாபாரத்தை முற்றிலும் நிறுத்திவிடவேண்டுமென்று ஒரு சட்டம் பிறப்பிக்க எவ்வளவோ முயன்றார். அங்கிலேய மெம்பர்களின் எதிர்ச்சியினாலே அவருக்கு வோட் கிடைக்கவில்லை. முற்றிலும் நிறுத்துகிறது தர்மமன்று; சுவாதீன வர்த்தகம் பின்னப்படலாகாதென்றார்கள். விளைகிற தீமைகளைமாத்திரம் தடுத்துக் குறைக்கத்தக்க முயற்சி செய்யவேண்டுமாம். ஆனால், பிரான்சு, அமெரிக்கா, ரஷியா இப்பேர்ப்பட்ட தேசங்களில் மதுபான வியாபாரம் முற்றிலும் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**பரஸ்பர உபகார நிதிகள்.**—கோ ஆப்பிரேடிங் சொசைட்டீஸ் என்கிற இந்த உபகார நிதிகள் இந்துதேச கவர்மென்ட்டெங்கும் பரவி, பிரஜைகளுக்குப் பேருபகாரஞ் செய்துவருகின்றன. பயிரிடும் குடிகள், விரைக்காகவும் வேறு செலவுகளுக்காகவும் சாவகாரிடத்திலே வருடத்திற்கு 30, 40 வட்டி கொடுத்து நாசமடைகிறார்கள். தற்காலம், கொஞ்சம் கடன் வேண்டியவர்கள் அங்கங்கே ஏற்படுத்தியிருக்கிற இந்த உபகார நிதிகளண்டை போய் சொற்ப வட்டிக்குத் தானும் வேறெய இருவரும் சேர்ந்து கையொப்பம்வைத்துக் கடன் வாங்கிக்கொள்ளலாம். இப்படி எல்லரும் செய்துவருகிறார்கள். இதனாலே உதவிமட்டுமல்ல, புத்தி, கருத்து, ஒழுங்கு முதலிய நற்குணங்களும் படித்துக்கொள்ளுகிறார்கள். இவையனைத்தும் கவர்ன்மொண்டார் செய்துவருகிற உபகாரம்."

**சாது சுந்தர சிங்கு.**—இப்பெயர்கொண்ட ஒரு பஞ்சாபிக் கிறிஸ்தவர் இதுவரையும் பிரமசாரியாயிருந்து, சம்பளம் யாதொன்றுமில்லாமல் தேசமெல்லாஞ் சென்று, கிறிஸ்துநாதரைப் பற்றிப் பிரசங்கஞ் செய்துவருகிறார். இவரைக் கிறிஸ்தவ சந்நியாசி என்றழைக்கலாம். ஆயினும் ஒரே இடத்திலிருந்து ஒரே சபையாருக்கு ஊழியஞ்செய்துவருவது மகா கஷ்டம். அன்றி, திபேத்திலே 390 வயதுள்ள ஒரு கிறிஸ்தவ சந்நியாசி குகையிலே வசித்து எம்பெருமான் வருகையை எதிர்பார்த்திருக்கிறாராம்! சுந்தரசிங்கும் ஒருநாள் ஒரு தாவிலே தள்ளுண்டு அங்குள்ள பிணங்கள்மத்தியில் துன்பம்

**ஏப்பிரல்மீ பஞ்சாங்கம்.**—


| வாரம். | எப்பிரல்மீ — பங்குனி—சித்திரை. ● அமாவாசை, 11உ ⊙ பௌர்ணமி, 26உ | | | | | பங்குனி—சித்திரை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 2 | 9 | 16 |
| திங்க ... | 1 | 8 | 15 | 22 | | 19 | 26 | 3 | 10 | 17 |
| செவ் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 4 | 11 | 18 |
| புதன் ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| வியா ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| வெள் ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 1 | 8 | 15 | ... |

சகித்து உயிர் விடுகிற தருணத்திலே, ஆகாயத்தில் அசரீரி வாக்குப் பிறந்து, ஒரு கயிறு தொங்கவிட அதைப் பிடித்துக்கொண்டு வெளியேறி வந்துவிட்டாராம். இவைகள்போன்றவை நம்ப அரிதானவை யென்று சிலர் கூறுகிறார்கள். உண்மை எப்படியும் வெளிப்படுவது நிச்சயம்.

## THE WAR

## யுத்த வரலாறு

யுத்தம் சிறிது அமர்ந்திருந்தாலும், ரஷியா முதலான ராஜ்யங்களிலே நடந்துவருகிற அகோரங்கள் மனதால் கிரகிக்கமாட்டாதவை. ஐரோப்பாவிலே பாதியாயிருந்த ரஷிய ராஜ்யம் முற்றிலும் சின்னாபின்னமாய்ச் சிதறிவிட்டது. எம்பெருமான் கிரிஸ்து விளம்பியவாறு, தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த அரசும் நிலைக்கமாட்டாது. ஜர்மன்கள் ரஷிய சைனியங்களை நிறுத்திவிட்டு, தங்கள் சொந்தப் போர்வீரரை அங்கனுப்பி நாட்டைத் தம் வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். ரஷியாவின் மேற்பாகத்தில் ஏறக்குறைய அனைத்தும் அபகரிக்கப்பட்டது. இது போதாதென்று சைபீரியாவையும் கைப்பற்றிக்கொள்ள எத்தனிக்கிறார்கள். இதனாலே சீனாவுக்கும் ஜப்பானுக்கும் அபாயமுண்டாகுமென்றெண்ணி, ஜப்பானியர் யுத்தசன்னத்தராய்விட்டார்கள். கிரீசும், ருமேனியாவும், செர்வியாவும் நிர்மூலப்படுகிறதாய்விட்டது. மேற்கிலேமட்டும் வைராக்கியஞ் சாதித்துவருகிறார்கள். பிரமாண்டமான பெருஞ்சண்டை நடக்குமென்றெல்லாரும் எதிர்பார்க்கிறார்கள். இது ஒன்றுதான் யுத்தத்தை முடிக்கிற காரணமாகும். அமெரிக்கரும், ஆங்கிலேயரும், பிரான்சியரும் கூடித் தயார் செய்து வருகிறார்கள். இதுநிற்க, தேசங்களிலெல்லாம் பஞ்சம் தொடியதாய்விட்டது. தானிய தவசங்கள் முன்போல வரக்கூடாமையால், ஜனங்கள் எங்கும் பட்டினிகிடக்க நேரிடுகிறது. இப்பொழுது நட்பரசர் யாவரும் கூடி ஒரு ஆலோசனைச் சங்கம் ஏற்படுத்தி, யுத்தத்தை ஒரு நெறியாய் நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இன்னும் சில மாதங்களுக்குள்ளே பெரும்போர் நடந்து, இரண்டிலொன்று சம்பவிப்பது நிச்சயம். ஒன்று, ஜர்மனி முற்றிலும் தோற்று, மன்னிப்புடன் சமாதானம் வேண்டிக்கொள்ளும்; ஒன்று, ராஜ்யங்கள் யாவும் தங்களுக்கு நேரிடுகிற ஆபத்தைப்பார்த்து, ஏக சமயத்தில் பரஸ்பர சமாதானஞ் செய்துகொள்வார்கள். ஆயினும், பலமும், பெருந்தொகையான வீரரும், பிரஜைகளின் ஆதரவும், திரவியமும் நட்பரசர் பட்சத்திலுண்டாயிருப்பதாலே, ஜெயம் எங்கே வருமென்பதை நமதன்பர்களே யூகித்துக் கொள்ளலாம். இம்மாதம் 14-ந் தேதி பிரார்த்தனை தினமாக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதை மறவோமாக.



சந்தபன்.

## THE WORDS OF THE WISE

## "பெரியோர் வாக்கிய பரிபாலனம்"

நீர்வளம் நிலவளம் பொருந்திய இப்பரதகண்டத்தின் பூர்வீக இளைஞரும் வயதில் மூத்தோரும், அறிவுடைய பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்வதில் அதிக சிறந்தவர்களென்று முற்காலத்தில் நமது பெரியோர்கள் எழுதிவைத்த நூற்களின்மூலமாய் அறிந்துவருகிறோம். "தந்தைதாய்ப் பேண்," "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்;" "மாதாவை யொருநாளும் மறக்காதே" என்று ஔவையாகிய கிழவி சொன்ன நீதிநெறி வாக்கியங்களெல்லாம் பெரியோரை கனம்பண்ணு, அவர்களுடைய சொற்களை பரிபாலனஞ்செய், என்கிற ஒரேகருத்தை வெளிப்படுத்துகிற பற்பல நீதிவாக்கியங்களா யிருக்கின்றன. இவ்வித சிறந்த வாக்கியங்களைச் சிரமேற்கொண்டு நன்குணர்ந்துநல் ஒழுக்கத்திலும் தேவதா பக்தியிலும் வளர்ந்துவந்த நம் தேசத்தார், வயிற்றுப்பிழைப்புக்காக கண்டவேஷம் தரித்து, வரவர இத்தேசத்தவருக்குள் நல் ஒழுக்கம் ஆசாரம் தேவதாபக்தி குறைந்து கண்டவர் கண்டு நகைக்க காலகதி ஆனது. தற்காலத்தில் குடும்ப எஜமானர்கள் பணப்பித்துப் பிடித்து, சம்பாத்தியம் ஒன்றையே கருதி குடும்பவிஷயத்தில் பிள்ளைகளின் நல் ஒழுக்கத் தேர்ச்சியில் கவனம் செலுத்த நேரமில்லாமல் விட்டுவிடுகிறபடியால், இளைஞர் தங்கள் இஷ்டப்பிரகாரம் நடக்கவும் கண்டவிதமாய் அரட்டை அடிக்கவும், பெரியோர் வாக்கிய பரிபாலனஞ்செய்வதில் அசட்டையும், கேடுபாடான வழக்க பழக்கங்களை அநுசரித்து இளைஞர் சண்டப்பிரசண்டர்களாய் வல்லடிவழக்கை விலைக்கு வாங்கி மூர்க்காவேசம்கொண்டு நாடு சிரிக்க நகர் சிரிக்க வளருகிறதைக் கண்ணுற்ற தாய் தந்தையர் மனம் குலுங்கிக் கண்ணீர்சொரிந்து பெருமூச்சு விட்டு ஐயோ பகவானே; இதுவும் தலைவிதியா என்று தலைவிதியை நினைத்துப் புலம்புவார் எத்தனையோ ஆயிரம், இதை சீர்திருத்த நம் தேசத்தில் ஒரு மகானும் இல்லையா. "ஆகாசக்கோட்டை கட்ட நினைக்கிறதைப்போல்" ஹோம்ரூல்லீகுக்காகப்பாடுபடுகிற நம்மவர்கள் இப்படிப்பட்டவர்களைச் சீர்திருத்தினால் நம்தேசம் எவ்வளவாய்ச் சீர்படும் என்கிற சத்தியத்தை மறந்துபோனார்கள்போலும், தேசம் சீர் அடையவேண்டுமானால், தாயும், தகப்பனும் தங்கள் பிள்ளைகளின்மேல் கவனம்வைத்து நல் ஒழுக்கத்தில் வளர்வதினால் உண்டாகும்.

முற்கூறிய சத்தியங்களை நாம் தெளிவாய் அறிந்துகொள்ள நம்தேசத்தின் பூர்வீக மகான்களின் சரித்திரம் நமக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. அம்மகான்களின் ஜீவியம் செத்துப் போகாமல் நமக்கு மாதிரியாய் இருக்கும்பொருட்டு இதுவரையிலும் காக்கப்பட்டு வந்திருக்கிறது.

பெரியோர் வாக்கிய பரிபாலனஞ்செய்த மகான்களில் ஸ்ரீராமர் ஒருவர், அவர் தம் தந்தைவாக்கிய பரிபாலனஞ் செய்ததால் நாடுநகரை விட்டு, சீதாப்பிராட்டியோடு வனவாசஞ்சென்று படாதபாடு



பட்டார். இவரது சகோதரன் பரதன், அரண்மனைக்குத் திரும்பிவர பிரார்த்தித்தும், தம் தகப்பன் போட்ட கோட்டை மீறுவதில்லை என்று உறுதி மொழி கூறினர்.

துவாபரயுகத்தில், யயாதி மகாராஜன், முதிர்வயதா யிருந்தகாலத்தில் தன் மூப்பைப் போக்கி யௌவன சடலத்தைப் பூண ஆசித்து, தன் மகனாகிய ஒருவனுடைய சடலத்தை இறவலாகக் கேட்டபோது, பிதாவாக்கிய பரிபாலனம் ஒன்றையே கருதி தன் சடலத்தைக் கொடுத்தான் என்று சரித்திரம் கூறுகிறது. முற்கூறிய இவ்விருவரும் பிதாவாக்கிய பரிபாலனஞ் செய்தவர்கள். தமையன் வாக்கிய பரிபாலனஞ் செய்தவர்கள், தருமரின் இளையவர் நான்குபேரும் என்று அறிகிறோம்.

தாய்வாக்கிய பரிபாலனஞ் செய்தவர்கள் பாண்டவர் ஐந்துபேர்.

குருவாக்கிய பரிபாலனஞ் செய்தவர் சொல்தவருத அரிச்சந்திரன்.

பிச்சைக் கேட்டவனுக்கு இல்லை என்னும் வாக்கிய பரிபாலனஞ் செய்தவர் கர்ணன்.

சிந்தைத்விர் வாக்கிய பரிபாலனஞ் செய்தவர் அநுமார்.

பர்த்தாவின் வாக்கிய பரிபாலனஞ் செய்தவர்கள் நளாயனி, வாசுகி முதலியவர்கள். முற்கூறிய இத்தனைபேரும் பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்து தங்கள் ஜீவியத்தின் வெற்றியை பூலோகத்துக்குப் பாடமாய் வைத்தார்கள். நாம் இதுவரையிலும் ஒருபக்கத்தின் பாடத்தை கவனித்தோம். இன்னொருபக்கத்தைத் திருப்பிப் பார்ப்போமானால், பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்யாத மூடர்கள்பட்ட பாடுகளைப் பார்ப்போம்

ராவணன் பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்யாத துஷ்டன், வணங்காக் கழுத்துள்ளவன், ஆதலால், ராமர்கையில் தொம்சமானான். கம்சனின் கதியும் அப்படியே முடிந்தது. துரியோதனன் கீசகன் முதலியவர்களும், பெரியவர்களின் ஆலோசனையைக் கேளாமல் சுயேச்சையில் நடந்து கர்வங்கொண்டதால் மாண்டார்கள். பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்யாதவர்களின் கதி இதுவே.

ஆகையால் இதை வாசிக்கும் பெரியோரே, உங்கள் பிள்ளைகளைக் கடவுளுக்கேற்ற சிக்ஷையில் வளருங்கள்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

### ஆலோசனைக்காண்டம்.

ஏனென்றால் அவயவங்கள், பொருத்துகள் முதலியவைக ளற்றதாயிருந்ததினாலும் நிழலாட்டமாகக் காணப்பட்டதினாலும் அதை ஓர் உருவமென்று பாவிக்கக் கூடாதிருந்தது. பொருளென்று அல்லது நிழலென்று சொல்லவுங் கூடாமலிருந்தது. இரவைப்போல் கறுத்தநிறமும், பூதகணங்களைப்போலவுமிருந்ததுடன், நரக பயங்கரத்தைக் கொடுக்கத்தக்க ஓர் ஈட்டியை வீசிக்கொண்டிருந்தது. அதின் சிரசின்மீது ஓர் ராஜமுடி யிருந்தது. சாத்தான் வாயிலுக்குச் சமீபிக்கவே அவ்வடிவுந் தனது ஆசனத்தினின்றிறங்கி அதிதீவிரத்துடன் எதிர்கொண்டு வந்தது. அச்சமயத்தில் நரகத்திலும் ஓர் அதிர்ச்சியுண்டாயிற்று. பர்ட்சத பிசாசாகிய வேதாளமும் இதென்னவென் றதிசயித்தான். அதிசயித்தானேயல்லது எள்ளளவேனும் பயப்படவில்லை; ஆம், கடவுளையும் அவர் குமாரனையுந்தவிர வேறொருவருக்கும் அவன் அஞ்சுவது வழக்கமில்லை. எந்த வஸ்துவையும் மதிக்கிறவனாயு மிருக்கவில்லை. ஆதலால் எவ்வளவேனும் பயமின்றி எரிபந்தம்போன்ற எரிச்சலான முகத்தோடு அவ்வகோர வடிவுடன் பேசலுற்றான்.

### 9. பேய்க்கணங்கள் எதிர்த்தபடலம்.

நீ யார், எங்கிருந்து வருகிறாய்? அவலட்சணரூபமே, நீ அசங்கிதமும் அவலட்சணமுமாயிருக்கிறதுமன்றி வாயிலண்டைக்குச் செல்லுகிற என்னையும் மறிக்கத் துணிந்து வருகிறாயோ? உன்னுடைய அனுமதியின்றி நான் நரகவாயிலைக் கடந்து அப்புறம் போக எண்ணமுற்றிருக்கிறேன்; அது உன் மனதிற் கெட்டியாயிருக்கட்டும். திரும்பிக்கொண்டு போ, இல்லாவிடின் உன் மதியீனத்தால் விளையும் பயனை அனுபவிப்பாய். நரகவாசியே, வானுலகத்தின் ஆவிகளுடன் போர்புரிவது உனக்கு எவ்வளவு கேடாய் முடியுமென்பதை சீக்கிரத்தில் பரீட்சையினால் அறிந்துகொள்வாயென்றான்.

அதற்கு அந்த காப்ளின் பேய்க்கணம் அகங்காரத்துடன் மறுமொழியாக: நீ துரோகஞ்செய்த தூதனல்லவோ? நெடுங்காலங் கெடாமலிருந்த விசுவாசத்தையும் சமாதானத்தையுங் கெடுத்துவிட்டவன் நீயல்லவோ? மேலும் தூதர்களில் மூன்றிலொருபாகத்தை துரோகஞ்செய்ய ஏவிவிட்டவனல்லவோ? அவர்கள் இந்நகரத்தில் தள்ளப்பட்டு நித்தியகாலமாய் அழிவையுஞ் சஞ்சலத்தையும் அடையும்படி செய்வித்தவன் நீயல்லவோ? நரக ஆக்கினைக்குள்ளாயிருக்கிற நீ வானதூதர்களில் ஒருவனென்று சொல்லிக்கொள்ளுகிறாயா? நான் அரசனாக ஆளுகைசெய்துகொண்டிருக்கும் அவ்விடத்தில் சபதங்கூறவும் சாபமிடவுந் துணிகிறாயா? நான் உனக்கரசனும் ஆண்டவனுமாயிருக்கிறதை மறந்தாயோ? கள்ளக்கைதியே, உன்னுடைய நிர்ப்பந்த நிலைமைக்குத் திரும்பிப்போ; உன்னுடைய செக்கைகளை விரித்துத் தீவிரத்துடன் பறந்துபோ; இல்லாவிடின் தேள்கட்டிய சவுக்கினால் உன்னைத் துரத்தி என் கையிலிருக்கும் இந்த சூலாயுதத்தினால் ஒரே அடியாய் உன்னை அடிப்பேன். இதுவரைக்கும் உனக்குச் சம்பவியாத திகில்களும் நீ பரீட்சிக்காத வேதனைகளும் உன்னைப் பிடிக்குமென்றது.

இப்படி அப்பயங்கரவடிவு வேதாளத்தைப் பார்த்துப் பேசினது; பேசும்போதே பதின்மடங்கு பெரிதும் அவலட்சணமு மாகிவிட்டது. சாத்தானோ ஆகாயத்தில் எரிந்துகொண்டிருக்கும் ஓர் வால் நட்சத்திரத்தைப்போலாக மாறி தன் சிரசின்வழியாய் வாதைகளையும் எரிபந்தங்களையும் பொழிந்தான். இருபேரும் மல்யுத்தஞ்செய்யவும் ஒருவரையொருவர் சிரச்சேதஞ்செய்யவுங் கருதினர். அழிவின் கரங்களை நீட்டிச் சம்மாரஞ்செய்ய ஆரம்பித்தனர். இரண்டு மேகங்கள் கெர்ச்சித்து ஒன்றோடொன்று மோதும்வேளையில் பலமான காற்றுவீசி எங்கும் இருளையும் அந்தகாரத்தையும் உண்டுபண்ணுவதுபோல, நரகத்தின் இருள் பதின்மடங்காய் அதிகரித்தது. அத்தருணத்தில் அருகாமையிலிருந்த சர்ப்பாபரணம் பூண்ட சூனியக்காரி எழுந்து இருபேருக்கும் நடுவிலே போய் விழாவிட்டால் நரகமெல்லாம் கிடுகிடாய்த்துவிடும், பலத்த காரியங்களுஞ் சம்பவிக்கும். இவள் நரகவாசலைக் காத்துக்கொண்டு மரணத்தின் திறவுகோல்களைக் கையிற்பிடித்து யாவருக்கும் பயங்கரமான சபதங் கூறிக்கொண்டிருந்தனள். அவள் கூக்குரலிட்டு வேதாளத்தையும் மரணத்தையும் பார்த்துச் சொன்னது:

ஓ தகப்பனே, உன்னுடைய சொந்த ஆத்துமத்துக்குக் கேடொன்றுஞ் செய்யாதே; ஓ மகனே, உன் தகப்பன் சிரசுக்கு நேராய் மரணபாணங்களைத் தொடுக்காதே; உனக்கென்ன, பயித்தியமா? உன்னத ஸ்தலத்தில் வாசஞ்செய்பவர் உங்களைப் பார்த்து ஆகடியஞ் செய்கிறதுமன்றி ஒருநாளில் சிறைகளாயிருக்கிற உங்களிருவரையும் தம்முடைய நீதியாகிய கட்கத்தினால் நாசஞ்செய்துவிடுவார்; அவருடைய கோபாக்கினையினாலல்லவோ நாம் இந்தப்பாடு அனுபவிக்கிறோம்; இதை அறியாதிருக்கிறாயோ என்றாள். அவள் பேசினமாத்திரமே போராட ஏற்பட்டவர்கள் சடுதியில் தங்கள் உக்கிர கோபத்தை அடக்கிக்கொண்டு மெத்தவும் அமைதலாய் நின்றனர். இப்போது மந்திராலோசனைச் சங்கத்திற்குச் சபாநாயகனுங் காரியகர்த்தனுமாயிருந்த சாத்தான் அந்த ஆவேசத்தைப் பார்த்துப் பேசத்தொடங்கினன்.

உன்னுடைய சபதம் விபரீதமாயும், உன்னுடைய வார்த்தை விநோதமாயுமிருக்கின்றன. நீ எங்கள் நடுவில் வந்து நாங்கள் செய்யவிருந்த பயங்கரக் கிரியைகளைச் செய்யாதபடிக்குத் தடுத்துவிட்டாயே; அதற்கு முகாந்தரமென்ன? ஆயினும் இருக்கட்டும். நீ யாரென்று நான் அறிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது. உன் பேரென்ன? இரட்டைவடிவைப் பூண்டிருக்கிறாயே; இந்நரகபாதாளத்தில் நான் உன்னைக் காணவேண்டியதென்ன? நீ என்னைத் தகப்பனென்றும், அந்த அசங்கியமும் அவலட்சணமுமான ஆவேசத்தை எனது புத்திரனென்றும் சொல்லுகிறாயே, அதெப்படி? உன்னை அறியவேமாட்டேன். உன்னைப்போலவும் அவனைப்போலவுமொத்த அவலட்சணமும் அருவருப்புமான உருவங்களை நான் இதுவரையிலும் காணவேயில்லை என்றான்.

நரகவாயிலைக் காப்பவள் அதற்கு மாறுத்தரமாக: என்னை மறந்துவிட்டாயோ! உன்னுடைய கண்களில் மெத்தவும் அருவருப்பாய்ப் போய்விட்டேனோ! ஓர்காலத்தில் சேராபீன்களின் சபையில் நாம் இருக்கவில்லையோ! வான அரசனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு செய்தபோது நீ என்னோடு ஐக்கப்பட்டிருக்கவில்லையோ! அப்போது நான் உனது பார்வையில் அந்தமும் அழகுமாயிருக்கவில்லையோ! சடுதியில் கொடிய உபாதைகள் உன்னைப் பிடிக்க, இருளும் அந்தகாரமும் உன்னை மூட, சிரசின்வழியாய் அக்கினிச்சுவாலைகள் புறப்பட, உன் இடதுபக்கத்திலிருந்து உன்னைப்போல சவுந்திரவடிவைப் பூண்டு ஓர் தேவதைக்கொப்பாய் நான் புறப்படவில்லையோ! நான் புறப்பட்டவுடனே வான சேனைகள் பிரமிக்கவில்லையோ! பிற்பாடு என்னைப் பாவமென்று கண்டு விலகியோடினார்களல்லவோ! ஆயினும் நாளடைவில் எனது மந்திர தந்திரங்களினாலும் சரசசல்லாப வுல்லாச லீலா விநோதங்களினாலும் அவர்களில் மிகுதியான பெயர்களைக் கைவசப்படுத்திக்கொண்டேன். நீயும் எனது அழகைப்பார்த்து இச்சித்து என்னுடன் சம்போகசகிதமாயிருந்தாய்; இதற்குள்ளாக வானுலகத்திற் சண்டையுண்டாயிற்று. இச்சண்டையில் நமது சத்துருவாகிய சர்வவல்லவருக்கு வெற்றியும், நமக்கு அபஜெயமும் நஷ்டமு முண்டாயின. சண்டையில் உன்னுடன் சேர்ந்திருந்த தூதர்களனைவரும் உன்னத வானத்தினின்று பாதாளலோகத்துக்குத் தள்ளப்பட்டனர். அவர்களோடு நானும் தள்ளப்பட்டேன்; அப்போதுதான் இந்தப் பெரிதும் பலமுமான திறவுகோல் என் கையிற் கொடுக்கப்பட்டது. மேலும் இந்த வாயில்களைக் கெட்டியாய்ப் பூட்டிவைக்கவும் ஒருவரையும் வெளியில் விடாமலிருக்கவும் எனக்கு ஆக்கியாபிக்கப்பட்டது. அதுமுதல் அநேககாலம் விசனமுற்றவளாய் நான் இவ்விடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். காலஞ் செல்லச்செல்ல எனது கர்ப்பமும் பூரணமாகி, இந்த உன்னுடைய குமரபாக்கியத்தைப் பெற்றேன்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

TRADE MARK. TRADE MARK.

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும் பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0 0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.




Registered No. M. 442.

सत्यमेव जयति THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MAY, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. மேமீ, 1918.

## NEWS AND NOTES

### வர்த்தமானக் குறிப்புகள்

**ஹோம்ரூல் பிரயாணிகள்.** — இங்கிலாந்துக்குப் புறப்பட்ட திலகம், பால் முதலியவர்கள் கொழும்புச் சேர்ந்ததும் இங்கிலாந்திலிருந்து தம்பிப்பெற்று பிரயாணத் தடையுற்றிருக்கின்றார்கள். இது விசனப்படத்தக்க விஷயமே.

**சலவைக்கல் அறுப்பு.** — தச்சர் மரத்தை அறுத்துத் துண்டு செய்வார்களேதவிர, சலவைக்கல்லைப் பல்கை பலகையாய் அறுப்பதே கிடையாது. ஆகினும் தற்காலம் அமெரிக்காவிலே அப்படி அறுக்கிற ஒரு யந்திரம் உண்டு பண்ணியிருக்கிறது.

**மச்சத்தில் எழுத்து.** — ஆப்பிரிக்காவிலே ஸான்சிபார்க்கடலில் பிடிக்கப்பட்ட ஒரு மீன் முதுகிலே அராபிப்பாஷையில் சில எழுத்துக்கள் வரைந்திருந்தனவாம். அவை கடவுளைப்பற்றியவை. ஆனல் அவ்வட்சரங்கள் அம்மச்சத்தில் எழுதப்பட்ட அதிசயத்தை விளக்குவார் யாருமில்லை.

**இந்தியரின் சராசரி வரவு.**—இத்தேசத்திலுள்ள முப்பதுச் சில்லறை கோடி ஜனத்தின் சராசரி வரவு வருஷத்திற்கு 30 ரூ. என்று கணக்கிட்டிருக்கிறது. ஆனல் இத்தேசத்தில் புதிதாய் வந்திருக்கிற ஸ்லேற்றர் வித்வான் 30 அல்ல, 72 ரூ. என்று சாதிக்கிறார். இது சுத்த தவறு என்று அநேக வித்வான்கள் மறுத்து வருகிறார்கள். மேலும் இது அத்தனை அவசியமன்று; தேசத்தில் கஷ்டப்பட்டு வருகிற 6 கோடி பஞ்சமரின் சராசரி வரவைமாத்திரம் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். அது 30 ரூ. கூட இராதென எண்ணுகிறோம்.

**தென்னிந்திய விவசாயக் கைத்தொழில்.**— மைலாப்பூரிலிருக்கும் பென்ஷன் இன்ஸ்பெக்டர் ஜீ. ராஜகோபாலவர்கள் இம்மாதாந்தரப் பத்திரிகையை நடத்திவருகிறார். இது எட்டாம் வருஷத்தின் முதல் நம்பர் இதிலே அனேக உபயோகமான விஷயங்கள் நல்ல நடையில் எழுதியிருக்கின்றன. நவீன விவசாயம் வியாபாரம் எரு, பலா, பால், குழந்தைகள் ஆரோக்கியம், சிறுவர்த்தோட்டம் முதலிய பல விசேஷங்கள் அடங்கியுள்ளது. வருஷ சந்தா ரூ. 3. அனேகர் இதை வாங்கி வாசித்துப் பயனடைதல் சிறந்தது.

**பஞ்சமர்க் கல்வி.**—இத்தேசத்திலே சூத்திரருக்கும் தாழ்வான பஞ்சமர் என்றழைக்கப்படும் ஜனங்கள் 6 கோடிப்பேர் உண்டு. இவர்களுக்கு எழுத்துவாசனையே கிடையாது. இவர்கள் விஷயத்திலும் பெண்கள் விஷயத்திலும் கவர்ன்மென்டார் தினையத்தனையும் கரிசனப்படாமல் காலங்கழித்துவிட்டார்கள். இப்பொழுதுதான் கொஞ்சங் கண் திறந்துவருகிறது. காலஞ்சென்ற கோக்கலே எடுத்த பெரும் பிரயாசை இப்பொழுது பயன்படுகிறதுபோலாயிற்று. அங்கங்கே பஞ்சமர்க் கல்வி ஆரம்பிக்க முயலுகிறார்கள். நாஷனல் எட்யுக்கேஷன் என்கிற முயற்சி, அஸ்திபாரமாகிய பஞ்சமர்க் கல்வியிலிருந்து பலமாய் ஆரம்பித்தால், சாதாரண கல்வி யென்கிற கூட்டம் விரைவில் அதன்மீது கட்டி முடியும்.

**சென்னையிற் கள்ளு வியாபாரம்.**—கள், சாராயம், உவைன், பிராந்தி முதலிய லாகிரிப் பதார்த்தங்களின் விற்பனையையும், உண்டுபண்ணுந் தொழிலையும், நிறுத்த முடியாமற்போயினும், வேறு அனேகம் கட்டுத்திட்டங்கள் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அனேக கள்ளுக்கடைகள் அடைபட்டுப் போயின; ஜனங்கள் சம்மதமின்றிப் புதுக்கடைகள் அங்கங்கே திறக்கலாகாது; கடைகளை 8 மணிக்குச் சாத்திவிடவேண்டும். கூலி வேலைக்காரர் போகிற ரஸ்தாக்களில் கடைகள் வைக்கக்கூடாது. இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களினலே மதுபானம் குறைக்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், புத்தியே மேலானது. நல்ல கல்வி பயின்று மதுபானத்தின் கெடுதியை உணர்ந்தபேர் எப்படி மது உண்ணச் சகிப்பார்கள்?


**குடிகள் சைனியம்.**—லாய்ட் ஜார்ஜ் பிரதம மந்திரியவர்கள் இந்தியாவிலிருந்து போர்வீரரும், திரவியமும் அனுப்புவிக்கவேண்டுமென்று கருத்தாய் வேண்டியிருக்கிறார். பங்காளத்திலே 21 முதல் 28 வயது வரைக்குமுள்ள சகல ஆண்களும் கட்டாயமாய்ப் போர்வீரராக வேண்டுமென்று பங்காளிகளே ஒரு கட்டுமானம் செய்துகொண்டிருக்கிறார்கள். சரியான ஏற்பாடு செய்தால் இத்தேசத்திலிருந்து ஒருகோடிப் போர்வீரர் யூரோப்புக்குப் போய் ஜர்மன்களோடு போர்செய்து மடக்கி அடிப்பார்களென்பதற் கையமில்லை. ஆரம்பத்திலே முப்பது லட்சம்பேர் போதுமானது. ஜீவனோபாயமின்றி பசியும் பட்டினியுமாய்த் தவிப்போர் எத்தனைப்பேர். அப்படிப்பட்டவர்களுக்கு இது தக்க தொழிலன்றோ? கவர்ன்மெண்டார் துரிதப்படவேண்டும்.

**கைலாஷ் கிறிஸ்தவர்.**—இமயகிரியிலே கைலாஷ் என்கிற ஒரு சிகரத்தின் ஓர் குகையிலே 318 வயதுள்ள ஒரு கிறிஸ்தவ சந்நியாசி ஜீவித்திருக்கிறதாகவும், அவரைக் கண்டு வார்த்தையாடினதாகவும் சாது சுந்தர சிங்கென்னும் ஒரு கிறிஸ்தவ சந்நியாசி கூறியிருக்கிறார். இது நம்ப வெகு அரிதாயிருக்கிறது. கைலாஷ் என்கிற பெயரே சந்தேகத்துக் கிடந்தருகின்றது. மேற்படி சந்நியாசி ஜீவித்திருக்கிறதுமாத்திரமன்று, அவர் தமது உடலைவிட்டு வானம், பூமி எங்கும் உலாவி பலபேரைக் கண்டு சம்பாஷிக்கவும், சாகாஜீவியம் பெற்று உயிரோடிருக்கவும் வரம்பெற்றிருக்கிறாராம். அங்கே போய் விசாரித்தறிந்த ஒரு பெரியவர் இது சுத்த அபத்தம் எனக் கூறினதாக எபிப்ளனி என்கிற கல்கத்தா இங்கிலிஷ் பத்திரிகையி லச்சிட்டிருக்கின்றது. ஒருவேளை சுந்தர்சிங்கு சொப்பனமாகக் கண்டதை நனவு விஷயமாகக் கூறி வருகிறாராக்கும். இந்தியக் கிறிஸ்தவர்கள், அதிலும் பெரும்பாலும் ஸ்திரீகள், லேசிலே சகலத்தையும் நம்பிவிடுகிறார்கள்.

**மேமாத பஞ்சாங்கம்.—**

| வாரம். | மேமீ = சித்திரை—வைகாசி. ● அமாவாசை, 10உ ⊙ பௌர்ணமி, 25உ | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | சித்திரை—வைகாசி. | | | | |
| ஞாயி ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 6 | 13 |
| திங்க ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 7 | 14 |
| செவ் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 1 | 8 | 15 |
| புதன் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 2 | 9 | 16 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 3 | 10 | 17 |
| வெள் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 21 | 28 | 4 | 11 | 18 |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 5 | 12 | ... |

**ஜர்மன்களின் புதுப்பீரங்கி.**—அவர்கள் நவமாய் உண்டுபண்ணியிருக்கிற ஒரு பீரங்கி குண்டை 60, 70 மைல்மட்டும் செலுத்துவிக்கின்றதாம். வழக்கமாய் பீரங்கிக் குண்டுகள் 12 மைல் செல்லும், சில பெரிய பீரங்கிகள் 22, 23 மைல் வரையும் குண்டைச் செல்விக்கக்கூடும். ஆனால் 60, 70 மைல்மட்டும் பாய்விக்கிற பீரங்கி இக்காலத்தி லதிசயமென்றே சொல்லத்தகும். இப்படிப்பட்ட எண்ணங்கொண்டு 70 மைல் தூரத்திலுள்ள பாரிஸ் நகரத்தின்பேரில் குண்டு பாய்ச்சி வருகிறார்களாம். ஆனாலும், அதிகதூரம் செல்லுகிறதினாலே குண்டு அனல் குளிர்ந்து, வலியற்றுப் போகிறது. பாரிஸ் பக்கத்தில் விழுந்த குண்டுகள் இரண்டொருவனைமாத்திரம் கொன்றும், காயப்படுத்தியும் வருகிறதேதவிர வேறொரு கெடுதியும் விளைவிக்கவில்லை. இந்தக் காரணத்தினாலேதான் அவர்கள் லண்டனுக்கு 30 மைல் தூரத்திலுள்ள கலேய் பட்டணத்தைப் பிடிக்க இந்த 4 வருஷங்களாகப் படாதபாடெல்லாம் பட்டு வருகிறார்கள். இப்பொழுது அங்கிலேயரும் 80 மைல் தூரம் பாயத்தக்க ஒரு பீரங்கி உண்டுபண்ணி யிருக்கிறார்கள்.



பாங்காக்கு அரண்மனை.

## THE WAR

## யுத்த வரலாறு

வாஸ்தவமான யுத்தம் இப்பொழுதுதான் ஆரம்பித்துவிட்டது. இருகட்சியாரும் பேய், பிசாசு போல ஒருவரையொருவர் சுட்டும், வெட்டியும், இடித்தும், மடித்தும், குத்தியும், கொன்றும், காயப்படுத்தியும், மாய்த்தும், வருகிறார்கள். இருவரும் கற்சுவர்போல் தத்தம் ஸ்தானத்தில் இடம் பெயராமல் நின்று வைராக்கியம் சாதித்தாலும், நட்பரசர் சிறிது பின்தாங்க நேரிட்டிருக்கிறது. சில ஊர்கள் பிடியுண்டுபோயும், அவற்றிற் சில மீண்டும் பிடியுண்டு வருகின்றன. ரஷியாவிலிருக்கிற ஜர்மன் போர்வீரர்கள் யாவரும் பிரான்ஸிலே வந்து முன்னிருந்த ஜர்மன் வீரரோடு சேர்ந்து யுத்தம் புரிந்துவருகிறார்கள். இந்த இரண்டுமோதத்தில் தோல்வி, ஜெயம் தெரியவரும். ரஷியா உட்கலகத்தால் இளைத்துத் தோல்வியடைந்து சமாதானம் செய்துகொண்டது நட்பரசர் ஒருக்காலும் எதிர்பாராத சம்பவம்; பேராபத்தாயிற்று. ஆகிலும், அமெரிக்கர் 30 லட்சம் சேனை தயார்செய்து லட்சம் லட்சமாக அனுப்பிவருகிறார்கள். கப்பல்கள் தாம் போதாதகுறை. ஒருலட்சம் சேனைக்கு 100 கப்பல் வேண்டியதாயிற்றே. அவர்கள் உணவு பதார்த்தங்களுக்கு இன்னொரு 100 கப்பல் அவசியம். இதனாலேதான் தாமதப்படுகிறது. ஜர்மன்களின் முக்கியநோக்கம் கலேயையும், பாரீஸ் நகரத்தையும் பிடிக்கவேண்டுமென்பதே. இதுவோ பகிரதப்பிரயத்தனமாய் முடியும். அவர்கள் அரை மைல் நகருகிறதற்குள்ளே பதினாயிரம்பேர் மடிகிறார்கள். அவர்கள் சைனியத்தொகை பயங்கரமான விதமாய்க் குறைந்து வருகிறது; நட்பரசரின் சைனியத்தொகை குறைவதற்குப் பதிலாக அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதுவே இனிவரும் ஜெயத்தின் ரகசியமும் கோரிக்கையும். மூவர்ப் படைகளும் இப்பொழுது ஜெனரல் பாக்ஸ் என்னும் ஒரு சிறந்த பிரெஞ்சுத் தளகர்த்தன் வசத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அம்மகானே யுத்தத்தை நடத்திவருகிறார். அங்கிலேயரும் 80 மைல் தூரம் குண்டுசெலுத்தும் பீரங்கிகளைச் செய்துவருகிறார்கள். ஜப்பானியரும் அனேக கப்பல்களைக் கொடுத் துதவுகிறார்கள். கடவுள் தர்மத்தின்பட்சமாய்ச் சண்டைக்கு ஜயத்தை வருவிப்பார்; இதற்காக நாமனைவரும் கருத்தாய் வேண்டிக்கொள்ளவேண்டும்.

நமது ராஜ்யத்தின் ஸைனிய விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 4,530,000 | பேர் | நூற்றுக்கு | 60 | வீதம். |
| ஸ்காட்லாந்து | 620,000 | ,, | ,, | 8·3 | ,, |
| உவேல்ஸ் | 200,000 | ,, | ,, | 3·7 | ,, |
| ஐயர்லாந்து | 170,000 | ,, | ,, | 2 3 | ,, |
| ஆஸ்திரேலியா | 900,000 | ,, | ,, | 12 | ,, |
| இந்தியா etc | 1,000,000 | ,, | ,, | 13·7 | ,, |

ஆக மொத்தம் 6,750,000 போர் வீரர்.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

வியாபாரத் தொழில் விருத்தியடைந்த மனிதர்களுக்குமுன் இவ்வித பேதமையான மாணாக்கர்கள் எவ்வளவு வித்தியாசமாய்க் காணப்படுவார்கள். அவர்களோடு இந்த ஹெபிக் கலக்கவும், பழகவும் நேரிட்டது. அந்த மாணாக்கர்களோடு சவகாசம் செய்து நெருக்கமான வீட்டில் குடியிருப்பது இவருக்கு அதிக கஷ்டமாய் தோன்றிற்று. அவ்வித ஜீவியம்செய்ய அவர் எப்படி பழகப்படக்கூடும்? அவர் சிறந்த கல்விமான்களின் மத்தியில் ஜீவிக்க எதிர்ப்பார்த்திருந்தபோது கடவுள் என் இவரை தாழ்மையின் பள்ளத்தாக்கிலே நடத்தினார்?

இந்தவிதமான பள்ளிச்சாலையின் அநுபவம்தான் இவருக்குத் தேவையானது. சில வருஷங்கள் கழிந்தபிறகு அவருடைய பின்னான ஜீவியத்தை யோசித்தபோது அந்த காலேஜில் அவர் அடைந்த பற்பல சிறந்த போதனைகளைக்குறித்து நன்றியறிதலான மதிப்பையும் காட்டியிருக்கிறார். இந்தியாவில் இவருடைய உடன் மிஷனெரி ஒருவர் இருந்தார். அவர் வியாபாரியாய் இருந்து இந்த ஊழியத்தில் பிரவேசித்தவர். அவரை ஹெபிக் பார்க்கும்போதெல்லாம், "மனுஷனே நீ ஒருவருஷமாகிலும் மிஷன்காலேஜில் இருந்திருக்கவேண்டும். அப்போது அங்கே சுயபெலத்தை யெல்லாம் ஒடுக்கி தாழ்மையைக் கற்றுக்கொடுக்கிறார்கள்" என்று சொல்லுவாராம். ஹெபிக் படித்த மிஷன் காலேஜில் முப்பத்து மூன்று மாணாக்கர்கள் இருந்தார்கள், அவர்களெல்லாரும் இவரைவிட அதிகமாய் பள்ளிச்சாலையின் தேர்ச்சியுடையவர்கள், இவருக்கோ கிரம ஒழுங்கை அநுசரித்து தம் பாடங்களைப் படிப்பது அதிகக் கடினமாய்க் காணப்பட்டது. இலக்கணநூற்களைப் படிப்பதினால் உண்டாகும் பிரயோசனத்தை அறியாமலிருந்ததினால் அப்படிப்பட்ட படிப்பை அதிகமாய் வெறுத்தார். அவருடைய காலேஜின் மாணாக்கர்கள் நாலுவருஷம் காலேஜில் தேர்ச்சி யடையவேண்டுமென்கிற சட்டம் மாறி ஆறுவருஷம் இருக்கவேண்டுமென்று திட்டம் பிறந்தது: அந்த காலேஜில், வெற்ணர், புளும்ஹார்ட், பெல்ஹீஷன், வொன்புறுன், எஜன்பாக் முதலியவர்கள் உபாத்தியாயர்களா யிருந்தார்கள். அவரவர் தங்கள் முறையே பாடங்களை நடத்திவந்தனர். அதற்கெல்லாம் மாணாக்கர் முறை முறையே நடந்தேறிவரும் பாடங்களை கிரமமாய் படித்துவரவேண்டும். ஹெபிக் அவ்வளவு கெட்டித்தனமான மாணாக்கனாய் இராமல், பற்பல பாடங்களை படிப்பதில் பொறுமையற்றவரும் கொஞ்சம் வயதில் மூத்தவராகவுமிருந்தார். ஆனால் அவர் ஜெர்மன், ஸ்விதிஷ், பாஷைகளைப் பேசக்கூடும். பிரன்சு, இங்கிலீஷ் பாஷைகளை அறிந்துக் கொள்ளக்கூடிய சக்தியிருந்தது. அதோடு லத்தீன், இத்தாலியன் பாஷைகளையும் படித்திருந்தார். அதனால் ஹெபிக் இத்தனை பாஷைகளோடுங்கூட, கிரேக், எபிரேயு பாஷைகளையும் என் படிக்கவேண்டுமென்று நினைத்தார். அவர் தன் பாடங்களை எவ்வளவாய் வெறுத்தார் என்பதைப்பற்றி அவரை அறிந்த சிலர் வெகுகாலமாய் அந்தக் கதையை சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர் எபிரேய இலக்கணத்தை படிக்கப் பிரயாசைப்பட்டும் அடிக்கடித் தவறிப்போனார். ஆதலால் ஒருநாள் பேசல் பட்டணத்திற்கு அருகாமையில் ஓடின ஒரு பெரிய ஆற்றண்டை போய் இந்த புஸ்தகத்தை அதில் எறிந்தார். அது தண்ணீரில் விழுந்தபோது அதைப்பார்த்து "நான் ஆபிரகாமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீ சொல்லாதபடிக்கு உன்னுடையவைகளில் ஒன்றையும் நான் எடுத்துக் கொள்ளமாட்டேன்" என்று சொன்னாராம். ஆதி, 14, ஆதலால், அக்காலேஜின் நிர்வாக சபையார் இவருடைய மூர்க்கமான குணங்களையும், சாஸ்திர பயிற்சியை அடைய அவருக்கு வேண்டிய பொறுமை இல்லாததினாலும், இயல்பாய் அவ்வித புஸ்தகங்களை வாசிக்க ஆவல் அற்றவர் என்று கண்டபோது அவரை அக்காலேஜுக்கு தகுதியற்றவர் என்று நினைத்து அவரை அதிலிருந்து நீக்கிவிட ஏற்பாடு செய்தார்கள். அந்தவிஷயத்தை அறிந்துகொண்டு ஹெபிக் அவர்கள் மத்தியில்போய் சொன்னதாவது, "சகோதரரே; கர்த்தர் என்னை இவ்விடத்தில் அனுப்பினார் நான் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறேன், நீங்களோ என்னை வெளியே அனுப்பினாலும் நானே போகமாட்டேன். ஏனென்றால், என்னை இங்கு அனுப்பின கர்த்தர் இதைவிட்டுப் போகும்படி எனக்கு உத்திரவு கொடுக்கவில்லை" என்று சொன்னாராம்.

இந்தப்பிரகாரமாக அவர் அங்கேயே இருந்தார். கமிட்டியாரும் அவர்கள் பிறப்பித்த உத்திரவை பலவந்தத்திற்குக் கொண்டுவரவில்லை. அவர் ஏறக்குறைய மூன்றுவருஷம் அக்காலேஜில் படித்தபோது, அவரைப்பற்றி உபாத்தியாயர்கள் கொடுத்த ரிப்போர்ட்டாவது, "ஹெபிக் இலக்கண படிப்பை அதிகம் விரும்புகிறவரல்ல, ஆனால், பற்பல பாஷைகளை எளிதில் கற்றுக்கொள்ளக்கூடிய இயல்புடையவர். அதோடு ஆவிக்குரிய ஜீவியத்தில் அதிக முதிர்ச்சி அடைந்தவர். அவருடைய குணமும், நடத்தையும் வெகு சிறந்தது" என்றார்கள். இந்தப் பிரகாரம் அவருடைய ஜீவியத்தைக் கவனிக்கும் போது மாணாக்கர் வகுப்பில் அவர் சிறந்தவராகக் காணாவிடினும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறதில் சிறந்தவராகக் காணப்பட்டார். அச்சமயம் பேசல் பட்டணத்தில் யுத்தம் நடக்கும்போல் ஒரு குறித் தோன்றினது. ஆனதால் இராணுவ வீரர்கள் அங்கே வாத்துப்போக்குமாயிருந்தார்கள், அந்த சமயத்தில் ஹெபிக் அந்த வீரர்களோடு சேர்ந்து பொருட்காக்ஷிசாலைக்கு அவர்களை வழிநடத்தி அவருக்கு சமயம் கிடைக்கும்போதெல்லாம் அவர்களோடு, "தேவையானது ஒன்றே" என்கிற விஷயத்தைப்பற்றி அடிக்கடி பேசிவருவார். சிலநாள் பொருத்து காலேஜின் அதிகாரிகளின் அபிப்பிராயப்படி புளும்ஹார்ட் என்றவர் அங்குள்ள மாணாக்கரில் சிலரை யுத்தபட்டாளத்தில் சேர்க்க மனதாய் இருந்தபோது, ஹெபிக் அதற்கு ஒத்துக் கொள்ளாமல் அதிக மூர்க்கமாய் சொன்னதாவது "இவ்வளவு கேவலமும் அகோரமுமான ஊழியத்திற்கு என்னை ஒப்புக்கொடுத்து என்னை நான் இழந்துபோகமாட்டேன், என் ஜீவனும் அதற்குரிய சகலமும் என் ஆண்டவருடையது, அவரே அதன்மேல் அதிகாரமுடையவர்; அதை அவர் கேட்கும்போது அஞ்ஞானிகளுக்கென்று என் ஜீவனைக் கொடுக்க சந்தோஷமாயிருக்கிறேன். ஆனால் பேசல் பட்டணத்திற்காக நான் ஒரு துளி ரத்தத்தையும் சிந்தமாட்டேன்" என்றாராம். அவருக்கு விடுமுறைகாலம் வரும்போதெல்லாம் ஒரு இடத்தைவிட்டு இன்னொரு இடத்திற்குச் சென்று சமயத்திற்குத் தக்கபிரகாரம் புரொட்டஸ்டாண்டு கிறிஸ்தவர்களானாலும் சரி, காத்தோலிக் சபையைச் சேர்ந்தவர்களானாலும் சரி, ஆண்கள்; பெண்கள் பிள்ளைகள் எல்லோரையும் சந்தித்து அவர்களுடைய ஆத்துமாக்களின் நிலைமையைப்பற்றியும் இரட்சிப்பைப்பற்றியும் அதிக தாபந்தமாய்ப் பேசிவருவார். ஒருநாள் அவருடைய சுவிசேஷ காலக்ஷேப சுற்றுப்பிரயாணம் முடிந்தவுடன் அவர் கொடுத்த அறிக்கையாவது,—சிம்ப்ளானிலுள்ள காத்தோலிக் சந்நியாசிகள் மடத்திற்கு வந்து அங்கே ஒரு ராத்திரி தங்கினோம். அங்குள்ள சந்நியாசிகள் எங்களைப் பக்ஷமாய் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களோடு அன்று ராத்திரி போஜனம்சாப்பிடும்போது "ஏசுநாதர் ஜீவனை கொடுக்கும் வல்லமையுடையவர்" என்பதை அவர்களிடம் பேச சமயம் கிடைத்தது, அதோடு நான் எவ்விதமாய் குணப்பட்டேன் என்பதையும் அவர்களுக்குச் சொன்னேன். அதன்பிறகு ஒருநாள் என் ஆண்டவருடைய காக்ஷி கிடைத்தது. இந்தச் சிறு சுற்றுப்பிரயாணத்தால் நான் இயேசுவானவரோடும் அவருடைய சிஷர்களோடும் ஐக்கியப்பட்டதால் கர்த்தருக்கு மகிமை உண்டாகதக்கதாய் என் உள்ளான மனுஷன் அதிகமாய் பெலப்பட்டான். அதனால் நாங்கள் சுவிட்ஸர்லாந்திலுள்ள வீடுகளைச் சந்தித்து ஜெபிக்காமல் வரவில்லை. அருள்நாதர் மீட்டுக்கொண்ட ஆத்துமாக்களின்பேரிலே எங்கள் கிறிஸ்தவ அன்பு பந்தப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் உணராமல் போகவில்லை" என்று சொன்னார்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)



## THE SOUTH INDIAN DEPRESSED CLASSES SOCIETY

## தென்னிந்திய தாழ்ந்த வகுப்பார் சங்கம்.

கடந்த ஜனுவரிமீ வெளியான அறிக்கையின் படியே அடுத்த ஜூன்மீ கடைசியில் மூன்று முக்ய கூட்டங்கள், தஞ்சாவூர் ஜில்லாவில் நடக்கும். முதல்நாள் சங்கத்து 11 வருஷக் கூட்டம்; இரண்டாம்நாள் தென்னிந்திய தாழ்ந்த வகுப்பார் முதல் மஹாக்கூட்டம், மாலையில் சங்கத்து 11-வது வருஷ மஹோற்சவக் கொண்டாட்டம், மூன்றாம்நாள் 7-வது புருஷாக்கள் மஹாக் கூட்டம். இக்கூட்டங்களுக்குப் படித்த ஸ்திரீகளும் படியாதவர்களும், புருஷர்களும் ஒவ்வொரு ஜில்லாவிலுமிருந்து வரும்படியாக அழைக்கிறோம். பணச்சகாயம் சென்னை, வேப்பேரி பப்ரீயுஸ் பாடசாலை இராஜேந்திரம் அவர்களுக்கு அனுப்பவேண்டியது. மற்ற விஷயங்களுக்கு தஞ்சாவூர் ஜில்லா, தரங்கன்பாடி V. D. G. ஞானரத்னம் அவர்களுக்காகவாவது நாகபட்டணம், வடக்கு வாசல் A. சிவராமசாமிக்காவது எழுதிக்கொள்ளலாம்.

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

இவன் அஷ்ட விகாரங்கள் அமைந்த வடிவைப் பூண்டவனாகவும், கையில் அழிவின் கோலைப் பிடித்தவனாகவும் வெளிப்பட்டான்; அவனைப்பார்த்துத் திடுக்கிட்டதினால் நான் இக்கோலமாயினேன். நான் ஓடிப்போய் மரணமென்று கூவினேன். நரகம் அப்பயங்கரமான பெயரைக்கேட்டு நடுநடுங்கிற்று. பெருமூச்சுகளெறிந்தது. அதின் கெபிகளிலிருந்து மரணம், மரணம் என்கிற எதிரொலிகள் புறப்பட்டன. நான் துரிதமாய் ஓடினேன், ஆனால் அவன் என்னைப் பின்றொடர்ந்தான். அகங்காரத்தினாலல்ல, இச்சையினால் என்னைப் பின்றொடர்ந்து என்னைப் பிடித்தான்: நீ பார்க்கிற இந்த எண்ணிறந்த அகோர வடிவுகள் அவனுடைய புத்திரர்களாயிருக்கின்றன. இவைகளால் நான் அடையும் வேதனை கொஞ்சமல்ல. இவைகள் ஓரேமணித்தியாலத்தில் கர்ப்பத்திலுருவாகி, ஓரேமணித்தியாலத்திற் பிறந்து, வேண்டும்போதெல்லாம் திரும்பவும் கர்ப்பத்திற் சென்று கர்ப்பத்தில் உறுமுகிறதும் குடர்களை அரிக்கிறதும் கிழிக்கிறதும் மறுபடியும் வெளியிற் புறப்பட்டுச் சொல்லிமுடியாத வேதனைகளை உண்டுபண்ணுகிறதாயு மிருக்கின்றன. அமைதலும் இளைப்பாறுதலும் எவ்வளவேனும் எனக்கில்லை. என் கண்களுக்குமுன் எதிரியைப்போல மரணம் பயங்கரப்படத்தக்கவிதமாய் உட்கார்ந்திருக்கிறதைப் பார்க்கிறாயே! என் குமாரனும் எதிரியுமாகிய இவனுக்கு வேறே இரையில்லாமற் போவதினால் தாயாகிய என்னையே விழுங்க அவகாசம் எதிர்பார்க்கிறான். அவனுடைய முடிவும் என்னுடைய முடிவும் ஒன்றாக்கப்பட்டிருக்கிறது. நான் அவனுக்குக் கசப்பும் வேதனையுமான உணவாய்ப்போனேனென்று அறிவான்; விதிப்பிரமாணமும் அப்படியிருக்கிறது. ஆதலால் எனது அருமையும் பெருமையுமான தந்தையே, அவனுடைய சாவுக்கினமான போருக்கு விலகுவாயாக. உனது பளிங்குபோன்றதும் வானுலகத் தன்மையுமான காங்களில் காயமுண்டாக்க மாட்டானென்று கொஞ்சமென்கிலும் நினைக்கவேண்டாம். வானுலகத்தை ஆள்பவர்தவிர மற்றவர்களாலே அச்சாவுக்கினமான பாணங்களை எதிர்க்கக்கூடாது. இவ்விதமாய்க் காவல் காப்பவன் பேசி முடிந்தவுடன் தந்திரசாலியாகிய பேயரசன் முன்னடந்த காரியங்களை அறிந்துகொண்டதினால் அகங்காரத்தை அடக்கிக்கொண்டு அமர்ந்த சப்தத்துடன் பேசத் தொடங்குகிறான்.

### 10. பேய்க்கணங்களைத் தேற்றுபடலம்.

எனது அருமையும் பெருமையுமான குமாரத்தியே! நான் உனக்குத் தகப்பனென்று எனக்குச் சொன்னதுமன்றி, உன்னுடன் வானுலகத்தில் சம்போகமாயிருந்ததற்கு அத்தாக்ஷியாக, எனக்குப் பிறந்த அழகிய குமாரபாக்கியத்தையுங் காட்டினாயே! அச்சந்தோஷங்கள் இப்போது துன்பமாய் மாறிவிட்டன.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்

ஒருவருஷக் கைபொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0 0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கெதிர C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.

704 Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

31 MAY 1918

# சத்திய தூதன்.

JUNE, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூன்மீ, 1918.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

இந்திய சேனை.—இத்தேசத்தாரிடத்திலிருந்து 5 லட்சம் போர்வீரரை கவர்ன்மெண்டார் சேகரம் பண்ணி வருகிறார்கள். இது சிறந்தகாரியம். நல்ல கபாத்து செய்வித்தால், இந்தியரைவிட அதிபராக்கிரமமான வீரர் கிடையாது.

புதுவரிகள்.—சில புது வரிகள் போடப்படும். ஸ்டாம்புகள் எல்லாம் இரட்டை விலையாகும்போல் இருக்கிறது. இங்கிலாந்தில் அப்படியாய்விட்டது. அனவசியமான சிற்றின்பப் பதார்த்தங்களுக்கெல்லாம் அதிக வரி போட்டால் மெத்த உசிதம்.

இரண்டணு நாணயம்.—இந்தப் புது நாணயம் ஒரு அணு நாணயத்தைப்போல சோத்தியானதல்ல. பெரிதும் அவலட்சணமுமாயிருக்கிறது. ஒரு அணுவைப்போலவே, கொஞ்சம்மாத்திரம் பெரிதாயிருந்தால் அதிக அழகாயிருக்கும். அப்படியே அரை அணுவுக்கும் ஒரு காசு உண்டுபண்ணவேண்டும்.

சென்னைக் கவுன்சில் கூட்டம்.—இந்தக் கூட்டம் நீலகிரியிலே நடக்கிறது இந்திய மெம்பர்களுக்குக் கஷ்டமாயிருப்பதால், இனி எல்லாக் கூட்டங்களும் சென்னையிலேயே கூடும். இது நல்ல காரியம். கவர்ன்மெண்டு நீலகிரிக்குப் போகிறது உசிதமேயன்றென அநேகர் கூறுகிறார்கள்.

ஸ்பானிய பழமொழிகள்.—மூடிய வாய்க்குள்ளே ஈ புகாது. மெதுவாயடித்தல் எப்போதும் பிசகு. புத்திமான் தன் அறிவைக் கொக்கியிலே மாட்டிவையான். ஒரே வளையுள்ள எலி விரைவிலே அகப்பட்டுக்கொள்ளும். கோழியின்கண் அதன் முட்டைமேலே. ஒவ்வொருவனும் தன் போர்வைக்குத் தக்கபடி காலை நீட்டிக்கொள்வான்.

பிராமணப் பகை.—இந்த அதர்மப் பகையை ஸ்தாபிக்கும்பொருட்டே ஒரு திராவிடச் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. பிராமணர் அதிப்பிரயாசப்பட்டுக் கல்வி கற்பதுபோல, ஏனைய இந்தியர்களும் செய்தால்தான், இவர்களும் முன்னுக்கு வருவார்கள். உயர்ந்த உத்தியோகம் அடைவார்கள். அவர்களை ஏன் நாடவேண்டும்—தமிழர் முதலானோர் தாங்களே தங்கள் சடங்குகளைச் செய்துகொள்ளலாமே!

யுத்தக் கடன். மறுபடியும் யுத்தச் செலவுக்காக இந்திய கவர்ன்மெண்டார் இத்தேசத்தாரிடம் கடன் கேட்கிறார்கள். நூற்றுக்கு 5½ வட்டி வாக்குசெய்து வாங்குகிற கடன் 4, 6, 10, வருஷத்திற் கொடுத்துவிடுகிறதாகத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். இவ்விதமாக ஒரு மில்லியன் பவுண்ட் அல்லது 1½ கோடி ரூ. கடன் வாங்கப் போகிறார்கள். இந்தியர்கள் முழுவதையும் கொடுப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

சப்மெரின் மறுப்பு.—இங்கிலாந்துக்கும் ஜர்மனிக்கும் இடையிலுள்ள சமுத்திரத்தில் 22,000 சதுரமைல் ஜலம் முழுவதும் சுரங்கங்களால் வலைபோல் நிரப்பப்பட்டாயிற்று. இதனால் இனி ஜர்மன் சப்மெரின்கள் அவர்கள் துறைகளிலிருந்து வெளியே கப்பல் நாசஞ்செய்யப் புறப்பட முடியாது. இத்தனை விசாலமான பாதுகாப்பு இதற்கு முன் எந்நாளும் செய்யப்படவில்லை. சப்மெரின் முயற்சி போனால், ஜர்மனிச் சக்தி போனாற்போல.

புரோவின்ஷல் கான்பிரென்ஸ். — சென்ற 6 ௳ நடந்த இந்தக் கூட்டத்தில் இந்தியர்கள் யாவரும் ஒருவரோடொருவர் (ஜாதிபேதம் பாராமல்) கலியாணஞ் செய்துகொள்ளத்தக்க ஒரு சட்டம் கவர்ன்மெண்டார் உண்டாக்கவேண்டுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டது. இது நடந்தால் பிறந்த குலம், கோத்திரமல்ல—கல்வி, குணம், அந்தஸ்தே பரஸ்பர மணங்கட்குச் சட்டமாகும். அப்பொழுதுதான் இந்தியர் ஐக்கியப்பட்ட ஒரே ஜனமெனக் கூறப்படுவார்கள்.

டில்லி கான்பிரென்ஸ்.—சென்ற மீ அரசன் வேண்டுகோளால் டில்லி ராஜதானியிலே ஒரு மஹா சபை கூடினது. சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய முக்கிய பட்டணங்களிலிருந்து அநேக கனவான்களும், பல சுதேசத்தார்களும் போனார்கள். மேற்படி யுத்தக் கடனுக்கும், 5 லட்சம் போர்வீரருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டன. நாம் எதிர்பார்த்திருக்கும் சீர்திருத்தங்கள் யுத்தமோய்ந்தபின் ஆஞாபிக்கப்படுமாம். இப்பொழுதே வேண்டுமென்று சிலர் கேட்கிறார்கள்.

சீதாராமன்.—முன்பு ரெவினியு இன்ஸ்பெக்டராயிருந்து உத்தியோகத்திலிருந்து தள்ளுபடியான சீதாராமன் என்னும் பிராமணன் காஞ்சிபுரத்தில் குடியிருந்துகொண்டு, பம்பாயிலிருக்கும் சில அந்நிய அரசுத் தானாபதிகள் அல்லது கான்சல்கள் மூலமாக ஜர்மன் மந்திரி முதலானவர்களுக்கு முல்லர்* என்கிற ஒரு ஜர்மன் பாதிரி எழுதுகிறாற்போல பொய்க் கையெழுத்து வைத்துக் கடிதம் எழுதி, அனந்தம்பேர் ஜர்மன் அரசுக்காக வாஞ்சித்திருக்கிறதாகவும், ஜர்மன் படைகள் வந்தவுடன் அவர்களுடன் சேர்ந்துகொள்ள ஆயத்தமாயிருக்கிறதாகவும், ஆயுதம் முதலியவற்றிற்குப் பணம் ஒன்றுதான் குறையென்றும் உடனே பதினாயிரம் பவுண்ட் அல்லது 1½ லட்சம் ரூ. அனுப்பவேண்டுமென்று எழுதிக்கொண்டான். மேற்படி தானாபதிகள் இந்தக் கடிதங்கள் கிடைத்தவுடன் அவைகளைச் சென்னைக் கவர்ன்மெண்டுக்கு எழுதியனுப்ப, அவர்கள் விசாரணை செய்தார்கள். முல்லர் என்கிற ஜர்மன் பாதிரி எங்கும் கிடையாது; சீதாராமனே தன் சொந்தக்கையால் மேற்படி கடிதங்கள் எழுதி, காஞ்சிபுரத்துத் தபாலாபிஸில் முல்லர்பேரில் வருகிற கடிதங்களைத் தனக்கு நேரில் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். விசாரணையிலே இதுகள் எல்லாம் சுத்தப் பொய் என நிச்சயமாயிற்று. செங்கல்பட்டுக் கோர்ட்டிலே அவனுக்குச் சிரச்சேதத்துக்குப் பதில் 7 வருஷக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டது. கொஞ்சம் தி

### ஜூன்மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஜூன்மீ = வைகாசி—ஆனி. ◐ அமாவாசை, 8௳ ⊙ பௌர்ணமி, 24௳ | | | | | | வைகாசி—ஆனி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 20 | 27 | 3 | 10 | 17 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | ... | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| புதன் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 23 | 30 | 6 | 13 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 24 | 31 | 7 | 14 | ... |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 25 | 1 | 8 | 15 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 19 | 26 | 2 | 9 | 16 | ... |



புஸ்தகம் ௩க. நெ. அ.

வியம் சம்பாதிக்கவேண்டுமென்பதே அவன் துஷ்டப்பிரயத்தினத்தின் கருத்து. சில பேப்பர்கள் மூடத்தனமாய் இது "ஹோம் ரூல்" காரரின் காரியமென்கிறார்கள். அவ்வாறொன்றுமில்லை. ஹோம் ரூலார் இன்னும் சில மிராசுகள் கிடைக்க வேண்டுமென்றுமாத்திரம் பாடுபடுகிறார்கள்.

## THE WAR

## யுத்த வரலாறு

ஏப்பிரல் மீ 1 உ பாரிஸ் நகரத்தி விருப்போமென்று பயமுறுத்திய ஜர்மன் தளகர்த்தன் ஹின்டன்பர்கென்பவன் நாளதுவரையும் 60, 70 மைல் தூரத்தில்தான் கிடக்கிறான். நட்பாசரின் எல்லையைக் கடக்க எண்ணிறந்த சைனியங்களை இரைகொடுத்து, இரண்டொரு மைல் முன்னுக்குச் சென்று, பின்பு தூரத்துண்டு, வீரர்களுக்கு உண்ணபட்சணமின்றி, இழவு கொண்டாடி வருகின்றான். பாரிஸ்மீது பாய்ந்த பெரும் பீரங்கிக் குண்டுகள் சத்தம் இப்பொழுது கேட்கவேயில்லை. சீப்ரா சென்ற கடற்கரைப் பட்டணத்துக் குண்டுச்சாலை பின்பேரில் அங்கிலேயர் திடீரெனக் கப்பல் சண்டைசெய்து, குண்டு சுட்டு அர்த்தநாசஞ் செய்தார்கள். கைசர்தான் கடவுளால் அனுப்பப்பட்ட தானுபதியென்று தன்னைக்குறித்துச் சொல்லிக்கொள்ளுகிறான். எந்தச்சேனை முதல் முதல் குறைந்து க்ஷீணித்துப் போகுமென்பதே முக்கிய கேள்வி. ஜர்மன் சேனைதான் ஆரம்பத்தில் அழிந்துவிடவேண்டும். அது தேய்பிறைபோல நாளுக்கு நாள் குறைந்துவருகிறது. நட்பாசர் சேனையோ, அமெரிக்கரின் உபபலத்தால் வளர்பிறைபோல நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது அவனுக்கு ஆஸ்திரியாவின் சகாயம் முன்போலக் கிடையாது. அதன் புதுச் சக்கரவர்த்தியாகிய கார்ல் என்பவர் முற்றிலும் சமாதானப்பிரியரா யிருக்கிறார். கெலிப்புத் தோற்பு மேற்கிலேயே. 1815–ஆம் நெப்போலியன் வாடர்லூச் சண்டையில் தோற்றதுபோலவே, இந்த 1918–ஆம்த்திலும் கைசர் ஆனவன் தோற்புண்டு ஒடுவானென்பதற்கு ஐயமில்லை. ஆனால் இது, இரண்டொரு மாதத்தில் நடந்தாலும் நடக்கும். அல்லது இன்னும் இரண்டு மூன்று வருஷத்தில் நடந்தாலும் நடக்கும்.


இதுநிற்க, ஜர்மன்கள் ரஷியாவைக் கொள்ளையடித்து வருகிறார்கள். பாகம் பாகமாய் அவர்கள் வசம் சேர்ந்துவிடுகிறது. இதுவே இவ்யுத்தத்தின் பேராபத்து. சைபீரியாவைக் கைப்பற்றிக்கொண்டமையால், ஜப்பானியர் யுத்தசன்னத்தராகிறார்கள். ஜர்மனியின் நோக்கமெல்லாம் உலகமுழுவதையும் தன் அதிகாரத்திற்குள் அகப்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதே. இந்தியாவின்பேரிலும் கண் வைத்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினாலே தான், இத்தேசத்திலும் 5 லட்சம் போர்வீரரைத் தயார்செய்து வருகிறார்கள். யூரோப்பிலே தோற்றுப்போனாலும், இந்தியாவையாகிலும் ஒரு கை பார்க்கலாமென்கிறது அவர்கள் துர்வாஞ்சை. நமக்குத் தகுதியான நாட்டுச்சேனையும், கப்பற்சேனையும், பூர்த்தியான ஆயுதங்களும் ஆஜராயிருக்க வேண்டும், சர்க்காரும் பிரஜைகளும் ஒன்றுசேர்ந்து நடந்துகொண்டால் எதிரி இங்குவரத் துணியான்.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

அவருடைய உடன் மாணுக்கரில் ஒருவர் அவரோடு சுற்று பிரயாணம் செய்தபோது, ஹெபிக் எந்தவிதமாய் ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தினார் என்பதைப்பற்றி பின் வருமாறு எழுகிறார்—"நாங்கள் ஒரு எரிக்கருகாமையிலிருந்த குன்றண்டை வந்தபோது, ஹெபிக் என்னைப் பார்த்து இதன்மேல் நாம் போகலாம் என்கி



கிஸ்ணி பட்டணம்.

றார். அப்போது நான் அவரைப் பார்த்து அங்கு போவதால் என்ன பிரயோசனம்? நம்முடைய வசனங்களைக் கேட்க ஆட்கள் கிடைக்கமாட்டார்கள். இங்கே அநேக வண்டிகள் நிற்கிறது, ஆனதால் ஆட்கள் உண்டு என்று காட்டுகிறது. வேண்டியமட்டும் அவர்களைக் கண்டு பேசலாம் என்று தர்க்கித்தேன். அவரோ அதை ஒன்றும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. ஆகவே நாங்கள் இருவரும் அந்தக் குன்றின்மேல் ஏறி அங்குள்ள ஒரு அழகான மாளிகைக்குள் சென்றோம். அங்கே சில வேலையாட்களிருந்தார்கள். அப்பொழுது என் தோழன் அவர்களைப் பார்த்து "இந்த எரியின் ஜலம் கீழேயிருந்து மேலுக்கு வரும் இடத்தைப் பார்க்க விரும்புகிறோம் அதை எங்களுக்குக் காட்ட முடியுமோ" என்று கேட்டார். அவர்கள் அப்படியே அதற்குச் சம்மதிக்க அவர்களோடு நாங்கள் சென்று அந்த எரியின் தோற்றத்தைக் கொஞ்சநேரம் பார்த்த பிறகு அந்த இடத்தின் சொந்தக்காரனை பார்க்கக் கூடுமோ என்று அவர்களிடம் விசாரித்தார். அப்போது நான் அவருடைய காதண்டைபோய், நமக்கு நேரமாகிறதே; நாம் சீக்கிரம் இந்த இடத்தை விட்டு போகவேண்டுமே; என்று அவரை துரிதப்படுத்தினேன். அவரோ அதை கிஞ்சித்தேனும் இலக்ஷியம் செய்யவில்லை. கடைசியாக, அந்த கனவான் உள்ளேயிருந்து வெளியே வந்தார், அவரிடத்தில் ஹெபிக் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தார். அதன்பிறகு அந்த கனவான் எங்களை உள்ளே அழைத்துச்சென்று உட்காரவைத்து எங்களைக் கொஞ்சம் களைதீர்த்துக்கொள்ளும்படி சிற்சில போஜனபதார்த்தங்களை எங்களுக்குக் கொடுத்தார். அதன்பிறகு எங்களைச் சுற்றிலும் ஒரு கூட்டமான ஜனங்கள் உட்கார்ந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடனே ஹெபிக் பேச ஆரம்பித்து, அவர்கள் கிறிஸ்துவுக்குள் எப்படி நிலைத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி விசாரித்தார்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)



## DEVOTION

## பக்தி

இவ்வுலகத்தின்கண் பக்தி என்பது பலவாறுண்டு. அதாவது புருஷபக்தி, குருபக்தி, ராஜபக்தி, தேசபக்தி. தேவபக்தி என்று பற்பல விதங்களுடையது. இதன் தாற்பரியத்தை மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்து கீழ்ப்படிவதே, மற்றப்படி வேறல்ல. கடவுள்விஷயத்தில் வைக்கும் பக்தியும் இதைத் தொக்கியே வருகிறது. அதாவது, "உன் பரம ஈஸ்வரனாகிய கடவுளிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் உன் முழு பலத்தோடும் அன்புகூருவதும், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவதே—கடவுள் நம்மிடத்தில் விரும்புவதும் நாம் அவரில் வைக்கும் பக்தியாகும்."

அலசடையும் நம்மனதை சிதறவிடாமல் ஏக சிந்தையோடு எவ்விஷயத்திலும் பகவானை நேசித்து அவருடைய அன்பில் தரித்து அவருடைய திருகற்பனைகளைக் கைக்கொள்வது நம்மால்கூடிய காரியமல்ல. இதைப்பற்றி—கல்வி செல்வத்தை சிறப்புடன் பெற்றிருந்த தாயுமானவர் மிகக்கடினமான அனேகஞ் செயல்களைச் செய்தாலும் செய்யலாம், மனதை அடக்குவது கடினமானதென்று கருதியே-

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாமொருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்
ஜலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே." கூறினர்.

தருமரின் சகோதரனாகிய அர்ஜுனன் க்ருஷ்ணனைப் பார்த்து "மனதை அடக்குவது கிரமம்" கொஞ்சம் வசப்படுத்த ஆரம்பிக்கும்போதே விஷய வாசனைகளால் இழுக்கப்பட்டுத் திரும்பிவிடுகிறதென்று கூறினான். அதற்கு ஸ்ரீக்ருஷ்ணன், ஆம்; மனதை அடக்குவது கூடியகாரியமல்ல. ஆனாலும் பழக்க வழக்கங்களாலும் பூர்வ ஜன்மாந்தர புண்ய பரிபாகத்தினாலும்தான் கைகூடுமென்று அருளியதாக பகவத்கீதையில் கூறப்படுகிறது. இதனால் நாம் மனதை அடக்கி பகவானை நேசித்து, அவருடைய அன்பில் தரித்து, அவருடைய கற்பனைகளைக் கொள்வது மிக்க சிறமமென்று காணப்படுகிறது.

பக்திக்கு சாதனையில்லா வெறும் போதனையை மாத்திரம் நாம் கேட்பதால், கடவுள்பேரில் நாம் வைக்கும் பக்தியைப்பற்றி நாம் விபக்கவும், சிறமமென்று எண்ணவும் தோன்றுகிறது.

ஸ்ரீ இயேசுபெருமான் ஜீவியத்தை கவனியுங்கள், அவர் தம் சாதனையில் இந்த பக்தியை வெகு திட்டவட்டமாய் காட்டுகிறார். அவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து, "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என் அன்பிலே நிலைத்திருப்பீர்கள்; என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்றார். பாருங்கள், கிறிஸ்துபகவான் பரமபிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருந்தார். ஆதலால், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது அவருடைய போஜனமாகவே இருந்தது. ஆதலால் அவருக்குள் பிதாவின் ஜீவனும் வல்லமையும் துலங்கின. இதன்மூலமாய் பக்தியின் பயன் இன்னதென்று நாம் அவர்மூலமாய் அறிகிறோம். ஆதலால் இதை வாசிக்கும் நண்பரே, கிறிஸ்துபகவான் தம் ஜீவியத்தில் காண்பித்த பக்தியை அநுசரித்து, அவருடைய அன்பில் நிலைத்து அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவோமாக, அப்போது நாம் பரம தகப்பனின் சித்தத்தை நிறைவேற்றி அவருடைய ஜீவனையும் வல்லமையையும் அடைந்து, ஸ்ரீ ஏசுபகவான் உலகம் தரக்கூடாத சந்தோஷத்தால் நிறைந்தது போல், அந்த சந்தோஷம் நமக்குள் நிறைவாகும். கருணாகரக்கடவுள் போலிபக்தி யாவற்றையும் அழித்து உண்மையான பக்தியை நாம் எல்லோரும் அடைந்து பேரின்பமடைய அருள்புரிவாராக.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

இப்படி நேரிடுமென்று ஓர்காலத்திலும் நான் எண்ணவும் எதிர்பார்க்கவும் இல்லை; நான் உனது சத்துருவல்ல; இதை நன்றாய் அறிந்துகொள். உன்னையும் அவனையும் வானுலகத்தில் ஆயுதபாணிகளாய் நமது பக்ஷத்தில் யுத்தஞ்செய்த எண்ணிக்கைக்கடங்காக ஆவிகளையும் இந்த இருளும் பயங்கரமுமான நரகத்தினின்று விடுதலைபண்ணும்பொருட்டாகப் புறப்பட்டு வந்தேன். எல்லோருடைய நன்மையையும் நாடி அதற்கென்று ஏற்பட்ட ஓர் காரியஸ்தனா யிருக்கிறேன். எனக்கு முன்னிருக்கும் இருண்டதும் அகன்றதுமான பாதாளராஜ்யத்தில் தனிமையாய்ப் பிரயாணஞ் செய்து நவமாய்ச் சிருஷ்டிக்கப்பட்ட ஓர் உலகத்தையும், அவ்வுலகத்தில் வசிக்கும் நவமான சிருஷ்டிகளையும் பார்க்கும்பொருட்டுப் போகிறேன். வானத்துக்கும் நமக்கும் இருக்கும் தூரம் மனோவாக்குக் கெட்டாததாயிருக்கிறது. ஓர்வேளை தேவன் நமக்குப் பதிலாக வேறே ஆத்மாக்களைச் சிருஷ்டித்து வைத்திருப்பார். எப்படியிருந்தபோதிலும் நான் போய் அந்த ரகசியங்களை அறிந்து திரும்பவும் வந்து உன்னையும் மரணத்தையுங் கொண்டுபோய் சுகசீலமான விடத்திலே வைப்பேன். நீங்கள் நற்கந்தவாசனையுடன் எங்கும் பறந்து எனக்கு வழி பார்த்துக்கொண்டிருங்கள். இனிமேல் நீங்கள் நன்றாய்ப் புசித்துத் திருப்தியையடைய வழியுண்டாக்குவேன். சகலமும் உங்களுக்கே இரையாய் விடும் என்றான். இவ்வாறு பேசினதை இருபேருங் கேட்டு அகமகிழ்ச்சி யடைந்தனர். மரணம் பயங்கரமான புன்சிரிப்புற்றான். தன்னுடைய கடும்பசியாகிய பஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன் அவ்வாறு சந்தோஷித்தான். தன்னுடைய வயிற்றையும் ஆசீர்வதித்தான். அந்த நல்லநேரம் வருமென்று அவனுடைய துஷ்டத்தாயும் அவ்விதமாய் மகிழ்ந்தாள். இப்போது மரணத்துக்குத் தகப்பனாகிய வேதாளத்துடன் அவனுடைய தாய் சொன்னதாவது:


### 11. நரகவாயிலைத் திறந்தபடலம்.

சர்வவல்லமையுள்ள அரசன் இப்பாதாளத்தின் திறவுகோலை நான் வைத்துக்கொள்ளத் தகுதியுள்ளவளென்றறிந்தபடியால் என்வசம் அதை ஒப்புவித்திருக்கிறார். உருக்கினால் சமைக்கப்பட்ட இந்த பிரமாண்டமான நரகவாயில்களைத் திறக்க ஒருவராலும் ஆகாது. மரணம் தன் அம்புகளை எந்த ஜீவப்பிராணியின்மீதும் தொடுக்கிறது. வானுலகப் பிறவியாயும், வானுலகத்தில் வளர்ந்தவளாயும் இருக்கிற என்னை இந்தக் கிடுகிடு பாதாளத்திற் தள்ளி என்றென்றைக்கும் வேதனையிலுங் கஷ்டத்திலும் பயங்கரத்திலும் அலறும்படி வைத்ததுமன்றி, என்னுடைய குடலிலிருந்து உண்டானவைகளே என்னைத் தின்றுபோடவும் வைத்தவருக்கு நான் இவ்விடத்திலிருந்து வேலைசெய்துகொண்டிருக்கிறதோ? இல்லை. நீதான் என்னுடைய தகப்பன், நீதான் என்னைப் பிறப்பித்தவன், என்னை உருவாக்கினவன் நீயே, உன்னையன்றி யாருக்கு நான் கீழ்ப்படிவேன்? யாருக்கு நான் பின்சென்றுபோவேன்? நீ சீக்கிரமாய் உன் குமாரத்தியும் செல்லமுமாகிய என்னை வெளிச்சமும் பாக்கியமும் நிறைந்த புதிய உலகத்துக்குக் கொண்டுபோய் உன் வலபாரிசத்திலிருந்து ஆளத் திட்டஞ்செய்வாயாக. உன் அந்தஸ்துக்குச் சரியான அந்தஸ்தில் என்னை வைப்பாயாக. இவ்விதமாய்ச் சொல்லி பாதாளத் திறவுகோலை தன் வலப்பக்கத்திலிருந்து பலமாயிழுத்தெடுத்து நரகவாயிலுக்கு நேராகத் தனது அகோர உருவத்தை உருட்டிக்கொண்டுபோய் தொங்கின பெரிய திரையை மேலே இழுத்தனள். அவளைத் தவிர பாதாளலோகத்தின் வல்லமைகளெல்லாம் ஒன்றாய்க் கூடினாலும் அக்கதவைத் திறக்கமாட்டா. இதுவுமன்றி அநேகம் சாவிகளைப்போட்டு பளுவான தாழ்ப்பாள்களையுந் திராங்குகளையுங் கொத்துகளைப்போன்ற கணக்கில்லாத பூட்டுகளையுந் திறந்தனள். சடுதியில் பாதாளலோகத்தின் பிரமாண்ட கதவுகள் படீரென்று பயங்கரமான சப்தமிட்டுக்கொண்டு திறவுண்டுபோயின. அக்கதவுகளின் நிலைகளிலிருந்து அரோசிக்கத்தக்கதும் இடிமுழக்கம் போன்றதுமான இரைச்சல் கேட்கப்பட்டது.


(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஹீனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினால் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Rs. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா, அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்களுக்கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.


107

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JULY, 1918. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. ஜூலை, 1918.


## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**தங்க நாணயம்.** — இம்மாதம் முதற்கொண்டு 15 ரூ. பெறுமான பொன்காசுக்கள் பம்பாயில் அடிக்கப்பட்டு இத்தேசமெங்கும் நடமாடிவரும்.

**ருஷிய சக்கரவர்த்தி.** — இவர் பேரில் தம் ராஜ்யத்தார் ஒரு பெரிய வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்கள். ஜர்மன் சத்துருக்களுக்குத் தமது தேசத்தைக் காட்டிக் கொடுத்ததே அவர்பேரில் குற்றம். எப்படி முடியுமோ தெரியாது.

**மைசூரின் ஐஸ்வரியம்.**—சென்றமீ நடந்த வருஷாந்தரச் சம்பவத்தில் திவான் விஸ்வேஸ்வரய்யா அவர்கள் மைசூரின் செல்வம் 203 கோடி ரூ., அல்லது 135 மில்லியன் பவுன்கொண்டதென்று விளம்பரம் பண்ணினார்.

**ஆகாயத் தபால்.**—இப்பொழுது லண்டனுக்கும் பாரிசுக்கும் ஆகாயத்தபால் தினந்தோறும் போய்வருகின்றது. மூன்றே சில்லறைமணிநேரம் பிடிக்கிறதாம். இனி வெகு சீக்கிரத்திலே லண்டனுக்கும் நியூயார்க்குக்கும் இதேவிதமான ஆகாயத் தபால் நடந்தேறி வரப்போகிறது. ஆகாயத் தபாலுக்குப்பின் ஆகாயப் பிரயாணமும் ஆரம்பிக்கும்.

**மாண்டேகு மந்திரி.** — இம்மகானும் கவர்னர் ஜெனரல் கெம்ஸ்பர்டவர்களும் கூடித் தயார் செய்திருக்கும் சீர்திருத்த ஏற்பாடு கூடிய விரைவில் பிரசித்தமாகும். அதன் சட்டங்களைப்பற்றி இந்நாட்டிலும் இங்கிலாந்திலும் வேண்டிய தர்க்கம் நடந்து முடிந்த பின்பு, அது பார்லிமெந்துச் சபையிலே சில மாறுதல்களுடன் அங்கீகரிக்கப்படுமாம். இந்தியாவுக்குச் சுயவர்சு கிடைத்தனுபவிக்க இன்னும் 50 வருஷம் செல்லுமென்று நாம் நினைக்கிறோம்.

**பரீட்சை விவரம்.**—இவ்வருஷத்து உயர்தரப் பரீட்சைகளில், சென்ற வருஷங்கள்போலிராமல், அனேகம்பேர் தேறினார்கள். பெண் வித்தியார்த்திகளிலே ஏறக்குறைய எல்லாரும் தேறினார்கள். இவ்வருஷம் எப்படியும் 20 ஸ்திரீ பி—ஏ—க்களுக்குப் பட்டம் கிடைக்கும். பட்டம் கொடுக்கிற சமயத்தை மழைகாலமாகிய நவம்பரிலிருந்து மாற்றி, கூடிய விரைவிலே ஜூலைமாதத்திலே, காலேஜ்கள் திறக்கிற காலத்தில் வைத்துக்கொண்டால் யாவருக்கும் சகாயமாயிருக்கும்.

**கைத்தொழிற் கல்வி.** — யுத்தத்தினாலே புறதேச சரக்குகள் இங்கு முன்போல வாராமையால், இத்தேசத்திலேயே அந்தச் சரக்குகளை உண்டு பண்ணத்தக்க முயற்சி செய்துவருகிறார்கள். சுதேச சரக்குக் கடைகள் சென்னையிலும் மற்ற ஊர்களிலும் திறக்கப்பட்டு வருகின்றன. கவர்ன்மெண்டாரும் தோல் பதனிடவும், வியாபாரஞ்செய்யவும் கலாசாலைகள் ஏற்படுத்தி வருகிறார்கள். பிறதேசங்களுக்குச்சென்று கைத்தொழில் கற்கும்படி அனேக மாணாக்கருக்கு உபகாரம் கொடுத்துவருகிறார்கள். கற்று வந்தாலும் என்ன? நிதிவேண்டுமே.

**அமெரிக்காவிலே வரவு வரி.**—அதிக ஐஸ்வரியமுள்ளவன் ராக்பெல்லர் என்பவன். அவனுக்கு 12 மில்லியன் பவுண்ட் வரும்படி யுண்டு. இதன்மேல் அவன் கட்டிவருகிற இன்கம் டாக்ஸ் அல்லது வரவுவரி 7 லட்சம் பவுன். அதாவது நூற்றுக்கு ஆறுவீதம். எந்தச் சர்க்காரும் ஏழைகளிடத்தில் வரவுவரி வாங்குகிறதில்லை. இந்தியாவிலே மாதம் 85 ரூ. வரவு அல்லது வருஷத்தில் 1000 ரூ. வரவுக்கு வரி கிடையாது. ஆனால் இதற்கு மேற்பட்ட வரும்படிகளுக்கு தரத்துக்குத் தக்கவாறு ரூ—க்கு 6 பை, 8 பை, 1 அணா, 2 அணா முதலிய வீதம் வரிகள் உண்டு.

**புது யுத்தக்கடன்.**—மறுபடியும் இந்தியாவிலே 50 கோடி ரூ. கடன் வாங்கத் தொடங்கியிருக்கிறார்கள். நூற்றுக்கு 5½ ரூ. வட்டி. இதுவரைக்கும் 15 கோடி சேர்ந்திருக்கிறது. முழு மொத்தமும் சேகரிக்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. அத்தனையும் இன்னும் பத்துவருஷத்திற்குள்ளே தீர்த்துவிடப்படும். கொடுக்கிற பணத்துக்கு யாதொரு பயமும் இல்லை. ஆனால் வெற்றிலைக்கும் பாக்குக்கும், புகையிலைக்கும், கள்ளு சாராயங்களுக்கும், சகலவிதமான கச்சேரி கோர்ட்டு வியாஜ்யங்களுக்கும் உயர்ந்த வரிபோட்டு, வசூல் செய்தாலோ, கடனே தேவையில்லை; ஏராளமான திரவியம் கிடைக்கும்.

**ஸர் சுப்பிரமணியர்.**—ஸர் சுப்பிரமணியய்யர் அமெரிக்கா அதிபதி உவில்ஸன் அவர்களுக்கு இந்தியாவின் சுயவரசு விஷயமாய் ஒரு கடிதம் எழுதியனுப்பினார். இந்தக் கடிதம் உலகமெங்கும் பரவியிருக்கிறது. ஆனால் இதிலடங்கிய விஷயங்கள் ஆங்கிலேய அரசாட்சிக்குச் சற்று மானபங்கமாகவிருக்கிறதென்று அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். சிலர் அவருடைய பட்டங்களையும் பென்ஷனையும் எடுத்துவிட வேண்டுமென்று கதறுகிறார்கள். கவர்ன்மெண்டார் அப்படியொன்றுஞ் செய்யார்கள். ஆகிலும் அவர் அவ்வாறெழுதியது தூக்கிக்கத் தக்கதுதான். பட்டங்களையும் தாமே ஒப்புவித்துவிட்டார்.

**இளவரசர்க் காப்பு.** — வயதுக்குவராத அல்லது அநாத ஜமீன்தார்களைப் பாதுகாத்து, அவர்கள் நில பலங்களைத் துஷ்டர் அபகரித்துக் கொள்ளாவண்ணம், சர்க்காரே அதுகளைக் கைப்பற்றி நடத்திவருகிறார்கள். அன்றி, இளவரசருக்கென்று சென்னையிலே ஒரு காலேஜ் ஏற்படுத்தி அதிலே அவர்களுக்குக் கல்வி, குதிரையேற்றம் முதலிய தேகாப்பியாசங்களைக் கற்பித்து, 21 வயது வந்தவுடனே தத்தம்ஜமீன்களுக்கனுப்பி ஸ்வாதீனராக்கிவிடுகிறார்கள். பெண்களாயிருந்தால், தத்தம் சமஸ்தானத்திலேயே அவர்களுக்குக் கல்வி பயிற்சிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். சென்ற வருஷத்திலே ரூ. 34 லட்சம் மீதியாயிற்று. சர்க்கார் இவ்வாறு பிரயாசை எடுக்காவிட்டால், அனைத்தும் கடன் மிஞ்சி அர்த்தநாசமாய்விடும்.

**ஜூலை மீ பஞ்சாங்கம்.—**


| வாரம். | ஜூலை — ஆனி—ஆடி. ● அமாவாசை, 8உ ⊙ பௌர்ணமி, 24உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆனி—ஆடி. | | | |
| ஞாயி ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 31 | 6 | 13 |
| திங்க ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 32 | 7 | 14 |
| செவ் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 1 | 8 | 15 |
| புதன் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 2 | 9 | 16 |
| வியா ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 3 | 10 | ... |
| வெள் ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 4 | 11 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 5 | 12 | ... |



29-6-18
4
1,900

சுகாதார விதிகள்.—குடிக்கும்பொழுது சாப்பிடாதே, சாப்பிடும்பொழுது குடிக்காதே. உணவில்லாமல் தினம் ஐந்துகலயந் தண்ணீர் அருந்த வேண்டும். வாயாலல்ல, மூக்காலேயே சுவாசிக்க வேண்டும். நனைந்திருக்கையில் குந்தியிராதே. தினம் நாலுமைல் நட. சுளுக்குக்கு உடனே சுடுநீர் ஒத்தடம் அவசியம். மலஜலபாதைகள் மட்டுமல்ல, வெயர்ப்பும் தேக சுத்திக்கு இன்றியமையாதது. கோபம், எரிச்சல், கடுகடுப்பு, பொருமை—இவை சுகத்தைக் கெடுப்பவை. ஜன்னல்கள் எப்பொழுதும் திறந்திருக்க வேண்டும். இன்பத்துக்குக் காரணம் பணமல்ல, சுகம். உண்டபின் படுக்காதே, சாய்ந்திராதே நிமிர்ந்திரு. நாய் உண்டபின் ஞகிலும், உண்ணும் பொழுதாகிலும் தண்ணீர் குடிக்கிறதில்லை. நல்ல வேலைசெய்து, மனக்கிலேசமற்றிருந்தால் அயர்ந்த நித்திரைவரும்.

இந்தியாவுக்கு ஹோம் ரூல்.—முக்கியமான ஒரு பிரஸ்தாபம் பிறந்திருக்கிறது. அது லண்டனிலிருந்தே உற்பத்தியாயிருக்கிறது. அது என்னவென்றால், பிரதம அரசாகிய டில்லி கவர்ன்மெண்டு ஒன்று தவிர, மற்ற சென்னை, பம்பாய், பங்காளம், பிஹார் ஒரிசா, முதலிய ஏழு அரசுகளிலும் இனி ஹோம்ரூல் ஒருவாறு நடக்கும் என்பதே. அதாவது கவர்னர் கவுன்சில் பெருக்கப்பட்டு லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலுக்கு அடங்கி நடக்கவேண்டியது. லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலிலே நியமிக்கப்பட்ட மெம்பர்கள்தான் எப்போதும் அதிகப்பட்டிருப்பார்கள். பொதுவிஷயங்கள் மாத்திரமல்ல, பண விஷயங்களும் அவர்கள் தீர்ப்புப்படி நடக்க வேண்டுமோம். போஸ்ட்டு, டெலிகிராப், பொதுவரிகள் சேனை அதிகாரம் முதலான சில காரியங்கள் மட்டும் கவர்னர் ஜெனரல் வசத்தில் முன்போல நடந்துவரும். ஆகிலும் இந்தப் பிரதம அரசும் இன்னும் பத்து, பதினைந்து வருஷத்தில் திருத்தலடையும் என்பதற்கு ஐயமில்லை. இந்தப் பெருத்த உபகாரத்துக்காக புத்தியுள்ள தேசாபிமானிகள் யாவரும் நன்றி செலுத்தி, தங்களுக்குக் கிடைத்த அரும் வரத்தை தர்மமாய் உபயோகிப்பார்கள். மற்றப்படி, ஹோம்ரூல் வேண்டாம் என்று இச்சகம்பேசின வஞ்சநெஞ்சர் யாவரும் ஏமாந்து இஞ்சிதின்ற குரங்குகளைப்போல இளித்துக் கிடப்பார்கள். ஹோம்ரூலரின் விடாமுயற்சியும், இங்கிலிஷ் அரசின் உதாரத்துவமும், லார்ட் கெம்ஸ்பர்ட், மாண்டெகு மந்திரி அவர்களின் நற்குணமுமே இதற்குக் காரணம்.



பர்மாவின் திரு ஸ்தம்பங்கள்.

## THE WAR

## யுத்த வரலாறு

ஜர்மன்கள் சென்ற மாதத்திலே இன்னுமொரு பெருமுயற்சி செய்தும் பயன்படவில்லை. நாலைந்துமைல் முன்சென்று, நாலைந்து லட்சம் போர்வீரரை இழந்துவிட்டால், பிரயோஜனமல்ல' தோல்வியே அடையவேண்டும். இம்மாதிரி கிருத்தியம் நடந்துவருவதால், பாரிஸ் நகரத்தைக் கிட்டிப் பிடிக்கிறதற்குப் பதிலாக, சைனியமனைத்தும் நாசமடைந்து வருகிறது. உலகத்திலுள்ள சிறு சிறு ராஜ்யங்களும் ஜர்மனிக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறது. ரஷியாவுக்குப் பதில் கடவுள் நட்பாசர் பட்சமாய் அமெரிக்காவை எழுப்பியிருக்கிறார். அங்கிருந்து, ராணுவங்களும், திரவியமும், யுத்தா யுத்தங்களும், உண்ணப் பதார்த்தங்களும், உடுத்த ஆடைகளும், அபரிமிதமாய் பாய்ந்துகொண்டு வருகின்றன. ஜர்மன் தளகர்த்தன்—ஹின்டென்பர்கென்பவன் வியாதிப்பட்டுக் கிடக்கிறதாகவும், அன்று இறந்துபோனதாகவும் பிரஸ்தாபம். சப்மெரின்கள் சென்ற வருஷத்தில் அனேக கப்பல்களைச்சுட்டு மூழ்குவித்தாலும், இந்த வருஷத்தில் அவற்றின் நாசவேலை ஏகதேசம் முற்றிலும் ஒழிந்துவிட்டது. புது சப்மெரின்களும் கட்ட ஜர்மன்களுக்கு முடியவில்லை. கட்டினவைகளும் இங்கிலிஷ் வாய்க்கால் வழியாய்ச்செல்லமுடியாது. ஏகதேசம் கடலிலே 2000 சநாரமைல் விஸ்தீரணத்தில் அங்கிலேயர் சுரங்கங்கள் வைத்துப் பரப்பியிருக்கிறார்கள். ஆயினும், போர்வீரரும் பணமும் அத்தியாவசியமாயிருக்கிறது. இவ்வருஷத்துக்குள்ளே இந்த யுத்தம் ஓயவேண்டும்.

## NOTICE OF BOOK.

## நூற் குறிப்பு.

யோவானுக்குண்டான திருவெளிப்படுத்தல்.*

*பிரசித்தகரான வேத வியாக்யானிகளின் உரையைத் தழுவினதெள்ளுரை. இயற்றினவர் எ. புருட்ஸர் ஐயர். சென்னை அல்பினியன் பிரெஸ், 33 வேப்பேரி ஹைரோட். 1918. விலை ரூ. 2.

சபைத்திருத்தலின் நானூரும் வருஷ உற்சவத்தில் தமிழ்ச்சபைகளுக்குச் சமர்பிக்கப்பட்ட இப்புஸ்தகம் எமக்கொன்று கிடைக்க அதை உவப்புடனும் கருத்துடனும் வாசிக்கலானோம். நூலாசிரியர் அதிகப் பிரயாசை யெடுத்து இவ்விருத்தியுரையை எழுதி முடித்திருக்கிறார். ஜர்மனுயினும் தமிழ்ப் பாஷையை நன்குணர்ந்து அப்பியாசித்தவராக எழுதுகிறார். அங்கிலேய உரையாசிரியரைப் போலாகாமல், மொத்தமாக விரித்துரை எழுதி அரும்பதங்களை ஆங்காங்கு விளக்கி, சிறந்த பாடங்கள் கற்பித்து, மூலத்தின் ஆழ்ந்த, மறைந்த கருத்துகளை எடுத்துரைக்கிறார். ஆயினும் பதவுரை வேறும், விருத்தியுரை வேறுமாயிருக்கின் சிறப்புறுமென்பது எமதபிப்பிராயம். ஆரம்ப அதிகாரங்களின் உரை சிறிது நீடித்தும், கடைசி அதிகாரங்களின் உரை சிறிது குறைந்தும் விட்டன. "ராஜ்ஜியம், நிட்சயம்", "பிரிதொன்று" போன்ற சில எழுத்துப்பிழைகளும், "பழையேற்பாடு, புதியேற்பாடு," "ஆவி நெருப்பு", "ஏபேசு சபைலவன்", "நம் கவனம்", போன்ற சில புணர்ச்சிப் பிழைகளும், "ஜீவ சுவிசேஷம்", "வெளிச்சத்தில் வைத்தல்",



"உலகத்தின் கண்கள்" போன்ற சில நடைவழக்குப்பிசகும் உண்டாயினும், பொதுவிலே இவ்வுரை சிறந்ததென்றே சொல்லத்தகும். "பராபரன்" என்கிற பதத்தை நீக்கி "தேவன்" என்கிற அந்நிய பதமும், அகிரிப்பா, கிருபை முதலிய இனிய பதங்களைப்போல "கிரிஸ்து" என்றெழுதாமல், வழக்கம்போலவே வல்லினம்பெற்ற "கிறிஸ்து" என்னும் கடிய உச்சரிப்புத்தழுவிய பதத்தை அநுசரித்துவந்தாலும், இயற்றியிருக்கிற உரை மூலத்துக்கு அல்லது கிரேக்கு முதனூலுக்குப் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. ஆகிலும் புருட்ஸர் ஐயர் எடுத்த முயற்சி வீண்போகாது. ஆயிரக்கணக்கான தமிழ்க் கிறிஸ்தவர்கள் இந்நூலை ஆவலுடன் வாங்கி வாசித்துப் பயன்பெறுவார்களெனக் கரிசனையுடன் கோருகின்றோம். [ J ]

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

### ஆலோசனைக்காண்டம்.

ஆனால் இப்போது திறவுண்கப்பட்ட கதவை இனி பூட்டுவது அவளால் கூடியகாரியமல்ல. இந்நரகவாயில் விரித்த கொடிகளுடனே சேனைகள் அணிவகுத்துத் தாராளமாய்ச் செல்லவும், இரதங்களும் குதிரைகளும் விரைவாய் ஓடவுந்தக்க விசாலமான வழியாயிருந்தது. கருமான் உலையினின்று புறப்படும்வண்ணமாய் நெருப்புக்கங்குகளும் தழல்களும் இருண்ட புகையும் அவ்வாயில் வழியாய்க் குபீர் குபீரென்று புறப்பட்டுக்கொண்டேயிருந்தன.

### 12. இரவின் ராஜ்யத்தைக் காண் படலம்.

அவர்களுடைய கண்களுக்கெதிரே காலங்கண்ட பாதாளத்தினிருண்டதும் கசம் நிறைந்ததுமான அவாந்தரவெளி காணப்பட்டது. அதின் நீளத்திற்கும் அகலத்திற்கும் உயரத்திற்கும் ஆழத்திற்கும் ஓர் அளவில்லை. காலத்திற்கும் இடத்திற்கும் ஓர் எல்லையில்லா திருப்பதுபோல, இவ்விஸ்தீரணமான வெளி ஓர் கரையில்லா சமுத்திரம்போலவிருந்தது. இங்கே இயற்கையின் மூத்தோர்களாகிய இரவும் கேயோசும், நித்திய சுயாதீனமாய் முடிவில்லாத குழப்பங்களின் நடுவில் ஆளுகைசெய்கிறார்கள். மேலும் உஷ்ணம், சீதளம், ஈரம், வெப்பம் என்னும் இந்நான்கு ராட்சதர்களும் இவ்விடத்தில் ஒருவரோடொருவர் போராடுகின்றனர். கடற்கரை மணலுக்கொப்பான அவைகளின் திரண்ட அணுக்கள் அவரவரிஷ்டப்பிரகாரம் கட்சிகளாய்நின்று பளுவும் லேசுமான ஆயுதங்களுடன் யுத்தம்புரிகின்றன. ஆயினும் அவர்களில் மற்றவர்கள் யார் ஓர் நிமிஷமாவது வெற்றி சிறந்து அரசாளுகிறானோ அவனுடன் சேர்ந்து கொள்வார்கள். இவர்களில் கேயோசு அல்லது வெறுமை என்பவன் முக்கிய அரசனாகவிருந்து சண்டையை அதிகரித்து ஆளுகைசெய்கிறான். அவனுக்கிரண்டாவதாக தற்செயல் என்னும் பிரபு காரியக்கர்த்தனாகவிருந்து அலங்கோலஞ் செய்கிறான்.

கடலுங்கரையும் ஆகாயமும் அக்கினியும் அமோகமாய்ப் பிரண்டு என்றும் போராடிக்கொண்டிருப்பதே இப்பாதாளத்தின் இயற்கையாயிருக்கிறது. சர்வத்துக்கும் வல்லவர் இவைகளை ஒழுங்குப்படுத்தி அவைகளினின்று அலங்காரமான உலகங்களை உண்டாக்கிவிட்டால் என்றும் அப்படித்தானிருக்கும். இப்பயங்கர காட்சிகளைத் தந்திரியாகிய வேதாளம்பார்த்து இக்குழப்பத்தின் ராஜ்யத்தை எவ்வாறு கடக்கலாமென்று ஆலோசித்தான். அவனுடைய காதுகளில் வானம் இடிந்து விழுந்தாற்போல், இடிகளின் சப்தங்களும் குமுறல்களும் தொனித்தன. பஞ்சபூதங்கள் ஒன்றோடொன்று சடுத்தஞ் செய்வதுபோலவுமிருந்தன. இதினால் அவனுக்கிருந்த இடுக்கண்கள் இவ்வளவென்று சொல்லிமுடியாது: ஆயினும் அவன் தன் செக்கைகளைவிரித்து தைரியநெஞ்சுடன் நரகவாயிலைத் தாண்டி ஆகாயத்தைத் தனக்குத் தஞ்சமாக்கி அநேகமாயிரம் மயில்களைக் கடந்துபோயினன்; மேலும் அவன் சென்றபாதையிலிருந்த அக்கினி கந்தக முதலியவைகளினால் அதிக வேதனைபடையாமல், சில சமையங்களில் நடந்தும், சில சமையங்களில் ஊர்ந்தும், சில சமையங்களில் பறந்தும் இவ்வாறு அந்த விஸ்தீரணவெளியில் நாநாவிதமாய்ச் சென்றனன். சடுதியில் ஓர்க்காலும் கேளாத ஓர் பெரிதும் பயங்கரமுமான சப்தத்தையும், பெருங்கூச்சலையுங்கேட்டு அவைகளை அறியும்பொருட்டு ஓர் பக்கமாய்விலகி ஓடினன். மேலும் அங்கங்கே நரகத்தின் ஆவிகளிருக்குமெனில் வெளிச்சத்தின் ராஜ்யத்துக்கு கூடியவிரைவிற்செல்ல குறுக்கான வழி எதுவென்று அவர்களிடத்தில் விளவவும் யோசித்தான். தட்சணமே வெறுமையென்னும் அரசனின் அரண்மனை தூரத்தில் கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். அவ்விடத்திற்கு ஓர் நிமிஷத்திற்சென்று, அவனையும் அவனுடன் அவன் பிரியமனைவியாகிய இரவென்பவளையும் கண்டான். அன்றியும் அவர்களுடன் குழப்பம், கலக்கம், பிரிவினை, விரோதம், பகை, பழி முதலிய தோழர்கள் உட்கார்ந்திருப்பதையுங் கண்டான்.

### 13. இரவின் ராஜ்யத்தைக் கடந்த படலம்.

வேதாளம் இரவையும் அவளோடிருந்தவர்களையும் பார்த்து, பாதாளத்தின் வல்லமைகளும், ஆவிகளுமானவர்களே, மகா ராணியாகிய இரவே, மகா ராஜனாகிய வெறுமையே, உங்கள் ராஜ்யத்தின் இரகசியங்களை வேவுபார்க்க நான் வரவில்லை; உங்கள் ராஜ்யத்தின் வழியாய் வெளிச்சத்தின் ராஜ்யத்துக்குப் போகவேண்டியது அவசியமாயிருக்கிறது. வழிகாட்டி எனக்கில்லாத காரணத்தால் தனிமையாய் வழிதப்பினவனைப்போல வானுலகத்தின் கரையோரமாய் அலைந்து திரிகிறேன். மேலும் வானுலகத்தில் அரசனாயிருக்கிறவர் உங்கள் ராஜ்யத்தில் ஏதாவது ஓர் பாகத்தை எடுத்துக் கொண்டிருந்தால் அதை உங்கள் வசமாக்கித் திருப்பிவிடுவேன்; அதற்காகவே புறப்பட்டுவந்தேன்; எனக்கு உதவிசெய்யுங்கள்; உங்களுக்குத்தான் லாபமாயிருக்கும்; எனக்கு வழிவிடுங்கள் என்றான்.

அவனுக்கு மாறுத்தரமாக, நீலவர்ண முகக்காந்திகளையுடைய கலக்கமும் குழப்பமும், தைரிய சப்தத்துடனே சொன்னதாவது: நீ அந்நியனாயிருந்தபோதிலும் யாரென்று எங்களுக்குத் தெரியும். வானரசனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து முறியடிக்கப்பட்டபோது எண்ணிறந்த ஆவிகளைப் பாதாள லோகத்துக்கு இழுத்துப் போனவனல்லவோ? அவர்கள் தலை குப்புறவிழுந்து உருண்டு ஓடிப்போகும்போது உண்டான சப்தம் எங்கள் காதுகளில் வீழ்ந்தது. அவர்களை வானசேனைகள் விருத்தவடிவாய் பின்தொடர்ந்து ஓடினதையும் பார்த்தோம். நாங்கள் இந்த ராஜ்யத்தில் அமைதலாய் வசிக்கிறோம். எங்களுக்குக் கீழே நரகமும் பாதாளமும் இருக்கிறது. ஆனால் புதிதான ஓர் உலகம் அதோ பொற்சங்கிலியினால் கட்டப்பட்டுத் தொங்குகிறது. அப்பக்கமாய் நீ போவாயானால் சீக்கிரமாய்ச் சேரலாம், தாராளமாய்ச் செல்லு. அழிவும் சேதமும் நாசமும் எங்களுடையவைகளாயிருக்கட்டும் என்றனர்.

வேதாளம் இதற்கு மறுமொழியாக ஒன்றுஞ் சொல்லாமல் இந்த அகன்ற கடலுக்கு ஓர் கரை காணலாம் என்கிற சந்துஷ்டியினால், அக்கினி போன்ற ஓர் கோபுரம்போல் கேயோசின் ராஜ்யத்தைக் கடந்தனன். பஞ்சபூதங்களின் கோஷ்டத்தினால் மிகவும் அலசடிப்பட்டனன். ஆயினும் வருத்தங்கள் சங்கடங்கள் இவைகளை எவ்வளவேனுங் கவனியாமல் ஆகாயமண்டலத்தில் பறந்தோடினன். ஆம் பிசாசாகிய வேதாளம் வருத்தத்துடன் ஒருமுறை நடந்துபோன இப்பாதையில் மனிதனின் விழுகைக்குப்பின்பு பாவமும் மரணமும் தாராளமாய்ச் சென்றன. ஆ, என்ன ஆச்சரியம்! எவ்வகையான மாறுதல், இது வானுலகத்தின் ஏற்பாடு என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. பாதாளலோகத்திலிருந்து கோணாதும் அசே கருக்குத் தருந்ததுமான ஓர் பாதை உண்டாக்கப்பட்டதுமன்றி இவ்வுலகத்திற்கும் பாதாளத்திற்கும் நடுவிலே பிற்பாடு கட்டப்பட்ட ஓர் பாலத்தினால் ஆவிகள் இவ்வுலகத்துக்கு வரவும் போகவும் மானிடர்களைச் சோதிக்கவும் துன்பப்படுத்தவும் வழி திறந்துவிட்டது. நிச்சயமாகவே மானிடர்களை தேவன் தமது நல்ல ஆவிகளைக்கொண்டும் காவல் செய்யாவிட்டால், சாங்கோபாங்கமாய் நாசம் அடைவார்களென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

### 14. இப்பூவுலகைத் தரிசித்த படலம்.

கடைசியாக வேதாளம் இருளின் ராஜ்யத்தின் கடைகோடியில்வந்து சேர்ந்தனன். அவ்விடத்திலிருந்து விஸ்தீரணமாய் எங்கும் பரவிக்கொண்டிருக்கும் வெளிச்சத்தின் ராஜ்யத்தைப் பார்த்தான். வானுலகத்தின் மதில்களினின்று வீசிக்கொண்டிருந்த ஒளிக்கிரணங்கள் ஆழ்ந்த பாதாளத்தின் இருளின்மீது பிரகாசித்தன; இப்பொழுது அவனுடைய சங்கடம் நீங்கி சவுக்கியமுண்டாகிறது. இங்கே இரவின் ராஜ்யத்தின் அமளி யாதொன்றுமில்லை; காற்றினால் மெத்தவும் அலசடிப்பட்ட கப்பலானது கரையைக் கிட்டிவருவதுபோல சாத்தான் சங்கடம் நீங்கினவனாய் ஒளியின் ராஜ்யத்தில் செல்லுகிறான். கிழிந்துபோன தனது செக்கைகளைக் காற்றில் உலாச்செய்து வானுலகத்தின் மதில்களை மெத்தவும் அங்கலாய்ப்புடன் பார்க்கிறான். வயிரக்கற்களினால் சமைக்கப்பட்ட அதின் கோபுரங்களையும், அரணான கொத்தளங்களையும் மதில்களையும் பார்த்து, ஓர்காலத்தில்தான் அதில் வசித்திருந்ததையும் நினைவுகூருகிறான். இதுவுமன்றி அதற்குச் சமீபத்தில் பொற்சங்கிலியினால் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கும் இப்பூவுலகையும் பார்த்தனன். பருமனில் ஓர் நட்சத்திரம்போலவும் இருண்ட நிறமுள்ளதாயும் சந்திரமண்டலத்துக்கு அருகாமையிலிருக்கிறது போலவுங் காணப்பட்டது.

அவ்விடத்துக்குப் பழிவாங்கவேண்டுமென்கிற சாமத்துரோகச் சிந்தையுடன் சபிக்கப்பட்டவனாகிய வேதாளஞ் சபிக்கப்பட்டவேளையில் துரிதமாய்ப் பிரயாணஞ்செய்யத் தொடங்கினான்.

ஆலோசனைக்காண்டம் முற்றிற்று.

### யாத்திரைக்காண்டம்.

பொருளடக்கம்.

தேவன் தமது வலதுபாரிசத்தில் வீற்றிருக்கின்ற குமாரனுக்கு; வேதாளம் மனிதசாதியை கவிழ்த்துவிட பூவுலகத்துக்கு வருவதைக்காட்டி, மனிதனை சுயாதீனனாய்ப் படைத்ததால், தமது மீதுக்குப் பங்கமில்லையென்றதும், மனிதன் சாத்தானைப்போல் கர்வத்தினால் விழாமல், வஞ்சிக்கப்பட்டுத், தவறுவதினிமித்தம் அவன் மீது கிருபைபுரிவேனென்றதும், குமாரன் தேவனிடத்தில் வெளிப்பட்ட கிருபையினிமித்தம் அவரை ஸ்தோத்தரித்ததும், ஆயினும் தேவநீதியை திருப்திசெய்து, மனிதனை மீட்கவோர் மத்தியஸ்தர் அவசியமென் றுணர்த்தித் தம்மைத்தாமே மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்ததும் மனிதவதாரஞ்செய்ய நிர்ணயித்ததும் தேவதூதர்கள் அதை கெம்பீரசகிதமாய்க் கொண்டாடினதும், இதற்குள்ளாக சாத்தான் தன் நீடித்த யாத்திரையை முடித்து ஆகாயமண்டலத்திற் சிறிதுகால மிலைத்ததும் அவ்விடத்திலிருந்து மானிடசாதியை

யும் சிருட்டிக்கப்பட்ட பட்டல வஸ்துக்களையும் வானத்தின் மரகுகளையும் ஆகாயத்தின் சலத்தையுஞ் சூரியமண்டலத்தில் யூரியேல் தூதனையுங் கண்டதும், ஒளியின் பத்திமணைப்போல வேடம்பூண்டு அத்தூதனிடத்தில் நவமாய்ச் சிருட்டிக்கப்பட்ட மனிதனைப் பார்க்க ஆவலுற்றதும், அவன் அதற்கு வழியைக் காண்பித்ததும், உயர்ந்தும் பனிமூடினதுமாகிய நைபேற்றீஸ் என்னு மலைமீது கடைசியில் வந்திறங்கினதும் அடங்கியிருக்கின்றன.

## 1. ஒளியை வர்ணித்த படலம்.

சுத்தாங்க ஒளியே! உனக்கு வந்தனம். நீ வானப்பிறவியும், சிருட்டிப்பின் முதற்கனியாயு மிருக்கிறாய். அண்டபகிரண்டங்களையும் படைத்த தேவனும் ஒருவருஞ் சேரக்கூடாத வொளியின் மத்தியில் ஆனந்தத்துடனிருக்கிறார். அவர் நித்தியானந்த சகிதரா யிருப்பதுபோல, நீயுமவரோடு, உடன் நித்தியகிரணமா யிருக்கிறாயென்று சொல்ல லாகாதோ. அப்படிச்சொல்ல துணிவேனாகில், யாராகிலும் என்னை பழுது கூறுவார்களோ, அல்லது ஒருவராலு மறியக்கூடாத ஊற்றிலிருந்து சுரந்து வரு மோர்நதியென்று நான் உன்னை யழைக்கக் கூடாதோ? வானமும் பூமியும், ஆம் ஆதித்தனும் உண்டாவதற்கு முன்னமே நீ விளங்கினின்றாயே: தெய்வீகவாக்குப் புறப்பட்டமாத்திரத்தில் ஒழுங்கற்ற பிண்டங்களிலிருந்து எழுந்தருளின இருண்ட பூமியை ஓர் சால்வையைப்போல மூடினாயே. இப்போதுன்னைச் சந்திக்கவும் இனிமையான சுரங்களில் உன்னைப் பாடவுந் துணிகிறேன். இதுவரையில் இருளும் அந்தகாரமும் நிறைந்த பாதாளவுலகத்தைப்பற்றிப் பாடினேன். இப்போது சமஸ்தசீவப்பிராணிகளையும் உயிர்ப்பிக்கும் வெளிச்சத்தை உணருகின்றதால் மகிழ்ந்து துதிசெய்கிறேன். ஆயினும் மங்கிப்போன என் கண்களைத் திறக்க உன்னால் முடியாதென் றெண்ணுகிறேன். உஷ்ண சீதள முதலிய காலபேதங்களை எனது கண் பார்வையினால் பகுத்தறியக் கூடாதவனாயும் ஒளியினால் விளையும் எண்ணிறந்த சந்தோஷங்களுக்கு முற்றிலும் விலக்கப்பட்டவனாயு மிருக்கிறேன். அப்படி இருந்தபோதிலும் என் மனோதத்துவங்களை பிரகாசிக்கவும் ஸ்திரப்படுத்தவும் பிரார்த்திக்கிறேன். அப்போது மனிதருடைய காட்சிக்கும் புத்திக்கும் எட்டாத விஷயங்களை யெடுத்துரைக்க வல்லவனாவேன்.

## 2. பிதாவானவர் உரைத்த படலம்.

பரிசுத்தத் திரித்துவத்தில் முதல்வருஞ் சர்வ வல்லவருமான பிதாவானவர் இச்சமையத்தில் வானுலகத்தில், உன்னத வாசனத்தில் வீற்றிருந்தனர் அவர் சர்வஜ்ஞரானதால், கீழ்நோக்கி தமதுகரத்தின் கிரியைகளையும் ஆம் அக்கிரியைகளின் கிரியைகளையும் பார்க்கத்தொடங்கினர். அவ்வா வானசேனைகளெல்லாம் நட்சத்திரங்களைப்போல புடைசூழ்ந்து நின்று அவரினது திருமுகப் பார்வையினின்று ஒருவராலும் உச்சரித்து முடியாத ஆசீர்வசனங்களை பெற்றனர். அவருடைய வலபாரிசத்தில் மகிமையின் சொரூபாலங்கிரதமாகிய ஏககுமாரன் வீற்றிருக்க மானிடதேகம் பூண்டு பூமியின் செல்வப்பூங்காவனத்தில் முதன்மையாக வசித்த நமது தாய்தந்தைகளிருவரையும் பார்த்தார். அவர்கள் ஆனந்தம், நேச முதலிய லட்சணங்களைப் பொருந்தினவர்களாயும், சந்தோஷசாகரத்தில் மூழ்கி, நிகரில்லா சந்துஷ்டியை யடைந்துகொண்டிருந்தனர். இதுவுமன்றி கடவுளானவர் நகரத்தையும் அதைச் சுற்றியிருந்த பெரியக் குடாக்கடலையும் பார்க்குமளவில், ஆகாயத்தி லூடேருவி, இரவின் இராஜ்ஜியத்தையுங் கடந்து, விரித்த இறெக்கைகளுடன் வானத்தின் மதிலோரமாய் பறந்தோடி இப்பூமியின் கடைமுனையை நோக்கி ஏகாந்தசகிதமாய் யாத்திரைசெய்யும் வேதாளத்தையுங் கண்டனர். இக்காட்சியைக்கண்டதட்சணமே திரிகாலத்தையும் அறிந்தவரான தமது குமாரனிடத்திற் பேசத்தொடங்கினர்.

எனது ஒரேபேறான குமாரனே, நம்முடைய சத்துராதியாகிய சாத்தானை அகங்காரமானது எவ்வளவாய் அலக்கழிக்கிறதென்று கவனிக்கிறீரோ! எந்த எல்லைக்குள்ளும் அடங்காதவனாயும், நரகத்தின் வயிரத் தாப்பாள்களையும் பூட்டுகளையும் முறித்து, அதன்மேலிருந்த இருப்புச்சங்கிலிகளையும் உதறிவிட்டு அகன்றதுங் கசந்நிறைந்ததுமான இரவின் இராஜ்ஜியத்தையுங் கடந்து பழிவாங்கும்பொருட்டு, மானிடர்கள் வசிக்கும் பூவுலகை நோக்கி வருகிறானல்லவோ? அவனுக்கே அது ஆக்கினையாக முடியும். இவ்வாறு ஓர் பட்சியைப்போல் துரிதமாய்ப் பறந்து நாம் சிருட்டித்த அப்பூமியிலிருக்கும் மனிதனை பலாத்காரமாயாவது அல்லது சதிசற்பனையினாலாவது நாசப்படுத்தவேண்டுமென்றேவருகிறான். அவனிக்காரியத்தில் ஜெயம் அடைவான். ஏனென்றால் அவனுடைய சற்பனையும் பொய்யுமான வார்த்தைகளுக்கு மனிதன் இணங்கி அவனுடைய கீழ்ப்படிதலுக்கு அத்தாட்சியாகக் கொடுக்கப்பட்ட ஒன்றான பிரமாணத்துக்கு விரோதமாக நடப்பான். இவ்வித கீழ்ப்படியாமையினால் அவனும் அவனுடைய சந்ததியாரும் உண்மையற்றவர்களாகி பாக்கியநிலைமையை யிழந்துவிடுவார்கள். இது யாருடைய குற்றம்? அவனுடையகுற்றமே, நன்றிகெட்டவனாகிவிடுவான். ஏனென்றால் அவனுக்கவசியமான யாவையும் அவன் என்னிடத்திலிருந்து பெற்றுக்கொண்டான். அவனை நீதியும் நேர்மையுமுள்ளவனாகப் படைத்தேன். நிதிநெறியிலிருந்து விழவும் அல்லது அதில் உறுதியாய் நிற்கவும் அவனுக்குச் சக்தியுண்டு. அவனை உண்டாக்கினவண்ணமே, வானசேனைகளையும், ஆவிகளையு முண்டாக்கினேன். அவர்களில் உறுதியாய் நின்றவர்களும் விழுந்தவர்களும் தங்களிஷ்டப்பிரகாரம் அவ்வாறுசெய்தனர், நின்றவர்கள் சுயாதீன சித்தராக நின்றதுபோலவே விழுந்தவர்களுஞ் சுயாதீன சித்தராகவே வீழ்ந்தனர். சுயாதீன மிராதவிடத்துக் கட்டாயமான செய்கை அவசியமாய்த் தோன்றுமே யல்லாது அவர்களின் உள்ளான விருப்பம் வெளிப்படாது மேலும் அவர்களின், உண்மை, உறுதியான விசுவாசம், அன்பு எப்படி வெளிப்படும்? எவ்விதமாய் தங்கள் நேர்மையும் நீதியுமான நடக்கைக்குத் தகுந்த புகழ்ச்சியை யடையக்கூடும்? அவர்கள் கீழ்ப்படிவதினால் எனக்குண்டாகும் மகிமை என்ன! அவர்கள் சுயசித்தத்தையும் பகுத்தறிவையும்; சுயாதீன நிலைமையும் இழந்து அடிமைகளைப்போல என்னைச்சேவிக்க அவர்களைக் கட்டாயப்படுத்துவதினா லுண்டாகும் பயனென்ன? மேலும் புத்திரசுதந்தர பாத்தியத்துடன் உண்டாக்கப்பட்டவர்களாதலால், விதி, ஆதிதீர்மானம், முன்குறித்தல் என்பனவற்றால் அவர்களின் சுயாதீன சித்தம் ஆளப்படுகிறதாக எண்ணிக்கொண்டு சிருட்டிகளாயுஞ் சிருட்டிகளையுங் குற்றப்படுத்துவது அநியாயமானகாரியம். நானல்ல அவர்களே தங்களின் விழுதலைத் தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். அவர்கள் விழுதலை நான் முன்னறிந்தபோதிலும் அம்முன்னறிவுக்கும் அவர்கள் துணிவாய் செய்யுங் குற்றத்துக்கும் யாதேனுமோர் சம்பந்தமில்லை, எதிர்கால சம்பவங்கள் அவர்களுக்குத் தெரியாமலிருப்பது வாஸ்தவந்தான். ஆயினும், விதிப்பிரமாணத்தினாலும், நான் முன்னறிந்ததினாலும் அவர்கள் வசப்படாமல், சுதாவாய் குற்றஞ்செய்யப்போகிறதினால், எவ்வகையான தீமைக்குந் தாங்களே காரணராவார்கள். ஏதாவதோர் காரியத்தை தீர்மானஞ்செய்வதற்கும் அதைத் தங்கள் நடக்கைக்குப் பிரமாணமாக வைத்துக்கொள்வதற்கும், அவர்களுக் கதிகாரமுண்டு. அவ்வித சுயாதீன நிலைமையைப் பெற்றவர்களாய் அவர்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆம் தங்களைத் தாங்களே அடிமையான நிலைமைக்குள்படுத்துமட்டுக்குஞ் சுயாதீன சித்தராகவே யிருப்பார்கள். இல்லாவிடின் அவர்களி னியற்கை மாற்றப்படவேண்டும்.

(இன்னும் வரும்).

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DEPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்.

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கிறிஸ்துவில் நிலைத்திரு .. .. | 0 | 8 | 0 |
| ஆட்வர் கும்மி .. .. .. | 0 | 1 | 0 |
| கிரணமாலிகை .. .. .. | 0 | 6 | 0 |
| அருளாகமமும், ஆதிசின்னங்களும் .. | 0 | 2 | 0 |
| வேதாகம பிரசித்த விர்த்தாந்தம் .. | 0 | 8 | 0 |
| சந்திரலீலாள் .. .. .. | 0 | 2 | 0 |
| பிள்ளைகளும் சபையும் .. .. | 0 | 2 | 0 |
| புதிய ஞானப்பாட்டுகள் பெரியது .. | 0 | 4 | 0 |
| ,, சிறியது .. | 0 | 3 | 0 |
| ஞானகீதங்கள் பெரியது .. .. | 0 | 10 | 0 |
| ,, சிறியது .. .. | 0 | 4 | 0 |
| ,, ஓர் அணு புஸ்தகம் .. | 0 | 1 | 0 |
| பாலர்ப் பாட்டுகள் .. .. .. | 0 | 1 | 0 |
| ஞானப்பாட்டுகளும், ஞானகீதங்களும் ஒன்றாய் சேர்த்துக் கட்டினது .. | 0 | 12 | 0 |
| சிலுவைத் திருவாசகம் .. .. | 0 | 1 | 0 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் .. .. | 0 | 4 | 0 |
| ,, எபிரேயர் நிருப வியாக்கியானம். | 0 | 12 | 0 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் .. .. .. .. | 0 | 8 | 0 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் .. | 0 | 3 | 0 |
| திருச்சபை சரித்திரம் .. .. | 1 | 4 | 0 |
| மாதர்கும்மி .. .. .. .. | 0 | 1 | 0 |
| காலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| மாலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் .. | 0 | 14 | 0 |

☞ தபால்கூலி வேறே.


**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்


ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.






Registered No. M. 442.




15 AUG 1918

# சத்திய தூதன்.

AUGUST, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. ஆகஸ்ற்றுமீ, 1918.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**இந்திய வீரர்கள்.** — சண்டைக்குப் போகத்தக்க இந்திய சேனை ஒன்று சேகரித்து வருகிறார்கள். 50 லட்சம் வீரர் வேண்டியிருக்கிறது. இத்தொகை லேசாகச் சேர்க்கப்படும்.

**இந்திய கவர்னர்.** — பியார் – ஒரிசா என்கிற மாகாணத்துக்கு (சென்னை பம்பாய்போல) ஸர். எஸ். டி. சின்ஹா என்கிற இந்திய லாயரை கவர்னராக்கிறதாகப் பிரஸ்தாபம். இது வாஸ்தவமானால், இதுதான் இந்தியன் கவர்னர் உத்தியோகம் முதல் முதல் வகித்ததாகும்.

**ஏழைகள் கல்வி.** — இரு இந்தியர் பிஹார், மாகாணம் முழுவதும் பிரைமரி கல்வி கற்பிக்க வேண்டுமென்று முயற்சியெடுக்க, சில இந்தியர் 10,980 கையொப்பம் வைத்த ஒரு விண்ணப்பமெழுதினதுமன்றி கல்வி மிக்க கெடுதி, வேண்டாமென்று சாதிக்கிறார்களாம்.

**தோல் ஷாப்புகள்.** — தோல் பதன்செய்யும் ஷாப்புகளையெல்லாம் இந்த யுத்தக்காலத்திலே அடைக்கவேண்டுமென்று உத்தரவு பிறந்து சில காலமாகிறது. தோல் வர்த்தகர்களுக்கு இது பெரும் கஷ்ட நஷ்டமாகிவிட்டது. தோல்களெல்லாம் போர்வீரருக்கு அவசியமாயிருக்கிறதாம். இது எப்படி முடியுமோ தெரியாது. ஆகிலும் சென்னையிலே தோல் பதனிடும் முறை கற்பிக்கும் ஓர் காலேஜ் ஏற்படுத்தியிருக்கிறது.

**அமெரிக்கர் உதவி.** — அமெரிக்கர் சண்டையில் நுழைந்தது தெய்வ ஸங்கற்பம். ரஷியர்கள் நிர்சமடைந்தபிறகு, நட்பாசர்கதி அதிக கேவலமாயிருந்திருக்கும். நல்ல தருணத்தில் கடவுள் அமெரிக்காவை அனுப்பினார். இப்பொழுது 20 லட்சம் அமெரிக்கப் போர்வீரர் சண்டையிற் சேர்ந்து போர்புரிந்து வருகிறார்கள். இது மாத்திரமல்ல, திரவிய உதவியும் நடந்துவருகிறது. இதுவரைக்கும் உதவியது 600 பில்லியன் ரூ. பில்லியன் என்றால் பதினாயிரங்கோடி ரூபாய். இதைக் கிரகிக்க முடியாதுபோலும். அன்றி, தினம் ஒருகப்பல் கட்டி வருகிறார்கள். சப்மெரின்கள் நட்பாசர்க் கப்பல்களை மூழ்குவிக்கிறதற்குப் பதிலாக, அமெரிக்கரின் பலத்த கப்பல்கள் ஜர்மன் சப்மெரின்களைத் துரத்திச் சுட்டு அழிக்கிறதாய்விட்டது. இதனைத்தும் பேருதவியே.

**நாஷனல் எடிகேஷன்.** — தற்காலம் பெண்டம்மாளின் உதவியைக்கொண்டு இந்தியர்கள் பலர் கூடி சுதேசக்கல்வி முயற்சிசெய்து வருகிறார்கள். சர்க்காரின் கல்விமுயற்சியிலே தெய்வபக்திக்கும், கைத்தொழிலுக்கும் வியாபாரத்துக்கும் அனுகூலமான பயிற்சிகள் இல்லாமையால், இதுகள் விசேஷமாய்ப் பயின்றுவரத்தக்க பாடசாலைகளை ஸ்தாபித்து வருகிறார்கள். சென்ற மாதத்தில் ராயப்பேட்டையிலே வியாபாரக் கல்விச்சாலையொன்றும், தேவனாம்பேட்டையிலே ஹாஸ்டலொன்றும், கீழ்ப்பாக்கத்திலே கைத்தொழிற்பாடசாலை ஒன்றும், மதனபள்ளியிலே சர்வகலாசாலை ஒன்றும் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டன. இதுகள் நீடித்திருந்தால்தான் தேசத்துக்கு நன்மை. இனி வரவிருக்கும் ஹோம் ரூலுக்கு இது உபபலமாயிருக்கும். ஏழைகள் கல்விதான் அத்தியாவசியம். இதில்லாமையால்தான் அவர்கள் அதிக கொடுமையைச் சகிக்கிறார்கள். நாஷனல்எடிகேஷன்என்னும் முயற்சிக்கு இதுவே பிரதம லக்காயிருத்தல் வேண்டும்.

**இந்திய அரசாட்சித் திருத்தம்.** — சென்ற சஞ்சிகையிலே ஹோம் ரூலைப்பற்றி உண்டாயிருந்த பிரஸ்தாபத்தைப்பற்றி எழுதினோம். முக்காலே மூன்றுவீசம் அப்படியே ஏற்பாடாயிருக்கிறது. ஆகிலும் இதுகள் எல்லாம் வெகுநாளாக இங்கும் இங்கிலாந்திலும் பேசித் தர்க்கித்து ஆலோசிக்கப்பட்டு, ஒருவேளை வருகிற வருஷக் கடைசியிலே தான் தீர்மானிக்கப்படுமென்று அனேகர் எண்ணுகிறார்கள். இங்கிலாந்திலிருந்து வருகிற கலெக்டர் உத்தியோகஸ்தர் தொகையிலே 100–க்கு 33 வீதம் அதாவது மூன்றிலொருபாகம் இந்தியாவிலேயே நியமிக்கப்படுகிறதுமன்றி, வருஷந்தோறும் 100–க்கு 1½ வீதம் அதிகரிக்கப்படும். அதாவது, இன்னும் 44 வருஷத்திலே ஒரு அங்கிலேயனும் கலெக்டராய் இங்கே வரமுடியாது; அனைவரும் இந்தியராகவே யிருப்பார்கள். இது பெருத்த மாறுதல். இதனால் சில அங்கிலேயருக்கும் இங்கிலிஷ் பத்திரிகைகளுக்கும் அதிக எரிச்சல் உண்டாயிருக்கிறது. ஆனால் கவர்னர், கவர்னர்ஜெனரல் அவர்களின் அதிகாரம் எப்பொழுதும் போலவே நடக்கும். கௌன்சில்களிலே மூன்றிலே இரண்டு பாகம் ஜனங்களாலே தெரிந்தெடுக்கப்படும். இதற்கு உபசங்கம் ஒன்றுமிருக்கும். முந்தியதில் 100 மெம்பரும், பிந்தியதில் 50 மெம்பரும் இருப்பார்கள். கவர்னர் கவுன்சிலிலே இருவர்மாத்திரம், ஒரு அங்கிலேயரும் ஒரு இந்தியரும், சேர்ந்திருப்பார்கள். கல்வி, சுகாதாரமுயற்சி முதலியன கௌன்சிலின் ஆதீனத்தில் ஒப்புவிக்கப்படும். ஆனால் ஒரு பெருங் குறைவு யாதெனில், துலுக்கர், பஞ்சாப் சீக்கியர்–இவ்விரு கூட்டத்தாரும் தவிர, வேறு செல்லரைக் கூட்டத்தார்கள் கேட்டுக்கொண்ட தனி வோட்டுக் கிடைக்காது. எல்லாம் மொத்தமாய் நடக்கும். இது அனேகருக்கு மனவருத்தம் வருவித்திருக்கிறது. "ஆனரபில்" என்கிற பட்டம் போய்விடும். பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிற்பாடு இந்தத் திருத்தங்களின் பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் பொருட்டு ஒரு கமிஷன் பார்லிமெந்தால் நியமிக்கப்படும். பார்லிமென்றிலும் இந்திய கமிட்டி ஒன்று ஏற்பாடாகும். ஹோம் ரூலுக்கு விரோதமாயிருக்கிறவர்களைப்பற்றிச் சென்ற சஞ்சிகையிலே யாம் பழமொழிப் பாங்காக வரைய நேரிட்டுவிட்டது.

**ஆகஸ்ற்றுமீ பஞ்சாங்கம்.—**

| வாரம். | ஆகஸ்ற்றுமீ = ஆடி—ஆவணி. ● அமாவாசை, 6உ ⊙ பௌர்ணமி, 22உ | | | | ஆடி—ஆவணி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | 31 | 19 | 26 | 2 | 9 | 16 |



30-7-18

# MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்


(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது

ஆலோசனைக்காண்டம்.

சுயாதீனத்தை அவர்களுக்களித்த எனது மகத்துவமும் மாறுததுமான கட்டளையையும் அழிக்கவேண்டும். தங்களுடைய ஆயுதங்களைத் தங்களுக்குக் கேடாகவே பிரயோகம் பண்ணுகிறார்கள். தூதர்கள் தங்கள் சுய வஞ்சனையினாலும் யோசனையினாலுங் கெட்டுப்போனார்கள். மனிதனோ மற்றவர்களாலே வஞ்சிக்கப்படுவதினால் கெடுவான். ஆனதால் மனிதனுக்கு மாத்திரங் கிருபைகிடைக்குமேயன்றி மற்றவர்களுக்கு அக்கிருபை கிடையாது. வானத்திலும் பூமியிலும் விளங்கிநிற்கும் எனது சிறந்த லட்சணங்களாகிய நீதியும் இரக்கமும் யாதொரு தடையின்றி வெளிப்படும். என்விகள் எத்திக்குகளிலும் எழும்பும். ஆனால் உம்மாலே மெத்தவும் நேசிக்கப்பட்டவனும் உமக்கு இளையகுமாரனுமான மனிதன், எதிரியின் துரோகத்தினாலும் தன் சொந்த புத்தியீனத்தாலும் மோசத்தை அடைவதால் அவன் முற்றிலு மிழந்துவிடப்படுவானோ? அது உமக்குத் தூரமாயிருப்பதாக. ஓ பிதாவே, சமஸ்த சிருட்டிகளுக்கும் நியாயாதிபதியே, நீதியின் செங்கோலை பிடித்திருப்பவரே! அது உமக்குத் தூரமாயிருப்பதாக. சத்துருவாகிய பிசாசு உம்முடைய சிறந்த எண்ணத்தைக் குலைத்து தனது துரோகத்தை நிறைவேற்றுவானோ! தன்னுடைய கெர்வத்தையும் அகங்காரத்தையும் நிலைபெறச்செய்து உமது தயாளகுணத்தை அவமாசச்செய்வானோ அல்லது பழிவாங்கும் பொருட்டு மானிடசாதியை தீட்டுப்படுத்தி, மாறுவிதியின் பயனை அவர்கள் அடையும்படி கொடூரமாய் ஆளுகைசெய்ய வருவானோ? அல்லது நீரோ அவனுடைய அக்கிரமத்தை நீக்கிவிட உமது மகிமைக்கென்று உண்டுபண்ணின சிருட்டிகளை நாசம் பண்ணுவீரோ? இப்படி உமது மகிமையும் மேன்மையும் தூஷணிக்கப்பட விடங்கொடுப்பீரோ என்றனர்.

மென்று மறிந்துகொள்வான். நமது சுய இஷ்டத்தின்படி சிலரை விசேஷித்தபிரகாரந் தெறிந்துகொண்டிருக்கிறோம் மற்றவர்களுக்கு நமது அழைப்பு அறிவிக்கப்படும். அவர்களின் பாவநிலைமையைக் குறித்து அவர்களுக் கெச்சரிப்போம். கிருபையின் அழைப்பு இருக்கும்போதே நமது கோபாக்கினைக்கு தப்பிக்கொள்ளும்படி அவர்களின் புத்தியைத் தெளிவாக்குவேன். கடின இருதயங்களைக் கரையச்செய்வேன், மனந்திருப்பவும், கீழ்ப்படியவும், செபிக்கவும் அவர்களுக் கறிவைப் புகட்டுவேன். எவர்கள் உண்மையாய் மனந்திரும்பி, கீழ்ப்படிந்து செபிக்கிறார்களோ அவர்களின் மன்றாட்டுகளைக் கேட்கத் தாமதமாயிரேன். எனது கண்கள் அவர்களைக் கவனித்துக்கொண்டிருக்கும். அவர்களை நடத்தும்பொருட்டு அவர்களுக்குள்ளே ஓர் வழியைக் காட்டிவைப்பேன். எனது காரியதரிசியும், பிரதிநிதியுமா யிருக்கின்ற மனசாட்சியே அந்தவழிகாட்டி, இவ்வழிகாட்டியின் பிரமாணத்தைக் கைக்கொண்டவர்கள் வெளிச்சத்தின்மேல் வெளிச்சத்தை யடைவதுமன்றி, கடைசிபரியந்தம் நிலைநிற்பவர்கள் சுகம்பெறுவார்கள். ஆனால் எனது நீடிய பொறுமையையும், கிருபையின் காலத்தையும் அசட்டை செய்பவர்கள் நன்மையை ருசிபாரார்கள். இருதயக் கடினத்திலும் குருட்டாட்டத்திலும் அதிகரித்து பாதாளத்தி லிடறிவிழுவார்கள். இப்படிப்பட்டவர்கள்மாத்திரம் என்னுடைய இரக்கத்துக்கு அன்னியராவார்கள். இதுவுமன்றி, கீழ்ப்படியாமை, அவிசுவாசம் துரோகச்சிந்தை இவை முதலியவைகளினால் மனிதன் ஏவப்பட்டு உன்னத அரசாட்சிக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்துத் தன்னைத் தெய்வமென்று பாவித்தால் சமஸ்த நன்மையுமிழந்து தனது பாவதோஷத்தை நிவர்த்திபண்ண ஏதுவில்லாமல் அவனும் அவனுடைய சந்ததியாரும் அர்த்தநாச மடைவார்கள். அவன் சாகவே சாகவேண்டும். இல்லாவிடின் எனது நீதியாகிய லட்சணம் பங்கமடையும். காரியமிப்படி யிருப்பதால் கெட்டுப்போன மனிதனை மீட்கும்பொருட்டு மகாத்திறமையும் பரிபூரண லட்சணமும் பொருந்திய வோர் புருஷன் நமது நிதியின் அளவில்லாக் கடனைத் தீர்க்கும்பொருட்டு மரண தண்டனைக்குத் தன்னை ஒப்புவிக்கவேண்டும். வானுலகத்தின் வல்லமைகளே! அவ்வித அன்புள்ள புருஷன் எங்கேயிருக்கிறானென்று சொல்லுங்கள். உங்களில் யாராவது மரண தண்டனையை வருவிக்கத்தக்கக் குற்றத்திினின்று மனிதனை மீட்கும்பொருட்டு மானிட



பக்கிங்காம் அரண்மனை.

றாலும் ஆரம்பத்தில் நீதியும், இரக்கமோ ஆதியிலும் அந்தத்திலும் அதிதுலாம்பரமாய் விளங்கும்.

இவ்வாறு மகாப்பெரிய ஆண்டவர்பேச, தேவாமிர்த நற்கந்தங்கள் வானுலகத்தில் பரிமளித்தன. தெறிந்துகொள்ளப்பட்டும் ஆசீர்வதிக்கப்பட்டுமிருந்த ஆவிகள் நவமான சந்துஷ்டியடைந்தனர். தேவகுமாரனின் முகதேஜஸ் நிகரில்லா வண்ணமாய்ப் பிரகாசித்தது. பிதாவானவர் அவரில் உருவானதுபோல விளங்கிநின்றனர். அவருடைய முகபிரசன்னம் தேவ இரக்கத்தை பகிரங்கமாய் வெளிப்படுத்திற்று. அன்பின் சொரூபியான இவர் கிருபாசமுத்திரத்தில் மூழ்கினவராய்த் தமது பிதாவைப் பார்த்துச் சொன்னதாவது.

### 3. குமாரனவர் உரைத்த படலம்.

ஓ பிதாவே! நீர் திருவாய்மலர்ந் தருளினவார்த்தைகள் நிச்சயமாகவே மகத்துவம் பொருந்தினவைகள். விசேஷமாய், மனிதனுக்குக் கிருபையுண்டென நீர் சொன்னதற்காக, வானமும் பூமியும் உமது துதிகளைக் கெம்பீரமாய்ப் பாடும். எண்ணிறந்தப் பாட்டுகளுங் கீர்த்தனைகளுந் தூதர்வாயினின்று புறப்படும். உமது சிங்காசனம் என்றும் ஆசீர்வாதங்களால் நிறைந்திருக்குமென்று எதிரொ

### 4. மீளவும் பிதா உரைத்த படலம்.

அவருக்கு பிரதியுத்தரமாக சிருஷ்டிகர்த்தாவானவர் சொன்னது, எனது குமாரனே! என் ஆத்துமாவின் பிரியநேசமே! எனது மடியின் புத்திரனே எனது வார்த்தையும், ஞானமும், பூரணசக்தியும் நீரே. நீர் பேசினவைகள் யாவும் எனது யோசனைகளாயு மிருக்கின்றன. நமது நித்தியவாலோசனையில் தீர்மானித்தபடி மனிதனை நாமிழந்துபோகமாட்டோம். இஷ்டமுள்ளவன் இரட்சிக்கப்படுவான். ஆயினும் இரட்சண்ணியம் அவனுடைய இஷ்டத்துக் குள்பட்டதல்ல. இலவசமாய் அளிக்கப்படும். எனது கிருபையினால் இரட்சிக்கப்படுவான். பெலட்சயமாய்ப்போன அவனுடைய மனோதத்துவங்களை மறுபடியும் நானுயிர்ப்பிப்பேன் அவனுடைய தத்துவங்கள் இழந்ததற்குச் சமமாயும் அளவுக்கு மிஞ்சின ஆசாபாசங்களுக் கடிமைகளாயும் போய்விடினும், எனது ஒத்தாசையினால் பெலனடைந்து அவனுக்கு மரணபகைஞனுமா யிருப்பவனுக்கு அஞ்சாமல் யுத்தஞ்செய்வான். இவ்வாறு செய்வதினால் தன்னுடைய நிலைமை எவ்வளவு கேவலமாய்ப் போயிற்றென்றும், என்னாலேயன்றி வேறொருவராலும் விடுதலையடைவது அசாத்திய



தேகத்தைப் பூண்டுகொள்ள மனதாயிருக்கிறீர்களோ? அநீதஞ் செய்தவனுக்காக, நீதிமான் ஒருவன் பிணைப்படக்கூடுமோ! மேலுலகத்தில் அவ்விதபேரன்பை யுடையவர்கள் யாராகிலு மிருக்கிறார்களா யென்றார்.

இவ்வார்த்தைகளை வானசேனைகள் கேட்டு வாய்பேசாத ஊமையரைப்போல நின்றனர். வானுலகத்திற் பேச்சுமூச்சுமற்று அமைதலுண்டாயிற்று. மனிதனுக்கு இரட்சண்ணியவாளனும் மத்தியஸ்தனுமாக வொருவரும் ஏற்படவில்லை. மேலும் மரணதண்டனையைத் தன்னுடைய தாக்கிக்கொண்டு மீட்பின்கிரியை நடத்தவும் ஒருவருந் துணிந்து வரவில்லை. மானிடசாதி சமூலமும் மீட்பின்றி மரணத்துக்கும் நரகத்துக்கும் இரையாகவேண்டியதாயிற்று. இப்படியிருக்குஞ் சமையத்தில் தேவன்பையே ஆடையாகத் தரித்திருக்குந் தேவகுமாரன் மனிதனை மீட்கும்பொருட்டுத் தமது திருவுள்ளத்திற் கொண்டருளின அன்பை விளக்கத் தொடங்கினர்.

### 5. மீளவுங் குமாரன் உரைத்த படலம்.

பிதாவே, உம்முடைய வார்த்தைகள், வெற்றிசிறக்கும் வார்த்தைகளா யிருக்கக்கடவன், சொக்கைகளை அணிந்த தூதர்களிலும் உமதுகிருபைத் துரிதமாகச்சென்று சமஸ்த ஜெந்துக்களுக்கும் இலவசமாய் நன்மையை அளிக்கின்றது, அப்படியிருக்க, மனிதனை இரட்சிப்பது உமது திருவுளச்சித்தமாயிருக்க அக்கிருபையானது அவனுடைய இரட்சண்ணியம் நடந்தேறும்பொருட்டு வேறுவழியைக் கண்டுபிடியாதிருக்குமோ? ஆனால் உமது கிருபையின் வரப்பிரசாதத்தைத் தேடாமற்போனது அவனுடைய பெரிய நஷ்டமாயிருக்கிறது. மேலும் பாவத்தில் விழுந்து மடிந்துபோன காரணத்தால் பாவநிவாரண பலியைச் செலுத்த சக்தியற்றவனாயிருக்கிறான். ஆயினும் உமது குமாரனாகிய என்னை நோக்கிப்பாரும். அவனுக்காக என்னையும் அவன் சீவனுக்காக என்சீவனையும் கொடுக்க மனதாயிருக்கிறேன். உமதுகோபம் என்மேலிரங்குவதாக என்னை மனுஷனாகப் பாவித்துக்கொள்ளும்? அவனுக்காக நான் உமது மடியையும் விட்டுவிடுகிறேன் திரித்துவத்தி லிரண்டாவதாக விருக்கும் எனக்குரிய சமஸ்த மகிமையையும் மனப்பூர்வமா யிழந்துவிடுகிறேன். ஆம் அவனுக்காக, கடைசியில் சந்தோஷத்துடன் மரிக்கிறேன். என்மேல் மரணதூதன் தன் அகங்காரத்தை யெல்லாங் காட்டுவானாக. ஆகிலும் அவனுடைய அந்தகார இராட்சியத்தில் நான் அதிகக்காலம் தாவரிக்கமாட்டேன். ஏனெனில் என்றும் ஜீவித்திருக்குஞ் சக்தியை நான் உம்மிடத்திலிருந்து பெற்றிருக்கிறேன். மரிக்கவேண்டியவர்களுக்கு பதிலாக நானிப்போது மரிக்க ஏற்படினும், அவர்கள் செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தினபிற்பாடு அசங்கிக்கப்படத்தக்க கல்லறையில் அழிவுக்கிரையாகும்படி என்னை ஒப்புக்கொடுக்கமாட்டீர். எனது மாசற்ற ஆத்துமம் அப்போது நரகத்தில் வாசம்பண்ணவும் இடங்கொடீர். நான் வெற்றிவேந்தனாக வெழுந்து என்னை மேற்கொண்டவனை மேற்கொண்டு அவனுடைய பெருமை பொருள்களைக் கொள்ளையாடுவேன். அப்போதுதான் மரணம், மரணகாயத்தை யடைவான். அவனுடைய மரணக் கொடுக்குகள் பிடுங்கப்படும், மிகுந்த வெட்கத்துடனே குனிவான். நானோ ஆகாயமண்டலத்திலே மிகுந்த வெற்றிச் சிறப்புடன் நரகத்தையே சிறையாக்கி அதின் கிஷ்டை பிடித்தவர்களை கட்டுண்டவர்களாக காண்பிப்பேன். இக்காட்சியை ஆனந்தசகிதராய் வானுலகத்திலிருந்து பார்த்து அகமகிழ்ந்துகொள்வீர். நான் உமது வல்லமையினாலெழுந்து சத்துருக்களை அழிப்பேன், கடைசியாக மரணத்தையுஞ் சம்மாரஞ்செய்து அவனுடைய பிரேதத்தால் பாதாளத்தின் வயிற்றை நிறப்பி மீட்கப்பட்ட எனது திரண்ட சனத்துடன், சிறிதுகாலம் பிரிந்திருந்த நான் என்பிதாவின் சமூகத்தைத் தரிசிப்பேன். அப்போது உமது முகப்பிரசன்னம் மனிதன்பேரில் கோபத்தை விளக்காமல் சமாதானத்தையும் ஒப்புரவாக்குந் தயாளகுணத்தையும் வெளிப்படுத்தும், ஆம் ஒரே வார்த்தையாக உமது உக்கிரகோபாவேச மெல்லாஞ் சந்தோஷ சாகரமாக மாறிவிடுமென்றார்.

இவ்வாறு குமாரன் பேசிமுடித்தபோதிலும் அவருடைய பேரன்பாகிய, சிறந்தலட்சணம் வானுலகமெங்கும் துலங்கிக்கொண் டிருந்ததினால் அவருடைய வார்த்தைக ளின்னமுந் தொனிக்கிறாப்போல விருந்தன. அழிந்துபோகும் மனிதர்களுக்கழியாத அன்பைக் கூறுகிறதா யிருந்தது. தம்முடைய பிதாவின் சித்தத்துக்கிசைந்து மனப்பூர்வமாய் தம்மை பலியாக வொப்புக்கொடுத்த பின்னைக்கொப்பான கீழ்ப்படிதலே, யெல்லாவற்றிலுஞ் சிறப்பாய் பிரகாசித்தது. வானசேனைக ளனைவோரும் இதன் கருத்தென்ன? இது எவ்வாறு முடியும் என்று அதிசயித்துக்கொண் டிருந்தனர்: சர்வத்துக்கு மதிபதியான பிதாவானவர் பேசத்தொடங்கினார்.

### 6. திரு அவதார நிர்ணயப் படலம்.

தேவகோபாக்கினைக் குள்ளாயிருக்கின்ற மானிடசாதியின் இரட்சகனே! பரத்துக்கும் புவிக்கும் சமாதானக் கர்த்தனே! என் ஆத்தும நேசமே: எனது காத்தின் சிருட்டிகளின்பேரிலும் விசேஷமாக கடைசியாகச் சிருட்டிக்கப்பட்ட மனுஷன்பேரிலும் நான் யெவ்வளவு பிரீதியுள்ளவனா யிருக்கிறேனென்பதையும் நீர் நன்றாயறிவீர், அவனை இரட்சிக்கும்பொருட்டுக் கொஞ்சக்காலம் எனது மடியினின்றும் வலது பாரிசத்தினின்றும் உம்மை இழந்துவிடுகிறேன். நாமிழந்துபோன சாதியனைத்தையும் மீட்க நீரோ வல்லவர் ஆதலால் உமது தெய்வீகத் தன்மையோடு அவர்களுட மனுஷீகத் தன்மையையுஞ் சேர்த்துக்கொள்ளும். பூமியிலே மனிதருக்குள்ளே மனிதனாக விருந்தருளுவீராக. காலம் வரும்போது ஓர் கன்னிகை வயிற்றில் அதிசயமாய் உற்பவித்து மாமிசதேகத்தைப் பூண்டுகொள்ளும். ஆதாமின் புத்திரனாயிருந்தும் ஆதாமுக்குப் பதிலாக நீரோ மனிதசாதிக்குத் தலைவனாகவிருந்து அவனில் எல்லோரும் அழிந்துபோனதுபோல இரண்டாம் பேருக்கொப்பான உம்மிலே யாவரும் உயிரடைவார்களாக. உம்மாலேயன்றி மற்றவர்களால் மனிதசாதியை உயிர்ப்பிப்பது அசாத்தியமான காரியம். ஏனென்றால் அவன் குற்றஞ்செய்த காரணத்தால் எல்லோருங் குற்றவாளிகளானார்கள். உம்முடைய நீதி அவர்களுக் களிக்கப்படுவதினால் அவர்கள் விமோசனமடைந்து தங்களின் சுயநீதி ஒன்றுக்கும் உதவாதென் றுணர்வார்கள். புதிய சீவனையுமடைவார்கள். இவ்வாறு மனிதனே மனிதனுக்காகத் திருப்தி யுண்டுபண்ணுவதும் அவனுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து தன் சொந்த சீவனாலே மீட்கப்பட்ட சகோதரரை மரணத்தினின்று எழுப்புவதும் நியாயமாயிருக்கிறது. வானுலகத்தின் பேரன்பு நரக உலகத்தின் தீராப்பகையை வென்றுகொள்ளும் வகை இதுவே. நரகவாசிகள் பகையினால் அழித்துவிட்டதை, உமது மிகுந்த விலைக்கிரயத்தினால் எளிதில் மீட்டுவிடுவீர். ஆம் உமது கிருபையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அழிந்துபோவார்கள். மேலும் மனிதனுடைய தன்மையை தரித்துக்கொள்ளும்பொருட்டுத் தாழ்வுலகிற் சென்றாலும் உம்முடைய தெய்வீகத்தன்மை எவ்வளவு மிழிவற்றிருக்கும். கடவுளுக்குரிய சமஸ்த செலவானுபோகங்களையுந் துறந்துவிட்டு நாசமாய்ப்போன ஓர் உலகத்தை மீட்கும்படி வந்தீர். உமது பிறப்பின் சுதந்தரமும் சுயமேன்மையும் நீர் தேவகுமாரனென்பதை சாட்சியிடுகின்றன. உயர்வும் உன்னதமுமான நிலைமையி லிருக்கிறதுமன்றி நன்மைக் கடலாயு மிருக்கிறீர். உம்மிடத்தில் மகிமை விளங்குகிறதைவிட அன்பே அதிகப் பிரகாசமாய் விளங்குகிறது. உமது தாழ்மையினால் தரித்துக்கொள்ளும் மானுஷியம் இச்சிங்காசனமட்டுக்கும் உயர்த்தப்படும் இவ்விடத்தில் மாமிசதேகத்துடன் வீற்றிருப்பீர். தேவனும் மனிதனுமாயும் தேவகுமாரனும் மனிதகுமாரனுமாக அபிஷேகம்பெற்று ஆளுகைசெய்வீர். சகல வல்லமையும் உமக்கு அளிப்பேன் நித்தியமாய் அரசாட்சி செய்வீர் உம்முடைய மகத்துவ லட்சணங்களை அணிந்துகொள்ளும். சிங்காசனங்களும், இராட்சியங்களும், அதிகாரங்களும், ஆளுகைகளும், உமக்குக் கீழடங்கும். வானுலகத்திலும், பூமியிலும் பாதாளலோகத்திலு மிருப்பவர்கள் உமக்குத் தங்கள் முழங்கால்களை முடக்குவார்கள். நீர் மகத்துவ சகிதமாய் ஆகாயத்தில் பவனிபுறப்படுகையில் உமது பராக்கிரம தூதர்கள் உமது நியாயத்தீர்ப்பின் பயங்கர விசேஷத்தைக் கூறுவார்கள். உடனே எத்திக்கிலுமிருந்து உயிருள்ளவர்களும், மரித்தவர்களும் பொதுவான நியாயத்தீர்ப்புக் கோடிவருவார்கள், மரண நித்திரையடைந்தவர்கள் பலத்த சப்தத்தால் உயிரடைவார்கள் உம்முடைய பரிசுத்தவான்கள் ஒன்றாய்க் கூடுவார்கள். நீரோ நியாயம் தீர்ப்பீர். மனிதர்களிலுந் தூதர்களிலுந் துன்மார்க்கரானவர்கள், குற்றஞ் சுமத்தப்பட்டு தண்டனை யடைவார்கள். அப்போது நரகம் தன்னுடைய தொகையை பூர்ணப் படுத்திக்கொண்டு சதா நித்தியகாலமாய் மூடப்பட்டிருக்கும். இதனடுவில், பூமி எரிந்துபோகும் அதின் சாம்பலிலிருந்து புதியவானமும் பூமியும் உருவாகும். அதில் நீதிமான்கள் வாசம்பண்ணுவார்கள். அனேகவிதமான உபத்திரவங்களைக் கடந்த அந்நீதிமான்கள் பொன்யுகத்தைக் காண்பார்கள். அந்த யுகம் பொன்னுக்கொப்பான கிருபைகளால் நிறைந்திருக்கும். சந்தோஷமும் அன்பும் அதிற் குடிகொண்டிருக்கும். அப்போது உமது நீதியின் செங்கோலைப் பிடித்து அரசாள அவசியமிராது தேவனே! எல்லாத்துக்கும் எல்லாமுமாயிருப்பார், ஆகையால் வானதூதர்களே நீங்கள் எல்லோரும் அவரைத் துதியுங்கள் ஏனென்றால் மேற்சொல்லிய காரியங்களனைத்தையும் நிறைவேறச் செய்யும்பொருட்டாகவே அவர் மரிக்கிறார், குமாரனைத் துதியுங்கள். என்னைக் கனஞ்செய்யும் விதமாகவே அவரையுங் கனம் பண்ணுங்க ளென்றனர்.

### 7. தூதர்கள் கொண்டாட்டுப் படலம்.

சர்வத்துக்கும் வல்ல தேவனானவர் அமிர்தம் போன்ற இவ்வசனங்களை யுரைத்தமாத்திரத்தில் தேவதூதர்களின் திரண்ட கூட்டங்கள் சமுத்திரம்போல கோஷித்தன. பூபிலிகள் கொண்டாடுவதுபோல ஆர்ப்பரித்தன ஓசன்னாவெனனுஞ் சப்தத்தால் வானுலகம் அதிர்ந்தது சிங்காசனத்தில் வீற்றிருந்த பிதாவுக்கும் குமாரனுக்கும் அத்தியந்த பணிவுடனே குனிந்து நமஸ்காரஞ்செய்தனர். அமராந்தி புஷ்பத்தினாலும் பொன்னினாலுஞ் சிங்காரிக்கப்பட்டத் தங்களின் கிரீடங்களை கீழேயெறிந்தனர். மேற்சொல்லிய அமராந்திபுஷ்பம் அழியாத தன்மையை யுடையதாயும் ஓர்காலத்தில் சீவவிருட்சத்தி னருகாமையில் மலர்ந்ததாயு மிருந்ததென்றும்: பிற்பாடு மனிதனுடைய பாவத்தினிமித்தம் பரதீசிலிருந்து பேர்க்கப்பட்டு வானுலகத்துக் கெடுத்துக் கொள்ளப்பட்டதென்றுஞ் சிலர் சொல்வதுண்டு. அப்புஷ்பம் அவ்வுலகிலுள்ள ஜீவதடாகத்தைத் தனது நிழலினாலும் பரிமள வாசனையினாலும் நிரப்பிக்கொண்டிருந்தது. இதுவுமன்றி அத்தடாகத்தின் சலம், ஓடி நீர்பாய்ச்சின சோலைகளிலும் இப்புஷ்பம் மலர்ந்திருந்தது. தெரிந்துகொள்ளப்பட்ட வாத்துமாக்கள் தங்கள் முடிகளிலதை சூட்டிக்கொள்வார்கள். நவரத்தினங்களினாலும் ரோஜாபுஷ்பங்களினாலுஞ் சிங்காரிக்கப்பட்டிருந்த தேவலோகத்தின் கடல்போன்ற விஸ்தீரண தளவரிசையிலும் அமராந்திபுஷ்பங்கள் சிதறப்பட்டிருந்தன. தூதர்கள் மறுபடியும் தங்கள் கிரீடங்களை தரித்துக்

கொண்டு, பொன்மயமான அவர்களினது அம்பிராத்தூணிகளில் பிரகாசிக்க சுரமண்டலங்களை வாசித்தனர். அமர்ந்த தொனியுடன் இனிய பாட்டுகளையும் பாடினர். கெம்பீரமான சப்தங்கள் எழும்பி எங்கும் வியாபித்தன. எல்லோருஞ்சேர்ந்து ஆனந்த முழக்கமிட்டனர் இவ்வித அன்னியொன்னிய ஐக்கியமும் ஆனந்தபாஷ்பமும் வானுலகத்திலுண்டாயிற்று.

முதன்மையாக அவர்கள் பிதாவே, சர்வவல்லவரே மாறாததும், அழியாததும், நித்தியமுமான லட்சணங்களை ஆடையாகப் பொருந்தியவரே! ஆதிமத்தியாந்தரகிதரும் அளவற்ற அதிகாரமுமுடைய உன்னத அரசனே! சமஸ்த ஜீவனுக்கும் ஆதிகாரணரே! ஒளியின் சுத்தாங்க ஊற்றே! ஒருவராலுஞ் சேரக்கூடாத சிங்காசனத்திற் வீற்றிருப்பவரே! கண்களினால் தரிசிக்கப்படக் கூடாதவரே! ஜோதியான கிரணங்கள் உமது ஆசனத்தைச்சுற்றி இந்திரதனுசுவைப்போல வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன, உமது முகதேஜசின் தூய்ய வெண்மையால், மோட்சலோக முழுவதும் ஜெகஜோதியாய் விளங்குகிறது. பிரகாசிக்குஞ் சேராபீன்களும் இருசெட்டைகளினால் தங்கள் கண்களை மூடாமல் உம்மை தரிசிக்கக் கூடுமோ? என்று பாடினர், பிற்பாடு சிருட்டிகளுக்கெல்லாம் அதிபதியானவரே! பிதாவின் சுதனே, ஒரே பேரான குமாரனே! தெய்வசுரூபியே! களங்கமற்றதும், மிகச் சிறந்ததுமான உமது முகத்திலே சர்வவல்லமையுடைய பிதாவானவர் விளங்கி நிற்கிறாரல்லவோ உம்மைத்தவிர வேறோர் சிருட்டியும் அவரைப் பார்க்கக்கூடாதே? அவருடைய மகிமையின் அச்சடையாளம் உம்மில் பதிக்கப்பட்டிருப்பதுந்தவிர அவருடைய ஆவி சர்வாங்கமாய் உம்மில் ஊற்றப்பட்டிருக்கிறது, வானங்களின் வானங்களும் அவைகளின் சர்வ அதிகாரங்களும் உம்மால் உண்டாக்கப்பட்டனவல்லவோ? பேராசையினால் மதிமயங்கின தூதர்களை பாதாளத்தில் தள்ளினவர் நீரல்லவோ? உமது பிதாவின் பயங்கர இடிகளை அவர்கள்மேல் பிரயோகித்து உமது இரதத்தின் சுவாலிக்கும் சக்கரங்களை வானுலகத்தின் அஸ்திவாரங்களும் அசையத் தக்கதாக கலக தூதர்களின்மேல் ஓட்டவிட்டீரே. ஜெயமடைந்த தூதர்கள் உம்மை உரத்த சப்தத்துடன் போற்றினார்களல்லவோ? நீர் பிதாவின் வல்லமையை இடைகட்டிக்கொண்டு உமது சத்துராதிகளைப் பழிவாங்கினீர் என்றும் பாடினர். மேலும் கிருபையும் இரக்கமும் நிறைந்த பிதாவே மனிதர்கள் சதிமோசத்தினால் விழுந்தபடியால் நீர் அவர்களை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கவில்லை. அவர்களின்மேல் இரக்கம் வைத்து உமக்கிரண்டாவதாயும் ஆனந்த மகிமையில் விற்றிருக்கிறவராயுமிருக்கிற உமது அருமைக்குமாரனை ஒப்புக்கொடுத்தீரே! இரக்கமும் நீதியென்னும் உமது இலட்சணங்களை சமாசப்படுத்தவும் உமது கோபத்தைத் தணிக்கவும் அவரை பானபலியாக்கினீரே யென்றும்.

ஒ நிகரில்லாதநேசமே! ஒருவரிடத்திலும் வெளிப்படாத தேவன்பே? தேவகுமாரனே, மானிடரட்சகனே! உமக்கு வந்தனஞ்செய்கிறோம் எங்கள் துதிதோத்திரப்பாட்டுகளின் மொத்தப்பொருளாயிருக்கிறவரே, உமது நாமத்துக்குத் தோத்திரம், அனந்தகாலமாய் எங்கள் சுரமண்டலங்களில் உமது துதியைப் பாடாம விருப்போமோ பிதாவோடு உம்மை ஆராதிக்கவும் நமஸ்கரிக்கவும் ஒருபோதிலும் மறவோம் என்றும் பாடினர். இவ்வண்ணமாய் பிதாவுக்கும் குமாரனுக்கும் ஆனந்தப் பாட்டுகளைப்பாடி தேவலோகத்தார் தங்களின் காலத்தைச் செலவழித்தனர்.

## 8. சாத்தான்பூவுலகைச் சுற்று படலம்.

மேற்சொல்லிய பிரகாரம் வானுலகத்தில் நடக்குஞ் சமையத்தில் வேதாளம் ஆகாயம் மண்டலங்களின் அகண்டவெளிகளில் நீடித்தயாத்திரை செய்து, இப்பூவுலகைக் கிட்டி அதில் இரவின் அந்தகாரப்பொழுது கவிந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் வந்திறங்கினான். சற்றுதூரம் நடந்துபார்த்து பூமியானது உருண்டை வடிவமுள்ளதா யிருந்ததென்று அறிந்துகொண்டான். இப்போது எல்லையற்றதும், இருண்டதும், பாழடைந்ததும் கரடுமுரடுகளுள்ளதும் புசற்காற்றினால் அலசடிபடுகிறதுமான வோர் கண்டத்தைப்போலவு மிருந்தது. ஆயினும் அதின் ஓர்பக்கம் வானத்தின் மதில்புறமாயிருந்த காரணத்தால் அப்பக்கத்தை குளிர்ந்த ஆகாயவெளி சூழ்ந்துகொண்டிருந்தது. அமர்ந்தகாற்றும் வீசினது இப்பக்கத்திற்கு பேயச்சூரன் தாராளமாய்ச் சென்றான். அதெப்படி யிருந்ததென்றால் இமயகிரி பனிச்சிகரங்களிலிருந்து கங்கை, இந்துநதியோரங்களில் மேய்ந்துகொண்டிருக்கும் ஆட்டுக்குட்டிகளின் சதையைப் பிடுங்கித்தின்க கழுகானது பறந்தோடி வந்ததுபோலிருந்தது. தான் நாடிவந்த இரையைமாத்திரம் நோக்கினன். உயிர்ப்பிராணிகள் ஒன்று மிவ்விடத்தில்லை. ஆனால் இனிவருங் காலத்திலோ ஆகாயத்தின் அணுக்களுக்கொப்பான வீணும் நிலையற்றதுமான காரியங்களை நாடுபவர்களும், பாவத்திற்கு மனிதர்களை ஏவுபவர்களும், இம்மைக்கும் மறுமைக்கும் அனுகூலமானவைகளை அசட்டைசெய்து தங்களின் உபயோகமற்றதுமான கிரியைகளில் நம்பிக்கைவைக்கும் மனுமக்கள் மிச்சமாய்த் தோன்றுவார்கள். வீண்பக்தி, குருட்டு வைராக்கியம், முகஸ்துதி, மாயவாழ்வு இவைகளின்மீது வாஞ்சையுற்றவர்களுந் தோணறுவார்கள். மேலும் அபூர்ண இயற்கை கிரியைகள், அகாலப்பிறவிகள் சுபாவத்துக்கெதிரிடையானவைகள் நிர்ப்பந்த சம்பந்தங்கள் முதலியவைகள் பெரும்பான்மையாய் வெளிப்படுவதுமன்றி அந்தகாலம் வருமட்டுக்கும் விருதாவாய் இப்பூமியை அசுசிப்படுத்திக்கொண்டிருக்கும் அசங்கித வஸ்துக்களும் உண்டாகும். சிலர் தூதர்களுக்கும்மானிடருக்கும் மத்தியில் ஆத்துமாக்களிருக்கின்றனவென்றும், அவ்வாத்துமாக்களுடன் மேற்சொல்லியவைகள் சேருகின்றனவென்றும் பிதற்றுவார்கள். இதுவுமன்றி, துர்ச்சம்பந்தத்தினால் பிறந்த புத்திரர்களும், கீர்த்திப் பிரதாபரான இராட்சத வமிசத்தாரும் புறப்படுவார்கள் சென்றோர் பள்ளத்தாக்கில் பாபேலின் கோபுரத்தை சமைக்கும் வீணர்களும் வருவார்கள். சிலர் தங்களின் பராக்கிரமத்தை வெளியிடும் பொருட்டு கிசென்றுவென்னும் அக்கினிச் சூளையில் விழுந்து தங்கள் உயிரை மாய்த்துக்கொள்வார்கள். சிலர் துறவறத்தை ஆசித்து சன்னியாசி, வானப்பிரஸ்தன் பிர்மச்சாரி முதலிய வேடங்கள்பூண்டு கறுப்பு, பச்சை, நீலம், காவி நிறமுள்ள உடைகளைத்தரித்து சுதேச பரதேச யாத்திரைசெய்வார்கள்.

(இன்னும் வரும்).

## THE WAR

### யுத்த வரலாறு

தபாலி லனுப்பிய விஷயங்கள் காணமற் போயின. இது எமக்கு மிக்க துக்கம். இவ்வாறு நடந்தது இதுதான் முதல்தரம். வழக்கப்படி யுத்த வரலாறும், ஹெபிக்கய்யர் ஜீவிய சரித்திரமும், நமதரசர் 25–ம் விவாக மஹோற்சவம் பண்ணிய விஷயங்கள் எழுதியனுப்பினோம்.

யுத்தம் கடவுட்செயலால் நட்பரசர் பக்கம் திரும்பிவிட்டது. சென்ற 18உ முதல் ஜர்மன்கள் இழந்த தொகை 2 லட்சம் பேர். இது கொல்லுண்டவர், காயப்பட்டவர், கைதிகளானவர் சேர்ந்ததொகை. நானூறு பீரங்கிகள் எடுக்கப்பட்டன. இனி ஜர்மன்கள் நட்பரசர் சேனைகளைத் துரத்தாமல், நமது சேனைகள் அவர்களைத் துரத்தியோட்ட நேரிட்டுவிட்டது. ஒருவர் இதை முடிவின் ஆரம்பமென்கிறார். இதனால் ஆஸ்திரியா ஜர்மனியைவிட்டு நீங்கத் தீர்மானமாயிருக்கிறது. இனி யுத்தம் வெகுநாள் நடவாது.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DEPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கிறிஸ்துவில் நிலைத்திரு .. .. | 0 | 8 | 0 |
| ஆடவர் கும்மி .. .. .. | 0 | 1 | 0 |
| கிரணமாலிகை .. .. .. | 0 | 6 | 0 |
| அருளாகமமும், ஆதிசின்னங்களும் .. | 0 | 2 | 0 |
| வேதாகம பிரசித்த விர்த்தாந்தம் .. | 0 | 8 | 0 |
| சந்திரலீலாள் .. .. .. | 0 | 2 | 0 |
| பிள்ளைகளும் சபையும் .. .. | 0 | 2 | 0 |
| புதிய ஞானப்பாட்டுகள் பெரியது .. | 0 | 4 | 0 |
| ,, சிறியது .. | 0 | 3 | 0 |
| ஞானகீதங்கள் பெரியது .. .. | 0 | 10 | 0 |
| ,, சிறியது .. .. | 0 | 4 | 0 |
| ,, ஓர் அணு புஸ்தகம் .. | 0 | 1 | 0 |
| பாலர்ப் பாட்டுகள் .. .. .. | 0 | 1 | 0 |
| ஞானப்பாட்டுகளும், ஞானகீதங்களும் ஒன்றாய் சேர்த்துக் கட்டினது .. | 0 | 12 | 0 |
| சிலுவைத் திருவாசகம் .. .. | 0 | 1 | 0 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் .. .. | 0 | 4 | 0 |
| ,, எபிரேயர் நிருப வியாக்கியானம். | 0 | 1 4 | 0 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் .. .. .. .. | 0 | 8 | 0 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் .. | 0 | 3 | 0 |
| திருச்சபை சரித்திரம் .. .. | 1 | 4 | 0 |
| மாதர்கும்மி .. .. .. | 0 | 1 | 0 |
| காலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| மாலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் .. | 0 | 14 | 0 |

☞ தபால்கூலி வேறே.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Rs. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

### விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1918.


913

Registered No. M. 442.

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

13 SEP 1918

# சத்திய தூதன்.

SEPTEMBER, 1918. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. செப்டெம்பர், 1918.


## NEWS AND NOTES

### விர்த்தமானக் குறிப்புகள்

**சென்னைக் கவுன்சில்.**—சென்றமீ வழக்கமான கவுன்சில் கூட்டம் நீலகிரியில் நடவாமல் சென்னையிலேயே நடந்தது. கவர்னரவர்கள் இங்கு வந்து சபையை நடத்திவிட்டுப் போனார்.

**பர்மாவில் பெண் கல்வி.**—பர்மாவிலே ஒரு பர்ம ஸ்திரீ, எம். ஏ. பாஸ்பண்ணி, ரங்கூன் ஆண்பிள்ளைகள் காலேஜிலே இங்கிலிஷ் புரொபெஸராயிருக்கிறாள். இந்தியாவிலும் இந்த விந்தை இதுவரைக்கும் நடக்கவில்லை.

**சென்னை பாங்கு.**—இந்த உயர்தரப்பாங்கு சென்ற வருஷத்தில் செய்த முயற்சியினாலே 7½ லட்சம் ரூ. சம்பாதித்தது. இத்தேசத்திலுள்ள நாட்டுப் பாங்குகள் இவ்வாறு செய்யாமல் நஷ்டப்பட்டு நாசமடைகிறது சகஜம்.

**சந்தன எண்ணெய்.**—மைசூரிலே சந்தன எண்ணெய் செய்யும் யந்திரசாலைகள் ஏற்படுத்தி அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். இந்நாட்டின் இயல்பான திரவியத்தைத் தக்கவாறு ஆதாயப்படுத்திக் கொள்ளும் ஆசாமிகள் அத்தியாவசியம்.

**வெங்கடகிரி ராஜாவின் தயவு.**—தமது சமஸ்தானத்திலிருந்து ராணுவத்தைச் சேரும் ஒவ்வொரு ஆணுக்கும் 2, 3 ஏக்கரா நிலமும் பணமும் தருகிறதாக வெங்கடகிரி ராஜா வாக்களித்திருக்கிறார். இது பெரிய உபகாரமும் உற்சாகமுமான காரியம்.

**சென்னையில் உஷ்ணம்.**—மேற்கே இக்காலம் பெய்யவேண்டிய மழை பெய்யாத காரணத்தால், சென்னையிலும் மற்றும் கீழ்த்திசை நாடுகளிலும் என்றுமில்லாத உஷ்ணம் வியாபித்திருக்கிறது. இது வருகிற அக்டோபர் மாதத்து மழைக்காலமட்டுமிருக்குமென்று நினைக்கிறோம்.

**விசேஷ காங்கிரேஸ்.**—இப்பொழுது பிரபல்யமாயிருக்கிற சீர்திருத்தங்களைக் குறித்து ஒரு விசேஷக் காங்கிரெஸ் பம்பாயிலே சென்ற மாதம் 28உ ஆரம்பித்தது. பெருத்த பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். மிச்சமான் பேர் சீர்திருத்தங்களை ஏகதேசம் ஒப்புக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

**ஜர்மன் சேனை.**—இப்பொழுது சண்டை முனையில் நிற்கிறவர்கள்போக 1920-ம் வருஷத்து வகுப்பிலிருக்கிற இன்னும் 4 லக்ஷத்து 20 ஆயிரம் பாலியரை யுத்தத்துக் கழைத்துவரப் போகிறார்கள். அனைவரும் 16, 17 வயதுக்குட்பட்டவர்களானமையால் இது பெருங்கொடுமையாக எண்ணப்படுகிறது.

**யுத்தக் கடன்.**—இரண்டாம் யுத்தக்கடன் முயற்சி அதிகமாய் நடந்து வருகிறது. 50 கோடி ரூபாய் சர்க்கார் யுத்தத்துக்காகக் கடன் கேட்கிறார்கள். ஏறக்குறைய 31 கோடி சேர்ந்துவிட்டது. பங்காளம்தான் அதிகம் தந்திருக்கிறது. சென்னையிலே இதுவரையும் 2 கோடி கூடச் சேகரமாகவில்லை.

**தென் இந்திய கிரீஸ்தவர்கள்.**—தென்இந்தியாவிலே 15 லட்சம் புரோட்டஸ்டாண்ட் கிரிஸ்தவர்களுண்டு. ரோமன் கத்தோலிக்கரைச் சேர்த்தால் 28 லட்சமாகும். இனி வருகிற கவுன்சில்களிலே, மகம்மதியரைப்போல, இவர்களுக்கும் சில மெம்பர்கள் வோட்டால் நியமிக்கப்படவேண்டும். இது தர்மம்.

**ஒரு துவிபாஷிகர்.**—கார்டன் உட்ரப்பு துவிபாஷிகராகிய ம-ா-ா-ஸ்ரீ, எதிராஜுலு நாயுடவர்கள் அந்தக் கம்பெனி ஆரம்பித்ததுமுதல், உத்தியோகம் அமர்ந்து 50 வருஷகாலமாய் ஊழியஞ்செய்தது காரணமாக அவருக்கு ரூ. 500 மாதச் சம்பளம் திட்டம்பண்ணி யிருக்கிறார்கள். இவ்வளவுகாலம் வேலைசெய்த துவிபாஷிகளை யாம் கண்டறியோம்.

**கர்னாடிக் மில்.**—இதுவும் பக்கிங்காம் மில்லுமாகிய இரண்டு துணி நெய்யும் யந்திரசாலைகளுண்டு. இவைகளிலே நேர்த்தியான வெள்ளைத் துணிகளும் வர்ணந்தீர்த்த பல துணிகளும் அதிகமாக நெய்யப்பட்டு வருகின்றன. ஷேர்காரருக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. இம்மாதிரி அனேக மில்லுகள் பற்பல இடங்களிலே நடக்கிறது தேசத்துக்குப் பெரும் பிரயோஜனமாயிருக்கும்.

**ஜப்பான் பிரபுவின் ஆலோசனை.**—ஜப்பான் பிரபுவாகிய ஒகுமா என்பவர் இந்தியர் ஜாதிபேதத்தை அவர்களைப்போலவே, முற்றிலும் விட்டுவிட்டால்தான் இந்தியாவிலே சுயவரசு சுகமாய் நடந்து நிலைபெறும் என்று சாதிக்கிறார். இங்கிலிஷ் ராஜாங்கம் இவ்விஷயத்தில் சிக்கிக்கொள்ளாதாகையால், இந்திய தலைவர்களே இதைச் செய்து முடிக்கவேண்டும். பஞ்சமருக்கும் மற்ற எழுத்துவாசனையில்லாத ஜாதிகளுக்கும் கல்வி கற்பித்து, பரஸ்பர இனக்கலப்பு தாராளமாய் நடக்க இடங்கொடுத்தால் ஜாதிபேதம் என்கிற பேய் பறந்தோடிவிடும்.

**ஆகாயப் பிரயாணம்.**—சண்டை ஒழியுமுன்னமே ஆகாயப் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். முன்போல அத்தனை ஆபத்துகள் நேரிடக்காணோம். பிரயாணத்தின் கால விவரங்களாவன:—

| | | |
|---|---|---|
| லண்டனிலிருந்து | சிட்னிக்கு | 5 நாள் |
| ,, | ஹாங்காங்கு | 3½ ,, |
| ,, | கல்கத்தா | 3½ ,, |
| ,, | கொழும்பு | 2½ ,, |
| ,, | ஆர்லந்து | 6 ,, |
| ,, | பாக்டாட் | 5½ ,, |
| ,, | கேப்டௌன் | 3½ ,, |
| ,, | நியுபௌன்ட்லந்து | 1 ,, |
| ,, | ஒட்டவா | 2 ,, |
| ,, | கைரோ | 1 ,, |
| ,, | வினிப்பெக்கு | 3½ ,, |
| ,, | லான்கூவர் | 3 ,, |

கடிதங்கள் மாத்திரமல்ல, பிரயாணிகளும் கொண்டுவரப்படுவார்கள். மேலே பார்த்தால் லண்டனிலிருந்து கொழும்புக்கு 2½ தினத்திலும், கல்கத்தாவுக்கு 3½ தினத்திலும் போய்ச் சேரலாம்.

### செப்டெம்பர், பஞ்சாங்கம்.—

| வாரம். | செப்டெம்பர் = ஆவணி—புரட்டாசி. ● அமாவாசை, 5உ ⊙ பௌர்ணமி, 20உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆவணி—புரட்டாசி. | | | |
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 1 | 8 | 15 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 2 | 9 | 16 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | ... | 19 | 26 | 3 | 10 | ... |
| புதன் ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 4 | 11 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| வெள் ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 7 | 14 | ... |

# THE WAR

## யுத்த வரலாறு

சென்ற மாதம் நாலாம் தேதி யுத்தம் தொடங்கி 4 வருஷம் முடிந்து, ஐந்தாவது ஆரம்பிக்கிறது. இன்னும் எத்தனை வருஷஞ் செல்லுமோ கடவுளுக்குத்தான் தெரியும். * ஆயினும் இவ்வித பெரும்போருக்கு இது நீடித்த காலமல்ல. இங்கிலாந்திலே ஒரு உள்யுத்தம் 12 வருஷமும், யூரோப்பிலே இம்மாதிரி யுத்தமொன்று 30 வருஷமும் நீடித்திருந்தன. ஜர்மனி தோற்றும் விடாப்பிடியாயிருக்கின்றது. ஏப்பிரல்மீ 1உ யிலே பாரிஸ் நகரத்திலிருப்போமென்று சாதித்தது பொய்த்துப்போயிற்று; அவ்வாறு சாதித்த ஜர்மன் தளகர்த்தனும் வியாதிப்பட்டு உத்தியோகம் நீங்கிக் கிடக்கிறான். இதுவரைக்கும் ஜர்மன்கள் மூன்று பெரிய படையெடுத்திருக்கிறார்கள். ஒன்று மார்ச்சிமீ த்திலே, ஒன்று ஏப்பிரலில், மூன்றாவது மேயிலே. மூன்றும் அனர்த்தமாய் முடிந்தது. லட்சாதி லட்சம் போர்வீரரை யமனுக்குக் கொள்ளைகொடுத்து, 4, 5 மைல் நீளம் முன்னுக்குச் சென்றார்களேயன்றி, யாதொரு ஜெயமாகிலும் பலனாகிலும் அடையவேயில்லை. முன்னிலும் இப்பொழுது அதிகமாய் க்ஷீணித்துப்போயிருக்கிறார்கள். அவர்கள் நாட்டிலே புருஷர் குறைவும், உணவுக் குறைவும், திரவியக்குறைவும் ஏராளம். சிறு பையன்களைக் கபாத் கற்பித்துச் சண்டைக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் சக்தியும் தொகையும் அதிகமாகக் குறையுமளவும், நட்பரசர் முன் செல்லாமல் தங்கள் ஸ்தானத்தைப் பாதுகாத்து வருகிறார்கள். இப்போது ஒன்றரைமாதக் காலமாக ஜர்மன்கள் பேசாமல் பதுங்கியிருக்கிறார்கள். இது பாய்ச்சலுக்குமுன்பு பதுங்கியதுபோல இன்னுமொரு கடைசிப் பிரயத்தனஞ் செய்து படையெழும்புவார்கள். அதற்கு நட்பரசரும் அமெரிக்கரும் வெகு ஆயத்தமாயிருக்கிறதால், அதுவும் வியர்த்தமாய்விடும். அப்பொழுது நட்பரசர்கள் ஜர்மனிமீது படைசென்று பெரும்போர் புரிவார்கள். அமெரிக்கர் புகலரிய உதவிபுரிந்து வருகிறார்கள். போர்வீரரும், கப்பல்களும், உணவுகளும், திரவியக் குவியல்களும் இடைவிடாமல் மழைபோல் பெய்து வருகின்றன.

இதுநிற்க, இத்தாலியர் ஆஸ்திரியரை முதுகுடைத்துப்போட்டார்கள். 2,500 போர்வீரரைக் கைதிகளாக்கி விட்டார்கள். இனி ஜர்மன்கள் ஆஸ்திரியரின் உதவியிழந்து, நடுக்காட்டில் ஒண்டி மரம்போல் திகைத்துத் தள்ளாடிக் கிடப்பார்கள். இதுவும் இனி வருகிற அபஜெயத்துக் கடையாளம். அன்றி, ஜர்மன் துறைமுகம் முற்றிலும் அடைக்கப்பட்டது. சிப்ராக் என்னும் ஊருக்கு அருகேயுள்ள துறைமுகத்தில் இங்கிலீஷ் கப்பற்சேனை ஒரு பெறும் கப்பலைக் குறுக்கே அமிழ்த்தி அதை அடைத்துவிட்டதினாலே, ஜர்மன் கப்பல்களும் சப்மெரின்களும் அதற்குள்ளே அடைப்பட்டுக்கொண்டன. இதுவுமல்லாமல், பால்ட்டிக் கடலிலிருந்தும் கப்பல்கள் வெளிப்புறப்படமாட்டாத வண்ணம் நமது கப்பல் சேனையார் 20,000 மைல் வரையும் சுரங்கங்கள் வைத்திருக்கிறார்கள். இந்த உபாயங்களினாலே ஜர்மனியின் நீர்ப்பலம் நிர்மூலமாய்விட்டது. இனி நிலத்தில்தான் போர் நடக்கும். போர் இன்னும் இரண்டு மூன்று மாதத்திலே யுத்தம் ஓய்ந்து சமாதானம் நிலைபெறுமெனக் கோருகிறார்கள். நமது நம்பிக்கையும் அவ்வாறே.

மேலெழுதியதை அச்சுக்கனுப்புமுன், நாலாம் படை யெழும்பி ஆரம்பித்துவிட்டது. குண்டுச் சண்டை வெகு பயங்கரமாக 100 மைல் விஸ்தீரணமாக நடந்து வருகிறது. நட்பரசர் எதிர்பார்த்த வண்ணமே சம்பவிக்கிறது. தெற்கே தயாராயிருக்கிறார்கள். மாதம் முடிய இன்னும் 12 நாளிருப்பதால், இதற்குள்ளே என்ன சம்பவிக்குமோ தெரியாது. முக்கியமுண்டானால், வர்த்தமானமாகத் தெரிவிப்போம்.

சென்ற சஞ்சிகையிலே எழுதியவாறு, யுத்த முடிவு ஆரம்பித்திருக்கிறது. நாள்தோறும் எதிரி தோற்றுப் பின்வாங்கி ஓடுகிறதாய்விட்டது. அமெரிக்காவிலிருந்து போர்வீரர்மாத்திரம் 30 லக்ஷம்பேர் இப்பொழுது பிரான்ஸிலிறங்கிப் போர் புரிந்து வருகிறார்கள். இனி பாரீஸுக்காவது எமியேன்ஸ் பட்டணத்துக்காவது அபாயமே கிடையாது. முன்னிருந்த யுத்த எல்லையிலிருந்து எதிரி சில விடங்களில் 30 மைலும், சிலவிடங்களிலே 50, 60 மைலுமாகப் பின்னுக்கு ஓடியிருக்கிறான். தினந்தோறும் நட்பரசச் சேனைகள் அவனைத் துரத்தினபடியே இருக்கிறார்கள். சென்ற வருஷங்களில் அவன் ஆதீனத்திலிருந்த அநேக பட்டணங்கள் பிடிக்கப்பட்டாயின. அவன் நாட்டிலே அதிக குறை முறைகள் பிரலாபிக்கப்பட்டு வருகின்றன. இம்மாதம் இதுவரைக்கும் பிடியுண்ட கைதிகள் லட்சத்துக்கதிகமான பேர்; பீரங்கிகள் மட்டும் ஆயிரத்தைந்நூறாகும். ஜர்மன் வீரர்கள் பட்டினிகிடந்து சாகிறார்கள். தூரத்திற் சிதறியிருக்கிற தம் சேனைகளையெல்லாம் சேர்த்து வருகிறார்கள். அதற்குள்ளே நமது வீரர்கள் துரத்திக்கொண்டே போகிறார்கள். ஒரு ஜர்மன்மேஜர் "இனி எம்மில் ஒன்றும் சாயாது ஜர்மனியின் இடுப்பு ஒடிந்துவிட்டது" என்று முறையிட்டானும். நமது போர்வீரர்களும், தளகர்த்தர்களும் வெகு வீரதீரமாய்ச் சண்டையை நடத்தி வருகிறார்கள். இதெல்லாம் நமது நன்றிக்குக் காரணமாயிற்று.



ஓர் கிராமம்.

# THEIR MAJESTIES' SILVER WEDDING

## நமதரசரின் 25-ம் கல்யாணம்

நமது அரசனும் அரசியும் விவாகஞ்செய்து 25 வருஷம் முடிவு பெற்றது. இந்தச் சம்பவத்தை ஆங்கிலேயர் வெள்ளிக் கல்யாணம் என்பார்கள். உலகமெங்குமிருந்தும் தம்பதிகளுக்கு வந்தனோபசாரபத்திரங்களும், எண்ணுக்கடங்காத வெகுமதிகளும் அனுப்பப்பட்டன. லண்டனிலே பெரிய உற்சவம் நடந்தது. ஜர்மன் கெய்ஸரும் ஜார்ஜ் அரசரும் விக்டோரியா மஹாராணியின் பேரப்பிள்ளைகளாயினும், இப்பொழுது கொடிய சத்துருக்களாயிருக்கிறது மிக்க துக்கமே. அரசனும் அரசியும் பெற்ற வெகுமானங்களைப் பற்பல தர்ம விஷயங்களிலே செலவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். சண்டை நிமித்தமாக மூத்த குமாரன் பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அவர்களுக்கு வயது வந்தும் இன்னும் விவாகமாகவில்லை. அவர் யுத்தக்களத்திலிருக்கிறார். அவர்களுக்குக் குமாரத்தி ஒன்றே. மற்றப் பிரஜைகளைப்போலவே ராஜகுடும்பத்தாரும் உணவு விஷயத்தில் கண்டிப்பாயிருந்து, யாதொரு மனுஷரும் அரண்மனைக்குள் பிரவேசியாமல் காத்து வருகிறார்கள். கடவுளாசீர்வாதம் அவர்களுக்கு உண்டாகுக.



# SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

அதன்பிறகு எங்களைச் சுற்றிலும் ஒரு கூட்டமான ஜனங்கள் உட்கார்ந்தார்கள், அவர்களைப் பார்த்தவுடனே ஹெபிக் பேச ஆரம்பித்து, அவர்கள் கிறிஸ்துவுக்குள் எப்படி நிலைத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி விசாரித்தார். பிறகு ஹெபிக் தம்முடைய சட்டைப் பையிலிருந்து ஒரு புதிய ஏற்பாடு புஸ்தகத்தை எடுத்து, அதிலிருந்து சில பாகத்தை வாசிக்கிறேன் என்று சொல்லி, வாசித்தபிறகு ஜெபம் செய்ய முழங்கால் ஊன்றி அவர் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது, அந்தக் கூட்டத்தாரில் சிலர் அந்த அறையைவிட்டுப் போய்விட்டார்கள். ஆனாலும் அவர் அதைக்குறித்து இலக்ஷியம் செய்யாமல் அதிக ஊக்கத்தோடே அவர்களெல்லாருக்காகவும் ஜெபம் செய்தார். நாங்கள் அந்த துரையினுடைய வீட்டில் பிரவேசிக்க ஹெபிக் எப்படி உத்திரவு பெற்றார்? அந்த மாளிகையின் சொந்தக்காரராகிய துரை நாங்கள் நிற்கும் அந்த சிகரத்திற்கு வந்தவுடன் அவருடைய கண்களுக்கு முன்பாகயிருக்கும் சிறந்த தோற்றங்களை யெல்லாம் அவருக்குக் காண்பித்து அவரிடம் அதிக மரியாதையாய் சொன்னதாவது, "நீர் இந்த இடத்தில் எவ்வளவு அழகான திருஷ்டியை உடைத்தாயிருக்கிறீர், உமக்குமுன்னாலே பசுமை நிறமான குன்றும், அதற்கப்பாலே பனியினால் மூடப்பட்டு அழகுபொருந்திய ஒரு மலையும், உம்முடைய பாதத்தினடியில் எவரும் இச்சிக்கப்படத்தக்க ஒரு கீர்த்தியான ஏரியுமிருக்கிறது. ஆனால் என் நண்பரே! மரணத்திற்கு பிறகு இந்த மகிமைகள் எல்லாம் உம்முடைய திருஷ்டிக்கு வரும்போது என்னசொல்லுவீர்? மரணத்திற்கப்பால் நீர் பார்க்கப்போகிற தோற்றம் எப்படிப்பட்டதாயிருக்கும்" என்றார். அதற்கு அந்த துரை எங்களைப்பார்த்து "நானும் கிறிஸ்தவன்தான் இந்த நாள் என் வீட்டில் வந்திருக்கிற விருந்தினர் எல்லாருக்கும் ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் வரும்படி நான் ஜெபித்துக்கொண்டிருந்தேன்" என்றார். நாங்கள் அந்த வீட்டை விட்டபோது அந்த கனவான் ஹெபிக்கைப்பார்த்து "நீர் எங்களுடைய வீட்டிற்குவந்து சத்தியவேதத்தை வாசித்து எங்களுக்காக ஜெபம் செய்ததற்கு அதிக வந்தனத்தை செலுத்துகிறேன்" என்றார். காலேஜியை மேல்பார்வையிடுகிறவராகிய புளும் ஹார்ட் என்பவர் பேசல்மிஷனை இந்தியாவில் ஸ்தாபிதம் செய்ய வேண்டுமென்று சிலரோடு ஆலோசனைசெய்ய இங்கிலாந்துதேசம் போய் இருந்தசமயத்தில், 1833-ம் வருஷம், ஆகஸ்ட்மீ 2உ பட்டணத்து ஜனங்களுக்கும், பேசல்பட்டணத்திற் கருகாமையிலுள்ள ஜனங்களுக்கும் ஒரு மும்முரமான யுத்தம் நடந்தது. அந்த சமயத்தில் மாணாக்கர்களில் சிலர் சுயேச்சையாய் பட்டணத்து இரணவைத்தியர்களோடுசேர்ந்து போர்க்களத்திற்குப் போய் அங்கு காயப்பட்டவர்களுக்கும் மரணத்தருவாயி லிருக்கிறவர்களுக்கும் தங்களால் இயன்றமட்டும் உதவி புரிந்தார்கள். ஏராளமான குண்டுகள்பாய்ந்த அந்த இடத்திலிருந்து அடுத்தநாளே இவர்கள் எல்லாரும் யாதொரு அபாயமில்லாமல் சுகமாய் வீடுவந்து சேர்ந்தார்கள். அந்தசமயம் பேசல்பட்டணம் அதிக அபாயத்திலிருந்தது. சுவிட்ஸர்லாந்து, பேர்ன் முதலிய இடங்களிலிருந்து வீரர்கள் வந்து பேசல் பட்டணத்தில் தங்கியிருந்தார்கள். இந்த சம்பவத்தால் ஹெபிக் அங்குவந்திருந்த சிப்பாய்களைக்காணவும் அவர்களுக்கு இயேசுவின் அன்பைப்பற்றிச் சொல்லவும் தகுந்த சமயம் கிடைத்தது. வீரர்களின் தலைவனாகிய ஒருவன் நிக்கொதேமைப்போல் ஒரு நாள் இராத்திரி ஹெபிக்கைப் பார்க்கவந்தான்.

அந்தத்தலைவன் ஹெபிக்குடன் பேசி கொஞ்சநேரத்திற்குள்ளாக இயேசுவை தன் ஆத்தும மீட்பராக அறிந்துகொண்டான். அப்போதிருந்து அவன் இயேசுவை மற்ற ஜனங்களுக்குமுன் அறிக்கை செய்ய வெட்கப்படவில்லை.

மேல்விசாரணை அதிகாரியாகிய புளும் ஹார்ட் இங்கிலாந்து தேசத்தைவிட்டு திரும்பிவருகையில் ஒரு நல்ல சமாச்சாரத்தைக் கொண்டுவந்தார். ஈஸ்ட் இந்திய கம்பெனிக்காரர், அன்னியநாட்டு மிஷனெரிகள் சுவிசேஷத்தை இந்தியாவுக்குள் கொண்டுவாராத வண்ணமாய் இந்நாட்டை அடைத்துவைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ ஐரோப்பியரெல்லாரும் இந்தியாவில் பிரவேசிக்கவும், இந்நாட்டில் அவர்கள் பூஸ்திதிகளை வாங்கவும் வைக்கவும் நியாயமுடையவர்களென்று பார்லிமெந்து சபையார் ஈஸ்ட் இந்திய கம்பெனியாரோடு 1833-ம் வருஷத்தில் உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொண்டார்கள். இங்கிலாந்துதேசத்திலுள்ள ஜனங்களின் பெரும்பான்மையோருக்கு இந்தியாவில் சுவிசேஷ பிரபல்லியம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் அதிகரித்திருந்தபடியால்; இந்நாட்டில் மிஷன் ஸ்தாபிதங்களுக்கு என்னென்ன தடைகள் நேரிடுமோ, அத்தடைகளை யெல்லாம் நிவிர்த்திக்கும் பொருட்டு அந்த சமயங்களில் அரசாங்கத்தாரை அதிகமாய் நெருக்கினார்கள். கிறிஸ்து மார்க்கத்திற்கு கிடைத்த இந்த ஜெயத்திற்காக அந்த மாணாக்கர்கள் எல்லாரும் புளும் ஹார்ட் துரையோடு அதிக சந்தோஷப்பட்டார்கள்.

இந்த விஷயத்தால் அநேக மிஷனெரி சங்கங்கள் உள்ளே நுழையவும் நிலபலன்கள் வாங்கவும் அநுகூலமானதோடுகூட, ஹெபிக் என்பவரும் இந்நாட்டின் மேல்பாகக் கரைக்கடுத்த ஜனங்கள் மத்தியில் இருபத்தைந்து வருஷகாலமாக ஆண்டவருக்கு ஊழியஞ்செய்ய வழி ஏற்பட்டது. இந்த சட்டம் பிறக்கிறதற்கு முந்தி பிரிட்டிஷ் பிரஜைகள் மட்டும் சுவிசேஷத்தை இந்தியாவில் பிரசங்கிக்கலாம். இப்போதோவென்றால், அமெரிக்கரும், ஜெர்மானியரும், மற்ற எல்லா ஐரோப்பியரும் இந்தியாவுக்குள் தாராளமாய்வந்து அந்நாட்டை இயேசுவுக்கென்று ஆதாயப்படுத்தக்கூடும்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

# MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. போவான் ஐயர் மொழிபெயர்த்தது

யாத்திரைக் காண்டம்

ஓர் காலத்தில் கொல்கதாவில் மரித்து, இப்போது வானத்தில் வீற்றிருக்கும் இரட்சணமூர்த்தியைக் கண்டுபிடிக்க விருதாவாய் அலைவார்கள். இன்னுஞ் சிலர் பரதீசைக் கைப்பற்றிக்கொள்ள, ஏழைகளின் உடைமைத் தரித்து பற்பல ஊர்களிற் சென்று பேதுரு என்பவர் வானத்தின் திறவுகோலைப் பிடித்திருக்கிறவரென்று சாதிப்பார்கள். ஆம் அங்கிகள், சால்வைகள், உடைகள், மரித்தவர்களின் எலும்புகள், பயணங்கள், பாவமன்னிப்புச் சீட்டுகள், பாரம்பரை நியாயங்கள், கட்டளைகள் முதலியவைகளில் புண்ணிய மிருக்கிறதென்றெண்ணி அநேகரை வஞ்சித்துக் கெடுதலைசெய்வார்கள். மேற்சொல்லியவைகள் இனி காணப்படுவதால், இவ்வுலகம் மூடர்களின் பரதேசியாகிவிடும். ஆனாலிப்போது ஜனசஞ்சாரமில்லாத வெறுமையான விடமாயிருந்தது. இவ்விருண்ட பூமியின் பகுதிகளெல்லாவற்றையும் இச்சூரான் கவனத்துடன் பார்த்துப்போகிறான். இவ்வாறு அவன் அங்குமிங்குமலைந்து திரிந்துகொண்டிருக்கையில் பொழுதுவிடியுஞ் சமயமாயிற்று. வெளிச்சத்தைக் கண்ட நிமிஷத்தில் அதி தீவிரத்துடன் திரும்பியோடினான்.

### 9. ஏணியைக்காண் படலம்

வேதாளம் இவ்வாறு ஓடிவருகையில், வானத்தை தொட்டுக்கொண்டிருந்த வேறோர் உன்னத கட்டிடத்தையும் அதற்கு ஏறிப்போகும்படி வைத்திருந்த ஓர் ஏணியையுங் கண்டான். அநேக படிகளையுடைய அவ்வேணியின் உச்சியில் மிகச் சிறந்ததும் ஒப்பற்ற அழகை யுடையதுமான வாசல் ஒன்றிருந்தது. அவ்வாசல் நிலையில் இரத்தின கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. தங்கமயமாய் பிரகாசித்தது. எந்த சிற்பசாஸ்திரியும் தனது கீர்த்தியான கருவியினால் வரையக்கூடாத சித்திர வினைகங்களினாலும் லட்சண எழுத்துக்களினாலும் அலங்கரிக்கப்பட்டதாயும் சிறந்த வேலைப்பாடுள்ளதாயு மிருந்தது. யாக்கோபு ஏசாவுக்குப் பயந்து பதான் அராமிலிருந்து ஓடினபோது தரிசன சகிதமாய் வானத்தின் தூதர்கள் ஏறுவதையு மிறங்குவதையும் பார்த்து இது வானத்தின் கதவென்று சொன்ன ஏணியின் படிகளைப்போல இருந்தது. ஆயினும் ஒவ்வொரு படியும் நிலையற்றதாயும் மிகுந்த இரகசிய சகிதமுள்ளதாயு மிருந்தது. சில சமயங்களில் அப்படிகள் வானத்துக்குள் ளிழுத்துக்கொள்ளப்படுவதினால் கண்களுக்கு விஷயமாகாம லிருந்தன; அவ்வேணியின் அடிவாரத்தில் பளிங்குபோன்ற ஓர் கடல் நின்றுகொண்டிருந்தது, அக்கடலின் ஜலம் மரகதம், வைடூரியம், புஷ்பராக முதலிய கற்களின் நிறக்கலப்புடைப்பதுபோலவு மிருந்தது. பிற்காலத்தில் அக்கடலின் வழியாய், யாத்திரைசெய்து, அக்கினி ரதங்களிலும் ஏறி தூதர்களால் மோட்சகரை சேர்த்தவர்களுமுண்டு. மேலும் இப்படிகள் கீழே தொங்கவிடப்பட்டன, ஓர்வேளை இப்படிகளில் சாத்தான் துணிந்து ஏறுகிறானோவென்றறியும் படிக்காவது அல்லது அவன் புறக்கணிக்கப்பட்டிருப்பதை நன்றாய் உணர்த்தும்படிக்காவது அப்படி செய்திருக்கலாம். அப்படிகளின்கீழ் நேராய் பரதீசுக்குச் செல்ல ஓர் பாதையிருந்தது, தேவதூதர்கள் உத்தமர்களாகிய ஆதித்தாய் தந்தைகளைப் போய் பார்க்கவும், விசாரிக்கவும், அவ்வழியால் போக்குவரவு செய்துகொண்டிருந்தார்கள்.

மேற்சொல்லிய பாதை, பீர்சேபா, எகிப்து, அரபி முதலிய விடங்களை அடக்கிக்கொண்டிருந்தமையால் விரிவான வழியாயிருந்தது. இவ்வெல்லைகளுக்கப்பால் இருளிருந்தது. சாத்தான், வானத்துக்கும் பூமிக்கும் மத்தியிலிருந்த இந்த பொன்மயமான ஏணியின் கடைசிப் படியின்மீது நின்று இவ்வுலக மனைத்தையும் ஓர் நிமிஷத்தில் பார்த்து மிகவும் அதிசயித்தான். ஓர் இராமுழுவதும் விஸ்தீரணமான இருண்ட வனாந்தரத்தில் அலைந்த ஓர் மனுஷன் அதிகாலையில் ஓர் மலையின் உச்சியிலேறி ஓர் தேசத்தையாவது அல்லது மாடமாளிகைகளையுங் கூடகோபுரங்களையும், உயர்ந்த உப்பரிகைகளையுமுடைய ஓர் ராஜதானிப் பட்டணத்தையாவது பார்த்தால் எவ்வாறு சந்தோஷிப்பானோ அவ்வாறே சந்தோஷித்தான். இவன் ஓர்காலத்தில் வா

னுலக மகிமைகளைப் பார்த்திருந்தும் இப்பூவுலகின் அழகை அபரிமிதமாய் இச்சித்தனன். அதின் வடமூலை தொடங்கி தென்மூலை மட்டுக்கும் அத்லாந்திக் பசிபிக் சமுத்திரங்கள் அடங்கிய விஸ்தீரண விடங்களையும் பார்த்தான். இதுவுமன்றி நீல்வர்ணமான ஆகாயமண்டலத்தை ஊடுருவி அனேக நட்சத்திரக் கூட்டங்களையும் பார்த்தான். நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உலகம்போலும் ஆகாயமண்டலத்தில் திட்டுகளைப்போலவும் பூங்காவனத் தோட்டங்களைப்போலவுந் தோன்றின. அவைகளைப்பற்றியாவது அல்லது அவைகளில் வாசம்பண்ணும் பிராணிகளைப்பற்றியாவது யாதேனும் ஆராய்ச்சி செய்யாமல் பறந்தோடினன்.

## 10. சூரியமண்டலஞ்சேர் படலம்.

இப்போது சூரியமண்டலத்தைக் கிட்டிச்சேர்ந்தனன்: பொன்னிறமான கிரணங்களையுடைய ஆதித்தனுக்கு நேராகவே சென்றனன். இப்பகலோன் மத்தியஸ்தானத்திலிருந்து நட்சத்திரமண்டல மனைத்துக்கும் பிரகாசத்தைக் கொடுத்தது. அன்றியும் பெரிதுஞ் சிறிதுமான கிரகங்களும் உபக்கிரகங்களும் அதைச்சுற்றி யோடிக்கொண்டிருந்தன. அவ்வாறு ஓடுவதினால் நாட்கள் மாதங்கள் வருடங்கள் முதலிய கால வகுப்புகளைத் திட்டமாய்க் கணக்கிடவும் ஏதுவாயிருந்தது. ஒவ்வொரு கிரகத்தின் ஒவ்வொரு பாகத்திற்கு சூரியகாந்திகள் சென்றமையால் வெப்பமும் வெளிச்சமும் எங்கும் பரவி, சமஸ்தத்தையும் உயிர்ப்பித்தன. ஒரே வார்த்தையாக ஞாயிறு, உன்னதமான விடத்திலிருந்து சமஸ்தத்தையும் ஆண்டுகொண்டதால் அவைகளுக்கோர் அரசனைப்போல விருந்தது. இவ்வித மாட்சிமை தங்கிய விடத்தில் தங்கினன். வானசாஸ்திரிகளுந் தங்களின் தூரதிருஷ்டி கண்ணாடியில் இப்பேய்ச்சூரன் கண்ட காட்சிகளைக் காணவில்லை. எங்கும் ஒரு கண்டசிராக யிராவிடினும், சமஸ்தமும் ஜெகஜ்ஜோதியாக விளங்கியிருந்தது. இது உலகமென்று சாதித்தால் நிச்சயமாகவே அதின் ஓர் பாதி தங்கத்தினாலும் மற்றொருபாதி வெள்ளியினாலும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

அல்லது நவரத்தினகற்களென்றால் பூமியில் அவைகளுக்குச் சமமானவைகள் யாதொன்றுமில்லை. இரும்பும் அக்கினியோடு எரிந்து பிரகாசிக்கும் வண்ணமாயிருந்தது. கோமேதகம், புஷ்பராகம், சுவர்னரத்தினம், வைடூரியம், பத்மராக முதலிய கற்களின் ஜோதிப்பிரகாசத்திலும் மீசுரமாயும், ஆரோனின மார்ப்பதக்கத்தில் பதிக்கப்பட்டிருந்த பன்னிரண்டுகெற்களின் சுடர்களையுடையதாயுமிருந்தது. இவைகளின் மகத்துவத்தை கண்களினால் பார்த்தரியகூடாம லிருந்ததுபோல மனோ சக்திக்கும் எட்டாததாயுமிருந்தது. இதற்கொப்பான கற்களைக் கண்டுபிடிக்கும்படி சாஸ்திரிகள் விருதாவாய் பிற்காலத்தில் பிரயாசைப்பட்டார்கள். பூர்வீகத்தார் தங்கள் வித்வ சாமார்த்தியத்தால் மகாபலத்த இராட்சதனாகிய எர்க்கிலேயுஸ் என்பவனையும் பிடித்துக்கொண்டனர். பலவர்ணத்தை பூண்ட புரோட்டியுஸ் என்பவனின் சுயநிறத்தையுங் கண்டுபிடித்தனர். ஆனால் இவ்விதக் கல்லை கண்டுபிடிக்கவில்லை, காரியமிப்படியிருக்க சூரியகிரணங்கள் பூமியின்மீதுபடும்போது அதில் அவிழ்தங்களுக்குதவும் செடிகளும் பூண்டுகளும் முளைக்கிறதையும் ஆற்றின்ஜலம் வெள்ளிக்கொப்பாய் மினுங்குகிறதையும் பார்த்ததிசயிக்க வேண்டுவதென்ன? ஆம் இருள்நிறைந்த இப்பூமியில் சூரியகாந்திகள் தினந்தோறும் வீசுவதினால், கண்களை பகட்டத்தக்க வானங்களையும் அரிதான வல்லமைகளையுடைய வஸ்துக்களையும் நாம் அவசியமாய்க்காண்போம். இவ்விடத்தில் நவமும் நூதனமுமான காரியங்களை பார்க்கும்பொருட்டு பசாசானவன் கண் கூசாமல் நின்றான். அவன் கண்கள் அனேகயோசனை தூரஞ் சுழன்றுகொண்டுவந்தன. ஆயினும் அவன்காட்சிக்கு யாதொன்றும் விஷயமாகவில்லை. நிழலைக்காண்பதரிதாயிருந்தது. மத்தியானமாயும் சூரியகிரணங்கள் செங்குத்தாய் விழுந்தமையால் விருத்தவடிவான நிழல் எப்பொருளுக்கு மில்லாதிருந்தது. ஆகாயம் மப்புமந்தாரமின்றி தெளிவாயிருந்தபடியினால் தொலைதூரத்திலுள்ளவைகளையுங் கண்டான்.

## 11 தூதனைக்காண் படலம்.

இப்படிச் சாத்தான் சூரிய மண்டலத்திலுள்ளவைகளை உற்றுப்பார்க்குந் தருணத்தில், சடுதியாய் வானுலகத் தூதர்களிலொருவனை அவ்விடத்திற் கண்டு பிரமிப் படைந்தான். அவ்வித தூதனை யோவான் அப்போஸ்தலன் ஒரு சமயத்தில் சூரியனிற் கண்டபோது அத்தூதன் ன்முகம் திரும்பியிருந்ததாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் அவன் பிரகாசமோ எவ்வளவேனுங் குன்றாமலிருந்தது. கிரணங்களினால் சோடிக்கப்பட்ட ஓர் பொற்கிரீடம் அவன் சிரசின்மீது வைக்கப்பட்டிருந்தது. அவனுடைய முடியில் மகத்துவசகிதமான முத்துக்களிருந்தன. அவனிரு புஜங்களிலிருந்து செட்டைகள் புறப்பட்டு அசைவாடிக்கொண்டிருந்தன. இத்தூதன் ஆழ்ந்த யோசனைசாலியைப்போலவும், ஓர் முக்கிய வேலையை நடத்த வருகிறவனைப் போலவுங் காணப்பட்டனன். இவனை அசுத்தாவியாகிய பசாசானவன் கண்டவளவில் ஒருவாறு சந்தோஷித்தான். மனிதன் வசிக்கும் பரிசுக்கு தன்னை நடத்தத்தக்க ஒரு ஆள் அகப்பட்டனன் என்று எண்ணமுற்று அவனண்டைக்குக் கிட்டிச்சேர்ந்தான். ஆம் இப்போதுதான் மானிடசாதியின் நிர்ப்பாக்கியம் தொடங்குகிறதென்று சொல்லலாம். முதலாவது தன் சுயவடிவை மாற்றவேண்டுமென்றும் மாற்றுவிடின் தனக்கு மோசமும்தான் முடிக்கவேண்டிய காரியத்தில் தாமதமு முண்டாகுமென்று நினைத்து, ஓர் பாலிய சேராபினைப்போல வேஷம் பூண்டுகொண்டான். அவன் பாலியனல்லாவிடினும், அவனுடைய முகத்தில் தூதபாலிய தத்துவம் விளங்கிற்று. சிரசை புஷ்பங்களினால் சோடித்தனன். தலைமுடிகள் பறந்துகொண்டிருந்தன. இரு கன்னங்களிலும் மயிர்ச்சுருள்கள் தொங்கிக்கொண்டிருந்தன. பொன்னிற சகிதமான பலவர்ணங்களையுஞ் சொலிக்கின்ற ரெக்கைகளையும் அணிந்துகொண்டான். அவன் தரித்தவேஷம் துரிதமாய் ஓடுவதற்கனுகூலமாயிருந்தது. தன் கையிலோர் வெள்ளித்தடியைப் பிடித்துக்கொண்டு சப்தமின்றி சென்றனன். வானதூதன் கிட்டிவருமுன்னமே ஒளிவேஷம் தங்கிய தன் முகத்தை அவனுக்குநேராகத்திருப்பிக்கொண்டு ஆயத்தமாகநின்றனன். தட்சணமே இத்தூதன்தேவசன்னிதானத்தில் எப்போதும் நின்று அவருடைய உத்தரவுக்குக் காத்துக்கொண்டிருக்கும் ஏழுதூதர்களி லொருவனாகிய யூரியேல் என்று சந்தேகமின்றி அறிந்துகொண்டான். மேற்சொல்லிய ஏழுதூதர்களும் கடவுளானவருக்கு ஏழுகண்களுக் கொப்பானவர்கள். அவருடைய உத்தரவுகளை சமஸ்த விடங்களுக்குங் கொண்டுபோகும்படிக்கு அவருடைய சிங்காசனத்தண்டையில் காத்திருப்பதே அவர்களுடையவேலை. இவ்வித உன்னத விடத்திலிருந்து வருகின்ற தூதனுடன் சாத்தான் துணிந்து பேசுகிறான்.

(இன்னும் வரும்.)

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DEPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| கிறிஸ்துவில் நிலைத்திரு .. .. | 0 | 8 | 0 |
| ஆடவர் கும்மி .. .. .. | 0 | 1 | 0 |
| கிரணமாலிகை .. .. .. | 0 | 6 | 0 |
| அருளாகமமும், ஆதிசின்னங்களும் .. | 0 | 2 | 0 |
| வேதாகம பிரசித்த விர்த்தாந்தம் .. | 0 | 8 | 0 |
| சந்திரலீலாள் .. .. .. | 0 | 2 | 0 |
| பிள்ளைகளும் சபையும் .. .. | 0 | 2 | 0 |
| புதிய ஞானப்பாட்டுகள் பெரியது .. | 0 | 4 | 0 |
| ,, சிறியது .. | 0 | 3 | 0 |
| ஞானகீதங்கள் பெரியது .. .. | 0 | 10 | 0 |
| ,, சிறியது .. .. | 0 | 4 | 0 |
| ,, ஓர் அணா புஸ்தகம் .. | 0 | 1 | 0 |
| பாலர்ப் பாட்டுகள் .. .. .. | 0 | 1 | 0 |
| ஞானப்பாட்டுகளும், ஞானகீதங்களும் ஒன்றாய் சேர்த்துக் கட்டினது .. | 0 | 12 | 0 |
| சிலுவைத் திருவாசகம் .. .. | 0 | 1 | 0 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் .. .. | 0 | 4 | 0 |
| ,, எபிரேயர் நிருப வியாக்கியானம். | 0 | 12 | 0 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் .. .. .. .. | 0 | 8 | 0 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் .. | 0 | 3 | 0 |
| திருச்சபை சரித்திரம் .. .. | 1 | 4 | 0 |
| மாதர்கும்மி .. .. .. | 0 | 1 | 0 |
| காலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| மாலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் .. | 0 | 14 | 0 |
| சற்குரு சதகம் .. .. .. | 0 | 1 | 6 |
| கெட்டகுமாரன் சரிதை .. .. | 0 | 0 | 9 |
| ஆத்தும விபசாயம் .. .. .. | 0 | 1 | 6 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம் .. .. | 0 | 2 | 0 |
| மூதேவி சீதேவி வீடுகள்: ஓர் கதை .. | 0 | 1 | 0 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது) .. .. .. | 0 | 14 | 0 |
| திருப்போர் (Holy War) புதுப் பதிப்பு .. .. .. .. | 0 | 12 | 0 |
| நேச அழைப்பு .. .. .. | 0 | 1 | 0 |

☞ தபால்கூலி வேறே.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர், கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—1918.



Registered No. M. 442.

सत्यमेव जयति
THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

OCTOBER, 1918. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. அக்டோபர்மீ, 1918.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**துணிவிலை.**—இது அநியாய விலையாய் விற்கிறது. ஏழைகளுக்குப் பெருத்த கஷ்டமாகையால், கவர்ன்மெண்டாரே சாதாரண சேலைகள், வேஷ்டிகளை விலைக்குவாங்கி ஏழைகளுக்கு தர்மமான விலைக்கு விற்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

**போர்வீரர்.**—நமது ராஜதானியிலே நாளதுவரையும் 6,000 புதுப்போர்வீரர் சேர்ந்திருக்கிறார்கள். இதிலே அரைவாசி மாத்திரம் படைவீரர், மற்றவர்கள் தொழிலாளிகளாம். வேறே அனேக ஆயிரமானபேர் மொசொப்பொத்தேமியாவுக்குப் போயிருக்கிறார்கள்.

**உந்நம சங்கத்திலே.**—இந்தியர் துப்பாக்கி முதலிய ஆயுதங்களை உபயோகிக்கத் தகுமென்றும், இந்தியருக் கிஷ்டமானவரைக்கும் ஒருஜாதி இன்னொரு ஜாதியுடன் இனங்கலந்து கல்யாணஞ் செய்துகொள்ளலாமென்றும் இரண்டு மெம்பர்கள் ஏற்பாடுதொடங்கி யிருக்கிறார்கள்.

**யுத்தநிதி.**—இந்தியா 30 கோடி சேகரம் செய்யவேண்டுமென்று மாத்திரம் எதிர்பார்த்தார்கள். ஆனால் 46 கோடிக் கதிகமாகச் சேகரமாயிருக்கிறது. சென்னை ராஜதானி தொகையிலே 3-வது. முதல் பங்காளம், இரண்டாவது பம்பாய், பிற்பாடு சென்னை, ஒருவேளை புதுவரியும் போட நேரிடும்.

**பாஸ்ரா ஜுரம்.** — இந்த ஜுரம் பாஸ்ராவிலிருந்து பிரயாணிகளால் இங்குக் கொண்டுவரப்பட்டு தேசமெங்கும் பரவி அனேகரைக் கொன்றது மன்றி, உயிர் போகாதபேருக்கு வேறு அனந்தம் கெடுதிகளெல்லாம் செய்திருக்கிறது. அனைவரும் தண்ணீரைக் கொதிக்கவைத்துச் சாப்பிடவேண்டும்.

**ஐ. சி. எஸ்.**—இந்தக் கலெக்ட்டர் வகுப்பிலே இவ்வருஷம் மூன்றிலொருபங்கு இந்தியரிலிருந்தே தெரிந்தெடுக்கப்படுமென்று பெரிய கவர்ன்மென்டார் தீர்மானஞ் செய்திருக்கிறதாகப் பிரஸ்தாபம். இது நிஜமாயின், இவ்வருஷம் 200 இந்தியருக்குக் கலெக்ட்டர் உத்தியோகம் கிடைக்குமாம். இது வாக்குச்செய்த திருத்தங்களில் ஒன்று.

**விசேஷ காங்கிரேஸ்.** — சென்ற ஆகஸ்டுமீ 28௳ முதல் செப்டெம்பர்மீ 2௳ வரைக்கும் ஒரு ஸ்பெஷல் காங்கிரெஸ் நடந்தது. அதில் மகமதியர் தவிர மற்றவர் எல்லாரும் கூடி பல தீர்மானங்கள் செய்தார்கள். வாக்குச் செய்திருக்கிற திருத்தங்கள் போதாது இன்னும் பல திருத்தங்கள் அவசியம் என்பது அவற்றின் கருத்து.

**பிரைமெரி கல்வி.** — இந்தக் கல்வி மிகச் சொற்பமானதால் இந்துதேசம் முழுவதும் இது நடந்தேறவேண்டுமென்று பெரிய கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். நூறுபேரில் 12 பேர் மாத்திரம் யெழுத வாசிக்கத் தெரிந்திருக்கும் இழிவுபோய், நூறுபேரில் 88 பேருக்கு எழுத்து வாசனை உண்டாயிருப்பதே உத்தமம். மற்ற 12 பேர் குழந்தைகளாகும். அனேக சிறு ராஜ்யங்களிலும் இப்படியே நடக்கிறது.

**அமெரிக்கர் உபகாரம்.**—இதுவரையும் அமெரிக்கர் நட்பரசருக்கு உதவிய திரவியமட்டும் 8 பில்லியன் டாலர். ஒரு பில்லியன் கொண்டது ஒரு மில்லியன் மில்லியனும். எண்ணில் 1,000,000,000,000 என்றெழுதவேண்டும். ஒரு டாலர் 3 ரூபாயானால், 8 பில்லியன் டாலர் இத்தனை ரூபா யென்று கணித்துக்கொள்ளலாம். இதுபோக, அவர்கள் அனுப்பும் உணவும், வெடிமருந்தும், கப்பல்களும், யுத்தாயுதங்களும் இத்தனையென்று கணக்கிடமுடியாது. அவர்கள் அனுப்பிவரும் சேனை 1 கோடியே 30 லட்சமாம்.

**டிராம்வே சச்சரவு.**—டிராம்வே வேலைக்காரர் எல்லாரும் கட்டுமனஞ் செய்துகொண்டு, சம்பளத்தில் ஒவ்வொருத்தருக்கும் 5 ரூ. கூட்டிக்கொடுத்தாலன்றி வேலைக்கு வரமாட்டோமென்று கடிதம் அனுப்பியும், யாதொரு விடையும் பெறாமையால், ஒருநாள் காலையிலே அனைவரும் நின்றுவிட்டார்கள். பட்டணத்தில் சங்கடம் பெரிதாய்விட்டது. அனேகர் ஆபீஸுக்குப் போகாமலும், நேரம் தப்பிப் போகவும் நேர்ந்துவிட்டது. கம்பெனிக்குத் தினம் 3,000 ரூ. நஷ்டமாயிற்று. சிறிது உயர்ந்த வேலைக்காரரைக் கொண்டு சில வண்டிகள் ஓட்டி வந்தும், பிரயாணிகள் சங்கடம் நிவர்த்தியாகவில்லை. மானேஜர் இங்கிலாந்திலிருக்கிற அதிகாரிகள் அநுமதியின்றி ஒன்றும் செய்ய ஏலாதென்றார். தந்தி இந்நாட்களில் போய்வர முன்போல இரண்டுமணி நேரமல்ல. இரண்டுவாரஞ் செல்லுகின்றது. ஆயினும், ஆளுக்கு 3 ரூ. கூட்டிக்கொடுக்கிறதாக வாக்குத்தத்தஞ்செய்ய, ஆள்கள் எல்லாரும் ஏகோபித்து வந்தார்கள். இந்தக் கஷ்டகாலங்களில் கூலியாட்களுக்கும், தாழ்ந்த உத்தியோகஸ்தருக்கும் போதுமான சம்பளம் கொடுப்பதே தர்மம்.

**சென்னையிற் கொள்ளை.** — அரிசி முதலிய உணவுப் பதார்த்தங்களை அக்கிரம விலையாய் விற்றதின் நிமித்தம் ஆயிரம் பதினாயிரம்பேர் கூடிக் கடைகள் ஷாப்புகள் எல்லாவற்றையும் கொள்ளையடித்து, சாமான்களைத் தாறுமாறாக நடுத்தெருவில் இறைத்து வழிப்போக்கர் தமக்கிஷ்டமின பிரகாரம் எடுத்துக்கொள்ளவும், கள்ளு, சாராயங்களைக் குடித்துவிடவும், செய்துவிட்டார்கள். போலீசார் அவர்களைத்தடுத்து நிறுத்தமுடியாமையால், சிப்பாய்களைத் துப்பாக்கியுடன் கோட்டையிலிருந்து வரப்பண்ணினார்கள். சென்னப்பட்டணம் முழுவதும் இந்தக் கொள்ளை இரண்டுநாளாக நடந்தது. அநியாய விலையைச் சரிபடுத்தும்படி கவர்ன்மெண்டார் முன்னதாகவே ஒரு முயற்சியும் செய்யவில்லை ஏழை எளியவர்களை இப்படிப்பட்ட கஷ்டகாலங்களில் காப்பாற்றுவது தகப்பன்மாராகிய சர்க்காரின் கடன். குறைந்தது ரூபாய்க்குக் கால் ரூபாய் லாபத்துக்கதிகம் சம்பாதிக்க எப்படிப்பட்ட வர்த்தகனுக்கும் இடங்கொடுக்கலாகாது. அதிக லாபத்துக்கு விற்கிறவர்களைத் தக்கபடி தண்டிக்கவேண்டும். சேலைகள், வேஷ்டிகளை ஒரு ரூபாய்க்கு மூன்று நான்கு லாபம் வைத்துக்கொண்டு விற்கிறார்கள். இந்த

**அக்டோபர்மீ பஞ்சாங்கம்.—**

| வாரம். | அக்டோபர்மீ = புரட்டாசி—ஐப்பசி, ● அமாவாசை, 4௳ ⊙ பௌர்ணமி, 19௳ | | | | | புரட்டாசி—ஐப்பசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 20 | 27 | 4 | 11 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 21 | 28 | 5 | 12 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 15 | 22 | 29 | 6 | 13 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 16 | 23 | 30 | 7 | 14 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | 31 | 17 | 24 | 1 | 8 | 15 |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 18 | 25 | 2 | 9 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 19 | 26 | 3 | 10 | ... |

அக்கிரமங்களை அதிகாரிகள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கலாமா?

அமெரிக்காவில் சீர்திருத்தம்.—அமெரிக்கா, அதாவது யூனெட்டெட் ஸ்டேய்ட்ஸ் என்கிற பெரிய ராஜ்யம் முழுவதிலும் எந்தவிதமான கள்ளு, சாராயங்கள் செய்யப்படவும், விற்கப்படவும் கூடவே கூடாதென ஒரு முக்கிய சட்டம் ஏற்பாடாய் விட்டது. இதனால் உண்டாகப்போகும் அரும்பெரும் லாபத்தை வாயால் சொல்லவும் முடியாது; மனதால் கிரகிக்கவும் முடியாது. சர்க்காருக்குச் சிறிது நஷ்டமாயிருந்தும், குடிகளுக்குச் சொல்லமுடியாத நன்மைக்குக் காரணமாகும். விசேஷமாக, தொழிலாளிகள் இனிமேல் தங்கள் கூலிச்சம்பளத்தைக் கள்ளுக்கடையில் விரயமாக்காமலும், வீடு சென்று மனைவிமக்களை அடித்துக்கொல்லாமலும் இருக்கக் கடமைபடுவார்கள். சகல கெடுதிக்கும் கள்ளு, சாராயந்தான் காரணம். இனி இங்கிலாந்திலும், இந்தியாவிலும் இப்படியே சம்பவிக்கவேண்டும். ஓரேழைக் கூலிக்காரன் கிடைத்த கூலியை மடியில் முடித்து வைத்துக்கொண்டு பட்டணத்திலிருந்து புரசபாக்கம்போய்ச் சேருமுன் வழியிலே 10, 12 கள்ளுக்கடைகளைப் பார்க்கிறான், ஒன்றுக்குத் தப்பினாலும் இன்னொன்றிலகப்பட்டு, கையிலிருக்கிற சொற்பப்பணத்தைக் கொடுத்துக் குடித்துவிட்டு, வெறுங்கையனாகவும், பேய்க்குணஸ்தனாகவும் வீடுபோய்ச் சேருகிறது, எந்த அரசுக்கும் ஒவ்வாது. கள்ளு, சாராயங்கள், பீர், உவைன், பிராந்தி இதுகளை நிறுத்துவதே சர்க்கார் கடன்.

## THE WAR

## யுத்த வரலாறு

எதிரி அனேகமாய் அபஜெய மடைந்திருக்கிறான். முன்புப் பலப்படுத்தியிருந்த எல்லை உடைபட்டுப்போனமையால், அதைவிட்டு வெகு தூரம் தன் தேசமாகத்திரும்பி, வேறு புதுவீரர்களை கூட்டிக்கொண்டு யுத்தசன்னத்தமாய் நிற்கிறான். இந்த நிலையிலிருந்து சீக்கிரத்தில் புரண்டுவிடுவான். சென்ற மாதத்தில் மட்டும் எத்தனையோ லட்சம் வீரர்கள் யமனுக்கிரையாயினார்கள். கைதிகளானவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் கணக்கு வழக்கு கிடையாது. தளகர்த்தனாகிய போஷ் என்னும் பிரெஞ்சு சேனாதிபதி யுத்தத்தை வெகு யூகமாக நடத்திவருகிறார். எதிரி பிரமித்து மலைக்கிறான். எதிரி தேசத்திலே பயமும், திகிலும், ஜனங்களுக்குள்ளே விசேஷம். சமாதானத்திற்கு உடன்படுகிறதாகப் பலகுறிகள் வெளிப்படுகிறது. பிரான்ஸ் தேசம் முழுவதையும் விட்டுவிட்டுப் போய்விடுகிறதாகச் சொல்லுகிறான். ஆனால் ஐரோப்பாவின் கிழக்கிலே பலாத்காரமாய்ச் சம்பாதித்த ராஜ்யங்களை மாத்திரம் வைத்துக்கொள்வானாம். இதுவும் கூடாத காரியம். நட்பரசர் இதற்கு ஒருபோதும் ஒவ்வார்கள். கேய்ஸர் "கடவுள் நமக்குதவுவார்" என்று தம் குடிகளுக்கு உறுதிசொல்லுகிறார். லாய்ட் ஜார்ஜ் மந்திரியோ நாம்பிடித்த பிடியை விடலாகாது, ஜெயமடைந்தே தீரவேண்டும், ஜர்மன் அக்கிரமம் வேரோடறுபடவேண்டும் என்று சாதிக்கிறார். இது வரையும் 1,500 சப்மெரின்கள் கடலில் அமிழ்த்தப்பட்டன. சேனைக் கப்பல்களும், வர்த்தகக் கப்பல்களும் தாராளமாய்க் கடலைக்கடந்து உலகமெங்கும் செல்லுகின்றன. ஆஸ்திரியா இனி ஜர்மனிக்கு உதவிபுரிய முடியாது. துர்க்கியும் கண் விழித்துக்கொண்டு, இனி யுத்தத்தால் ஒரு பிரயோஜனமும் வாராது என்கிறது. இவ்வருஷத்திற்குள்ளே யுத்தம் நின்று சமாதானமுண்டாகுமென்று சிலர் நம்புகிறார்கள். வேறு சிலரோ வருகிறவருஷம் வரைக்கும் ஜர்மன்சேனைகள் சண்டையிடக்கூடும், அப்பால்தான் சமாதானம் செய்துகொள்வார்கள் என்கிறார்கள். எப்படியோ கடவுளுக்குத்தான் தெரியும்.

## THE WAR & OUR MISERY

## யுத்தமும் நமது கஷ்டமும்

யுத்தம் ஆரம்பித்து நாலு வருஷங்களுக்குமேல் ஆய்விட்டது, இதுமுடிய இன்னும் எத்தனை காலம் செல்லுமோ நமக்குத்தெரியாது. இந்த யுத்தம் முடிவடைகிறதற்குள்ளாக நாம் என்னென்ன பாடுகள் பட்டு அனுபவிக்கவேணுமோ அதை கடவுள் அறிவார்.

"ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்றாற்போல், நம்மூர் வியாபாரிகள் உள்ளூர்ச் சரக்குகளை அடக்கிவைத்து விலை தூக்காய் விற்பனை செய்கிறார்கள், இதனால் ஏழை ஜனங்கள் படுகிறபாடு கொஞ்சமல்ல, துணிவிலையின் ஏற்றம் அதிகமாய்ப்போய்விட்டது. முன்னே 4 அணுவுக்கு விற்றசீட்டி இப்போது 12 அல்லது 13 அணுவுக்கு விற்கிறது. ஒன்றரை ரூபாய்க்கு வாங்கின ஒருஜதை வேஷ்டி 4 ரூபாய்க்கும் மேலாக விற்கிறது. ஏழை ஸ்திரீகள் கட்டிக்கொள்ள வஸ்திரமில்லாமல் பொத்திப் பொத்தி எத்தனைநாள் கட்டுவார்கள், ஒரு குடும்பஸ்தன் தன் குடும்பத்திற்கு வேண்டிய துணிகளை வாங்கிக்கொடுக்க சக்தியில்லாததால் அதன் பொருட்டு அவன் தற்கொலை செய்துகொண்டதாக கேள்விப்பட்டு துக்கப்படுகிறோம். இது என்னகொடுமை, இது நிற்க, அகவிலை அதிகமாய்விட்டது, இந்தியாவில் சாதாரண ஊர்களில் விளையும் பொருட்களும் உயர்ந்துவிட்டது என்று சொன்னால் இது என்ன விந்தையாயிருக்கிறது, போன வருஷம் நல்ல மழை பெய்திருந்தும் இந்த வருஷம் அரிசி ரூபாய் ஒன்றுக்கு பெரிய படியில் 3ம், பருப்பு $2\frac{1}{2}$ படியும், மிளகாய் $\frac{1}{4}$ படியுமாக விற்கிறது. இது என்ன விபரீதம், கடுகு, சீரகம், பூண்டு, வெல்லம் இவைகளின் விலையின் தூக்கம் அதிகமாய்ப் போய்விட்டது இதினால் ஜனங்கள் படும் இம்சைகள் கொஞ்சமல்ல. இவ்வித குறைவு நிவர்த்திக்கும் பொருட்டு நமது காருண்ணிய கவர்ண்மென்டார் சிரத்தை எடுத்தும் வருகிறார்கள். அது போதுமா, நாமும் இதுவிஷயம் சிரமம் எடுத்து அந்தந்த ஊர் விளைவுகளையும், அதனதன் விலைகளையும் கண்டு, வியாபாரிகள் லாபத்திற்காக விற்பனை செய்யாவண்ணம் தடுத்து, தானிய தவசங்களைச் சாசவிலைக்கு வாங்கி லாபத்தைக் கருதாமல் கொள்கிரயத்திற்கே ஏழை ஜனங்களுக்குப் போடும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அப்படி செய்யத்தக்க புண்ணிய புருஷர்களும் மகான்களும் நம்முடைய தேசத்தில் இல்லையா?



லாப்லந்து தேசம்.



இது ஒரு பெரிய ஊழியம், இதைச்சரிவர நடத்துவது பிரயாசையேயாயினும், அந்தந்த ஊரார் ஒரு ஜனசகாயசங்கம் என்ற ஓர் சங்கத்தை ஏற்படுத்தி, அதற்கு கமிட்டிமார்களாக உள்ளூர், கிராம அதிகாரிகளையும், சேர்மன்களையும், சில வியாபார பெரிய மனுஷர்களையும் தெரிந்தெடுத்து அவர்கள் இதற்கென்று உழைக்கக்கூடுமானால் இது சுலபமாய் முடியும் என்பது எமது எண்ணம். ஆங்காங்கு குடியானவர்கள் தம் வசத்திலிருக்கும் தானிய தவசங்களை ஒளித்துவைக்காமல் கிரமமான விலைக்கு கொடுக்கும்படியாக அவர்களோடு நன்மொழியாடி உணர்த்தவேண்டும். பணமில்லாவிட்டால், இந்தச் சமயமே ஐக்கிய நாணய சங்கங்களை ஒவ்வோர் கிராமங்களிலும் ஏற்படுத்தி பணங்களை சொல்ப வட்டிக்குவாங்கி அதன் மூலமாய் இப்பேருபகாரத்தை ஏழை ஜனங்களுக்குச் செய்ய முயற்சித்தல் அவசியம், நம்மூர் வீரசிகாமணிகளாகிய புண்ணியபுருஷர் இதன் விஷயம் தலையிட்டு சிரமம் எடுத்துக்கொள்ளாவிட்டால், நமது ஏழை ஜனங்கள் மடிவது திண்ணம், சகோதரரே; ஊழியஞ்செய்ய பின்வாங்காதேயுங்கள்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### மூன்றாம் அதிகாரம்

### இந்தியாவில் பேசல் மிஷனை ஸ்தாபிதம் செய்தல்

(தொடர்ச்சி.)

இந்தியா சுவிசேஷ ஊழியத்திற்கு பண்படுத்த வருத்தமான ஓர் இடம். இது கவலைக்கும், நம்பிக்கை பங்கத்திற்கு முரிய ஓர் தேசம். ஹெபிக் ஐயர் அதன் வருத்தங்களை கிஞ்சித்தேனும் யோசிக்கிறவரல்ல, அந்நாட்டின் மகிமையின் கால உதயத்தையே நோக்குகிறவர், இருண்ட காலத்தைப்பற்றி அவர் அதைரியப்படாமல் அவருடைய பார்வை விடி வெள்ளிக்கும் அவருடைய நோக்கம் பிரகாசிக்கும் சூரிய வெளிச்சத்தின் நேருக்குமேயிருந்தது. ஹெபிக் ஐயர் இந்தியா தேசத்திற்கு வருமுன்னமே, இங்கிலாந்து, போர்ச்சுகல், ஹாலந்து, பிரான்சு முதலிய தேசத்தார் எல்லாரும் இந்தியாவில் குடியேறி வியாபார தொழில் நடத்தும் சாலைகளை ஏற்படுத்தி சுயாதீனம் பெற்றிருந்தார்கள். தானியரோ வென்றால் 1618-ம் வருஷத்தில் தென் இந்தியா கீழ்க்கரை பாகத்திலுள்ள தரங்கம்பாடியில் குடியேறியிருந்தனர், இவ்விதமாக தானியர் சுயாதீனத்திலிருந்த தரங்கம்பாடியை பிரிட்டீஷார் 1345-ம் வருஷத்தில் அவர்களிடமிருந்து கிரயத்திற்கு வாங்கிக் கொண்டார்கள். தானியர் இந்தியாவுக்கு வந்தபோது அவர்கள் தங்கள் பக்தி விருத்திக்கென்று தங்களோடு சில குருமார்களையும் அழைத்து வந்தனர். அக்குருமார் சுதேசிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்தார்கள், இவ்விதமாய் தானியர் தரங்கம்பாடியில் குடியேறி பிரபல்லியமாய் இருந்தகாலத்தில், இந்தியாவில் மிஷன் ஊழியம் ஸ்தாபிதம் செய்யப்படவேண்டுமென்கிற விஷயத்தைப்பற்றி 1705-ம் வருஷத்தில் டென்மார்க்கிலுள்ள ஜனங்கள் ஆழ்ந்தவிதமாய் பேசி ஒரு சங்கத்தை ஏற்படுத்தி 1706-ம் வருஷத்தில் மூதல் இரண்டு புரோடஸ்தாந்து மிஷனெரிகளை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அப்படி வந்த அந்த இரண்டுபேரும் ஜர்மானியர், அவர்களிலே ஒருவர் ஹின்ரிக் புருட்சர் ஐயர், இன்னொருவர் ஷிஜன்பாக் ஐயர். அதன்பிறகு ஏராளமான மிஷனெரிமார்கள் தரங்கம்பாடிக்கு வந்தார்கள். அப்படி வந்தவர்களிலே, கீர்த்திபெற்ற ஒருவர் பிரடரிக் சுவார்ட்ச் ஐயர், தஞ்சாவூர் சுவார்ட்ச் ஐயர் ஆலயத்தில் சிவாஜி மகாராஜாவால் சுவார்ட்ச் ஐயரவர்களுடைய ஞாபகக் குறிப்புகள் கட்டப்பட்டிருக்கிறது. அப்படியே சென்னப்பட்டணம் சென்ட் ஜ்யார்ஜ் ஆலயத்தில் ஈஸ்ட் இந்திய கம்பெனியாரால் சுவார்ட்ச் ஐயரவர்களுடைய ஞாபகக்குறிப்புகள் போடப்பட்டிருக்கிறது. இவ்வித கண்ணியமும் ஸ்திரமுமான ஜர்மானியருடைய சம்பந்தம் டேனிஷ் மிஷனாரோடு இருந்தபடியாலும், பேசல் மிஷனிலிருந்த மாணாக்கரில் சிலர் இந்தியாவில் சில பாகங்களில் சுவிசேஷ ஊழியம்செய்து வந்தபடியாலும், இந்தியாவிலுள்ள முப்பதுகோடி ஜனங்களும் அவர்கள் தொழுதுவரும் முப்பத்துமுக்கோடி தேவர்களைப் பற்றியும், ஜர்மானியர் அறியவும் அதை நிவர்த்திக்க ஜர்மானியர் சிரமம் எடுத்துக்கொள்ளவும் நேரிட்டது.

பேசல் மிஷன் தலைமை அதிகாரி இங்கிலாந்து தேசத்தைவிட்டுத் திரும்பி வந்தவுடன், இந்தியாவில் ஜர்மன் மிஷனை ஸ்தாபிதம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. அப்போது, யாரை? எந்த இடத்திற்கு அனுப்பவேண்டுமென்கிற கேள்விகளும் ஆலோசிக்கப்பட்டது. பணவிஷயமாகவும் எந்தெந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவ்விஷயங்களைப்பற்றி பற்பலவிதமாய் யோசித்துக்கொண்டிருக்கிற சமயத்தில், இந்தியாவில் சுவிசேஷ ஊழியத்திற்கு போதகர்களை தயார் செய்யத்தக்கதான வேதசாஸ்திர பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டி அதில் வேலைசெய்ய பேசல் பட்டணத்திலிருந்து மூன்று சகோதரர்களை இந்தியாவுக்கு அனுப்பும்படி பேசல் பட்டணத்து கமிட்டியார் ஏற்பாடு செய்யும் பட்சத்தில் அதற்குண்டான செலவுக்காக 10,000 டாலர் கொடுப்பதாக, ஏஹரான்பர்க் பட்டணத்து இளவரசர் விக்டர் என்பவர் 1834-ம் ௵ பிப்ரவரிமீ 12உ ல் வாக்குக்கொடுத்தார். இந்த உதாரத்துவமான நன்கொடையின் காரணமாய் கமிட்டியார் தீர்க்கமாய் ஆலோசித்து கடைசியாய் கிரிஸ்டாப் லீனர், கிரிஸ்டாப் லீயன், ஹார்ட்கிரினர் சாமுவேல் ஹெபிக் இம்மூவரையும் போதகாபிஷேகஞ்செய்து இந்தியாவிலுள்ள மங்களூரை இவர்களுடைய மிஷன் ஸ்தலமாக தெரிந்தெடுத்துக்கொண்டு, இம்மூவரும் 1834-ம் வருஷம் ஜூலைமீ 12உ கப்பல் ஏறி புறப்பட்டார்கள்.

அப்படி அவர்கள் வரும்போது இங்கிலாந்து சபையைச்சேர்ந்த திருவாங்கூர் மிஷனெரியாகிய பெய்லி ஐயரும், சல்வன் என்ற ஓர் கலெக்டரும் இவர்களோடு இந்தியாவுக்குப் பிரயாணஞ் செய்தார்கள், இந்தியாவைப்பற்றி இவர்கள் இரண்டுபேருக்குமிருந்த அநுபவத்தை நன்றாய் விசாரித்து அறிந்துகொண்டார்கள். கடைசியாக போதகாபிஷேகம் பெற்ற இந்த மூன்றுபேரும் வட ஆப்பிரிக்கா கரையைச்சேர்ந்தார்கள் அங்கே கப்பல் சிலநாள் தங்கிற்று. சாமுவேல் ஹெபிக்ஐயருடைய தோழர்கள் இரண்டுபேரும் அதிகக் கருத்துள்ளவர்களானபடியால் தங்கள் அறையிலிருந்தே சுதேஷ பாஷையையும் இன்னும் பற்பல புஸ்தகங்களையும் படித்து இவ்விதமாய் தங்கள் முன்காலத்து ஊழியத்திற்கு உதவியாய் இருக்கும்படி ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் சாமுவேல் ஹெபிக் ஐயரோவென்றால், வயதில் கொஞ்சம் பெரியவரானபடியால் ஆத்துமாக்களை உடனே ஆதாயப்படுத்த வேண்டுமென்கிற ஆவலையுடையவராக இருந்தார்; ஆதலால் படிப்பில் காலத்தை அதிகமாய் கழிக்காமல், கப்பலோட்டிகள் பிரயாணிகள், உத்தியோகஸ்தர் முதலியவர்களிடம் பேசி அவர்களை வற்புறுத்தி இயேசுவிடம் அழைத்து வந்தார். இவர் இப்படி செய்துவரும் காலத்தில் கப்பலோட்டிகள் இவருடைய வசனத்திற்கு செவிகொடாமல் தங்கள் காதுகளையும் இருதயத்தையும் அடைத்துக்கொண்டார்கள் ஹெபிக் ஐயர் அவர்களை எப்படியாகிலும் தம் வசப்படுத்தவேணுமென்று பற்பல முயற்சியையும் அநுசரித்தார். ஒருநாள் இந்த ஜனங்கள் இவருடைய வசனங்களுக்குச் செவிகொடாமல் அவரவர்கள் தம்பாட்டையே கவனித்துக் கொண்டிருந்தபோது, ஹெபிக் ஐயர் அவர்களைப்பார்த்து; பிரிய சிநேகிதரே; "நான் கிறிஸ்துவின் ஊழியன் அவர் பேராலே உங்களுக்கும் மற்ற எல்லா ஜனத்துக்கும் ஜீவனை அடையும் வழியை காட்டுவது என் வேலையாய் இருக்கிறது.

நீங்கள் எல்லாரும் நியாயத்தீர்ப்பின் நாளிலே, "ஆண்டவரே; ஹெபிக் எங்கள் ஆத்தும விஷயமாய் கவலை எடுத்துக்கொள்ளவில்லை என்று குறை சொல்லாதபடி என் கடமையை நான் செய்யவேண்டியதாயிருக்கிறது. இப்போது சுகமாய் இருக்கிற நாம் வருகிறவாரத்தில் உயிரோடிருப்போம் என்று நமக்கென்ன நிச்சயம் உண்டு? ஆதலால் இன்று உங்களுக்கு சுவிசேஷ செய்தியைச்சொல்லி இவ்விதமாய் என் கடமையை நிறைவேற்றுகிறேன்" என்று சொன்னார். இவர் இவ்விதமாய் பேசின வார்த்தைகளுக்கு அக்கப்பலோட்டிகள் கிஞ்சித்தேனும் செவிகொடாமல் அவரவர்கள் தங்கள் இடுக்கமான அறைகளில் சிலர் சுருட்டுப் பிடித்துக்கொண்டும், சிலர் பேசிக்கொண்டும், படுத்துக்கொண்டும், தூங்கிக்கொண்டும், சிலர் தைத்துக்கொண்டும், உடுத்திக்கொண்டும், சிலர் சவரம் செய்துகொண்டும், சீட்டு ஆடிக்கொண்டும் இருந்தார்கள். ஹெபிக் ஐயரோ, அதிக மனம் உடைந்தவராய்தம் சின்ன அறைக்குள் நுழைந்து முழங்கால் ஊன்றி அந்த ஜனங்களுடைய இருதயக் கடினத்தைப்பற்றி ஆண்டவரிடம் ஜெபித்துக்கொண்டிருந்தார். இவர் இப்படி செய்யும்போது, ஒரு கப்பலோட்டி ஹெபிக் ஐயருடைய அறையின் கதவை தள்ளின சத்தம் கேட்டது; அதன்பிறகு அவன் உள்ளேவந்து ஹெபிக் ஐயரைப்பார்த்து, கனம்: ஹெபிக் அவர்களே? தயவு செய்துவாரும், எங்களுக்கு நீர் பிரசங்கம் செய்யும்படியாய் வேண்டுகிறோம், நாங்கள் எல்லாரும் இப்போது ஆயத்தமாய் இருக்கிறோம் என்று அவரிடம் சொன்னான்.

டி. யல். ராஸ்.
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. போவான் ஐயர் மொழிபெயர்த்தது

யாத்திரைக்காண்டம்.

### 12. தூதனுடன் சம்பாஷித்த படலம்.

யூரியெலே! தேவனுடைய மகத்துவ சன்னிதானத்திலே எப்போதும் நிற்கின்ற எழு ஆவிகளில் ஒருவனே! அவரினது சத்தியவாக்கையுஞ் சித்தத்தையும் வானுலகோர் யாவருக்குந் தெரியப்படுத்துகிறாயே. அவ்வுலகி லுள்ளவர்கள் அவருடைய கட்டளைப்பிரகாரம் அனுசிசகாமல் நடந்துவருகிறார்களல்லவோ! அவ்வாறே புதிய வுலகிலுள்ள சிருஷ்டிகளுக்கு அவருடைய சித்தத்தைத் தெரியப்படுத்தவும் அவருக்கு மகிமையை யுண்டுபண்ணவும் வந்திருக்கிறாய். நவமான சிருஷ்டிகளைப்பார்க்க தேவனுடைய கண்கள் ஆவலாயிருக்கின்றன விசேஷமாய் அவருடைய ஆத்தும நேசமும் உள்ளத்தின் வாஞ்சையுமாகிய மனுப்புத்திரனைப் பார்க்க அதிக ஆவலுடனிருக்கிறார். அவனுக்காகவே இந்த அதி

சயக் கிரியைகளையெல்லா முண்டுபண்ணி உன்னை யும் சேராபீன் சபையினின்று பிரித்தெடுத்து இந்த சூரியமண்டலத்தில் அலைந்து திரியும்படி செய்திருக் கிறார்.' பிரகாசம்பொருந்திய சேராபீனே! நமது கண்களுக்குமுன் எண்ணிறந்த உலகங்களிருக்கின் றனவே அவ்வுலகங்களுள் எதை அம்மனிதனுக் கிருப்பிடமாக அளித்திருக்கிறார். அல்லது எல்லா உலகங்களிலும் அவனிருந்து கையாட்சி செய்யும் படி கட்டளையிட்டிருக்கிறாரோ அதை எனக்குச் சொல்லு, மகா பெரிய ஆண்டவருடைய கிரியை யாயும் அவரால் இலவசமான எண்ணிறந்த நன்மை களை பெற்றவனுயுமிருக்கிற அம்மனிதனை அந்த ரங்க சகிதமாய்ப் பார்த்து பகிரங்கமாய் அதிசயிக்க விருப்பமுற்றிருக்கிறேன். அவனையும் மற்றும் அவரினது சிருஷ்டிகளையும் பார்த்து தகுந்த பிரகா ரம் அவரைத் துதிப்பேன். அவருக்கு விரோதமாய் கலகஞ்செய்த சத்துருக்களை நரகத்திலே தள்ளிவிட் டாரல்லவோ, அதினாலுண்டான நஷ்டத்தை நிவர் த்தி செய்யும்பொருட்டு மனிதஜாதியை யுண்டாக்கித் தம்மை செம்மையாய் ஆராதிக்கும்படி செய்திருக்கி றாரென்று எண்ணுகிறேன். ஆம் அவருடைய வழிகளெல்லாம் எவ்வளவு ஞானம் நிறைந்தவை களாயிருக்கிறது என்றான்.

இவ்வாறு இந்தத் துரோகநெஞ்சன் தந்திரமான வார்த்தைகளுடன் பேசினன். அவனுடைய சர்ப்ப னையை மனிதனாவது தூதனாவது கண்டுபிடிப்பது அரியகாரியமாயிருந்தது. ஆம் இவன் பிணைத்த இந்தத்தீமை சர்வஞானம்நிறைந்ததேவனால்மாத்திரம் அறிந்துகொள்ளக் கூடியதாயிருந்தது. ஞானத்தி லும் பக்தியிலுஞ் சிறந்தவர்கள், அடிக்கடி மனிதர் களின் குணகுணங்களை அறிந்துகொள்ளக்கூடாமல் மோசம்போகிறார்கள். வெளிப்படையான குற் றம், கொவம், தீங்கு எவர்களிடத்தில் காணப்படாம லிருக்கின்றனவோ சற்புத்திரரென்றும், நீதிமான் களென்றும் தீர்த்துப்போடுகிறார்கள். ஏனென் றால், தாங்கள் பக்தியும் பரிசுத்த முள்ளவர்களான தால் மற்றவர்களும் அப்படியேயிருப்பார்களென்று எண்ணிக்கொண்டு தீர்மானஞ் செய்கிறார்கள். அப் படிப்போலவே யூரியேல், சூரியவொளிப் பிரகாசம் பொருந்தினவனும் தேவலோகத் தூதர்களில் கூரிய பார்வையை யுடையவனுயிருந்தும் இம்மனிதனு டைய சொல்லைக்கேட்டு, யாதொன்றுஞ் சமுசயிக் காமலிருந்தான். களங்கமற்றவனுயிருந்தும், வஞ் சிக்கப்பட்டவனாய், ஒளியின்தூதன் வேஷம் பூண்டு வந்தவனுக்கு மாறுத்தாரஞ் சொல்லுகிறான்.

## 13. தூதனை வஞ்சனைசெய் படலம்.

சௌந்தரியபுருஷனே! தேவனுடைய கிரியை களைப்பார்க்க விரும்புவதும் அக்கிரியைகளினிமித் தம் அவரைப் போற்றுவதும் அதிகப் பிரசங்கத்தன மல்ல, குற்றமான காரியமுமல்ல. இதுகாரியத்தினி மித்தம் நீ புகழப்பட பாத்திரனாயிருக்கிறாய், மற்றவர் களிலும் நீ அதிக பிரீதியுள்ளவனாகக் காணப்படுகி றாய் மேலும் உனது ராஜமாளிகையைவிட்டு வானு லகத்தில் கேள்வியின் லறியப்பட்டவைகளை உன் சுயகண்களினால் பார்க்கவிரும்புகிறாய் இது மெத்த வும் நல்லகாரியம். தேவனுடைய கிரியைகள் நிச்சயமாகவே அதிசயிக்கப்பட வேண்டுபவைகள். அவைகளை யறிந்துகொள்வது பிரயோசனமாயும் அவைகளை ஞாபகத்திலே வைத்துக்கொள்வது சந் தோஷமாயு மிருக்கின்றது. ஆனால் அவைகளின் தொகையை யாரால் மதிக்கக்கூடும். அல்லது அவை கள் உண்டாக்கப்பட்ட அளவில்லாத பிரமாணத்தை யார் அறியக்கூடும். அச்சிருஷ்டிகளுக்கு முதற்கார ணமாயிருந்தவைகள் மறைபொருள்களா யிருக்கின் றன. அவருடைய வார்த்தையினால் ஒழுங்கற்ற ஜடப்பொருளினின்று ஒழுங்குள்ள ஓர் வடிவமுண் டானதைப் பார்த்தேன். குழப்பத்தி னிராஜ்ஜியத் தில் ஓர் அமளியுண்டாயிருக்குங் காலத்தில் அவரு டைய சப்தங் கேட்கப்பட்டது உடனே இருள் ஓடிப்போய்விட்டது. வெளிச்சம் பிரகாசித்தது. ஒழுங்கானது ஒழுங்கீனத்தினின்று உற்பத்தியா யிற்று. மேலும் பலுவான தன்மையையுடைய பஞ்சலோகங்கள், அதாவது மண், ஜலம், காற்று, நெருப்பு, ஆகாயமாகிய இவைகள் தங்கள் தங்கள் ஸ்தானத்தில் போய்ச்சேர்ந்தன. இதுவுமன்றி வா னுலகத்துக்குரிய நுட்பமான ஆகாய வஸ்துக்களும் அணுக்களும் மேலாகப்பறந்து நீ பார்க்கின்ற கணக் கில்லாத நட்சத்திரங்களாயின. ஒவ்வொரு நட்சத்தி ரத்துக்கும் அதனிடமும் ஓட்டமுங் குறிக்கப்பட் டது. மற்றவைகள் இந்த அண்டபகிரண்டத்தைச் சுவர்களைப்போல் வளைந்துகொண் டிருக்கின்றன. அதோ நிற்கின்ற அந்த உருண்டையான கிரகத்தை கீழ்நோக்கிப் பார். அதின் ஒருபக்கத்தில் மாத்திரம் ஒளியுடையதாயிருக்கிறது, அவ்வொளியானது இச் சூரிய ஒளியின் பிரதிவிம்பமா யிருக்கிறது. அவ்வி டத்திற்கு பூமியென்று பெயர். அதுவே நவமாய் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனிருக்கும்ஸ்தானம் அந்த வெளிச்சம் அவனுக்கு பகலாயிருக்கிறது அவ்வுருண் டையின் மற்றொருபாதி இருளடைந்திருக்கிறது ஆயினும் அதற்கெதிரிலிருக்கின்ற உபக்கிரகமாகிய சந்திரன் அப்பூமிக்கு ஒத்தாசை செய்கிறது. அது மாதந்தோறும் சுற்றியோடி தான் இரவலாகப்பெற்ற ஒளியை சில சமயத்தில் குறைவாயும் சில சமயத் தில் பூரணமாயும் பூமிக்குக்கொடுத்து இரவின் அந்த காரத்தை நீக்கிவிடுகிறது. நான் என் விரலினால் சுட்டிக்காட்டு மிடத்துக்கு "பரதீசு" என்று பெயர். அதுவே ஆதாமின் இருப்பிடம் அங்கேயிருக்கும் மகத்துவமான சோலைகளின் நடுவில் அவன் வசிக் கும் பூங்காவனமிருக்கிறது. நீ வலது இடது பக் கம்சாயாமல் நேராய்ப்போ. அப்போது எவ்விதத் திலும் அவ்விடத்துக்குச் சேருவாய், நானிப்போது என் வேலையைமுடிக்க போகவேண்டுமென்றான்.

இவ்வாறு பேசி திரும்பினவுடனே சாத்தான் குனிந்து வானுலகத்தில் அதிதூதர்களுக்குச் செலுத் தும் மரியாதைப்பிரகாரம் வந்தனஞ்செய்து செலவு பெற்று பூமிக்கு நேராகப் பறந்தோடினான். ஜெயம டைவோமென்ற மட்டுமிஞ்சின தைரியமும் நம்பிக் கையும் மிகுத்ததினால் ஆகாயத்தில் வெகுதூரம், கா ணங்கள் போட்டதுமன்றி சிலவிடங்களிற் சக்கரஞ் சுழற்றி வெள்ளித்தடியை எப்பக்கத்திலும் வீசிக் கொண்டு பூமியின் மத்திவரைக்கு நேராய்வந்து சற் றுநேரம் நின்று பிற்பாடு மெசொப்பொத்தாமியா வென்னு மிடங்களுக்கு அருகாமையில் வந்திறங்கி னன்.

யாத்திரைக்காண்டம் முற்றிற்று.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DEPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கிறிஸ்துவில் நிலைத்திரு .. .. .. | 0 | 8 | 0 |
| ஆடவர் கும்மி .. .. .. | 0 | 1 | 0 |
| கிரணமாலிகை .. .. .. | 0 | 6 | 0 |
| அருளாகமமும், ஆகிசின்னங்களும் .. | 0 | 2 | 0 |
| வேதாகம பிரசித்த விர்த்தாந்தம் .. | 0 | 8 | 0 |
| சந்திரலீலாள் .. .. .. | 0 | 2 | 0 |
| பிள்ளைகளும் சபையும் .. .. | 0 | 2 | 0 |
| புதிய ஞானப்பாட்டுகள் பெரியது .. | 0 | 4 | 0 |
| ,, சிறியது .. | 0 | 3 | 0 |
| ஞானகீதங்கள் பெரியது .. .. | 0 | 10 | 0 |
| ,, சிறியது .. .. | 0 | 4 | 0 |
| ,, ஓர் அணு புஸ்தகம் .. | 0 | 1 | 0 |
| பாலர்ப் பாட்டுகள் .. .. .. | 0 | 1 | 0 |
| ஞானப்பாட்டுகளும், ஞானகீதங்களும் ஒன்றாய் சேர்த்துக் கட்டினது .. | 0 | 12 | 0 |
| சிலுவைத் திருவாசகம் .. .. | 0 | 1 | 0 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் .. .. | 0 | 4 | 0 |
| ,, எபிரேயர் நிருப வியாக்கியானம். | 0 | 12 | 0 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறு தல் .. .. .. .. | 0 | 8 | 0 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் .. | 0 | 3 | 0 |
| திருச்சபை சரித்திரம் .. .. | 1 | 4 | 0 |
| மாதர்கும்மி .. .. .. .. | 0 | 1 | 0 |
| காலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| மாலைத்தியானம் .. .. .. | 0 | 8 | 0 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் .. | 0 | 14 | 0 |
| சற்குரு சதகம் .. .. .. | 0 | 1 | 6 |
| கெட்டகுமாரன் சரிதை .. .. | 0 | 0 | 9 |
| ஆத்தும விபசாயம் .. .. .. | 0 | 1 | 6 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம் .. .. | 0 | 2 | 0 |
| மூதேவி சீதேவி வீடுகள்: ஓர் கதை .. | 0 | 1 | 0 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது) .. .. .. | 0 | 14 | 0 |
| திருப்போர் (Holy War) புதுப் பதிப்பு .. .. .. .. | 0 | 12 | 0 |
| நேச அழைப்பு .. .. .. | 0 | 1 | 0 |
| பிள்ளைகள் குணப்படுதல் .. .. | 0 | 6 | 0 |
| தினதீபிகை .. .. .. .. | 0 | 2 | 0 |
| தாவீதின் சரித்திரம் .. .. .. | 0 | 1 | 6 |
| நித்தியானந்தக் காதல் .. .. | 0 | 1 | 0 |
| சத்தியவாக்கன் .. .. .. | 0 | 1 | 3 |
| பயப்படாதே .. .. .. | 0 | 1 | 0 |
| மேசியா மகத்துவம் .. .. .. | 0 | 3 | 0 |
| நல்ல மேய்ப்பன் .. .. .. | 0 | 2 | 0 |
| தியானசோலை .. .. .. | 0 | 1 | 6 |
| இருதயக்கண்ணாடி .. .. .. | 0 | 2 | 0 |
| போதக தீபிகை .. .. .. | 0 | 6 | 0 |
| நிஸ்தார ரத்தினகாரம் .. .. .. | 0 | 1 | 0 |

☞ தபால்கூலி வேறே.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப் பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—1918.



561 Registered No. M. 442.

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

NOVEMBER, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. நவம்பர்மீ, 1918.


161194 15 NOV 1918

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**இந்தியக் கிறிஸ்தவ காங்கிரேஸ்.** — இந்த மஹா சபை சென்றமீ 7—12உ ஆறுதினங்களி லும் மெமோரியல் ஹாலிலே கூடினது. அங்கி லேயரும் இந்தியருமான ஆறு சிறந்த குருக்கள்மார் உபந்நியாசம் செய்தார்கள்.

**சீர்திருத்தக் கம்மிட்டி.**—சீர்திருத்தங்களை ஒழுங்கு செய்யும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிற கம் மிட்டியிலேசுரேந்திரநாத் பானர்ஜி அவர்களும், ஸ்ரீநி வாஸ சாஸ்திரி அவர்களும் மெம்பர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். சீர்திருத்த முறைப்பாடுகளிலே சில பல மாறுதல்களுண்டாகுமென்பதற்குச் சந் தேகமில்லை.

**சென்னை ராஜதானியில் பெண்கல்வி விர்த்தி.**— இவ்வருஷம் கூடலூரிலும், பந்தரிலும், மங்களூரி லும், கேர்ல்ஸ் ஹைஸ்கூல் ஸ்தாபிக்கத் தீர்மான மாய் விட்டது. பெண்கல்வி அபிவிர்த்தி அடைந்து வருகிறது. வருகிற பட்டங்கொடுக்கும் கான்வொ கேஷனிலே சுமார் 20 இந்திய பெண்கள் பி. ஏ. பட்டம் பெறுவார்களெனப் பிரஸ்தாபம்.

**சென்னைக் கவர்னரவர்கள்.**—லார்ட் பெண்ட் லண்டவர்கள் வருகிற மார்ச்சுமீ போய்விடுகிறதாக வும், அவர்கட்குப் பதிலாக, பம்பாய்க் கவர்னர் லார்ட் உவில்லிங்டன் அவர்கள் இங்கு வருகிற தாகவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பம்பாய்க்கு காப்டன் ஜார்ஜ் எனப் பெயர்கொண்ட ஒரு பார்லிமெந்து மெம்பரவர்களை நியமிக்கப்பட்டிருக்கி றார்கள்.

**பரஸ்பர ஜாதிக் கலியாணம்.** —இந்தியாவின் பற்பல ஜாதிகள் ஒன்றோடொன்று விவாகஞ் செய்து கொள்ளலா மென்றொரு சட்ட முண்டாக்க மறுபடியும் பிரயாசப்படுகிறார்கள். இப்பொழுதும், ரெஜிஸ்ட்டர் ஆபீசில், தாங்கள் மார்க்கவிஷயமாய் இந்துக்கள், மகம்மதியரல்லவென்று பிரமாணிக்கஞ் செய்துகொண்டு, கலியாணம் பண்ணிக்கொள்ள லாம். ஆனால் இந்தச் சட்டத்தின்படிக்கு அவ் வாறு தத்தம்மதத்தை விடாமலேயே விவாகஞ்செய்து கொள்ளும்படிக்கு உத்தரவு கேட்கிறார்கள்.

**தகாத ஓர் விர்த்தி.**—இந்த யுத்தக் காலத்திலே, கஷ்டமும் நஷ்டமும் காடுபோல் பரவி வருகிற இந்தக் கொடிய காலத்திலே, சாராயமும் புகை யிலையும் விர்த்திபெற்று வருகிறது பெருத்த ஆச்சரி யம். விவரம்:—

| | 1917—ஆ. | 1918—ஆ. |
|---|---|---|
| சாராயம் | 81 லட்சம். | 115 லட்சம். |
| புகையிலை | 57 ,, | 77 ,, |

இதனாலே குடிவெறியும், சுருட்டுக் குடியும் ஏராள மாக விர்த்திசெய்து வருகிறதைக் காணலாம்.

**தற்கால யுத்தக் கர்த்தாக்கள்.** — ஜர்மனிக்கு விரோதமாய்யுத்த சன்னத்தரான ராஜ்யங்களாவன:— ரஷியா, பிரான்ஸ், பெல்ஜியம், கிரேட்பிரிட்டன், சர்வியா, மாண்டனெகிரோ ஜப்பான், போர்த்து கல், இத்தலி, ருமேனியா, ஐக்கிய மாகாணங்கள் (அமெரிக்கா), கூபா, பானமா, கிரீஸ், சீயம், லைபீரியா, சீனா, பிரசீல், காட்டிமேலா, ஹேய்ட்டி, ஹாண்டுராஸ்: இன்னொரு விதமாய்,—உலகம் முழு வதும் ஜர்மனிக்கு விரோதமாகச் சண்டைசெய்து வருகிறது. ஏனென்றால், இது நீதிக்கும் அநீதிக் கும், தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் அவசியம் நடக்கவேண்டிய யுத்தம்.

**கம்பியிலாத் தந்தி விர்த்தி.** — இந்த அற்புதத் தந்தி 20 வருஷங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் உண்டானபொழுது அது 14½ மைல் தூரத்துக்குத் தான் கண்டு வாசிக்கப்பட்டதாம். இப்பொழுது 12,000 மைலுக்கப்பால் செல்லுகின்றது. கிரிப் பன் என்ற ஒருவன் தன் பெண்சாதியைக் கொன்று போட்டுப் புதைத்துவிட்டுக் கப்பலேறி அமெரிக்கா வுக்கு யாத்திரை செய்கையிலேயே, கம்பியிலாத் தபால் அக்கப்பல்காப்டனுக்குச் சேர, அவன் பிடி பட்டு, இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து, விசாரணை யாகி, தூக்குப்போடப் பெற்றான். வேறொரு வித மாக அவனைப் பிடித்திருக்கமுடியாது.

**அக்டோபர்மூ 7உ.**—சென்றமீ 7உ திங்கட் கிழமை இந்தியா முழுவதும் விடுமுறை நாளா யிருந்தது. என்னத்தினாலெனில், பல்கேரியர் தேசத்தாசன் நட்பரசர்க் கையில் தன்னை ஒப்ப டைத்து விட்டான். அவன் இதுவரையும் ஜர்மா னியரைச்சேர்ந்து பல அக்கிரமங்களை நடத்திவந்த மையால், இவர்கள் அவர்கள்மேல் படையெடுக்க நேரிட்டது. அவன் முற்றிலும் தோல்வியடைந் தான். அதனால் சமாதானம் பண்ணிக்கொண்டு ஜர்மன்களுக்கு விரோதியாய்விட்ட சந்தோஷத்தி னாலே, பிரதிநிதி அவர்கள் 7—ம் தேதியை விடு முறை தினமாக்கினார்கள். இனி ஜர்மன்கள் பல் கேரியா வழியாக கான்ஸ்தான்திநோப்பிலுக்குச் செல்ல முடியாது.

**இன்புளுவென்சா ஜுரம்.**—பலவிதப் பேர்கள் பூண்ட இந்த ஜுரம் தற்காலம் இந்து தேசம் முழு வதும் நடமாடி கொலைத்தொழில் புரிந்துவருகிறது. உலகமெங்கும் அதன் கொடிய செயலைக் காணலாம். சென்றமீ சென்னையிலே விசேஷ நாசம் வருவித் தது. வாரத்துக்கு ஆயிரத்தில் 38 பேர் மரணம் சகஜமாயிருந்து, இந்த ஜுரம் உண்டான பிறகு, 38 ஆக விருந்தது 202 ஆய்விட்டது. ஒரு தினத் தில் 858 பேர் மாண்டார்கள். பம்பாய், பூனா, கல் கத்தா முதலிய நகரங்களிலும் இவ்வாறே. பட்ட ணத்தில் வரியாப்பீசாரின் முயற்சியினாலே அனேக வைத்திய சாலைகளும் தர்ம மருந்துகளும் ஏற்படுத் தப்பட்டு வருகின்றன. ஆயினும் அதி சுத்தமான காற்று நோயாளிக் கவசியம். சில அருமையான மருந்துகளும் கொடுக்கிறார்கள்: ஜனங்கள் அதிக சுத்தமான ஜீவியஞ் செய்த லவசியம்.


**நவம்பர்மூ பஞ்சாங்கம்—**

| வாரம். | நவம்பர்மீ = ஐப்பசி—கார்த்திகை. ● அமாவாசை, 3உ ⊙ பௌர்ணமி, 18உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஐப்பசி—கார்த்திகை. | | | |
| ஞாயி ... | ... | 3 | 10 | 17 | 24 | ... | 19 | 26 | 3 | 10 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 4 | 11 |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 5 | 12 |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 6 | 13 |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 7 | 14 |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 1 | 8 | 15 |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 2 | 9 | 16 |

## THE WAR

## யுத்த வரலாறு

யுத்தவரலாறு என்று தலைவைத்தோமாயினும், இது ஒருவேளை கடைசி வரலாறுயிருக்கும். நட்பரசர் தளபதி போஷென்பவரின் இடைவிடாத முறியடித்தலினலே ஜர்மன்சேனை முழுவதும் முற்றிலும் தோற்றுவிட்டது. ஜர்மன்கள் தோல்வி பொறுக்கமாட்டாமல், பிரெசிடெண்ட் உவில்சனுக்கு மனுவு செய்துகொண்டு, சண்டையைக் கொஞ்சம் நிறுத்திவைத்தால் சமாதான ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம் என்று செய்தி அனுப்பினுர்கள். அவர் 1–வது, பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நாட்டிலிருந்து தங்கள் சேனைகளை அப்புறப்படுத்த வேண்டும். 2–வது, கடற்சண்டையையும் நாட்டுச் சண்டையையும் பரிஷ்காரம் நிறுத்திவிடவேண்டும். 3–வது, கைசர்குடும்ப மனைத்தும் ராஜாங்கத்திலிருந்து தூரத்தப்படவேண்டும்; 4–வது, சப்மெரின்கள், கப்பல்கள் யாவும் நட்பாசர்க் கையில் ஒப்படைக்கவேண்டும்; 5–வது; இதுவனையும் அழித்த பொருள்களுக்கும், இவற்றின் அக்கிரமங்கட்கும் நஷ்டங் கட்டவேண்டுமென்றும் உத்தரவளித்திருக்கிறுர்கள். இதுகளுக்கெல்லாம் ஜர்மன்கள் ஒத்துக்கொள்வ தவசியம். இல்லாவிட்டால் அவர்கள் கதி வெகு பயங்கரமாயிருக்கும். ஜர்மனியிலே கலகங்கள் தொடங்கிவிட்டன; கைசர் அரசைக் கவிழ்த்துப் போடவேண்டுமென்று பிரஜைகள் ஏகோபித்து முயல்கிறுர்கள்; கைசர் ஸ்வீடின் தேசத்தில் ஒரு மாளிகையை விலைக்கு வாங்கிக்கொண்டு அங்கே குடும்ப சமேதராய்ச்சென்று காலங்கழிக்க எத்தனிக்கிறுராம். எதிரிகள் கையில் விழுந்தாலோ, பழைய நெப்போலியன் சக்கரவர்த்தியைப்போலத் தண்டனைக்குட்படுவோர். அன்றி, ஜர்மனி சுயஅரசாய் விடவேண்டுமென்று அனேகர் விரும்புகிறுர்கள். அவருடைய மந்திரி பிரதானிகள் அனைவரும் அவனைக் கைவிட்டுவிடுகிறுர்கள். அவர் மனேவியாகுலம் அளவற்றதாயிருக்கிறது. ஒருவேளை தற்கொலை, வன்கொலை நடந்தாலும் நடக்கும். ஜர்மனியின் விபத்துக்கெல்லாம் இப்பாதகனே காரணம். அந்நாட்டின் செல்வத்துக்கும் சௌக்கியத்துக்கும் தீவைத்த கொடியவன் இவனே. பிரஜைகள் இனி அவனை எப்படி சகிப்பார்கள். அவனைத் தெய்வமாகப் பூஜித்தவர்கள் இப்பொழுதவனைப் பிசாசாக தூஷித்துத் திரஸ்கரிப்பார்கள். இந்தப் பத்திரிகை வெளிப்படுமுன் என்ன சம்பவிக்குமோ, கடவுளுக்குத்தான் தெரியும். முடிவு வந்துவிட்டது நிஜம்.



காசியில் குரங்கு ஆலயம்.

## THE INDIAN CHRISTIAN CONGRESS.

## இந்திய கிரிஸ்தவ மஹா சபை.

இந்த மகா சபை ஏறக்குறைய 32 வருஷங்களுக்கு முன் மதராஸ் மிஷனெரி கான்பிரன்சால் அநேக வருஷங்களாக நடத்தப்பட்டு; பின் பல வருஷங்களாக மதராஸ் சுதேச குருமாரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருஷமும் இந்திய குருமார் கான்பிரன்ஸ் இந்த மகா சபையைச் சென்ற அக்டோபர்மீ 7௳ திங்கட்கிழமை முதல் 12௳ சனிக்கிழமை வரையிலும் நடத்தினர்கள். ஒவ்வொரு தினமும் மாலை 6 மணிக்கு மெமோரியல் ஹாலில் குறிக்கப்பட்ட பீடாதிபதியும், பிரசங்கியும் பீடம் வகித்து பிரசங்கம் செய்தார்கள். பட்டணத்தில் கொள்ளை நோயினிமித்தமும், கிரிஸ்தவ குடும்பங்களில் நேரிட்ட மரணங்களினிமித்தமும் திரளான கிரிஸ்தவர்கள் கூடி வருகிறதற்கு அசந்தர்ப்பம் நேரிட்டாலும் அநேகர் வந்து பிரசங்கங்களைக்கேட்டு ஆசீர்வாதம் பெற்றுர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்தக் கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்யப்பட்ட விஷயம், "கிரிஸ்தவர்களின் சிலாக்கியங்கள்".

திங்கள். "கிரிஸ்துவின் மூலமாய்" என்பதின் பேரில் கனம்: A. O. பிரவுன் ஐயர் மிகவும் எழுப்புதலான பிரசங்கம் செய்தார். அத்தருணம் கனம்: கிளார்க் ஐயர் பீடாதிபதியாயிருந்தார்.

செவ்வாய். கனம்: ஹைபெர்க் ஐயர் பீடம் வகிக்க, கனம்: பரமானந்தம் ஐயர் "கிரிஸ்துவிலிருந்து" வருகிற சிலாக்கியங்களின்பேரில் எழுப்புதலாய்ப் பிரசங்கம் செய்தார்.

புதன். மிஸ்ற்றர். எம். டி. தேவதாஸ் பாரிஸ்டர், பீடம் வகிக்க கனம்: சுப்பிரமணி ஐயர் "கிரிஸ்துவோடுகூட" என்கிற பொருளின்பேரில் வைராக்கியத்தோடு பிரசங்கம் செய்தார்.

வியாழம். கனம்: ஸ்டேவர்ட் ஐயர் அக்கிராசனப்பதியாய் இருக்க கனம்: சான்ட்லர் ஐயர் மிகவும் தெளிவாயும் எழுப்புதலாயும் "கிரிஸ்துவுக்குள்" என்கிற விஷயத்தின் பேரில் பிரசங்கம் செய்தார்.

வெள்ளி. கனம்: பூத் ஐயர் ஆசனம் வகிக்க டாக்ட்டர் லாஸாஸ் ஐயர் "கிரிஸ்துவினுடைய" என்கிற விஷயத்தின்பேரில் மிகவும் ஊக்கமான பிரசங்கம் செய்தார்.

சனி. மிர். பால். அப்பாசாமி (ஸ்மால்காஸ்கோட் ஜட்ஜ்) பீடம் வகிக்க கனம்: மோனகன் ஐயர் "கிரிஸ்துவுக்காக" என்கிற விஷயத்தின்பேரில் அதிக தாபந்தமாய்ப் பிரசங்கம் செய்தார்.



அந்தந்தப் பொருள்விஷயமாய் ஏற்ற ஞானப்பாட்டுகளும் கீர்த்தனைகளும் பாடப்பட்டன.

அதோடு ஒவ்வொரு நாளிலும் கனம்: கிளார்க் ஐயர் முதன்மையாயிருந்து எல்லா மிஷன் ஊழியரும் சபையாரும் சேர்ந்து, பல இடங்களிலும் சாயரட்சை 4½ மணிமுதல் 6 மணி வரையிலும் புறமதஸ்தருக்கு பிரசங்கம் செய்தார்கள். இந்த மகா சபை வழக்கம்போல் நடந்தேறச்செய்த சுதேச குருமாருக்குக் கிரிஸ்தவர்கள் மிகுந்த நன்றியுள்ளவர்களாயிருக்கிறுர்கள். கடவுள் தாமே பிரசங்கித்தவர்களையும், பிரசங்கம் கேட்டவர்களையும், இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்த மற்றெல்லோரையும் ஆசீர்வதிப்பாராக.

J. N. D.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### மூன்றும் அதிகாரம்

### இந்தியாவில் பேசல் மிஷனை ஸ்தாபிதம் செய்தல்

(தொடர்ச்சி.)

கப்பல் விடுதியில் தனிமையாய் தளர்ச்சியடையக்கூடிய சாமுவேல் ஹெபிக் ஐயர் தம்நேரத்தை எவ்விதமாய் கடந்தார் என்பதைப்பற்றி தாமே சொன்னதாவது—"எனக்கு எந்தவிதமான ஜோலியும் தடைசெய்யாமலிருக்கும்போது நான் தினந்தோறும் மூன்றுமணிநேரம் சில நண்பர்களுக்கு போதகம் செய்துவந்தேன். அப்படி என்னிடத்தில் கற்றுக்கொண்டவர்களில் ஒருவர் முதல் மணிநேரத்தில் வருவார். அவர் சுவிட்ஸர்லாந்து தேசத்துதுரை. அவர் தம்முடைய ஆத்துமாவைப்பற்றிய கவலையும் இரட்சிப்பைப்பற்றிய கவலையும் இரட்சிப்பைப்பற்றிய ஆவலுமுடையவர். பரிசுத்தாவியானவர் அவரை ஆச்சரிய விதமாக நடத்தினதினுல் அவரே இந்த அறிய காரியத்தை விளக்கிக்கொள்ள என்னிடத்தில் வருவார். அவரிடத்தில் ஒருமணிநேரம் காலக்ஷேபம் செய்வேன். பிறகு இரண்டாம் மணிநேரத்தில் பதினுறு வயதுள்ள வாலிபனெருவன் வருவான். இவன் ஸ்காட்லாந்து தேசத்து வீரன். இவனுடைய மனதிலும் ஏதோ ஒருவித வேதனை இருந்தது, இவனும் தினந்தோறும் ஒருமணிநேரம் என்னேடு சம்பாஷணை செய்வான், அவன் சில சமயங்களில் பேசுகிற அற்பத்தனமான வார்த்தைகள் எனக்கிருந்த பொறுமையைச் சோதிக்கும், ஆனபோதிலும் வரவர, அவன் ஹிருதயம் மெழுகைப்போல் இளகினது. கடைசியாக இன்னெருவர் மூன்றும் மணிநேரத்தில் வருவார் அவர் என் அறை விடுதியில் வசிப்பவர் அவர் தம் தூக்கத்தைவிட்டு ஒருமணி நேரமாக சுவிசேஷத்தை அதிக ஆவலோடு கேட்பார், அவருடைய ஹிருதயத்தைப் பரிசுத்த ஆவியானவர் தொட்டார். ஆதலால் அவர் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவராவார் என்பது என் நம்பிக்கை என்று சொன்னுர். ஹெபிக் மிஷன் காலேஜில் மாணுக்கனுக சேர்ந்தகாலத்தில் அவருக்கிருந்த தாடியை க்ஷவரம் செய்திருந்தார். அதைத் திரும்பவும் கப்பலில் பிரயாணஞ் செய்தபோது வளர்க்கத்தொடங்கினுர் இவ்விதமாய் வளர்ந்த அந்தபெரிய தாடியைப்பற்றி அவருக்கு அதிக பூரிப்பு. இந்தியாவிலுள்ள ஜனங்கள் அவருடைய தாடியைப்பற்றி அதிக கவனஞ் செலுத்தினுர்கள். அதனுலேயே அவரை தாடிக்கார பாதிரியார்" என்றும் அழைப்பதுண்டு இந்தத் தாடியை கத்தரிக்கவாவது சிரைத்துப்போடவாவது யாராகிலும் யோசனை சொன்னுல் அதை விரும்பமாட்டார். ஒருநாள் ஒரு துரைசானி இவருடைய தாடியை சவரகம் செய்துபோடும் என்ற நோக்கத்தோடு, ஒரு சவாக கத்தியை அவருக்கு இனுமாகக் கொடுத்தாள். அதை அவர் எடுத்துக்கொண்டாலும் அதனுள்ளிருந்த நோக்கத்தை அவர் எடுத்துக்கொள்ளவில்லை. ஒருநாள் இவர் ஓரிடத்தில் ஸ்திரீகளுடைய வீண் ஆடம்பரத்தையும், அவர்கள் தொப்பியில் தொங்கவிடும் புஷ்பங்களையும், தங்க ஊசிகளையும், அவர்களுடைய உல்லாச உடைகளையும் கண்டித்துப் பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கம் முடிந்தபிறகு ஒரு துரைசானி அவரைப்பார்த்து ஹெபிக் ஐயரே! நீரும் ஸ்திரீகளைப்போலவே வீண் ஆடம்பரத்தைக் கருதுகிறவர் என்று சொன்னுள். அதற்கு அவர் அது எப்படியாகும், என்றுர், அதற்கு அவள் நாங்கள் எங்கள் பூக்களிலும் உல்லாச உடைகளிலும் பெருமைப் பாராட்டுகிறதைப்போலவே நீரும் உம்முடைய தாடியிலே பெருமைப் பாராட்டுகிறீர், என்றுள். இந்தக் கடிந்துகொள்ளுதலை அவர் சட்டைசெய்யாமல் ஜாடையாய் விட்டுவிட்டார்.

1834–ஆம் அக்டோபர்மீ 14௳ கப்பல் கள்ளிக்கோட்டை துறைமுகம் சேர்ந்தது அந்த இடம் வியாபாரத்திற்கு மத்திய இடமாயிருந்தது. ஹெபிக் கரையில் கால் வைத்தவுடன் தம்தோழரைப்பார்த்து, இங்கே நாம் அஞ்ஞானத்தைப் பார்க்கிறேம் என்றுர், அந்தசமயம் அங்குள்ள ஜனங்கள் எல்லாருக்கும் அதிக அலுவல் நேரமாயிருந்தது. ஜனங்கள் வருகிறதும் போகிறதுமாயும் படகுக்காரர்கள் படகுகளைத் தள்ளுகிறதும், செம்படவர்கள் தங்கள் வலைகளைச் சுத்தம் செய்வதும், தைப்பதுமாயிருக்கிறதேயொழிய மற்றபடி ஹெபிக் சொன்னமாதிரியான ஒரு அஞ்ஞானமும் அவர்கள் கண்களுக்குத் தோன்றவில்லை. ஆதலால் லீனரும், கிரினரும் ஆச்சரியப்பட்டு 'அஞ்ஞானம் எங்கே' என்றுர்கள். அதற்கு ஹெபிக் அங்கே அழுகிநாற்ற மெடுக்கிற மீன்களின் குவியலை காண்பித்து அதோ தெரிகிறதே அதன் நாற்றம் உங்களுக்கு வீசுகிறதில்லையா? இப்போ நமக்கு இங்கே கிடைத்திருக்கிறவேலை அப்படிப்பட்டதுதான், நாற்றமெடுக்கிற அந்த குவியலைப்போலொத்ததை பரிசுத்தப்படுத்துவதுதான் நம்முடையவேலை. செத்தவனுக்கு ஜீவன் இயேசுகிறிஸ்துவால் கிடைக்கும் என்பதை விளக்கி இப்படிப்பட்ட அசுத்த நிலைமையிலுள்ளவர்களை சுவிசேஷத்தால் சுத்தப்படுத்துவதேயொழிய வேறென்ன? என்று அவர்களுக்குச் சொன்னுர்.

ஐரோப்பா தேசத்திலிருந்து கப்பல் கள்ளிக்கோட்டையைச் சேர்ந்ததென்று அங்கிருந்த பிரிடிஷ் ஜட்ஜியாகிய கனம்: நெல்ஸன்துரை அறிந்தபோது அவர் உடனே கப்பல்துறைக்குச்சென்று சீமை சமாச்சாரத்தை விசாரிக்கவும், யாராகிலும் அவருடைய சிநேகிதர்கள் அக்கப்பலில் பிரயாணம் செய்து வந்திருக்கிறுர்களாவென்று பார்க்கவும் போனுர். அங்கே அவர் இந்த புதிய ஜெர்மானிய மிஷனெரிகளைப் பார்த்தவுடனே, அதிக சந்தோஷத்தோடு அவர்களை தம்முடைய அழகான மாளிகைக்குள் அழைத்து அவர்களுக்காக கூடாரங்களையும் அடித்து, கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர்பார்த்த இந்த மிஷனெரிகளுக்கு அந்த இடத்தில், நெல்ஸன் துரையினுல் ராஜமரியாதை செய்யப்பட்டது. அந்த மூன்று மிஷனெரிகளும் இந்த துரையின்வீட்டில் சிலகாலம் தங்கினுர்கள். கனம்: நெல்ஸன் ஜட்ஜ் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவரானபடியால் அந்த இடத்திற்கு ஊக்கமுள்ள மிஷனெரிகள் அனுப்பப்படவேண்டுமென்று அடிக்கடி ஜெபித்து வந்ததினுல்தான் இந்த பேசல் மிஷனெரிகளை தம் வீட்டில் வைத்துக்கொள்ள அதிகப் பிரியப்பட்டார்; ஆனுல் அவர்கள் மங்களூர் போக வேண்டியவர்கள் என்று அறிந்துகொண்டபடியால் மங்களூர் சப்கலக்டர் கனம்: பின்ட்லே ஆண்டர்ஸன் துரைக்கு ஒருகடிதம் எழுதி இந்த மூன்று தேவ ஊழியரும் உம்மிடத்திற்கு வருகிறுர்கள், அவர்களுக்கு உம்மால் கூடிய உதவியை செய்ய வேண்டுமென்று ஒரு கடிதம் எழுதினுர். அந்தக் கடிதத்திற்கு சவாபு வருகிறவரையிலும் அவர்களை அவரிடத்தில் வைத்துக்கொண்டு, கன்னடிய பாஷையைக்குறித்தும் இன்னும் மற்ற விஷயங்களைப்பற்றியும் அந்த மிஷனெரிகளுக்குச் சொல்லிக் கொடுத்து வந்தார். அதன்பிறகு அவருடைய சொந்தப் பணத்தைக்கொண்டு அதிக விலையுள்ள கன்னடிய பாஷை அகராதி ஒன்றும், இலக்கண புஸ்தகம் ஒன்றும் சென்னையிலிருந்து தருவித்து அவர்களுக்கு இனுமாகக் கொடுத்தார்.

அதற்குள்ளாக கனம்: ஆண்டர்ஸன் துரையவர்களிடமிருந்து சந்தோஷகரமான அழைப்பின் கடிதம் கனம்: நெல்ஸன் துரைக்கு வந்ததால் இந்த மூன்று மிஷனெரிகளும் அவ்வூர்ப் படகு ஒன்றில் ஏறி ஆறு நாள் பிரயாணஞ்செய்து அக்டோபர்மீ 30௳ மங்களூரைச் சேர்ந்தார்கள். அப்போது அன்புபெருத்த சப் கலெக்ட்டர் ஆண்டர்ஸன்துரை இவர்களுக்கு அதிக பட்சத்தோடு நல்வரவுகொடுத்து, ஏற்றுக்கொண்டார். அவர் இவர்களுக்கும், இன்னும் பிறகு வந்த அநேக தேவ ஊழியர்களுக்கும் சுமார் இருபது வருஷகாலமாக பலவிதமான நன்மைகளைச் செய்துவந்தார்.

டி. யஸ். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

### சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது

### வேவுகாண்டம்.

பொருளடக்கம்.

வேதாளம் ஏதேனுக் கருகாமையில் வந்ததும், தேவனுக்கும் மனிதனுக்கும் விரோதமாய்ப் பிணைத்த துரோக சிந்தையை நிறைவேற்றக் கருதினதும், சந்தேகம், பயம், பகை, அவநம்பிக்கை, அவனுக்குள் எழும்பினதும் ஏதேன் நந்தவனத்தின் வேலியைத் தாண்டி, கரிக்குருவியின் வேடம்பூண்டு அதைச் சுற்றிப்பார்த்ததும், ஆதாம் ஏவாளின் சிறந்த நிலைமையைக்கண்டதிசயித்ததும், அவர்கள் சம்பாஷணையினுல் ஜீவவிருட்சத்தைப்பற்றிய கட்டளையை யறிந்து, அவர்களைச் சோதிக்க அதை ஓர்கருவியாக நிர்ணயித்ததும், பாவஞ்செய்ய அவர்களைத் தூண்டினதும். யூரியேல் சூரியகிரணத்தின் மேல் வந்து, ஓர் துராவி வேஷந்தரித்து வந்திருக்கிறுனென்று காபிரியேலுக் கறிவித்து அவனை எச்சரித்ததும், காபிரியேல் காலையில் அந்த ஆவியை பிடிப்பேனென்றதும், தூத காவலாளர்கள் ஏதேனைச் சுற்றிப்பார்த்ததும், ஏவாளின் தலைமாட்டில் ஓர் துராவியைக் கண்டு அவனை அந்தட்சணமே பிடித்து காபிரியேலண்டைக்குக் கொண்டுவந்ததும், காபிரியேல் அவனை வினவினதும், அசட்டையாய் அந்த ஆவி உத்தரவு கொடுத்ததும், வானத்திலிருந்து ஓர் அடையாளங் கண்டமாத்திரத்தில், சாத்தானுகிய அந்த ஆவி பறந்தோடிப்போனது மடங்கியிருக்கின்றன.

### 1. சூழ்வினைப் படலம்.


ஆதிசர்ப்பமாகிய பெரிய திராகோன், இரண்டாமுறை தூரத்தப்பட்டு, மனிதர்களைக் கெடுக்கவும் பழிவாங்கவும் விரைந்தோடினதாகவும், அச்சமயத்தில், மானிடர்கள் "ஐயோ," வென்னும் ஓர் சப்தத்தைக் கேட்டதாகவும் யோவான் அப்போஸ்தலன் வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறுர். மேற்சொல்லிய சப்தத்தை நமது ஆதித்தாய் தந்தைகள் இச்சமயத்தில் கேட்டிருப்பார்களென்றுல், அவர்களுக்கு எவ்வளவோ நன்மையாயிருக்கும். ஆயினும் சத்துருவின் சதிமோசத்தைப் பற்றி அவர்கள் எற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

TRADE MARK

## FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rate: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒவ்வொன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—1918.

848

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 12 DEC 1918 MADRAS

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

DECEMBER, 1918. PRICE, 1 PIE.—விலை, க பை. டிசெம்பர், 1918.

## NEWS AND NOTES

### வர்த்தமானக் குறிப்புகள்

**பர்மாவில் பெண்ணுக்கு உத்தியோகம்.**—பர்மாவிலே மிஸ். ஜர்டா ஸ்விதீன் பாங்கு என்று ஒரு மாதுக்கு அசிஸ்டெண்ட் செக்ரிடெரி என்கிற உயர்ந்த உத்தியோகம் கொடுக்கப்பட்டது.

**தேசத்துக்கு விடுமுறை.**—வைஸ்ராயின் உத்தரவுபேரிலே சென்றமீ 16உ இந்தியா முழுவதும் விடுமுறை நாளாயிருந்தது, அடைந்த வெற்றிக்காக அனேக விபவங்கள் எங்கும் நடத்தப்பட்டன.

**நாஷனல் காங்கிரேஸ்.**—இம்மாதக் கடைசியிலே டில்லியில் கூடும் இந்திய மகா சபைக்கு அலகபாத்தைச் சேர்ந்த மதன் மோகன மாளவீயா என்பவர் சபா நாயகராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**அஸாமில் பெண் கல்வி.**—வட இந்தியாவிலுள்ள அஸாம் மாகாணத்தில் இரண்டு அஸாம் பெண்கள் இவ்வருஷம் பி. ஏ. பரீட்சை கொடுத்துப் பட்டம் வாங்கியிருக்கிறார்கள். சென்னையிலே 25 பேர் பட்டம் பெற்றார்கள்.

**நிஜாமும் மதுவிலக்கும்.**—H. E. H. என்கிற மிக்க உயர்ந்த பட்டம்பெற்ற நிஜாமவர்கள் துலுக்க உற்சவ காலங்களில் மதுபானம் விற்கவேபடாதென ஒரு சட்டம் ஏற்படுத்திவிட்டார். எந்நாளும் விற்கப்படாதென்றால் எத்தனை நன்றாயிருக்கும்.

**இங்கிலாந்திலே புது பார்லிமெந்து.**—இம்மாதம் இங்கிலாந்திலே புதுப் பார்லிமெந்து மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இம்முறை லாயிட் ஜார்ஜ் அவர்கள் பிரதம மந்திரியாக நியமிக்கப்படுவாரென அனேகர் நம்பியிருக்கிறார்கள்.

**தேங்காயோடு.**—கொட்டாங்கச்சி என்கிற தேங்காயோடு நெருப்புக் குதவுகிற வஸ்துவானதால், அதை என்ஜின்களில் அதிகமாய் உபயோகிக்கலாம் என்கிறார்கள். இத்தேசத்தில் இம்மாதிரி எத்தனையோ பொருள்கள் நிலக்கரிக்குப்பதிலாக உபயோகிக்கப் படலாம்.

**மழை விவரம்.**—அக்டோபர்மீ 15உ ஆயும் பெய்யத் தொடங்கவேண்டிய மழை பெய்யாமையால் மிக உஷ்ணமும் சங்கடமும் பயிர் நஷ்டமும் உண்டாயிருந்தது. ஆனால் நவம்பர்மீ 1உ மழை பெய்ய ஆரம்பித்து அதிகமாய் வருஷித்து, விளாவிலே 53 அங்குலத்துக் கதிகமானமழை பெய்துவிட்டது இது நல்ல காரியம்.

**ஜேர்மன் கொடுமை.**—ஒரு கொடுமையானது, சென்ற மூன்று வருஷகாலத்தில் ஜெர்மன்கள் பெல்ஜியரிடத்திலிருந்து யுத்தச் செலவுக்காக 2,330 மில்லியன் (1 மில்லியன் 10 லட்சம்) ரூ. வரியாகப் பிடுங்கிக்கொண்டதுமன்றி அனேக வர்த்தகர் முதலானோர் பேரிலே அபராதம்போட்டு ஏராளமான பணம் அபகரித்துக் கொண்டார்கள்.

**ஜப்பானிய கல்வி விர்த்தி.**—ஜப்பான் பள்ளிக்கூடங்களிலே 52 லட்சத்து 65000 மாணாக்கருண்டு. பி. ஏ. போன்ற உயர்தரப் பரீட்சை கொடுத்த உபாத்திமாரின் மொத்தத் தொகை 9 லட்சத்து 1,621 பேர் அரசாங்கம் தங்கள் சொந்தக்கையில் இருக்கிறதினாலே எவ்வளவு விர்த்தி உண்டாயிருக்கிறது. இத்தேசத்திலும் இவ்வாறே நடக்கும்.

**இந்திய அரசுத் திருத்தம்.**—இதன் ஏற்பாடுகளைச் சீராய் ஒழுங்கு செய்யும்பொருட்டு இரண்டு கமிட்டிகள் ஏற்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் சமாதான ஒழுங்குசெய்ய லண்டனில் ஒரு சங்கம் கூடும். அதிலே இந்தியாவுக்கென்று ஒரு மெம்பர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பேர் சத்தியேந்திர சிம்ஹா. அவர் பங்காளி லாயர். இது இத்தேசத்துக்குச் சிறந்த கௌரவம்.

**பெண்களுக்கு உத்தியோகம்.**—கல்வி கற்பித்தல், வைத்தியம்—இந்த இரண்டுதவிர வேறு உத்தியோகங்கள் கல்வி பயின்ற பெண்களுக்குக் கிடைக்கிறதில்லையென்று ஒரு மாது குறை கூறுகின்றாள். குற்றம் பெரும்பாலும் அவர்களுடையதே. சித்திரம், வாத்தியம், நூல்கள் எழுதல், சர்க்கார் வேலை அமர்தல், தபால், டெலிகிராப், டெலிபோன் முதலிய வேலைபார்த்தல், ஆபீசுகளில் டைப்ரைட்டர் வேலை செய்தல்.

**மைசூர் சர்வ கலாசாலை.**—புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட மைசூர் சர்வகலாசாலையின் வருஷாந்தக் கூட்டம் சென்ற மாதம் 20உ நடந்தது. ஏறக்குறைய 30 பேர் பி. ஏ. பட்டம்பெற்றார்கள். அவர்களில் பிராமணப்பெண் ஒருத்தி, பங்காளியாகிய அஷு டோஷ் முக்கர்ஜி அவர்கள் உபந்நியாஸஞ் செய்தார். அரசன் அங்கு வகித்திருந்து பெண் கல்வியை விர்த்திசெய்ய வேண்டுமென்று வற்புறுத்திப் புகன்றார்.

**இன்புளுவென்சா ஜுரம்.**—இந்தச் சர்வலோகப்பிணி சென்றமீ பேராபத்துண்டாக்கி விட்டது. லட்சாதி லட்சமான பேர்கள் இந்தத் தேசத்தில் பீடிக்கப்பட்டு, அனேக ஆயிரமானவர்கள் அதற்கிரையானார்கள். இங்கிலாந்திலே மட்டும் வாரத்துக் கேழாயிரம்பேர் மாண்டார்கள். அது கண்டவுடனே படுத்துக்கொண்டு, கஞ்சி பால் முதலானது மாத்திரம் சாப்பிட்டு, சுத்த ஆகாயம் சுவாசித்து வந்தால் தப்பித்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் நியுமோனியா என்கிற நெஞ்சிலே சளி நிறைந்த நோய் தொடங்கி மரணம் நேரிடும்.

**பிரஷியா ராஜ்யம்.**—ஜெர்மன் ராஜ்யங்களிலே இதுவே பெரிதும் முதன்மையானதும். இதன் அரசன்தான் ஜெர்மன் ராஜ்யங்கள் அனைத்துக்கும் 1870—வருஷத்திலே சக்ரவர்த்தியானான். அவன் மகன்தான் இப்பொழுது ஓடிப்போன கைசர் என்பவன். தன் சொந்த சேனையுடன் இருந்து போராடி ஜெயிக்க அல்லது உயிர்கொடுக்க மனமில்லாமல் தேசத்தைவிட்டு, சிங்காசனத்தைக் காலி செய்துபோட்டு ஓடிப்போனவன். இந்தப் பிரஷியா ராஜ்யம் இப்பொழுது சுய அரசாய்விட்டது. இனி இந்த ராஜகுடும்பம் உலகத்திலிருந்து நிர்மூலமாய்விட்டது.

**டிசெம்பர்மூ பஞ்சாங்கம்.**—

| வாரம். | டிசெம்பர்மீ = கார்த்திகை—மார்கழி. ● அமாவாசை, 3உ ⊙ பௌர்ணமி, 17உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கார்த்திகை—மார்கழி. | | | | |
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 30 | 7 | 14 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 1 | 8 | 15 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 18 | 25 | 2 | 9 | 16 |
| புதன் ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 3 | 10 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 4 | 11 | ... |
| வெள் ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 6 | 13 | ... |

**கைத்தொழில் இலாகா.** — இந்த டிபார்ட்மெண்ட்கனம்: இன்னஸ் கலெக்ட்டரவர்கள் கையில் ஒப்புவித்திருக்கிறது. அவர் பிரசுரஞ் செய்திருக்கிற வருஷப் பத்திரிகையைப் பார்த்தால், கவர்ன்மெண்டார் எவ்வளவு பிரயாசையும் செலவும் எடுத்துக்கொள்வதால் பிரஜைகள் பலவிதமான கைத்தொழில்கள் பயின்று தங்களுக்குப் பிழைப்பும் தேசத்துக்குச் செல்வமும் வருவிக்கப்படுகிறது. சிறு சிறு எஞ்சின்கள் அங்கங்கே வைத்து அரிசி தீட்டல், மாவரைத்தல், கரும்பு ஆலையிடல், எண்ணெய் இறக்கல் முதலான வேலைகளை விரைவாயும் சொற்பசெலவுக்குள்ளானதாயும் நடத்தி வரலாம்.

**சென்னையிலே பெரும் புயல்.** — சென்றமீ 10வ ஞாயிற்றுக் கிழமை இரவு சுமார் 10 மணிக்குமேல் பட்டணத்திலே எந்நாளுமில்லாத அதிமூர்க்கமான புயலடித்தது. வேரோடே விழுந்துபோன மரங்களுக்குக் கணக்குக் கிடையாது. எத்தனையோ தோட்டங்கள் அழிந்துபோயின. இலெக்டிரிக் கம்பிகளும், டெலிபோன் டெலிகிராப் கம்பிகளும் முறிந்து ஒடிந்து விழுந்துபோயின. அனேக வீடுகளிலே விளக்குகள் இல்லாமல் தவிக்கிறார்கள். முற்காலத்தில் இந்தப் புயலடித்திருந்தால் அதிக கப்பற்சேதம் உண்டாயிருக்கும். சில சிறுகப்பல்கள் மாத்திரம் முழுகிப்போயின.

**தேசா தேச சங்கம்.**—உலகமெங்கும் இஷ்டமான ராஜ்யங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ஓர் சங்கமுண்டாக்கி, சகலமும் அச்சங்கத்தின் தீர்மானப்படி நடந்தால், யுத்தமென்கிறதே நேரிடாதென்றுணர்ந்து இப்பொழுது இப்பேர்ப்பட்ட சங்கமொன்று ஸ்தாபிக்க எத்தனிக்கப்படுகிறது. இதிலே இங்கிலாந்து யூனைட்டெட்ஸ்டேய்ட்ஸ், பிரான்ஸ், இத்தலி, ஜப்பான், முதலிய பெரிய ராஜ்யங்களும், பெல்ஜியம், ஹாலந்து, சுவிட்ஸெர்லந்து, ஸ்பெய்ன், போர்த்துகல் முதலிய சிறு ராஜ்யங்களும் சேர்ந்துகொள்ளுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஜெர்மனி, ஆஸ்திரியாவுக்கு இடங்கிடையாது போலும்.



ஜப்பானில் பூமியதிர்ச்சி.

## THE WAR

### யுத்த வரலாறு

நாம் எண்ணின பிரகாரம் சென்றமீ 11வ திங்கட்கிழமை காலை 11 மணிக்கு யுத்தம் நிறுத்தப்பட்டது. 1914ஆ ஆகஸ்ட்டுமீ 4வ தொடங்கின பிரசண்டமாருதம் ஒழிந்தது. பெரும்புயலடித்து நின்றது. உதிர ஆறு வற்றினது. வீரர் சச்சரவு ஒழிவுபெற்றது. வர்செய்லஸ் பட்டணத்திலே தற்காலச் சமாதானப்பத்திரம் ஜெர்மன்களால் கையொப்பம் வைக்கப்பெற்றது. தங்களுக்கு வெகு கடினமானதால்தான் இரண்டுவாரம் கையெழுத்துப்போடப் பின்வாங்கினார்கள். ஆகிலுந் தேசத்திலுண்டான பற்பல குழப்பங்களையும், யுத்தகளத்திலே அனுபவித்த ஓய்வொழிவில்லாத அபஜெயங்களையும், உயிர்ச்சேதத்தையும், உடல்சேதத்தையும், பொருள்நஷ்டத்தையும் உற்றுக் கவனித்த ஜெர்மன் புத்திமான்கள் சமாதானம் உடனே செய்துகொள்ளவேண்டுமென்றும், நட்பரசர் கேட்டதற்கெல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் சாதித்தார்கள். கைசர் ஒருவன் மட்டும் சிங்காசனத்தையும் அரசையும் ஒருக்காலும் விடேனென்று சாதித்து நின்றான். ஆயினும் அவன் தாமதித்தால் அவசியம் உயிர்ச்சேதம் உண்டாகுமென்றறிந்து, தானும், மனைவியும், மூத்தகுமாரனும், பேரனும், ஹிண்டன்பர்க்கு தளகர்த்தனும் ஆகப்பத்துப்பேர் சேர்ந்து, ரெயில்மார்க்கமாக ஹாலண்ட் நாட்டுக்கு ஓடிப்போய் அங்கொரு கிராமத்தில் அடைக்கலம் புகுந்து கிடக்கிறார்கள். அவன் பிரஷியா தேசத்தரசனானதால், அதற்கொரு பிரதிநிதி ஏற்பட்டிருக்கிறான். ஆயினும் வெகு சீக்கிரத்திலே அதுவும் சுய அரசாட்சியாய்விடும் என்று எண்ணுகிறோம். ஏனென்றால், ஜெர்மன் ராஜ்யத்திலே அடங்கியிருக்கிற மற்ற சிற்றரசுகளாகிய பவேரியா, சாக்சனி, உவர்ட்டெம்பர்க்கு, ஓல்டென்பர்க்கு, மாக்லென்பர்க்கு, ஹெசி முதலியவையெல்லாம் சுய அரசாய்விட்டன. பவேரியா அரசன் தன் குமாரத்திகளோடு தப்பி ஓடிவிட்டான். அதனாலே பிரஷியா நிலைக்காது. அடாதுசெய்கிற அரசர்கள் அனைவரும் படாதுபட்டே தீரவேண்டும். இனி ஜெர்மன் ராஜ்யமென்ற பேரே கிடையாது. அவ்வாறே பல்கேரியா, ஆஸ்திரியா, போலந்து, ரஷியா முதலான ராஜ்யங்களெல்லாம் சுய அரசுகளாய் மாறிவிட்டன. எங்கும் சமாதானக்கொடி பறக்கின்றது.

இந்த நாலுவருஷத்து யுத்தம் நன்மைக்கும் தீமைக்கும், தர்மத்துக்கும் துற்குணத்துக்கும், நீதிக்கும் அநீதிக்கும், உலகாரம்பம் முதல் நடந்துவருகிற இடைவிடாத சச்சரவே. இந்தப் போராட்டம் உலகத்திலே எந்நாளும் நடந்துவருகிறது. ஒவ்வொரு உள்ளத்திலும் இது நடந்துவருகிறது, என்பது நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த யுத்தம் சில சமயங்களிலே குடும்பங்களுக்கும் ஜாதிகளுக்கும் ஜனங்களுக்கும், தேசங்களுக்கும், பெருத்த ராஜ்யங்களுக்கும் பரஸ்பரமாய் நடந்துவரும். தீமை நன்மையைச் சகிக்காது. அதர்மம் தர்மத்தை அழிக்கவே வகைதேடும். ஆகிலும் இறைவன் நன்மை சொரூபியும் நீதிவஸ்துவு மானமையால், சிலகால மானாலும், நெடுங்காலமானாலும், சிலருக்கானாலும் பலருக்கானாலும் நன்மையே ஜெயிக்கும் தற்காலம் நன்மையை நாடிவருகிற இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு முதலிய ராஜ்யங்கள் நன்மையை விட்டு நழுவித் தீமையைத் தழுவி நடந்தாலும் இதுகளுக்கும் ஜெர்மனியின் கதியே கிடைக்கும்.

ஜெர்மனிக்கு விதிக்கப்பட்ட சாதனங்கள் மகாக் கொடியவைகள். 36 தினத்துக்குள்ளே இதுகள் யாவற்றையும் நிறைவேற்றித் தீரவேண்டும். கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது. இந்த அபஜெயத்தையும் மானபங்கத்தையும் கஷ்டநஷ்டத்தையும் கைசர் 5 வருஷத்துக்கு முன்பு கண்டறிந்திருந்தால், இந்த யுத்தத்தை அத்தனைக் கர்வத்தோடும் காம்பீரத்தோடும் தொடுத்திருக்கவே மாட்டான். அவன்கதி யென்ன! தலைகவிழ்ந்து ஊரைவிட்டு ஓட நேரிட்டது. அந்நிய நாட்டிலே யாசகனாய்ப் புகுந்து கிடக்கிறான். அங்கேயும் அவன் தப்பான். நட்பரசர் அவன் பேரிலே பெரிய பல பழிகள்



சுமத்தி, நியாய விசாரணைசெய்து அவனையும் அவன் கூட்டாளிகளையும் அவசியம் தண்டிப்பார்கள். அரசன் அன்று கொல்லும், கடவுள் நின்று கொல்லும்.

இப்பொழுது ஜெர்மனி தன் சேனைகளையெல்லாம் புறதேசங்களிலிருந்து வரவழைத்துக் கலைத்துப்போட வேண்டும். போர்வீரரெல்லாரும் கைதிகள். நட்பரசரின் கைதிகள் எல்லாரும் உடனே விடுதலையாகவேண்டும். சப்மெரின்கள், கப்பல்கள், யாவும் ஒப்படைக்க வேண்டும். ஐயாயிரம் ரெயில்வே எஞ்சின்களும், ஒன்றரை லட்சம் வாகன்களும், 5000 மோட்டர்கார்களும், கொடுத்துவிடவேண்டும். ஏதாயினும் அறைகுறை, தப்புத் தாமதம் உண்டாயின், சண்டை தட்சணம் தொடங்கிவிடும். அபகரித்த நாடுகள் யாவும் உடையவருக்குத் திரும்பச் சேர்த்துவிடவேண்டும். உதைக்கப்போய் உதைப்பட்டு வந்த சங்கதியிது. ஜெர்மன் அகங்காரம் அழிந்ததென்னலாம். உலகமனைத்தையும் கெலித்து, ஆண்டு அடக்கவேண்டுமென்றவர்கள் அரசனில்லாமலும் அமைச்சனில்லாமலும் தவித்துக் கிடக்க நேரிட்டது. 45 வருஷமாகச்செய்த பகீரதப் பிரயத்தனமெல்லாம் 4¼ வருஷத்திலே சுத்த வீண் பிரயத்தனமாய் மாறிவிட்டது. என்ன செய்கிறது. கடவுள் ஒருவருண்டு அவர் அண்டசராசரமெல்லாம் அரசாண்டு வருகிறார். அகந்தையையும், அநியாயத்தையும் அழித்தே விடுவார். தர்மமே தலை காக்கும். அவரையே கையெடுத்து அத்தியந்த பயபக்தியுடன் ஸ்தோத்திரிப்போமாக.

## யுத்தமும் இந்திய மாதும்.

ஒரு ஸ்திரீ சாதாரண உயரமான ஒரு பலகையின்மேல் உட்கார்ந்து தன் முழங்காலின்மேல் தன் முழங்கையை ஊன்றி, வணங்கின தன் தலைமேல் தன் கையின் ஐந்து விரல்களையும் பதித்துக்கொண்டு, கீழ்நோக்கி ஏதோ ஒரு ஆழ்ந்த கருத்துடையவளாய் சிந்தனையும், பெருமூச்சு அடிக்கடி விடும்போதே, தாமரைபோன்ற அவள் கண்களினின்று முத்துகளைப்போன்ற கண்ணீர், செந்தாமரைபோன்ற அவளுடைய கன்னங்களில் புரள, விசாரத்தால் அவள் கூந்தல் ஒருவாறு கலைந்து, சந்திரனைப்போன்ற அவள் முகத்தில் கார்மேகம்போன்ற துக்கம் மூட, இங்குமங்கும் புரசாவண்ணம் குனிந்த தலையை நிமிராமல் இருக்கிறாள். ஐயோ இது என்ன விந்தை! அவளுக்குண்டான வியாகுலமென்ன? வந்த ஆபத்தென்ன! 1914-ம்ஆ ஆகஸ்ட் மீ 4-ம்வ நமது காருண்ணிய ராஜாங்கத்தார் பலஹீனருக்கு உதவிபுரியவும், சத்தியத்தை நிலைநாட்டவும் அவர்கள் தொடுத்த யுத்தத்தை இவள் நன்குணர்ந்து யுத்தத்தால் பல தீமைகளும் கொடிய துன்பங்களும் விலை ஏற்றமும், அதனால் பஞ்சமும உண்டாகுமென்பதை இவள் ஏற்கனவே பற்பல சரித்திர சம்பவங்கள் மூலமாய் தெரிந்திருந்தபடியால், ஐயோ இக்கொடிய யுத்தக்காலத்தில் என்குடும்பத்தை எப்படி ஈடேற்றப்போகிறேன், என்கணவன் வருமானமோ அதிக சொற்பம், நான் ஈன்றெடுத்த பிள்ளைகளோ அதிகம், நான் எப்படி இந்த யுத்த காலத்தில் பிழைக்கப்போகிறேன். கஷ்டப்பட்டு உழைக்கும் என் கணவனுக்கும் பாடசாலைக்குப் போகும் என் புத்திரர்களுக்கும் நேரம் தப்பாமல் உணவையும், அவர்களுக்கு வேண்டிய உடைகளையும், பிள்ளைகளுக்கு வேண்டிய சம்பளம், புஸ்தகங்கள் முதலியவைகளையும் சவதரித்து இக்குடும்பத்தை எவ்வாறு நடத்தப்போகிறேன்' என்று பலவாறாய் துக்கிக்கிறாள்.

டி. யல். ராஸ்.
சங்கிரி துருகம், சேலம்.

## SAMUEL HEBICH OF MANGALORE

### சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

#### மூன்றும் அதிகாரம்

#### இந்தியாவில் பேசல் மிஷனை ஸ்தாபிதம் செய்தல்

(தொடர்ச்சி.)

அச்சமயம் இந்தியாவின் தென்மேற்கு கடபாகத்தில் சர்ச்மிஷன் சங்கத்தார் வேலை செய்து வந்தார்கள். அந்த இடத்திலிருந்து மேற்குக்கரையாய் 500 மைல் தூரமுள்ள பம்பாய் வரையிலும் புரொடஸ்த்தாந்து மிஷன் ஊழியம் ஒன்றும் நடைபெறவில்லை. உள்பாகத்தில் 200, 300 மைல் தூரத்துக்கப்பால் இருக்கிற பெல்காம் பெங்களூர், பல்லாரி முதலியவைகள்தான் உங்களுக்குச் சமீபமான மிஷன் ஸ்தானங்களாய் இருந்தன. இப்போது இந்த புதிய மிஷனெரிகள் கன்னடிய தேசத்தில் தங்களுடைய ஊழியத்தைத் தெரிந்துக் கொண்டபடியால் சமீபமாய் இருந்த லண்டன் மிஷன் சங்கத்தைச் சேர்ந்த மிஷனெரிமார்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கு அவர்கள் இந்த புதிய மிஷனெரிகளுக்கு ஒரு உற்சாகமாக கடிதத்தை எழுதி அடுத்த தபாலிலேயே இவர்களுடைய ஊழியத்தை நடத்த உதவியாய் இருக்கும்படி கன்னடிய பாஷையிலுள்ள ஒற்றை தாழ்க்களையும் வேதாகம சிறு புஸ்தகங்களையும் பார்சல்செய்து அனுப்பினார்கள். அதை அவர்கள் உடனே உபயோகப் படுத்தினார்கள். இப்போது இவர்கள் அத்தேசப் பாஷைகளைப் படிக்க முயற்சி எடுத்தார்கள். அந்த சமயம் அவ்விடத்தில் 651,000 ஹிந்துக்களும் 41,000 மகமதியரும், 20,000 ரோமான்மார்க்கக் கிறிஸ்தவர்களு மிருந்தார்கள். விசேஷ பாகத்தார் கன்னடிய பாஷைகளையும் ரோமான் கிறிஸ்தவர்களும் கோவாமுதலிய இடங்களிலிருந்து அடைக்கலம் புகுந்த சில வியாபாரிகளும் பிராமணர்களும் கொங்கிணி பாஷையை பேசிவந்தார்கள். சாமுவேல் ஹெபிக் ஐயரும் கிரீணர் ஐயரும் கன்னடிய பாஷையையும் லீணர் ஐயர் மற்ற கொங்கிணி முதலிய பாஷைகளையும் படித்துவந்தார்.

அவ்வளவு ஜனங்கள் மத்தியில் பதினெட்டு ஐரோப்பியர் மட்டும் வசித்து வந்தார்கள். கண்ணனூரிலிருந்து ஆங்கில குரு ஒருவர் இந்த ஐரோப்பியரை வருஷத்திற்கு இருமுறை சந்தித்து வருவார். ஆதலால் அந்த ஐரோப்பியர் இந்த புதிய மிஷனெரிகளை தங்களுக்காக ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஆராதனை செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். இவர்களுக்கு ஆங்கில பாஷை செவ்வையாய் தெரியாதானபடியால் இந்த மிஷனெரிகள் ஒவ்வொரு வாரத்திற்கு ஒருவராக முறைவைத்து ஆயத்தம்செய்து ஆங்கில பாஷையில் ஆராதனை நடத்துவார்கள். இவர்கள் ஆங்கில பாஷையில் தப்பிதம் செய்தாலும் அதை அந்த ஆங்கிலேயர் கவனியாமல் அவர்களுடைய பிரசங்கத்தை அதிகமாய் மதித்து வந்தார்கள். சீமை தேசத்து கமிட்டிக்கு இவர்கள் முதல்வருஷ ரிப்போர்ட்டை அனுப்பும்போது, அது அதிக மனோ உற்சாகமும் சந்தோஷமும் பொருந்தினதாய் இருந்தது. அந்த ரிப்போர்ட்டை கனம்: ஹெபிக் பின்வருமாறு எழுதுகிறார். கர்த்தராகிய தேவன் எங்களை இங்கே அனுப்பினாரென்றும் அவரே எங்களை இவ்விடத்தில் இதுவரையிலும் நிலைநிறுத்தினாரென்றும் அவருக்குள் பூரண நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கிறோம், நாங்கள் இருக்கும் இந்த இடம் பண்படுத்தாததும், ஆவிக்குரிய ஜீவனை நிரப்ப விசாலமுடையதாயுமிருக்கிறது. நாங்கள் இப்போது கன்னடிய பாஷை, கொங்கிணி பாஷை முதலியவைகளை கற்றுவருகிறோம். (இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

### பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

#### வேவுகாண்டம்.

தப்பிக்கொள்ளப் பிரீதியுற்றவர்களானால் தப்பிக்கொள்ள அவர்களால் கூடும். ஆனாலிப்போது காரியமிஞ்சிப்போய்விட்டது. சாத்தான் அகங்காரப் பிரமைகொண்டு மனிதசாதியைச் சோதிக்கவும் கவிழ்த்துவிடவும் துணிந்துவிட்டான். தனக்குண்டான பெரிய நஷ்டத்தை நிவர்த்தியாக்கும்பொருட்டு குற்றமற்ற மனிதனை பழிவாங்க வேண்டுமென்கிற சிந்தை அவனிடத்தில் பூர்த்தியாயிருந்தது: நரகபாதாளத்திலிருந்து சாமர்த்தியத்துடனே வந்ததை நினைத்து கெர்வமடைகிறதை சற்றே நிறுத்தி தனது சதிசர்ப்பனையான யோசனைகளை நிறைவேற்றப் பார்க்கிறான். அவன் உள்ளங்கொந்தளித்து நாகர்லோக இயந்திரத்தைப்போல அவனை உபத்திரவப்படுத்தினது. பயம், திகில், சந்தேகம் இவைகள் நீர்க்குமிழிகள்போல அவனுக்குள் கலக்கத்தையுங் குழப்பத்தையு முண்டுபண்ணின. ஆம், ஒரே வார்த்தையாக, அவனுக்குள்ளும் புறம்பும் நரகமாயிருந்தது. அவன் தன்னைவிட்டுப் பிரிந்திருப்பது அசாத்தியமாயிருப்பதுபோல நரகத்தைவிட்டுப் பிரிந்திருப்பதுங் கூடாமையாயிருந்தது. இவ்வாறு அவன் குழம்பிக்கொண்டிருக்கும்போது, அவனுடைய மனசாட்சி விழித்துக்கொண்டு அவனுடைய திரிகால நிலைமைகளையும் அவனுக்குணர்த்தி அவனுடைய செய்கைகளின் பலாபலங்களையும் அவனுக்கு விபரமாய்க் காட்டி வாதித்தது. அவநம்பிக்கை அதிகரித்தது. உயரமான ஓர் குன்றின் மேலேறி செல்வம்பொழிந்த ஏதேன் பூங்காவன பக்கமாய்த் திரும்பி, உச்சியில் பிரகாசமாய் விளங்கி நிற்கும் ஆதித்தனையும் பார்த்து நானாவிதமான காரியங்களை யோசிக்கலானான். யோசித்த பிற்பாடு பெருமூச்செறிந்து அடியில்வரும் பிரகாரம் பிதற்றுகிறான்.


#### 2. வேதாளம் பிதற்று படலம்.

ஓ, நிகரில்லா மகத்துவத்தை ஆடையாக அணிந்துகொண்டிருப்பவரே! சராசரமனைத்தையும் விசாரித்து நடத்துபவரே! உம்முடைய சந்நிதானத்தில், நட்சத்திரமண்டலங்களாதினவும் பணிகின்றனவே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், ஆனால் மெய்யான அன்புடனல்ல: ஓ சூரியனே! உன்னுடைய கிரணங்களை நான் பகைக்கிறேன்: ஏனென்றால் எனது ஆதி நிலைமையை எனக்கு ஞாபகப்படுத்துகிறாய். ஓர்காலத்தில் நான் உன்னுடைய மண்டலத்துக்கும் மேலானவிடத்தி லிருக்கவில்லையோ! கெர்வத்தினாலும் அகங்காரத்தினாலுமல்லவோ நானிந்த தாழ்வான நிலைமையில் வந்திருக்கிறேன். ஆ, தனக்குவமையில்லாத வானரசனுக்கு நானிப்படி நடந்துகொள்ளவேண்டியதென்ன? எனது ஆதி நிலைமை அவரால் எனக்களிக்கப்பட்ட ஈவல்லவோ! மத்துவம் பொருந்திய அவர் நன்மையை அளித்தாரேயன்றி ஒருவருக்கும் அநியாயம் செய்யவில்லையே. அவருக்கூழியஞ் செய்வது கடினமான காரியமோ! அவருக்குப் பிரதிபலனாக துதியையும் நன்றியறிதலையுஞ் செலுத்துவதைவிட எளிதான காரியமொன்றுண்டோ: ஆகிலும் அவருடைய நன்மைகளெல்லாம் எனக்குத் தீமையாகவே முடிந்தன. பகையும் அகங்காரமும் மீசுரமானதால், கீழ்ப்படிவது மெத்தவும் வெட்கமென்றெண்ணினேன்.


(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஹீனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினால் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்


ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 8031.




Registered No. M. 442.




# சத்திய தூதன்.

JANUARY, 1919. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. ஜனுவரி, 1919.

## NEW YEAR GREETINGS

## புது வருஷ வாழ்த்துதல்

எத்தேசத்தாருக்கும் எம்மதஸ்தாருக்கும் வருஷப்பிறப்பானது கொண்டாடப்படுகிற விசேஷ தினங்களில் ஒன்று. சந்தோஷகரமான பேச்சைப் பேசவும், மனோரம்மியமானவைகளைச் செய்யவும், லாபகரமான காரியங்களை நாடவும், ஆசிப்பது அசாதாரணமன்று. விசேஷமாய், புது வருஷ தினத்தன்று பெரியோரின் முகமலர்ச்சியோடு கூடிய நல்வாக்குப் பொருந்திய ஆசீர்வாதங்களைத் தேடுவதுதான் பிரதானம். கிறிஸ்தவர்களுக்கும் இது வழக்கமாகவே யிருந்திருக்கிறது. அன்று புது வஸ்திரம் தரிப்பதும் விசேஷித்த போஜனம் அருந்துவதும் அமங்கலமான பேச்சு வார்த்தைகளை நீக்குவதும் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது சந்தோஷமுகத்துடன் வாழ்த்துதல் சொல்லுவதும் சகஜமே. ஆலயத்திற்குப் போவதும் தெய்வபிரசாதமாகிய வேதோபதேசத்தைக் கேட்பதும் குருவானவரின் ஆசீர்வாதத்தைப் பெற்று மறுவேலை பார்ப்பதும் அநேகருக்கு வழக்கம். பெரியோரின் வாழ்த்துதலே பிரதானம். அதிலும், குருமார்கள் வாயினின்றுவரும் ஆசீர்வாத மொழிகள் இன்னும் விசேஷித்தவைகள் என்று மதிப்போர் உளர்.

ஆண்டவரின் பிரதிவிம்பமும் மாமெருலியும் ஆகிய பரி: பவுல் தாம் ஸ்தாபிதம் பண்ணின திருச்சபைகளுக்கு மனக்கனிவுடன் ஆத்ம நன்மைகளைக் கருதிக் கூறிய வாழ்த்துதல் நவமான வருஷத்திற்குட் பிரவேசித்திருக்கும் நமக்கும் ஆசீர்வாத வாழ்த்துதலாக இருக்கிறது. ii கொரிந்தியர் 13, 14-ல் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடும் கூட இருப்பதாக" என்கிறார். இவ்வாசீர்வாத மொழிதாம் வரைந்துள்ள பிரதி நிருபத்திலும் வெகு தெளிவாய் இருக்கிறது. தற்காலக் கிறிஸ்தவ சபையாருக்கும் இவ்வாசீர்வாத வாழ்த்துதலைவிடப் பெரிதானது ஒன்றுமில்லை. மனுஷனுக்கு வேண்டிய சகல பாக்கியங்களும் இச்சுகிர்த மொழிகளில் அடங்கி யிருக்கிறது. ஆகையால் சத்திய தூதனாகிய நானும் உங்களுக்குக் கூற விரும்பும் ஆசீர்வாதமுள்ள வாழ்த்துதல் யாதெனில் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் தேவனின் அன்பும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்களனைவரோடும் இருப்பதாக" என்பதே.

வாழ்த்துதலின் பொருளாவது மூன்று விதம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை, தேவனின் அன்பு, பரிசுத்த ஆவியின் ஐக்கியம்.

கிருபை, அன்பு, ஐக்கியம் ஆகிய இம்மூன்று பாக்கியங்களும் எவர்களில் பெருகுகிறதோ அவர்களே பாக்கியவான்கள். கிருபைக்கு அழகு இரட்சிக்கும் தன்மை (எபே. 2. 8.) "கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்." மனுஷர்கள் பாவிகளானதால் இரட்சண்ணியக் கிருபையன்றி பரிசுத்தத்தில் வளர்வது அசாத்தியம். பிரதி கிறிஸ்தவனும், எவ்வளவு தேறினவனாயினும் பாவியே. (1 யோவான் 1.8. 10.) "நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் நமக்குள் சத்தியம் இராது." "நாம் பாவம் செய்யவில்லை என்போமானால் நாம் அவரை (பிதாவை)ப் பொய்யராக்குகிறவர்களா யிருக்கிறோம்." ஆகையால் இந் நவமான வருஷத்தை ஆரம்பித்திருக்கிற நீங்கள் இவ்வருஷத்தில் பிரதிதினமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையின்றிப் பாவ நிவாரணமாகி பரிசுத்த ஜீவியம் செய்வது கூடாதகாரியம். ஆகையால் இரட்சகரின் கிருபை அவசியம். இதை தமது சொந்த அனுபவத்தில் அறிந்து, உணர்ந்து, அபேட்சித்துப்பெற்று, அனுபவித்து வந்த பரி: பவுல் தம்முடைய சபைகளின் வாழ்வை விரும்பி, அவர்களுக்கும் தேவை என்பதைக் குறிக்கும்பொருட்டு வாழ்த்துதலாக எழுதினார். இந்த இரட்சண்ணியக் கிருபை நீங்களும் பாவத்தினின்று விடுதலை அடைந்து ஜீவிப்பதற்கு இன்றியமையாத தானதால் உங்களோடும் அனுதினமும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை இருப்பதாக.

அன்பு. வாழ்த்துதலில் அடங்கிய இரண்டாம் ஆசீர்வாதம் அன்பே. அன்பிற் கழகு ஈதலே. (யோவான் 3. 16.) "தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்," பாவதோஷங்களில் ஒன்றாகிய தரித்திரம் மனிதனைப் பீடித்திருக்கிறது. இவ்வருஷத்தில் பாவிகளின் தரித்திரம் நீங்குவதற்கு வழி ஒன்றே. பரமராஜனின் ஐசுவரியக் களஞ்சியத்தினின்று வழிந்தோடும் அன்பே அந்த வழி. யாசகன் ஐசுவரியவானை நோக்குவதுபோல் பிரதி மனிதனும் (பக்தன்) தேவனையே நோக்கவேண்டும். (சங். 121. 1.) "எனக்கு ஒத்தாசைவரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்." (சங். 145. 15. 16.) "எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண் டிருக்கிறது. ஏற்றவேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர். நீர் உமது கையைத் திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்." அனுதினமும் தரித்திரம் நீங்கி பசி பட்டினி இன்றி சகல சரீர நன்மைகளையும் ஆத்தும நன்மைகளையும் அடைந்து வாழ்வதற்கு ஈவின் ஸ்தானமாகிய அன்பு பிரதிதினமும் ஒவ்வொருவரிலும் இருப்பது அவசியம். ஆகையால்தான் பவுல் அப்போஸ்தலனும் அனுபவ சித்தாந்தமாய்க் கண்ட இவ்வாசீர்வாதத்தை வாழ்த்துதலில் சேர்த்துச் சபைகளுக்கு எழுதினார். நான் கூறும் வாழ்த்துதலும் வேறெல்ல. "தேவனுடைய அன்பு உங்கள் அனைவரோடும் இருப்பதாக." பரம ஈவாகிய பரிசுத்த ஆவியையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஐக்கியம். இவ்வாசீர்வாதமும் வாழ்த்துதலில் அடங்கியிருக்கிறது. மனிதன் பரிசுத்த நிலைமையில் நிலைத்து வளர்ந்தோங்குவதற்கு பரிசுத்த ஆவியின் ஐக்கிய அத்யாவசியம். ஐக்கியத்திற்கு அழகு சந்தோஷம். (1 யோவான் 13. 4.) "நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்." இப்பரம ஐக்கியத்தின் பலன்கள் அநேகம்:-சத்தியத்தை அறிகிற அறிவு, பாவத்தை உணரும் உணர்ச்சி, மாம்சத்தில் தோன்றிய கிறிஸ்துவை அறிக்கை பண்ணுதல், தேவசித்த மறிந்து ஜெபித்தல், பிதாவை அறிந்துகொள்ளுதல், உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுதல், பரிசுத்தமாகுதல் முதலியன. (யோவான் 16. 13; 16. 8; 1 யோவான் 4. 2; ரோமர் 8. 26; எபே 1. 17; 3. 16; 1 கொரி. 6. 11.)

மேற்சொல்லிய ஆசீர்வாதங்கள் கைவல்லியமாகிச் சுகித்து வாழ்வதற்குரிய பதவியை எல்லா கிறிஸ்தவர்களும் அடையவேண்டும் என்னும் பெருநோக்கத்தோடு இவ்வாழ்த்துதலைக் கூறும்படி நான் ஏற்படுத்தப் பட்டிருக்கிறேன். இவ்வருஷம் ஒவ்வொரு நாளும் பாவத்தினின்று இரட்சிப்பு அடைந்து சகல தரித்திரமும் நீங்கி எல்லா சந்தோஷமும் பொங்கப் பெற்று வாழ்வதற்குக் கிறிஸ்துவின் கிருபையும் தேவனின் அன்பும் ஆவியானவரின் ஐக்கியமும் அவசியம். ஆகையால் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக." இதுவே தேவ ஆசீர்வாதம் நிறைந்த வாழ்த்துதல். ஆமென்.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### மூன்றும் அதிகாரம்

### இந்தியாவில் பேசல் மிஷனை ஸ்தாபிதம் செய்தல்

(தொடர்ச்சி.)

அதோடு இன்னொரு விசேஷித்த ஜாதியார் உண்டு. அவர்கள் துளுஸ் என்றழைக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு எழுத்தில்லாப் பாஷையுண்டு அவர்களே இவ்வூரில் வேளாண்மை செய்கிறவர்கள். அவர்களில் ஒருவனுக்கும் ஆங்கிலம் தெரியாது. அவர்களுக்கும் ஜீவ சுவிசேஷத்தை அவர்களுடைய சொந்தபாஷையில் தர்ஜமா செய்து அவர்களுக்குக் கொடுத்து அந்த பாஷையிலேயே அவர்களுக்குப் பிரசங்கம் செய்யவேண்டும். அந்த ஜனங்களைப்பற்றி எங்களுக்கு அதிக பிரீதிஉண்டு. இதனால் எங்களுக்கு எவ்வளவு காரியம் தேவையாய் இருக்கிறதென்பதை நீங்களே அறிந்து கொள்ளலாம். நீங்கள் சீமைதேசத்திலிருந்து எங்களுக்கு உதவியாகச் சகோதரரை அனுப்பும்போது சிலுவையில் அறையுண்ட ரட்சகரை நோக்கிப்பார்த்துப் பழகின கண்களை உடையவர்களைத் தெரிந்து எங்களுக்கு அனுப்பவேண்டும்.

சம்பளமாகக் கொடுக்கிற 125 பவுன் எங்களுக்குப் போதுமானதா யிருக்கிறது. நாங்கள் கூடிய சீக்கிரத்தில் ஒரு வீட்டையும் வாங்குவோம். ஆனால் அது ஒரு முக்கியமான வேலையல்ல, அநேகருடைய இருதயத்தில் கர்த்தருடைய பரிசுத்தாவி செல்லுமாறு செய்கிறபடியால் அவர்களே திரும்பவும் எங்களுக்குமுன் பிரதிவிம்பிக்கிறார்கள். எங்களுடைய ஆத்துமாக்கள் ஒழுங்காய் நித்திய ஆவியின் ஊற்றண்டை கிரமமாகப் புதிய ஜீவனால் நிரப்பப் படாவிட்டால் அவர்கள் எல்லாரும் மற்ற சாதாரண ஜனங்களைப்போலவே ஆவார்கள். ஆதலால் நாங்கள் ஆவியிலே நடக்கிறபிரகாரம், நித்திய ராஜ்யத்திற்கென்று நற்பலனைக் கொண்டுவரத் தக்கதாக, நீங்கள் தயவாய் உங்கள் ஜெபங்களிலே எங்களை நினைவு கூறுங்கள். இந்தப் புதிய மிஷனெரிகளுக்கு அந்த முதல்வருஷம் எவ்வளவோ கஷ்டமும் உபாதை நிறைந்ததுமாய் இருந்தது. இப்படிப்பட்ட கஷ்டத்தில் உழன்றவர்கள் மாத்திரமே யொழிய மற்றப்படி யார் அறியக்கூடும்? பாவத்தால் நிறைந்த ஜனங்கள் அவர்களை சுற்றிலு மிருந்தார்கள். அவர்கள் பாவத்தில் அமிழ்ந்துபோகிறதையும் அதற்கு உதவிசெய்வார் இல்லாததையும் பார்த்தார்கள். அந்த ஜனங்களைப் பார்த்து வருங் கோபத்துக்குத் தப்பி ஓடுங்கள், இயேசுவண்டை வாருங்கள் என்று கத்திச் சொல்ல எவ்வளவோ ஆவல் இருந்தது. ஆனால் அவர்களுடைய நாவு கட்டப்பட்டிருந்தது. பெங்களூரில் வயோதிபமும் அநுபவசாலியுமான ஒரு மிஷனெரி இவர்களுக்கு ஒருகடிதம் எழுதி, இரண்டு வருஷத்திற்குச் சுதேசபாஷைகளைப் படிப்பதேயல்லாமல் அதற்கிடையில் ஜனங்கள் மத்தியில் யாதொரு வேலையும் செய்யப்படாதென்று தெரிவித்திருந்தார். அதற்கு ஹெபிக், அது என்பொறுமைக்கு மெத்த கஷ்டம் என்று பதில் உத்தரம் எழுதினார்.

எப்ரல், மே மாத உஷ்ணகாலத்திலுங் கூட ஹெபிக் ஒரு முனுஷியின் உதவியினால் கன்னடிய பாஷையில் சின்னச்சின்னப் பிரசங்கங்களை உண்டுபண்ணி ஜனங்களுக்குப் பிரசங்கித்து வருவார். இந்த முனுஷிக்குக் கொஞ்சம் ஆங்கிலபாஷை தெரியும். இவன் அதிக பெருமையுள்ளவன், இவன் முழுவதிலும் பசாசின் கையிலேயே இருந்தான். இவன் ஒருநாள் ஹெபிக் ஐயரிடம் ஒரு பசுவைக் கொல்லுகிறதைவிட நூறுபிள்ளைகளை கொல்லுகிறது அவ்வளவு பாவம் அல்ல என்று சொன்னனும். இது எவ்வளவு பயங்கரமான துஷ்டத்தனம். இவன் சாமுவேல் ஹெபிக் ஐயரைப்பார்த்து, 'பிராமணர்கள் கிறிஸ்தவர்களாக மாட்டார்கள், தாழ்ந்த வகுப்பார்மட்டும் கிறிஸ்தவராவார்கள் அவர்களுக்கு விக்கிரகமாவது சுவாமியாவது கிடையாது, கடவுளைப்பற்றிய எண்ணமே அவர்களுக்குக் கிடையாது, சுகவீனமாகும்போது மாத்திரம் பிசாசுகளுக்குப் பொருத்தனைசெய்து சுகமடைந்த பிறகு ஒரு தேங்காயைப் படைப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் உங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுவார்கள்" இதோடு இன்னொரு கஷ்டமிருந்தது. அங்கேயிருந்த ரோமான் கிறிஸ்தவர்கள் மகா அசுத்தர்களும் பாவ ஜீவியமுள்ளவர்களுமா யிருந்தார்கள். அவர்களை இவன் சுட்டிக்காண்பித்துப் பிராமணர்களாகிய நாங்கள் எவ்வளவோ சுத்தமுள்ளவர்கள். அவ்வளவு அசங்கியமுள்ள கிறிஸ்தவர்களோடேவா நாங்கள் சேரட்டும் என்றான்! அங்கு பெலமாய் தாங்கியிருந்த ஜாதி வித்தியாசமும், ரோமான் கிறிஸ்தவர்களுடைய பாவ ஜீவியமும் ஹெபிக் ஐயருடைய மனதை அதிகமாய்ச்சங்கடப்படுத்திற்று. இதையெல்லாம் அவர் பார்க்கும்போது அவருக்கு அதிக மனநோவு. அவர் பிசாசையும் அதன் செய்கைகளையும் அதிகமாய் வெறுத்தார். பிசாசின் செய்கைக் குட்பட்டவர்களும் அவரை வெறுத்தார்கள். கடைசியாய் புதிய மிஷன்ஊழியம் அங்கே ஸ்தாபிதம் ஆனது. அந்த ஊழியம் மிஷனெரிமார் கண்ணீரால் வளரவேண்டும். வானசேனைகளால் காக்கப் படவேண்டும்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

### வேவுகாண்டம்.

ஓர் படிமாத்திரம் உயர்ந்தால் அவருக்குச் சமமாகிவிடுவேனென்றும், அப்போது அவருக்குச் செலுத்தவேண்டிய முடியாத நன்றிக்கடனை ஓர் நிமிஷத்திலொழித்துவிடுவே னென்றும் நினைத்தேன். எவ்வளவு நான் செலுத்தியும் நன்றியாகிய கடன் பெருகிக்கொண்டு வந்தது. நான் அவரிடத்தில் அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளலாமென்றும் நன்றியறிந்த மனமே அக்கடனைத் தீர்க்கத்தக்கதென்றும் எண்ணமற்றுபோனேன். ஐயோ, சிறியதூதனாக என்னை அவர் சிருஷ்டிக்கக் கூடாதோ! அப்போது எனது ஆசைகளுக்கோர் அளவிருக்கும், பாக்கிய வந்தனாயிருப்பேன் கெர்வமிராது. எனக்குச் சமமான பெரிய ஆவிகள் கலகஞ்செய்து இவ்வித இழிவான நிலைமைக்கு வரவில்லையே! அவர்கள் உட்சோதனை புறச்சோதனைகளுக்கு விலகி வானுலகத்தில் அசையாப்பிரகாரமிருக்கிறார்களே! நல்லது இருக்கட்டும்; என் ஆத்துமமே; உனக்கு சுயசித்தமும் வல்லமையுமிருக்கவில்லையோ, அப்படியானால் யாரை நீ குற்றஞ் சாட்டக்கூடும்? அன்பானது இலவசமாய் எல்லோருக்கும் வானுலகத்தில் சரிசமானமா யளிக்கப்பட்டது. அவ்வன்பு உனக்கு சாபமாய் முடிந்தது. அன்பும் பகையும் இரண்டு முனக்குச் சரிதான். இரண்டும் நித்திய தண்டனையை வருவிக்கத்தக்கன. தேவசித்தத்துக்கெதிரிடையாக உன் சித்தத்தைக் கையாடினாய். நீ இப்போது நியாயமாய்ப் புலம்பித் துக்கிக்கிற காரியங்களை நீயே சம்பாதித்தாய். நிச்சயமாகவே நீ சபிக்கப்பட்ட ஆத்துமா. ஐயோ நான் நிர்ப்பந்தன்! நான் எந்த வழியாய் ஓடுவேன்! அளவில்லாத தண்டனையும் அவநம்பிக்கையும் என்னைப் பிடிக்கின்றனவே! எப்பக்கமோடினும் நரகமாயிருக்கிறதே! நானே நரகமாயிருக்கிறேன். ஆழ்ந்த பாதாளத்திலுந் தாழ்ந்த பாதாளம் என்னை விழுங்கப் பார்க்கிறதே! அதை நினைக்கையில் இப்போது கானிருக்கும் நடுக்கமான நிலைமை எனக்கு மோட்சமாகக் காணப்படுகிறது.

கடைசியாக ஓர்முறை இரக்கத்தை யளியுமேன்! மனந்திருப்ப ஓர் வழியில்லையோ? பாவமன்னிப்புக்கு இடமில்லையோ? கீழ்ப்படிவதினால் மாத்திரம் நன்மை யடையலாமோ? அவ்வார்த்தை எனக்கு வெறுப்பாயிருக்கிறது. என்னால் வஞ்சிக்கப்பட்ட ஆவிகளுக்கு,நான் சர்வவல்லவருக்கு ஒருபோதிலுங் கீழ்ப்படியாமல் அவரை ஜெயிப்பேனென்று வாக்குக் கொடுத்திருக்கிறேன். ஆதலால் கீழ்ப்படிவது எனக்கு மெத்தவும் வெட்கமா யிருக்கிறது. எனக்கு ஐயோ! நான் கெர்வமாய்ப் பண்ணின வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற சக்தியற்றவனாயிருக்கிறதை அவர்கள் அறியார்களே, நரகத்தில் என்னை சிங்காசனத்தி லேற்றி, கிரீடம்வைத்து செங்கோலைக் கொடுத்து கனப்படுத்தினார்கள். அப்படியிருந்தும் எத்தனை பெருமூச்சுகளை விடுகிறேன். எவ்வளவுக்கு என்னை உயர்த்தினார்களோ அவ்வளவுக்குத் தாழ்வான நிலைமையில் விழப்போகிறேன். இதுதான் நான் அனுபவிக்குஞ் சந்தோஷம். ஒருவேளை தேவ கிருபையால் என்னுடைய ஆதிநிலைமையை யடைந்தேனென்றிருக்கட்டும். அப்போது உயர்ந்த எண்ணங்கள் எனக்குள்ளே உண்டாகும். நான் வஞ்சகமாய்க் கீழ்ப்படிந்தது வெளியாகும். சங்கடநேரத்தில் செய்த பிரதிக்கினைகள் கட்டாயத்தினால் செய்யப்பட்டனவென்று சவுக்கியமுண்டாகும்வேளையில் அறிவேன். பகை விரோதம் எங்கே ஆழமாய்க் குடியிருக்கின்றனவோ அங்கே மனப்பூர்வமாய் ஒப்புரவாகுதல் அருமை. கட்டாயத்துடன் ஒப்புரவாகுதல் அதிகக் கேட்டை வருவிக்கும். இரட்டிப்பான தண்டனையைக் கொண்டு வரலாம். என்னைத் தண்டிக்கிறவருக் கிது நன்றாய்த் தெரியாதோ? ஆதலின், சமாதானத்தை அளிக்க அவருக்கு மனமில்லா திருக்குமாகில் அதைக் கேட்கவும் எனக்கு மனதில்லை. எல்லாவித நம்பிக்கையு மற்றுப்போயிற்று. தள்ளி விடப்பட்ட எங்களுக்குப்பதிலாக, அவருக்கு சந்தோஷத்தை யுண்டுபண்ண நவமான மனித ஜாதியையும், நவமான உலகத்தையு முண்டாக்கி யிருக்கிறாரே. ஆதலால், நம்பிக்கையே, உனக்கு வந்தனம், பயங்கரமே! உனக்கு வந்தனம். சஞ்சலமே: உனக்கு வந்தனம். சகல நன்மைக்கும் நான் முற்றுஞ் செத்தவனாயினேன்.—தீமையே,நீயே எனக்கு நன்மை, உன் பலத்தினால், நான் வானரசனுக்கு எதிர்த்து அவரின் இராச்சியத்தை இருபங்காக்கி அரசாள வேண்டியது. உன்னாலே நான் ஆதிக்கமடைந்து இந்த நவீனலோகத்தை நாசஞ்செய்ய வேண்டியது!

இப்படி பிதற்றிக்கொண் டிருக்கையில் அவனுடைய முகநாடி வேறுபட்டது. தீய லக்ஷணங்களாகிய பகை, அகங்காரம், அவநம்பிக்கை, மூன்றுவித நிறங்களுடன் வெளிப்பட்டு குழிவிழுந்திருந்த அவனுடைய முகத்தை அலங்கோலப் படுத்தின. மாறுவேஷந் தரித்தவனாக பிரத்தியக்ஷமாய் விளங்கினன். ஏனென்றால் உம்பர் உலோகத்தாருக்கு இத்தீய குணங்களில்லை. ஆயினும் உள்ளத்தின் குழப்பங்களை ஒருவரு மறியாப்படிக்கு வெளியரங்க சமாதானத்தைக் காப்பாற்றிக் கொண்டனன். உள்ளங் கொந்தளிக்க உதடு பழஞ் சொரிந்தாற்போல முக மலர்ச்சியுடன் ஆழ்ந்த குரோதத்தையுஞ் சேர்த்துக் கொண்டனன். ஆம், முறைப்பிரகாரம் வஞ்சனை செய்ய ஏற்பட்டவன் இவனே. யூரியெல் தூதன் இவன் பூண்ட வேஷத்தினால் ஒருமுறை ஏமாந்தாற்போல மறுபடியும் ஏமாற வில்லை. இவனுடைய கண்கள் இவன் போனவழியையே பார்த்துக்கொண்டிருந்தன. அசூரிய மலையின்மீது இவனுடைய சுய நிலைமை வெளிப்பட்டது மன்றி இவனது பயங்கரமான ஆட்டங்களையும் பேய்க் கூத்துகளையும் தனித்த வேளையில் யூரியெல் கவனித்தான். இவ்வித கோலத்துடன் செல்வம் பொழிந்த பரதீசுக்கும் அதிலிருந்த ஏதேனுக்கும்நேராக விரைந்து சென்றனன்.

### 3. ஏதேனை நண்ணின படலம்.

எப்பக்கத்திலும் விஸ்தீரணமான வனாந்தரத்தின் நடுவிலோர் மலை யிருக்கிறாப்போல, இப்பூமியின் மீது ஏதேன் பூங்காவன மிருந்தது, செடிகளும் பசுமையான விருட்சங்களு மிருந்தது மன்றி அடர்த்தியானவோர் வேலி அதைச் சூழ்ந்திருந்தது. கேதரு, கருவாலி, திராட்சமரங்கள் தழைத்தோங்கி அவ்வனத்தை நிழலமர்ந்த சோலையாக்கின. ஆகாயத்தை அளாவின விருட்சங்களும் நானாவித வாசனைப் புஷ்பங்களும் ஏதேஷ்டமாயிருந்தன. இப்பூங்காவனம் அவாந்தரமான வெளியில் ஏகாந்தமாயிருக்கு மோர் புன்னககாலக் கொப்பாயிருந்ததென்றுஞ் சொல்லலாம். இதுவுமன்றி இப்பூங்காவனத்தின்மத்தியில் பரதீசாகிய உத்தியானமிருந்தது. அவ்வுத்தியானத்தின் விருட்சங்கள் ஓர் கோட்டையின் உட்சுவர்களைப் போல எழும்பின. சந்தேகமின்றி நமது ஆதித்தந்தையருக் கதுச் சிறப்புற்ற காட்சியாயும், கடவுளின் மகிமையை விளக்குவதற் கேதுவாயுமிருந்தது. மேற்சொல்லிய மரங்களின்மீது புஷ்பாதிகளும் நானாவித கனிவர்க்கங்களும் பொன்மயமாகத் தோன்றின. ஆதித்தனின் கிரணங்கள் அம்மரங்களின்மேல்பட அவைகள் மகத்துவலங்கிருதத்துடன் ஜொலித்தன. மாரிகாலத்தில் சூரியகிரணங்கள் மேகங்களிற் படுகையில் அவைகள் மகத்துவசகிதமாய் ஜோதிக்கின்றன.

(இன்னும் வரும்.)

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**ஷிராப்னல்.**—இது யுத்தத்தில் பிரயோகம் செய்த ஒருவித பீரங்கிக்குண்டு. ஒரு விநாடியில் ஐந்து லட்சம் அடிதூரம் வேகமாய்ச் செல்லும்.

**சமுத்திர ஆழம்.**—சமுத்திரத்தின் பெரும்பான்மையான இடங்களில் $2\frac{1}{2}$ மைல் ஆழமும், ஏறக்குறைய 43 இடங்களில் $3\frac{1}{2}$ மைல் ஆழமும், கூவாம் தீவுக்குச் சமீபத்தில் 6 மைல் ஆழமும் இருக்கிறதாகத் தெரியவருகிறது.

**பாக்தாத்.**—இது மெசபொத்தேமியாவிலுள்ள புராதன நகரம். பாபிலோனியாவுக்கும் இந்த நகரத்துக்கும் 60 மைல்தூரம். இம்மகா நகரத்தில் ஏறக்குறைய 50 ஆயிரம் யூதர்களும், 12000 கிறிஸ்தவர்களும், 100000 மகமதியர்களு மிருக்கிறார்கள்.

**மாட்டுக்கு மரக்கால்.**—ஸ்காட்டுலாந்து தேச மிருக வைத்திய சாஸ்திரியாகிய டாக்டர் காலோவே அவர்கள் கால் முறிந்துபோன ஒரு பசுவுக்கு மரத்தினால்செய்த ஒருகால் கொடுத்துப் பழக்கிச் சாதாரணமாய் நடப்பதுபோல் நடக்கவும் படுக்கவும் ஓடவும் செய்திருக்கிறார்.

**மெசபொத்தேமியாவில் ஸ்திரீகளின் நிலைமை.**—துருக்கி அரசாட்சியின் காலத்தில் யூத மகமதிய கிறிஸ்தவ ஸ்திரீகள் சுயாதீனமாய் வெளியே உலாவக் கூடாது. ஆனால் இப்பொழுதோ முகமலர்ச்சியோடும் விடுதலை ஆனோம் என்னும் சந்தோஷத்தோடும் தாராளமாய் தங்களுடைய ஜனத்தாரோடு வெளியே உலாவுகிறார்கள்.

**மெசபொத்தேமியாக் கழுதைகள்.**—நமது இந்தியா தேசத்திலிருக்கிற சாதாரணமான கழுதைகளைப்போ லிராமல், அவைகள் விசேஷித்தவைகளாயிருக்கின்றன. சிறு குதிரைகளைப்போல பருத்த தேகமும் சுத்தமான கால்களும் பெரிய ஆலிலைகளைப்போன்ற காதுகளை உடையவைகளுமா யிருக்கின்றன. அவைகள் சாந்தமும் அடக்கமு முள்ளவைகள்.

**கைசருக்கு இந்தியாவின்மேல் கண்.**—ஒரு மகா சங்கத்தில் கைசர் சொன்னதாவது:—"இந்தியா ஆங்கிலேயருடைய ஆதீனத்திலிருக்கிறது. ஒருவாறு அதை ஆங்கிலேயர் ஆளுகிறார் என்றாலும் முற்றிலும் அல்ல. நாமோ அவ்வாறு செய்யாமல் இந்தியாவை முற்றிலும் ஜெயித்து தேச வருமானத்தை இந்திய குடி அரசுகளுக்குக் கொடாமல் நாமே அனுபவிப்போம்."

**சபிய ஜாதியார்.**—இவர்கள் பெரும்பாலும் மெசபொத்தேமியா தேசத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கு நட்சத்திர வணக்கத்தார் என்று பெயர். இவர்கள் தங்களை யோவான் ஸ்நானகன் அடியார் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். யூத மகமதிய கிறிஸ்தவ ஆசாரங்களை உடையவர்கள். இவர்களுடைய தொழிலோ பொன் வெள்ளி நாணயங்களை விசித்திரமாய்ச் செய்யும் தட்டாரத் தொழில்.

**மும்மார்க்கத்தாருக்கும் பொதுவான இடங்கள்.**—வேத பூமிகளாகிய மெசபொத்தேமியா, பலஸ்தீனா என்னும் இடங்களில் அநேக தீர்க்கதரிசிகளின் கல்லறைக ளிருக்கின்றன. அத்தீர்க்கதரிசிகள் யூத கிறிஸ்தவ மகமதிய மார்க்கத்தார்களுக்கு பொதுவானதால் அவர்களுடைய கல்லறைகள் ஆங்கிலேய அரசாட்சியின் தர்மத்துக்கு அடையாளமாய் இனிமேல் மகமதியருடையதாய் மாத்திரமில்லாமல் பொதுவாயிருக்கும்.

**கர்த்தரின் கல்லறை ஆலயம்.**—கர்த்தருடைய கல்லறையின்மேல் ஒரு பெரிய கிறிஸ்தவ ஆலயம் கட்டி அதில் அநேக ஆண்டுகளாக கிறிஸ்தவர்கள் ஆராதித்து வந்தார்கள். ஆனால் துருக்கி அரசாட்சியின் காலத்தில் அதாவது சென்ற 1250 வருஷங்களாய் மகமதியர்களுடைய ஆதீனமாகி கிறிஸ்தவர்களுக்கு எவ்வித பாத்தியதையும் இல்லாமற் போயிருந்தது. எருசலேமை ஜெயித்ததும் கிறிஸ்தவர்களுக்கு அவ்வாலயத்தில் ஈஸ்தர் பண்டிகைகொண்டாடச் சிலாக்கியம் உண்டானது.

**நமது ராஜ கொடி.**—இதற்கு யூனியன் ஜாக் என்று பெயர். இங்கிலாந்து, ஸ்காட்டுலாந்து, அயர்லாந்து என்னும் மூன்று நாடுகளின் கொடிகளைக் குறிக்கும். கொடியின் மத்தியிலுள்ள சிவந்த சிலுவை இங்கிலாந்துக்கும், கொடியின் நான்கு மூலைகளிலிருந்து குருக்கே செல்லும் வெண்ணிறமுள்ள கோடுகளாலாகிய வெண்சிலுவை ஸ்காட்டுலாந்துக்கும், கொடியின் நான்கு மூலைகளிலிருந்து குறுக்கே செல்லுகின்ற சிவப்பு நிறமுள்ள கோடுகளாலாகிய சிவப்புச் சிலுவை அயர்லாந்துக்கும் அடையாளம்.

**உலகத்திற்கு ஓர் பெருதினம்.**—பெரும் போர் முடிந்த அந்நாளே இப்பெருதினம். சென்ற வருஷம் நவம்பர் மாதம் பதினோராம் தேதி அன்று நாலரை வருஷங்களாய் உலகத்தைக் கலக்கி, பெரும் பிராண நஷ்டமும், திரண்ட பொருட்சேதமும், நானாவித கொடிய கஷ்டமும், விளைவித்து வந்த பெரும்போர் முடிவிற்கு வந்தது. மழை நின்றும் தூவான் நில்லாததுபோல் யுத்தம் முடிந்தும் இன்னும் கொஞ்சகாலம் யுத்தத்தின் பயனாகிய சில கஷ்டங்கள் ஜனங்களைப் பீடித்தே நிற்கும். போஜன பதார்த்தங்களின் விலையும் துணிமணிகளின் கிரயமும் சாதாரணப் படுவதற்கு சில மாதங்களாவது செல்லும்.

**ஆப்பிரிக்காவில் ஜெர்மானிய அகோர கிருத்தியங்கள்.**—யுத்தத்திற்குமுன் ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஜெர்மானியருக்கு சில நாடுகளிருந்தன. அவைகள் ஜெர்மானிய அரசாட்சியின் கீழ் இருந்தன. 1904 வருஷம் ராஜாங்கத்தாரின் அநியாயம் பொறுக்கமாட்டாமல் சுதேச ஜனங்கள் கலகம் செய்தார்கள். அப்பொழுது கவர்னராயிருந்த துரோத்தா, ஹெரேரோ ஜாதியாரில் லட்சம்பேர் ஆண் பெண் குழந்தைக ளெல்லாரையும் கொலை செய்யும்படிக் கட்டளையிட்டான். "ஒவ்வொருவரையும் கொல். ஒருவனையும் கைதியாக்கவேண்டாம்" என்று ஆக்ஞாபித்தான். அப்பொழுது கொல்லப்பட்ட ஜனங்கள் 40000 பேர். துரத்தப்பட்டுக் காடுகளுக்குப் பசியும் பட்டினியுமாய் ஓடினவர்கள் 14000 பேர்.

அதே கவர்னர் தன்னுடைய குதிரைக்காரனைக் கொண்டு பிடிக்கப்பட்டவர்களில் ஒரு வாலிப ஸ்திரீயைக் கொலைசெய்யச் சொன்னபோது அக்குதிரைக்காசாரி கொலைசெய்ய அஞ்சி, 'மாட்டேன்' என்றுரைக்க ஜெர்மானிய ராணுவஸ்தன் ஒருவன், துப்பாக்கியின் ஈட்டியைக்கொண்டு, பேதமையான அப்பெண்ணைக் குத்தி இரத்தம் ஓடச்செய்தான்.

ஒருதினத்தில் சில ஜெர்மானிய ராணுவஸ்தர்கள் ஒரு நிகிரோவ ஸ்திரீயின் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கிப் பந்தாடுவதுபோல் ஆடிக்கொண்டு கடைசியாக்க் குழந்தையை ஆகாயத்தில் எறிந்து ஈட்டியின் முனையினால் தாக்கக் குழந்தையின் விலாவில் ரத்தம் பீறிட அவர்கள் நகைத்தார்கள்.

ஜெர்மானிய நியாயஸ்தலத்தில் விசாரணைசெய்யும் போங்கும் விபரீதமாயிருந்தது. ஒரு ஜெர்மானிய அதிகாரியாகிய வேனுலெத் என்பவன் ஆடுமாடுகளைத் திருடின ஒரு நிகரோவ மனிதனையும் ஸ்திரீயையும் கச்சேரிக்குமுன் வரவிடாமலும் நேரில் வாக்குமூலம் கேட்டு விசாரணை செய்யாமலும் அவர்களைச் சுட்டுப்போடும்படி உத்தரவு அளிக்க அவர்களை சுட்டுப்போட்டார்கள்.

சாதாரணமாய் ஜெர்மானிய மாஜிஸ்ரேட்டுகள் ஆப்பிரிக்கர்களை நீண்ட தோல்சவுக்குக்கொண்டு சதைகிழிய ரத்தம் பீறிட அடிப்பதுண்டு. சகஜமாய் கடுங்காயம் படும்மட்டும் 50 அடி அடிப்பது வழக்கம். அடிபொறுக்க மாட்டாமல் அடிக்கும் பொழுதே அநேகம் ஸ்திரீகள் மாண்டுபோ யிருக்கிறார்கள்.

## பஞ்சாங்கம்.

**1919 ஜனுவரியூ பஞ்சாங்கம்**

● அமாவாசை, 2உ 31உ ⊙ பௌர்ணமி, 16உ

| வாரம் | ஜனுவரி. | | | | | மாரகழி—தை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 6 | 13 |
| திங்க ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 7 | 14 |
| செவ் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 1 | 8 | 15 |
| புதன் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 2 | 9 | 16 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 3 | 10 | 17 |
| வெள் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 19 | 26 | 4 | 11 | 18 |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 5 | 12 | ... |

# MELLIN'S FOOD

TRADE MARK. TRADE MARK.

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. SUBRAHMANYAM, Rayapettah, Madras.

**விளம்பரம்**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 8277.


766

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH.

18 FEB 1919

# சத்திய தூதன்.

FEBRUARY, 1919. PRICE, 1 PIE.—விலை, க பை. பெப்ருவரிமீ, 1919.

## GOD HATH NO PLEASURE IN A SINNER'S DEATH.

## பாவி சாகிறது சுவாமிக்குப் பிரியமில்லை.

எசேக்கியேல் 18. 23-ல். "துன்மார்க்கன் சாகிறது எனக்கெவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

சர்வவல்லவர் இக்கேள்விகளை நம்மைப் பார்த்து கேட்கிறார். இது என்ன அச்சாதிசயம் என்று சொல்லலாம். இது ஆச்சரியப் பெருங்கருணையாகவல்லவோ யிருக்கிறது. நம்மை நியாயாதிபதிகளாக்கி, தன்னை வழக்காளியாகப் பாவித்து நம்மை நீதியான நியாயத்தீர்ப்புதாக் கேட்டுக்கொள்ளுகிறார். அவர் சாதித்து நிற்பதென்ன? தான் அருள்வள்ளலாம், தயாநிதியாம், இன்பப்பெருக்காம். சுவாமி தன்னைக் கருணாகர மென்றும் கருணாகரன் என்றும் சொல்லுகிறார். அதை ருசுப்படுத்த நம்மை இரண்டு கேள்விகள் கேட்கிறார். அவைகளுக்கு உங்கள் மனசாட்சி விடை கொடுக்கட்டும் என்கிறார். "துன்மார்க்கன் சாவது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ?" என்பது முதற்கேள்வி. "அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பி பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்". என்பது அவர் கேட்கும் இரண்டாங்கேள்வி. இவைகளுக்குக் கனபக்தியோடு விடைபகர முயலுவோமாக. உத்தரவு கொடுப்பதற்கு முந்தி மேற்கண்ட கேள்விகளின் அர்த்த சம்பந்தம் யாதென்று விசாரிப்பதவசியம். முதல் கேள்வியைக் கவனிக்குங்கால் துன்மார்க்கன் சாகவேண்டுமென்பது அதினின்று வரவழைத்துக் கொள்ளவேண்டிய ஒரு பெரிய உண்மை. வேதத்தின் பரிபாஷையில் துன்மார்க்கன் என்றபதம் காதகர், கொலைபாதகர், தூர்த்தர், சத்தியம் பண்ணுவோர், நாணயங்கெட்டோர், யதார்த்தமற்றோர், இவரை மாத்திரமே யல்லாமல், மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால், தேவனை மறப்போர் யாவரையும் குறிக்கும். தன் சொந்தவழியில் நடக்கிறவனும், தன் மாமிசத்தின்படி நடக்கிறவனும், பொல்லா உலகத்தைப் பின்பற்றுகிறவனும் தெய்வ சாஸ்திர ஆதார விதிப்படி துன்மார்க்கனே. உலகத்தார் பார்வையில் இவர்களில் பெரும்பான்மையோர் சிரேஷ்டமானவர்களாய் விளங்கலாம். கர்த்தரோ, அவர்களை துன்மார்க்கரோடே பேரெழுதுகிறார். இப்படிப்பட்டவர்கள் சாகவேண்டும். அன்றியும் "ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்ற வாக்கியத்தில், வரும் மரணத்தையல்ல "துன்மார்க்கரும் தேவனை மறக்கிறவர்களும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்" என்ற வாக்கியத்தில் கண்டிருக்கும் இரண்டாம் மரணத்தை யொட்டியே அவர்கள் சாகவேண்டுமென்று வேதம் உரைக்கிறது. துன்மார்க்கர் யாரென்றும் அவர்கள் சாகவேண்டிய கதியிலிருக்கிறார்கள் என்றும் பார்த்தோம். இப்பொழுது கேள்வியைச் சற்று கவனிப்போமாக, "துன்மார்க்கன் சாவது எனக்கு எவ்வளவும் பிரியமோ?" இதற்கு என்ன உத்தரம் அளிக்கலாம். வேதவசனமும், நடக்கும் காரியமும், ஸ்வானுபவமும் சொல்வதைக் கவனித்தால், மேற்படி கேள்விக்கு நியாயமான விடை பகரக்கூடும்.

வேதவசனம் தேவ வாக்காகையால் வேதத்தில் சொல்லப் பட்டவைகளை தெய்வ வாக்காக அங்கீகரித்தல் அவசியமாம். அத்திருவாக்கின் ஓரிடத்தில் பின்வரும் வாக்கியத்தைக் காணலாம்:— கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், "நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல் துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்." தன்னிலும் மேலானது வேறொன்றுமில்லை யாகையால் "என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்கிறார்." நாம் எப்படி இதைச் சந்தேகிக்கலாம்? தெய்வ புஷ்கரணியினின்று சுரந்தோடும் அருள்மொழியாச்சுதே. நிகழும் காரியங்களைப் பார்ப்போம். "தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்." அவர் கண்டதென்ன? "எல்லாரும் வழிவிலகி ஏகமாய் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவனில்லை, ஒருவனாகிலுமில்லை." சுவாமி துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்புவாரே யாகில், அவர் அவன் விஷயத்தில் எவ்விதமாய் நடந்துகொள்வார் என்பது விளம்பரப் படவில்லையா? அவர்களனைவரையும் சங்காரம் என்னும் துடைப்பத்தினால் பெருக்கிவிடுவாரே. நீதியைச் சரிக்கட்டும் நாள் வருகையில் அவ்விதம் சம்பவிக்கும். அந்நாள் இன்னும் ஆரம்பமாகவில்லை. மனுஷனுக்கு ஆகாரம் அவசியம். கடவுள் அதை அவனுக்குக் கொடுக்கிறார். சுகமின்றி வேலைசெய்ய அவனால் ஆகாது. சுவாமி அவனுக்கு சுகத்தை அருளுகிறார். அவன் விடுகிற சுவாஸம் முதலிய சமஸ்தமும் அவனுக்கு கர்த்தாவிடமிருந்து நித்திய கட்டளையாகவரும் பரம ஈவாம். காரியமிப்படி யிருக்க அவன் அவருக்கு முன்பாக துன்மார்க்கனாக நடந்துகொண்டாலும் அவனது சாவை அவர் விரும்பாமலிருப்பது என்ன பொறுமை, ஒப்பில்லாதயை!

"உனக் குவமையாக்க கருணைஉள்ளவரும் வன்மை எனக் குவமையானவரும் உண்டோ பராபரமே" என்று ஒரு பெரியவர் சொன்னது உண்மையாக அல்லவோ இருக்கிறது. அப்படிக்கில்லாவிட்டால் மனுஷன் எங்கே யிருப்பான்? அவன் சுவாஸத்தை அவர் நிறுத்துவது கஷ்டமா? அவன் ஆத்துமாவை அதோகதியடையக் கைவிடுவதும் அவருக்கு ஒரு பிரமாதமா? இல்லை, இல்லை, இரகசியமிது. அவர் தயாநிதி. பாவி சாகிறது சுவாமிக்குப் பிரியமில்லை யென்பதற்கு இன்னொரு வேத திருஷ்டாந்தத்தைப் பார்ப்போம். வேதபுஸ்தகத்தில் எச்சரிப்பும் அழைப்பும் அநேகமிருக்கக் காண்கிறோம். பாவியின் மரணத்தை சுவாமி விரும்பினால் அவனை மனந்திரும்பக் கூப்பிடுவாரா? நீதிமொழிகளின் புஸ்தகத்தில் "பேதைகளே! நீங்கள் பேதமையை விரும்புவதும்; நிந்தனைக்காரரே! நீங்கள் ஞானத்தை வெறுப்பதும் எதுவரைக்கு மிருக்கும்? என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள். இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன். என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்" என்று சுவாமி உரைத்திருக்கிறார். எருசலேமுக்கு வரப்போகிற அழிவைக்குறித்து அறிந்த இரக்ஷகருடைய இரு திருவிழிகளும் கண்ணீரை மாலை மாலையாக விட்டனவென்று சுவிசேஷம் சொல்லுகிறது. வேதத்தில் இன்னோரிடத்திலே சுவாமி பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—"எப்பிராயீமே! நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே!

நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி ஆத்மாவைப்போ லாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப்போ லாக்குவேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது. என் பரிதாபம் ஏகமாய் பொங்குகிறது." ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு பின்னும் சுவாமி பேசுகிறார். "ஆ! என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும். அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகள்போலுமிருக்கும்." மேலும் "வானங்களே கேளுங்கள், பூமியே செவிகொடு, கர்த்தர் பேசுகிறார் நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன், அவர்களோ, எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும். இஸ்ரவேலோ அறிவில்லாமலும் என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது" என்றும் "வழக்காடுவோம் வாருங்கள்" என்றும் கர்த்தர் சொல்லுகிறார். "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழைப்போல வெண்மையாக்குவேன். அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று" என்றும் வேதம் சாக்ஷி கொடுக்கிறது. சுவாமி பாவியின் மரணத்தை விரும்புகிறவ ரல்லவென்பதற்கு பின்னுமொரு பலமான நியாயமுமுண்டு. துன்மார்க்கன் அழிவது அவருக்கு பிரியமாயிருக்குமாகில் தமது பரமசுதனை அனுப்பி அவர்களுக்காக பாடனுபவிக்கும்படி சித்தங்கொள்வாரா? யோசித்து நியாயமான தீர்ப்புக் கொடுப்போமாக. உலகத்தாரின் பாவங்களனைத்தையும் அவர் பேரில் சுமத்துவாரா? அடிக்கப்படக் கொண்டுபோகும் ஆட்டைப்போல அவரை யனுப்புவாரா? "அவருடைய தழும்புகளாலே நாம் குணமானோம்" என்று வேதவசனம் முழக்கமிடுகிறதே. காரியமிப்படியிருக்க நாம் என்ன சொல்லலாம்? இவ்வளவும்செய்த நாயனார் துன்மார்க்கன் சாவை விரும்புகிறார் என்று சொல்லத் துணியலாமா? ஆகையால் இம்முதற் கேள்விக்கு சுலபமாய் இப்பொழுது நாம் விடை பகரலாம். துன்மார்க்கன் சாவது சுவாமிக்குப் பிரியமில்லை.

அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்? இது இரண்டாங் கேள்வி. துன்மார்க்கன் தன் வழிகளைவிட்டுத் திரும்பினால் பிழைப்பான் என்ற திவ்விய சத்தியம் இக்கேள்வியினின்று வரவழைத்துக் கொள்ள வேண்டும். சுவாமிக்கு ஸ்தோத்திரம். இவ்வாக்குத்தத்தத்திற்கு விலக்குக் கிடையவே கிடையாது. இதற்கு நான் அபாத்திரன் என்று சொல்லத்தக்க ஒரு பாவியும் பூலோகத்திலில்லை. துன்மார்க்கன் தன் வழிகளைவிட்டுத் திரும்புவதாவது என்ன? இதை சற்று கவனிப்போமாக. தன் துர்ப்பழக்கங்களிலே சிலதுகளைப் பற்றொழிப்பதால் உலகம் பாவமனமாறின மனிதன் என்று சொல்லுமே அது வல்ல. அதிலும் அதிகம் அவன் செய்யவேண்டும். இயேசு இரக்ஷகர் பக்கமாய்த் திரும்பவேண்டும். பரிஷ்காரமாயும் திரும்புதல் அவசியம். அவ்விதம் செய்யும்வரையில் அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பினவனாகமாட்டான். அவர் பக்கம் திரும்பினவன் அவரை அடைக்கல ஸ்தானமாகக்கொண்டு மன்னிப்புக்காகவும் விடுதலைக்காகவும் அவரிடம் ஓடுவான். சும்மாயிரான். பாவத்தைப் பின்விட்டு இரக்ஷிப்புக்காக மீட்பரின் மூலமாய் தேவனிடம் மன்றாடித் தன்னைச் சமூலமாய் இயேசுவின் கரத்தில் ஒப்புக்கொடுத்து தெய்வகடாக்ஷம் பெற்று அதைக்கொண்டு பரிசுத்த மார்க்கத்தில் நடக்க ஆரம்பிப்பான். அப்படிப் பட்டவனைப்பற்றித்தான் தன் வழிகளைவிட்டுத் திரும்புவானாகில் தன் ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான் என்று சொல்லியிருக்கிறது. அவன் முன்செய்த தீவினைகளனைத்தும் மறந்து விடப்படும். தாவள்ய இருதயத்தைப் பெறுவான். அவன் குணப்படுதலின் நிமித்தம் பரலோக சபையிலே நாதகீதம் தொனிக்கும். "மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்?" என தீர்க்கத்தரிசியாகிய மீகா கேட்கிறார்.

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### நாலாம் அதிகாரம்

(தொடர்ச்சி.)

இயேசுக் கிறிஸ்துவின் அன்பு ஹெபிக் ஐயரை நெருக்கி ஏவினதால், 'நான் சுவிசேஷத்தை பிரசங்கியாவிட்டால் எனக்கு ஐயோ' என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதுபோல அவருடைய மனதிலும் விசாரம் பிறந்து ஆத்துமாக்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத்தாபந்தமும்கவலையுமுடையவரானார். இதினால் அவர் தமக்குரிய கன்னட பாடங்களைச் செவ்வெனப் படிக்கத் தீரவில்லை. மனுஷர்கள் நரகத்திற்குத்தங்களை துரிதப்படுத்தும்போது, நான் கன்னட பாஷையில் சிரத்தைவைத்துக் கற்கக் காலத்தைச் செலவிடக் கூடாமையா யிருக்கிறதென்று ஒரு சமயத்தில் அவர் சொன்னார். அவர் அப்படிப்பட்டவர்களைப்பார்த்து வருங்கோபத்திற்குத் தப்பி ஓடுங்கள் என்பதையாகிலும் சொல்ல வேண்டியதாயிருந்தது. ஆதலால் அவர் கன்னட பாஷையை இலக்கணத் தோரணையாய் கற்காமல் சாதாரண விதமாய்ப் பேசக் கற்றுக்கொண்டார். சாதாரண சத்தியங்களை சாதாரண வார்த்தைகளால் அமைத்துப் பேசக் கூடியவராய் இருந்தார். இதே மாதிரியாகவே ஆங்கில பாஷையையும் அவர் செவ்வையாய்ப் படிக்கவில்லை. அந்தப் பாஷையை அதிக கொச்சையாய்ப் பேசினாலும் மனதை இளக்கத்தக்கதாக உருக்கத்தோடும் பேசுவார். அவருடைய சிநேகிதரான டாக்டர் குண்டற்ட் என்பவர் ஆங்கில பாஷையில் தீரன். இவர், ஹெபிக் ஐயர் பேசும்போது ஆங்கில பாஷையில் அவருக்கு அடுத்தடுத்து வரக் கூடிய சொற்கள் 552 என்று கணக்கிட்டிருக்கிறார்.

இவ்வித சொற்பத் தொகையான சொற்கள் அமைந்த பிரசங்கங்களினால் ஆயிரக்கணக்கான ஹிருதயங்களை அருத்தி அவர்களை ரக்ஷகாண்டைக்கு வழி நடத்தியிருக்கிறார். அவர் எப்போதாகிலும் ஒரு புதிய வார்த்தையை நூதனமாய்த் தம் பிரசங்கத்தில் உபயோகித்தால் அதை டாக்டர் குண்டற்ட் கேட்டு அதிக குதுகலப்படுவார். ஹெபிக் ஐயர் தாம் ஒரு முக்கிய மிஷனெரி யாகும்பொருட்டு, வெகுகாலமாக கன்னட தேசத்தில் ஊழியஞ்செய்யும் ஆங்கில மிஷனெரிமார்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டே இருப்பார். அவர் அவர்களுடைய வேலையைப் பார்க்கவும் அழிந்துபோகிற இப்பெருங்கூட்டத்தைச் சுவிசேஷத்தின் மூலமாய் எந்தவிதமாய் இழுக்கவேண்டும் என்கிற விஷயத்தைப்பற்றி அந்த அநுபவ மிஷனெரிமார்களிட மிருந்து கற்றுக் கொள்ளவும் ஆவல் கொண்டிருந்தார்.

பெல்லாரியில் பிரக்கியாதிபெற்ற, ஜீ. ஹாண்டர்ஸன் ஐயரவர்கள் ஐரோப்பாவிற்கு போகிறார் என்றுகேள்விப்பட்டவுடனே இந்த தேவ ஊழியரை உடனே போய்ச் சந்திக்கவேண்டுமென்று ஹெபிக் ஐயர் தீர்மானித்துக் கொண்டார்.

ஹாண்டர்ஸன் போதகர் ஆங்கில பாஷை, தமிழ் பாஷையிலுள்ள வேதாகமத்தை கன்னட பாஷையில் மொழிபெயர்த் திருந்தார். இவ்வித சிறந்த வேலையை அவர் செய்திராவிட்டால் அவருடைய வேலையில் மிகுந்த பலனைக் காணக்கூடா திருக்கும். மழைகாலம் கழிந்தபிறகு ஹெபிக் ஐயர் தம்முடைய நீண்ட பிரயாணத்தை ஆரம்பித்தார்.

அதற்குண்டான செலவுகளை எல்லாம் கனம்: ஹாண்டர்சன் சப் கலெக்ட்டர் துரை அவர்கள் ஈவாகக் கொடுத்தார். 1835–ம்-ஞு, அக்டோபர்மீ, 23–ம்உ ஹெபிக் ஐயர் மங்களூரைவிட்டு 29 மணிநேரம் பிரயாணஞ்செய்து கன்னனூரைச் சேர்ந்தார். அந்தச் சமயத்தில் அவ்வூர் ஐரோப்பிய குருவானவர் வெளியூர்போய் இருந்தார். அவருடைய மனைவி ஐயரை ஏற்றுக்கொண்டு, உடனே அவர்கள் இருவரும் அங்கு நடந்த ஆங்கில பாஷை ஆராதனைக்குச் சென்றார்கள். அச்சமயத்தில், ஆங்கில சைனியத்தைச் சார்ந்த ஒரு பக்தரான உத்தியோகஸ்தர் ஜெபத்தை வாசித்தார். அதன் பிறகு ஒரு பிரசங்கம் வாசிக்கப்பட்டு ஆராதனை முடிந்தது. அவர் அருகாமையில் உட்கார்ந்திருந்த ஹெபிக் ஐயர் அந்த உத்தியோகஸ்தரைப் பார்த்து 'நீர் கர்த்தருடைய பிள்ளையா'? என்று கேட்டார். அப்போது அந்த உத்தியோகஸ்தர் அதிக சந்தோஷமாய், 'ஆம் நான் கர்த்தருடைய பிள்ளைதான்' என்று மறுமொழி கூறினார். பிறகு இன்னும் மற்ற சேனை உத்தியோகஸ்தர்கள் ஒன்பது பெயரும் புதிதாய் வந்த ஐயரவர்களைச் சூழ்ந்து நின்றார்கள். அப்போது அவர்களை அவர் பார்த்து, 'நீங்கள் இயேசு ரக்ஷகரைத் தேடுகிற ஹிருதயமுடையவர்கள் என்று நான்கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன்' என்றார்.

டி. யல். ராஸ்,
சங்கிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது

### வேவு காண்டம்.

அவ்வழகுக்கும் மேன்பட்டதாகவே யிருந்தது. சகல விதமானதுக்கம், அவநம்பிக்கை, மனச்சோர்பு முதலியவைகளை யகற்றி இருதயத்துக்குக் களிப்பையும் ஆனந்தத்தையுங் கொடுக்க ஏதுவாயிருந்தது. ஏதேனுக் கருகாமையில் களங்கமற்ற சுத்தவாகாயத்தை வேதாளம் சுவாசித்தான். இளங்காற்று பரிமளத்துடன் வீசிற்று, எங்கும் நற்கந்தம் பரவினது. நன்னம்பிக்கைமுனை, மோசாம்பீக்தீவு முதலிய விடங்களைச்சுற்றி யாத்திரைசெய்பவர்கள், அரபியாவிலிருந்து புறப்படும் பரிமளம், நற்கந்தம், சந்தணம் முதலிய வாசனைகளினால் சந்துஷ்டியடைவதுபோல், இப்பேய்ச்சூரன், பரதீசின் திவ்விய காற்றை தூரத்தில் சுவாசித்தும் கடைசியாகக் கெடுதிசெய்யும்பொருட்டு, செங்குத்தான மலையோரமாய் நடந்து விசனமுற்றவனாக அப்பூங்காவனத்தை நண்ணினான். அப்பூங்காவனத்திற்குள் செல்வதற்கு வழியொன்றுங்காணவில்லை. செடிகள், மரங்கள் அடர்த்தியாய் வளர்ந்து அரணை வோர்கோட்டையைப்போ லிருந்தது. மனிதனாவது மிருகமாவது உட்செல்லக்கூடாமையா யிருந்தது. அப்பூங்காவனத்தின் கீழற்றிசையில் மாத்திர மோர்வாசலிருந்தது. இந்த ராஜதிருடன் அதின் வழியாய்ப் பிரவேசிக்கக் கருதாமல் அதை இழிவாக நினைத்து ஓர் குதிகுதித்து மலையையும் உயர்ந்த வேலியையுந் தாண்டி உள்ளே சென்றான். பசியினால் வருந்திய ஓநாய்கள் பொழுதுசாயும் வேளையில் ஆட்டுமந்தைகளில் குதிக்கிறப்போலும் அல்லது ஓர் திருடன் தனவான் வீட்டினது சன்னலின் வழியாய் அல்லது மேற்கூரையின் வழியாய் குதிக்கிறப்போலும் இத்திருடன் தேவனின் ஆட்டுமந்தைக்குள் குதித்தான்.

(இன்னும் வரும்.)



## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**இந்தியன் நாஷனல் காங்க்ரஸ் சங்கம்.** — இச்சங்கம்டில்லிமாநகரத்தில்நடந்தேறியது. அதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்தனர்.

**உலக சமாதான ஸ்தலம்.** — ஒய்ந்திருக்கும் மகா யுத்த சம்பந்தமாயுள்ள சமாதான உடன்படிக்கைக்குறிய ராஜாக்களின் மகா சங்கம் பாரீஸ் மகா நகரத்தில் நடைபெறும்

**கைசரின் அபயாஸ்தலம்.**—மகா யுத்தத்தினால் தோல்வியடைந்த கைசரென்னும் ஜர்மானிய அரசர் ஆலந்து தேசத்திற்கு உயிர்தப்பி யோடி ஒளித்துக்கொண் டிருக்கிறாராம்.

**துணிமணி விலை.** — யுத்தப்பலனாக விளைந்துள்ள சாமக்கிரியைகளின் விபரீத விலை சற்று தணிந்து வருகிறது. விசேஷமாய் வஸ்திராதிகளின் கிரயம் குறைந்திருக்கிறது.

**ஜேர்மானியருக்குத் தவணை.** — ஜெர்மானியரின் வேண்டுகோளின் நிமித்தம் ஆர்மஸ்டிஸ் என்னும் யுத்த தவணை நாளது வருஷம் ஜனவரிமாதம் 17-ம் தேதிவரையில் நட்பாசால் அளிக்கப்பட்டது.

**மைசூர் திவான்.**—ஸர். எம். விஸ்வேசுவரையா அவர்கள் சென்ற ஆறுவருஷங்களாய் மைசூர் சமஸ்தானத்தில் திவானாக இருந்து இளைப்பாற, ஸர்தார் எம். கந்தராஜ் ஊர்ஸ் அவர்கள் மேற்படி திவான் வேலைபார்க்க நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

**உலக சமாதானச் சங்கம்.**—சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப் போகிற ராஜாக்களின் மகா சங்கத்தில் நம்முடைய இந்திய விஷயமாய் அனுப்பக்கட்டிருக்கிறவர்கள் ஆனரபில் சர். எஸ். பி. சிங்காவும், பிக்கனூர் மகாராஜா அவர்களுமாம்.

**சென்னையில் ஏழைகளுக்குச் சகாயம்.**—பல கனவான்கள் சிற்சில இடங்களில் ஏழைகட்கென்று வஸ்திரங்களையும் அரிசி முதலிய தானியங்களையும் சரசமான விலைக்குக் கொடுக்க அநேக ஏழைகளின் பசிப்பட்டினியும் நிர்வாணமும் நீங்குவதற்கேதுவாயிருக்கிறது.

**தபாலாபீசு.** — இந்தியாவில் பிரசிடென்சி போஸ்ட்டு மாஸ்டராக வேலைப்பார்த்துவந்த முதல் இந்தியர் ராவ் பகதூர் கே. வி. லிங்கம் அவர்கள் 32 வருஷங்களாய் நல்ல வேலைச்செய்து ராஜாங்க நல்மதிப்பு அடைந்து சென்றமாதம் வேலையினின்று இளைப்பாறுகின்றனர்.

**தமிழ் பண்டிதரின் சங்கம்.**—இச்சங்கம் முதல் முதலாவது திருச்சினாப்பள்ளியில் சென்ற டிசம்பர் மாதம் கூடிற்று. ஏறக்குறைய 100 பண்டிதர்கள் தென்னிந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்திருந்தனர். அச்சங்கத்தில் சபா நாயகராய் வீற்றிருந்தவர் கனம்: தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள்.

**பிளேக் வியாதி.**—மகா மாரி என்னும் இந்தப் பயங்கரமான வியாதி இதுகால பரியந்தம் சென்னை வராதிருந்தது. தற்சமயம் இம்மகா நகரத்திலும் பிரவேசம் செய்திருக்கிறது. இது பரவாவண்ணம் தடைசெய்யும் பொருட்டு சர்க்காராரும், முனுசிபாலிடியாரும் வெகு பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள்.

**ஓர் புராதீன வழக்கம்.**—பரிசுத்த மேரி உல்நாத் ஆலயத்தில் பிரதி ஈஸ்தர் பண்டிகையன்று ஆராதிக்க வரும் ஒவ்வொருவருக்கும் காலை ஆராதனையில் வர்ணம் பூசிய ஒரு கோழிமுட்டை கொடுப்பது வழக்கம். இவ்வழக்கம் 1235–ம் வருஷம் முதல் நடைபெற்று வருவதாக பழமையாயுள்ள தஸ்தாவேஜிகளினால் விளக்குகிறது.

**பெல்ஜிய தேசத்துத் தாய்மாரின் பிராது.**—தங்கள் தேசத்துச் சிறுபெண்களைப் பலாத்காரமாய் அடிமைப்படுத்திக் கொடூர உபத்ரவங்களுக்குட்படுத்தி தாசிகளாக்கி ஜர்மானிய சிப்பாய்கள் மத்தியில் கலந்திருக்கச்செய்த பாதகர்களாகிய ராணுவ அதிகாரிகளுக்குக் கட்டளைப் பிறப்பித்த மாஜி கைசர் மீது நியாயமான பிராது தொடுத்து இருக்கிறார்கள்.

**சீனு வானசாஸ்திரக் கருவிகள்.**—1900-ம் வருஷத்தில் ஜர்மானியர் சீனாவிலுள்ள பிக்கின் மகா நகரத்திலிருந்து தங்கள் தேசத்து பிரதானப் பட்டணமாகிய பர்லினுக்கு அபகரித்துக் கொண்டு போன வானசாஸ்திரக் கருவிகளைத் திரும்பவும் சீனாவுக்கே சேர்ப்பித்துவிட ஜர்மானியரை பலவந்தப் படுத்துவத் அவசியம் என்று ஜெனரல் சர் எட்மண்ட்பாரோ அவர்கள் உரைத்திருக்கிறார்.

**க்ஷயரோக சாந்தி.**—க்ஷயரோகம் தென்னிந்தியாவில் தற்காலம் வெகு துரிதமாய்ப் பரவுகிறது. வைத்தியர்கள் இல்லாத இடங்களில் சாதாரணமாய் பிரயோகம்செய்து அவ்வியாதியை நீக்குவதற்கு அல்லது அவ்வியாதியினின்று தப்புவதற்கு எளிதில் யாவருக்கும் கிடைக்கக்கூடிய மூலிகை யாதெனில் வெள்ளைப்பூண்டென டாக்டர் மின்சின் அவர்கள் சாதிக்கின்றனர், அதை உள்ளுக்கும் கொள்ளலாம் வெளிக்கும் பூசலாம்.

**கவர்னர்.**—பம்பாய் ராஜதானிக்கு கவர்னராக இருந்த லார்ட் உவெல்லிங்டன் அவர்கள் சென்னை கவர்னராக நியமனம் பெற்றிருக்கிறார்கள். தற்சமயம் ஜனன தேசமாகிய இங்கிலாந்திற்குப் போயிருக்கிறார்கள். இரண்டொரு மாதத்திற்கெல்லாம் இந்தியா வந்ததும் சென்னைக் கவர்னர் லார்ட் பென்ட்டிலண்ட் அவர்கள் ஜனனதேசம் போய் விடுவார்கள். பம்பாய் புதிய கவர்னராகிய ஸர் ஜியார்சி லாயிட் அவர்களும் ஏற்கனவே வந்து இருக்கிறார்கள்.

**நீண்ட வானக்கப்பல் பிரயாணம்.** — இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் போக்குவரவுக்கு முன்போல் அநேக நாட்கள் செல்லாது, 83 மணி நேரத்திற்குள்ளாக வானக்கப்பல் என்னும் ஏரோபிளேனைக்கொண்டு பிரயாணம் செய்திருக்கின்றது புதுமையினும் புதுமையன்றோ. இங்கிலாந்திலிருந்து எகிப்திற்கு $36\frac{1}{4}$ மணிநேரமும், எகிப்தினின்று இந்தியாவிலுள்ள டில்லி மாநகரத்திற்கு 47 மணி நேரமும் சென்றதாம். இவ் வானக்கப்பலை நடத்தினவர் ஜெனரல் சால்மண்ட் என்பவர்.

**கண்ணாடி வெட்டும் விதம்.** — சாதாரணமாய்க் கூர்மையாயுள்ள வச்சிரக் கல்லைக்கொண்டு கண்ணாடிகளை அறுப்பதுண்டு. ஆனால் அயர்லாந்தார் நூதனமாய்க் கண்டு பிடித்திருக்கும் முறை யாதெனில், ஒரு துண்டுநூலை எடுத்து லாகிரியுள்ள சாராயத்தில் தோய்த்துச் சற்றுக் காய்ந்ததும் கண்ணாடியைச் சுற்றிக்கட்டி அந்த நூல்மேல் நெருப்பைக் கொளுத்திவிட கண்ணாடியில் நூல் கட்டியுள்ள பாகம் பலட்ச்சியப்படும். அணைந்ததும் தண்ணீருக்குள் ஆழமாய்க் கண்ணாடியை வைத்துக்கொண்டு ஒரு சிறிய கட்டையினால் தட்ட, வஜ்ஜிரத்தினால் நேராயும் ஒழுங்காயும் அறுக்கப்பட்டதுபோல் அறுப்புண்டாகும்.

**விவாக சட்டம்.**—சட்ட நிரூபண சங்கத்தின் அங்கஸ்தராகிய ஆனரபில் ஸர். பட்டேல் அவர்கள் பல இந்திய ஜாதியர்களுக்குள் பரஸ்பர விவாக விஷயமாய் ஒரு சட்டம் பிரப்பிக்கும்படி துணிந்திருக்கிறார். அவர்களைப் பகைப்பவர், அவர்களுடைய நோக்கம் நிறைவேறா வண்ணம் எதிர்த்து த்வஜம் தொடுத்து நிற்போர் அநேகர் உளர். மகமதியர்களுக்குள்ளும் ஆனரபில் யாக்கோப் உசேன் அவர்கள் மகமதிய விவாக விஷயத்தில் சர்க்கார் சம்மந்தமாய் விவாகம் செய்தலையும், விவாக ரத்து செய்தலையும் ரெஜிஸ்டர் செய்யவேண்டும் என சட்டம் நிரூபிக்க பிரயாசித்து வருகிறார். அவ்விஷயத்திற்கும் எதிர்த்து நிற்போர் உளர்.

**மூன்று மாதுகளின் மரணம்.** — தஞ்சாவூர் உயர்தர பெண்கல்விச் சாலை பிரதம வாத்தியார் அம்மாள் மிஸ். டேவிட் அம்மாள், பீ. ஏ., அவர்கள் விஷபேதியினால் திடீரென காலமாயினார். இச்சகோதரி சென்னை கிறிஸ்தவ ஸ்திரீகள் கலாசாலையில் படித்துத்தேறின கல்வி சிரோன்மணி. கடந்த நவம்பர் மாதந்தான் பீ. ஏ. பட்டம் பெற்றனர். இம்மாது சங்: டி. எஸ். டேவிட் ஐயரின் குமாரத்தி. மற்ற இரண்டு சகோதரிகளாகிய ஜேன் நல்லம்மாள் கிரப், பீ. ஏ., ஆபேல் அருளானந்தம் அம்மாள், பீ. ஏ., சென்னை பிரசிடென்சி கலாசாலையில் பட்டம் பெற்றவர்கள். இது குடும்ப துக்கமும், சுதேச கிறிஸ்தவ சபைத் துக்கமுமாயிருக்கிறது.

**அராபிய ராணுவ தளகர்த்தன்.**—இவருடைய நாமம் ஷெரிப்பைசூல். இத்தளகர்த்தனுக்கு பிரதான ஆபீசர் கர்னல் லாரன்ஸ் என்பவர். பலஸ்தீனு யுத்தத்தில் துருக்கிகளுக்கு விரோதமாய் அநேக ஏற்பாடுகள் செய்து வரும்போது மேற்படி ராணுவ தளகர்த்தனையும் அவரது பிரதான ஆபீசர் கர்னல் லாரன்ஸையும் உயிரோடே பிடித்துக்கொண்டு வருபவர்க்கு பதினேழாயிரம் பவுன் பரிசளிப்பதாயும் அல்லது அவர்களைக் கொன்றுபோட்டால் ஏழாயிரம் பவுன் கொடுப்பதாயும் துருக்கியர் பிரசுரித்திருந்தார்கள். ஆனால் துர்க்கி ராணுவ தளகர்த்தனாகிய டஜ்மல் பாட்சா ஏறியிருந்த ரயில்வண்டியையும் இன்னும் 17 புகைவண்டித் தொடர்களையும் தாக்கிச் சின்னாபின்னப் படுத்தினபோது துர்க்கி தளகர்த்தன் உயிர்தப்ப தனது ராணுவ ஆடைகளின் மேலுள்ள கெவர்தாச் சின்னங்களைக் களைந்து எறிந்துவிட்டு ஓட அவைகளை கர்னல் லாரன்ஸ் கண்டெடுத்தனர். இவர் அரபியா பாஷையில் பண்டிதர். அநேக அரிய காரியங்களைச் செய்துளர்.

**பட்டாபிஷேக ஆசனம்.** — உலகத்தில் மகா புராதீனமாயுள்ளதும் அதிசயமானதுமாய் இருக்கிற ராஜாங்க நாற்காலி இதுவே. கடந்த 6 நூற்றாண்டுகளாய் உவெஸ்ட் மினிஸ்டர் அபே ஆலயத்தில் இருந்திருக்கிறது. இது ஆயிரத்து முந்நூறும் வருஷம், முதலாம் எட்வர்ட் அரசனால் செய்யப்பட்டது. இவ்வாசனத்திற்கு ஐசுவரிய கல் என்று பெயர். அரசின் அதிர்ஷ்டம் இம்மகா ஆசனத்தின் மீது வீற்றிருக்க பட்டாபிஷேகம் பெற்றால்தான் நீடிக்குமென்றும் ஒரு கதையுமுண்டு. இக்கல் பெத்தேலில் யாக்கோபு தன் தலையைச் சாய்த்தக் கல்லென்றும், மோசேயை வளர்த்த பார்வோனின் மகள் தன் அரண்மனைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்த கல்லென்றும், கடைசியாக ஸ்பானியாதேசம், அயர்லாந்து தேசம், ஸ்காத்துலாந்து தேசம் முதலிய இடங்களுக்குக் கொண்டுபோகப்பட்டதென்றும் ஸ்காத்லாந்து தேசத்து ராஜாக்கள் நான்கு நூற்றாண்டுகளாக அதன்மேல் வீற்றிருக்க பட்டாபிஷேகம் பெற்றனர் என்றும் முதலாம் எட்வர்ட் அரசன் ஜெயித்து உவெஸ் மினிஸ்டருக்கு கொண்டுவந்தனரென்றும் சொல்லுகிறார்கள்.

## பஞ்சாங்கம்.

1919 பெப்ருவரிமூ பஞ்சாங்கம்.

பௌர்ணமி, 14உ


| வாரம் | பெப்ருவரி. | | | | | தை—மாசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | ... | 20 | 27 | 5 | 12 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 6 | 13 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 7 | 14 |
| புதன் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 1 | 8 | 15 |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 2 | 9 | 16 |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 8 | 10 | 17 |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | ... | 19 | 26 | 4 | 11 | ... |

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஹீனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினால் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor. THE REV. SUBRAHMANYAM, Royapettah, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டியோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 8542.


135 Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

சத்திய தூதன்.

MARCH, 1919. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சு, 1919.

## "THE DAYS ARE EVIL."

## "நாட்கள் பொல்லாதவை."

முகவுரை. நாட்கள் I. நமது நாட்கள் (a) நாம் இருக்கும் நாட்கள் (b) நாம் இனி சந்திக்கப்போகிற நாட்கள் II. பொல்லாதவைகள் — தீங்கானவைகள், பயங்கரமானவைகள்.

நாட்கள் தாலந்தாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது: தவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவ நோக்கமறிந்து நமது நாட்களைச் சரியானபடி பிரயோஜனப்படுத்திக் கொள்ளாமலிருக்கிறதினால் தேவன் நாட்களைத் தீங்கானவைகளாயும், பொல்லாதவைகளாயும் மாற்றி நம்மை எச்சரிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். நமது நன்மைக்கென்றே தீங்கைச் சிருஷ்டிக்கிறார், தீங்காகவும் மாற்றுகிறார். ஆகையால் ஏசாயா தீர்க்கதரிசி 45·7—ல் "தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே." என்று சொல்லியிருக்கிறார். தீங்கானவைகளிலிருந்தும் நன்மையுண்டாகச் செய்கிறவராயுமிருக்கிறார். இப்பொல்லாத நாட்களை, இத்தீங்குநாட்களை எச்சரிக்கையின் நாட்களென்று எண்ணித் தேவ திருநோக்கத்திற்கிசைய நம்மையும், நமது காத்தில் ஒப்புவித்திருக்கும் மகா பொறுப்புள்ள உக்கிராண ஊழியத்தையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளாவிட்டால், நாம் காலக்கிரமத்தில் பயங்கரமான நாளைச் சந்திக்கும்படி நேரிடும். ஆகையால் நாம் இந்தப் பொல்லாத நாட்களின் கூறு எவ்வாறிருக்கிறதென்று பலவகையிலும் பக்திவினயமாய்க் கூர்ந்துபார்ப்பது நமது பரம அழைப்புக்கும் உத்தியோகத்திற்கும் தேவ நோக்கம் நிறைவேறுதலுக்கும் ஏற்றதாயிருக்கிறது.

1. உலகத்தையும், உலகத்தில் நடந்ததும் நடக்கிறதுமான சம்பவங்களையும்;

2. திருச்சபையையும், திருச்சபையின் நிலைமையையும்;

3. தனிக்கிறிஸ்தவனையும் அவனுடைய ஜீவியத்தையும்;

4. வேதோபதேசத்தையும் நன்றாய்க் கவனிப்போம்.

உலகமும், உலக சம்பவங்களும். — உலகமெங்கும் அதிகாரப் பிரியமும், நாடுநகர நாட்டமும், நேர்மையற்ற ஏக சக்கராதிபத்திய வாஞ்சையும் மேலிட்டுக்கொண்டு வருகிறது. தேவனும், தேவாலயமும், வேதமும், பக்தியும், சன்மார்க்கமும் மனுஷர் பேச்சிலும் கிரந்தங்களிலும் இருக்கின்றனவேயொழிய அனுஷ்டானத்திற் காண்கிறது அருமையொருளாயிருக்கிறது. சுயகீர்த்திப் பிரதாபமும் பிறர் புகழவேணுமென்ற எண்ணமும் மேலிட்டு வருகிறது. "அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையே நோக்குவானாக" என்கிற ஸ்லோகத்தைத் தற்காலத்தில் "அவனவன் பிறருக்கானவைகளையல்ல தனக்கானவைகளையே தேடுவானாக" என்று மாற்றிவருகிறார்கள். ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமை, சமாதானத்துக்குப் பதிலாக சண்டை, சன்மார்க்கத்துக்குப் பதிலாக துன்மார்க்கம், தேவமார்க்கப் பிரகடனத்திற்குப் பதிலாகத் தங்கள் சுயதேர்ச்சியையும், சுயமுயற்சியையும் பிரசித்தி செய்துகொண்டு வருகிறார்கள். உலகத்தம்பிரானுக்கு விரோதமாய்ப் போர்புரிவதற்குப் பதிலாகத் தேவனுக்கு விரோதமாயும் ஒருவருக்கொருவர் விரோதமாயும் துவஜம் தொடுக்கிறார்கள். இவைகள் நாட்கள் பொல்லாதவைகள் என்பதற்கு அத்தாட்சியன்றோ?

உலக சம்பவங்கள். தற்காலத்தில் நடக்கும் சம்பவங்களைச் சற்று உற்றுப்பார்த்தால் உலகம் முடிவுக்குத்தான் வந்துவிடுமோவென்று அஞ்சவேண்டியதாயிருக்கிறது. எங்கும் யுத்தமும், யுத்த ஸ்தலமெல்லாம் ரத்த நீருமாய் ஓடுகின்றது. ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யம் எழும்பியிருக்கிறது. கிறிஸ்தவ ஜாதியாரோ ஒருவரையொருவர் கொலைசெய்யுங் கொலைபாதகர்களாயெழும்பியிருக்கிறார்கள். தேவப் பணிவிடைக்கென்று பொருள்சத்தம், புருஷசத்தம் செய்துவந்த கிறிஸ்தவ ராஜ்யத்தார் தற்சமயம் யுத்தமுகமாய்த் திரும்பிப் போர்புரிந்து மடிகிறார்கள். கிறிஸ்தவமார்க்க உபதேசப்படலுக்க, சகல ஜாதியாரையும் தேவன் ஒரே ரத்தத்தினால் உண்டாக்கியிருக்கிறார் என்று நம்பி, அவர்களை நேசித்து, வர்ண வித்தியாசம் பாராட்டாமலிருக்கவேண்டிய ஜாதியார் தங்களை மேலானோர் என்றும், தங்களைப்போன்றவர்களல்லாத ஜாதியாரெல்லாரும் தாழ்ந்தோர் என்றும் எண்ணித் தேவத்துரோகிகளாகி வருகிறார்கள். ஆங்காங்குள்ளோர் சுதேசாபிமானமும், பரம்பரை பரம்பரையாயுள்ள முன்னோரின் பழைய மார்க்காபிமானமும் சுஜாதியபிமானமும் உடையோராய் சத்தியத்தைக் கவனியாது தாங்கள்பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்னும் துணிவு கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நாட்கள் பொல்லாதவைகளென்று சொல்லவும் வேண்டுமோ. நடமாடும் கொள்ளைநோய்களும் பஞ்சகாலக் கொடுமைபோலிருக்கும் காலஸ்திதியும் சாதிக்கிற சத்தியமும் வேறல்ல.

திருச்சபையும், திருச்சபையின் நிலைமையும். புராதனமாயுள்ள மேற்கு தேசத்துச் சபைகள் தேவாசீர்வாதம் பெற்றுத் தங்களுக்கு இலவசமாய்க் கிடைத்த சத்தியத்தை இருளடைந்த புறதேசங்களுக்குக் கொண்டுபோய் பொருள்தத்தம் என்றும் உயிர்த்தத்தம் என்றும் பாராமல் அநேக சபைகளை நாட்டி நடத்திப் பரிபாலித்து வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் சில பகுதியார் தற்காலப் பெரும்போரினிமித்தம் புறதேசங்களில் நடத்திவரும் சுவிசேஷ வேலையையும், சபைக்கட்டுதலையும் சற்றுக் கைநெகிழ விடும்படி காலதோஷம் நேரிட்டிருக்கிறது. தாய்ச்சங்கத்தார்களும் தேசாபிமான ஆவி நிறைந்து, யுத்தகாரியங்களை தற்கால சுவிசேஷமாகப் பாவித்து, தாங்கள் செய்யும்போர் நீதியின்போர் என்றெண்ணி பொருளையும் மனுஷரையும் யுத்தமுகமாய்த் திருப்பிக்கொண்டு வருகிறார்கள். மிஷனரி ஊழியத்தின் பலனாக ஸ்தாபிதமாயிருக்கிற நமது இந்திய சபைகளைப் பார்த்தாலோ அவைகள் சின்னஞ்சிறு பால்ய சபைகளாகவும், பால்குடிக்கிற சபைகளாகவும் இன்னும் தாயையே நோக்கிப் பார்க்கிற சபைகளாகவும் இருக்கின்றன. பக்தியில் முதிராதவர்களும் அறிவில் தேறாதவர்களும், பூரண புருஷர்களாகாதவர்களுமாயிருக்கிற இக்காலத்தில் தாய்ச்சங்கத்தார் நம்மைவிட்டுச் சற்றுப் பராமுகமாயிருக்க நேரிடுமாயின் இக்காலத்தை நமது துரதிஷ்டகாலம் என்றும் பொல்லாத நாட்கள் என்றும் சொல்லவும் தடையுளதோ. முதலாவது நமது சிறுசபைகளும் அங்கங்கு நடந்தேறிவருகிற சுவிசேஷப் பணிவிடைகளும் தளர்ச்சியடைந்து, வைராக்கியம் குறைந்து விசுவாசம்குன்றி நகைப்பார் முன் இடறிவிழுந்த பாவனையாய் நமது இந்து மகமது ஜாதியார் பார்வையில் பரிகாசத்திற்கு ஆளாகக்கூடிய ஸ்திதிக்குட்பட்டு முன்வைத்த காலைப் பின்வாங்கவும், வாந்திபண்ணினதைத் திரும்பவும்

தேடும்படியான நிலைமைக்கு வரவும் கூடிய கால மாதலின் "பொல்லாத நாட்கள்" இந்த நாட்கள் என்று சொல்லுவதற்கு ஐயமுண்டோ?

சபைப்பிரிவினைகளும், கள்ளப்போதகங்களும், வேதப்புரட்டுகளும், சபையை அசட்டைப்பண் ணும் அணிகாமும் பொல்லாதநாட்களுக்கு அடை யாள மன்றோ? உலகாதாயத்தை நாடி மந்தைக்கு மேய்ப்பர்களாயிருக்கிறதும், கூலிக்குச் சுவிசேஷ கர்களாகிறதும் பொல்லாத நாட்களின் கூறல்ல வோ? மந்தையிற் சேர்க்கப்பட்டு, போதனையடை ந்து பேர்பிரஸ்தாபமுள்ள சபையாய் விளங்கிக் கொஞ்சங்கொஞ்சமாய் மங்கிக் கடைசியில் மருள விழுந்து போகிறதும் பொல்லாத நாட்களின் தன்மையன்றோ? சில சபைகள் குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறதும் "நாட் கள் தீதானவைக"ளென்று ரூபிக்கிறதல்லவா?

(இன்னும் வரும்)

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### நாலாம் அதிகாரம்

மிஷன் வேலையும் தோந்தரவும்

(தொடர்ச்சி.)

எல்லாரும் உட்கார்ந்து மூன்று நான்கு மணி நேரங்களாய்ச் சபை ஆளுகையைப்பற்றிப் பேசவும் தர்க்கிக்கவும் ஆரம்பித்தார்கள். இவ்வளவுநேரமும் சில நிமிஷங்களைப்போல கழிந்தது. அதன்பிறகு ஹெபிக் ஐயர் கன்னனூரைவிட்டு மைசூர் ராஜ்யத் திற்குப்போனார். அவர் போகும்வழியில் கூர்க் முத லிய மலைநாடுகளில் தங்கி கர்னல் பிரேஷர் துரை யவர்களோடு ஆலோசித்து அவ்விடத்திலுள்ள சில மலைநாட்டாருக்கு மிஷன் ஊழியத்தை ஸ்தாபிதம் செய்ய ஆலோசித்தார். இவ்வித ஆலோசனையான ஊழியம் அவ்விடத்தில் 1853-ம் வருஷம் மாக்லிங் பண்டிதரவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு தென்னிந்தியா பெரிய இராணுவ ஸ்தல மடங்கிய பெங்களூருக்குப்போனார். அந்த இடத் தில் சில சுதேச கிறிஸ்தவர்கள் ஹெபிக் ஐயரைப் பார்க்கும்படி வந்தார்கள். இதுதான் அவர் முதற் தடவையாக இவ்வித சுதேச கன்னடக் கிறிஸ்தவர் களைப் பார்த்தது. அதனால் ஹெபிக் ஐயர் அவர்களைப் பார்த்தவுடனே, நன்றியறிதலான ஹிருதயத்தோடு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். அவ்விடத்திலுள்ள இலண்டன் மிஷன் மிஷனெரிமார் இந்த அந்நிய தேவ ஊழியருக்கு மனமுவந்த நல்வறவுக் கூறி மிகுந்த பிரீதியோடு இவரை ஏற்றுக்கொண்டு அடிக் கடி அவர்களுடைய ஆலயத்தில் பிரசங்கம் செய் யும்படி கேட்டுக்கொண்டார்கள். சாதாரணமாய் அவருடைய பிரசங்கத்திற்கு முப்பதுபேர் வருகிற தற்கு பதிலாக நூற்றுஐம்பதுபேர் அவருடைய பிரசங்கங்களை கேட்கவந்தார்கள். இவர் ஜர்மானிய தேசத்தாராய் இருந்தும் அரைகுறையான ஆங்கில பாஷையைப் பேசுவதினாலேதான் இத்தனை ஜனங் கள் அதை ஒரு விபரீதமாய்க் கேட்க வருகிறார்கள். என்று ஹெபிக் யோசித்தார். லண்டன் மிஷன் மிஷனெரிமார் இவரை அழைத்துப்போய் அங் குள்ள பெரிய மனிதர்களிடத்தில் பழக்கப்படுத்தி னார்கள் அவர் அவர்களிடம் தேவையான புதிய தும் சுத்தமுமான ஜீவியத்தைப்பற்றி அதிக நேர்மை யான வார்த்தைகளால் பேசினார். இவருடைய தைரியத்தையெல்லாம் கவனித்த இலண்டன் மிஷன் ஊழியராகிய காம்பல் ஐயர் ஹெபிக் ஐய ரைப் பார்த்து "நான்மாத்திரம் உம்மைப்போல அவ் வளவு நேராய் அந்த ரெஸிடெண்ட் என்கிற பெரிய உத்தியோகஸ்தனிடம்பேசியிருப்பேனானால் அவன் எனக்கு நான்வந்த வழியைக் காண்பித்திருப்பான்" என்றார். இந்தவிதமாய் ஹெபிக் ஐயர் பெங்க ளூரில் சிலகாலம் தங்கி இலண்டன் மிஷனைப்பற் றிக்கேள்விப்பட்டதும் கண்டதுமானவைகளைக் குறி த்துச் சந்தோஷப்பட்டார். பெங்களூரில் லண்டன் மிஷன் அல்லது வெஸ்லியன்மிஷன் சம்பந்தமான பெரிய ஆலயங்கள் இல்லாவிட்டாலும் அவ்விடத் தில் அவர்கள் செய்த ஆரம்ப ஊழியம் மனதிற்கு அதிக மனோகரத்தைக் கொடுக்கக்கூடியதாய் இருந் தது. அதனால் அவ்வூழியம் அதிக பெருக்கமுடைய தாய் வளருமென்று ஹெபிக் ஐயர் உறுதியாய் நம்பி னார். அப்படி அவர் நம்புவதற்கு ஒரு காரணமிருந் தது.

அதாவது அங்குள்ள ஐரோப்பியர் எல்லாரும் சுவிசேஷத்தைக் கேட்கும்காதுகளை யுடையவர்க ளாய் இருந்தார்கள். ஹெபிக் ஐயர் இன்னும் வேறே ஊர்களுக்குப்போகவேண்டியதாயிருந்தபடி யால் பெங்களூரில் வெகுகாலம் தங்கமுடியவில்லை. அவர் ஒரு பிராமண உபதேசியார் மலாக்கி என்பவ ரோடு சேர்ந்து நவம்பர்மீ 20-ம்உ பல்லாரிக்கு வந்தார். கன்னடியர் மத்தியில் புரொடஸ்தாந்து மிஷனை முதலாவது ஸ்தாபிதம்செய்த ஹாண்ட்ஸ் போதகரை ஹெபிக் ஐயர் சந்தித்தார். இந்த நல்ல போதகர் இருபத்து நாலுவருஷகாலமாகக் கன்னடி யர் மத்தியில் சுவிசேஷத்தைப்பிரசங்கித்து கடைசி யாய் ஒரே ஒரு குடும்பத்தைக் கிறிஸ்துவினிடம் கொண்டுவந்தார். அதோடு ஏறக்குறைய நூறு ஆத்துமாக்களைத் தமிழ்சபையில் சேர்த்தார். ஹெபிக் ஐயர் பல்லாரிக்குப் போனவுடன், பிரிட்டிஷ் உத்தி யோகஸ்தர்களுக்கும், அங்கிருந்த பெரிய இராணுவ ஸ்தல உத்தியோகஸ்தர்களுக்கும் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். அவர்கள் எல்லாரும் இவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, அவருக்கு அதிக பக்ஷத்தையும் அன்பையும் காட்டினார்கள். அந்த ஊரில் நவாபு தன் மகுடாபிஷேக நாளில் தன் மனைவியின்மேல் கோபாவேசங்கொண்டு அவளைச் சிரச்சேதம் செய்தபடியால் அங்கிருந்த ராணுவச் சிறைச்சாலையில் கைதியாக வைக்கப்பட் டிருந்தான். அக்கொடியவன் ரக்ஷகரைப்பற்றி கொஞ்சமேனும் காதில் போட்டுக்கொள்ளமாட் டான். அதோடு இன்னொரு ஜெர்மானியக் கைதி கொலைக் குற்றத்தில் அகப்பட்டு அவனும் தன் ஜீவ நாள் அளவும் சிறையில் வைக்கப்பட்டிருந்தான். இவன் ஹாண்ட்ஸ் போதகரால் போதிக்கப்பட்டுக் கிறிஸ்துவுக்குள் தாழ்மையுள்ள கிறிஸ்தவனாய் இரு ந்தான். ஹெபிக் ஐயர் மூன்றுவாரங்களாய் பல்லா ரியில் தங்கினபிறகு அவர் ஹரியார்மூலமாய் டிசம் பர்மீ 18-ம்உ ஹூப்ளி பட்டணம் சேர்ந்தார். அந் தப்பட்டணம் பெரியபட்டணமாய் இருந்தது. அதை அவர் பார்த்தவுடன் ஒருகாலத்தில் இந்த பட்டணம் கடவுளுடைய ஆசீர்வாதத்தால் நிரம்பும் என்று தம் உள்ளத்தில் அறிந்து குதூகலப்பட்டார். சில வருஷங்களுக்குப் பிறகு ஹூப்ளிபட்டணம், மிஷன் ஊழியத்திற்கு ஒரு விசேஷித்த மத்திய இடமானது. அவர் தார்வார் என்கிற இடத்தி லுள்ள ஐரோப்பியருக்குப் பிரசங்கம் செய்துவிட்டு ஜனவரிமீ கடைசியில் தம்முடைய இருப்பிட மாகிய மங்களூர் வந்துசேர்ந்தார். இப்போது இந்த இடத்தில் நல்ல மாதிரியான ஆரம்பம் ஏற்பட் டது. இதுவரையிலும் தேசபாஷைகளைக் கற்றுக் கொண்டிருந்த மிஷனெரிமார் அங்குள்ள ஜனங்கள் மத்தியில் வாசஞ்செய்து பிற்கால ஊழியஞ்செய்யத் தீர்மானித்தார்கள்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது

### வேவுகாண்டம்.

இவ்வாறே எக்காலத்திலும் திருச்சபையில் கள்ளப் போதகர்கள் அடிக்கடி உட்பிரவேசித்து அசுசிப் படுத்துகிறார்கள். சாத்தான் பறந்து கரிக்குரிவியின் வடிவம் பூண்டு ஜீவவிருட்சத்தின்மீது உட்கார்ந் தான். அவனுக்கு மனோசவுக்கியம் எவ்வளவுமில்லை. ஆயினும் அங்கிருந்தவர்களுக்கு மரணத்தை வரு விக்க எண்ணமுற்றான். அம்மரத்தின் ஜீவகாருண் ணியத் தன்மையை அறியாமல், அதின் அலங்காரத் தை மாத்திரம் வேடிக்கையாய்ப் பார்த்தான். அம் மரத்தை சரியான பிரகாரங் கையாடுபவர்களுக்கு மாத்திரம் அழியாமையை அளிக்கத்தக்கது. தேவ னொருவருக்கு மாத்திரம் அம்மரத்தின் நன்மை யின்னதென்று தெரியும். மனிதனோ நன்மையான் காரியங்களை அபாத்திரமாய் கையாடி அருவறுக்கப் படத்தக்கவனாகிறான்.

### 4. ஏதேன்வளங்கூறு படலம்.

வேதாளம் இத்தருணத்தில் கண்குளிரத்தக்க காட்சிகளைப் பார்த்தான், ஐம் புஞ்சேந்திரியங்களும் களிக்கத்தக்கனவாயுமிருந்தன. ஓர் சிறிய சோலை யில் பூலோகத்தின் திரவியமெல்லாங் கொட்டிவைத் திருக்கிறதையுங் கண்டான். சொல்லவேணுமென் றால் பூமியில் மோட்சமே வந்திறங்கினதுபோலிருந் தது. இப்பூங்காவனத்தின் மத்தியில் செல்வம் பொ ழிந்த ஏதேன் தோட்டமிருந்தது. அதற்கு "தேவ னுடைய தோட்டம்" என்றும் பெயர். அத்தோட் டம், கீழ்த்திசையிலிருந்த ஆரான்தொடங்கி கிரேக் கை அரசர்களாற் சமைக்கப்பட்ட செலுசியா நகரத் தின் கோபுரங்கள்மட்டும் எட்டினது. இவ்வளம் பொருந்திய பூமியில், காட்சிக்கும், வாசனைக்கும், சுவைக்கும் அனுகூலமான உசித கனிவர்க்கங்களை யுடைய விருட்சங்களிருந்தன. சமஸ்தத்திற்கும் நடு வில் ஜீவவிருட்சமானது உன்னத சகிதமாய் விளங்கி நின்றது. அது தேவாமிர்தக் காய்களைக் காய்த்துக் கொண்டு பசிய பொன்னிறகோலமாயிருந்தது. இச்ஜீவவிருட்சத்துக் கருகாமையில் நமக்கு மரணத் தை வருவித்த "அறிவின் விருட்சம்" இருந்தது. நன்மைக்குந் தீமைக்குமுள்ள பேதாபேதங்களை மகா கஷ்டத்துடன் அறியப்பண்ணினது அவ்விருட்ச மே. ஏதேனின் தென்பாரிசத்தில் ஓர் பெரிய நதி ஓடிற்று. அந்நதியின் ஜலம் ஓர் மலையைவளைந்து ஒருகண்ட சிராயோடி ஓர் பெரிய ஏரியாயிற்று. மேற்சொல்லியமலை அத்தோட்டத்துக்கு உபயோக மாக விருந்தது. அந்நதியினின்று அநேக கால் வாய்களுஞ் சிற்றாறுகளும் புறப்பட்டு அத்தோட்ட மெங்கும் பாய்ந்து, பிற்பாடு ஒன்றாய்க்கூடி இருண் டதும் விசாலித்ததுமான ஓர் சமுத்திரம்போலாயின. அச்சமுத்திரம் நான்குபெரிய ஆறுகளாகி, அநேக தேசங்களைச் சுற்றியோடின. அவைகளை விவரிக்க வேண்டுவதில்லை. விலையுயர்ந்த முத்துக்களும், பொ ன்னிற மணலும் எவ்வாறு அவ்வாற்றிலுண்டாயின வென்றும், ஜலம் அத்தோட்டத்தின் ஒவ்வொரு மரத்துக்கும் செடிக்குஞ்சென்று திவ்வியமான புஷ் பங்களையுங் கனிவர்க்கங்களையுமுண்டாக்கினவென் றும் யாரால் விவரித்துமுடியும். தோட்டங்களில் சாதாரணமாய்ப் பாத்திகளிலும் மண்பாண்டங்களி லும் வைத்துண்டாக்கப்படுகின்ற நற்கந்தப்பூண்டு களும், இயற்கையாய் மலைகளிலும் வனங்களிலும் தழைத்தோங்கி நிற்கும் எண்ணிறந்த பசிய செடிக ளும், சூரியகிரணங்களும் ஊடுருவக்கூடாத நிழலைத் தருகின்ற இலையுதிரா மரங்களும் வளர்ந்திருந் தமையால் இப்பூங்காவனம் நானாவித அலங்கிர்த காட்சியுள்ளதாயிருந்தது, பரிமளிக்கின்ற தோப்புக ளும் பொன்னிறப் பட்டைகளையுமுடைய மரங்க ளும், இனிய கனிவர்க்கங்களும் பசிய புல் நிறைந்த மைதானச் சாலைகளும் அபரிமிதமாயிருந்தன. இவை களின் ஊடே ஆடுமாடுகள் கும்பல்கும்பலாய் மேய்ந் தன. குன்றுகளின் ஓரங்களில் சிற்றாறுகள் ஓடி பள் ளத்தாக்குகளை செழிப்பித்தன. (இன்னும் வரும்.)



## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்.

ராணுவ அணி வகுப்புகள்.—

பாட்டரி.—ஆறுதாக்கும் பீரங்கிகளும், அநேக சாமக்கிரியைகள் சுமக்கும் வண்டிகளும், குதிரைக ளும், சாதாரண மனிதர்களும் சேர்ந்துள்ளது.

ரெஜிமென்ட். — இது நான்கு குதிரையாட் படைகளும் ஆறு பீரங்கிப் படைகளும், நான்கு காலாட் படைகளும் சேர்ந்துள்ளது.

பிரிகேட்.—இது நான்கு காலாட்படைகளும், பன்னிரண்டு குதிரைப்படைகளும், ஆறு பீரங்கிப் படைகளுமுள்ளது. இதற்கு பிரேகடியர் ஜென ரல் என்பவர்தான் தளகர்த்தன்.

துருப்பு. — இது குதிரைப்படையில் பாதி. இதற்கு ஒரு காப்டன், இரண்டு லப்டினன்ட் களும், ஐம்பத்தாறு குதிரை ஏறும் கமிஷனில்லாத ஆபீசர்களும் 20 காலாட்களும் உண்டு.

பட்டேலியன். — இது 1096 காலாட்களுள்ள படை. இது இரண்டு வகுப்பாகச் செல்லும். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு மேஜர் உண்டு. பட் டேலியன் முழுவதற்கும் ஒரு லப்டினன்ட் கர்னல் மேலான அதிகாரி.

டிவிஷன். — இதில் அநேக ராணுவ ஊழிய வகுப்பார் உண்டு. இதற்கு ஒரு பெருப்படை (army) என்றும் சொல்லலாம். இதில் பதினா யிரம் ஆட்களும் 300 ஆபீசர்களும் இருப்பார்கள். இதற்குத் தலைவர் எதையும் சுயாதீனமாய்ச் செய்யக் கூடியவர்.

உலகத்திலுள்ள மகா பெரிய ரெயில்வே ஸ்டேஷன். — இது லண்டன் மகா நகரத்தில் பூமியின் கீழுள்ள எம்பாங்க்மென்ட் ஸ்டேஷன். இந்த ஸ்டேஷன் வழியாய் ஒரு நாளைக்கு 2139 இருப்புத்தொடர் வண்டிகள் ஓடுகின்றன. ஒவ் வொரு வண்டியும் ஸ்டேஷனில் நிற்கின்றது.

இந்தியா யுத்தகாலத்தில் கொடுத்த தானிய உதவி. — இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலியா முத லிய தேசங்களுக்குக் கடந்த 4 வருஷங்களில் 47 லட்சம் டன் நிறையுள்ள ஆகாரப்பொருள்கள் சே கரம்செய்து மனங்கோணாமல் உதவிபுரிந்த நமது இந்தியாவை, ஒரு பத்திரிகைப் புகழ்கின்றது.

சகாய அரிசி மண்டி. — சென்னை முனிசிபா லிடியார் ஏழைகளின் கஷ்டத்தையும் பரபரப்பை யும் அறிந்து இவ்வருஷ முடிவுமட்டும் (official year) அரிசிமண்டி ஏற்பாடு செய்திருக்கின்றனர். கடந்த 5 மாதங்களில் 1000 ரூபாய் நஷ்டமாயி னும் மன நோகாது ஏழைகட்கு உதவிபுரியும் பொ ருட்டு ரூபாய்க்கு 3½ படி விகிதம் விற்பனை செய் யத் தீர்மானித்திருக்கிறார்கள். இதுவும் ஒரு பெரிய தர்மகாரியம்.

இந்தியா ராஜாதிகார காரியதரிசி. — கனம் மான்டெக்யு அவர்கள் இந்தியா ராஜாதிகார காரிய தரிசியாய் மீண்டும் நிலைகொள்ள சர். எஸ். பி. சிங்கா அவர்கள் லார்ட் பட்டம் சூட்டப்பெற்று உதவி இந்திய ராஜாதிகார காரியதரிசியாக நியமிக் கப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலப் பிரபுக்களின் சங்கத்தில் ஆசனம் பெற்றிருக்கிறார். இம்மகா கௌரதாப்பதவி முதல்முதல் அடைந்திருக்கின்ற இந்தியர் சர். சிங்கா அவர்கள்தான்.

இந்திய யுத்தசேனை. — நமது இந்தியாவி லிருந்து யுத்தம் செய்வதற்கென்று ராணுவத்தில் சேர்ந்த இந்தியரின் தொகை 11,6 ,789, இதர தேசங்களில் யுத்தம் செய்வதற்கென்று சமுத்திர மீது பிரயாணம் செய்தோரின் தொகை 12, 15, 338. இவர்களில் யுத்த முகத்தில் காயப்பட்டோர் 14, 14, 39. மீதியானோர் போரில் மாண்டனர். இவ்வாறு நமது தேசஸ்தரும் ராஜ பக்தியும் தேச அபிமானமும் உடையோராய் விளங்கினர்.

ராஜதுக்கம். நமது மகா சக்கரவர்த்தி மாட்சி மைதங்கிய ஜியார்ஜ் அரசரின் கடைசி புதல்வன் பிரின்ஸ் ஜான் என்பவர் சில்காலம் பலட்சய ஸ்திதி யிலிருந்து ஜனவரிமாதம் 18தேதி கர்த்தருக்குள் பரலோக பிராப்தி யடைந்தனர். இது ராஜதுக்க மும் பிரஜைகளின் துக்கமுமாயிருக்கிறது. எல்லா வற்றையும் நன்மைக் கேதுவாக நடத்துகிற கர்த்தர் நமது சக்கரவர்த்தியையும், மகாராணியையும், ராஜ குடும்பத்தையும் ஆறுதல்படுத்துவாராக.

ராணுவ உத்தியோக நாமங்கள்.—

இந்தியருக்குரிய உத்தியோகப்பெயர்.

லான்ஸ்நாயக், நாயக், அவுல்தார், அவுல்தார் மேஜர், ஜமேதார், சுபேதார், சுபேதார்மேஜர்.

ஐரோப்பிய உத்தியோக நாமங்கள்.

லான்ஸ் கார்புரல், கார்புரல், சார்ஜன்ட், சார் ஜன்ட் மேஜர், சக்கண்ட் லப்டினன்ட், லப்டி னன்ட், காப்டன், மேஜர், லப்டினன்ட் கர்னல், கர்னல், பிரேகிடியர் ஜெனரல், லப்டினன்ட் ஜெ னரல், மேஜர் ஜெனரல், ஜெனரல்.

வாயுவேகமனோவேகப் படகு.—மெசொபொத் தேமியாவில் யுத்த காலத்தில் ஐபிராத், தைகிரீஸ் ஆறுகளின்மீது ஒரு இடமிருந்து வேறொரு இடம் ராணுவ உத்தியோகஸ்தர் சமாச்சாரக்காரர் வெகு துரிதமாய்ப் போக்குவரவு செய்வதற்கு நூதன மாய்க் கண்டுபிடித்தப் படகுகள் உண்டு. அவை கள் 25 அடி நீளமும் 15 அடி அகலமும் உள்ள வைகள். ஏறக்குறைய ஒருடன் பளுவு சுமந்தேகக் கூடும். தண்ணீர்மீது பட்டதும் படாததுமாய் நீர்க் காகங்கள் தண்ணீர்மீது பறந்து செல்வதுபோல் ஒருமணிநேரத்திற்கு 46 மைல் தூரம் ஓடுகிறது. இப்படகிற்கு ஹைட்ரோக்ளிசியர் என்று பெயர்.

சமுத்திர அபாய வெடிமருந்து குண்டு.—இதற்கு சப்மரீன் வெடி சுரங்கம் என்று பெயர். மனுஷ சங்காரனின் புத்திக்கோச்சர சிருஷ்டிகளில் இது ஒன்று. யுத்த காலத்தில் சமுத்திர யுத்தத்தில் பிர யோகமான இப்பயங்கர வெடிமருந்து குண்டுக்கு சமுத்திர பாம் (bomb) என்று சொல்லலாம். உருண்டை வடிவமுள்ள இக்கருவி தண்ணீருக்குள் நங்கூரம் போடப்பட்டு மிதக்கின்றது. இக்குண்டு மீது இணைவாய் இசைந்திருக்கும் திராவகத்தை யுடைய ஈயக்குண்டுகள் திடீரெனக் கப்பல்களைத் தாக்கும்பொழுது, உடைந்து, பயங்கரமான சப் தத்தோடு கூடிய நாசமோசத்தை விளைவிக்கின்றது.

மனுஷரின் ரோம வியாபாரம். — மனுஷர் களின் சிரசிலுள்ள ரோமத்தைக்கொண்டு செய்யும் வியாபாரம் சாதாரணமானதன்று. இத்தாலியரே வியாபாரஞ் செய்பவர். ரோமம் சேகரம் ஆகும் இடங்கள் இத்தாலியா, தலமாட்டியா, சுவிட்சர் லாந்து என்னும் தேசங்களே. இந்நாடுகளிலுள்ள குடியானவ ஸ்திரீகள் தங்கள் சிரசிலுள்ள பின்பாக ரோமங்களைக் காலாகாலங்களில் கத்திரித்து மேற் படி வியாபாரிகளுக்குக் கொடுப்பதினால் தங்கள் ஜீவனத்தை அதிகரித்துக் கொள்ளுகிறார்கள். வரு ஷத்தில் இரண்டு தடவை ஒரு ஸ்திரீ இலேசாய்த் தன் ரோமத்தை வியாபாரிக்குக் கொடுக்கிறாள்.

யுத்தகால வைதீக தந்திரம்.—பிஷ்கார்ட் இட மிருந்து வேகீஸ் போர்ட் என்னும் இடத்திற்கு வந்த ஒரு கப்பலில் பிரேதப் பெட்டியும் துக்கக் குறிக்கு அடையாளமாய் சாவுகோல வஸ்திரம் தரித்த மூன்று வாலிபர்களும் இருந்தனர். அவர் கள் ரோஸ்லேரு துறைமுகத்தில் இறங்கிச் சாவு வண்டி ஒன்றில் பிரேதப் பெட்டியை வைத்து கல்லறையை நோக்கிச் சென்றனர். வெகு சாமர்த் தியமுள்ள அவர்கள் சாவு பெட்டியை கல்லறையில் அடக்கம்செய்வதுபோல் காட்டி சாவுவண்டி போன தும் குழியிலிருந்து பெட்டியை கரையேற்றி உடை த்து அநேக (Rifles) துப்பாக்கிகளை எடுத்தனராம்.

பஞ்சு இயந்திரச் சாலைக் கலகம். — சில மாதங்களுக்குமுன் பிரம்பூர் பஞ்சுசாலையில் வேலை செய்யும் ஆட்களுக்குள் பெரும் கலகம் உண்டாகி இயந்திரவேலைத் தடைப்பட்டு விற்பனைக்கு வெளி யாகக்கூடிய சரக்குகள் குறைந்துபோனதினால் சென்னைப் பட்டணத்தில் பெரும் வஸ்திர கஷ்டம் உண்டானது. அக்கலகம் நீங்கினதும் நற்காலம் வந்ததென சந்தோஷிக்கும் சமயத்தில் பம்பாய் மகா நகரத்திலுள்ள பல பஞ்சு இயந்திர சாலைகள், வேலைசெய்யும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குள் உண்டாகிய கலகத்தினால் வேலை நின்றுபோக துணிமணி கஷ்டம் முன்னிலும் அதிகப்பட்டிருக் கிறது. இக்கலகங்களும் நீங்கி வஸ்திரத்திற்கு க்ஷேமகாலம் எப்பொழுதுதான் பிறக்குமோ.

விலையேறப்பெற்ற வாள்.—கிழக்கு தேசத்து முடிமன்னர் வாசம்பண்ணும் அரண்மனைகளிலும் மேற்குதேசத்து ராஜ மாளிகைகளிலும் உள்ள பொக்கிஷசாலைகளில் அநேக விலையேறப்பெற்ற வாட்களிருக்கின்றன. அவைகளில் ருஷியா, துருக்கி, சியம் பர்சியா, இந்தியா என்னும் தேசங் களிலுள்ள ராஜமாளிகைகளில் இருக்கும் வாட்க ளில் இந்தியா தேசத்து பரோடா கேய்குவார் அவர்களுடைய ஆதீனத்திலுள்ள வாளொன்றே மகா மதிப்புள்ளது. அதன் பிடியும் அதை மாட்டி யுள்ள வாறும் வைரக்கற்கள், இரத்தினக்கற்கள், நீலக்கற்கள், கோமேதகக்கற்கள் முதலியவைகளி னால் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வாளின் கிரயம் இரண்டுலட்சம் பவுன் பெறுமாம்.

திமிங்கல வேட்டை. — பயங்கரமான சமுத் திர ஜந்துக்களில் திமிங்கலம் ஒன்று. மீன் வேட் டை ஆடுவோர் திமிங்கலவேட்டை விசேஷித்த தென்பர். தென் ஆப்பிரிக்காவில் வருஷத்தில் இரண்டு தடவை திமிங்கலவேட்டை ஆடுகிறார்கள். அச்சமுத்திர மிருகம் சாதாரணமாய் 25 அடி நீள முள்ளது. இங்கிலாந்தில் ஸ்கார்பரோ என்னு மிடத்தில் அகப்பட்ட திமிங்கலம் 49 அடி நீள முள்ளதாயிருந்தது. உலகத்தில் இதுமட்டும் பிடித்த மீன்களில் மகாப்பெரிய திமிங்கலம் ஆஸ்டென்டு என்னும் துறைமுக ஸ்தானத்தில் பிடிபட்டது. அதன் நீளம் 100 அடியாம். அதை நிறுத்துப் பார்த்ததில் 249 டன் நிறையுள்ளதெனக் கண்ட னர். அதினின்று உருக்கி எடுத்த எண்ணெய் நாலாயிரம் காலனும். இவ்வெண்ணெய் மெழுகு வர்த்தி செய்வதற்கு ஏற்றதாம்.

### பஞ்சாங்கம்.

1919 மார்ச்சுமீ பஞ்சாங்கம்

பௌர்ணமி, 16உ அமாவாசை, 2, 31உ

| வாரம் | மார்ச்சு. | | | | | | மாசி—பங்குனி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 19 | 26 | 3 | 10 | 17 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 20 | 27 | 4 | 11 | 18 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| புதன் .. | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 24 | 1 | 8 | 15 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 18 | 25 | 2 | 9 | 16 | ... |


# MELLIN'S FOOD








FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஹீனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினால் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor
THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

விளம்பரம்


ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபால்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டியோர் விலையைத் தபால்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கெதிர் C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 8804.



Registered No. M. 442.




12 APR 1919
MADRAS

# சத்திய தூதன்.

APRIL, 1919. PRICE, 1 PIE.—விலை, க பை. ஏப்ரல்மீ, 1919.

## "THE DAYS ARE EVIL."

## "நாட்கள் பொல்லாதவை."

(தொடர்ச்சி.)

தனிக்கிறிஸ்தவனும் அவனுடைய ஜீவியமும். கிறிஸ்தவர்களின் தற்கால ஆவிக்குரிய நிலைமை பரிதபிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறது. தற்கால அப்போஸ்தலர்முதல் சகல சுவிசேஷ ஊழியர்களும், சபையின் போதகர்மார்களும், சபையார்களும் வெளிவேஷத்தில் கிறிஸ்துவின் தொண்டர்களாகவும் அடியார்களாகவும் காணப்படுகிறார்கள். இயேசுவுக்கு ஏன்றும், தன்னைப்போலொத்த உடன் சிருஷ்டிக்கென்றும் ஜீவித்து உழைக்கிற ஒரு கிறிஸ்தவ அடியானைக் காண்பது துல்லபம். கிறிஸ்துவின் ஊழியத்தை லௌகீக ஊழியம்போல் கூலிக்கு மாறடிக்கிற தொழிலாகமாற்றி பக்தியின் வேஷம் தரித்து, வேதத்தைக் கையேந்தித் திரிகிற தாசர்களும் அதிகரித்து வருகிறார்கள் ஆவியின்றி, அநுதாபமின்றி, ஆத்துமதாகமற்று கடனுக்கென்று கடமையை நிறைவேற்றுவதுபோல் கிறிஸ்தவ ஊழியத்தைச் செய்துவருகிற சகோதர சகோதரிகள் பெரும்பான்மையோரே. தற்காலத்தில் உலகத்திலிருக்கும் அநேக ஜீவனார்த்த ஊழியங்களில் கிறிஸ்தவ ஊழியமும் ஒன்றாகப்பாவித்து பணத்தையும் படிப்பையும் சிறப்பாக எண்ணி ஆவியற்று, அனலற்று, ஆத்தும ஈடேற்ற வாஞ்சையற்று ஊழியத்தை நடத்திவருகிறார்கள். நாகரீகக் காலத்துக்குரிய வாகனாதிகள் இல்லாமல் கால்நடையாய் அலைந்துதிரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க மனதில்லை. சரீரவசதிகளில் குறைவுபடுத்தவுங் கூடாது சுவிசேஷத்துக்குப் பதிலாக பொய்யுரைக் . குலப்பெருமை, படிப்பின்மேன்மை, சாதி ஆசார ஆசரிப்பு முதலியவைகளையே பிரசங்கப் பொருளாக்கிக்கொண்டு திரிகிறவர்களும், நேர்மைகெட்ட சுவிசேஷ மார்க்கத்தை மற்ற மார்க்கங்களுடன் சமரசப்படுத்தி உபந்நியாசிக்கிறவர்களும், இரட்சிப்புகீகடுத்த ஆண்டவரின் பாடுகளையும், அப்பாடுகளின் மேலுள்ள விசுவாசத்தையும் விலக்கி நாகரீகமுள்ள கிறிஸ்தவ ஜாதியாரின் மார்க்கத்தினால் விளையும் லௌகீகார்த்தமான வசதிகளையும் சிலாக்கியங்களையும் உபதேசத்துக் குரியவைகளாக்கிக் கொண்டு வருகிறவர்களும் அதிகரித்து வருகிறார்கள். உள்ளத்தை உள்ளபடி உரைக்காது உலகரஞ்சனத்தை நாடி, தாட்சண்யப் பிரசங்கிகளாயு மிருக்கிறார்கள். உலக ஆதாயமே பெருத்தநோக்கம். ஊழியர்கள்பாடு இப்படியிருக்கச் சாதாரணச் சபையாரோ என்றால் உலகத்தாரைப்போலவே வாது வழக்கு உள்ளவர்களும், கோர்ட்டுகச்சேரி ஏறுகிறவர்களும், ஓய்வுநாளை அசட்டைசெய்கிறவர்களும், வேதவாசிப்பு ஜெபம் முதலியவை யற்றவர்களும், கிருபையின் ஏத்தனங்களுக்கு இணங்காதவர்களும், குடும்பத்தை அஞ்ஞானியைப்போல நடத்துகிறவர்களும், எல்லாருக்கும் பொதுவாயுள்ள சன்மார்க்க நெறிகளையும் மறந்தவர்களுமாயிருக்கிறதை காண்பது துயரத்திற்கும், பரிதாபத்திற்கும் காரணமன்றோ? புறமதஸ்தர்களைப்போல் என்னத்தையுண்போம், எதை உடுப்போம் என்கிற எண்ணமும் பேச்சுமே ஓயாமணியமாயிருக்கிறது. (தீமைக்குத் தீமையும் நன்மைக்கு நன்மையும்) "கோணலும் மாறுபாடுமான சந்ததியார் முன் குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் மாசற்ற தேவனுடைய பிள்ளைகளா யிருப்பதற்கு"ப் பதிலாக பன்றியோடுசேர்ந்த கன்றும் கெட்டதுபோல், அஞ்ஞான தேவர்களின் மதிப்புள்ளவர்களும், பலவித சாஸ்திரம், நாள் நக்ஷத்திரம் பார்க்கிறவர்களும், நடை யுடை பாவனைகளில் புறமதஸ்தர்களைப் பார்த்து நடிக்கிறவர்களும், ஆபத்துக்காலங்களில் இரகசியமாய் விக்கிரகங்களுக்கும், பிசாசுகளுக்கும் பிரார்த்தனைசெய்து உண்டிப்பணம் முடித்து, பொருத்தனைகளைச்செலுத்துகிறவர்களும் எத்தனையோபேர். "கடைசிகாலங்களில் பூமியில் விசுவாசத்தைக் காண்பேனோ" என்னும் தீர்க்க தரிசன ஒலமொழிக்கு இவைகளெல்லாம் அறிகுறிகளன்றோ? ஆகையால் இவ்விபரீத கிருத்தியங்கள் நிறைந்துள்ள இக்காலம் பொல்லாத நாட்களா யிருக்கிறதென்றே சொல்லல் தர்மமன்றோ? கிறிஸ்தவன் உடன்கிறிஸ்தவனோடு உண்மையைப் பேசாது அந்நியோந்நியமாயிராமல் பகைக்கிறதும், புறங் கூறுகிறதும், தன் சகோதரனல்ல என்பதும் பொல்லாத நாட்களுக்கு அடையாளமல்லவா? ஆவியின் கனிகள் நிறைந்திருக்கிறதற்கு பதிலாக மாம்சத்தின் கனிகளாகிய கிரியைகள் பெருகிவர இடங்கொடுக்கிறதைப் பார்ப்பது பயங்கரமன்றோ? "பேலியாளுக்கும் தேவனுக்கும் இசைவு ஏது? நீதிக்கும் அநீதிக்கும் பொருத்தமேது இருளுக்கும் வெளிச்சத்திற்கும் சம்பந்தமேது"? அசுத்த கிரியைகளுக்கும், தேவாவியின் கிரியைகளுக்கும் ஒற்றுமையில்லையே.

வேதோபதேசம். இந்நாட்கள் கடைசிகாலத்திற்குரிய அடையாளங்களை நடப்பிக்கிற நாட்கள் போல் தோன்றுகின்றன. மத் 24 3-ல் சீஷர்கள் ஆண்டவரைநோக்கி "உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள். அதற்குப் பிரதியுத்திரமாக ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு நானே கிறிஸ்து என்றுசொல்லி வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். கலங்காதபடி எச்சரிக்கையா யிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும் முடிவு உடனேவராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாய் இராஜ்யமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல விடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்." "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என்பிதா தவிர ஒருவனும் அறியான் பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்."

பிரசங்கியானவரும் 12. 1 "தீங்குநாட்கள் வருவதற்குமுன் சிருஷ்டிகரை நினை" என்கிறார். ஏசாயா 2. 19. "பூமியைத் தத்தளிக்கப்பண்ண கர்த்தர் எழும்பும் அந்நாளிலே அவருடைய பயங்கரத்திற்கும் அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகுவார்களென்று" தீர்க்கதரிசி உரைக்கிறார் ஏசாயா 13. 6 & 9 வசனங்களிலும் "கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது அது சர்வ வல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய்வரும் அந்த நாள் சேனைகளின் கர்த்தருடைய கடுங்கோபத்தின் நாள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. யோவே 2. 11-ல் கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும் அதைச் சகிக்கிறவன் யார்? யாரென்று இருக்கிறது. மல்கியா 3 2-ல் "அவர் வரும்நாளை சகிப்பவன் யார்?

அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிற அக்கினியைபோலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார்" என்று வாசிக்கிறோம். (இன்னும் வரும்.)

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### நாலாம் அதிகாரம்

### மிஷன் வேலையும் தொந்தரவும்

(தொடர்ச்சி.)

அதனால் கடைத்தெருவண்டை ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து ஹெபிக் ஐயர் தம்முடைய நேரத்தையெல்லாம் கடைத்தெருக்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் செலவிட்டார். அடிக்கடி கடைத்தெருவண்டை பிரசங்கம் செய்துவந்ததினால் பெரிய தடைகளும் ஆக்ஷேபனைகளும் நேரிட்டது. ஆனாலும் சிலர் அதிக சந்தோஷமாயும் கவனமாயும் கேட்டுவந்தார்கள். இவருடைய அரைகுறையான ஆங்கிலபாஷைகளிலே பிரசங்கம்செய்து குடிகாரனாய் இருந்த ஒரு ஐரோப்பியவீரனை இயேசுவுக்கு அடியானாக்கினார். அதன்பிறகு, அதிகப் பெருமையுள்ள ஒரு துரைசானி தன் ஹிருதயத்தின் கெடுதியை உணர்ந்து கர்த்தரண்டை தன்னைத் தாழ்த்தும்படி செய்தார். இன்னொரு பெரிய ஜெயம் எதுவென்றால், அங்கிருந்த ஒரு இராணுவ சர்ஜன் குணப்பட்டதுதான். அந்த சர்ஜன் வியாதிப்பட்டிருக்கிறான் என்று ஹெபிக் ஐயர் கேள்விப்பட்டவுடன் அவனைப் பார்க்கப்போய் இருந்தார். ஆனாலோ அந்த ஆங்கில வைத்தியன் இவரை உள்ளேவர உத்திரவு கொடுக்கவில்லை. இவரும் விடாமல் அடிக்கடி அவன் வீட்டுக்குப்போனார். போகும்போதெல்லாம் அந்த டாக்டருடைய வேலைக்காரர் சொன்னதாவது "Master Doctor saying Padre Sahib must not 'come'" 'எஜமானர் டாக்டர் சொல்லுகிறார்: பாதிரி சாயிபு உள்ளே வரக்கூடாது.' இப்படிப்பட்ட எதிர்ப்புக்கெல்லாம் ஐயர் களைத்துப் போகவில்லை. அவர் அடிக்கடி அவனுடைய வீட்டிற்கு போனபடியால் ஒருநாள் அவரை உள்ளே வரும்படி இந்த வைத்தியன் சொன்னான். அவர் உள்ளே போனபோது இவன் அவரைப்பார்த்து "நான் உம்முகத்தில் பேச அதிக பெலஹீனமாய் இருக்கிறேன்" என்றான். அப்போது அவர் சீக்கிரமாய் இவனைவிட்டுப் புறப்பட்டார். அப்போது இவன் அவரைப்பார்த்து "நரகம் என்பது ஒன்று உண்டா"? என்று கேட்டான். "ஆமாம், அப்படிக்கில்லாவிட்டால் கர்த்தருடையவார்த்தை வெறும் பொய்யாய் இருக்குமே" என்று சொன்னார். அதன்பிறகு ஹெபிக்ஐயரைப்போகும்படி உத்திரவு கொடுத்தான். அவர் திரும்பவும் அவனைப் பார்க்கும்படி அநேகமுறை அவனுடைய வீட்டிற்கு வந்தார். அவனுடைய வீட்டிற்கு ஆறுதடவை வந்தும் ஒருதரம்கூடப்போக அவரை உள்ளே விடவில்லை. ஆனபோதிலும் இன்னும் ஐயர் சலிக்காமல் ஏழாம்தடவை அவனுடைய வீட்டிற்குப்போனார். அப்போது அவரை உள்ளே வரும்படி அந்த சர்ஜன் வேலைக்காரனிடம் சொல்லி அனுப்பினான். அப்போது அவர் உள்ளேபோனார். அவன் அவரைப்பார்த்து, "நான் ஒரு பெரிய பாவியல்ல ஆதலால் நான் மோக்ஷத்துக் குரியவனே" என்று சொன்னான். அப்போது ஹெபிக் ஐயர் அவனைப்பார்த்து, சொன்னதாவது, "நானே ஒரு பெரும்பாவி. ரக்ஷகர் எனக்கு இல்லாவிட்டால் நான் நரகத்திற்குத்தான் போகவேண்டும்" என்றார். கடைசியாக அந்த பொல்லாத மனுஷனுடைய ஹிருதயம் கலங்கினது அவன் தன் ஹிருதயத்தை மறைக்காமல் எல்லாவற்றையும் வெளியிட்டான். அப்போது ஹெபிக் ஐயர் மனதுருகி அவனுக்கு சிலுவையில் அறையுண்ட இயேசுரக்ஷகரைப்பற்றிச்சொல்லி அவர் ஒருவரே மனுஷருடைய சகல பாவங்களையும் சுமந்தவர். அவர் ஒருவரே நமக்கு இளைப்பாறுதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறவர்" என்று அவனுக்குச் செவ்வையாய் எடுத்துரைத்தார். இந்த மங்களசெய்தி அவனுக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் அருளினது. எட்டு நாட்களுக்குப்பிறகு நல்ல உணர்ச்சி அடைந்து, ஐயோ நான் இவ்வளவு பெரியபாவியாய் இருக்கிறேனே, இதை முன்னமே அறியாமல் போனேனே" என்று கதறினான். அதன்பிறகு கர்த்தர் அவன்பேரில் வைத்த நீடித்த பொறுமையையும் அன்பையும் உணர்ந்து அவருக்குஸ்தோத்திரம்செய்து இவ்வுலகத்தைவிட்டு ரக்ஷகர் வாக்குக்கொடுத்த வாசஸ்தலத்துக்குப் போனான்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. போவான் ஐயர் மொழிபெயர்த்தது

### வேவுகாண்டம்.

நீலவர்ண பூக்களும் சூரியகாந்திகளும் விசேஷமாய் முள்ளில்லாத ரோஜா புஷ்பங்களும் மலர்ந்திருந்தன. நீலவர்ண இலைகளையுடைய தீவிதிராட்சச் செடிகளும்பேரீச்சமரங்களும், பலவர்ண தாபரராசிகளும் அவ்விடத்தில் அடர்த்தியா யிருந்தன. அம்மரக்கிளைகளில் அழகிய பட்சிகளும் பஞ்சவர்ணக் கிளிகளும் எண்ணிறந்தக் குயில்களும் மயில்களும் பறந்து விளையாடின. அவைகளின் இனிய சப்தங்களும் சங்கீத இராகங்களும் மிக சம்பிரமமாய் முழங்கிக்கொண்டிருந்தன. ஒரே வார்த்தையாக இந்த நந்தவனத்துக்கொப்பாக உலகத்தில் இவ்வித சிறந்த நன்மைகளையும் இனிய காட்சிகளையுமுடைய ஓர் இடமிருக்கவில்லை. மேற்சொல்லிய சுகானுபவங்களை வேதாளஞ் சிறிது நேரம் அநுபவித்துக்கொண்டிருந்தனன்.

### 5. ஆதித்தாய் தந்தையரைக் காண்படலம்.

செல்வம் பொழிகின்ற இப்பூங்காவனத்தில் சமஸ்தத்துக்குஞ் சிறந்த காட்சி ஒன்றிருந்தது. நிமிர்ந்த பார்வையும், சுவர்க்க வாசிகளுக் கொத்த வளர்த்தியையு முடையவர்களான இருவர் அதினடுவில்வசித்தனர். அவர்கள் சுயகன்னியத்தை யுடையவர்கள். நிர்வாண சகிதரா யிருந்துஞ் சமஸ்தத்தையும் ஆளுகை செய்தனர். அவர்களினது முக தேஜசில் தெய்வீகச் சாயல் விளங்கி நின்றது. சத்தியம், ஞானம், பரிசுத்தம் அவர்களில் விளங்கினதுமன்றி புத்திரர்களுக் குரிய சுவாதீன சுதந்தர பாத்தியத்தையும் பெற்றவர்களாகவு மிருந்தனர். இவர்கள் சமசகிதராய்க் காணப்படினும் ஜாதியில் பேதப்பட்டனர். ஒருவர் பராக்கிரம கிரியைக்கும் மனோதியானத்துக்கும் பக்குவசாலியாயும், மற்றொருவர் இலேசான சம்பவங்களுக் கேற்றவரா யிருந்தும், சவுந்தரிய லக்ஷணங்கள் பொருந்தினவராயுந் தோன்றினர். ஒருவர் கடவுளுக்கென்றும் மற்றொருவர் அவரில் கடவுளுக்கென்றுஞ் சிருட்டிக்கப்பட்ட பாவனையா யிருந்தது. ஒருவருடைய பறந்த பிறைபோன்ற நெற்றியும், அலங்கிர்தமான நேத்திரங்களும் பூரண புருஷ தத்துவத்தை வெளியிட்டன. மற்றவரின் அளகபாரம் அவர் சிரசுக்கோர் கிரீடமாயும் அதின் சுருள்கள் திராட்சப்பழக் கொத்துகளைப்போல் புஜங்கள் மட்டுந் தொங்கிக் கொண்டிருந்தன. ஸ்திரீயின் தத்துவத்தை யுடையவரினது அழகிய கூந்தல் ஓர் மெலிதான சல்லாவுக்கொப்பாகப் பறந்து அவரது நுண்ணிய இடைமட்டுக்குஞ்சென்றது. சிரசின்முடி சிவப்பட்டாமவிருந்தும்பொன்னிறமான பிரகாசத்துடன் சிறந்த ஒழுக்கத்தை விளக்கிற்று. ஸ்திரீயாய் விளங்கினவர் சாந்தமுங் கீழ்ப்படிதலு முள்ளவராகவும் புருஷனாய் விளங்கினவர் அவரை அன்பாய் அங்கீகரிக்கிறவராகவுமிருந்தனர். மேலும் ஒருவருக்கொருவர் பட்சமும் இரக்கமும் உருக்கமும் மரியாதையுமுடையவர்களாகவும் காணப்பட்டனர். இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கமின்றி அதி பாக்கிய நிலைமையிலிருந்தனர். (இன்னும் வரும்.)

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**மார்கானிப் பிரபு.**—கம்பியில்லாத் தந்தி கண்டுபிடித்த மார்கானிப் பிரபு தனக்கு அடிக்கடி ஆகாச வெளியாகிய ஈதர் மூலமாய் விபரீதமான செய்திகள் எட்டுகிறதாகவும் அவைகள் வானலோகத்திற்குரிய கிரகங்களில் வசிப்பவர்களிட மிருந்துதான் புறப்பட் டிருக்கவேண்டுமென்றும் நிச்சயிக்கிறார்.

**அமீர் அரசனின் முடிவு.**—ஆப்கனிஸ்தானை அரசாண்டுவந்த அமீர் சுல்தானை லக்மான் என்ற இடத்தில் படுக்கையிலேயே சுட்டுக்கொன்றதாக தந்திவந் திருக்கிறது. இவர் நமது சக்ரவர்த்திக்கு மிக்க நண்பர். இவர் ஸ்தானத்திலே இவரின் 3-ம் குமாரன் ஸர்தார் அமனுல்லாகான் அரசனானார்.

**நிஜாம் ராஜ்யத்தின் பஞ்சம்.**—இந்த ராஜ்யத்தின் சில பிராந்தியங்களிலே அநேக மாயிரம் ஏழைகள் உண்ண உணவில்லாமல் தாமரைக்கிழங்கு; புல்லரிசி, இலுப்பைப்பூ முதலியவைகளைக் கொண்டு வயிற்றை நிறப்புகிறதாக கனம் பாஸ்னட் ஐயரவர்கள் பத்திரிக்கைகளில் முறையிடுகிறார்கள்.

**நூதன இருப்புப்பாதை.**—பாரிஸ் பட்டணத்திலிருந்து போலண்ட் தேசத்து வார்ஸா என்னும் பட்டணத்திற்கு ஒரு எக்ஸ்பிரஸ் புகைவண்டியோட்டம் கடந்த பெப்ரவரிமீ 2உ ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்டது. அது ஆஸ்டிரியாதேசத்துத் தலைப்பட்டணமாகிய வியன்னா மார்க்கமாக ஓடும். இப்படி ஒரு வண்டி இவ்வழியாய் ஓடுவது இது முதல் தடவை.

**பலஸ்தீனா.** — இத்தேசத்திலுள்ள சியோனியரான முஹாமக்காரர்கள் பாரிஸ் சமாதான கான்பரென்ஸுக்குச் சென்று பலஸ்தீனாதேசம் யூதர்களுக்கே புராதன தேசமென்றும், அங்கிருக்கும் புறமதஸ்தார்களுடைய சொத்து சுதந்தரங்களை (League of Nations) லீக் ஆப் நேஷன்ஸ் என்ற பலஜாதிகளின் உடன்பாடு சங்கத்திற்குள்ளான பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் பாதுகாப்புக் குள்ளாக்க வேண்டுமென்றும் மனு செய்துக்கொண்டிருக்கின்றனர்.

**டேர்வென்ட் உட் (Derwent Wood).**—இவர் ஓர் சிற்பாசாரி. சண்டையின் முகத்தில் என்ன உருப்புகள் நஷ்டமடைந்தாலும் சரி, தோலும் சதையும் சிதைவபட்டுப் போனாலும் சரி, அவைகள் யாவும் காண்பவர்கள் பார்வைக்கு புலப்படா வண்ணம் உலோகங்களைக்கொண்டு சரிப்படுத்தப் புதிய முறைகளைக் கண்டுபிடித் திருக்கிறாராம். கீண் இழந்தோர் மாத்திரமல்ல, கன்னம் உதடு இழந்தோரும் அவர் முறையினால் ஒரு நஷ்டமுமடையாத ரூபிகள் மாதிரி நாலுபேரோடு வெட்கம் கூச்சமில்லாமல் சபையில்வந்து உறவாட ஏதுவாகிறது.

**பம்பாய் தங்கசாலை தொழிலாளிகள்.**—இந்த சாலையில் உழைத்துவந்த அத்தனைபேர்களும் அதிக சம்பளம் வேண்டுமென்று ஒரே கட்டாக நின்றுவிட்டார்கள். அதற்குரிய எஜமான் அவர்களுக்கு சகாயம் செய்ய விரும்பி சர்க்காரிடம் பரிந்துபேசியும் சித்தியடையாததைக்கண்டு, தினம் 10 அணாமுதல் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 1 அணாவும், 10 அணாவுக்குமேல் வாங்குபவர்களுக்கு 2 அணாவுமாக சம்பளமாகவேச் சேர்த்துக்கொடுப்பதாக நோட்டீஸ் ஒட்டித்தெரிவித்தார். அதற்கும் ஒப்பாமல் தங்களுக்குத் தினம் 4 அணாச் சேர்த்துக் கொடுப்பதுடன் இரண்டுமாதம் யுத்த சம்பள சகாயமும் செய்தால் வருவோமென்று ஒரு வக்கீல் மூலமாகத் தெரிவித்துக்கொண்டார்கள். அதன்பேரில் எஜமான், அவர்கள் தன் யோசனைக்கு ஒத்துவராவிடில், 6-ம் தேதிவரைக்கும் சாலையை அடைத்துவைத்து அதன் பின்பும் வேலையில் சேராவிட்டால் வேலையினின்று தள்ளிவிடுவதாகவும், மறுபடியும் சேர விரும்புகிறவர்கள் துவக்கத்தில் அமர்ந்தபோது என்ன கூலியோ அந்தக் கூலிதான் பெறுவார்களென்றும் விளம்பரம் செய்திருக்கிறார்.

**இந்துக் கோவிலைப்பற்றிய வாணியர் வாது.**—திருச்செந்தூர் மகாமண்டபத்தில் வாணியர்கள் பிரவேசிக்கக் கூடாதென்று தடைசெய்ததின்பேரில் அவர்கள் தூத்துக்குடி மாஜிஸ்டிரேட்டுக்கு—தாங்கள் பிள்ளைமார், முதலிமார்மாதிரி வைசியர்களென்றும், வைசியராகவே ஜகத்குரு சங்கராசாரியார் அங்கீகரித்திருக்கிறாரென்றும் மனுசெய்து கொண்டார்கள். திருச்செந்தூர் கோவிலில், மலையாள தேசாச்சார ஒழுங்கின்படி காரியங்கள் நடைபெறுகிறபடியால் வாணியர்களைச் சேர்க்க முடியாதென்றும் தெரிவித்ததின்பேரில் மாஜிஸ்டிரேட் வாணியர்களுக்கு விரோதமான தீர்ப்புச் செய்தனர்.

**புலையர்கள் பொதுக்கூட்டம்.**—அநேக புருஷாள், ஸ்திரீகள், பிள்ளைகளை சேர்ந்த இக்கூட்டம் திருவனந்தபுரம் டௌன் ஹாலில் கூடினது. திவான் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். புலையர்களுக்கு உயர்ந்தஜாதிகள் பலர் வந்திருந்தார்கள். பிரதம செக்ரிடரி மாதவ ஐயர் உபந்நியாசித்தார்.

மகாராஜா அவர்கள் தங்கள் குடிகளாகிய புலையர்கள்மேல்வைத்த அனுதாபத்தால் சிலகாலங்களாக பல நன்மைகள் செய்துவருகிறாரென்றும், முன்னிருந்த அநேக தடைகள் நீங்கி இப்போது அவர்கள் போகாத இடங்களுக்குப் போவதுமல்லாமல் இஷ்டர்கள் வீடுகளில்போய்க் காணவும் ஏற்பட்டிருக்கிறதென்றும் எடுத்துரைத்து, இன்னும் அதிகமாய் உயரவேணுமென்றால், உயர்ந்த ஜாதிகளிடம் பக்ஷமாயும் மரியாதையாயும் நடந்துகொள்ளும்படி ஏவினார். அவர்கள் தொழிலில் இன்னும் அதிக விர்த்தியடையவேண்டி கல்வியையும் அதிகமாய் ஸ்தாபிக்க மகாராஜா பிரயத்தனப் பட்டுக்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். திவானவர்களும் அவர்களை அதிகமாய் மெச்சிப்பேசி அவர்கள் அதிக முன்னேற்றம் அடைய சுத்தமும் உண்மையுமே அத்யாவசியமென்பதை வற்புறுத்தி முடித்தார்.

**வைசியராய் ராஜ சபை.**—இவ்வருஷத்திலே அநேக விசேஷித்த சமாசாரங்கள் பேசலாயிற்று. அவைகளில் நாம் அறிந்து சந்தோஷிக்கத்தக்கது ஒன்று. இவ்வளவுகாலம் வருஷம் 1,000 ரூபாய் வருமானம் பெற்றவர்களிடம் வருமானவரி வாங்கிவந்தார்கள். இனிமேல் 2,000 ரூபாய் வாங்குகிறவர்களிடம்தான் வாங்கப்படும். இந்த சட்டத்தினால், சர்க்காருக்கு சுமார் 70 லக்ஷம் ரூபாய் நஷ்டமாகும். ஆனால் இந்தியா, வியாபாரம் கைத்தொழில் விஷயமாய் அநேக, முயற்சி செய்ய 15 கோடி ரூபாய் வேண்டுமென்றும், வெற்றிகடனை ஒரு கடன் திரும்பவும் வசூல் செய்யப்பட வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ராஜபக்திக்கு விரோதத்தை விளைவிக்கும் பத்திரிகையையோ உபந்நியாசத்தையோ அடக்கி ஆள ஏற்பட்ட ரௌலட் என்னும் மசோதா தேசாங்க சட்டப் பிரமாணமாகக் கூடாதென்று அநேக மெம்பர்கள் தடுத்துப் பேசியிருக்கிறார்கள்.

அரிசி பஞ்சத்தைப்பற்றி நாகபட்டணம் ரீவ் பகதூர் வெங்கட்ராமையர் கவர்ன்மெண்ட் செக்ரிடரிக்கு ஒரு பொதுமனு செய்திருக்கிறார். லைசன்ஸ் பெற்று விற்பவர்கள் நியாயமாய் அடையவேண்டிய லாபத்திற்குப் பதில் ஒவ்வொரு மூட்டைக்கு 2 ரூபா சம்பாதிக்கிறார்கள் என்றும், நியாயமாய் விற்றால் ரூபாய்க்கு 4 படி அட்டியில்லாமல் கொடுக்கலாமென்றும் கணக்குப்போட்டு ருசுப்படுத்துகிறார். மண் எண்ணெய் விஷயமாகவும் நாம் சிலநாளாகப் படுகிற அவஸ்தை யாவரும் அறிந்த விஷயமே. சர்க்கார் இதன் விற்பனைவிஷயத்தில் ஏன் மட்டுபடுத்தியிருக்கிறார்களென்று தெரியவில்லை. நல்ல நோக்கம்தா னிருக்கும் எனினும் இதனால் கஷ்டம் அதிகம் உண்டாகிறபடியினாலே சீக்கிரம் சர்க்கார் விதித்திருக்கும் தடையை நீக்குவார்களென்று நம்புகிறோம்.

**திருவாங்கூர் கஷ்ட நிவிர்த்தி வேலை.**—திருவாங்கூர் ராஜ்யம் இவ்விஷயத்திலே மற்ற ராஜ்யங்களைவிட தேர்ச்சி, அடைந்திருக்கிறது. எப்படியெனில்:—எத்தேசத்தையும் போலவே திருவாங்கூர் ராஜ்யமும், யுத்தத்தின் பலாபலன்களாலும் கால் மழை இல்லாமையாலும் பஞ்சத்தால் பீடிக்கப்படலாயிற்று. ரெயில் மார்க்கமாகவோ, கப்பல் மார்க்கமாகவோ சாமான்களைத் தருவிக்கலாமென்றால்பிரிட்டிஷ் ராஜ்யத்தார் வியாபார விஷயமாய் ஏற்படுத்தியுள சட்ட திட்டங்களினால் வியாபாரிகள் வியாபாரத்தை நினைத்தாப்போல் நடத்த இயலாதவர்களாயிருந்ததைக்கண்ட திருவாங்கூர் சர்க்கார், குடிகளுக்கு உடனே உதவிபுரிய ஆவல்கொண்டு சிவில் சப்ளை அதிகாரியிடமே இது விஷயமாய் ஒழுங்கு செய்து 9 லக்ஷம் ரூபாய் முன்பணம் கட்டி, வேண்டிய தானியங்களை ஆலப்பிழைப் பட்டணத்தில் சேகரித்துவைத்து வியாபாரிகளுக்கு நேராய்விற்று, அவர்கள் இன்னவிலைக்குதான் விற்பனைசெய்ய வேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். ரெயில் மார்க்கமாய் வரும் தானியங்களை விற்பதில் அதிக விலை உயராதபடிக்கு அங்கங்கே வியாபாரிகளை ஏற்படுத்தி, கட்டுப்பாடுசெய்து நியாயமான கிரயத்திற்கு விற்கும்படி ஒழுங்குப்படுத்தியிருக்கிறார்கள். நஷ்டம் ஏற்படும் விஷயத்தில் சர்க்காராரே அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள சம்மதித்துக்கொண்டிருக்கிறார்கள். இதன்றி ஒவ்வொரு 10,12 மைலுக்கு ஒவ்வொரு அரிசி மண்டி ஏற்பாடுசெய்து ஏழைகள் அங்கே சாதாரணக் கிரயத்திற்கு வாங்க ஒழுங்காகி யிருக்கிறது. இந்த விஷயத்தில் சர்க்கார், நஷ்டத்தைக் கட்டிக் கொடுத்ததோடு அத்தேசத்து கனதனவான்களும் இயன்ற உதவி புரிந்திருக்கிறார்கள். இது மாத்திரமா? அத்தேசத்திலே புஞ்சைநிலசாகுபடிக்கென்று வருஷம் 2,00,000 காலன் கிரிசின் என்னும் மண் எண்ணெய் சிலவாகிறதுண்டு. எண்ணெய் பஞ்சமுண்டானால் அவ்வளவு நிலமும் பாழாய்போகும் என்றறிந்து சர்க்கார் அவ்வளவுடன் எண்ணெய்யையும் ஆலப்பிழை என்னும் பட்டணத்தில் முன்னதாகவே சேகரித்து விவசாயத் தொழிலாளிகளுக்கு ஏற்ற நேரத்தில் விற்றதினால், நஷ்டப்பட்டிருக்கவேண்டிய 1,60,000 டன் நிறைவுள்ள நெல், லாபமானது. இதைப்போலொத்த நன்மைகள் அதிகமுண்டு. இவைகளை அறிய நமக்கு மிக்க சந்தோஷத்தை விளைவிக்கிறது.

**குட்டல்அமாரா கோடும்பாதகம்.**—மெசபொத்தோமியாவைச் சேர்ந்த குட் என்னுமிடத்தில் நமது பிரிட்டிஷ் சேனை துருக்கியரிடம் சரணமடைய நேரிட்டபின் அவர்கள் அடைந்த அகோர அவஸ்தையைப் பற்றிய ரிபோர்ட்டு உலகத்தார் அறியப் பிரசுரப்படுத்தி யிருக்கிறார்கள். அதை வாசிப்போர் யாவருடைய உள்ளமும் கரையும். குடலும் கொதிக்கும் ஈண்டு அவைகளைச் சுருக்கிச்சொல்வோம்.

பிரிட்டிஷ்சேனை சரணமடைந்ததும் காலையிலேயே துருக்கிச்சேனைகள் படை படையாக குட் பட்டணத்திற்குள் நுழைந்தன. நுழைந்த சிறிது நேரத்திற்குள் அப்பட்டணத்து அரபியருடன் சேர்ந்து திருடத் துடங்கினார்கள். பாதரட்சை தண்ணீர் டப்பி தவிர மற்றயாவற்றையும் பறித்துக்கொண்டார்கள். இடையே சிலர், வியாதியஸ்தர்கள் இருப்பிடம்போய் தங்களுக்கு இஷ்டமான பொருள்களையெல்லாம் கொள்ளையடித்தார்கள். ஒரு ரிஜிமெண்டிலுள்ள உத்தியோகஸ்தர்களைச் சுட்டுவிடுவோம் என்றுபயமுறுத்தி அவர்களிடமிருந்த கைக்கடியாரங்களையும் பணத்தையும் பறித்துக்கொண்டார்கள். வைத்திய ஆயுதங்களைக்கூட பிடுங்கிக் கொண்டார்கள்.

அன்று ராத்திரியிலேயே பிரிட்டிஷ்சேனையின் அதிகபாகம் 8 மைல் தூரத்திலுள்ள ஷம்ரான் என்ற இடம்போய்த் தங்கிப் பிறகு பாக்தாத் போய் சேரவேண்டுமென்று உத்தரவுபிறந்தது. ஷம்ரானிலே சேனைகள்தங்க ஒரு இடமும் கிடையாது. வெட்டார வெளியிலேயே சாப்பாடில்லாமல் சூரியனுடைய வெப்பத்தையும் மழையின் குளிரையும் ஒரு வாரமாகத் தாங்கிக்கொண்டு கழிப்பதென்றால் லேசானகாரியமா. பேரீச்சம் பழமும்கருப்பு ரொட்டியும் அரபியர்கள் கொண்டுவந்து விற்று பதிலுக்கு பட்டாள உடுப்புகளை மாற்றிக்கொள்வார்கள். துருக்கியர்கள் கொடுக்கிற ராஷனோ காய்ந்துபோன பிஸ்கோத். இவைகளைத்தின்றே அநேகர் சீதபேதியினால் இறந்துபோனார்கள். பாக்தாத்போய்ச் சேருகிறதற்குள் இந்தசேனை அடைந்த நஷ்டமும் கஷ்டமும் சொல்லி முடியாதது. தினம் 8மைல் தூரம் நடத்திவைக்க வாக்களித்து 12, 15 மைல் நடத்தி அங்கங்கே கிடையில் அடைக்கும் ஆட்டைப்போல் அடைத்துவைத்து வந்தார்கள். அவிசி என்ற இடத்தில்மாத்திரம் மூழுநாள் தங்கினார்கள். அங்கே 350 பேர் வியாதியானதினால் அவர்கள் படகுமார்க்கமாக வரும்படியாக ஏற்பாடுசெய்ய மீதிப்பேர்கள் நடக்கத் துடங்கினார்கள். அப்படி நடக்கும்போது வழியில் தினசரி சர்கிறவர்களை அங்கங்கே விட்டுவிட்டுப்போக நேரிட்டது. இப்படியாக 9 நாளில் பாக்தாத் போய் சேர்ந்தார்கள். பாக்தாத்போய்ச் சேர்ந்தபோது சேனையை நடத்திச்சென்ற அரபியர்கள் பிரிட்டிஷ் உடுப்புகள் உடுத்தியிருக்கக் கண்டார்கள். நமது சேனையில் அநேகருக்கு ஷர்ட் ஒன்றுமாத்திரம் இருந்தது. துருக்கி உத்தியோகஸ்தர்களில் Ilia என்றவர்மாத்திரம் நல்ல உதவிசெய்தார். பாக்தாத்திலே 11 பிரிட்டிஷ் டாக்டர்களிருந்தனர். சோர்ந்துபோன சேனைக்கு மிக்க ஆறுதலாயிருந்தது. ஆனால் வெயிலோ கொரோம். பட்டணத்திலே சுகத்திற்கு வசதியில்லை. பிரான்ஸ்தேசத்து கன்னியா ஸ்திரீகள் சிலரும், அமெரிக்காதேசத்து மந்திரி பிரீஸ்ஸல் என்பவரும் அங்கிருந்து கூடியமட்டும் உதவி புரிந்தார்கள். சிறையானவர்களை பாக்தாத்தோடு விட்டுவிடவில்லை. அவர்களில் சொஸ்தமடைந்தவர்களை வடக்கே சீரியா வனாந்தரவழியாய் சின்ன ஆசியாவுக்கு வழிநடத்திக்கொண்டு போனார்கள். அவர்கள் அடைந்த சிறுமையைப்பற்றி வரையக் கைகூசுகிறது.

## பஞ்சாங்கம்.

**1919 ஏப்பிரல்மூ பஞ்சாங்கம்**


⊙ பௌர்ணமி, 15உ ● அமாவாசை, 30உ

| வாரம் | ஏப்பிரல். | | | | | பங்குனி—சித்திரை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 7 | 14 |
| திங்க... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 1 | 8 | 15 |
| செவ்... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 2 | 9 | 16 |
| புதன்... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 3 | 10 | 17 |
| வியா... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| வெள்... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| சனி... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 6 | 13 | ... |

# MELLIN'S FOOD

TRADE MARK. TRADE MARK.

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Rs. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

**விளம்பரம்**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா, அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 9136.


813 Registered No. M. 442.

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MAY, 1919.] PRICE, 1 PIE.—விலை, க பை. [மேமீ, 1919.

14 JUN 1919 MADRAS

## "THE DAYS ARE EVIL."

### "நாட்கள் பொல்லாதவை."

(தொடர்ச்சி.)

பவுல் அப்போஸ்தலனும் அந்நாளைக்குறித்துப் பேசும்போது 1 தெசலோனிக்கேயர் 5. 4-ல் "சகோதரரே, அந்நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத் தக்கதாக நீங்கள் அந்தகாரத்தி லிருக்கிறவர்கள் அல்லவே", 6-ல் "ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறதுபோல் நாம் தூங்காமல் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களா யிருக்கக்கடவோம்" என்கிறார். பேதுரு அப்போஸ்தலனும் 2 பேதுரு 3. 10-ல் "கர்த்தருடையநாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்", 12-ல் "தேவனுடையநாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள், 14-ல் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" எனப்போதிக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்திலும் திருக்காட்சியடைந்த யோவானும், வெளி. 6. 15–17-ல் "பூமியின் இராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு பர்வதங்களையும் கன்மலையையும் நோக்கி, நீங்கள் எங்கள்மேல் விழுந்து சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள். அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது. யார் நிலைநிற்கக்கூடும். என்றார்கள்" என்கிற சத்தத்தைக்கேட்டு அந்த நாளைக்குறித்து இவ்வாறு கூறுகிறார்.

படிப்பினை.—இப்பவும் நாம் "நாட்கள் பொல்லாதவைகளா" யிருக்கிறதென்கிற உண்மையைப் பலவிதமாய் ஆராய்ச்சிசெய்து பார்த்துவந்தோம். பூலோக சம்பவங்களும், திருச்சபையின் காரியங்களும் கிறிஸ்தவர்களின் ஜீவியமும் வேதோபதேசமும் "நாட்கள் பொல்லாத"வைகளாய்த்தா னிருக்கின்றனவென்று ரூபகப்படுத்துகின்றன. இது அதிக நடுக்கத்தையும், பயத்தையும் பிரமிப்பையும் பிரப்பிக்கக்கூடியதே. காலஸ்திதி இவ்வாறு ஆனதற்கு தேவன் காரணமென்று புறமதஸ்தர் சொல்லும்வண்ணம் நாம் சொல்லாது அப்பெரும் பாதகத்துக்குத் தப்பி நாமே காரணமென்று உணர்ந்து ஒத்துக்கொள்வது தேவாவி நம்மில் செய்கிற நற்கிரியைக்கு அழகும், நமது மனமாறுதலுக்கு லக்ஷணமுமாம். காலபலனாக இத்தோஷங்கள் நேரிடாமல், விபரீதமான விஷயங்களின் பலனாக "நாட்கள் பொல்லாததாயிருக்கின்றன. எல்லாத் தீமைகளையும் தடுத்தாளும் தேவன் இப்பொழுதுங்கூட வல்லமையாய்க் கிரியைசெய்யச் சித்தமுள்ளவராகவே யிருக்கிறார். ஆனால் தேவனுடைய உடன் ஊழியர்களாகிய நாம் தோஷத்திற்கு ஏதுவாகிய மாம்ச இச்சையையும், கண்களின் இச்சையையும், ஜீவனத்தின் பெருமையாகிய உலகத்திலுள்ளவைகளையும் ஒழித்து, ஆவியின் சிந்தையுள்ளோராகிப் பரிசுத்த ஜீவியம்பண்ணி சுவிசேஷ ஊழியத்தை உலக ஆதாய ஜீவனமாகப் பாவியாமல் சுத்த சுவிசேஷப் பிரசங்கிகளும், மந்தைக்கு மாதிரிகளான சபையின் மேய்ப்பர்களும் மூப்பர்களும் ஆடுகளுமாயிருப்போமாகில், இப்பொல்லாத நாட்கள் நமக்கு சாபத்திற்கும் நித்திய நரகத்திற்கும் ஏதுவாய் முடியாது. ஆகையால் நாம் எவ்வித ஆலஸ்யமும் செய்யாமல் இந்நாட்களின் தன்மையை அறிந்து உணர்ந்து, தீங்கைத் தடுத்து நன்மையை விளையச்செய்யும் நமது ஆண்டவரை உத்தம மனஸ்தாபத்தோடும், உறுதியான தீர்மானத்தோடும், மாயமற்ற விசுவாசத்தோடும் வழிபடுவோமானால், சாபம் ஆசீர்வாதமாகவும், பயம் துக்கம் சந்தோஷமாகவும், தேவக்கோபம் நித்திய சமாதானமாகவும் மாறும். சபையையும் ஊழியத்தையும் காத்துக்கொள்வோம். நாட்கள் பொல்லாதவைகளானதற்கு நாமும் நமது அசத்தான கிரியைகளும் காரணமானதுபோல் நாட்கள் நலமானவைகளாகிறதற்கு நாமே தேவ அருளால் காரணமாகக் கூடுமென்கிறதை உறுதியாய் நம்பி, சென்ற நாட்களின் ஜீவியத்திலும் ஊழியத்திலுங்கண்ட தோஷங்களை நினைத்து அங்கலாய்த்துத் துக்கிக்கிறதோடு இதுமுதல் தேவ ஒத்தாசையை முன்னிட்டு ஆவியானவருக்கு முற்றிலும் கீழடங்கி நல்ல போராட்டத்தில் நிலைகொண்டு முயற்சிப்போமாக. கர்த்தர் தாம் தமது நித்திய ஆவியானவரைத் தந்து வழி நடத்துவாராக. ஆமென்

## GOLDEN OPPORTUNITY.

### நற்காலம்.

காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள் எபே. 5. 16.—நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள் என்கிறார். (அப்போஸ்தலனாகிய பவுல்) நமக்குத் தவணையாகவும் தாலந்தாகவும் கிடைத்திருக்கிற காலத்தைக் கைசோரவிடாமல் சரியானபடி பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். தருணம் தப்பினால் மரணம் என்பதுபோல் கிடைத்திருக்கும்காலம் கிருபையின் காலம் என்றெண்ணி விழிப்போடும் சுறுசுறுப்போடும் இருந்து இக்காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும். இது தவணையின் காலம் என்றும் எச்சரிப்பின் காலமென்றும் மதித்து சொஸ்த புத்தியுள்ளோராய் சர்வ ஜாக்கிரதையோடிருக்கவேண்டியவர்களானதால் காலத்தின் தன்மையையும் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும் விதத்தையும் சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

I. காலத்தின் தன்மை.—இது கடந்த காலமுமன்று, வருங்காலமுமன்று, இது நமது தற்காலமாகிய நிகழ்காலமே. இந்நிகழ்காலங்கூட சீக்கிரமாய் பறந்து போகக்கூடியது. நாமும் கடந்து போகிறவர்கள். இன்றுதான் நம்முடையது, நாளையோ எமனுடையதா யிருக்கக்கூடும். ஆகையால் காலஹரணம் பண்ணாமல் நமக்குத் தவணையாகவும் தாலந்தாகவும் எச்சரிப்பாகவும் கிடைத்திருக்கும் இந்நிகழ்காலத்தை சத்தான பிரயோஜனமாக்கிக் கொள்ளும்படி காலத்தின் தன்மையை அறிந்துகொள்வ தவசியம். இது கிருபையின் காலமாகிய சுவிசேஷத்தின் நற்காலம், சமுசாரிகள் காலமறிந்து காரியத்தை நடத்துகிறதுபோல நாமும் சுவிசேஷ காரியத்தை அறிந்து உணர்ந்து கிருஷித் தொழிலாளியைப்போல் சமயமறிந்து கவனமாய் நடந்துகொள்ளவேண்டும். காலத்தின் தன்மையைப் பார்த்தாலோ கவலையற்றிருப்பதற்கு இது சமய மல்லவென்று தோன்றும். உலகத்தம்பிரானாகிய அந்தகார லோகாதிபதி தனது சைந்நியத்துடன் வேலையை வெகு மும்முரமாய்ச் செய்ய எத்தனித்து கங்கணம் கட்டிக்கொண்டு திருடனைப்

போல வெகு ரகசியமாயும் தந்திரமாயும் வட்டமிட்டுக்கொண்டு திரிகிறான். ஆகையால் தேவ ஊழியர்களும் அடியார்களுமாகிய நாம் விழித்து எழுந்து காலூன்றி நின்று எதிர்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இக்காலமானது:—யுத்தகாலமென்றும் சொல்லலாம் Eph. vi: 10. 16.

1. விதைப்பின் காலம்,
2. நடவின் காலம்
3. அறுப்பின் காலம்

என்று உணர்ந்து, அயர்ந்து நித்திரை செய்கிறதை விட்டு எழுந்து காரியத்தில் கண் என்பதற்கிசைய விதைக்கிறவர் விதைப்பாட்டிலும், நடுகிறவர் நடவிலும், அறுக்கிறவர் அறுப்பிலுமாக கவனத்தைச் செலுத்தி சுறுசுறுப்பாயிருத்த லவசியம்.

### I. விதைப்பின் காலம்.

1. விதைப்பின் காலம்.—ஒவ்வொன்றிற்கும் ஒருகால மிருக்கிறதென்று சாலோமோன் ஞானி சொல்லியிருக்கிறார். இயற்கையும் நமக்கு போதிக்கிறது. நம்மிலே சிலரை விதைப்பாளிகளாக நியமித்திருக்கிறார். நாம் விதைக்கவேண்டியது சுவிசேஷமென்பது நமக்குத் தெரியாததல்ல. விதைக்க வேண்டிய காலத்தில் சற்று அசதியாயிருப்போமாகில் அறுப்பின் காலம் வரும்போது நாம் கண்ணீர் சொரியவேண்டியதாகும். எஜமானின் அதிருப்திக்கும் ஆளாவோம். சாதாரணமாய் நமது நாட்டுப்புரத்து சமுசாரிகள் காலமறிந்து பயிர்செய்ய வேண்டுமென்றுரைப்பதை நாமறியாதவர்களல்ல. கர்மமே கண்ணுயினர் என்பதற்கிசைய விதைப்போர் தங்களுடைய விதைப்பாடு என்னும் கர்மத்தைச் செய்து முடித்தற்கு இதே காலம் என்று உணர்ந்து இரண்டு விஷயங்களையறிதல் அவசியம். அவைகள்:—

(a) விதைப்போனிடத்தில் விளங்கவேண்டிய இலட்சணங்களும்.

(b) விதைக்கவேண்டிய விதை யாதென்பதுமே.

(இன்னும் வரும்.)

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### நாலாம் அதிகாரம்

### மிஷன் வேலையும் தோந்தரவும்.

(தொடர்ச்சி.)

இவ்வித சந்தோஷ சந்தர்ப்பங்களெல்லாம் இவரை அதிகமாய்த் தாழ்த்தும்படியே செய்தது. கர்த்தர் அவருக்குச்செய்த நன்மைகளுக்காக நன்றியறிதலான ஆவியோடு அவர் எழுதுகிறதாவது: நாங்கள் தொடரும் வழிகள் களைப்பும் நெருக்கமுமாயிருந்தாலும், நாங்கள் மோக்ஷத்தையே நாடிப்போகிறோம் என்று பார்க்கும்போது எங்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்குகிறது. நான் செய்யவேண்டிய இந்த பிரமாண்டமான வேலையில் நான் அடிக்கடி பார்ப்பது இருண்ட இரவே ஒழிய வேறில்லை, ஆனால் என் ஆண்டவர்போலே நான் முன்னேறி அதைக் கடக்கும்போது அந்த இருள் நீங்க ஒருபிரகாசம் தோன்றுவதால் நான் பெலனடைந்து ஜெயத்தின் மனோற்சாகத்தைப் பெறுகிறேன். அநேகர் என்னை "புத்திகெட்டவன் மத வைராக்கியன் என்றும், இன்னும் சிலர் 'பரிசுத்தன்' என்றும் சொல்லுகிறார்கள், ஆனாலும் என்ன? ஆவியானவரே நமது உள்ளத்தில் சாக்ஷிபகர்ந்து கர்த்தருடைய முத்திரையை பெற்றிராவிட்டால் மனுஷர்களுடைய தீர்ப்பினால் என்ன பிரயோசனம்? ஆண்டவர் என் அற்பமான முயற்சிகளை ஆசீர்வதிக்கிறார், அவைகள் என்னை அதிகமாய் தாழ்த்தும்படியே செய்கிறது." 1836ஞு மேமீ 9உ-ல் முதற் தடவையாக நாலு பிள்ளைகள் அடங்கிய ஒரு பாடசாலையை மங்களூரில் ஏற்படுத்தினார்கள். கிறிஸ்து மார்க்கத்தில் பிரீதியைக் காண்பித்த திம்மப்பா என்றவர் முதல் உபாத்தியாயராக நியமகம் பெற்றார். ஹெபிக் ஐயரவர்கள் வீடு வீடாய்ச் சென்று பிள்ளைகளை மிஷன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி அதிகத் தாழ்மையாய் வேண்டிக்கொண்டார். மிஷனெரிமார், பிள்ளைகளைக் கிறிஸ்தவர்களாக்கி அவர்களை மாமிசம் தின்னும்படி பலவந்தம் செய்வார்களென்கிற ஒரு தீய எண்ணத்தைக் கிளப்பிவிட்டார்கள். ஆனால் இந்தத் தீய எண்ணம் நீடிக்கவில்லை. பாடசாலைக் கட்டடத்திலேயே ஆராதனையும் நடந்தேறியது. அதனால் ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கையுண்டானதினால் அந்த மறுமாதமே இன்னொரு பள்ளிக்கூடத்தைத் திறக்க ஏதுவானது. மேமீ 29உ-ல் கன்னடிய பாஷையில் ஒரு தேவ ஆராதனையை ஆரம்பித்தார். அவருடைய பெரிய வேலையில் அந்த மங்களூரில் இது ஒரு சின்ன ஆரம்பம். ஜூன்மீ முதல்ஞாயிற்றுக் கிழமையில் ஒரு ஆராதனை நடந்தது. அங்கே நாலு ஆங்கிலேயரும், மூன்று கன்னடியரும், இரண்டு தமிழரும், ஒரு போர்த்துகீஸ்காரனும் இந்த சின்ன சபையில் கூடிவந்தார்கள். அப்போது மூன்று மிஷனெரிமார் இவ்வாராதனையை நடத்திக் கர்த்தருடைய ராப்போசனத்தைப் பரிமாறினார்கள். அந்த அற்பத்தொகை அக்காலத்து மிஷனெரிகளுக்கு பெருக்கமாய்த் தெரிந்தது. கடைத்தெருவில் நடந்த பிரசங்கங்களுக்குப் பெருத்த ஆட்க்ஷேபனைகள் உண்டானது. இவர்கள் தெருக்களில் நின்று நற்செய்தியைக் கூறும்போது அங்கோர் பிராமணன் இவர்களைப் பார்த்து, 'நீங்கள் இங்கே வேண்டியதில்லை' என்று உரத்திக் கத்தினன். அப்போது ஜனங்கள் எல்லாரும் ஒன்றுகூடி மூர்க்காவேசம் கொண்டு "உங்கள் போதனைவேண்டாம், போங்கள் போங்கள்" என்று கத்த ஆரம்பித்தார்கள். அதன்பிறகு சுவிசேஷத்தைக் கூறும் அவர்கள்மேல் கற்களையும் சாணியையும் எறிந்தார்கள். அதையெல்லாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு போலீஸ்காரனை ஐயரவர்கள் பார்த்து, நீ இந்த இடத்தில் இப்படிப்பட்ட தாருமாறுகள் உண்டாகாதபடிக்கு அவைகளை ஒழுங்குப்படுத்துவது உன் கடமை என்று அவனை எச்சரித்தார். இவ்வித கலகங்களை போலீஸார் காணும்போதெல்லாம், அவைகளை நிவிர்த்திக்க வேண்டுமென்று மாஜிஸ்றேட் ஆண்டர்ஸன் துரையவர்கள் கொஞ்சம் பயத்தோடேவே ஒரு கட்டளையைப் பிறப்பித்திருந்தார்; ஆனாலும், போலீஸார், அப்படியே செய்வார்களென்று யார் எதிர்பார்க்கக்கூடும்? "உன்னைப் பிரசங்கம் செய்யும்படி சர்க்கார் உத்திரவுக்கொடுத்திருக்கிறார்களாவென்று அந்த மூர்க்க பிராமணன் கேட்டார். அதற்கு ஐயர் இல்லை. வானத்திற்கும், பூமிக்கும் கடவுளானவரே எங்களை இங்கே பிரசங்கம் செய்யும்படி அனுப்பினார் என்று சொன்னார். அதற்கு இன்னொரு பிராமணன் "ஹா ஹா வென்று சிரித்து, நாலு ஆணிகளைக்காண்பித்து இதினாலேதான் அந்தக் கடவுளை சிலுவையில் அடித்தார்கள்" என்று கேலியாய்ச் சொல்லித் திரும்பவும் சிரித்தார். அப்போ, இன்னும் பரிகாசக்கூட்டத்தார் எல்லாரும் ஒன்று சேர்ந்து அருகாமையில் வந்தார்கள். அப்போது ஹெபிக் ஐயர் பரிசுத்த கோபத்தோடும், தாபந்தத்தோடும் அவர்களை நோக்கி, "ஓ பிராமணர்களே, நீங்கள் விருதாவாய் ஜனங்களை ஏய்த்துத் திரிகிறவர்கள், நீங்கள் மனந்திரும்பிக் குணப்படாவிட்டால், தேவக்கோபம் உங்கள்மேல் வந்து உங்களை அழித்துப்போடும், நான் உங்களிடத்தில் சத்தியத்தைப் பேசுகிறேன் என்பதற்கு இந்த வானமும், பூமியும் சாக்ஷி. ஓ, பரிகாசக்காரரே; உண்மை வெளிப்படும் காலம் உங்களுக்கு வரும், அப்போது நீங்கள் விசனப்படுவீர்கள், நல்ல காலத்தை இழந்துபோனதால் உங்களுக்கு பிரயோசனமிருக்காது" என்று சொன்னார். மனந்திரும்பும்படி அழைக்கும் எளிவான வார்த்தைகளைக் கேட்ட அந்தப் பரிகாசக்காரர் அதிக வெட்கத்தோடே தங்கள் வளவுகளுக்குச் சென்றார்கள். அவர்களுடைய ஹிருதயத்தில் நன்றாய்ப் படவேண்டுமென்று அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலையைஏற்படுத்தினார்; ஆனால் அந்த முயற்சி அதிக பெலனடையவில்லை.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

**சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.**

### வேவுகாண்டம்.

"ஓபாவமே! வெட்கமும் அவமானமும் உன்னாலே யல்லவோ உலகத்திற் பிரவேசித்தன. கனத்தைக் கனவீனமாக்கி பரிசுத்தப் பிரியமிருக்கவேண்டிய விடத்தில், கபடமுந் தந்திரமுங் குடிகொண்டிருக்கச் செய்தாய். ஆதிமனிதரின் பேதமையையும் மாசற்ற தன்மையையுங் குலைத்து, அநியாக்கியம் நிறைந்த நித்திய ஜீவனையும் அநர்த்தஞ்செய்தாயே."

நிர்வாண சகிதரான இருபேரும் [illegible]னையாவது தூதனையாவது பார்க்க அச்சப்படாமல் கைபிடித்து, மிகுந்த அந்நியோந்நிய நேசத்துடன் நடந்தனர். ஆதாம் எல்லா மனுப்புத்திரர்களிலும் அழகிய புருஷனும், ஏவாள் எல்லா மனுப்புத்திரிகளிலும் அழகிய ஸ்திரீயாயுமிருந்தனர். அத்தோட்டத்தின் சுகிர்தம் நிறைந்த வேலைகளைமுடித்து ஓர் சிறிய தடாகத்தினருகில் வந்தனர். அத்தடாகத்தி னிருகரையிலும் உசித கனிவர்க்கங்களைச் சுமந்த விருக்ஷங்களிருந்தன. இளங்காற்று வீசினது. அம்மரங்களின் நிழலில் சற்று நேரம் உட்கார்ந்து சுகித்து, சந்துஷ்டி யடைந்து பிற்பாடு போசன பானாதிகளை உட்கொள்ள வாரம்பித்தனர். அவர்களின் ஆச்சிரமம் புஷ்பங்களாற் சமைக்கப்பட்ட மிருதுவான மஞ்சண மெத்தைக் கொப்பா யிருந்தது. இருபேரும் திவ்வியமான பழங்களையும், அப்பழங்களின் இனிய பருப்புகளையும் தின்று தேவாமிர்தம் போன்ற சுத்த சலத்தை இருகையினால் வாரிக் குடித்து மதுரமான சம்பாஷணை செய்து ஆனந்தக் கடலில் அமிழ்ந்திருந்தனர். பூமியின் நானாவித மிருகசாதிகளும் அவர்களைச் சுற்றிலும் அக்களிப்புடன் ஆரவாரித்துக் கொண்டிருந்தன. ஆம், பிற்காலத்தில் அவனுக்கு எதிரிகளுங் காண்டாமிருகங்களுமாய்த் திரும்பினவைக ளிப்போது அவன் பாதத்தண்டை நெடுஞ்சாங்கடையாய் வீழ்ந்திருந்தன. மிருகாதிகளுக்கெல்லாம் அரசனாகிய சிங்கம் கெர்ச்சித்து வல்லமையுடன் ஆர்ப்பரித்தும், ஆட்டுக் குட்டியோடே கொஞ்சிக்கொண்டிருந்தது. புலிகளுங் கரடிகளுஞ் சிவிங்கிகளும், ஓநாய்களும் அவர்களுக்குமுன் நடனஞ் செய்வதிலும் களியாட்[illegible]லும் மிகுந்திருந்தன. பிரமாண்டமான யானை தனது பளுவான மஸ்தகத்தையும் தும்பிக்கையையும் வளைத்து குமுறலிட்டு, அவர்களை அகமகிழச் செய்தது. எல்லாவற்றிற்குஞ் சமீபத்தில் தந்திரியாகிய சர்ப்பமிருந்தது. அதன் நீண்ட வுடலை அநேகச் சுருள்களாக்கி அவர்களின் கூந்தல்களோடு தன்னுடம்பைச் சுற்றிக்கொண்டு, சதிசர்ப்பனை நிறைந்த



தீயகுணம் வெளிப்படாவிதமாய் சகவாசஞ்செய்தது. இவைகள் தவிர மற்ற மிருகங்கள் யாவும் பசிய தரையின்மீது படுத்துக்கொண்டு ஆதித்தன் அஸ்தகிரியில் சேர்ந்து நக்ஷத்திரங்கள் வானமண்டலத்திற் றேன்றுமட்டுக்கும் அசைபோட்டுக்கொண்டிருந்தன. சமஸ்தமும் மங்களகரமாயிருந்தன. வேதாளம் இக்காட்சியைக்கண்டு பிரமைகொண்டு பிரக்ஞையிழந்து பேச்சுமூச்சற்றவனாயினன். ஆயினும், சற்று நேரத்துக்குப் பின்பு மூர்ச்சை தெளிந்து அடியில்வரும் வண்ணம் பிதற்றுகிறான்.

(இன்னும் வரும்.)

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**புதிய கலெக்டர்.** — செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் கனம்: ப்ரையன்ட் என்பவர் நீலகிரிக்கு மாற்றப்பட்டார். அவர் ஸ்தானத்தில் வந்திருக்கிறவர் I.C.S. பட்டம்பெற்ற கனம்: டாம்போ என்பவர்.

**ரௌலட்** —என்ற இந்திய கிரிமினல் சட்டம் வைசிராய் மகாசபையிலே நிலைவரப்படுத்தி ஆயிற்று. பலர் ஆட்சேபித்தும் பிரயோசனப்படவில்லை. ஆகிலும், இந்தியாவின் பல பாகத்தில் பெருத்த குழப்ப முண்டாகியிருக்கிறது.

**ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் திருமகன்.**—நமது சக்கரவர்த்தியின் மூத்தகுமாரனாகிய வேல்ஸ் ப்ரபுவுக்கு இத்தாலியர் தேசத்து அரசனின் மூத்த குமாரத்தியாகிய யோவந்தாள் என்னும் ராஜபுத்திரியை மணம்புரிய ஏற்ப[illegible]டாயிருக்கிறதாக தெரிகிறது.

**ஆகா[illegible]விமானத்தில் உயர்ந்தபிரயாணம்.**—காப்டன் லாங் என்புவரும் லெப்டினன்ட் ப்ளோஸ் என்பவரும் ஜனவரிமீ 1உ அன்று 66 நிமிஷம் 15 விநாடியில் 30,500 அடி உயரத்தில் பறந்து சென்றார்களாம். அவ்வளவு உயரத்திற்கு இதுவரைக்கும் யாரும் பறந்ததில்லை.

**புதிய கவர்னர்.** சென்னை ராஜதானிக்கு புதிதாய் நியமிக்கப்பட்ட கவர்னர் லார்ட் வில்லிங்டன் என்பவர் ஏப்ரல்மாதம் 9-ம் தேதி சென்னை வந்து சேர்ந்தார். கனம்: பென்ட்லண்ட் கவர்னர் மார்ச்சுமாதம் 29-ம் தேதி சனிக்கிழமை மாலை 4·55-க்கு சென்னையைவிட்டு ஜனனதேசமேகினார்.

**ஒரு ரூபாய் நோட்டுகள்.**—இந்த நோட்டுகள் அதிக சீக்கிரத்தில் அழுக்காய் விடுகிறதென்றும் சிலவற்றில் படிந்திருக்கிறஅழுக்கில் வியாதிக்கிருமிகளும் தங்க இடம் பெற்று தொத்து வியாதிகளைப் பரவச்செய்யுமென்றும் சர்க்காரார் அப்பேர்பட்ட நோட்டுகளை சேகரித்து கொளுத்திவிடுவது நலமென்றும் ஒருவர் தெரிவிக்கிறார்.

**விசேஷித்த குருட்டுப்பையன்.** — கல்கத்தா கலாசாலையிலே இவ்வருஷத்தில் ஒரு குருட்டுப்பையன் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் போனான். நொகேந்தரா நாத்சென்குப்தா என்ற பெயருடைய இவன் கல்கத்தா குருட்டு ஸ்கூலில் படித்தவன். அட்சரமுதலியவைகளை தடவிப் பார்க்கும்படியான பரீட்சை காகிதமும் கணக்குப்போட அவனுக்கேற்ற பலகையும் கொடுத்ததுமன்றி எழுதுவதற்கு உதவியாக ஒரு சிறுவனையும் ஏற்படுத்தினார்களாம்.

**[illegible]ான் பசு.**—இங்கிலாந்து சரேப்பட்டணத்[illegible]த்த ஒரு ஸ்திரி சுமார் 6 ஞுதிற்குமுன் கன்றுக்குட்[illegible] கவிந் தீனி கொடுத்துக்கொண்டிருந்த போது தன் [illegible] எங்கும் தேடிகிரம் காணமல் போய்விட்டது. [illegible] கன்றுதான் தின்றிருக்குமென[illegible]கினால் அந்த [illegible] கொஞ்ச காலத்திற்குப்பின் ஒரு கசா[illegible] அந்தப்பசுவைவாங்கிஅறுக்கும்போது அந்த [illegible] ஞாபகம் வந்தது. தேடினான். குடலுக்குள் ஒரு மூலையிலே மறைந்திருக்கக் கண்டான்.

**நூதனச் சட்டம்.**—நார்வே தேசத்தில் இவ்வருஷ துவக்கத்தில் கலியாண விஷயமாய் ஒரு புதிய சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இருபதுவயதுக்குட்பட்ட ஆணும் பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண்ணும், அதிகாரிகள் அனுமதியின்றி வாழ்க்கைப்படக் கூடாதென்றும், ஓலைக்கூறுமுன் பிறந்தகாலத்தைக்குறித்தும் ஞானஸ்நானம் பெற்றதைக் குறித்தும் சர்ட்டிபிக்கட்டுகள் காட்டவேண்டுமென்றும், தங்களுக்கு குஷ்டமோ, வலியோ, வேறெந்த விதமான தொத்துவியாதியோ இல்லையென்று எழுதிக்கொடுக்க வேண்டுமென்றும், எழுதியிராத வியாதி ஏதாவது கலியாணத்துக்குப்பின் வெளிப்படுமானால் ஒருவருக்கொருவர் பிரிந்து கொள்ளலாம் என்றும் அந்த சட்டம் தெரிவிக்கிறது.

**நாயின் நற்புத்தி.**—இங்கிலாந்தில் வசித்துவந்த ஒரு குடியானவன் ஒருநாள் கட்டைகள் கொண்டு வரும்பொருட்டு 10 மைல் தூரமுள்ள ஒரு காட்டுக்குச் செல்லுகையில், அவனுடைய நாயும் உடன் சென்றதாம். அவன் கட்டைகளை வெட்டி வண்டியில் போட்டுக்கொண்டு திரும்புகையில் கூட விருந்த நாயானது கெற்பமானதால் மூன்று குட்டிகளைப்போட்டதாம். நாயுக்குடையோன் அக்குட்டிகளை காட்டிலேயே எறிந்துவிட்டு நாயைமாத்திரம் வண்டியிலே ஏற்றிக்கொண்டு வீடுவந்து சேர்ந்துவிட்டானும், வீட்டையடைந்த அந்த நாயானது அன்றிரவே குட்டிகளின்மேல் வைத்திருந்த பாசத்தால் மூன்றுதடவை காட்டிற்குச் சென்று ஒவ்வொரு குட்டியாக கொண்டுவந்து தன்னிடம் சேர்த்துக் கொண்டதாம். அந்த நாளிரவில் மூன்றுதடவைக்கு 60 மைல் தூரஞ்சென்ற காரணத்தால் அதிக களைப்படைந்து அதன் குட்டிகளின் பக்கத்தில் படுத்தபடியே செத்துக்கிடந்ததாம்.

**இன்புளுவென்சா என்ற விஷஜுரம்.**—காரல்வாத் என்ற வைத்தியசாஸ்திரி இஜ்ஜுரத்தைப்பற்றி லண்டன் பட்டணத்திலே உபந்நியாசித்தபோது இஜ்ஜுரம் ஸ்பானியாதேசத்திலுண்டாகாமல் கிளாஸ்கோ பட்டணத்திலுண்டாகி வரவர பிரான்ஸ்தேசத்து யுத்தகளத்தில் பிரவேசித்ததென்று சொன்னார். அதை தடுக்கும்படியான வழி வகைகளில் முகவலைத்துணி உபயோகிப்பது மெத்த அவசியமென்றும், குடைபிடிக்க வெட்கப்படாதவர்கள் முகவலை உபயோகிப்பதில் வெட்கமடைய அவசியமில்லையென்றும் எடுத்துரைத்தார். 1918ஞு நவம்பர்மீ 30உகுள் இஜ்ஜுரத்தால் மாண்டவர்கள் சுதேசராஜ்யங்கள் தவிர பிரிட்டீஷ் இந்தியாவிலே 48,99,725 பேர் (ஜனத்தொகை 238,026,240) இதிலே சென்னை ராஜதானியில் மாத்திரம் 509,667 (ஜனத்தொகை 140,005,735) ஆக 1000 க்கு 12·7 பேர் இச்சுரத்துக்கு இரையாயிருக்கிறார்கள். இவ்வித ஜுரம் 1803, 1833, 1837, 1847, 1890-ம் வருஷங்களிலும் நஷ்டப்படுத்தியிருக்கிறது. ஆகிலும் சொற்பகாலத்திற்குள் பூலோகத்தின் அதிக பாகத்தை இவ்வளவு நஷ்டப்படுத்தியது கடந்த விஷஜுரமே.

**குஷ்ட வியாதி.** — இது விஷயமாய் கனம்: ப்ராண்ங் ஆல்டிரீவ் குருவானவர் சில விசேஷித்த குறிப்புகளை ஒரு பத்திரிக்கையில் எழுதுகிறார். குஷ்டரோகி ஒருவன் எந்த இடத்தில்போய் வசிக்கிறானோ அந்த இடத்தில்தான் அவ்வியாதி பரவுகிறதாம். சாண்ட்வுச்தீவுகளில் 1848ஞு க்கு முன் ஒரு ரோகியுமில்லை. 1891 ஞுத்தில் அதே இடத்தில் 30 ஆட்களுக்கு ஒருவன் குஷ்டரோகியானான். நியுகலிடோனியா என்னுமிடத்தில் 1865 ஞுத்தில் ஒருவனிருந்திருக்க 1888 ஞு-ல் [illegible]ங்கே 4,000 பேர் குஷ்டரோகிகளானார்கள். [illegible]ாவின் ஒரிடத்திலே 30ஞு-ல் 64பேர் குஷ்டரோகிகளாயிருக்கிறாகள். இந்தியாவில் பூர்வகால முதல் ஏற்பட்டிருக்கிற மத அனுஷ்டானங்களினாலே இந்த தேசத்திலே அவ்வியாதி அதிகமாய்ப் பரவ இடம் பெறுததாயிருந்தது. குஷ்டரோகிகளைப் பிரத்தியேகமாய் ஜீவிக்கச் செய்வதும் ரெயில்வே பிரயாணத்தில் அவர்களுக்கு இடம் கொடாமலிருப்பதும் அவசியமானதென்று அபிப்பிராயப்படுகிறார். இம்முறையை கையாடுவதினாலே நார்வேதேசத்தில் 1856 ஞு-ல் லட்சத்திற்கு 191·3 வீதம் இருந்தது. 1910 ஞு-ம் 13·5 க்கு குறைந்து விட்டதாம்.

**நீடிய ஆயுள்.**—டிப்பரார்ரி, நீனக் என்ற இடத்தில் ஒருவள் 121-வது வயதில் மரித்தாள். அவள் தலைமுறையில் 50 பேர் கடந்த யுத்தத்திற்கு போனார்களாம். அவர்களில் அநேகர் காயப்பட்டு இருவர் மரித்தார்கள். வயதில் இவள் விசேஷித்தவள் அல்ல. எப்படியெனில் 1904 ஞு கல்கத்தாவில் 18-ம் பெங்காள ரெஜிமென்ட்டுக்கு சாப்லனாக இருந்தவர் தனது 130-ம் பிராயத்தில் ஆராதனை நடத்திவந்தார். ஹாண்றே ஸ்மிட் என்ற ஒரு ருஷியன் 1772 ஞு-ல் பிறந்து 1796-ல் ரிவா ரெஜிமெண்ட்டில் சேர்ந்து உழைத்தான். 1908 ஞு 136 ம் பிராயத்தில் ஜீவனோடிருந்தான். அட்ஜிரூப் என்ற ஒரு ருஷியன் 133-ம் பிராத்தில் கான்ஸ்டாண்டிநோபல் என்ற பட்டணத்திலே தோல்வேலை செய்துகொண்டிருந்தான். கோ—கா—னூம் என்ற பெயருடைய ஓர் காட்டு இந்திய வீரன் 160-ம் பிராயத்திலே பூச்செட்சௌண்ட் என்ற தேசத்துக்கரைகளிலே சுற்றிக்கொண்டிருந்தான். ஐரோப்பியர் அவனை 200 பிராயமுள்ளவனென்று மதித்தார்கள். அவன் 2 அடி 5 அங்குல உயரமுள்ளவன் 50 பவுண் நிறையுள்ளவன். 1913 ஞு ஜூலைமாதத்தில் டாக்டர் சோஸாய் என்ற ஒரு சீனன் நியூயார்க் என்ற பட்டணம் வந்து இறங்கினான். அவன் தனது வயது 145 என்றான். சில வருஷங்களுக்கு முன்னே மாண்டிரீல் என்ற பட்டணத்தில் ஒரு சீனஸ்திரி இருந்தாள், அவள் தனது சுயதேசத்தை விட்டு பிரயாணப்படும்போது 75 பிராயமென்றும் டெமாரரா என்ற பட்டணத்திலே 100 வருஷம் தங்கிவந்ததாகவும் சொன்னாள். 1912 ஞு-ல் 100 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஐரோப்பாக்கண்டத்தில் 7,000 பேர்கள் இருந்தார்கள். அவர்களில் 3,888 பேர்கள் பல்கேரியா தேசத்தார்களாம்.

| யுத்த கப்பல்கள் ராஷ்டம். | பலகப்பல்கள் | டன் |
|---|---|---|
| கிரேட்பிரிட்டன் | 198 | 550000 |
| ப்ரான்ஸ் | 56 | 110000 |
| இத்தாலியா | 29 | 76000 |
| ஜப்பான் | 9 | 50000 |
| அமெரிக்கா | 4 | 17000 |
| ஜெர்மெனி | 264 | 350000 |
| ஆஸ்டிரியா | 25 | 60000 |

## பஞ்சாங்கம்.


**1919 மேமீ பஞ்சாங்கம்**

⊙ பௌர்ணமி, 14, உ ● அமாவாசை, 29உ.

| வாரம் | மே. | | | | | சித்திரை—வைகாசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 5 | 12 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 6 | 13 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 7 | 14 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 1 | 8 | 15 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 2 | 9 | 16 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 3 | 10 | 17 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 4 | 11 | 18 |

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

**விளம்பரம்**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகள் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் [illegible] தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. [illegible] அவர்கட்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madr[illegible]

867

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JUNE, 1919.] PRICE, 1 PIE.—விலை, ௧ பை. [ஜூன்மீ, 1919.

19 JUN 1919

## GOLDEN OPPORTUNITY.

### "நற்காலம்."

(தொடர்ச்சி.)

#### விதைப்போனின் இலட்சணங்கள்.

(*a*) தூண்டப்பட்டவனுயிருத்தல்.—அழைக்கப்பட்டும், ஆவியைப் பெற்றும் ஆத்தும வாஞ்சையுள்ளவனுயுமிருத்தல் முக்கியம். இரட்சிக்கப்படாமலும், மறுபடியும் பிறவாமலும், ஊழியத்திற்கென்று அழைக்கப்படாமலு மிருந்தால் சுவிசேஷ விதைப்பாட்டின்வேலைக்குரியவன் என்று சொல்ல முடியாது. இடமறிந்து காலமறிந்து— விதைத்தலவசியம். நாம் தேவனுடைய உடன் வேலையாட்களானதால், தேவன் அனுப்பும் இடத்திற்குச்சென்று இரட்சிப்பின் நாளாகிய இக்காலத்தில் விதைக்கவேண்டியவர்களா யிருக்கிறோம்.

(*b*) நிலவித்தியாசத்தின் அறிவுள்ளவனு யிருத்தல்.—புஞ்சை நஞ்சை நிலத்திற்கு வித்தியாசமிருப்பதுபோல மனுஷருக்கும் மனுஷருக்கும் வித்தியாசமுண்டு. அவ்வித்தியாசத்தை அறிந்துகொள்ளல் அதிக அவசியம். ஆண்டவர் தமது உபமானத்தில் உரைத்திருக்கிறவண்ணம் நான்கு விதமான நிலங்களின் தன்மையை யறிதல் அதிக அவசியம். இதற்குச் சகாயர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற தேவாவியானவரே.

(*c*) நிலத்தைப் பண்படுத்துகிறவனு யிருத்தல்.—விதைக்கிறதற்கு முந்தி நிலத்தைப் பண்படுத்த வேண்டும் அல்லது ஆயத்தப்படுத்த வேண்டும். இந்த வேலை சற்று கஷ்டமானது. மனுஷருடைய சுபாவத்தையும் அவர்களுடைய நிலைமையையும் அறிந்து அநுதாபம், பச்சாதாபம், அன்பு என்னும் இம்மூன்றையும் ஆயத்தத்திற் கேற்ற அவசியமான கருவிகளென்று உணர்ந்து அவைகளை உபயோகித்தல் அவசியம். பண்படுத்தாது விதைப்பது வீணுகுமன்றோ? விதைப்பாளியாகிய பிரசங்கி விதையாகிய சுவிசேஷத்தைச் சுமந்து செல்லவேண்டும். அதாவது (*d*) சுவிசேஷத்தின் பாரத்தை யுணரவேண்டும். மண் பாண்டமாகிய நான் இந்த பரம பொக்கிஷமாகிய நித்திய சுவிசேஷத்தைச் சுமந்து "இயேசுகிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது" என்று உணர்ந்து சொல்லுகிறவனுயிருக்கிறதும் ஒரு லட்சணம். பாரம் தோன்றவிட்டால் பதரைத்தான் சுமந்து செல்லுகிறவனுகக் காணப்படும். தான் ஆயத்த மில்லாமலும், நிலத்தை ஆயத்தப்படுத்தாமலும் சுவிசேஷ பாரத்தின் உணர்வு இல்லாமலும் விதைப்பாட்டுக்குப் புறப்படுகிறவன் பேருக்கு மாத்திரம் கிறிஸ்தவ ஊழியன், உண்மையிலோ அவன் பெரும் வேஷதாரி.

விதைக்கவேண்டிய விதை இருதயத்தின் நிறைவால் வாய்பேசும், என்பதற்கிசைய சுவிசேஷகனின் இருதயத்தில் மனுஷர்களின் ஆத்தும இரட்சிப்புக்கு அடுத்த தேவ அன்பு என்னும் நித்திய வித்து நிறைந்திருப்பதால் அவன் விதைப்பது அன்பேயன்றி வேறல்ல. இந்த பேரன்பு சிலுவையில் வெளிப்பட்டது. ஆகையால் பவுல் அப்போஸ்தலன் "சிலுவையைக் குறித்தே யன்றி வேறொன்றையும் பிரசங்கியேன்" என்கிறார். சுவிசேஷகர்களாகிய நாமும் விதைக்கவேண்டிய விதையும் "சிலுவையே"யன்றி வேறல்ல. இச்சிலுவையின் உபதேசம், உறங்கொண்ட கல்லான மனதை மாற்றும் வலிமையு முள்ளதாயிருக்கிறது. மூன்று முக்கியமான பரமார்த்தங்களை எடுத்துரைக்கும் உபதேசம் இதுவே. நித்திய தேவ அன்பையும், தேவ நீதியையும், மனுஷனின் பாவ நிவாரணத்தையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றது. தற்காலம் இச்சிலுவையின் உபதேசமானது, நமது தேசத்திலும் சிலருக்குப் பைத்தியமாயும், பெரும்பான்மையோருக்கு இடறலாயும் இருக்கின்றபடியால் சிலர் மணியாகிறதில்லை. ஊழியர்களும் சுத்த சுவிசேஷமாகிய சிலுவையின் உபதேசத்தைப் பிரசங்கிக்கிறதற்கு பதிலாக தங்களுக்கு மதிப்பும் கனமும் கிடைக்கும்படி சூலாசார விஷயங்களையும், பந்துக்களின் உயர்தர அந்தஸ்துக்களின் பெருமையையும், மார்க்க விஷயமாய் பேசும்போது ஒருவித மார்க்க ஸமரஸத்தையும், எல்லாம் ஒன்றுதான் என்பதுபோல, பிரசங்கிக்கிறவர்கள் பெரும்பான்மையோர். கிறிஸ்துவைக்குறித்துப் பேசுவதற்குப் பதிலாக, கிறிஸ்தவ மார்க்கானுசாரிகளின் திருஷ்டாந்தத்தைக் கொண்டு உலகத்திலடையக் கூடிய, லௌகீக நன்மைகளைச் சிறப்பித்துக் காட்டி வருகிறதும் ஒருவித சுவிசேஷப் பிரசங்கமாக எண்ணுகிறவர்களும் உண்டு. ஆனுல் கர்த்தர் தமது சீஷர்களை இந்த மேலான சுவிசேஷ விதைப்பாட்டின் ஊழியத்திற்கு அனுப்பிவைக்கும்போது "நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டனுப்பினுர்." லூக். 24. 45—47லும் "கிறிஸ்து பாடுபடவும் மூன்ரும் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் துடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினுலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றும் ஆண்டவர் தாமே பரமேறுமுன் பரிஷ்காரமாய்ச் சொன்னுர் என்று பார்க்கிறோம். சாதாரணமாய் நில தோஷத்தினுல் விதை முளையாமற்போவதுண்டு ஆனுல் தற்காலம் விதைக்கிறவனுடைய தோஷத்தினுலும், விதையின் தோஷத்தினுலும் பலனில்லாமற் போகிறது. ஆகையினுல்தான் பவுலப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு "நீ உன்னைக்குறித்தும் உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. அப்பொழுது உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்வாய்" என்றெழுதி யிருக்கிறார். இச்சிலுவையின் உபதேசமே நாம் விதைக்கவேண்டிய விதை.

#### II. நடவின் காலம்.

நடவு நடுகிறதும் கிறிஸ்தவ ஊழியத்திலொன்று. நாற்றைப் பிடுங்கி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்தில் நடுவதுபோல நாம் மனிதர்களைப் பாவ உளையிலிருந்து பிடுங்கிப் பரிசுத்த பர்வதமாகிய கிறிஸ்துவில் நடவேண்டியவர்களா யிருக்கிறோம். "நடுகிறவனுலு மல்ல, நீர்ப்பாய்ச்சுகிறவனுலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனுலே எல்லாம் ஆகும்" என்றாலும் நான் நட்டேன் என்று பவுல் சொல்லுகிறார். நாற்றுகளெல்லாம் பழைய ஸ்தானத்திலிருந்து பிடுங்குண்டு புதிய இடத்தில் நட்டால்தான் நன்றாய் வளரும், பலனும் தரும். நடாத நாற்றெல்லாம் தானுய் உண்டான நாற்று. அப்பேர்ப் பட்டவைகளைப் பிடுங்கி இயேசுவின் திராட்சத் தோட்டமாகிய திருச்சபையில் நட

வேண்டிய வேலை முக்கியமாய் பரம பிதாவின் வேலையாயிருந்தது. "என் பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" என்று மத் 15: 13-ல் சொல்லியிருக்கிறது. நாமும் உடன்வேலையாட்களாயிருக்கிறோம். 1 கொரி. 3·9. நடுகிறது மாத்திரமல்ல நீர்பாய்ச்சுகிறதும் நமது வேலை. ஏனென்றால் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்று 1 கொரி. 3·8-ல் காண்கிறோம். நடவு என்கும்போது நாற்றைப் பிடுங்கி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்தில் நடவேண்டும் என்கிற பொருள் தோன்றுகிறது. ஆகையால் தற்காலம் நமது வேலையானது பாவமனிதர்களை பாவம், உலகம், பிசாசு என்னும் சத்துருக்களுடைய ஆதீனத்தினின்று பிடுங்கித் தேவனண்டை சேர்க்கிற ஊழியமாயிருக்கிறது. தேவனண்டை சேர்க்கப்பட்ட ஆத்துமாக்கள் வளரும்படி நீர்ப்பாய்ச்சுகிறதும், எருப்போடுகிறதும் நமது வேலையாயிருக்கிறதென்பதை எப்பொழுதும் மறவாதிருத்தலவசியம். ஜனங்களைப் போதித்து ஞானஸ்நானம் கொடுத்துச் சபையில் சேர்த்ததும் வேலைமுடிந்ததென்றெண்ணாதுநீர்ப்பாய்ச்சுகிறதும் எருப்போடுகிறதுமாகிய வேலையிருக்கிறதென்பதை கருத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். புதிதாய்ப் பிடுங்கி நட்ட நாற்றெல்லாம்ஸ்தானபேதத்தினாலும், பிடுங்கினதினாலுண்டான நஷ்டத்தினாலும், வாடிவதங்கி காலக்கிரமத்தில் புதியசாரம் ஊறஊற பலமடைந்து நன்றாய் வளர்வதுபோல் புதிதாய்ச் சபையில் சேர்க்கப்படுகிறவர்களுமிருப்பார்கள்.

(இன்னும் வரும்.)

## SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### நாலாம் அதிகாரம்

### மிஷன் வேலையும் தொந்தரவும்

(தொடர்ச்சி.)

ஏனெனில், சிலப் பணக்காரர்களாகிய விரோதிகள் ஐந்து பள்ளிக்கூடங்களை இதற்கு விரோதமாக ஸ்தாபித்தார்கள். கடைத்தெருவில் நடக்கிற இந்தக் கொதிப்பான காக்ஷியினால் அந்த மிஷனெரிமார், அந்த ஜனங்கள் மத்தியிலேயே இருக்கத் தீர்மானித்தார்கள். அதனால் அவர்கள் ஒரு பார்ஸிக்காரனிடமிருந்து, 4,900 ரூபாயிக்கு ஒரு வீட்டைக் கிரயத்திற்கு வாங்கினார்கள். அந்தத் தொகையை ஆண்டர்ஸன் துரையவர்கள், தாம் சீமைக்குப்போக சமீபமான சமயத்தில் அதிக தயவோடு இவர்களுக்கு முன்பணமாகக் கொடுத்தார். அவர் சீமையில் இருக்கும்போது, ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து, பிரான்சு தேசத்திலுள்ளக் கிறிஸ்தவர்களுக்கு மிஷனெரிமார் மங்களூரில் செய்யும் வேலையைப்பற்றிச் சொல்லுவாரென்று எதிர்பார்த்தார்கள். அநேக விதமான வேலைகள் மங்களூரில் தொடர்ந்தேர்த்தியாய் நடந்தது. அதில் விசேஷமாய்க் கடைத்தெருவுப் பிரசங்கம். ஹெபிக் ஐயர் வெளியேபோய் வெகுநேரம் ராத்திரியில் தங்கி ஜனங்களுக்கு இயேசுவைப்பற்றிச் சொல்லுவார். இதோடு பள்ளிக்கூடத்து வேலையுமிருந்தது. அங்குள்ள ஐரோப்பியர் ஏழைகளுக்கென்று மாதந்தோறும் 80 ரூபாய் கொடுத்தார்கள். இது ஒரு தொகையாகச் சேர்ந்தது. அப்போது, ஏழைகளுக்கும் குஷ்டரோகிகளுக்கும், அதிக தீராவியாதியுள்ளவர்களுக்கும், சாப்பாடு வஸ்திர முதலியவைகள் கொடுத்து சுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். இவைகளையெல்லாம் ஹெபிக் ஐயரே தலைமையாயிருந்து நடத்திவந்தார். அவர் தம்முடைய பிரசங்க வேலையைப்பற்றி எழுதுகிறதாவது:—"நான் அடிக்கடி என் வேலையில் சந்தோஷமடைவதுண்டு, அதேமாதிரி அடிக்கடி அதைரியமும் உண்டாகும், ஜனங்கள் எவ்வளவு மூர்க்கமாயிருக்கிறார்களோ, அவ்வளவுக்கு ஆண்டவருடைய பெலத்தைக்கொண்டு சுவிசேஷத்தைச் சொல்லவேண்டும் என்பது என் கருத்து. ஆரம்பம் எப்போதும் கஷ்டம், அதனால் நாங்கள் யுத்தத்திற்கு போகிற வீரர்களைப்போலிருக்கிறோம். மல்கியா என்பவர் ஒருநாள் என்னோடு வரவில்லை, அப்போ நான் தனிமையாகப்போக நேரிட்டது. இது எனக்குக் கஷ்டம், பரவா இல்லை இன்னொரு சமயம் போகலாம் என்று யோசித்தேன். கடைசியாய், பயத்தோடும், நடுக்கத்தோடும் கடைத்தெருவிலுள்ள ஒரு முக்கிய இடத்திற்குப்போனேன். அங்கே என் தொப்பியைக் கழட்டி முகத்தைமூடி ஆண்டவருடைய உதவிக்காக ஜெபித்தேன், அதன் பிறகு என் மூங்கில் தடியையும், தொப்பியையும் கீழேவைத்து புதிய ஏற்பாட்டைத் திறந்து 'எபிரெயர்–9. 27-ல் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது' என்ற வசனத்தை வாசித்து, நியாயத்தீர்ப்பையும், ஆண்டவருடைய சுவிசேஷத்தையும் பிரசங்கித்தேன். அப்போது இதுவரையிலும் வராத ஜனங்கள் ஏராளமாய்க்கூடினார்கள். அவர்கள் எல்லாரும் என் வார்த்தைகளைக் கேட்டார்கள். பிரசங்கம் முடிந்தவுடன் எல்லாரும் ஒரே சத்தமாய் கத்தினார்கள். சிலர் பேசாமலிருந்தார்கள். சிலரோவென்றால், என் பின்னே தொடர்ந்து வந்து மணலைவாரி என்மேல் போட்டு, கல் எறிந்தார்கள்."

டி. யல். ராஸ்,
சங்ககிரிதுருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது
வேவுகாண்டம்.

### 6. மீளவம் வேதாளம் பிதற்றுப் படலம்.

ஓ நரகமே? நானிச்சமயத்தில் பார்க்கிற காட்சிகள் எனக்கு மெத்தவுஞ் சஞ்சலத்தைத யுண்டாக்குகின்றன. தூதர்களிழந்த பாக்கியத்தை யனுபவிக்கும்பொருட்டு, மானிடவடிவம் பூண்டவர்கள் இங்கே யிருக்கிறார்கள், இவர்கள் தேவலோகத்தாருக்கு சரிசமான மானவர்களல்ல. ஆயினும் தேவச்சாயலும் நற்குணமும் நற்செய்கையு முடையவர்கள். அதிசயிக்கவும் அன்புகூரவுந்தக்கவர்கள். வானப்பிறவிகளுக்குக் கொஞ்சந் தாழ்ந்தவர்கள். அவர்களை சமைத்தவர் அவர்களுக்கிந்த சிலாக்கியங்களை அளித்திருக்கிறார். ஓ அமரிக்கையும் நிஷ்கபடமுமான ஜெந்துக்களே? அநர்த்தகாலம் எவ்வளவு சமீபத்தி லிருக்கிறதென்று நீங்களறியீர்களே, இச்சந்தோஷங்களெல்லாம் ஓர் நொடிப்பொழுதில் பறந்துவிடுமே! கிர்ப்பர்தம் உங்களைபீடிக்குமே, எவ்வளவு சந்துருஷ்டியை யடைகிறீர்களோ அவ்வளவுக்கு மனோசஞ்சலத்தையு மனுபவிப்பீர்கள். இப்போது நீங்கள் பாக்கியவான்களாயினும் இனி அனுபவிக்கப்போகிற துன்பத்துக்கு, இவைகள் எம்மாத்திரம்? உங்கள் தூதகாவலாளர், சத்துருவாகிய என்னை இவ்விடத்தைவிட்டுத் துரத்திவிடவல்லவர்களோ? ஐயோ, உங்கள் நிலைமையைக் குறித்து பரிதபிக்கிறேன் என்னிலைமையைக் குறித்து பரிதாபப்படுகிறவர்கள் ஒருவருமில்லையே? நானுங்களுடன் ஓர் உடன்படிக்கை செய்ய விரும்புகிறேன். அவ்வுடம்படிக்கையினால், நாமிருவரும் ஒன்றித்து வாசஞ்செய்யலாம். இந்த அழகிய பரதீசு, ஐம்புரிகளுக்கும் உகந்ததாயிருப்பதுபோல, நானும் உங்களுக்கு இனிமையாயிருப்பேன். உங்களை உண்டாக்கினவர்தான் என்னையு முருவாக்கினார், அவர் எனக்கீந்தருளினதைத்தான் நானுங்களுக்குக் கொடுக்கப்போகிறேன். உங்களிருவரையும் ஏற்றுக்கொள்ள நரகமும் தன்வாயைத் திறக்கும். அதின் இராசாக்கள் வெளியில் அனுப்பப்பட்டுவருவார்கள். அது இடுக்கமானவிடமல்ல. உங்கள் வமிசங்களெல்லாம் அதில் வசிக்கலாம். அந்தவிடம் உங்களுக்கு அசௌக்கியமாயிருந்தால் அது என் தப்பிதமல்ல. உங்களைப் பழிவாங்கக் காரணமாயிருந்தவரை நொந்துகொள்ளுங்கள். நீங்கள் எனக்கு ஒரு தீங்குஞ் செய்யவில்லை. அவர் எனக்குத் தீங்குச்செய்தபடியால் எனது அகங்காரம் பொங்குகிறதேயன்றி உங்கள் நிர்தோஷகுணம் என்மனதை உருக்குகிறது. நியாயம், கன்னியம், இராஜமகத்துவம், பழிவாங்குதல் முதலியவைகள் எனக்குவேண்டும். ஆதலால் இவ்வுலகத்தை நாசஞ்செய்ய எத்தனிக்கிறேன். இல்லாவிடின் எனக்கும் மற்ற சபிக்கப்பட்ட ஆவிகளுக்கும் இவ்வித கிரியை மிகவும் அரோசிகமானது.

இப்பேய்ச்சூரன் இவ்வாறு பிதற்றி, தான் செய்யப்போகும் வஞ்சனைக்கு இராஜமுகாந்தரங்களை ஆதாரமாக்கிக்கொண்டனன். இதன்பிறகு அவன் உட்கார்ந்திருந்த மரத்தைவிட்டிறங்கி, விளையாடித் திரிந்துகொண்டிருந்த நாற்காற் சீவன்களினூடே சென்று, தன் கர்ப்பனையை நிறைவேற்ற அனுகூலமான மிருகங்களில் புகுந்துகொண்டான். ஆதித்தாய் தந்தையின் நடபடிகளை திட்பநுட்பமாயறியும்பொருட்டு, அவர்களுக்குக்கூடிய சமீபத்தில் வந்தான். நெருப்புத் தழல்களைப்போல வெரியுங் கண்களையுடைய வோர் சிங்கத்தைப்போல காணப்பட்டான். இதுவுமன்றி தூரத்தில் இரண்டு இளம் ஆட்டுக்குட்டிகளைப் பார்த்ததட்சணமே, பதிவிருந்து சமையத்துக்கேற்றபடி இடத்தைமாற்றி கடைசியில் ஒரே அடியாய் இருகையினாலும் அவைகளை அப்பிக்கொள்ளப்பார்க்கும் புலியைப்போலவும் நடந்தான். இப்போது மனிதரில் முதல்வனாகிய ஆதம். மனுஷிகளில் முதல்வளாகிய ஏவாளுடன் பேசத்தொடங்கினான். உரத்தசப்தத்துடன் சொன்னதால் சாத்தானுடைய காதுகளில் ஒவ்வொரு வார்த்தையுந் தெளிவாய் விழுந்தது.

### 7. ஆதம் வசனித்த படலம்.

எனது ஒன்றான சுதந்தரமே! இச்சந்தோஷங்களில் எனது உடன்பங்காளியே, எல்லாவற்றிலும் மதுரமானவளே! நம்மை உருவாக்கினவர் இவ்விஸ்தீரண வுலகத்தையு முண்டாக்கினார் சந்தேகமின்றி அவர் அளவில்லாத நன்மையும், சுவாதீனமும் உதாரத்துவமுமுள்ளவரா யிருக்கவேண்டும். மண்ணிலிருந்து நம்மை உருவாக்கினார், செல்வானுபவங்களினாலுஞ் சுகானுபவங்களினாலும் நம்மை மூடிசூட்டியிருக்கிறார். நாம் யாதொன்றுக்கும் பாத்திரமில்லாதவர்கள், அவருக்கு நாம் எவ்வகையிலும் பிரயோசனமற்றவர்கள். ஆயினும் ஒரே சட்டத்தை மாத்திரம் நாம் கைக்கொள்ள அவர் விருப்பமாயிருக்கிறார். இப்பாதீசில் சமஸ்தமரங்களின் மதுரிய கனிவர்க்கங்களை புசிக்கலாமென்றும், "சீவ" விருட்சத்தி னருகிலிருக்கும் "அறிவின்" விருட்சக் கனியை மாத்திரந் தொடக்கூடாதென்றுங் கற்பித்திருக்கிறார். "மரணம்" எத்தன்மையுள்ளதென்று நாமறியோம். ஆனாலும் சீவனுக்கருகாமையில் மரணமிருப்பது வாஸ்தவம். மரணம் ஓர்வேளை மெத்த பயங்கரமான காரியமாயிருக்கும். அம்மரத்தின் கனியைப் புசித்தால் சாவீர்களென்று தேவன் சொன்னதையறிந்திருக்கிறாயல்லவோ? தரையிலும்



ஆகாயத்திலும், கடலிலும் வாழுஞ் சமஸ்த ஜெந்துக்களின்மீது நமக்கு அதிகாரத்தை யளித்தவர், இதை மாத்திரம் நமது கீழ்ப்படிதலுக்கு அத்தாட்சியாக வைத்திருக்கிறார். ஆகையால் சகலத்தையும் ஆண்டு அனுபோகஞ்செய்ய நமக்களிக்கப்பட்டிருப்பதால் இந்த அற்பக்கட்டளையை வருத்தமாக நினைக்கவொண்ணாது. எக்காலத்திலும் அவருடைய உதாரகுணத்துக்காக நாம் அவரைப்போற்றிப் பாடுவோமாக. செடிகளைச் சுற்றிக்கொத்தி எருப்போட்டு, புஷ்பங்கள் மலரவும் பரிமளிக்கவுந்தக்க காரியங்களைச் செய்வது நமது கடமை. இக்கடமை எவ்வளவு பிரயாசையுள்ளதாயினும், உன்னுடைய அருள் நிறைந்த முகப்பிரசன்னத்தினால், மகிழ்ச்சியான வேலையாய் மாறிவிடும் என்றான்.

(இன்னும் வரும்.)

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**யுத்தக் களத்திற்குச்சென்ற இந்திய சாப்ளன்மார்.** — மெசபொத்தேமியாவுக்குச் சென்ற சாப்ளன் என்னும் ராணுவ குருக்கள்மார் 5 பேர். அவர்களில் ஒருவர் வாரீஸ் ஆடன் என்பவருக்கு M.B.E. என்னும் கவர்தாப்பட்டம் அளித்தனர். அவர் ஒரு விருத்தாப்பியராயினும் தேகவலிமையும் மனோதீரமும் ஆத்ம சந்தோஷமும் நிறைந்துள்ள பஞ்சாபி போதகர். எவ்விதக் குடும்பத்தொந்தமும் இல்லாதவர். இன்னும் சிறிதுகாலம் அத்தேசத்திலிருந்து உழைப்பார் போலும்.

**காலபலன்.**—யுத்தம் முடிந்தும் ஜனங்களின் கஷ்டம் நிவிர்த்தியாகவில்லை. தான்யங்களும் பஞ்சகால விலையைப்போ லிருக்கிறது. இன்னும் சிறிதுவாரத்திற்கெல்லாம் தென்னிந்தியாவின் பலபாகங்களிலெல்லாம் ஏழை ஜனங்களின்பரடு பரிதாபமாயிருக்கும். சர்க்காரும் தனவான்களும் சமயோசித சகாயம் புரியாவிடில் என்ன வாகுமோ?

**யுத்த சகாயம்.**—யுத்தத்திற் கேகுபவர்களுக்கு யுத்த ஸ்தானத்தில் சில காலமானதும் நற்சாட்சியோடு கூடிய சிபார்சு ராணுவ உத்தியோகஸ்தரிடம் கிடைத்ததும் இந்திய கவர்ன்மெண்டார் சாகுபடி செய்யக்கூடிய நஞ்சை, புஞ்சை நிலங்களை விநிப்படி கிடைக்கக்கூடிய இடங்களில் கொடுப்பதாக வாக்களித்திருந்தும் ஆங்காங்குள்ள கிராமவாசிகள் அங்கிலங்கள் கிடையா வண்ணம் முயற்சிக்கிறார்கள்.

**பிரமாண்ட கப்பல்.** — யுத்தத்திற்குமுன் உலகத்திலிருந்த கப்பல்களிலெல்லாம் மகா பெரியக் கப்பல் இம்பரேட்டர் என்னும் ஜெர்மானிய கப்பல் இதுவும் இங்கிலாந்திற்கு ஒப்புவிக்கப்பட போகிறது.

**ஐரோப்பிய பத்திராதிபர்.**—பம்பாய் கிரானிகல் என்னும் பத்திரிகையை நடத்திவந்த ஹார்னிமான் என்பவரை இங்கிலாண்டு தேசத்திற்கு மூட்டையும் முடிச்சுமாய் புறப்பட்டேகும்படி இராஜாங்க உத்திரவானதின்பேரில் அவர் இந்தியாவை விடலாயிற்று. அவர் ஒரு ஆங்கிலேயர். இராஜாங்கத்திற்கு விரோதமாய் கலகம் ஏற்படுவதற்கு ஏற்ற சில விஷயங்களை பிரசுரப்படுத்தி வந்ததினால் இந்த மரியாதைக் கிடைத்தது. இதைவிட கடுஞ்சிக்ஷை அவருக்கு விதிக்கப்படாததைக் குறித்து ஆச்சரியப்படுபவரும் உளர் போலும்.

**சுய ஆளுகை.**—இந்தியாவை தாங்களே ஆளவேண்டுமென்போரில்மூன்றுவிதமான இந்தியர்கள் உள்ளர். ஒரு திறத்தார் விபரீதஸ்தர் (Extremists), இரண்டாவது வகுப்பார் நிதானஸ்தர் என்னப்படுவர் (Moderates), மூன்றாவது வகுப்பாரோ வெனில் சுயபரிபாலனமே தற்காலம் வேண்டுவதில்லை என்போர். நிதானஸ்தர் கட்சியை யொட்டி ஆனரபில் வி. எஸ். சிரினிவாச சாஸ்திரியார் இங்கிலாண்டு தேசம் ஏகி யிருக்கின்றனர்.

**பேடல் மசோதா.** — இந்தியாவிலுள்ள சதுர்வருணத்தாருக்குள் ஒருவருக் கொருவர் கலியாண விஷயமாய் கொள்வினை கொடுப்பனை அடைய ஒரு மசோதா கனம்: பேடல் என்பவர் வைசிராய் சபைமுன் கொண்டுவந்தார். பம்பாயிலுள்ள சீர்திருத்த சங்கத்தாரும் ஆரிய சங்கத்தாருமாக சேர்ந்து ஒரு பெரிய கூட்டம் கூடினார்கள். ஸர் சிம்ஹலால் என்பவர் பீடம்வகித்தார். நமது தேசம் எவ்விதத்திலும் முன்னுக்கு வர மேற்படி மசோதா அவசியமென்றும் சிலர் நினைக்கிறபடி மேற்படி மசோதா இந்து மார்க்கத்திற்கு நேர் விரோதமென்பது தவறு என்றும் தீர்மானித்தார்கள்.

**புது ஜெர்மனி.**—ஜெர்மனி தேசம் இனிமேல் சக்கிரவர்த்தியால் ஆளப்படாமல் அமெரிக்கா தேசத்தைப்போல் பிரஸிடெண்ட் என்ற பெயர் வகித்து 7 வருஷத்திற்கு ஒருவர் அரசாளுவார். இங்கிலாந்திலுள்ளவைபோல் இரண்டு பெரிய சபைகள் இராஜாங்க காரியங்களை தீர்மானிக்கும். ஒன்றுக்கு சேம்பர் ஆப் பீபல் என்றும் மற்றொன்றுக்கு சேம்பர் ஆப் ஸ்டேட்ஸ் என்றும் பெயர்.

**திவான் பகதூர் ராஜகோபாலாச்சாரியார்.**—பஞ்சமர் கல்வி விஷயமாய் கடந்த சென்னை சட்ட நிருபண சபையில் இவர் பேசினது யாவரும் கவனிக்கத்தக்கது.

"பஞ்சமர்களில் அநேகர் கல்வி கற்காததற்கு காரணம் அவர்களுக்கு ஆசையில்லை என்பது அல்ல. பொதுப் பணத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற எலிமெண்டரி பாடசாலைகளில் அநேகத்தில் அவர்களுக்குச் சேர அனுமதி கிடையாது. ஜாதி வித்தியாசத்தைப் பாராட்டிப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளத் தடை பண்ணக்கூடாதென்கிற ஒரு சட்டம் இருந்தபோதிலும், அது வெறும் எழுத்திலேதான் இருக்கிறது. கோர்ட் ஆப் டைரக்டர், செக்ரெடரி ஆப் ஸ்டேட் இவர்கள் இது விஷயமாய் வற்புறுத்திப் பேசியிருக்கிறதை நாம் அறிவோம். ஆகிலும் பஞ்சமர்களை அவ்விதப் பொதுப் பணத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் முனிஸிபல் போர்ட் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்படுகிறதில்லை. தாழ்ந்த வகுப்பார்கள் எவ்வளவோ ஏராளம். அவர்களுக்கென்று பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கிற பள்ளிக்கூடங்கள் வெகு சொற்பம். இந்த ஜில்லாவில் ஸ்தாபித்திருக்கிற பள்ளிக்கூடங்கள் 8,157. அவைகளில் பஞ்சமர்களுக்கென்று மாத்திரம் இருப்பவை 609 தான். ஏன் மீதியான அத்தனை ஆயிரம் பள்ளிக்கூடத்தில் பஞ்சமர்கள் சேரக்கூடாது என்று கேட்டால், சிலர் பிள்ளைகளின் பெற்றோர்கள் பேரில் சாக்குப் போடுகிறார்கள். பள்ளிக்கூடங்கள் அகரத்தில் இருக்கிறதினால் தடை என்கிறார்கள். நான் உங்களில் யாரையாவது குறைகூற இதை வெளிப்படுத்தவில்லை. என் நோக்கம் உங்கள் அனுதாபத்தைப் பெறவே—உங்களுடையதை மாத்திரமல்ல சுற்றிலு மிருப்பவர்களுடைய அனுதாபத்தைப் பெறுவதற்குமே. கல்வி விஷயமாய்ச் செலவழிக்கப் படுகிற பணம் சகல வருணத்தாரும் அனுபவிக்கவேண்டும். பஞ்சமர்களும் மற்றும் தாழ்ந்த வகுப்பினரும் அடையும் அவஸ்தையையும் குறைகளையும் நீக்க முயல்வது அங்கங்கே இருக்கும் லோகல் உத்தியோகஸ்தர்கள்மேல் விழுந்த பாரம். ஆகவே எவ்வருணத்தாருடைய பிள்ளைகளையும் யாதொரு வித்தியாஸமில்லாமல் எல்லாப் பள்ளிக்கூடத்திலும் சேர்க்கும்படியான பிரயாசை எடுக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்"

**கங்காதர திலகர்.**—இவர் இங்கிலாந்து சென்று ஸர் சிரால் என்பவர் பேரில் ஒரு மானநஷ்ட பிராது தொடுத்தார். இவர் இந்தியாவில் முன்நடந்த இராஜ கலகத்திலே இருமுறை சிட்சையடைந்தவரென்றும், இரண்டு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் கொலை செய்யப்பட இவர் பத்திரிகையே காரணமாயிருந்த தென்றும் வெளிப்படுத்தப்பட்டது. முடிவில் தான் தொடுத்த வியாஜ்யம் தள்ளப்பட்டதுமன்றி கோர்ட் செலவும் கட்டிக்கொடுக்க தீர்ப்பு பிறந்தது.

**ஜெக சமாதானம்.**—கடந்த நாலைந்து மாதங்களாக பாரிஸ் நகரில் நடந்த சமாதான நடவடிக்கை ஒருவாறு முடிவடைந்தது. ஜெர்மானியர் கைக்கொள்ளவேண்டிய நிபந்தனைகளை தெரிவித்திருக்கிறார்கள். நிபந்தனைகளில் சில மாறுதல்கள் நேரிட்டால் நேரிடும். மற்றப்படி எல்லாம் ஜெர்மனி ஒப்புக்கொள்ளும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை. வரப்போகிற அந்த சமாதானநாள் உலகமெங்கும் விசேஷித்த உற்சவநாளாய் கொண்டாடப்படும். ஆனால் என்று வருமோ?

**யுத்த நஷ்டம்.**—அமெரிக்கா சேனைகளுக்குத் தளகர்த்தரான ஜனரல் மார்ச்சு என்பவர் கணக்கின்படி கடந்த யுத்தத்தில் பிரவேசித்த 13 ராஜ்யங்களுடைய மொத்த ஜனநஷ்டம் (உடனே மாண்டவர்களும், காயப்பட்டு மாண்டவர்களுமாக) 7,354,000. எவ்வாறெனில்:

| | |
|---|---|
| ருஷியா .. | 1,700,000 |
| ஜெர்மனி .. | 1,600,000 |
| பிரான்ஸ் .. | 1,305,000 |
| ஆஸ்டிரியா .. | 800,000 |
| பிரிட்டென் .. | 706,000 |
| இட்டாலி .. | 460,000 |
| துர்க்கி .. | 250,000 |
| பெல்ஜியம் .. | 102,000 |
| பல்கேரியா .. | 100,000 |
| ரௌமேனியா .. | 100,000 |
| செர்பிட்டா, மாண்டிநிக்ரோ } | 100,000 |
| யு. டே. அமெரிக்கா | 50,000 |

**சத்ய கிரஹா சங்கடம்.** — காந்தி மஹானுபாவர் ரௌலட் மசோதாவை தொலைக்கும்படி உபயோகித்த நல்ல உபாயத்தை அறியாத ஜனங்கள் உபயோகித்ததினால் இந்தியரும் ஐரோப்பியரும் தங்கள் அருமையான ரத்தத்தை சிந்தநேரிட்டது. காந்தி இப்போது மனஸ்தாபப்படுகிறார். யுத்த காலத்தில் இந்தியாவுக்கு மதிப்பைக் கொண்டுவந்த பஞ்சாபியரே இப்போது இந்த நடத்தையினால் அந்த மதிப்பைக் குறைத்தார்கள். தென்னிந்தியா இது விஷயத்தில் நடந்துக்கொண்ட விதம் பெருமையடையக் கூடியதே. ஆனிபெஸண்ட் அம்மையும் இந்த மசோதா விஷயத்தில் சர்க்காருக்குச் சார்பானது கவனிக்கத்தக்கது.

## பஞ்சாங்கம்.


1919 ஜூன்மூ பஞ்சாங்கம்
◯ பௌர்ணமி, 13, உ ● அமாவாசை, 27உ

| வாரம் | ஜூன். | | | | | வைகாசி—ஆனி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 1 | 8 | 15 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 2 | 9 | 16 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 3 | 10 | ... |
| புதன் .. | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 4 | 11 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 5 | 12 | ... |
| வெள் ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 6 | 13 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 32 | 7 | 14 | ... |

# MELLIN'S FOOD

TRADE MARK.

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினால் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

## விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 9657.

740

Registered No. M. 442.

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JULY, 1919.] PRICE, 1 PIE.—விலை, ௧ பை. [ஜூலைமீ, 1919.

## GOLDEN OPPORTUNITY.

### "நற்காலம்."

(தொடர்ச்சி.)

ஆகையால் நமது தற்காலப்பாடு நடவுக்குரிய பாடென்று எண்ணி அநேகரை இருளிலிருந்து பரமவெளிச்சமாகிய கிறிஸ்துவண்டையில் கொண்டுவந்து சேர்ப்பிக்க வேண்டும். நட்ட நாற்றுகளாகிய சாவா ஆத்துமாக்களையுடையவர்களை நாம் நல்ல தோட்டக்காரனைப்போல் காவல் பண்ண வேண்டியவர்களாயிருக்கிறோம். உறங்காமலும் தூங்காமலும் ஆத்துமாக்களைக் காப்பது உத்தமமேய்ப்பனுடைய வேலையாயிருக்கிறது. பரமமேய்ப்பனைப் பற்றி 121-ம் சங்கீதத்தில் "இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதும் இல்லை தூங்குகிறதும் இல்லை" என்று வாசிக்கிறோம். ஆகையால் நடவின் காலமாகிய இக்காலத்தில் நாம் மனிதர்களை கர்த்தாண்டை சேர்த்து அவர்களுக்குச் சுத்த உபதேசத்தைக் கொடுத்து அவர்களை அடிக்கடி சந்தித்துக் கண்டிக்கவேண்டிய சமயத்தில் கண்டித்து அநுதாபம் பாராட்டி, செம்மையும் நேர்மையுமான வழியில் நடத்திக் காவல் பண்ணுவது நமது ஊழியத்தின் சிறப்பு என்று உணர்வோமாக.

### III அறுப்பின் காலம்.

அறுப்புக்காலம்.—இக்காலமானது அறுப்புக் காலமாயிருக்கிறது. ஆகையினால்தான் நமது ஆண்டவரும் (மத். 9·39-ல்) அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்கிறார். அறுப்புக்காலம் சந்தோஷகாலம். அது களஞ்சியங்களில் சேர்க்கிறகாலம். மேலும் அது கடைசிக்காலமானதால், பயங்கரமானகாலம். அதாவது: களையை வேறாகவும், கோதுமையை வேறாகவும் பிரித்தெடுக்கிற காலம் (மத். 13·30). மணி வேறாகவும், பதர்வேறாகவும் பிரித்துவிடுகிறகாலம்.

கண்ணீரோடு விதைத்து வருத்தத்தோடும் ஆயாசத்தோடும் நட்டு நீர்ப்பாய்ச்சி, எருப்போட்டுக்காவல் காத்தவர்களுக்கு இது கெம்பீரத்தோடு அறுக்கும் சந்தோஷ காலம். தேவனுடைய திருச்சபையாகிய களஞ்சியத்தில் சேர்க்கும் காலமும் இதுவே. பிரயாசத்தின் பலனைக்கண்டு குதூகலிக்கும் மனப்பூரிப்பின் காலம் இதுவே. ஆயினும் அறுப்பு உலகத்தின் முடிவென்றும் (மத். 13·19 லும்) நியாயத் தீர்ப்பைக் குறிக்கும்படி "பயிர் (அறுப்பு) முதிர்ந்தது, அறிவாளை நீட்டி அறுங்கள் என்றும் (யோவேல். 3·13) "பூமியின் பயிர் (அறுப்பு) முதிர்ந்தது, அறுக்கிறதற்கு காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அறிவாளை நீட்டி அறுத்துவிடும்." என்றும் (வெளி. 14·15 லும்) சொல்லியிருக்கிறதை வாசிக்கிறோம். ஆகையால் நாம் தற்கால உலக சம்பவங்களைப் பார்க்கும்போது உலகத்தின் முடிவு சமீபமாய்த்தானிருக்கிறதென்று துணிவு கொள்ளவேண்டியதாயிருக்கிறது. முடிவுக்குச் சமீபமாய் வந்திருக்கிற நாம் சற்று நிதானமாய்க் காரியத்தைக் கவனித்துப்பார்ப்பது அவசியம். முதலாவது நம்மையும் நாம் செய்து வந்திருக்கிற தேவபணிவிடையையும் பற்றிக் கணக்குக் கொடுக்கவேண்டியதாயிருக்குமே. நாம் வெறுங் கூலியாட்களாய் இருந்திருக்கிறோமா? அல்லது உண்மையுள்ள உத்தம ஊழியர்களாயிருந்திருக்கிறோமா? நமது வசத்தில் கொடுக்கப்பட்டிருந்த தாலந்துகளை, விசேஷமாய் நமது சமயத்தை எவ்வாறு செலவழித்து வந்திருக்கிறோம்? கடந்த நாட்கள் வீண்நாட்களாய்ப் போனபோதிலும் தற்சமயத்தையாகிலும் நாம் சத்தானபடி உபயோகிப்பது தகுதியும் தேவனுக்குப் பிரீதியுமாயிருக்கும். ஆகையால்தான் பவுல் அப்போஸ்தலன் "காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" என்கிறார்.

ii. காலத்தைப் பிரயோஜனப்படுத்தும் வகை எவ்வாறெனப் பார்ப்பது உத்தமம். கடந்தகாலம் மீளவும் வரப்போகிறதில்லை. நமது வசமாயிருக்கிற இக்காலத்தைத் தகுந்தபடி செலவழிப்பதே முக்கியம். வாய்க்கும் சமயங்களையெல்லாம் வீண் வம்பளக்கிறதிலும் சீட்டாடுகிறதிலும் கூத்துக் களியாட்டுகளுக்குச் செலவு செய்வதிலும் மாம்ச இச்சையை நிறைவேற்றுவதிலும் போக்காமல் தேவ பணிவிடையாகிய உத்தம ஊழியத்தில் நிலைத்திருந்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தப்பார்ப்பது தான் காலத்தைப் பிரயோஜனப்படுத்துவதற்குரிய எத்தனம். இந்தப் பணிவிடை நம்மையே அதாவது நம்முடைய சரீரம் (ரோ. 12·1) நம்முடைய பொருள், நம்முடையநேரம், படிப்பு, அந்தஸ்து முதலிய சகல தாலந்துகளையும் ஆண்டவருக்கு என்று செலவு செய்தலேயொழிய வேறல்ல. பாவம், உலகம், பிசாசு இவைகளுக்கு என்று இனி கிஞ்சித்தேனும் நேரத்தைப்போக்காமல் கர்த்தரின் நாம மகிமைக்கேன்றே பிரயோகிக்கவேண்டும். நமது சொந்தப் பேச்சைப்பேசாமலும், நமது சொந்த எண்ணத்தை எண்ணாமலும், நமது சொந்த வேலையை ஓயாமணியமாக்காமலும் தேவநாம மகிமைக்குரியவைகளில் கண்ணும் கருத்துமாயிருந்து நமது சமயங்களை உபயோகிப்பதுதான் காலத்தைச் சத்தானபடி பிரயோஜனப்படுத்துவதற்கு அடையாளம்.

1. விழித்திருத்தல்: சேவகன் (தூங்காது).
2. சுறுசுறுப்பாயிருத்தல் (உலாத்துகிறது).
3. ஜாமக்காரரைப்போல் எக்காலம் ஊத வேண்டும். Isa. 21·5.6. 52·8;

படிப்பினை.—நாம்கேட்ட காரியங்களைக் கவனமாயும் சாவதானமாயும் சற்று யோசித்துப்பார்த்து நம்மையே தற்சோதனை செய்தல் ஆத்மார்த்தமாய் முடியும். நமது நாட்கள் கொடிய நாட்களானதால் கிடைத்திருக்கும் இந்தத் தவணையான நற்சமயத்தை கைசோரவிடாது காத்துக்கொள்ளல் அவசியம். நமக்குத் தேவன் கொடுத்திருக்கும் ஊழியம் இக்காலத்திற்குத் தகுந்த ஊழியமாகவேயிருக்கிறது. விதைக்கிறவன் விதைப்பாட்டிலும், நடுகிறவன் நடவிலும், அறுக்கிறவன் அறுப்பிலுமாக நிலைகொண்டிருத்தல் முக்கியம். இல்லாவிடில், உலகமுடிவில் நமது நிலமை நிர்ப்பந்தமாயிருக்கும். கர்த்தாவே! கர்த்தாவே! என்பவர்களுக்கு அல்ல. பரம சித்தத்தின்படி நடந்தவர்களுக்கே ஆண்டவரின் நல்வாக்கும் பிரசாதமும் கிடைக்கும். தீர்க்கதரிசனம் சொன்னவர்களுக்கு அல்ல; பிசாசுகளைத் துரத்தினவர்களுக்கு அல்ல, அற்புதங்களைச் செய்தவர்களுக்கல்ல, அந்நிய பாஷையைப் பேசினவர்களுக்கு அல்ல, பிதாவின் சித்தப்படி செய்தவர்களுக்கே நற்பலன்.

ஆகையால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வது நமது கடமை. இக்காலத்தையும் வீணாக்கிவிடுவோமானால் நமது முடிவு பற்கடிப்பும் அழுகையுமாய் முடியும். ஆண்டவரின் வருகையும் சமீபித்திருக்கிறது என்று காலத்தின் அடையாளங்

கள் விளக்கப்பண்ணுகிறது. நமது வசத்தில் ஒப்புவித்திருக்கிற ஜனங்களின், ஜாதியாரின், கிராமத்தாரின் இரத்தப்பழிக்கு நாம் ஆளாகாதபடி நமது சமயங்களைச் சுவிசேஷ சமயமென்றெண்ணி அதிக விழிப்புள்ளவர்களும் சுறுசுறுப்புள்ளவர்களுமாயிருந்து ஊழியத்தை நடத்தவேண்டும். நாம் வெறுங்கையனாக ஆண்டவரிடம் போகாதபடிக்குக் காத்துக்கொள்ளல் நமது வேலை. கர்த்தர் தாமே தமது நல்லாவியை நம்மெல்லாருக்கும் தந்து வழி நடத்துவாராக. ஆமென்.

## MILTON'S PARADISE LOST.

### பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

### வேவு காண்டம்.

#### 8. ஏவாள் வசனித்த படலம்.

இதற்கு ஏவாள் பிரதியுத்தரமாக, ஓ! எனது மாமிசத்தின் மாம்சமே! உமக்காகவும், உம்மிலிருந்துமல்லவோ நான் உருவாக்கப்பட்டேன். நானிருந்தும் நீரிராவிட்டால் பிரயோசனமென்ன? என்னை நடத்துபவரே! எனது சிரசே! நீர் சொன்னது நீதியும் நியாயமுமா யிருக்கிறது.

அவருக்கே நாம் துதிகளையுந் தோத்திரங்களையுஞ் செலுத்தவேண்டும். பாக்கியங்களில் உம்மோடு உடன் பங்காளியுமாயிருக்க, என்னை உருவாக்கினதால் நான் அவரைத் தோத்தரிக்க அதிகக் கடனாளியா யிருக்கிறேன். மேலும் நீர் சில விஷயங்களில் எனக்கு மேம்பட்டவராயிருந்தும் என்னைப்போல உமக்குத் தகுந்த துணையில்லையே! ஒருநாள் நான் நித்திரையை விட்டெழுந்த தட்சணமே தழைத்திருக்குஞ் செடிகள் நிறைந்தவோர் பூஞ்சோலையிலிருப்பதை உணர்ந்தேன். நானார்? எங்கிருந்து வந்தேன் எவ்விதமாய் வந்தேன், எவ்விடத்தி லிருக்கிறேனென்று பிரமித்து நின்றேன். அப்போது தண்ணீரின் இரைச்சலைக்கேட்டேன். அத்தண்ணீர், ஊர்கெபியினின்று புறப்பட்டு, பளிங்கு போன்ற தரையின்மீது ஓடி ஆகாயவிரிவைப்போல பாவினது. அவ்வேரிக்கரையோரத்திலுள்ள பசிய புல்லின்மீது படுத்திருந்தேன். அவ்வேரியில் குனிந்துபார்க்குமளவில், ஓர் உருவம் அச்சலத்திலுள்ளிருந்து என்னைத் திரும்பிப்பார்த்தது. தட்சணமே பின் வாங்கினேன். அதுவும் பின்வாங்கிற்று. மறுபடியும் ஆவலுடன் திரும்பவும் வந்து உற்றுப்பார்க்க அவ்வுருவமுந் திரும்பவும் என்னைப் பார்த்தது. அதின்முகம் பட்சாதாபம் உருக்க விரக்கமுள்ளதாயிருந்தது. அவ்விடத்தில் நான் அதிக நேரமாய் அவ்வுருவத்தை விருதாவாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். இன்னமும் பார்த்துக்கொண்டிருப்பேன் ஆனால் சடுதியிலோர் சப்தமுண்டாயிற்று. ஓ அழகும் அலங்காரமுமான சிருட்டியே! நீ அவ்வேரியில் பார்க்கும் உருவம் உன்னுடைய சாயலென்று நினைத்துக்கொள்; அது உன்னுடன் வந்து உன்னுடன் போய்விடுகிறது. ஆனால் என்னை பின்றொடர்ந்துவா! நீ வருகையில் வந்து நீ போகையில் போகாததும் நிழலாட்டமல்லாததுமான வோர் உருவத்தைக் காட்டுகிறேன். அவ்வுருவம் உன் புலன்களுக்கு விஷயமாயும் உனது மிருதுவான ஆலிங்கனத்தை யடையக்கூடியதாயு மிருக்கிறது. மேலும் அப்புருஷ வடிவினின்றே உன் வடிவையும் பெற்றுக்கொண்டாய், அப்புருஷனைவிட்டு நீ ஒருக்காலும் பிரியாமல் அவனுடனிருப்பாய். அவனுக்கென்று அநேகம் புத்திரர்களையும் பெறுவாய், அதின்பொருட்டு மனிதசாதியின் தாய் என்றும் அழைக்கப்படுவாய் என்றது. நானிதைக்கேட்டு அதிசயித்தேன், மேற்சொல்லிய அசரீரி வாக்கின் பிரகாரம், நடந்துவருகையில் உயர்ந்த தோள்களையும் லட்சணமான முகத்தையுமுடைய உம்மை ஓர் விருட்சத்தின் அடியிற் நிற்கக்கண்டேன். ஆயினுஞ் ஜலத்தில் கண்டவடிவின் அழகுக்குக்குறைந்த அழகினையுடையவராகக்கண்டு என்முதுகைத் திருப்பினேன். நீரோ என்னைப்பின்றொடர்ந்து, ரூபவதியே! ஏவாளே! எங்கே செல்லுகிறாய்? யாருக்கு பயந்தோடுகிறாய்? எனது மாமிசத்தின் மாமிசமாயும் எலும்பின் எலும்பாயு மிருக்கிறாயே! என் இரத்தாசயத்துக் கடுத்ததும், என் உயிருக்கு ஆதாரமுமான எலும்பை உனக்குத் தானம்பண்ணினேன். ஆகையால் இதுமுதல் என்பக்கத்தி லிருப்பாய், என் ஆத்துமத்திலோர் பாதியும் எனது ஆறுதலும் அருமையுமாக உன்னைப் பாவிக்கிறேன் என்று சொன்னீர். இப்படிச்சொல்லி உமது மிருதுவான கரங்களினாலே என்னைத் தொட்டீர், உடனே நின்றுவிட்டேன். மேலும் முகலட்சணத்திலும் மனுஷத்தத்துவமும், ஞானமும் மேம்பட்டதென்றும் அவைகளே சரியான அழகென்றும் அன்றுமுத லறியலானேன்.

இப்படி நம்முடைய ஆதித்தாய் பட்சம்நிறைந்த கண்களுடனேயும் ஆவலுடனேயும் பேசி, நம்முடைய ஆதித்தந்தையின்பேரிற் சாய்ந்தனள். அவளின் அழகிய கூந்தல்கள் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன. ரூபலாவணியத்துடன் அவளின் அமர்ந்த குணலட்சணங்கள் சேர்ந்து பிரகாசமாய் விளங்கின. இருபேரும் ஒருவரையொருவர் முத்தமிட்டு களிக்கடலில் அமிழ்ந்திருந்தனர். இதெப்படியிருந்ததென்றால், அமராந்திபுஷ்பங்கள் எங்கும் மலர்ந்து பரிமளிக்கும்பொருட்டு கார்மேகங்களையனுப்பும் யூப்பித்தர் தன் தேவியாகிய யூனோவின் பேரில் அபரிமிதமான சந்துஷ்டியடைந்து களிப்பதுபோ லிருந்தது. இச்சிறப்புற்ற காட்சியைக் கண்ட பிசாசானவன் அகங்காரப்பிரமைகொண்டு ஓர்பக்கந் திரும்பி தன் கண்களைக் கூசிக்கொண்டு தனக்குள்ளே தானே பின்வரும் பிரகாரம் பிதற்றுகிறான்.

#### 9. வேதாளம் வெறுப்புற்ற படலம்.

ஓ! அருவருப்பான காட்சி! சகிக்கக்கூடாத வேதனை! இவர்களிருவரும் ஒருவரையொருவர் பட்சமாய் ஆலிங்கனஞ்செய்து பரதீசின் சந்தோஷத்திலும் மீசுரமான சந்தோஷத்தை யடைகின்றார்களே. நானோ அதோகதியில் அமிழ்ந்திக் கிடக்கிறேன். அங்கே சந்தோஷமும் அன்புங் கொஞ்சமென்கிலும் கிடையாது. வேதனைகள் மாத்திரமிருக்கின்றன. மேலும் திருப்தியடையாத ஆசைகளுமுண்டு. இவைகள் ஒருபோதிலுங் குன்றாமல் நீடித்தகாலம் துன்பத்தை விளைவிக்கும். ஆயினும் அவர்கள் வாய்ப்பிறப்பினால் நானறிந்த காரியத்தை மறந்துவிட்டேன். இத்தோட்டத்தி லுள்ளவைகளெல்லாம் அவர்களுடைய தல்லவென்று அறிகிறேன். அழிவை விளைவிக்கும் மரம் ஒன்று இவ்விடத்திலிருக்கிறதாம். அதற்கு "நன்மை தீமை யறியத்தக்க விருட்சம்" என்று பெயராம். இம்மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாதாம். இதென்ன அநியாயம்! இது சமுசயிக்கப்படத்தக்கது. அவர்களின் ஆண்டவர் அதையேன் மறுக்கவேண்டும். அவ்வறிவை அடைவது பாவத்துக்கும் மரணத்துக்கும் உள்ளாக்குமோ? அல்லது அறியாமையினால் அப்படி சொல்லுகிறார்களோ? அவர்கள் பாக்கியம் நிறைந்த நிலைமையிலிருக்கிறார்களே! அவர்கள் விசுவாசத்தையுங் கீழ்ப்படிதலையும் பரீட்சிக்கும் நிலைமையாயிருக்குமா? அப்படியானால் அவர்களின் வாழ்வைக் குலைத்துப்போட நல்ல ஆதாரங்கிடைத்தது. அதிக அறிவையுடைய அவர்களை ஏவுதல் செய்வேன். பொறாமையினா லிக்கட்டளை கொடுக்கப்பட் டிருக்கிறதென்று சொல்லுவேன். அறிவு மிகுதியாவதினால் தேவர்களுக்குச் சரிசமானமாகத் தக்கவர்களே, அதை ருசித்தால் சாவீர்களென்று சொன்னவர் இன்னம் என்னதான் சொல்லமாட்டார்? இருக்கட்டும், நான் முந்தி இத்தோட்டத்தின் ஒவ்வொரு சந்திலும் பொந்திலும் போய் நுட்பமாய் ஆராயவேண்டும். தடாகத்தின் ஓரத்திலாவது, அடர்த்தியான செடிகளிலாவது வானுலக ஆவிகளிலொன்றைக் கண்டால், அந்த ஆவியைக்கொண்டு இன்னு மறியவேண்டிய சமாச்சாரங்களை அறிந்து கொள்ளலாம். அதிர்ஷ்ட ஜென்மிகளே! சந்தோஷமாயிருங்கள், அகமகிழுங்கள். நான் திரும்பவருமளவும் கொஞ்ச நன்மையை அனுபவியுங்கள், ஏனென்றால் அனேகநாள் துன்பம் உங்களுக்கிருக்கிறதென்றான்.

இவ்வார்த்தைகளைச் சொல்லி கெர்வமாய்த்திரும்பி அத்தோட்டத்திலுள்ள செடிகளிலும் காடுகளிலும், பள்ளங்களிலும், மேடுகளிலும் தந்திரமாய்ச் சுற்றித் திரிந்தான். சூரியன் அஸ்தமிக்குஞ் சமயமாயிற்று அதின் காந்திகள் நேராய் பரதீசுக்குச் செல்ல சகலத்தையும் மங்களகரமாக்கின. கிரணங்கள் வீசுவதால், பொன்மயமாய் விளங்கி, மேகமண்டலத்தையும் அளாவிநின்ற ஓர் உன்னதமான மலையொன்றிருந்தது. விருத்தவடிவுள்ள ஓர் வழி அதிற் காணப்பட்டது. வேறு வழிகளில்லை. இக்குன்றின் உச்சியில் தூதகாவலர்களின் பிரதானியாகிய காபிரியேல் உட்கார்ந்திருந்தனன். அவனுக் கருகாமையில் ஆயுதந்தரித்த ஓர் வானுலகப் பால்யன் இராட்சதவித்தைகளிலும் கொடிவிளையாட்டிலும் பழகிக்கொண்டிருந்தான், பக்கங்களிற் கேடகங்கள், ரத்தினங்கள் பதிக்கப்பட்ட விலையுயர்ந்த அம்பிராத்தூணிகள், மற்றும் வானுலகாயுதவர்க்கங்கள் தகதகவென்று மினுக்கின. இவ்விடத்துக்கு யூரியேல் தூதன் நட்சத்திரம்போல சூரியகாந்தியின்மீது அதிகத் துரிதத்துடன் ஓடிவந்தான். அதெப்படியிருந்ததென்றால், அனுக்களெல்லாம் பாவி ஆகாயத்தை புகையாக்கி புசலை எழுப்புஞ் சமயத்தில், கப்பல் மாலுமிகளை எச்சரிக்க விரைவுடன் செல்லும் ஓர் மனிதனைப்போல விருந்தது.

(இன்னும் வரும்.)

## NEWS AND NOTES.

### வர்த்தமானக் குறிப்புகள்.

### WORLD'S PEACE CONFERENCE.

#### உலக சமாதான சங்கம்.

இச்சங்கத்தின் சமாதானத்திற்குறிய ஏற்பாடுகள் சில அரசுகளுக்கு அனுகூலமாய் இல்லாதது பற்றி சமாதான உடன்படிக்கை நாளது தேதிமட்டும் அச்சங்கத்து அங்கஸ்தர்களின் கையொப்பம் போடப்படாமலிருக்கிறது. ஜர்மானியர் சம்பந்தமாய் உடன்படிக்கையில் காட்டியுள விஷயங்கள் பல. அவைகளில் அடியிற் கூறியவைகள் சில—

ஜர்மனிதேசத்து எல்லை, நிலம் நீர் ஆகாயப் படை, நஷ்ட ஈடேற்றம், குடியேற்ற நாடுகள், கைசர் விசாரணைத்தீர்ப்பு, போலண்ட் செக்கோஸ்லா போக்கியாராஜ்ஜியம், லீக் ஆவ் நேஷன் என்னும் சர்வதேச ஐக்கிய ஏற்பாடு, கூலிவேலையாட்களின் சங்கம் முதலியன.

ரைன் என்னும் நதிக்கு மேற்கே ஜர்மனிக்கு யாதொரு அக்குமிராது. பால்டிக் துறைமுகப்பட்டணம் முன்போல் இராது. சுயாதீனம் அடையும். நிரட்சரேகைக்கு வடபாகமாயுள்ள ஜர்மனியரின் பசிபிக் குடியேற்றத் தீவாந்திரங்கள் ஜப்பானையும் நிரட்சரேகைக்கு தென்பாரிசமாயுள்ள தீவுகள் ஆங்கிலேய ராஜாங்கத்தையும் சேரும். அதோடு முப்பது வருஷங்களுக்குள், ஏற்பட்டுள்ள நஷ்டத் தொகையையும் கட்டிக்கொடுக்க வேண்டுமாம்.



## ROWLAT BILL.

### ரௌலட் சட்டம்.

இச்சட்டத்தையொட்டி சத்தியகிரகிகளால் உண்டான கலகங்களும் உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டதின் பேரில் தற்சமயம் பஞ்சாப் மாகாணம் யுத்தசட்ட ஆளுகைக்கு உட்படலாயிற்று. இந்த ரௌலட் சட்டத்தைப்பற்றி நமது தமிழ்நாட்டார் அறிந்துகொள்ள அபேக்ஷை உள்ளவர் ஆதலின் அதன் சாராம்சத்தை பின்வருமாறு காணலாம்.

நமது இந்தியாவின் பாதுகாப்புச் சட்டம் யுத்தம் ஓய்ந்ததும் நிவிர்த்தியாகு மாகையால் ராஜதுரோக கலகங்களை அடக்கவும் நீக்கவும் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டத்தில் அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. தொகுத்துச் சொன்னால் 5 பாகமாகப் பிரித்து அடியிற்கண்டபடி சொல்லலாம்.

I. நமது தேசத்தின் எப்பிராஞ்சியத்திலாவது ராஜாங்கத்திற்கு விரோதமான கலகங்கள் கட்டுப்பாடுகள் ஏற்படும்பொருட்டு யத்தனங்கள் செய்யப்படுகிறதாக ராஜப்பிரதிநிதிக்கு தோன்றும் பட்சத்தில், அக்குற்றத்திற்கு ஆஸ்பதமாயுள்ளவர்களை உடனே விசாரணைக் குட்படுத்த அந்தந்தப் பிராஞ்சியங்களில் இச்சட்டம் அமுலுக்கு வரும். இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய குற்றங்கள் ராஜதுரோகம், கொலை, ஆயுதசட்டத்திற்கு விரோதம் முதலியன. இவைகளை பிரதிமாகாண இராஜாங்க அதிகாரிகள் விளம்பரப்படுத்தியபின்தான் இச்சட்டம் கொண்டு செலுத்தப்படுவதற்கு ஏதுவுண்டாகும். சட்டத்தில் அடங்கியுள்ள நடபடிகள்: (1) குற்றம் சாட்டப்பட்ட மனிதனை விசாரிப்பதற்கு மூன்று நியாயாதிபதிகள் சேர்ந்த ஒரு பஞ்சாயித்தை ஹைகோர்ட் நியாயாதிபதி நியமிக்கவேண்டும். விசாரணை நியமிக்கப்பட்ட பஞ்சாயித்தாரே எவ்வித ஆரம்ப விசாரணையின்றி நடத்தவேண்டும். பஞ்சாயித்தாரில் அதிகமானபேர் ஒரு ஆளை குற்றவாளியாக தீர்க்கலாம். ஆனாலும் கொலைத்தீர்ப்புக் கூற முடியாது. இந்தத் தீர்ப்புக்கு அப்பீல் கிடையாது. மேற்படி விசாரணை எங்கும் நடத்தலாம். சொல்லப்பட்டிருக்கும் குற்றங்களைச் செய்ய ஏவுதற்கு இடமாயுள்ள கலக எழுச்சி இந்தியாவின் எப்பாகத்திலாவது ஏற்பட்டிருக்கிறதாக கவர்னர் ஜெனரல் அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் அப்பாகங்களில் மேற்படி விளம்பரத்தை பிரசித்திசெய்யலாம். குற்றம் செய்திருக்கிற ஆளைக்குறித்து மாகாண சர்க்காரார் ஹைகோர்ட் நியாயாதிபதிக்கு தெரிவிக்கலாம். பிரியமானால் மேற்படி குற்றவாளியை சில நிபந்தனைகளுடன் ஜாமீனில் விடும்படி கட்டளையும் கொடுக்கலாம். இக்கட்டளையானதும் மேற்படி ஆளின் நல்நடக்கை விஷயமாய் விசாரிக்கும்படி மூன்றுபேர் சேர்ந்த ஒரு விசாரணைக் கூட்டத்தாரிடம் ஒப்புவிக்கலாம். இவ்விசாரணை பகிரங்கமாய் இராது. சாட்சி விசாரணை இல்லாமலும் இருக்கலாம். வாதுசெய்யும் வக்கீல்மார்களுக்கு இடமிராது. மேற்படி விசாரணைக் கூட்டத்தாரின் தீர்ப்புக்கு அப்பீலுமில்லை. விசாரணைக்கூட்டத்தார் கொண்ட அபிப்பிராயத்தை மாகாண சர்க்காரார் அறிந்து மேற்படி குற்றவாளிக்கு விதித்தக் கட்டளையை நிவிர்த்திக்கலாம், அல்லது ஊர்ஜிதப்படுத்தலாம், மேற்படி கட்டளை ஒருவருஷத்திற்குமேல் சிலாமணியாகாது. வேண்டுமானால் மறுபடியும் புதுப்பிக்கலாம். இந்தியாவின் எப்பிராஞ்சியத்திலாவது கலகத்திற்குரிய ஏற்பாடுகளும் ஜனங்களுடைய பாதுகாப்புக்கு அபாயம் நேரிடத்தக்க கட்டுப்பாட்டுக் குற்றங்களும் உண்டாவதற்கு ஏவுதல் செய்யப்படுகிறதாக கவர்னர்ஜெனரல் அவர்கள் அபிப்பிராயப்படும்போது அப்பிராஞ்சியத்தைக் குறித்து எல்லாருக்கும் தெரியும்படி விளம்பரம் செய்யலாம். பிறகு எக்குற்றவாளியைக் குறித்தாவது பிரதான நியாயாதிபதியிடம் தெரிவித்து அவர்கள் ஏற்படுத்தும் பஞ்சாயித்தார் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு வழக்காடலாம். மேலும் எந்த ஆளையும் எச்சரிப்பில்லாமல் பிடிக்கவும் கைதியாக்கவும் சந்தேகப்படும் இடமெல்லாம் பரிசோதனைக்குரிய ஸ்தானமாக்கவும் கட்டளை இடலாம்.

**ஆரிய திராவிடர் மண்டை ஓடு.**— ஆக்ரா ரெயில் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த உல்ப் (Wolf) என்பவர் பயானு என்னும் ஊரில் நதி மட்டத்துக்கு 35 அடி கீழே ஒரு மானிட மண்டை ஓட்டைக் கண்டுபிடித்தார். இதைப்போல இந்திய ராஜ்யத்து சுதேசிகளுடைய 500 மண்டையோடுகள் இங்கிலாந்து தேசத்து ரணவைத்திய கலாசாலையில் (Royal College of Surgeons) சேகரிக்கப்பட்டிருக்கின்றனவாம். இவ்வோடுகள் பூர்வீக ஆரிய திராவிடர்கள் காலத்து வசித்த மனிதர்களுடைய மண்டையோடுகளென்று ரூபிக்கப்படுகின்றது.

**ஜர்மனிய ரகசிய சேனை.**— சண்டை நிறுத்தின நாள் முதற்கொண்டு ஜர்மனிதேசம் தன் சேனைகளை உடைத்துவிட்டதாக வெளிப்படையாகக் காட்டினபோதிலும் ரகசியமாக பல இடங்களிலே புதிய சேனைகளையும், யுத்த ஆயுதங்களையும் சேர்த்து வருவதாகபிரான்ஸ் தேச மந்திரியின் சபைக்கு தெரியவந்திருக்கிறது. இன்டன்பர்க் என்னும் சேனைத் தளகர்த்தனே இதற்கும் தலையாக இருந்து நடத்துகிறதாக எட்டியிருக்கிறது.

**ஒரு தாயின் வீரத்தன்மை.**—சீமை தேசத்தில் ஒரு தாயானவள் வீடுகளைப் பெருக்கும் ஊழியஞ் செய்து தனது ஐந்து சிறு பிள்ளைகளை காப்பாற்றிவந்தாள். பிரதி காலையும் ஏழரைமணிக்கு வேலைக்குப் போவது வழக்கம். தான் திரும்புவதற்குமுன் சற்று ஒன்பதுமணிக்கு முன்னே மூன்று மூத்தபிள்ளைகள் பள்ளிக்கூடம் போய் விடுவார்கள். ஒருநாள் வெள்ளிக்கிழமை தான் வேலையைவிட்டு திரும்பினபொழுது தன் வீடு புகையால் நிரம்பி ஒரு மூலையிலிருந்து மம்மா என்று கூப்பிடுகிற தன்குழந்தையின் சத்தம் பிறக்கக் கேட்டாள். கேட்டவுடன் அந்த புகைக்குள் நுழைந்து தடவி அந்த குழந்தையை எடுத்து வெளியே கொண்டுவந்தாள். மற்ற குழந்தை படுக்கையிலே யிருப்பதாக அறிந்து மறுபடியும் நுழைந்து குழந்தையை கண்டு தூக்கி வெளியே கொண்டுவந்ததும் ஸ்மரணையற்று விழுந்துவிட்டாள். குழந்தைமேலிருந்த வஸ்திரம் முழுதும் எரிந்திருந்தபடியால் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் சேர்ப்பதற்கு முன் இறந்துவிட்டதாம்.

**வைத்திய சாஸ்திர விந்தை.**—பாரிஸ் தேசத்து (Dr. Valois Damien) டமென் என்னும் வைத்திய சாஸ்திரி ராஜ அனுமதிபெற்று க்ஷயரோகம், காசம் முதலிய வியாதிகளையுடைய 90 பேர்களை அழைத்துக்கொண்டு துலுக்க தேசத்தைச் சேர்ந்த ஜனோ என்னும் ஒரு இடத்தில் அவர்களை வைத்து, கடந்த யுத்தத்தில் சுகதேகிகளாக அப்போதப்போது மாண்ட 90 பேருடைய பிரேதங்களை கொண்டு வந்து வியாதியஸ்தர்களுடைய வியாதியுறுப்புகளாகிய ஈரல் முதலியவைகளை அறுத்து எறிந்து பதிலுக்கு இப்பிரேதங்களுடைய உறுப்புகளை வைத்து தைத்துவிட்டார். இம்முறையினால் அவர்களில் 40 பேர் பூரண சுகமடைந்தார்கள். மீதியானவர்களில் பத்துபேர் மாத்திரம்நஷ்டமடைந்தார்களாம். என்ன ஆச்சரியம்!

**கேய்ஸர் சக்கரவர்த்தி.**—இவர் உலாந்து தேசத்தில் தன் மனைவியுடன் ஜீவித்துவருகிறார். அவருடன் ஒரு ஜெனரல், ஒரு அட்ஜிடெண்ட், ஒரு டாக்டரும்; அவர் மனைவியுடன் ஒரு தோழியும் வசிக்க உத்திரவு. கெய்ஸர் பிரதிகாலையும் 7½-மணிக்கு எழுந்து ஜெபதபங்கள் செய்வார். பிறகு அரைமணி நேரம் உலாவித் தன் அறைபோய்ச் சேர்வார். வாசிப்பதிலும், சம்பாஷிப்பதிலும் நேரம் செலவழிப்பதோடு சுக பலத்திற்காக பலகைகளை அறுப்பார். தன் மனைவியினால் இக்காலத்தில் தனக்கு போதுமான ஆறுதல் கிடைக்கிறது. யுத்த விஷயமாய் நினைக்கும்போதெல்லாம் தான் இந்த யுத்தத்தின் பழி பாதகத்திற்கு காரணர் அல்லாதவராகவே நினைத்து வருகிறார். யுத்தத்திற்கு ருஷியாவே காரணமென்பது அவர் எண்ணம். ஆயினும் அவரை நியாயந்தீர்க்க பாரிஸ் கூட்டத்தார் தீர்மானித் திருக்கிறதாக செய்தி வந்திருக்கிறது.

**உலக சமாதான நடவடிக்கை.**—கடந்த ஏழு மாதங்களாக நமது கக்ஷிக்காரர்கள் பாரிஸில் கூடி பூர்த்திபண்ணின உடன்படிக்கை நிருபத்தை ஜர்மனியருக்கு கொடுத்து கையெழுத்துபோடக் கேட்டதின்பேரில் ஜர்மனியர் அதற்கு உடன்படாமல் சில நிபந்தனைகளை மாற்றி கொடுக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எல்லாம் சீக்கிரம் முடிவடையுமென்று நம்புகிறோம். வரப்போகிற சமாதான நாள் உலகத்திற்கே ஒரு விசேஷித்த உற்சவதினமாக இருக்கும். இங்கிலாந்திலே அந்நாளைக் கொண்டாட விசேஷித்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. நமது தேசத்திலும் அந்நாள் சிறப்பாக கொண்டாடப்படுமென்று நம்புகிறோம்.

**பெல்ஜியதேச பரிதாப நிலைமை.**—20 கோடி ஜனங்கள் பெல்ஜியத்தில் பிழைக்க வகையில்லாமல் சர்க்காரால் தினசரி ஆதரவு பெற்று ஜீவிப்பதாகத் தெரிகிறது. என்ன பரிதாபம்!

**ஆப்கனிஸ்தான் கலகம்.**—அமீர் அரசன் திடீரென்று நமது தேசத்தின்மேல் சண்டை தொடுத்ததற்கு சரியான காரணம் இன்னும் வெளியாகவில்லை. நமது சேனைகள் ஆப்கனிஸ்தானில் நுழைந்து சில இடங்களை பிடித்திருப்பதாக தெரிகிறது. இந்தியாவிலுள்ள சுதேச ராஜாக்கள் அனைவரும் நமது சக்ரவர்த்திக்கு போதுமான உதவி செய்து வருகிறார்கள்.

தற்காலம் ஆப்கானிஸ்தானில் சிம்மாசனம் வைத்திருக்கும் அரசன், பித்தம் தலைமட்டும் கொண்டு முற்கால சிநேகத்தையும் ஐக்கியத்தையும் மறந்து திடீரென்று ஒரு பெருஞ் சேனையுடன் யுத்தசன்னதராய் இந்திய இராஜாங்கத்தாரோடு போர்புரிய ஆரம்பித்து, முதலில் ஜெயிப்பவர்கள்போல் தோன்றி கடைசியாக அபஜெயப்பட்டு முதுகுகாட்டி அபயாஸ்தங்கூறி நிற்கின்றனர். ஒருக்கால் வெகு சீக்கிரத்தில் சிற்றரசின் நாடுகளைப்போலாகி "கொட்டினவாயில் அடங்கினது" போல் நிற்குமாம்.

**ஜெனரல் டவுன்சன்ட்.**—மெசொபதோமியாவில் குட் என்னும் இடத்தில் நமது, சேனைகளை வீரத்தனமாய் பாதுகாத்து நடத்தின ஜெனரல் டவுன்சன்ட் என்னும் போர்வீரன் நமது தேசத்துச் சேனைகளுக்குத் தளகர்த்தனாக ஏற்படப் போகிறார் என்று தெரியவருகிறது.

### பஞ்சாங்கம்.

1919 ஜூலை பஞ்சாங்கம்

பௌர்ணமி, 13உ, அமாவாசை, 27உ


| வாரம். | ஜூலை. | | | | | ஆனி—ஆடி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | 31 | 19 | 26 | 2 | 9 | 16 |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 | . |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 | . |

# MELLIN'S FOOD

TRADE MARK

TRADE MARK

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் விலையத்தை தபாற்கூலியுடன் சென்னை பிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 9941.

741

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

AUGUST, 1919.] PRICE, 1 PIE.—விலை, ௧ பை. [ஆகஸ்ற்றுமீ, 1919.

## LECTURE.

## III. பிரசங்கம்.

"மதியற்றவர்களாயிராதேயுங்கள்" Eph. v. 17.

காலத்தின் கூறு எவ்வாறிருக்கிறதென்று பார்த்தோம். காலத்தைப் பிரயோஜனப் படுத்துகிற விஷயத்தில் மதியூகிகளா யிருக்கவேண்டியது அவசியம். ஆகையால்தான் ஞானதிருஷ்டியடைந்த பவுலப்போஸ்தலன் நாட்களின் தன்மையையறிந்து "ஞானமற்றவர்களைப்போல் நடவாமல் ஞானமுள்ளவர்களைப்போல் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்தது என்றும்" "நீங்கள் மதியற்றவர்களாயிராமல்" என்றும் சொல்லியிருக்கிறார். நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் குறித்துக் கவலைத் தாழ்ச்சியாயிராமலும் நமது கடமையையும் இனியடையப் போகிற நிலைமையையும்பற்றி நிர்விசாரிகளா யிராமலும் சொஸ்த புத்தியுள்ளோராய் நடந்துகொள்ளப் பார்க்கவேண்டும். நிகழ்காலத்தின் கிருத்தியத்திற்குத் தக்க பலனாக நமது வருங்காலத்தின் நிலைமையுமிருக்கும். இப்பொழுது தூங்குகிறவர்களாயிருந்துவிட்டால் முடிவில் நிர்பாக்கிய ஸ்திதிக்குள்ளாவோம் என்பது நமக்குத் தெரியாததல்ல. "ஆதலால் தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்" என்று பவுல் சொல்லியிருக்கிறார். காலமறிந்து பயிரிடுவதுபோலும், காற்று முகமறிந்து பாய்மரம் நாட்டுவதுபோலும் நாம் இப்பொல்லாத நாட்களில் நமது கடமையை யுணர்ந்து தவணையாயுள்ள இக்காலத்தைப் பிரயோஜனப் படுத்துகிற விஷயத்தில் மதியீனர்களாயிராமல் ஜாக்கிரதையாயிருத்தல் நமது அழகு. இக்கால சம்பவங்கள் எந்த நிர்விசாரியையும் யோசிக்கும்படி ஏவுகிற தன்மையையுடையவைகளாயிருக்கின்றன. வேதத்தில் சொல்லியிருக்கிற பயங்கரமான "ஆண்டவரின் மகா நாளை" ஞாபகப்படுத்தும் சம்பவங்களாகவேயிருக்கின்றனவென்று நம்மில் அநேகர் நினைக்கிறோம், நம்புகிறோம், அப்படியே பிரசங்கித்து வருகிறோம். ஆகையால் நாம் சற்றுநேரம் "மதியுள்ளோர் யார், மதியற்றோர் யாரெனப் பார்ப்பதவசியம்.

1. மதியுள்ளோர் யாவர்?

(a) தங்களையும், தங்களின் கால ஸ்திதியையும், தாங்க ளினியடையும் நிலைமையையும் அறியும் தன்மையுடையோர்.

(b) தேவவார்த்தையின்படி நடப்போர்.

(c) விழிப்புடையோர்.

அறிவுடையோர், முதலாவது தன்னறிவு பிரதாபம்.—தன்னை அறிவோன் தலைவனை அறிவான். ஆதியில் ஆபிரகாம் தன் சுய ஸ்திதியை உணர்ந்தவனாய் "இதோ" தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன்—என்கிறான். மோசேயும் "தேவனை நோக்கி......நான் எம்மாத்திரம் என்கிறான். தாவீதும் "என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவம் எப்போதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்து உமது கண்களுக்கு முன்பாக பொல்லாங்கானதை நடப்பித்தேன். இதோ! நான் துர்க்குணத்தில் உருவானேன் என் தாய் என்னைப்பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்கிறார். ஏசாயாவும் "ஐயோ! அதமானேன். நான் அசுத்த உதடுள்ள மனுஷன்" என்று கதறுகிறார். யோபு மாமுனிவரும் "நான் தப்பி நடந்தது மெய்யானாலும் என் தப்பிதம் என்னோடேதானிருக்கிறது 19·4 என்றும் "நான் நீசன் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன். என் கையினால் என் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன்" என்று அறிக்கையிட்டார். யோவான்ஸ்நானகனும் "எனக்குப் பின் வருகிறவர் என்னிலும் பெரியவர், நான் அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் பாத்திரனல்ல" என்றும் "நான் சிறுக அவர் பெருக" என்றும் சாட்சிபகருகிறார். பேதுருவும் "ஆண்டவரே நான் பாவியான மனுஷன். நீர் என்னை விட்டுப் போகவேண்டும்" என்று ஓலமிடுகிறான். ஆயக்காரனும் "பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்கிறான். பவுல் அப்போஸ்தலனும் "பாவிகளிலெல்லாம் பிரதானமான பாவி நான்" என்று ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் நாம் எம்மாத்திரம். நாமும் நம்முடைய பாவத்தன்மையை அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டும். நாம் எந்த நிலைமையிலிருந்தோம் நம்முடைய பிறப்பு வளர்ப்பு எவ்வாறு என்றும், தற்சமயம் அடைந்திருக்கும் ஸ்திதியும் எவ்வாறு கிடைத்திருக்கிறதென்றும் அறிந்தால்தான் நாம் மதியூகிகள். நமது பாவத்தை நமக்கு அறிவிக்கிறவரும் உணர்த்துகிறவரும் பரம தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரே. தேவவாக்கின்படி நித்திய பிரசாதமாகிய அவரையே நாம் அடைதல் அவசரம். இல்லாவிடில் நம்மறிவு நமக்குண்டாகாது. இது திண்ணம்.

b. தேவ வார்த்தையின்படி நடப்போர்.—மத். 7. 21. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான். கர்த்தாவே! கர்த்தாவே என்றும் உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்றும் சொல்லுபவர்களைப் பார்த்து "நான் உங்களையறியேன்......என்னைவிட்டு அகன்று போங்கள்" என்பார். ஆனால் "நான் சொல்லிய இந்த வார்த்தையைக்கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ அவனை கன்மலையின்மேல் வீட்டைக் கட்டின (புத்தியுள்ள) மதியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். என்று உரைத்திருக்கிறார். ஆகையால் நம்மில் அநேகர் தேவசித்தம் இன்னதென்று அறியாமலும் தேவவார்த்தைகளுக்கு இசையாமலும் சுயவிருப்பம், சுய அபிப்பிராயம் நடத்துகிறபடி பணிவிடை செய்கிறவர்களாயும், மனிதருடைய சாக்ஷண்யத்திற்கு அஞ்சி, தேவவார்த்தைக்குக் கீழ்படிகிறதினாலுண்டாகும் துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் பின்னடைந்துபோகிற ஊழியர்களுமாயிருக்கிறோம். கிராமம், கிராமமாய்ச் சுற்றித் திரிகிறோம். எந்நோக்கத்தோடு அங்கும் இங்கும் சுற்றித்திரிகிறோம். இது நமது மனதிற்கும் தேவனுக்கும் நன்றாய்த் தெரியும். நம்முடைய இருதயமே நம்மைக் குற்றப்படுத்தாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். "நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால் தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்" என்று 1 யோவா. 5. 21 & 22-ல் வாசிக்கிறோம். ஆகையினால் நாம் சற்று யூகமுள்ளவர்களாய் நடந்து ஆண்டவரின் "கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறவர்களா யிருக்கவேண்டும். அ

வாறு செய்வதால் "நாம் வேண்டிக் கொள்ளுகிறதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். இதுவே தேவகட்டளை. அவருடைய கட்டளைகளில் நிலைத்திருக்கிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம். 1 யோ. 3. 22–24.

௯. விழிப்புடையோர்.—நம்முடைய வார்த்தையினாலும் ஜீவியத்தினாலும் விதைத்து வந்திருக்கிற இடங்களில் பிசாசானவனும் களைகளை விதைக்கிறவனும், விதைக்கக் கூடியவனுமாயிருக்கிறதினால் நாம் விழித்திருப்பது அவசியம் என்றும் சொல்லத் தேவையில்லை. விதைகளைப் பொறுக்கிப் போடக் கூடியவனும் அவனே. பிசாசானவன் சபையில் சேர்ந்திருக்கிறவர்களில் யாரை விழுங்கலாம் என்று சுற்றித்திரிகிறான். ஆகையினால் நாம் விழித்திருப்பது நமது கடமை. இப்படி யிருப்பது மதியுள்ள ஊழியனுக்கு அடையாளம்.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST.

## பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான், ஐயர் மொழிபெயர்த்தது

### வேவுகாண்டம்.

### 10. யூரியேல் வசனித்த படலம்.

காபிரியேலே! தீங்கும் அசுத்தமுமான யாதொன்று மிவ்விடத்தில் வாராதபடி காவல்பண்ணுவது உனது கடமையென் றறிந்துகொள். விழிப்பாயிரு. ஏனென்றால், இன்று மத்தியானத்தில் ஓர் ஆவி எனது வட்டாரத்தில் வந்து உன்னதமானவரின் கிரியைகளையும் விசேஷமாய் தேவச்சாயலின்படி உருவாக்கப்பட்ட மனிதனையும்பற்றி அதி வைராக்கியத்துடன் விசாரித்து ஏதேனுக்குப் போகும்வழியையுங் காட்டும்படி கேட்டான். அவன் விரும்பின பிரகாரம் வழியைக் காட்டினேன், வெகு துரிதமாய் ஆகாயத்தை ஊடுருவி பரதீசுக்கு வடபாரிசமாய் ஓர் மலையின் மீது போய்த் தங்கினான். வானுலகத்துக்கு அவன் ஓர் எதிரியாகவும் துராசையினால் மலைவப்பட்டவனாகவுங் காணப்பட்டான். எனது கண்கள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தன. ஆயினும் எனது பார்வைக்குச் சீக்கிரத்தில் மறைந்துபோயினன், இருண்ட நிழலானவிடங்களிற் சென்றதினால் நான் பார்க்கக் கூடாமற்போயிற்று. பாதாள லோகத்துக்குத் துரத்தப்பட்ட ஆவிகளிலொன்று அவ்விடத்திலிருந்து எப்படியோ தப்பி வீண் தொந்தரவுகளையும் வில்லங்கங்களையுமுண்டுபண்ண பார்க்கிறப்போ லிருக்கிறது. அந்த ஆவியைத் தேடிப்பிடிப்பது உன்னுடைய கடமையென்றறிந்து கொள்ளென்றான்.

### 11. காபிரியேல் வசனித்த படலம்.

செட்டைகளை அணிந்துகொண்டிருந்த யுத்த வீரன் இதற்கு மாறுத்தரமாக யூரியேலே! இன்று மத்தியான வேளையில் உனது கண்கள் வெகுதூரத்தில் பார்த்தது ஆச்சரியமல்ல, ஆயினும், தூதகாவலாளர்கள் காபந்துபண்ணு மிவ்விடங்களில்வானுலகத்திலிருப்பவர்கள் தவிர மற்றவர்கள் பிரவேசிக்கக்கூடாது. மேலும், உஷ்ணவேளையானதால் மேலுலகத்திலிருந்தொருவரும் வரமாட்டார்கள் வேறு ஆவிகள் யத்தனமாய் நமது வட்டாரத்தின் எல்லைகளைத் தாண்டி பழக்கவழியாய் உள்ளேசென்று சூட்சுமதேகங்களில்புகுந்துகொண்டால் அவ்வித ஆவிகளை நீக்கிவிடுவது வருத்தமானகாரியமென் றெனக்கு நன்றாய்த் தெரியும். ஆகிலும் எனது எல்லைக்குள்ளாக, நீ குறித்துப்பேசின அந்த ஆவி எங்கேயிருந்தாலும் பொழுது விடிவதற்குள்ளாக, தேடிப்பிடித்துக் கொள்வேன் என்றான்.

காபிரியேல் இப்படிச்சொல்ல, யூரியேல், மறுபடியும் ஓர் காந்தியின்மீது, தனது யதாஸ்தானமாகிய சூரியமண்டலத்துக்குச் சென்றனன். பூமி தன்னைச் சுற்றியோடுவதினால் சூரியன் மறைந்துபோவது போ லிருந்தது. அஸ்தகரி சோதிமயமாயும் நானாவிதவர்ணாலங்கிர்தமுள்ளதாயு மிருந்தது. பொழுதுபோயிற்று. குளிர்ந்த சாயரட்சை வாரம்பித்தது. எங்கும் மங்கின ஒளி வீசிற்று. சமஸ்தமும் வெள்ளிமயமாய்த் தோன்றின. அமைதலுண்டாயிருந்தது. மிருகாதிகள் பசிய புற்களின் மீது சயனித்துக்கொள்ளவும், பட்சிசாதிகள் தங்கள் கூடுகளி லடைந்துகொள்ளவும் போயின. வானம்பாடிகள்மாத்திரம் இராமுழுவதுந் தங்களின் இனிய குரலினால், விந்தையான பாட்டைப் பாடிக்கொண்டிருந்தன. ஆகாயமண்டலத்தில் நட்சத்திரக்கூட்டங்கள் பிரகாசித்தன. எல்லாவற்றிற்கு மேலாக, சந்திரன் வான அரசியைப்போல, நிகரில்லாத ஒளியை யெங்கும் வீசி இருண்ட ஸ்தலங்களிலெல்லாம் வெள்ளி நிறச் சால்வையை விரித்தாற்போ லிருந்தது.

### 12. மீளவும் ஆதம் வசனித்த படலம்.

இப்போது ஆதம் தன் கூட்டாளியாகிய ஏவாளைப்பார்த்து, எனது ரூபவதியே! இரவுகாலம் வந்திருக்கிறது, சமஸ்தஜீவப் பிராணிகளும் இளைப்பாறுகின்றன. நமக்கு இளைப்பாறுதல் அவசியமென்றுணருகிறோம். ஏனென்றால், கடவுளானவர் பிரயாசை, இளைப்பாறுதல் இவ்விரண்டையும் இராப்பகலைப்போல மாறிமாறி வரும்படி நியமனஞ்செய்திருக்கிறார். பனியும் அதிகமாய்ப் பெய்கிறது. தலைமயக்கமுண்டாகிறது. இதனால் நித்திரை நமக் கவசியமென் றறிகிறோம். சிருட்டிகள் ஒரு நாள் முழுமையும் வேலையின்றி சோம்பலா யிருப்பதினால் அவைகளுக்கு இளைப்பாறுதல் வேண்டுவதில்லை, மனிதனுக்கோ, சரீரத்தையும் மனதையும் அப்பியாசிக்கத்தக்க வேலைகளிருக்கின்றன. அதினால் அவனுடைய மகத்துவம் விளங்குகின்றது. தேவனும் அவனை மதிக்கிறாரென்று அறிகிறோம். நடமாடித் திரியும் நாற்கால் சீவன்கள், பறக்கும் பட்சிகள் முதலியவைகள் நமக்கு சரிசமானமானவைகளல்ல. காலையில் சூரியகிரணங்கள் புறப்படுமுன்னமே, நாமிருவருமெழுந்து நமது வேலையைத்தொடங்கவேண்டும். இந்த நந்தவனத்திலுள்ள விருட்சங்களின் நீண்ட கிளைகளையுங் கொப்புகளையும் நறுக்கி, அவசியமில்லாததும் வியர்த்தமுமான செடிகளையுங் கொடிகளையும் பிடுங்கி, தரையை சுத்தஞ்செய்து, புஷ்பாதிகள் லட்சணமாய் மலர்ந்து பரிமளிக்கவேண்டிய எதுக்களை கையாடி கரடுமுரடும், நிர்ச்சமமுமான விடங்களைப் பண்படுத்தி இவ்வாறு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வோமாக; ஆனாலிப்போது நமது இயற்கைப் பிரமாணத்துக்குக் கீழடங்கி இளைப்பாறுவோமாக என்றான்.

### 13. மீளவும் ஏவாள் வசனித்த படலம்.

இதற்கு ஏவாள் மாறுத்தரமாக, எனது எசமானனும் ஆண்டவனுமானவரே! நீர் ஆக்யாபிக்குஞ் சட்டத்துக்கு நான் மனப்பூர்வமாய் கீழ்ப்படிகிறேன். சதானந்தனாகிய கடவுளும் அவ்வாறே கட்டளையிட்டிருக்கிறார். தேவவாக்கு உமக்குச் சட்டமாயும் உம்முடையவாக்கு எனக்குச் சட்டமாயுமிருக்கின்றன. கீழ்ப்படிவதே ஓர் ஸ்திரிக்கு லட்சணமாயும், அவளின் பாக்கியமாயு மிருக்கின்றது. உம்முடன் ஸம்பாஷிக்கிற சந்தோஷத்தினால் காலம் போகிறதும் எனக்குத் தெரியவில்லை. காலபேதங்களை நான் உணரக்கூடவில்லை. காலை நேரத்தில் வீசும் இளங்காற்றும், பட்சிசாதிகளின் இனிய குரலோசைகளும், சூரியக்கிரணங்களினாலும், பனித் துளிகளினாலும் செழித்தோங்கும் மரங்கள், செடிகள், புஷ்பங்கள், கனிகள் முதலியவைகளும், மழைத்துளிகள் விழுந்தபின்பு தரையினின்று எழும்புகின்ற சுகிர்தவாசனையும், அந்திநேரப்பொழுதும் அமைதலுற்ற இரவும், பிரகாசம் நிறைந்த மத்தியானமும், பூந்தோட்டத்தையொத்த நட்சத்திரமண்டலமும், இவைகள் எல்லாம் என்னை ஆனந்திக்கச்செய்கின்றன. ஆயினும், குளிர்ந்த காலை சூரிய வொளி, வானமண்டலத்தின் சோதிகள், பட்சிகள், புஷ்பாதிகள், கனிவர்க்கங்கள் முதலியவைகளினா லுண்டாகுஞ் சந்தோஷம், உம்மை நான் அடையும் சந்தோஷத்துக்கு நிகரல்ல. உம்மோடுதான் அவைகள் எனக்கு இன்பமானவைகள், மேலும், பூமியின்கண் இருக்கும் சிருட்டிகள் யாருக்கென்று சந்தோஷத்தை யுண்டாக்குகின்றன? வானசோதிகள் யாருக்கென்று அலங்கிரதமாய்ப் பிரகாசிக்கின்றன? வென்றனள்.

தட்சணமே நமது ஆதித்தந்தையானவர், ஏவாளைப்பார்த்து தேவனுக்கும் மனிதனுக்கும் புத்திரியானவளே! பரிபூரண லட்சணங்கள் பொருந்தினவளே! நீ பார்க்கின்ற நட்சத்திரங்களுக்கு பூமியைச் சுற்றியோடும் ஓட்டங்களுண்டு. சமஸ்த தேசங்களுக்கும், இன்னமும் பிறவாதிருக்கும் எண்ணிறந்த சாதிகளுக்கும் ஒளியைக்கொடுக்கவும் ஆயத்தம் பண்ணப்பட்ட சோதிகளாயிருக்கின்றன. மேலும், இருள் மிச்சமாகுமிடத்து சீவிக்கும்வஸ்துக்கள் கெட ஏதுவுண்டு, ஒளியானது சுகிர்தமும் சுகுணமுமான வெப்பத்தினால் அவைகளை யுயிர்ப்பிக்கின்றன. நட்சத்திராதிகளின் வல்லமை: புல், பூண்டு, விருட்சங்களுக்கும் அவசியமாயிருக்கிறது, சில சமயங்களில் அவைகளின் பிரகாசம் தெரியப்படாமலிருந்தும் அவைகள் வியர்த்தமாய் பிரகாசிக்கிறதில்லை, ஆனால் சூரியவெப்பத்தினாலும் உஷ்ணத்தினாலும்; சமஸ்தமும் பூரணத்தையடைகின்றன. பூமியின்கண் மனிதர்கள் ஒருவரு மிராவிடினும், வானசோதிகளைப் பார்க்கவும், தேவனை மகிமைப்படுத்தவும் ஆத்துமாக்கள் குறைவின்றியிருக்கிறார்கள். நாம் விழித்திருக்கும்போதும் நித்தரிக்குஞ் சமயத்திலும் அனந்தங்கோடி ஆவிகள் பூமியின் எப்பககங்களிலுஞ் சென்று, தேவசிருட்டிகளைப்பார்த்து முடிவில்லாத துதிகளுடன் அவரை துதிக்கின்றார்கள். எத்தனையோ விசை நடுச்சாமங்களில், குன்றுகளிலும், அடர்ந்த காடுகளிலும், அடவிகளிலுமிருந்து புறப்படும் தூதர்களின் இனிய வோசைகளையும், பாட்டுகளையும், ஒருவருக்கொருவர் எதிரொலியிடுகிறதையுங் கேட்டிருக்கிறோம், மேலும் காவல்கார்க்குந் தூதர்களும் பிரிவு பிரிவாய் இனிய சப்தத்தோடும், இசைந்த சுரங்களோடும், ஏகோபித்து பாடி, தேவலோக வாத்தியங்களை முழக்கி, சிருட்டிகரை துதிப்பதினால் நாமும் பரவசப் பட்டவர்களாயினோம் என்றனர்.

(இன்னும் வரும்.)

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்.

சமாதான உற்சவம்.—இந்த விசேஷித்தகாலகிரமத்தை சரிவரக் கொண்டாடும்படி ஏற்பாடுகள் செய்ய சென்னை கவர்னர் ஒரு கூட்டம் கூட்டுவித்தார். பலபேர் பலவிதமான ஞாபக சின்னங்களை ஏற்படுத்த தெரிவித்தார்கள். ஞாபக வைத்திய சாலைகளை சென்னைபுரியிலும் ராஜதானியின் முக்கிய ஸ்தானங்களிலும் ஸ்தாபிப்பது உசிதமென கவர்னர் அபிப்பிராயப்பட்டார். மிக்க புகழத்தக்கதே. இத்துடன் ஏழைகளை அன்று போஷிப்பதும், பள்ளிப்பிள்ளைகளைக் களிப்பிக்கச்செய்வதும், சென்னையின் விசேஷ சாலைகளின் மூலமாய் பவனி போவதும் நடந்தேற ஏற்பாடாயிருக்கின்றன.



கவர்ன்மெண்ட் ஆர்டர்.—கிராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் பஞ்சமர் பிள்ளைகளை எவ்வித தடைபண்ணாமல் சேர்த்துக் கொள்ளும்படி சர்க்கார் உத்தரவு பிறந்திருக்கிறது. இதைச் சேரியிலுள்ளவர்கள் அறியாவண்ணம் மறைவுபடுத்த அநேக கிராமத்தார் தந்திரம் செய்கிறார்கள். இது நியாயமல்ல.

சென்னை உதவி—லங்கையில் தானிய குறைவு உண்டாய்விட்டதால் நமது ராஜதானிக்கு வரவேண்டிய தானியத்தில் 2,000 டன் பர்மா அரிசி லங்கைக்கு மாற்றப்பட்டது.

குருட்டுப்பையன். — கல்கத்தா கலாசாலையில் நொகேந்திர நாத்ஸென் என்னும் குருட்டுப்பையன் மெட்ரிகுலேஷன் பரீக்ஷை எழுதினதாக இப்பத்திரிகையில் தெரிவித்தோம். அவன் தேறிவிட்டானும். 200 ரூபாய் வெகுமதியுடன் மாதம் 50 ரூ. தர்ம சம்பளம் பெற்று மேல் வகுப்பிற்குப்படிக்க சிலாக்கியமடைந்தான்.

சக்ரவர்த்தித் திருமணத் திருநாள். — ஜியார்ஜ் சக்ரவர்த்தி திருமணம்புரிந்து 25 வருஷமாகிறது. (Silver Wedding) அதை சிறப்புப்படுத்த வைசிராய் செம்ஸ்போர்டு பிரபுனி இந்தியாவின் சகல ஜாதியான ஸ்திரீகளிடமிருந்தும் நன்கொடையாக $11\frac{1}{2}$ லக்ஷம் ரூபா சேகரித்திருக்கிறார்கள். சக்ரவர்த்தினி அதை அன்பாய் அங்கீகரித்ததுடன் அத்தொகையை கடந்த யுத்தத்தில் மாண்டோர், காயம் பட்டோர்களின் பிள்ளைகளுடைய கல்வி அபிவிர்த்திக்காகச் செலவழிக்கும்படியான பிரியத்தை தெரிவித்திருக்கிறார்கள்.

S.S.L.C. பரீக்ஷை. — இவ்வருஷம் இப்பரீக்ஷையில் தேறினவர்கள் மொத்தம் 1919 பெயர்கள். இவர்களில் பிராமணகுலம் 1,314, பிராமணரல்லாதோர் 430, கிறிஸ்தவர்கள் 133, மகமதியர் 40, பாரசீகர் 1, புத்தமதஸ்தர் 1.

கான்ஸாஸ் மாகாணம்.—அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலுள்ள கான்ஸாஸ் மாகாணத்திலே மதுபானம் யாதுகாரணத்தினாலும் விற்பனை செய்யாதபடி சட்டம் ஏற்பட்டு அநேக வருஷங்களாய் நிறைவேறிவருகிறது. அதினால் அப்பிராந்திய முழுவதும் சகல விஷயத்திலும் வீழ்வடைந்துவருகிறதாக அம் மாகாண கவர்னர் வெளிப்படுத்தியிருக்கிறார். தேசத்திற்கு நல்ல வருமானம் வரும் என்றாலும் அது குடிஜனத்தின் வாழ்வைக் குலைத்து அவர்களுடைய தேகபலத்தை ஒடுக்கும் என்பது அவர் அபிப்பிராயம். இந்துதேசத்தார்களும் இதை அறிந்து மதுபானத்தை முற்றிலும் நீக்கிவிடமாட்டார்களா என்பது அவர் பேராவல் என மதுபான விலக்குப் பத்திரிகை தெரிவிக்கிறது.

உலக சமாதான உடன்படிக்கை பத்திரம். கடந்த ஜூன்மாதம் 28-ம் தேதி சனிக்கிழமை 4-மணிக்கு வார்சேல்ஸ் பட்டணத்தில் சமாதான கான்பரன்ஸுக்கு முன்பாக ஜர்மானிய பிரதிநிதிகள் பத்திரத்தில் கையொப்பமிட்டார்கள். அப்பத்திரத்தின் நிபந்தனைகளிலொன்று கேய்சர் சக்கரவர்த்தி நியாயம் தீர்க்கப்படவேண்டியது என்பதே. இதை லண்டன் பட்டணத்தில் நிறைவேற்ற யோசித்திருக்கிறார்கள்.

ஜர்மானிய யுத்த கப்பல்களின் முடிவு.—யுத்தம் நிறுத்தப்பட்ட துவக்கத்தில் இந்த யுத்த கப்பல்கள் யாவும் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்தாகும்வரைக்கும் அங்கிலேயருடைய சமுத்திரக் கரைபக்கமாய்ச் சேர்த்துப் பாதுகாக்கபட்டு வந்தன. உடன்படிக்கைப்பிரகாரம் அவைகள் நேசகட்சியார் பக்கம் சேர்க்கப்படவேண்டுமென்று தீர்மானித்துவிட்டபடியால் அப்பத்திரத்தில் கையெழுத்துப் போடுகிறதற்குமுந்தி அவைகளில் ஒன்றுகுறைய எல்லாபோர்க் கப்பல்களையும் நேசக்கட்சியார் அடையாதபடி சமுத்திரத்தில் அமிழ்த்துவிட்டார்கள்.

சிங்கப்பூர் கலகம்.—கடந்தமாதம் 19-ம் தேதி சீனர்களுக்கும் ஜப்பானியருக்கும் சிங்கப்பூரில் இராப்பகலாய் நடந்த ஒரு பெருங்கலகத்தில் பொருள் நஷ்டம் உயிர் நஷ்டம் முதலிய பலநஷ்டங்கள் உண்டானது. போலீஸார் கவர்னரவர்களின் உத்திரவின்பேரில் கலகத்தை அடக்கும் பொருட்டு உபயோகித்த அக்கினியாஸ்திரங்களின் கூறாக அநேக சீனர்களும் தமிழரும் காயப்பட்டு மாண்டுபோனார்கள்.

சவரனின் விலை.—நாளது வருஷம் மேமாதம் 30-ம் தேதி பிரசுரமான சர்க்கார் விளம்பரத்தினால் சவரன் ஒன்றுக்கு 12 ரூ. 4 அ. 6 பை விலையென அறிந்துகொள்ளுகிறோம். அப்படியிருந்தும் மார்வாடி முதலியோர் 20 ரூபாயிக்குமேல் சவரனை விற்கிறதாகத் தெரியவருகிறது.

கேய்சரின் விசாரணை. — ஜர்மனிய மந்திரியாகிய கௌன்ட்வான் பெத்மன் ஹால் வெக் என்பவர் கெய்சரின் ராஜாங்க நடத்தைக்கெல்லாம் தாமே காரணர் ஆனதால் கெய்சர் ராயனுக்கு பதிலாய் தன்னை விசாரணைக்குட்படுத்தி தீர்ப்பளிக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

அப்பிராமணச் சங்கம்.—இச்சங்கம் சென்னை சக்கரைசெட்டியார் அவர்களை இங்கிலாந்தில், அச்சங்கத்தின் அபிவிர்த்தியையொட்டி உபந்நியாசிக்கும் பொருட்டு நல்வழிவிட்டனுப்பி யிருக்கிறார்கள்.

குறவர் ஸ்தலம்.—சென்னை இராஜதானியில் கொள்ளைக்குப் பேர்போன குறவஜாதியார் ஆத்தூர் கீழ்நாட்டிலுள்ளோர், மேற்படி ஆத்தூர் ராமஸேஷ ஐயரவர்கள் வெகு சிரத்தையோடு பணச்சேகரஞ் செய்து மேற்படி குறவர்களுடைய சீர்கேட்டை நீக்கி நல்லொழுக்கத்தை நாடி திரண்டநிலம் சம்பாதித்து நீர்வளத்துக்குறிய ஏற்பாடுஞ்செய்து அந்நிலத்தில் அவர்கள் வாசம் செய்யும்பொருட்டு ஏற்பாடு செய்திருக்கிறார். அவர்களுடைய பிள்ளைகளுக்கும் பாடசாலை ஏற்பாடாகி 27 பள்ளிப் பிள்ளைகளும் படிக்கிறார்கள். இவ்வித ஏற்பாடுகள் பலபாகங்களிலும் துஷ்டர்களின் சீர்திருத்தத்திற்கென்று செய்யப்படுமாகில் நமதுதேசம் சீக்கிரத்தில் நல்வழிப்படும்

பஞ்சமர் சங்கம்.—இச்சங்கம் சிதம்பரத்தில் நந்தனார் மடத்திற்கு எதிரில் ஒரு பெரிய பந்தலில் கூடிற்று. கனம்: ஜி. எப். பாடிசன், ஐ.சி.எஸ் என்பவர் அக்கிராசனாதிபதியாயிருக்க அநேக சர்க்கார் உத்தியோகஸ்தர் வந்திருந்தனர். இக்கூட்டத்துக்கு வந்த பஞ்சமரின் தொகை பதினாயிரம்பேர். இதை நடத்துகிறவரின் நாமம் சுவாமி சதாச்சனந்தர் என்று சொல்லுகிறார்கள். அச்சங்கத்தில் அநேக விஷயங்கள் பேசினபிறகு சங்கத்தலைவர், பஞ்சமரின் தீண்டாமையை நீக்குவது சர்க்காராருக்கு அசாத்தியமென்றும் அது வருணாச்சாரம் ஆனதால் தாங்களும் தங்களுக்கு உயர்ந்த ஜாதியாருமே அதை ஒழுங்குப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும்; தங்கள் வேலை சம்பந்தமாயுள்ள கூலியையொட்டி ரெவினியு அதிகாரிகள் விசாரணைச்செய்தும் எவ்வித உபாயமும் சொல்ல இயலாதவர்களா யிருக்கிறார்களென்றும்; ஆனால் கவர்ன்மெண்டார் பஞ்சமர்களை பலவித பகிரங்க உத்தியோக துரைகளிலிருந்து நீங்குவதற்கு சம்மதியார்களென்றும் அப்படி எங்கேயாவது நடக்கும்பக்ஷத்தில் அதை அடக்குவார்களென்றும் சொல்லிக் கூட்டத்தை முடித்தனர்.

அரிசிக்கப்பல் நஷ்டம்.—ஜூன்மாதம் கடைசி ஞாயிறு அன்று மௌல்மீனிலிருந்து பதினாயிரம் டன் அரிசிமூட்டைகளோடு கல்கத்தா திசையை நோக்கிவந்த வார் பட்பீன் என்னும் கப்பல் அம்ஹார்ஸ்ட் ரீப் என்னும் கரையோரமாய் வந்து தாக்கிப் பெரிய நஷ்டமுண்டானது. 40 பேருக்கு உயிர் சேதமும் நேரிட்டது.

ஜெயக்கடன்.—அடைந்த வெற்றியையொட்டி நமது இந்திய ராஜாங்கத்தார் பெருத்த பொருளுதவியைநாடி வெற்றிக்கடன் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள் அதற்கு நாஷனல் பாங்க் ஆப் இந்தியா 18 லக்ஷம் பவுன் கொடுத்திருக்கிறார்கள்.

கேய்சரின் மகன் உரைத்த மொழி. — தகப்பனோடுகூட இருந்த மகன் ஓடி ஒளித்துக்கொள்ள எத்தனித்து, சுடர்ஸ்வியிலுள்ள வெரிங்கன் என்னும் தீவில் வந்துசேர்ந்தனன். அவ்விடத்திலிருந்து நிறைவேறியுள்ள உடன்படிக்கையின் நிபந்தனைகளினால் வருத்தமும் பத்துவருஷத்திற்குள் இன்னும்ஒரு பெரிய போரும் விளையுமே யொழிய வேறல்ல. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா என்னும் நாட்டிற்கு தற்கால உடன்படிக்கை முடிவினால் திருப்தியேயொழிய வேறல்ல. தன்தகப்பன் ஜர்மனிதேசம் திரும்பாரென்றும், தாம் அந்த யுத்தத்திற்கு காரணர் அல்ல என்றும் எவ்வித விசாரணை கூட்டத்திற்கும் இணங்காரென்றும், இணங்குவதைவிட முதலில் சாவாரென்றும், தன்னை குறித்தோவெனில், ஜர்மனிய தேசத்திற்குத்திரும்பி சைலீசியா என்னும் இடத்திலுள்ள தன் சொந்த ஜமீனில் இருக்கப்போகிறதாகச் சொன்னாராம்.

ஆப்கானியரின் யுத்தம்.—நமது ஆங்கிலேய படையும் நமது இந்திய படையும் வெகு மும்முரமாயும் அதிகமாயும் சகல யுத்த ஆயுதங்களுடன் ஆப்கானிய திசையை நோக்குகிறபடியால் அதை அறிந்த ஆப்கானியர் பயந்து நடுங்கி தங்கள் ஜெபம் ஓங்காதென்றெண்ணி ஒருசமயம் ஆங்கிலேயரே தங்கள் தேசத்தைப் படை எடுத்து ஜெயிப்பார்களென்று சந்தேகங் கொண்டிருக்கிறார்களாம். ஆப்கானியர்களுக்கு யுத்தானுபோகமே இடையாது. வெகுசீக்கிரத்தில் சமாதான உடன்படிக்கைசெய்து கொள்ளும்படி கோருகிறார்கள்போலும்.

பிக்கனீர் மகாராஜா.—உலக சமாதான சங்கத்திற்கு அழைக்கப்பட்டவர்களில் இவர் ஒருவர். இந்தியாவிற்குத் திரும்பி, லேடி செல்ம்ஸ்போர்ட் துரைசாணி அவர்கள் பிரயாணம் செய்து வரும் கப்பலில், தாங்களும் வருகிறார்கள்.

போர் உதவி.—மேஹார் ராஜாவும், கூர்வார் நவாப்பும், தௌவேஜர் பீகமும் தங்கள் ராஜ்யத்தின் வருமானத்தை எல்லாம் ஆப்கானிய யுத்த சம்பந்தமாய் நமது இந்திய சர்க்கார் வசம் ஒப்புவித்திருக்கிறார்கள். இதுவல்லவோ ராஜா விசுவாசம்.

## பஞ்சாங்கம்.

1919 ஆகஸ்ற்று பஞ்சாங்கம்

☉ பௌர்ணமி, 11௨, ● அமாவாசை, 25௨.

| வாரம் | ஆகஸ்ற்று. | | | | | ஆடி—ஆவணி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | 31 | 3 | 10 | 17 | 24 | 16 | 19 | 26 | 2 | 9 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |


# MELLIN'S FOOD







FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor
THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

விளம்பரம்


ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டியோர் விலாசத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மெமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 10162.




Registered No. M. 442.




# சத்திய தூதன்.

SEPTEMBER, 1919.] PRICE, 1 PIE.—விலை, க பை. [செப்டெம்பர், 1919.

## LECTURE.

### III பிரசங்கம்.

(தொடர்ச்சி.)

"மதியற்றவர்களாயிராதேயுங்கள்"
எபேசி 5. 17.

b. எதிர்பார்க்கிறவர்கள்.—பரம மணவாளன் வருகிற சமயமானதால் மணவாட்டியின் ஸ்தானத்திலிருக்கிற நாம் யாவரும் புத்தியுள்ள கன்னிகைகளைப்போல் விழித்திருக்க வேண்டுமல்லவா. இக்காலமானது கடைசிக்காலத்திற்குரிய அடையாளங்களையும் அற்புதங்களையு முடையதாய்த் தோன்றுகிறதினால் ஆண்டவராகிய ஆத்துமநாதன் வருங்காலம் வெகு சமீபத்திலிருக்கிறதென்று விளங்குகிறது. ஆகையால் நாம் யாவரும் மதியூகிகளுக்குரிய விழிப்புள்ளோராய் இருந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திப் பொல்லாத நாட்களின் பலனாகிய பற்கடிப்புக்கும் அழுகைக்கும் தப்பித்துக் கொள்ளவேண்டும். விழிப்புள்ள கன்னிகையினிடத்திலிருந்த எண்ணமெல்லாம் மணவாளனைப் பற்றியதே. அவ்வாறு நாமும் கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசமுள்ளோராயும் "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்னும் தேவகட்டளைக்கு இசைய நாம் ஜெப சிந்தையுள்ளோராயும் இருக்கவேண்டும். ராணுவ உத்தியோகஸ்தன் போராயுதங்களைத் தரித்துக்கொண்டு யுத்த முகத்திலிருக்குமாப்போல் நாமும் பொல்லாத ஆவியின் சேனைகளோடு தீங்கு நாட்களாகிய இக்காலங்களில் எதிர்க்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையணிந்து ஆயத்தமுடையோராயிருக்கவேண்டும். ஆயத்தப்புருஷன் ஓட்டத்தில் ஓடுகிறவனைப்போல் பாரமான யாவற்றையும் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு இயேசுவை நோக்கிக்கொண்டே தனக்கு முன் வைத்திருக்கும் சந்தோஷத்தின் பொருட்டு சிலுவை சுமந்தோனாய் விளங்குதல் விழிப்புக்கடையாளம்.

c. சத்தமிடுகிற ஜாமக்காரர்.—விழிப்புள்ளோன் காவலாளியானதால் அவன் காத்திருந்து நேரிடக்கூடிய ஆபத்தான காரியத்தை அறிவிக்கவேண்டும். ஏசாயா 21. 5 & 6-ல் "ஆண்டவர் என்னைநோக்கி நீ போய் காண்பதைத் தெரிவிக்கும்படிக்கு ஜாமக்காரனை (விழிப்பாளியை)வை அவர்கள் உரத்த சத்தமாய் சமாசாரத்தைக் கூறியறிவிக்க வேண்டியவர்கள்." ஆகையால் ஏசா. 52. 8-ல் "உன் ஜாமக்காரனுடைய சத்தங் கேட்கப்படும். அவர்கள் சத்தமிட்டு ஏகமாய்க் கெம்பீரிப்பார்கள்" என்று ஜாமக்காரனுடைய வேலையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. யோவான் ஸ்நானகனும் தம்மைக் குறித்து "வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்" என்கிறார். எரேமியா தீர்க்கதரிசியும் 6. 17-ல் "நான் உங்கள்மேல் காவலாளரை வைத்து எக்காள சத்தத்திற்குச் செவிகொடுங்களென்று சொன்னேன்" என்கிறார். 31. 6-ல் "எழுந்திருங்கள் சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறும் (உரத்த சத்தம் செய்யும்) காலம் வரும்" என்றும் வாசிக்கிறோம். எசேக்கியேல் தீர்க்க தரிசனத்தில் 3. 17. ஜனங்களை எச்சரிக்கக் கருதி "மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக" என்று தேவன் திருவுளம் பற்றுகிறார். 33-ம் அதிகாரம் முழுவதும் எச்சரிக்கும் வேலையைக் குறித்து வாசிக்கிறோம்.

விழிப்பாளிகளாகிய ஜாமக்காரர்கள் மதுபான வெறி கொள்ளாமல் தெளிந்த புத்தியுள்ளோராயிருத்தல் அவசியம். 1 பேது. 4. 7 "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளோராயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதை யுள்ளவர்களாயிருங்கள்" என்றெழுதியிருக்கிறது. ஆகையால் தேவப்பணிவிடையிலமர்ந்திருக்கிற நாம் யாவரும் மதியூகிகளுக் குறிய விழிப்புடைய ஜாமக்காரத் தொழிலாளிகளானதால் நாமிருக்கிற ஸ்தானங்களில் ஜனங்களுக்கு வரப்போகிற காரியங்களையும் காலத்தின் கொடுமையையும் எடுத்துரைப்பதும், உரத்த எக்காள சத்தமாய்க் கூறுவதும், சமயோசிதமாய் எச்சரிப்பதும் நமது கடமை. மேலும் இத்தொழிலையுடைய நாம் எப்பொழுதும் தெளிந்த புத்தியுள்ளோராயிருப்பதற்கு கிஞ்சித்தேனும் மதுபான வெறிகொள்ளாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்வதும் நமதுமேல் விழுந்திருக்கிற பெரும்பாரம் என்பதை மறவாதிருத்தலும் அவசியம். "ஆகையால் மதுபானவெறி கொள்ளாமலிருங்கள்" என்று பவுலப்போஸ்தலனும் வெகு திட்டமாய் எழுதியிருக்கிறார். நம்மை நாம் சோதித்துப்பார்ப்பது மெத்த யுக்தமாயிருக்கிறது. தற்சோதனை செய்தல் நற்பலனை விளைவியாமற் போகாது. இதற்கு அருள் புரிகிற நமதாண்டவரிடம் நெருங்கிக் காத்திருப்பது அவசியம். நமது யதாஸ்திதியை நமக்கு எடுத்துத் தெளிவிக்கிறவர் ஆவியானவராதலால் நாம் தேவவாக்குப் பிரசாதமாகிய பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளல் அத்தியந்த அவசரம் என்று சொல்லவும் வேண்டியதில்லை. இந்த சத்தியமும் உங்களுக்குத் தெரியாததல்ல.

(இன்னும் வரும்.)

## MILTON'S PARADISE LOST.

### பாதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

வேவு காண்டம்.

14. ஆச்சரமஞ் சேர்படலம்.

இவைகள் நிகழ்ந்தபின் ஆதாமும் ஏவாளுங் கைபிடித்து ஆனந்தம் நிறைந்த தங்கள் ஆச்சிரமத்துக்குச் சென்றனர். இவ்வாச்சிரமம் சமஸ்தமுஞ் சிருட்டிக்கப்பட்ட காலத்திற்றானே மனிதனுடைய நன்மைக்கென்று அடர்த்தியான சோலையின் மத்தியில் வைக்கப்பட்டிருந்தது. அதின் பக்கங்களில் லரால் மரங்களும் மர்ட்டில் மரங்களும் நிழலிட்டன. பசுமையான புல்லும் வளர்ந்திருந்தது. ரோஜா, மல்லிகை, கஸ்தூரி, சாமந்தி முதலிய புஷ்பாதிகள் அச்சோலையை அலங்கரித்தன. அப்பூஞ்சோலையின் தளவரிசையும் விலையுயர்ந்த கற்களினால் சமைக்கப்பட்டுக் குரோக்கஸ், ஐயேசிந்து முதலிய புஷ்பங்களினால் பாவப்பட்டிருந்தது. பட்சி

பூச்சியும், புழுவும், இச் சோலைக்குள் செல்வது கூடாமையாயிருந்தது. அவ்வளவாய் மனிதனுக்கு அவைகள் பயந்திருந்தன. இக் குளிர்ந்ததும் நிழலமர்ந்ததும் பலவர்ண புஷ்பங்களினால் ஜோடிக்கப்பட்டதுமான பூஞ்சோலையில் ஏவாள் தனது மஞ்சணமெத்தையைப் போட்டிருந்தனள். புஷ்களமான இச்சோலையில் தூதர்களின் பாட்டையுங் கேட்டு ஆனந்தபரவசமடையவு மேதுவாயிருந்தது. நிர்வாண சகிதராயிருந்தனர். அழகில் ஏவாள் நிகரற்றவளா யிருந்தனள். வாசனைப் பூண்டுகள், புஷ்பாதிகள் எப்பக்கத்திலும் அவர்களைச்சுற்றி பரிமளித்தன.

இருவரும் தங்களின் ஆச்சிரமத்துக் கருகில் வந்து சற்றேநின்று, வானத்தையும் பூமியையும் ஆகாயவிரிவையும் நட்சத்திராதிகளையும் உண்டாக்கின கர்த்தனைப்பணிந்து, சர்வத்துக்கும் அதிபதியே! இளைப்பாறுவதற்கு இராவையும், வேலைசெய்வதற்குப் பகலையுமுண்டுபண்ணி யிருக்கிறீர். பட்சத்துடன் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து குறிக்கப்பட்ட வேலையைமுடித்து சந்துஷ்டியடைகிறோம். இதுவே எங்கள் பாக்கியத்துக்குக் கிரீடமாயுமிருக்கிறது. இவ்வமிர்தம்போன்ற விட்த்தின் இனிய பதார்த்தங்களை நாங்கள் அனுபவித்து முடியவில்லை. அனுபவிக்கத் தக்கவர்களுமில்லை ஆயினும், எங்களின் சந்ததியார் பூமியை நிரப்பவும் பகலிலும் இராவிலும் உம்மைப்பாடவும், நீடூழிகாலம் உமது மகிமையைப் பிரசித்தஞ்செய்யவும் அருள்புரிவீராக வென்றனர்.

இவ்வாறு சொல்லி யாதொரு அநுஷ்டானமுமின்றி உட்பிரவேசித்தனர். சச்சிதானந்தக் கடவுளுக்குச்சுத்த ஆராதனைமாத்திரம் பிரீதியாயிருக்கிறது. பளுவான அங்கிகளைத் தரித்து பூஜிப்பது அவசியமல்ல. இருபேரும் கைபிடித்த வண்ணமாய் உள்ளேசென்று அமரிக்கையாய் நித்திரைசெய்தனர். ஆதாம் தன்னுடைய பதிவிரதைப் பத்தினியைவிட்டுப் பிரியவுமில்லை, ஏவாள் தன் புருஷோத்தமனுக்குச் செலுத்தவேண்டிய சோடச உபசாரங்களில் யாதொன்றுங் குறையவுமில்லை. சில வஞ்சகர்கள், பிரம்மச்சாரியாய் சீவிப்பது குருதத்துவத்துக்கும் பரிசுத்த தன்மைக்கும், குற்றமற்ற நிலைமைக்கும் ஏற்றதென்று வாதாடுகிறார்கள். தேவனோ இதைச் சிலருக்குக் கட்டளையாயும் சிலருக்கு மனஇஷ்டப்படியேயும் விட்டிருக்கிறார். நமதுச் சிருட்டிக்கர்த்தன் நாம் பலுகவும் பெருகவுஞ் சித்தமாயிருக்க—எவன் அதை ஆகாதென்று விலக்கக் கூடும்? ஆம், மனிதனுடைய அழிவுக்குக் காரணமாயுந் தேவனுக்கும் மனிதனுக்குஞ் சத்துருவாயுமிருப்பவனே அப்படி செய்வான்.

"ஓ பாணிக்கிரகணமே! உன்னை வாழ்த்துகிறேன். உனது நேசம் என்றும் நிலைத்திருக்கக்கடவது. ஆராய்ந்தரியக்கூடாத இரகசியமே! புத்திர சந்தானத்துக்கு நியாயமான முறையே! பரதீசின் சிலாக்கியமே! உன்னை வாழ்த்துகிறேன். உன்னாலேதான் துர் இச்சை மனுப்புத்திரரிலிருந்து துரத்தப்பட்டு மிருகங்களுக்குள் சென்றது. உன்னாலேதான் நீதியும் பரிசுத்தமும் நியாயமும் உண்மையும் நிறைந்த குடும்பங்களும் இனசம்பந்தங்களுமுண்டாயின. தந்தை, தாய், புத்திரன், புத்திரி, சகோதரன், சகோதரி முதலிய பாந்தங்களுண்டாயின. உன்னைப்பற்றிக் குறைவாயுந் தாழ்வாயும்பரிசுத்தவிடங்களுக்கு அடுத்தவளல்லவென்றும் நான் எழுதத்துணியேன். இல்லற சுகானுபவங்களெல்லாம் உன்னிலிருந்து உற்பத்தியாகின்றன. உன்னுடைய மஞ்சம் பரிசுத்தமும் பதிவிரதாத்தன்மை பொருந்தியதென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறதே. சம்மன்சுகளும் மகாத்துமாக்களும் அவ்வகையாகவே உன்னை கையாடினர். ஆனால் துராசையும் மன்மதப்பிராந்தியும் மனிதர்களில் எழும்பும்போது, வேசிகள், விபசாரிகள் கூட்டத்தைநாடி சுத்தமான நேசத்தை அசுத்தமாக்கிக் கொள்ளுகின்றனர்."

ஆதாமும் ஏவாளும் பட்சிகளின் இன்பத் தொனிகளைக் கேட்டுச் சந்துஷ்டியடைந்து ஒருவரையொருவர் ஆலிங்கனம்செய்தவண்ணமாய் நித்திரையடைந்தனர். பொழுதுவிடியுந்தருணத்தில் அவர்களின் திறந்த மேனியின்மீது புஷ்பமாரி பொழிந்தது. "ஓ பாக்கியவாளர்களான, ஸ்திரிபுருஷரே! நீங்கள் பெற்றிருக்கும் அறிவுக்கு மிஞ்சின அறிவு வேண்டுமென்று விரும்பாம லிருந்தீர்களேயானால் எந்நாளும் இவ்வித பாக்கியநிலைமையிலே யிருப்பீர்கள்."

## 15. சேராபீன்கள் வினவுபடலம்.

இப்போது நடுச்சாமமானதால் சேராபீன்கள் தங்கள் தங்கமயமான விருப்பிடங்களைவிட்டு வழக்கப்பிரகாரம் ஆயுதங்களைத்தரித்துத் துரிதமாயோடிவந்தனர். ஏதேனைக் காவல்பண்ணும்பொருட்டு நிரைநிரையாம் அணிவகுத்து நின்றனர். காபிரியேல் தனக்கிரண்டாவது அதிகாரஸ்தனைப்பார்த்து, "அசாவேலே! அணிவகுத்துநிற்கும் தூதராணுவத்தில் ஓர் பவுஞ்சை நீ நடத்திப்போ. அவர்கள் ஏதேனின் தென்பாரிசமாய் உலாவவேண்டும். மற்றொரு பவுஞ்சு வடபாரிசமாய்ச் சுற்றிவரவேண்டும். இருபவுஞ்சுகளும் திட்பநுட்பமாய் ஒவ்வொருவிடத்தையுமாராய்ந்து மேற்றிசையில்வந்து சந்திக்கட்டும் என்று வலியுறுத்திச்சொன்னான். ஓர் நொடிப்பொழுதில், அக்கினிச்சுவாலைகளை வீசிக்கொண்டு இரண்டு ராணுவப்பவுஞ்சுகள் ஈட்டியுங் கேடகமுமாக வடதென்பக்கங்களை சுற்றிப்பார்க்கப் புறப்பட்டனர். இதுவுமன்றி சமீபத்திலிருந்த யுக்திசாலிகளான இரண்டு தூதப்பிரதானிகளைப்பார்த்து" இத்தூரியேல், சீயோன் என்பவர்களே உங்கள் செட்டைகளை விரித்து பறந்தோடி இந்த நந்தவனத்தை நன்றாய்ப் பரிசோதியுங்கள். ஒவ்வொரு மூலையையும் ஆராயுங்கள். விசேஷமாய் சௌபாக்கியவான்களாய் வசிக்கு மிரண்டு அலங்கிர்த சிருட்டிகளிருக்கும் ஸ்தானத்தை கூர்மையாய்ப் பார்வையிடுங்கள். ஓர்வேளை அவர்க ளிச்சமயத்தில் அசந்தநித்திரையடைந்து யாதேனுமோர்சேதமின்றி சுகித்திருப்பார்கள். ஆயினும் இன்று அஸ்தகிரியிலிருந்து பறந்துவந்த யூரியேல் தூதன், ஓர் துராவி அதலலோகத்தின் தாப்பாள்களை முறித்து ஒடிவந்து, சதியோசனையுடன் இவ்வுத்தியானத்தைச் சுற்றிவேவு பார்த்துக்கொண் டிருந்ததாகவும் அறிவித்திருக்கிறான். இவ்வாறு சம்பவிக்குமென்று கொஞ்சமென்கிலும் யோசித்தோமா? அவ்வித துராவியைக் கண்டநிமிஷத்திலே பிடித்து பலமானகட்டுகளுடன் என்னண்டைக்குக் கொண்டுவரப் பார்த்துக்கொள்ளுங்களென்றான்.

## 16. வேதாளம் பிடியுண்டபடலம்.

தட்சணமே, சந்திரனின் ஒளியையும் மங்கச் செய்கின்ற கிரணங்களை வீசிக்கொண்டிருக்கின்ற ராணுவபவுஞ்சுகளை தூதாதிபதிகள் நடத்தி, அத்தோட்டத்திற்சென்று எங்கும் ஆராய்ந்து, கடைசியில் பிடிக்கவேண்டுமென்றிருந்த துராவியையும் பிடித்துக்கொண்டனர். அவன் ஓர் தவளைவடிவம் பூண்டு ஏவாளின் காதண்டையில்வந்து ஏதோ ஓர் இரகசியம்சொல்பவனைப்போலக்காணப்பட்டனன். மேலும் அவன் தன்னுடைய பேய்த் தந்திரங்களினால் வீண்தோற்றங்கள்நிறைந்த சொப்பனங்களை மனதிலுண்டாக்கச்செய்து அவர்களைச்சுற்றிலுமிருந்த ஆகாயத்தை விஷமுள்ளதாக்கினான். மனவருத்தம், திர்ப்தியின்மை, பெருமை, வீண் எண்ணம், தகாத ஆசை முதலியவைகளையு முண்டாக்கினான். இவனை இத்தூரியேல் தனது ஈட்டியின்முனையினால் தொட்டான். வானுலகத்தின்தூய்ய ஆவிகள் இரண்டகஞ்செய்யுந் துராவிகளைத் தொட்ட மாத்திரத்தில் அத்துராவிகளின் சுயநிலைமைவெளிப்படும். அவ்வாறே அவன் திடுக்கிட்டு சுயரூபுடன் எழுந்து நின்றான். பீரங்கிமருந்தில் ஓர் பொரி நெருப்புப்பட, சடுதியில் வெடித்து எங்கும் சுவாலிக்குமாப்போல, அவனுடைய அகோரரூபம்பகிரங்கமாய் விளங்கிற்று. தூதர்களந்த அசங்கிதவடிவைப் பார்த்துச் சற்றே பின்வாங்கி நின்றனர். சிறிது நிமஷத்திற்குள்ளாக தைரியமடைந்து இப்பேய்ச்சூரனை நெருங்கி வினவத்தொடங்கினர்.

(இன்னும் வரும்.)

# NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**தாழ்ந்த வகுப்பார்.**—பம்பாய் ராஜதானியில் மாஹார் என்ற தாழ்ந்த குலத்தவர்களில் தகுந்தவர்கள் முனிஸிபல், லோகல் போர்டுகளில் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்தக்கலெக்டர்மார், கமிஷனர்மார்களுக்குத் தாக்கீது அனுப்பக் கடந்தமாதம் நடந்த பம்பாய் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸலில் உத்தரவு பிறந்தது. மைசூர் ராஜ்யத்தில் பஞ்சமர்களைப் போலீஸ் ஆபீஸர்களாக்கியிருக்கிறார்கள்.

**சக்ரவர்த்தி சிலை.**—சென்னை பட்டணத்தில் பச்சையப்பன் காலேஜிக்கு எதிரில் அமைத்துக் கடந்த 4 வருஷ காலமாய் மூடியிருந்த இந்தச் சிலையை நமது வெல்லிங்டன் கவர்னர் அவர்கள் கடந்த மாதம் 19௳ சனிக்கிழமைத் திறந்துவிட்டார்கள். இந்த விசேஷித்த கொடை சென்னை கோவிந்ததாஸ் சதுர்புடி தாஸ் என்னும் பிரபுவால் பெற்றது. இதன் விலை பிரயாணச் செலவு உட்பட ரூபா முப்பதினாயிரத்திற்கு மேலாம்.

**மார்ஷல் பாக் சேனாதிபதி.**—இந்த ஜெகப்பிரஸித்திப்பெற்ற "தளகர்த்தன்" ஜெர்மனி சேனைகள்மேல் விழுந்து தாக்கினதுமுதல் பின்னடையாமல் முன்னேறிச் செல்லவும் ஜெயமடையவும் வாய்த்தது. அந்த துவக்கத்தில் அவர் பிடித்த சுங்கானும், சமாதானப் பத்திரத்தில் அவர் கையெழுத்துப்போட்ட பேனாவும் ஏலம் போட்டதில் ஒவ்வொன்றும் மூவாயிரம் பிரான் அல்லது 2,000 ரூபாய்க்குமேல் விற்பனையாச்சுதாம்.

**சமாதான உற்சவம்.**—சர்க்கார் உத்தரவின்படி ஜூலை௴ 19௳ சனிக்கிழமை இந்திய தேசமுழுவதும் சமாதான உற்சவநாளாக கொண்டாடப்பட்டது. அன்றையதினத்தில் கைதிகளில் 1,800 ஆண்களும் 183 பெண்களும் விடுதலை யடைந்தார்கள். இதன்றி 7,278 பேர்களுடைய தண்டனை குறைவடைந்தது.

**காலஞ்சென்ற டாக்டர் நாயர்.**—இந்த பிரசித்திப்பெற்ற வைத்திய சாஸ்திரி ஜூலை௴ 21௳ திங்கட்கிழமை லண்டன் பட்டணத்திலே காலஞ்சென்றார். அவருடைய தகனத்திற்கு பல பிரபுக்கள் சென்றிருந்தார்கள். இவர்கள் தொண்டை வியாதிகளைக் குணப்படுத்துவதில் நிபுணர். பிராமணரல்லாத மற்றையக் குலத்தவர்களுக்காகத் தன் முழு பலத்தையுங்கொடுத்துப்போராடிக்கடைசியாகத்தன் ஜீவனையும் அவர்களுக்காகக் கொடுத்தார். மாயமற்ற விஸ்வாசமும் நல்மனசாக்ஷியும் எப்போதும் இவருக்குள் குடிகொண்டதினால்தான் யாதொரு உலக கௌரவத்தை ஆசியாமல் குறைகுற்றங்கள் யாரில் கண்டாலும் மனோ தைரியத்துடன் வெளிப்படுத்திச் சீர்திருத்தஞ்செய்ய முயன்றவர். மதராஸ் கார்பரேஷன், சென்னை சட்டநிருபண கவுன்ஸல் முதலியவைகளில் அவர் மெம்பராக இருந்து தேசங்களும் ஜாதிகளும் அடையவேண்டிய நன்மைகளுக்காகப் போராடி ஜெயிப்பார். இவர் இவ்வளவு சீக்கிரம் தேகவியோகமடைந்தது தென்னிந்தியாவுக்குப் பெரு நஷ்டமே.



**இன்புளுவேன்ஸா பெருங்காய்ச்சல்.**—இச்சுரம் மறுபடியும் சென்னையில் பரவத் துடங்கியிருக்கிறது. இதை நிலைக்கிறதற்காகச் சென்னை கார்பரேஷன் பிலத்த பிரயத்தனம் எடுத்திருக்கிறார்கள். உணவு சுத்த ஆகாயம் இவை இரண்டும் யாவரும் கவனிக்கவேண்டுமென்று டாக்டர்கள் எச்சரிக்கிறார்கள். இவ்வியாதியின் சிகிக்ஷைக் கென்றே 'இன்புளுவென்ஸா ஹோம்ஸ்' என்ற ஏழு சிகிச்சை ஸ்தலங்கள் பட்டணத்து நாலு மூலைகளிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுரம் காண்கிறவர்கள் காலதாமஸம் பண்ணமல் அருகிலிருக்கும் ஸ்தலத்திற்குப் போவார்களானால் மெத்த நலமாயிருக்கும். தான் சீக்கிரம் சுகமடைவதன்றி பிறருக்கும் பரவாமற்படி செய்யலாம்.

**ஸர் சங்கரநாயர் ஸ்ரீமான்.**—கவர்னர் ஜனரல் சபையில் இந்தியர் கல்வி சம்பந்தமான மெம்பராயிருந்த இந்த சீமான் ஜூலை௴ 23௳ முதல் ராஜிநாமா செய்துகொண்டார். இவர் அச்சபையில் காட்டிய நடவடிக்கையை பல வருணத்தாரும் புகழ்ந்துவந்தார்கள். அதற்கு அத்தாட்சியாக அவர் ராஜ சபையை விட்ட நாள்முதல் இங்கிலாந்துக்குப் போக பம்பாயில் கப்பல் ஏறும்வரைக்கும் அவரை நாள் விடாமல் பந்திக்கு அழைக்காதவர்கள் ஒரு வருணத்தாரும் ஒரு சங்கத்தாரும் மீதியில்லை. அவர் ஸ்தானத்தில் ஸ்ரீமான் மயான் மகம்மத் ஷப்டி என்பவர் நியமனம் பெற்றார்.

**பாழடைந்த பிரான்ஸ் தேசம்.**—யுத்தத்தின் கொடூரத்தால் பிரான்ஸ் தேசத்தின் வடகிழக்குப் பாகத்தில் 400 மைல் நிகளமும் 30 மைல் அகலமுமுள்ள விஸ்தீரணம் பாழாய்ப் போய்விட்டது. அதைச் சீர்படுத்தும் பாரம் ஜெர்மன் கவர்ன்மெண்டின்பேரில் விழுந்திருக்கிறது. சுமார் அரைமில்லியன் ஜனங்கள் தேவையாகும்.

**கேய்ஸர் சக்கரவர்த்தி.**—பாரிஸ் கான்பரென்ஸார் ஏற்படுத்திய உத்தரவாத கமிட்டியார் கெய்ஸருக்குப் பதிலாக யாரையும் தீர்ப்புச் செய்யக்கூடாதென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

**இரத்த மழை:**—கடந்த மாதத்திலே மங்களூரிலே இரத்தமழை பெய்ததாக பத்திரிகைகள் தெரிவித்தன. சிலபேர் அதை பாத்திரத்தில் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவ்வித மழை 1912-வருஷத்தில் ஐதராபாக்கத்தில் பெய்ததாகவும் அதில் நனைத்ததுண்டு ஒன்று இன்னும் பத்திரமாக விருக்கிறதாகவும் தெரிகிறது. இவ்வித வர்ணமழைக்கு காரணம். ஆப்பிரிக்கா அரேபியா முதலிய பாலைவனங்களிலுள்ள செம்மண் தூசிகள் காற்றினால் வானத்தில் பறந்து இந்தியாவின் மேற்குக்கரையில் மழையோடு கலந்து விழுந்ததென்பார் ஒருவர். மத்தியதரைக் கடலைச் சுற்றிலுமுள்ள தேசங்களின் சில பாகத்தில் இவ்வித மழை பெய்வது ஒரு சாதாரண காட்சி என்கிறார்கள்.

**தென் ஆப்பிரிக்கா கொடூர சட்டம்.**—அங்கே குடியேறி யிருக்கும் இந்தியர்கள் வியாபாரம்பண்ணவோ, சொத்து சுதந்தரங்களை அடையவோ வழி உண்டாகாதபடி ஆசியர் வியாபாரச்சட்டம் என்ற ஓர் ஆக்ட்டை யூனியன் கவர்ன்மெண்டார் ஏற்படுத்திக்கொண்டார்கள். இந்த அநியாயத்தை எங்கே போய்ச் சொல்லலாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கொடியின் கீழ் அதின் குடிகள் இவ்வித அவஸ்தைக்குள்ளாவது நீதி பரிபாலன ராஜ்யத்திற்கு ஓர் பங்கமாகும். ஆகவே நமது ராஜாங்கத்தார் இதை சீக்கிரம் ரத்துபண்ணக் கோருகிறோம்.

**இந்து ஆசாரியரின் உயிர்த்தெழுதல்.**—ஸான்ம்யா என்னும் மறுநாமங்கொண்ட கிருஷ்ணசாமி ஆசாரியன், தான் மூன்று நாளைக்குள் எழுந்திருப்பதாகச் சொல்லித் தன் சிஷன் பீராஜியை யழைத்துத் தன்னை யொருகுழியில் உயிரோடே சமாதியில் வைக்கும்படி உத்திரவளிக்க, அவ்வாறே சிஷன் நம்பிக் கீழ்ப்படிந்து செய்ய, சமாசாரம் போலீசாருக்குத் தெரியக் காரியம் விபரீதமாகித் தோண்டி யெடுத்துக் கண்டுபிடித்ததில் பிணமாயிருக்கக் கண்டு அச்சிஷனை ஹந்தவாடி செஷன் ஜட்ஜு அவர்கள் விசாரணைசெய்து 2 வருஷம் கடுங்காவற்படுத்தி யிருக்கின்றனர். 'பிள்ளையார் பண்ணக்குரங்காய் முடிந்தது' போலும்.

**தானியவரத்து.**—ஆஸ்திரேலியாவிலிருந்து நமது இந்திய ராஜாங்கத்தார் ஏராளமான கோதுமை தானியத்தை வரவழைத்திருக்கிறார்கள். இவ்வருஷம் கடந்த ஆறுமாதத்திற்குள் பர்மாவிலிருந்து நமது ராஜதானியில் உபயோகத்திற்காக இரண்டு லட்சம் டன் அரிசி வந்திருக்கிறது. அடுத்த அறுப்பு காலமட்டும் அங்கிருந்து அரிசி வந்துகொண்டிருக்குமாம். அப்படி இருந்தும் பஞ்சம் தெளியக்காணோம். அகவிலையும் குறையக்காணோம்.

**சர்க்கார் உதவி.**—நமது ராஜாங்கத்தார் மழை இல்லாவிடங்களில் கிணறுகள் தோண்டிப் பயிரிடும் பொருட்டு சமுசாரிகளுக்குக் கடன் கொடுத்து உதவி செய்யும்பொருட்டு, பிரத்தியேகமாக ரெவின்யு உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதோடு ஜலமிருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு பூமியில் பாதாளக்கம்பிபோட்டு துளை இடும் கருவிகளோடு இஞ்ஜினீர்மார்களை ஏற்படுத்தி அனுப்பும்படி திட்டம் செய்திருக்கிறார்கள். இவ்வித சகாயத்தை நாடுவோர் தங்கள் தாலூகா ரெவின்யு உத்தியோகஸ்தர்களிடத்தில் மனு செய்து கொள்ளவேண்டுமாம்.

1329-ம் பசலியில் இந்த ராஜதானியில் தீர்வை இடப்பட்ட சர்க்கார் நிலத்தில் தீர்வை இல்லாமலே புஞ்சைத் தானியங்களைப் பயிரிட்டுக்கொள்ளலாம். ஆனால் மேற்படி நிலங்களில் 1327 அல்லது 1328 பசலிகளில் தானியங்கள் பயிரிடப்படாமலிருந்திருக்கவேண்டும். புரம்போக்காக தாக்கலாயிருக்கிற இடத்தில் பயிரிடக்கூடாது.

1329 பசலியில் ஏரிகளின் உள்வாயிலிருக்கும் நிலத்தில் புஞ்சைத் தானியங்களைப் பயிரிடும்படி கலெக்டர்கள் உத்தரவு பிறப்பிக்கலாம். ஆனால் அந்த ஏரியின் ஆயக்கட்டிலிருக்கிற நஞ்சை நிலத்திற்குச் சொந்தக்காரன் அல்லது அதைப் பயிரிடுகிறவனாயிருந்தாலொழிய பயிரிடும்படி உத்தரவு கிடைக்கமாட்டாது. அக்கம் பக்கத்து அண்டைப் புறத்தாருக்கு சரியாய் பங்கிட்டு கொடுக்கவேண்டும். இரண்டு மூன்று பணக்காரர்க்குமட்டும் கொடுத்துவிடக் கூடாது.

குடியிருப்பு வீட்டுத் தோட்டத்தில் 25 செண்டுக்கு மேற்படாமல் புஞ்சை தானியங்களைத் தீர்வை இல்லாமலே 1329, 1330, 1331 ஆகிய இந்த பசலிகளில் பயிரிட்டுக்கொள்ளலாம் என்று உத்தரவு ஆகியிருக்கிறதாம்.

**நட்சத்திர ஆபீஸ் உத்தியோகஸ்தர்.**—கனம். R. L. ஜேன்ஸ் அவர்கள் 1899 வருஷமுதல் சென்னை தினகாலபேத விஷயமாயும் இந்தியாவின் காலகுறிப்பு விஷயமாயும் வேலைப்பார்த்து வந்திருக்கிறார்கள். தம்முடைய வேலையில் வெகு சாமர்த்தியமும் உண்மையும் நம்பிக்கை உள்ளவருமாய் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பதிலாய் மேற்படி வேலை பார்ப்பதற்கு தகுதி உள்ளவர் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது.

**மெசபொடேமியாவுக்கு தமிழ் போதகர் தேவை.**—சங்கை பால் ரங்காமானுஜம் அவர்கள் கடந்த ஒருவருஷகாலமாய் யுத்தஸ்தானத்தில் நல் வேலை செய்துவந்திருக்கின்றனர். குடும்பவிஷயமாய் சீக்கிரம் இந்தியாவிற்கு திரும்பிவர ராஜாங்க உத்தரவு கிடைத்திருக்கிறது. வேறொரு போதகர் அவ்வேலைக்கு நியமனம் பெற்று அத்தேசத்தில் போய் சேருமளவும் சற்று காத்துக்கொண்டு இருப்பார்கள் என்று எண்ணத்திடனில்லை.

**கௌரதாப்பட்டம்.**—சென்னையிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ எம். டி. தேவதாஸ்பிள்ளை அவர்களும் ம-ா-ா-ஸ்ரீ அருமைநாத பிள்ளை அவர்களும் ம-ா-ா-ஸ்ரீ எம். ஸி. ராஜா அவர்களும் சட்ட நிருபணச் சபையில் அங்கஸ்தர்களாய் இருக்கும் பொருட்டு ராஜாங்கத்தாரால் நியமனம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுமுதல் ஆனரபில் (Honourable) பட்டம் உண்டு. முதல் இரண்டுபேர்களும் கிறிஸ்தவ ஜாதியார் விஷயமாயும், மூன்றாவதவர் பஞ்சமர்கள் விஷயமாயும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**ஏவலாளர்களுக்கு இருப்பிடம்.**—சென்னையில் பல ஆபீசுகளில் பலவித ஏவல் தொழில் செய்யும் சொற்ப சம்பளவருமானமுள்ள சேவகர்களுக்குப் பட்டணத்தில் வாடகை கொடுத்து வசிப்பதற்குத் தகுந்த வீடுகள் அகப்படாததினால் சென்னை கவர்ன்மெண்ட்டார் மூன்று சர்க்கார் உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தித் தகுந்த முயற்சிகள் செய்து 50 ஏக்கருக்கு குறையாமல் அமிஞ்சிகரைக்குச் சமீபத்தில் வாசத்திற்குரிய வசதியான நல்ல தாக்கு சம்பாதித்து வீடுகள் கட்டிவைக்கும்படியாய் ஏற்பாடு உண்டாகி இருக்கிறது.

**ஆங்கிலேய பிரவேசம்.**—கடந்தமாத பத்திரிகைகளில் இங்கிலாந்து தேசத்திற்கு பிரயாணமாய்ப்போன நமது இந்திய நண்பர்களோடு கூடச்சேர்ந்து இந்திய காரியங்கள் கைகூடும்பொருட்டு உபன்னியாச உதவி செய்வதற்கு கடந்தவாரம் சைத் ஆசன் இமாம், ரங்கசாமி ஐயங்கார், பேபின் சந்திரபால், சர். சீ. சங்கர நாயர், டாக்ட்டர் சாப்புரு, திவான்பகதூர் ராஜகோபாலாச்சாரியார்; ஸ்திரீகளில் ஜராபாய் டாட்டா அம்மாளும் தன் குமாரத்தியும் கப்பல் மார்க்கமாய்ச் சென்றனர்.

**அகால மரணம்.**—மார்க்கன் என்ற ஐரோப்பியர் ஒருவர் தன் மனைவியுடன் இங்கிலாந்திலிருந்து வந்து பம்பாயிலிறங்கி மல்பாரிமலையில் தங்கி இருக்கும்பொழுது ஒருநாள் அவர் மனைவி புதிதாய் வாங்கின கைத்துப்பாக்கி ஒன்றை (Revolver) எடுத்து பரிசோதித்துக்கொண்டிருக்கையில் அகஸ்மார்த்தாய் ஒருகுண்டு வெடித்துத் தலையைத் தாக்க உடனே இறந்தனள். பெருந்துக்கம் அபாயக்கருவிகளை அறியாமல் அஜாக்கிரதையோடு கையாடுவது ஆபத்தாய் முடியும் என்பது இதினால் விளங்குகிறது.

**ஆப்கானிய யுத்த சமாதானம்.**—ஆப்கானியர், தங்கள் யுத்தம் ஓங்காதது கண்டு, இன்னுமதிக நஷ்டத்திற்குள்ளாகாதபடித் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு, ஆகஸ்டு௴ 8-ம்௳ சமாதான உடன்படிக்கைசெய்து கையெழுத்துப் போட்டுவிட்டனர். இனி ஆங்கிலேயரால் கிடைத்த பொருள் உதவி நின்றுவிடுமென்பது திண்ணம்.

## பஞ்சாங்கம்.


பஞ்சாங்கம், 1919 செப்டெம்பர்

☉ பௌர்ணமி, 10௳, ● அமாவாசை, 24௳

| வாரம் | செப்டெம்பர் | | | | | ஆவணி—புரட்டாசி | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| திங்க... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| செவ்... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |
| புதன்.. | 3 | 10 | 17 | 24 | ... | 19 | 26 | 2 | 9 | ... |
| வியா... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 | ... |
| வெள்... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 | ... |

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

விளம்பரம்

ஒருவருஷக் கைப்பொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 10430



99

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

OCTOBER, 1919.] PRICE, 1 PIE.—விலை, க பை. [அக்டோபர்மீ, 1919.


11 NOV 1919

## LECTURE

### III பிரசங்கம்

(தொடர்ச்சி.)

### II. மதியற்றோர்

பவுலப்போஸ்தலன், காலத்தின் கொடுமையை யறிந்தவராதலின், எபேசு சபையாரைப்பார்த்து "நீங்கள் ஞானமற்றவர்களைப்போல் நடவாமல் ஞானமுள்ளவர்களைப்போல் கவனமாய் நடந்து கொள்ளுங்கள்" என்றும் "மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்." என்றும் சொல்லுகிறார். காலநிலைமையைக் குறித்து மதியற்றவர்களாயிராமல் கவனமாய் நடந்து கொள்ளவேண்டுமென்று அக்காலத்துச் சபையாருக்குச் சொன்னவார்த்தைகள் இக்கொடிய காலத்திலிருக்கிற நமக்கும் பொருந்தும். நமது நாட்களும் பொல்லாத தீங்கு நாட்களாகவே யிருக்கின்றன. ஆகையால் நாமும் மதியற்றோராயிராமல் காலத்தின் தன்மையை அறிந்து வெகு யூகமாயும் வினவாயும் நடந்து கொள்ளவேண்டும். மதியுள்ளோரிடத்தில் விளங்கவேண்டிய இலட்சணங்களில்லாதோர் மதியற்றோராயினும் இங்கு இப்பதத்தை குணப்படாதவர்களையும் வேலைசெய்யாதவர்களையும் குறிக்கும்படி உபயோகிக்க வில்லை, ஆனால் தற்கால நிலைமையைக் குறித்தும், தங்கள் பொருப்பைக் குறித்தும், இனிவரப்போகிற மகாநாளைக் குறித்தும் ஞானமில்லாதவர்கள் எச்சரிப்படையும்படி "மதியற்றவர்களாயிராதேயுங்கள்." என்கிறார். புத்தியில்லாத கன்னிகைகளைப்போல் நாமும் ஆண்டவருடைய வருகையைப்பற்றி அறிந்திருக்கிறோம். அந்நாள் சீக்கிரம் வரும் என்று விசுவாசித்தும் பிரசங்கித்தும் வருகிறோம், புத்தியுள்ள கன்னிகைகளோடு புத்தியில்லாத கன்னிகைகள் காணப்பட்டதுபோல நாமும் அநேக பரிசுத்தவான்களுடன் கலந்து உறவாடி ஒரே சபை என்னும் திருத்தோட்டத்தில் பணிவிடையாட்களாயிருக்கிறோம். ஆயினும் நம்மிலநேகர் புத்தியில்லாத பெண்களைப் போலவே கடைசி நேரத்தில், தீவர்த்திகள் அணைய, எண்ணெய்குறைய, யாசிக்கிறவர்களாகக் காணப்பட்டால் மதியற்றவர்கள் என்கிற நாமதேயமடைவோம். தேவனுடைய வார்த்தையின்படி நடவாமலும், போதுமான எண்ணெய் என்னும் விசுவாசத்தை முடிவுமட்டும் உடைத்தாயிராமலும் கடைசி நேரத்தில், சாகும்போது சங்கரா, சங்கரா வென்று இந்துக்கள் சொல்வதுபோல, எண்ணெய் வாங்கப் போவதுதான் மதியற்ற தன்மைக்கு அடையாளம். நம்முடைய பிரசங்க விஷயத்திலும், மார்க்க சம்பாஷணைகளிலும் நமது மார்க்கானுஷ்டானத்திலும் ஞானமற்றவர்களாயிருந்தால் ஆண்டவரின் திருநாமத்திற்கு அபகீர்த்தியை விளைவிக்கிற ஞானமற்ற ஊழியராய்த் தோன்றுவோம். ஆகையால் நாம் மதியற்றதனத்திற்குத் தப்பி ஞானமுடையோராய்த் திருத்தொண்டு செய்யவேண்டும். மதியற்றவனிடத்தில் தோன்றுகிற இரண்டு முக்கிய அம்சங்களைக் கவனித்தலவசியம்,

i. அஜாக்கிரதை. 2. எல்லாம் சரியாய் முடியும் என்கிற அசட்டுத்துணிவு.

1. அஜாக்கிரதை.—அஜாக்கிரதை யோசனைக் குறைவுக்குக் காரணம். எங்கே யோசனைக் குறைவு உண்டோ அங்கே பெருத்த நஷ்டத்திற்கு ஏதுவுண்டாகும். ஒரு தாலந்தை வாங்கினவன் சற்றுத் தீர்க்கயோசனை செய்திருப்பானாகில் அத்தாலந்தைப் பிரயோஜனப்படுத்தி மற்றிரண்டு பேரையும் போல் தானும் எஜமானின் நல்மதிப்படைந்து லாபத்தையும் தனதாக்கிக்கொண்டு எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசித்து அதிகமானவைகளுக்கு அதிகாரியாகி யிருக்கக்கூடும். அவ்வாறே வீட்டைக் கட்டினவனும் முன்புத்தி யென்னும் யோசனையைக் கொஞ்சம் கையாடியிருந்திருக்கும் பக்ஷத்தில் மணற்பாங்கான இடத்தைவிட்டு கற்பாறையைநாடி காற்றுக்கும் மழைக்கும் பெருவெள்ளத்திற்கும் தப்பியிருக்கக்கூடும். புத்தியில்லாத கன்னிகைகளும் கூட எவ்வித யோசனையுஞ் செய்யாததினுல் மணவாளன் வரும் நேரத்தில் தீவர்த்திகள் அணையவும், எண்ணெய்க் குறைவு தோன்றவும், கடைக்காரனிடம் விரைந்தோட நேரிட்டது. முடிவு, மணவாளன் வந்து கதவும் அடைக்கப்பட்டது. ஆகையால் அஜாக்கிரதையின் பலன் எவ்வளவு விபரீதமானதென்று திருஷ்டாந்தத்தினு லறிந்து கொள்ளுகிற நாம் சற்று காரியத்தைக் கூர்ந்து பார்ப்ப தவசியம். நம்மில் எத்தனைபேர் யோசனைத் தாழ்ச்சியினுல் விளைந்திருக்கும் நஷ்டங்களை அறிந்திருக்கிறோம்? எத்தனை விலை யேறப்பெற்ற ஆத்துமாக்கள் நமது பின்யோசனையினுல் மருள விழுந்து போயிருக்கிறார்கள். நாமும் உதவாத ஊழியர்களாய்க் காணப்பட்டிருக்கிறோம்—அதே காரணத்தையொட்டி நமது வசத்திலும் பொருப்பான ஊழியத்தை ஒப்புவிக்கத் திருச்சபையின் அதிகாரிகள் அஞ்சுகிறார்கள் அல்லவா?

2 - வது எல்லாம் சரியாய் முடியும் என்கிற அசட்டுத்துணிவின் தோஷமும் மதியற்றோரில் காணப்படுகிறதுண்டு. இவ்வெண்ணம் சோம்பேறித்தனத்திற்கு அடையாளம். செய்கிறதை செய்து வரும் பக்ஷத்தில் கர்த்தர் கிருபையுள்ளவராதலால் எல்லாவற்றையும் சரியாய் நடத்துவார் என்கிறவர்கள் பலர். பவுலப்போஸ்தலன் "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்று சொன்ன வார்த்தைகளை விபரீத அர்த்தப்படுத்தித் தங்களை தேற்றிக் கொள்பவர் அநேகர். ஆனால் நமது தேவனோ, மதியீனர் நினைக்கும் வண்ணம் எல்லாம் சரியாய் முடிய விடமாட்டார். செய்கைக்கும் செய்கைக்கும் வித்தியாசமிருக்கிறது. குதிரைக்கும் கழுதைக்கும் இருக்கிற வித்தியாசம்போல் நற்செய்கைக்கும் துற்செய்கைக்கும் தாரதம்மியமிருக்கும். தூங்குகிறவனும் விழித்திருப்போனும் சரியாகமாட்டார்கள். தேவசித்தத்தின்படி அவருடைய கற்பனைக்கிசைந்து நடக்கிறவனும், தன் சுய இஷ்டத்தின்படி நடக்கிறவனும் ஒரேதிறத்தார் அல்லர் என்பதும் நமக்குத் தெரியும். தேவனுல் அபிஷேகம் பெற்ற சவுலின் செய்கையும் அவ்வாறே அபிஷேகமடைந்த தாவீதின் செய்கையும் ஒன்ருகுமோ? மணற்மேல் கட்டடம் கட்டினவனும் கற்பாறையின்மேல் கட்டடம் கட்டினவனும் சரியாகவில்லை. தாலந்தை பிரயோகித்தவனும், துணியில் முடிந்து மண்ணில் புதைத்து வைத்தவனும் சரியாகவில்லை. அவ்வாறே புத்தியுள்ளோரெனப் புகழ்பெற்ற ஐந்து கன்னிகைகளும் இகழ்ச்சியடைந்த மதியற்ற பஞ்சகன்னிகைகளும் வித்தியாசமுள்ளோராகக் காணப்பட்டார்கள். ஆகையால் நாம் யாவரும் காலத்தின் கூறு அறிந்து சொஸ்த புத்தியுள்ளோராய் இனிமேலாகிலும் வேலைக்குத் தக்க பலனளிக்கும் தேவனுடைய பார்வையிலிருக்கிறோமென் றுணர்ந்து, மதியற்றத்

தனமாய் யோசனையின்றி எல்லாம் சரியாய் முடியும் என்னும் துணிவு கொள்ளாமல் ஜாக்கிரதையாய் நடந்து தேவகற்பனையை கைப்பற்றிவரவேண்டிய வர்களாயிருக்கிறோம்.

ப்டிப்பனே. ஆய்ந்து ஓய்ந்துபார்க்கும் தன்மை யுடையோராயும் ஓயாவிழிப்புள்ளோராயும் தேவ வார்த்தையின்படி நடப்போராயும், அஜாக்கிரதை யில்லாதவராயும், எல்லாம் சரியாய் முடியும் என்னும் அசட்டுத்துணிவு இல்லாதவர்களாயும் இருந்தால் நாம் தேவப்பணிவிடையில் உத்தமர்களாய்க் காணப்படுவோம். நம்மையே நாம் தேவாவியின் சகாயத்தால் நிதானித்துப்பார்ப்போம். நம்மைப்பற்றிய அறிவுண்டா? நாம் விசுவாசித்து பிரசங்கிக்கிறவரை இன்னாரென்று அறிந்திருக்கிறோமா? மதுபானவெறி கொள்ளாமலிருக்கிறோமா? மதியற்றவர்களிடத்தில் காணப்படுகிற அஜாக்கிரதைக்குரிய யோசனைக்குறைவும், எல்லாம் சரியாய் முடியும் என்கிற பொய் எண்ணமும் நம்மிடத்தில் தோன்றினதில்லையா? நிதானமாய்த் தற்சோதனை செய்து பார்ப்பது நமது உத்தியோகத்திற்கும் விசேஷமாய் நமது பக்திக்கும் சிறந்தகுணமாகும். தேவன் தானே பரமவருள் புரிவாராக. ஆமென்.

## MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது

### வேவுகாண்டம்

### 17. சேராபீன்கள் வினவுபடலம்

நரகபாதாளத்தில் வேதனையடையும்பொருட்டு தள்ளுண்டிருக்கும் துராவிகளில் நீயொருவனல்லவா? அங்கிருந்து தப்பிவந்துவிட்டாயோ? மேலும் நீ உன் சுயரூபத்தை மாற்றிவந்திருக்கிறாயல்லவா? இங்கே நித்திரைசெய்கிறவர்களின் தலைமாட்டிலோர் சத்துருவைப்போல உட்கார்ந்து என் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்? பேய்ச்சூரன் இதற்கு மறுமொழியாக, என்னை நீங்கள் அறியீர்களா? ஓர்காலத்தில் நானுங்களுக்குத் தோழனாயிருக்கவில்லையோ? நீங்கள் துணிந்து போகக்கூடாத விடங்களிலும் நானிருக்கவில்லையோ? நீங்கள் என்னையறியீர்களென்றால் உங்களைத்தானே நீங்களறியீர்கள். நன்றாய்த் தெரிந்திருக்கும்போது என் என்னை கேட்கிறீர்கள். உங்கள் சமாச்சாரமென்ன? அதைச் சொல்லுங்கள். இப்படிப் பேசுவதில் யாதொரு பிரயோசனமு மில்லையென்று அலட்சியமாய்ச் சொன்னான்.

அவனுக்குப்பிரதியுத்தரமாக, சீபோன்கோபாவேசத்துடனேயும் வெறுப்புடனேயும், ஓ கலகஞ்செய்த ஆவியே? நீ வானுலகத்தில் உத்தமனுஞ் சுத்தனுமாயிருந்த காலத்தில் உனக்கிருந்த வடிவோடு, இப்பொழுது நீ இருக்கிறாயென்று ஓர்போதிலும் நினையாதே: எப்போது நீ துராவியாய்ப்போனாயோ அப்போதே அந்த மகிமையும் உன்னைவிட்டுப் போய்விட்டது. பாவமும், பாதாளமும் எவ்வளவும் அசங்கியமுள்ளவைகளா யிருக்கின்றனவோ அப்படியே நீயுமிருக்கிறாய். இப்போது எங்களை யனுப்பினவருக்கு நீ உத்தரவுசொல்லவேண்டும். துராவிகள் ஒன்றும் இவ்விடத்திற்கு வரக்கூடாதென்றும் இவர்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடக்கூடாதென்றும் திட்டமாய் கற்பித்திருக்கிறா ரென்றான்.

அழகுஞ் சௌந்தரியமுமான பாலியதூதன் பேசின கண்டிதமான வார்த்தைகள் அம்புபோல அப்பேய்ச்சூரனுக்குள் பாய்ந்தன. வெட்கத்தோடு ஓர்பக்கமாய் ஒதுங்கிநின்றான். நீதியும் நேர்மையும் எவ்வளவு சிறந்தவைகளென்றும் பரிசுத்தம் இச்சிக்கப்படத் தக்கதென்றும் உணர்ந்து, தனக்குத் தானே யுண்டுபண்ணிக்கொண்ட நஷ்டத்தை நினைத்து மனம்நொந்தான். தன்னுடைய மகிமை எவ்வளவாய் குன்றிப்போனதென்று முணர்ந்தான். ஆகிலுந் தைரியத்தைவிடாமல், உங்களுடன் போராடுவதில் பிரயோசனமில்லை, உங்களை யனுப்பினவருடன் போர்செய்தால் எனக்கு அதிக மகிமையும் பிரயோசனமுமுண்டு. அப்போது சரிசமானமான இரண்டு பராக்கிரமசாலிகள் போராடினவண்ணமாயிருக்கும்; மேலும் அப்படிசெய்வதில் நஷ்டம் நேரிடினும் பெரிதல்லவென்றான். இதற்குச் சீபோன் திகிலும் பயமும் உன்னைப் பிடித்திருக்கிறதே எங்களுக்கும் போதுமானது. தூதர் சேனைகளைச் சேர்ந்த நாங்கள் தனிமையாய் உனது திறமையைப் பரீட்சிப்பது அவசியமல்லவென்று அதிக தைரியத்துடன் சொன்னான்.

இதற்குப்பேய்ச்சூரன் மறுமொழி ஒன்றுஞ் சொல்லாமல் கோபமடைந்து கடிவாளத்துக்கு மடங்காத குதிரையைப்போல் வேகமாயோடத் தலைப்பட்டான். தனது இருப்புக் கலினங்களை உதறிவிட்டு சண்டைசெய்ய அல்லது பறந்தோட வகைத்தேடினான். மேலுலகத்தைப்பற்றிய பயம் அவனுக்குள் திகிலை யுண்டுபண்ணிற்று. அப்பயம் இல்லாவிடின் அவன் எளிதில் பயப்படத்தக்கவனல்ல. இப்போது வடதென்பாரிசமாய்ச் சென்ற தூதபவுஞ்சுகள் மேற்றிசையில் சந்தித்தனர். சடுதியில் தலைவனாயிருந்த காபிரியேல் அணிவகுத்து நின்றவர்களுக் கெதிர்நின்று உரத்த சப்தத்துடன், ஓ சிநேகிதர்களே, இவ்வழியில் மிகத்துரிதத்துடன் ஓடிவரும் கால்களின் சப்தங்கேட்கிறது, அதிதூரத்தில் இத்தூரியேலுஞ் சீபோனும் அடர்ந்தசெடிகளின் நிழலில் வருகிறதையும், அவர்களுடன் மங்கின ராஜமகத்துவமும் விகாரரூபமுமுள்ள ஒருவனையும் பார்க்கிறேன். அவன் காட்சிக்கு பாதாளலோகத்தின் பிரபுவாய்க் காணப்படுகிறான். நம்முடன் யுத்தஞ் செய்யாமற்போகான்— அவன் முகத்தோற்றம், சபதங்கூறுபவனுக் குண்டாயிருக்கும் கெர்வத்தை வெளியிடுகிறதென்றான்.

அவன் சொல்லி முடிவதற்குமுன், இரண்டு தூதர்களுங் கிட்டினர். தங்களோடு வந்தவனின் வரலாற்றை விவரித்தனர். அவனைக்கண்ட விடத்தையும், விதத்தையும் மற்றும் நடபடிகளையும் அறிவித்ததோடு, அவன் அணிந்திருந்த ரூபத்தையும் அவனை வினவின காரியங்களையும் பற்றி விவரித்தனர்.

### 18. காபிரியேல் வினவுபடலம்.

காபிரியேல் உக்கிரகோப மடைந்தவனாய் சாத்தானைப்பார்த்து அக்கிரமஸ்தனே! உனது எல்லைகளைக் கடந்து இவ்விடம் வந்த முகாந்தரமென்ன? துணிகரமாய் இவ்விடத்துக்கு வந்ததுமல்லாமல் இந்த நந்தவனத்தில் பாக்கியவான்களா யிருப்பவர்களின் நித்திரையைக் குலைக்கவும் நீ எவ்வாறு துணிந்தாய்? இந்த வுத்தியான வனத்துக்குக்காவலாளிகளா யிருக்கும் நாங்கள் அதை விசாரிக்க அதிகாரம் பெற்றிருக்கிறோம். இப்படி நீ குற்றஞ்செய்வதற்குக் காரணம் யாதென்றான்.

சாத்தா னதற்குத் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, அலட்சியமாய் காபிரியேலே, நீ வானுலகத்தின் ஞானிகளின் வரிசையைச் சேர்ந்து கீர்த்தியடைந்திருந்தாயே! நானு முன்னை அப்படியே நினைத்திருந்தேன். ஆனால் நீ கேட்கிற கேள்வியினால் அதைப்பற்றிச் சந்தேகிக்கிறேன். எவனாகிலுந் தன்னைத்தானே சங்கடத்துக் குட்படுத்திக்கொள்வானோ? பாதாளத்தில் வீழ்ந்தவன் தப்பிவரக்கூடுமானால் சும்மாயிருப்பானோ? நீயும் புறப்பட்டு வரமாட்டாயோ? துன்பமான விடத்தைவிடவும், துன்பத்தை யின்பமாக்கவும் பழிவாங்கவுங் கூடுமென்றால் சும்மா யிருப்பாயோ? நானும் அப்படியே சுகத்தை நாடிவந்தேன். அது உனக்கு ஓர் நியாயமாய்க் காணப்படாது. ஏனென்றால் நன்மையைமாத்திரம் ருசித்திருக்கிறாய், என்னைப்போலத் தீமையை ருசிக்கவில்லை. அதினால் எங்களை நரகக்கட்டுக்குள் வைத்தவர் நியாயமாய்ச் செய்தாரென்று தான் சொல்வாய். அந்தக் காரிருள் நிறைந்த விடத்தில் நாங்கள் எப்பொழுது மிருக்க விரும்புவாரானால் அதின் தாப்பாள்களை கெட்டியாய்ப் பூட்டிவைக்கட்டும். இதுதான் என்னுடைய மாறுத்தரவு, நடந்த காரியம் நிசமே, அவர்கள் சொன்னவிடத்திற்றான் என்னைக் கண்டுபிடித்தார்கள். இதனால் நான் சண்டை சல்லியம் பண்ணினேனென்று அர்த்தம் பண்ணிக்கொள்ளாதே யென்றான்.

இவன் இப்படி அலட்சியத்துடன் பேசினபின், அதிதூதன் புன்சிரிப்புக்கொண்டு அரோசிகத்துடன் அவனைப்பார்த்து, சாத்தானே! விண்ணுலகத்து ஞானிகளை நியாயந்தீர்க்க நீ ஒருவன்தா னிப்போது ஏற்பட்டிருக்கிறாய். உன் எல்லையை விட்டு துணிகரமாயேனிவ்விடம் வந்தாயென்று கேழ்ப்பவர்களை ஞானிகளல்லவென்று தீர்க்கிறாய். மேலும் தண்டனையை உதறிவிடுவது நியாயமென்றுஞ் சொல்லுகிறாய். துணிகரக்காரனே! இவ்வித யோசனைகளோடு நீ யிரு. நீ புறப்பட்டுவந்த விடத்துக்கு திரும்பவும் உன்னைத் துரத்தி உனது வேதனையை எழுமடங்காக்கி, ஓர்க்காலும் நீ வாராதபடிக்குச் செய்யப்படும்போது, உன் எண்ணஞ் சரியோ சரியல்லவோ வென் றுணருவாய். நரகத்திலிருந்த நீ நல்ல படிப்பனை யொன்றும் படிக்கவில்லை. நீ எவ்வளவு துன்பத்தை யனுபவித்தாலும் நித்தியகோபாக்கினியைத் தணிக்கக் கூடாதென் றறிந்துகொள். நல்லது, நீ தனியே வந்த காரணமென்ன? நரகர்லோக முழுவதும் என் திரண்டு வரவில்லை? அவர்களுக்கு வேதனைவேதனையாய்த் தோன்றவில்லையோ? அல்லது உன் கூட்டாளிகளின் தேகங்களிலும் உன் தேகம் பலவீனமுள்ளதோ, சந்தேகமின்றி உன் நோக்கத்தை அவர்களுக்கு வெளியிட்டிருந்தா யானால் நீ இப்படி தனிமையாய் வந்திருக்கமாட்டாயென்றான்.

இதற்குப் பேய்ச் சூரன் அகங்காரத்துடனே, தூதனே என் என்னை நிந்திக்கிறாய்? நான் அவர்களிலும் பெலவீனனாயுந் துன்பத்தை சகிக்கக்கூடாதவனுமா யிருக்கிறேனென்று நினையாதே! வானுலகத்தில் இடிகளுடனேயும் ஈட்டி முதலிய வாயுதங்களுடனேயுந் தூதர்படைகள் சண்டைபுரிய வந்தபோது எவ்வளவு தைரியமாய் எதிர்த்துநின்றேனென்பதையும் நீ அறிவாயே. நீ அனுபோக்சாலியல்ல வென்பது உனதுவார்த்தைகளினால் வெளிப்படுகிறது. சங்கடங்கள் வந்தகாலத்தும், மனச்சோர்படைவது பிரதானியின் லட்சணமல்ல. ஆழ்ந்த ஸ்தலங்களிலிருந்து நவமாய் சிருஷ்டிக்கப்பட்ட இந்த லோகத்தைப்பார்க்கவே தனிமையாய் வந்தேன். நரகத்திலும் இதைப்பற்றிய பிரஸ்தாபமுண்டு. நெருக்கப்பட்டிருக்கும் எனது சேனைகளுக்கு இம்பூமியிலாவது, ஆகாயமண்டலத்திலாவது சவுக்கியமானவோர் இருப்பிடத்தைக் கண்டடையலாமென்று எண்ணுகிறேன். இப்பூமியை சுயார்ஜிதமாக்க நான் மறுபடியும் உங்களுடன் ஓர் கொடிய யுத்தம் புரியவேண்டும். நீயும் உன் லேகியோன் சேனைகளுமிதை யிருப்பிடமாக்கத் துணியீர்களென்று எண்ணுகிறேன். ஏனென்றால் வானுலகத்தரசனுக்கு ஊழியஞ்செய்வதும், அவரைத் துதிப்பதும் சத்துருக்கள் அவர் சிங்காசனத்தைச் சேராமலுமிருக்க பார்ப்பதே உங்கள் கடமை.

(இன்னும் வரும்.)

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**ஆஸ்திரேலியாக் குதிரைகள்.**—பிரான்ஸ்தேசத்தில் குதிரை ஒன்றுக்கு 35 பவுன் வீதம் 6,753 குதிரைகளும், சற்றுத்தாழ்ந்த குதிரைகளை கசாப்புக் காரருக்கு குதிரையொன்றுக்கு 17 பவுன் வீதம் 1,543 குதிரைகளும்; பெல்ஜிய சர்க்காருக்குக் குதிரையொன்றுக்கு 55 வீதம் 1,400 குதிரைகளும் விற்பனையாகியிருக்கிறது. யுத்த ஆபீஸார் 7,000 ஆஸ்திரேலியாக் குதிரைகளையும், 3,000 கோவேறு கழுதைகளையும் எகிப்துத் தேசத்திற்கு என்று வாங்கியிருக்கின்றனர். கசாப்புக்காரர் வாங்கினநோக்கந்தான் தெளிவாகத் தோன்றவில்லை. உயிரோடே வியாபாரஞ்செய்யவோ அல்லது குதிரைகளையடித்து மாம்ஸபட்சிணிகளுக்கு விற்பனைசெய்யவோ, தெரியவில்லை.



**ஜெனரல் போதா.**—இவர் போயர் ஜாதியார். தென்னாப்பிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்தில் பிரக்யாதி பெற்றவர். முடிவுபெற்றிருக்கும் ஜெர்மானிய யுத்தத்திலும் வீரனாகவிளங்கினவர். உலக சமாதானக் கூட்டத்திலும் நிதானமுள்ள நல்லாலோசனைக் கர்த்தனாக விளங்கினர். இவர், தென்னாப்பிரிக்காவிலுள்ள நமது இந்தியர்களுக்குப் பிரதிகூலமானவரல்ல. இவர்களுடைய சடிதிமரணம் யாவருக்கும் துக்கமுமே. இனி இந்தியர்களுடைய கஷ்டங்கள் ஒருவாறு அதிகரிக்குமோவென்று அஞ்சுகிறோம்.

**தாவூத் மகமத்து சாயப்பு.**—தென்னாப்பிரிக்காவில் டர்பன் நகரில் இந்தியர்களுக்குள் பேர்பிரஸ்தாபமுள்ள பெரும் வியாபாரி. தர்மிஷ்டி. ராஜாங்க விஷயங்களிலும் நிதானஸ்தன். பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ் சம்பந்தமாய், கனம்: காந்தியவர்களுடன் காவலிலிருக்க வஞ்சவில்லை. இவர்களுடைய மரணம் நமது இந்தியர்களுக்குப் பெருத்த நஷ்டமும் துயரமுமா யிருக்கிறது.

**தென்னாப்பிரிக்கா இந்தியர்கள்.** — யூனியன் ராஜாங்கத்தார் கையின்கீழ் நமது இந்தியர் படும் கஷ்டங்கள் விஷயமாய் விசாரணை செய்யும்பொருட்டு ஒரு கமிஷன் ஏற்படுத்த இந்தியா கவர்ன்மெண்டாருக்கு கனம்: மாண்டேகியு காரியதரிசியவர்கள் ஆலோசனை சொல்லியனுப்பி யிருக்கிறார்கள்.

**நூதன உபந்நியாசம்.**—ஆனரபில் (Hon'ble) S. சீனிவாசய்யங்காரவர்கள் காக்லே மண்டபத்தில் "புது இந்துமார்க்கம்" என்னும் விஷயத்தின் பேரில் செய்த உபந்நியாசம் அசாதாரணமானது. ஜாதிவித்தியாசம் மார்க்க சம்பந்தமானதல்ல வென்றும் பிராமணக் குருத்துவம்தான் மேன்பாடுள்ளது என்பது வேதோக்தமானதல்ல வென்றும், பஞ்சமனும், பிராமணன், செட்டி, முதலியார்களாகிய மற்ற உயர்குலத்தோரைப்போல் சரிசமானமானவன் என்றும் தெளிவாயும், தைரியமாயும் சொன்னார்களாம். இக்கொள்கைகள் எவ்வளவுதூரம் வைதீக இந்துக்களுக்குப் பிரீதியா யிருக்குமோவென்பது எமது சந்தேகம்.

**தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்.**—வைத்தியத்தில் பேர்பெற்று, தனத்தில் பெருகி, கிருஷித்தொழிலைச் சீர்திருத்திச் சர்க்காருடைய நல்மதிப்புமடைந்து ராவுசாயப்புப் பட்டமும் சம்பாதித்துக்கொண்ட வைத்திய சிகாமணியாகிய ஆபிரகாம் பண்டிதர் தேவலோகப் பிராப்தி யடைந்துவிட்டனர். இவர்கள் பேர் தெரியாத தென் இந்தியனுமில்லை. இவர்கள் வைத்தியமுறை கையாடாத குடும்பங்களும் இல்லை. தென்னிந்தியாவிலிருந்து இவர்கள் தேகமறைந்தும் மருந்தும் முறையும் பேசும்.

**சமாதான முத்திரைச்சீட்டு.**—இது தென்மார்க்குத்தேசத்தில் ஏற்பட்டு உபயோகப்படுகிறது. யுத்தத்தில் தரைமட்டும் இடிக்கப்பட்ட ரீஷீமஸ் ஆலயத்தைத் திரும்பக் கட்டும்பொருட்டு பணம் சேகரஞ்செய்யக் கையாடிவருகிற ஓர் உபாயம். இது விஷயமாய் நட்பு அரசுநாடுகளிலும் பொதுஅரசு நாடுகளிலும் கமிட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கிலாந்தில் மகாராணி அலெக்சாந்திரா அவர்களும், பிரான்ஸில் மாடேம் பாயின்கேர் அவர்களும், நார்வேயில் பாட்ராணியம்மா ளவர்களும், ருமேனியாவில் ராணி மேரியவர்களும், அந்தந்த தேசத்திலுள்ள கமிட்டிகளுக்கு அக்கிராசனாதிபதிகளாம். இச்சமாதான முத்திரைச்சீட்டு ஆகஸ்டு மீ 1 உ தான் வெளியானது. 40 கோடி ஸ்டாம்பும் பல தேசத்திலும் தபால் முத்திரைச்சீட்டுடன் பக்கத்தில் ஒட்டிப்போடலாம் என்று தபாலாபீஸாருடைய உத்திரவும் பிறந்திருக்கிறதாம்.

**ஆர்மீனியாவில் ராக்ஷஸகிருத்தியம்.** — ஆர்மீனியாவில் ஆர்மாவிர் என்னுமிடத்தை போல்ஷிவிக்கர்கள் ஆதீனமாக்கினதும் பெர்சியன் Consul என்னும் மந்திரியின் வீட்டைத்தாக்கி மந்திரியைத் துப்பாக்கிப்பிரயோகத்தால் கொன்று ஈட்டியினால் பிரேதத்தைச் சின்னாபின்னப்படுத்தி, அந்தபுரத்தில் சென்று மனைவியின் நகைகளையும் ரொக்கமான பணத்தையும் கைவசப்படுத்திக்கொண்டு, 310 பெர்சியர்களையும், 270 மகமதியர்களையும், 21 கிறிஸ்தவர்களையும் பீரங்கிக்கு இரையாக்கித் திரும்பினாராம்.

**ராஜ்யதானம்.** — ஜெர்மானிய கீழ் ஆப்பிரிக்காவை இங்கிலாந்திற்குக் கொடுத்துவிடும்படி உலக சமாதானக் கூட்டத்தாரால் ஏற்பாடாயிற்று, என்றாலும் மகாசெழிப்புள்ளதும், 30 லட்சம் ஜனத்தொகையுள்ளதுமாகிய அப்பெருமாகாணத்தை ஆங்கிலேயர் பெல்ஜியருக்கு நன்கொடையாக யளித்துவிட்டனராம்.

**கோடீஸ்வரனின் மரணம்.**—ஆண்ட்ரூ கார்னகி என்ற அமெரிக்காதேசத்து கோடீஸ்வரன் கடந்த ஜூலைமீ—ல் காலஞ்சென்றார். இவர் சிறுபையனாக பஞ்சாபீஸில் வாரம் 5 ஷிலிங் சம்பாதித்து கடைசியில் தினம் 5,000 பவுண்ட் சம்பாதித்தார். தர்மகொடையில் இவருக்கு மிஞ்சினவர்கள் கிடையாது. உலகமுழுவதும் அவருடைய தர்ம கைங்கிரியத்தைக் காணலாம். அவர் கொடுத்திருக்கும் நன்கொடை 70 கோடி பவுண்ட் என்று தெரியவருகிறது.

**நீண்டபட்டு நாடா (ரிப்பன்.)**—கடந்த யுத்தத்தில் போர் புரிந்தோர் போர்க்களத்தில் உதவி செய்தோர் யாவருக்கும் அளிக்கப்படப்போகிற யுத்த மெடல்களை தொங்கவிடுவதற்கு பட்டு ரிப்பன் என்னும் நாடா நெய்திருக்கிறார்கள். அதின் நீளம் 270 மைல்.

**வான் பேர்னார்டி.**—யுத்தம் திரும்பவும் துடங்கும் என்பது இந்த ஜெர்மன் போர்வீரனுடைய துணிபு. ஜெர்மனியை அடக்க, பிரான்ஸ் இங்கிலாண்ட் அதன்மீது சுமத்தின சுமை நியாயமென்றும் யுத்தத்தை துடங்கினதல்ல, யுத்தத்தை முன்னதாகவே துடங்காமல் தாமதித்ததே கெய்ஸர்பேரிலிருக்கும் பெருங்குற்றமென்றும் ராஜ்யபிரமாணக் கட்டாகிய லீக் ஆப் நேஷன்ஸ் நெடுநாள் நீடிக்காதென்றும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

**ரிபார்மேடரி பள்ளிக்கூடம்.**—குற்றம் செய்யும் ஆண்பிள்ளைகளைச் சீர்ப்படுத்த செங்கல்பட்டில் ஓர் பள்ளிக்கூடம் இருப்பதை நாம் அறிவோம். மதுராஸ் சில்டிரன் ஆக்ட் பிரகாரம் பெண் பிள்ளைக்கென்றும் அவ்விதபாடசாலை ஒன்று சென்னையில் ஸ்தாபகமாகுமாம்.

**பயிர் நிலம்.** — இந்தியாமுழுவதிலும் (சுதேச ராஜ்யங்களைத் தவிர) விவசாயமாகும் நிலம் 26 மில்லியன் ஏக்கரா அல்லது 40,625 சதுரமைல், இதில் பஞ்சாப்தேசம் $7\frac{1}{2}$ மில்லியன் ஏக்கரா உடையது முதல்தரம். சென்னை ராஜதானி அடுத்த தரம். இதில் $3\frac{1}{2}$ மில்லியன் ஏக்கரா. சர்க்காருக்கு இதனால் வந்த மொத்த வருமானம் ரூ $701\frac{1}{2}$ லக்ஷம்.

**டின்ஷா. எம். அமல்ஸாட்.** — சென்னையில் பருத்திவேலையை விருத்தி செய்ய கவர்னர் வெல்லிங்டன் அவர்கள் ஆதாவில் மேல் சொன்ன அமல்ஸாட் என்னும் பேர்போன பாரசீகன் நெசவுத்தொழிலில் பட்டம் பெற்றவரை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**சிறைவிடுதலை.** — சமாதான உற்சவத்தையொட்டி அங்கங்கே ஜெயிலில் இருந்தவர்களில் அநேகர் விடுதலையடைந்தார்கள். பஞ்சம் சுற்றிலும் பீடித்திருக்க இக்கைதிகள் விடுதலையடைந்ததில் நன்மையடையாமல் சிலர் கொள்ளையிட்டு ஜீவிக்க ஆரம்பிக்கிறார்கள். இவர்கள் விடுதலை பெறாமல் இந்த பஞ்சகாலத்தில் ஜெயிலிலேயே ராஜ உணவு பெற்றிருந்தால் நலமாயிருக்கும் என்று பஞ்சாப் பத்திரிகைகள் முறையிடுகின்றன.

**சப்தமில்லா ஆகாசக்கப்பல்.** — ஜர்மானியர் சப்தமில்லாமல் பறக்கவும் ஒரே தடவையில் 64 பேரை சுமந்துபோகவும் தக்கதான பெரிய ஆகாசக்கப்பல்களை ரகஸியமாய்ச் செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். நமது பிரிட்டிஷாரும் இவ்விதவிமானத்தை வேறு முறையால் கண்டுபிடிக்கிறார்கள்.

**ஓர் வியாபாரச் சட்டம்.**—வியாபாரிகள் தங்களிஷ்டப் பிரகாரம் பொருள்களின் கிரயத்தை உயர்த்தி அதிக லாபத்தை அடையாதபடி பொருள்களின் உயர்ந்த விலையை வியாபார போர்ட் மெம்பர்கள் குறைக்கும்படியான ஓர் சட்டம் ஹவுஸ் ஆப்காமன்ஸ் சபையில் ஏற்படுத்தியாயிற்று.

**ஜெர்மன் மாஜி இளவரசன்.**—தன்னை தீர்ப்புச் செய்யத்தகுந்தவர்கள் அமெரிக்கர்களென்றும் தான் அங்கே தீர்ப்புப்பெற யாதொரு தடையில்லையென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இனிமேல் தான் அமெரிக்காவிலேயே குடியிருக்க ஆசிக்கிறதாகத் தெரியவருகிறது.

**நமது வேல்ஸ் இளவரசன்.**—இவர் இப்போது கன்னடா தேசத்தில் விஜயஞ்செய்துவருகிறார். இந்தியாவிற்கும் சீக்கிரம் வருவார் என்று நம்புகிறோம்.

**அமெரிக்கா ஐக்ய மாகாணம்.** — இதன் கப்பல் தொழிலாளிகளில் 50,000 பேர் சம்பளம் போதாதென்று வேலையினின்று நின்று விட்டார்கள். கப்பல் சொந்தக்காரருக்கு இதனால் தினம் 1,000,000 பவுண்ட் நஷ்டம். 1,000 கப்பல்களுக்குமேல் சும்மா இருக்கின்றன.

**பெரிய ரெயில் சேதம்.**—மாஸ்கோபட்டணத்திலிருந்து கீப்பட்டணத்திற்கு ஓடிக்கொண்டிருந்த புகைவண்டி இருப்புப்பாதையைத் தப்பிவிலகினதுடன் நெருப்பும் பற்றிக்கொண்டு அதனால் 600 பேர் உயிரோடே எரிந்துபோனார்களாம்.

**ஜெர்மன் கைதிகள்.** — இங்கிலாந்திலுள்ள மொத்த ஜெர்மன் சிறையாளிகள் 91,818. இவர்களில் கப்பலோட்டிகள் 2,908 ஸிவிலியன்ஸ் 4,306. விவசாயத்தொழிலில் அநேகர் வேலை செய்து வருகிறார்கள்.

## பஞ்சாங்கம்.


பஞ்சாங்கம், 1919 அக்டோபர்

⊙ பௌர்ணமி, 9உ, ● அமாவாசை, 23உ

| வாரம் | அக்டோபர், | | | | | புரட்டாசி—ஐப்பசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 3 | 10 |
| திங்க ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 4 | 11 |
| செவ் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 5 | 12 |
| புதன் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 30 | 6 | 13 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 31 | 7 | 14 |
| வெள் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 18 | 25 | 1 | 8 | 15 |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 2 | 9 | ... |

# MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS




மெல்லின்ஸ் ஆகாரம்


பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது.




161194

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor
THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கையெழுத்துத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 10771.